JL
Rm211, N13
N15
161197

77

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

JANUARY, 1913. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. ஜனுவரி௴, 1913.

கனம்: பத்திராதிபரவர்களுக்கு,

கடந்த நவம்பர் மாத சத்தியதூதன் என்னும் பத்திரிகையில் தாங்கள் பிரசுரித்திருந்த "எமது 25–ம் வருஷாந்தம்" என்னும் வர்த்தமானத்தை வாசித்து மிகவும் சந்தோஷித்தேன். மேற்கண்ட பத்திரிகையை நடத்தக் கடவுள் தங்களுக்கு வேண்டிய சுகம், ஞானம், சக்தி, தீர்க்காயுள் முதலியவைகளை இதுவரை கொடுத்திருப்பதற்காக அவருக்கு அனந்த ஸ்தோத்திரம். இந்த 25 வருஷகாலமாய்த் தாங்கள் இவ்வுக்கிராண வேலையைக் கவனமாயும், உற்சாகமாயும், சத்தியமாயும், பக்திக்குரிய விதமாயும் நடத்திவந்திருக்கிறீர்களென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. இந்தப் பத்திரிகையினுல் ஆதாயப்படுத்தப்பட்ட ஆத்துமாக்களின் தொகை இவ்வளவென்று சொல்ல என்னுல் கூடாது. இன்னும் லோகநாதர் தங்களோடிருந்து சத்தியத்தை உலகத்துக்கு அதிக்வெளிச்சமாக ஏற்றத்தக்க பூரண சுகம், ஞானம், சக்தி, தீர்க்காயுள் முதலியவைகளை அருளிச்செய்து பூரண ஜூபிலி (Full Jubilee) கொண்டாடக் கிருபை செய்வாராக. கனம், புகழ், துதி ஸ்ரீபகவான் இயேசுநாதருக்கே உண்டாவதாக.

W. S. SATHIANATHAN,
*Coimbatore.*

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**பருவத்திற்கு முந்திப் பிரசவக்ஷேமம்.**—சொல்லக்கூடாத லக்ஷக்கணக்கான சவச்சேமங்களில், பருவத்திற்கு முந்திச் சவச்சேமமானவர்கள் 149.

**ஆர்டர் ஆப் கார்டர் என்ற பட்டம்.**—நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தியவர்கள் ஜப்பான்தேசத்து சக்கிரவர்த்தியவர்களுக்கு ஆர்டர் ஆப் கார்டர் (Order of the Garter) என்ற பட்டத்தை அளித்திருக்கிறார்.

**உலகத்திலுள்ள நெருப்புப்பெட்டிகள்.**—உலகத்திலுள்ள எல்லா ஜனங்களால் ஒரு வருஷத்தில் உபயோகப்படுத்திக்கொண்டுவரும் நெருப்புப்பெட்டிகளின் கிரயம் 37,000,000 பவுண் ஆகிறது.

**தானியமறுக்கிற யந்திரம்.** — இத்தாலிதேசத்தில் தானிய மறுக்க ஒரு நூதனமான யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது 7½ ஏகரா தானியத்தை 10 மணி நேரத்திற்குள் அறுவடையாக்கிவிடுகிறதென்று தெரியவருகிறது.

**ஜப்பான்தேசச் சக்கிரவர்த்தியும், சக்கிரவர்த்தினியும்.**—தேச ஆசாரத்துக்கு விரோதமாக ஜப்பான்தேசத்துச் சக்கிரவர்த்தி தன் மனைவியார் ராஜசின்னங்கள் அடங்கிய வண்டியில் ஏறித் தன்னுடன் சவாரிசெய்ய உத்தரவு அளித்திருக்கிறார்கள்.

**குதிரை லாயங்கள்.** — ஜர்மனிதேசத்து சார்ல்ட்டன் நகரில் சுகாதார விதிகளை யனுசரித்து மேல்பார்வை பார்த்துவருபவர்கள் நான்கு அடுக்குமெத்தையுள்ள ஒருகட்டடத்தைக் கட்டியிருக்கிறார்கள். அதில் 2,400 குதிரைகளைச் சாவகாசமாய்க் கட்டக்கூடுமாம்.

**போலீஸ் சேவகர்.** — இங்கிலாந்திலுள்ள லின்கன் பட்டணத்தில் 1,023 குடிகளுக்கு ஒருவன்மாத்திரம் போலீஸ் சேவகவேலையி லிருப்பதாகவும், மற்ற விடங்களில் சராசரி 712 நபர்களுக்கு ஒருவன் போலீஸ் டாணுதாராக விருப்பதாகவும் தெரிகிறது.

**தித்திப்பு உணவாகாது.**—யூனைடட் ஸ்டேட்ஸ் என்ற விடத்தில் ஒரு சபைகூடித் தித்திப்பான வஸ்துக்களைப் போஜனம்பண்ணுவது தேகத்துக்குக் கெடுதலென்றும், அந்த வஸ்துக்களைப் போஜனவர்க்கத்தில் சேர்க்கக்கூடாதென்றும் ஒரு தீர்மானத்தை ஏற்படுத்தினார்கள்.

**ஒரு நிர்விக்கினமான பூட்டு.** — சாவியில்லாமலும், பூட்டில் சாவி வாயில்லாமலும் ஒரு பூட்டு நூதனமாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குச சில குமிழிகள் உண்டு. அது ஆயிரக்கணக்கான பொருத்தங்கள் கொடுக்கக்கூடும். எந்தப் பொருத்தமாவது குமிழிகளோடு இசையக்கூடுமாம்.

**ஜப்பான்தேசத்தில் நீராடும் ஸ்தானங்கள்.**—ஜப்பான்தேசத்துப் பிரதான பட்டணமாகிய டோகியாநகரில் ஜனங்கள் பகிரங்கமாக நீராடக்கூடிய ஸ்தலங்கள் 800 உண்டு. அவைகளில் மூன்று லக்ஷம் ஜனங்கள் பிரதிதினம் ஸ்நானம் செய்து தலை ஒன்றுக்கு ஒரு பென்னி கொடுத்துவருகிறார்கள்.

**வண்ணாத்திப்பூச்சிகளைக்குறித்து.**—காலிபோர்னியாநாட்டில் கிலாஸ்ஸன் என்ற பெயருள்ள ஒரு ஸ்திரீ வண்ணாத்திப்பூச்சிகளை வளர்க்கிற வழக்கம். அவள் கோடைகாலத்தில் 6,200 வண்ணாத்திப்பூச்சிகளைப் பிடித்து ஆறு வாரத்திற்கு வளர்த்து அவைகளை 80 பவுணுக்குக் கிரயம் செய்திருக்கிறாளாம்.

**யுத்தக் கப்பல்களுக்குக் கொடிகள்.**—அமெரிக்காதேசத்து ஒரு சண்டைக்கப்பலில் தற்போது 430 கொடிகள் போட்டுப் பறக்கிறதென்றும், புரூக்லின் என்ற கைத்தொழில் சாலையில் வருஷாவருஷம் 24,000 கொடிகள் தைக்கப்பட்டு வருவதுடன் அவ்வேலையில் பிரத்தியேகமாக 30 ஸ்திரீகள் வேலைசெய்துகொண்டு வருகிறார்கள்.

**திருடரைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு யந்திரம்.** — நியூயார்க் பட்டணத்திலுள்ள ஒரு இஞ்சினீயா திருடர்கள் பணப்பெட்டிகளை எடுக்க எத்தனித்தாலும், அல்லது கஜானுவிலிருக்கிற அறைகளைத் திறக்க எத்தனித்தாலும் சரி, குண்டு வெடித்துச் சப்தம் செய்யக்கூடிய ஒரு யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறூரென்று தெரியவருகிறது.

**ஒரு பூனை விபத்தை நீக்கிற்று.** — கென்ட் நாட்டிலுள்ள கிங்க்ஸ்வர்த் என்ற மடத்தில் தீப்பிடித்தவுடன் அங்கிருந்த ஒரு பூனை நித்திரைசெய்துகொண்டிருந்த மடாதிபதியின் முகத்தைப் போய்ப் பிறுண்டியவுடன் அவன் இந்த விபத்தைக்குறித்துக் கூக்குரல் இட்டபோது நெருப்பு அவிக்கிற கூட்டத்தார் உடனே வந்து தீயை அவித்து விட்டார்களாம்.

**பூனைகளுக்கு அடைக்கல ஸ்தானங்கள்.**—இங்கிலாந்து தேசத்தில் பூனைகளுக்கு 45 அடைக்கல ஸ்தானங்கள் உண்டு. அவைகளை அந்தந்த விடங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுவருகிறது. வாரீஸில்லாத பூனைகள் துன்பமில்லாமல் மரணத்தையடைகின்றன. அக்டோபர் மாதம் முதல் தேதி பூனைகளின் முடிவுநாள் என்று சொல்வது வழக்கமாய் வந்துவிட்டது.

**இரைக்குடலில்லாதவன்.**—காலிபோர்னியா நாட்டின் ரெட்டிங்கு பட்டணத்திலிருந்த ஜான் பிராட் ஹர்ஸ்ட் என்பவர் சில தினங்களுக்குமுன் மரணமடைந்திருக்கிறார். அவர் மரிக்குமுன் இரண்டு மாதகாலம் இரைக்குடலில்லாமலே ஜீவித்திருந்ததாகவும் இது சங்கதி அவருக்குத் தெரியாதென்றும் ஒரு டாக்டர் இக்கிருத்தியத்தைச் செய்தாரென்றும் தெரியவருகிறது.

**ஒரு விர்த்தாப்பியமுள்ள டாக்டர்.**—டாக்டர் சார்ல்ஸ் டிரேக் என்பவர் 63 வருஷகாலமாக வயித்தியம் செய்துகொண்டு வருபவருக்கு தற்போது 89 வயதாகிறது. அவர் இங்கிலாந்துதேசத்தில் பிரதான மந்திரிகளாகவிருந்து காலம் சென்றுபோன அடியில் கண்டவர்களுக்கு வயித்தியம் செய்துவந்தாரென்று தெரிகிறது. (1) லார்ட் டெர்பி, (2) லார்ட் பால் மிர்ஸடன், (3) விஸ்கவுண்ட் மெல்போர்ன், (4) லார்ட் பீகன்ஸ்பீல்ட், (5) லார்ட் ஸாலிஸ்பரி, (6) மிஸ்டர் டால்பர்.

**புஸ்தகங்களிலுள்ள வார்த்தைகள்.**—ஷேக்ஸ்பியர் நாடகக் கவிகளில் பலவிதமான வார்த்தைகள் 15,000 உண்டு. மில்டன் கவிராயன் 8,000 வார்த்தைகளைத் தான் எழுதியிருக்கும் புஸ்தகங்களில் உபயோகித்து இருக்கிறார். பழைய ஏற்பாட்டில் 5,642 வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. நல்ல கல்வியை அடைந்தவன் பேசும்போது பலவிதமான 4,000 வார்த்தைகளை உபயோகிக்கிறான். ஆனால் சாதாரண கல்வியை அடைந்தவர்கள் 300 வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள்.



வியன்னா நகரம்.

## "THE GOOD PART."

## "நல்ல பங்கு."

சிநேகிதனே! நல்ல பங்கு என்ற வார்த்தைக்கு நல்ல பொருளென்று உடனே அர்த்தம் சொல்லிவிடுவாய்; அது சரிதான், அழியாத பொக்கிஷமென்றாலும் அதைவிட நன்றாயிருக்கும்.

மனிதன் சிலகாலம் பூமியில் தோன்றி மறைந்துபோகுந் தன்மையுள்ளவனா யிருந்தாலும் தான் தேடுபொருள் அழியா வஸ்துவா யிருக்கவேண்டுமென்று விரும்புகிறது இயற்கையாதலால் அதைவிட்டு: அநேக ஆண்டுகளுக்குமுன் இவ்வுலகத்தில் சஞ்சரித்த மஹா குரு ஒரு போதனையிலே சொன்ன இந்த வார்த்தையை ஆதாரமாகக்கொண்டு சில ஞானவிஷயங்களை உனக்குச் சொல்லப்போகிறேன், கவனமாய்க் கேள்:—

உலகத்திலே பொருளைச் சேர்த்துக் கீர்த்தியடைய வேண்டுமென்பதே மனுஷனுடைய விசேஷித்த நோக்கம். இதற்காக வாணிபம் செய்கிறான், கல்வி கற்கிறான், உத்தியோகம் பார்க்கிறான், தேசம்விட்டுத் தேசம் போகிறான், இப்படிப் பலவிதமாய்ப் பணத்தைச் சேர்க்கிறான். எவ்வளவு பொருள் தேடிவைத்தாலும் அது அவனிடம் நிலைத்திருக்கிறதில்லை. வரும்வழி தெரியாமல் வந்ததுபோலப் போகும்வழி தெரியாமல் பறந்து அழிந்துபோய்விடுகிறது.

தவிரவும், அழிந்துபோகுந் தன்மையுள்ள பொருளிருந்தால் அழியாதபொருளு மிருக்கவேண்டுமே! ஆம், காணக்கூடாத வஸ்துக்களெல்லாம் அழியாத வஸ்துக்கள்தான். அவை பலவற்றுள் நமது ஆத்துமாவும் ஒன்று. ஆனால் நான் சொல்லப்புகும் பொருளோ ஒப்புவமையில்லாத உன்னதப்பொருள். ஆத்துமாவை நம்மில் அமைத்தபொருள். மூவுலகுக்கு மூலப்பொருள். ஏழைகளுக்கு ஏற்ற பொருள். இலவசமாய்க் கிடைக்கும்பொருள். எந்நிலைமையோருக்கும் இன்றியமையா ஏகப்பொருள். இப்பொருளொன்றே அந்நாட்டில் செலாவணியாகும் பொருள்.

முந்தினது அழியுந்தன்மையுள்ளது, இந்தப் பொருளோ இம்மையில்மாத்திரமல்ல, மறுமையில் என்றென்றைக்கும் அழியாதபொருள். இவ்விரண்டில் நீ எதைத் தெரிந்துகொள்ளுகிறாய்? அழியாத பொக்கிஷமே விரும்பப்படத்தக்கதானதால் அதையே நீ தெரிந்துகொள்ளுவாய் என்று நினைக்கிறேன். அந்தப் பொருள்தான் இயேசுகிறிஸ்து, அவரை இடம்பொழுதே தேடிக்கொள், அவரே உனக்கு நல்ல பங்கு.

உலக ஆஸ்தியைத் தேடிவைத்தவனுக்கு அது ஓயாத தொல்லையைக் கொடுக்கிறது. ஆஸ்தி பெருத்தவன் அரிப்பு மிகுத்தவன். ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். எப்போதும் ஆனந்த கீதம் பாடி அகமகிழ்ந்துகொண்டிருந்த ஒரு ஏழைமனிதனை ஒரு ஐசுவரியவான் கவனித்து: எனக்கு இவ்வளவு ஆஸ்தியிருந்தும் அவனைப்போல் சந்தோஷமாயிருக்கக் கூடவில்லையே என்று ஆச்சரியப்பட்டு இதன்

JL
Rm 2||, N12 MK



காரணத்தை அறியும்படி கொஞ்சம் பணத்தை அவனிடம் கொடுத்து: நீ இதைக்கொண்டு வியாபாரம்பண்ணி ஜீவனம்செய் என்று சொன்னான். அவன் வேண்டாமென்று தடுத்தாலும் கடைசியாய் ஐசுவரியவானுடைய தொந்தரவுக்காகப் பணத்தை வாங்கி இரண்டொருநாள் வீட்டில் வைத்திருந்தான்; அதுமுதல், அவன் பாட்டும் சந்தோஷமும் குறைந்து மனதில் கவலை ஆரம்பிக்கவே அப்புறம் அதை வைத்திருக்கக் கூடாமல் பணக்காரனிடம் கொடுத்துவிட்டுப் பழையபடி சந்தோஷமாயிருந்தானாம். உலக ஐசுவரியமுள்ளவனுக்கு மெய்யாகவே ஓயாக்கவலைதான்.

நான் சொல்லும் ஆஸ்தியைச் சம்பாதித்தவனோ எப்போதும் மனச்சந்தோஷம் அடைந்து பாடி மகிழுவான். இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றுபோலவே சந்தோஷமாயிருப்பான். அவனுடைய சந்தோஷம் இம்மையைப்பற்றினதல்ல, இவ்வுலகத்தில் அவனுக்குத் துன்பமும் சஞ்சலமுமேயன்றி சந்தோஷங் கிடையாததினால், இது அவனுக்கு "அழுகையின் பள்ளத்தாக்கு" என்று சொல்லப்படுகிறது. அவனுடைய வாழ்வெல்லாம் மோட்சத்தில் வைக்கப்பட்டிருக்கிறபடியால் அதைப்பற்றிய ஆனந்தத்தினாலே இவ்வுலக கஸ்தி துன்பங்களை யெண்ணாமல் மறுமையின் மாறாத வாழ்வுக்காக நம்பிக்கையோடு காத்திருக்கிறான்.

உனக்கும் அந்த நித்தியானந்த வாழ்வு வேண்டுமானால் துன்பமாகிய "இரவிலும் கீதம் பாட" அருள்புரியும்தன்மையுள்ள ஆஸ்தியைத்தேடி வைத்துக்கொள்ளப் பார். அந்த ஆஸ்தி இயேசுதான், அவரே உனக்கு நல்ல பங்கு.

நீ தேடுகிற ஐசுவரியம் உனக்கு ஜீவனைக் கொடுக்கமாட்டாது. "ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தியிருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல" என்று சத்திய சாஸ்திரம் சொல்லுகிறது. நான் சொல்லும் இந்த ஐசுவரியமோ தன்னிலே தானே ஜீவனுள்ளதாயிருக்கிறது மாத்திரமல்ல, மனிதருக்கு ஜீவனையும் கொடுக்கிறது. "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவ னெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்று வேதம் பகருகிறது. 'பொருளில்லார்க் கிவ்வுலகமில்லை, அருளில்லார்க் கவ்வுலகமில்லை' என்ற வாசகத்தின்படி அருளாகிய இந்த ஆஸ்தியை உன் ஜீவகாலத்திலேயே தேடிக்கொள்ளாவிட்டால் ஐயோ! உன் கதி அதோகதிதான். அந்த ஆஸ்தி இயேசுகிறிஸ்துவே, அவரே உனக்கு நல்ல பங்கு.

உலக ஆஸ்தியை உடைய நீ அதைத் தகாதவிதமாய் உபயோகித்தால் இம்மையிலும் மறுமையிலும் உனக்குக் கேடாய் முடியும்.

இந்தப் பொருளோ உன்னைச் சத்திய வழியில் நித்தமும் நடத்தும். இதைச் சொந்தமாக்கிக்கொண்டவன் எவ்வளவு பஞ்சமாபாதகனாயிருந்தாலும் அவன் பாவங்களையெல்லாம் அறவே அழித்துவிடுவதோடு அப்புறம் பாவம் செய்யாதபடி காத்துக்கொள்ளும். இதை நேசிக்கிற எல்லாரையும் ஒன்றுபோல நேசிக்கும். கடைசியாய் அவர்களை மோட்சத்துக்கு உயர்த்தும்.

இந்த உயிர்த்துணையான பொருளை இவ்வுலகத்திலேயே தேடிக்கொண்டவன் மெய்யாகவே பாக்கியவான். அந்தப் பொருள் இயேசுகிறிஸ்துவே. அவரே உன்னைவிட் டெடுபடாத நல்ல பங்கு.

சிநேகிதனே! உன்னைத் தேடிப் பூமியில் வந்த விலையிலடங்காப் பொக்கிஷமாகிய இயேசுதாமே, தம்மையும் தமது உபதேசத்தையும் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட ஒரு ஸ்திரீயைப்பற்றி: அவள் "தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்று புகழ்ந்து கொண்டாடினார். அவளுக்கு ஏற்ற இரட்சகரும் தேவனுமாகிய இவர் உனக்கும் எனக்கும் எல்லா மனிதருக்கும் ஏற்றவராயிருக்கிறார். "பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே! என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" என்பது தேவவாக்கு.

ஆகையால் இயேசுவை விசுவாசி, அவரையே வணங்கு, விக்கிரக வணக்கத்தை விடு, அது பாவம். சுய நீதியைச் சாராதே, அது வெறுங்கந்தை. பொய்க் குருக்களை நம்பாதே, அவர்கள் உன்னை ஏமாற்றி வயிறு வளர்த்துப் பணம் பறிக்கும் பறிகாரர். ஸ்தலயாத்திரை, பல தீர்த்தம் முதலிய இவையெல்லாம் உடலுக்கு அலுப்பும் உன் பணத்துக்கு நஷ்டமுமாம்.

இயேசுவே இம்மைக்கும் மறுமைக்கும் உனக்கு வேண்டிய எல்லாவற்றுக்கும் எல்லாமுமாயிருக்கிறார்; அவரையே நம்பு, அவரே உனக்கு நல்ல பங்கு.

## JAPAN AND ITS LATE EMPEROR.

## ஜப்பானும் காலஞ்சென்ற அதன் சக்கரவர்த்தியும்.

*(நவம்பர்மீ்த் தொடர்ச்சி)*

ஜப்பானில் காணப்படும் இவ்விதப் பெருமாறுதலுக்குக் காலஞ்சென்ற முட்ஸோ ஹிட்டோ என்னும் சக்கரவர்த்தி எவ்வளவு காரணமாயிருந்திருப்பாரோவென்று அநேகர் சமுசயிக்கக்கூடும். ஆனால் நுட்பமாய் ஆராய்ச்சி செய்யுமிடத்து, ஜப்பானியரை உலக ஜனங்களின் முதல் வகுப்பில் கொண்டு வருவதற்குக் காரணமாயிருந்த சகல விஷயங்களையும் இச்சக்கரவர்த்திதான் ஸ்தாபித்து, ஸ்திரப்படுத்தி, அவை இடையூறின்றி விர்த்தியடைய ஆதிமூலமாயிருந்தனரென ஐயமின்றி கூறத்தகும். இம்மகான் 1852-ல் பிறந்து, 1867-ல் தன் தகப்பனின் சிம்மாசனமேறினார். இக்காலம் ராஜ்யமுழுவதும் குழப்பம் நிறைந்த காலமாயிருந்தது. பூர்வம் இங்கிலாந்தி லிருந்ததுபோல ஜப்பானிலும் வெகு காலமாக அரசனும், அவனோடு ராணுவசேவைக்கு அவனளித்த சிறு மாகாணங்களைக் கையாளுகை செய்துவந்த ஷோகரெனும் ஒருயர்வரிசைப் பிரபுவும் ராஜ்யத்தை ஆண்டுவந்தனர். இந்த ஷோகர் செல்வத்தோடு இராணுவத்தலைமையு முடைத்தாயிருந்ததுபற்றி, உண்மையாக ராஜ்யபரிபாலனம் வெகுகாலமாக இவர் கையின்கீழிருந்தது. ஆனால் நவீன இன்பங்களில் மூழ்கி, தங்கள் உத்தரவாதத்தைச் சரிவா நிறைவேற்றாததுபற்றிக் கீழ் நோக்கினர். அரசனுக்கு அம்மகத்தான வெறும் பேரேதவிர ராஜ்யத்தில் நன்மைக்காவது தின்மைக்காவது ஏதேனும் மாற்றஞ்செய்யக்கூடிய சக்தி கிடையாது. இக்காலத்தில் ராஜ்யத்தினுள்ளிருந்த தாறுமாறுகளோடு அந்நியதேசத்தவராகிய ஐரோப்பியரும் தேசத்திற்குள் புகுந்து, பெருகிச் சுயதேசத்தாரின் பிரியத்துக்கெதிராய் நாளுக்குநாள் பலமடைந்தனர். ஜனங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு ஆளுகைக்குக் கீழ்ப்படாவிடில் பெருத்த துன்பமும் தேசத்துக்கழிவும் நேருமென அரசனும் சில முக்கிய பிரபுக்களும் நன்றாயறிந்தனர். யோட்டோ என்னுமொரு தலைவன் ஷோகர் யாவருக்கும் இதைத் தெளிவாய் விளக்கி முட்ஸோ ஹிட்டோ சக்கரவர்த்திக்கு எல்லாப் பிரபுக்களும் தாமதமின்றிக் கீழடங்கவேணுமெனக் காண்பித்தான். கெயிக்கி என்னுமொரு பலத்த தலைவன் இதன் முக்கியத்தையறிந்தவனாய்த் தன் தலைமையைச் சக்கரவர்த்திக்களித்துத் தன்னை யொரு சாதாரண பிரஜைக்குச் சமமாக்கிக்கொண்டான். சுயராஜ்ய அபிமானமேவுதலால் இவ்வளவு பெரிய தர்மம் செய்தோரை எந்த ஜனங்களிலும் காண்பதரிது. இவ்விதமாகப் பிரபு வரிசையார் அவர்களிஷ்டப்படியும் பலவந்தத்தினாலும் கீழ்ப்படுத்துவதில் ஆங்காங்கு சிற்சில சமர் நடந்தபோதிலும், ராஜன் எதையும் தானாய்ச் [illegible]வியவ [illegible]ரஜைகளில் பெரும்பான்மையோருக் கள் சண்டையால், இங்கிலாந்து, பிரான்சு முத [illegible]த்தக்காலங்களில் ஜனங் மானவில்லை. [illegible]ல் ஜப்பானில்

1871-ல் வெளிப்பட்ட ராஜ விளம்பரத[illegible] சுய ஆளுகை நடத்திவந்த சகல சிறிய, பெரிய நாடுகளும், அதின் தலைவரும், தங்களதிகாரங்களை யரசனுக் கொப்புவித்தனர். இச்செய்கை 10 வருஷத்துக்குள் பெருமாறுதலுக்கு வழிதிறந்தது. பரதேசத்தினராகிய ஐரோப்பியரையும் அமெரிக்கரையும் வெறுக்கும் வெறுப்பு இதோடு நாளுக்கு நாள் அதிகரித்தது. ஆனால் அவர்களோடு சிநேகம்பண்ணுவதால் தேசவிர்த்திக்கு அனுகூலமுண்டென்று அரசன் கண்டதால், அவர்கள் சுயாதீனமாய்த் தங்கள் வர்த்தகங்களை நடத்த இடம் கொடுத்ததுமன்றி, அவர்கள் தங்கள் வழக்குகளைத் தாங்களே முடித்துக்கொள்ள நியாயஸ்தலங்களேற்படுத்த அனுமதியும் கொடுத்தான். இது தேசத்துக் கொரு குறைவாக எண்ணப்பட்டபோதிலும், ஜப்பானியர் நீதிவகிப்பதில் நாகரீக உயர்வடைந்த அந்த ஜனங்களைப்போல் தேறினவர்க ளில்லையாகையால் இவ்வித ஏற்பாட்டுக் கிசைந்ததிலும் மெச்சிக்கொள்ளப்பட வேண்டியவர்களே. ஆனால் 1897-ல் ஜப்பானியர் நீதி நடத்துவதிலும் தகுதியுள்ளவர்களெனத் தங்கள் கல்வித்திறமையைப் புறத்தேசத்தாருக்குக் காண்பித்ததில், மகா பிரித்தானியர் இதையொப்புக்கொண்டு, புறஜனத்தை நியாயம் விசாரிக்கும் அதிகாரத்தையும் அவர்களுக் களித்தனர். இவ்விதமாக பொறுமையும் சாந்தமுமுள்ள ஹிட்டோ சக்கரவர்த்திக்கு ஜனங்க ளிசையவும், தன் சொந்தப் பதவிக்கல்ல, சுயதேச விர்த்திக்கே சக்கரவர்த்தி யாவற்றையும் செய்கிறாரென்று ஜனங்கள் நம்பிக் கீழடங்கின

## JESUS FOR ME!

## இயேசு எனக்குத் தஞ்சம்!

Tune and words: "Jesus my Saviour is all things to me."

Sacred Songs and Solos. No. 90 New.

1. ஏசு என் ரட்சகர், எல்லாம் அவர்;
   என்ன, பேரதிசய ரட்சகர்!
   துன்பக் கடலாம் என் ஜீவ ஓட்டம்,
   நடத்திக் காப்பார் இது திட்டம்.

*Chorus.* ஏசு தஞ்சம்! ஏசு தஞ்சம்!
எப்போதும், எங்கும் எனக்குத் தஞ்சம்.

2. சுகா சுகத்தில் எனக்கு ஏசு,
   வாழ்வு தாழ்விலும் எனக்கு ஏசு,
   வெயில் காற்றிலும் எனக்கு ஏசு,
   ரட்சகத்துணை கிறிஸ்தேசு.

3. ஏசு என் கன்மலை, என் கோபுரம்,
   ஏசு என் கோட்டை, ஏசு என் பலம்,
   ஏசு நித்திய ஜீவனானவர்,
   ஏசு எனக்கு மத்தியஸ்தர்.

4. ஏசு என் ராஜா, குரு, தீர்க்கரும்,
   ஜீவ அப்பமும், ஜீவ தண்ணீரும்,
   நீதியின் சூர்யன், விடிவெள்ளியும்,
   என் ரட்சணிய மாகும் கொம்பும்.

5. துக்கம், களிப்பு, நோவிலும் ஏசு;
   நஷ்டம், லாபத்தில் பொக்கிஷம் ஏசு;
   பிரியாச் சிநேகிதர் என் ஏசு;
   பிழைப்பில், சாவில் தஞ்சம் ஏசு.

P. B.

'Paradise Lodge.'
Royapuram, Madras,
*8th December*, 1912.

..., இவராளுகையின் சுருங்களி லொன்று ... த் தாறுமாறுகளாலும் ... விருந்த ஜப்பான் ... யிற்று.

ஜப்... இயல்பிலேயே சுயமாக நாகரீகத்தி லோ ஒழுக்கத்திலோ அதிக விர்த்தியடைந்ததன்று. அவர்கள் பூர்வீகர், மிலேச்சரையொத்தவர். தற் கால நாகரீகச்சிறப்பு முழுவதும் அமெரிக்கரையும் ஐரோப்பியரையும் பின்பற்றினதால் வந்தது. அதற் குச் சற்றுமுன் அவரடைந்த நாகரீகம் முழுவதும் சீனவுடையது. ஆனாலும் சிறிதுகாலத்துக்குமுன் அப்பெரும் ராஜ்யத்தோடு சண்டை தொடுத்தது. இச்சண்டைக்குப் பெரிய உற்சாகத்தைக் கொடுத் தது ஹிட்டோ சக்கரவர்த்திதான். இவர் தாமா கவே இராணுவங்களையெல்லாம் பார்வையிட்டு, சண்டையில் விசேஷித்த வீரியம் காண்பித்த யாவர்க்கும் பரிசளித்தனர். இந்த யுத்தத்தில் ஜப் பானடைந்த ஜெயம், யுத்தப்பயிற்சியிலும் அவர்க ளடைந்த விர்த்தியைக் காண்பித்தது. இதற்கடுத் தாற்போல் ருஷியரோடு தொடுத்த யுத்தத்திலும் சக்கரவர்த்தி தர்மாக எடுத்துக்கொண்ட முயற்சி யும் பிரீதியும் கொஞ்சமல்ல. வீரருக்குண்டான உற்சாகத்துக்கு முக்கியகாரண மிவரே. முக்கிய மாய் இந்த யுத்தத்தினால்தான் ஜப்பான் உலகத்தி லுள்ள பலத்த சத்துவங்களி லொன்றென்று சொல் லப்படும் கண்ணியத்தைப் பெற்றது.

சக்கரவர்த்தியின் குடும்பம் அரசவரிசையைச் சேர்ந்ததுமன்றிக் கல்வியிலும் மேன்மையடைந்தது. குடும்பத்தில் மிகுதியானபேரும், கல்வி, கைத் தொழில், சித்திரவேலை முதலியவற்றில் தேறின வர். சக்கரவர்த்தி தாமும் பல தொழில்களில் தேர்ச்சியடைந்ததோடு கவிபாடும் திறமையுமுடை யவர். இவர் 1869-ல் ஒருயர்ந்த பிரபு வம்சத்தைச் சேர்ந்த பெண்மணியாகிய ஹாரு இளவரசியை மணம்புரிந்தார். இப்புண்ணியவதி பட்டத்துக் குமாரராகிய யோஷி ஹிட்டோவையும், சில குமா ரத்திகளையு மீன்றாள். இப்பட்டத்துக் குமாரர் தான் இப்போது சக்கரவர்த்தி ஸ்தானம் வகிக்கின் றார். இவர் 1879-ல் பிறந்து, 1900-ல் ஸாடா என்னு மிளவரசியைத் தமக்குப் பத்தினியாக்கிக் கொண்டார். இவர் தம் தகப்பனைப்போல் தாழ் விலிருந்து திடீரென அரும்புகழ்படைத்த ஜப்பா னின் அரிய மாறுதலைப்போன்ற ஒரு மாறுதலைத் தம் தேசத்தில் எதிர்பார்க்கக் கூடாவிட்டாலும், மேன்மைபெற்ற தம் தந்தை துவக்கிய உயர்ந்த சமா தான ஆளுகையைத் தாம் நீடிக்கக்கூடுமென எதிர் பார்க்கலாம்.

ஜப்பானியர் முன்னேறிச் செல்வதற்கு முதல் படியாயிருந்தது தங்கள் அபிவிர்த்திக்குத் தடை யெதுவென்றும் அனுகூலம் எதுவென்றும் கண்டு கொண்டதுதான். நம்மிந்தியர் இதைக் கண்டு கொள்ளவில்லையா? இல்லையென்றே சொல்ல வேண்டும். உண்மையாய்த் தேசத்தின் உயர்வை வாஞ்சித்து அதற்காக உழைக்கும் உத்தம புருஷ ரும் நமக்குள் உண்டு. ஆனால் அவர்கள் சொற்பமே. ஜனத்தொகையில் பெரும்பான்மையோர் நாம் குன் றிப்போவதற்கு ஆதாரவாயிருப்பவை எவையோ அவற்றையே பிடித்துக்கொண்டு பேணுகின்றனர். சிசுவிவாகம், உபயோகமற்ற விக்கிரக ஆராதனையி லும் மற்றும் சடங்குகளிலும் வீண்செலவு செய்தல், நடனமாதரையும் பொதுமாதரையும் சமுதாயத்தில் பரிபாலித்தல், கைக்கூலி, ஜாதிமதப் பிரிவினைகள் இவற்றைப் பெருங் கெடுதிகளென அறியாமலும், அறிந்தவர்முதலாய் இதைத் தவிர்க்க முயலாம லிருப்பதும் எவ்வளவோ நிர்ப்பாக்கியம். ஜப்பான் கீர்த்தியடைவதற்கு ஜனங்கள் ஏகோபித்து ஒவ் வொன்றையும் ஏற்றுக்கொள்ளவோ, தள்ளிவிட வோ வேண்டியதாயிருந்தது. பூர்வத்தைக்குறித்துப் பெருமைபாராட்டி அதிலேயே நின்றுவிடுவது போதுமென்று நினைப்பவர் நம்தேசத்தில் அபரிமித மாயுண்டு. இதிகாசங்களில் ஆகாயவாகனங்களைப் பற்றிச் சொல்லியிருப்பதால் அவை இத்தேசத்தில் முற்காலத்தில் வழங்கப்பட்டன என்று சாதிப் போரையொத்தவர் நம் சுயதேச மேன்மக்களிலொ ருவரும், சென்னை நியாயஸ்தல அதிபதிகளி லொருவருமாகிய ஸ்ரீமான் ராமையரவர்கள் ஓர் சபையில் சொன்னதைக் கவனிப்பது நல்லது. அவர் சொன்னதாவது:— "புராதன இந்துக்களா கிய ஆரியர் பறக்கப் பழகியிருந்தனரென வைத்துக் கொண்டாலும், அப்படிச் சொல்வதுமாத்திரம் ஒரு வருக்கும் ஒரு பயனையு முண்டாக்காது. நம் முற் பிதாக்கள் எவ்விதம் ஆகாய யாத்திரைசெய்தாரென நமக்குத் தெரியுமா? புராதன ஆரியரின் விமானம் ஆகாயத்திலெழும்புவதற்கு உபகரணமாயிருந்தவை யெவையென நமக்குத் தெரியும்? ஆனால் மேற்கத்தி யரோ (தற்கால ஐரோப்பியர்) தத்துவசாஸ்திரம் (Physical Science) நன்றாய்ப் பயின்று பெருந் தேர்ச்சி யடைந்திருக்கின்றனர்............இந்தியர் அவரைப் பின்பற்றுவதிலும் நல்லது எதுவுமில்லை." ஆம், நாம் உயர்கதி யடையவேண்டுமானால் ஜப்பா னியரைப்போல், எவருடையதாயிருந்தாலும், விர்த் திக்கு ஆதாரவாயிருப்பவற்றைப் பின்பற்றுவதில் பின்வாங்காம லிருப்போமாக.

## MEDITATIONS ON THE PASSION.

## திவ்ய ரட்சகரின் பாடுகளின் பேரில் ஒப்பாரி.

(தொடர்ச்சி.)

126. மேட்டுக்குப் போகையிலே – மின்னா ரழுது வரக்
    கேட்டுமக்காய்ப் பிள்ளைகட்காய் – கிலேசப் படுங்களென்றார்.
127. பசுமரத்துக் கெப்பாடோ-பசுமைமக்கிப் பாடா னால்
    கொடுமைமிகுஞ் சாலேம்–குமாரியரே யென் றுரைத்தார்.
128. சாலேமி னிஸ்திரீகள் – தாங்காத் துயரோடு பாலைவனம் நின்றுசாலேம்–பட்டணத்தைப் பார்த்தழுதார்.
129. பட்டணமே கோட்டைகளே – பாதகர்வாழ் வீடுகளே
    கெட்டழிய வேபொழுது–கிட்டினதோ கிட் டினதோ.
130. கிட்டினது ஆலயமுங் – கெம்பீரமும் பலியும் தட்டழிய வேநேரஞ்–சார்ந்ததுவே, சார்ந் ததுவே.
131. சார்ந்ததா சாரியரே – ஜனத்தினுட மூப்பர் களே,
    தீர்ந்ததுங்கள் கீர்த்தியெல்லாம்–திண்ணமிது, திண்ணமிது.
132. திண்ணமிது குற்றமில்லா – சேசுவுடல்ரத்த மதை
    எண்ணமறச் சிந்தியதால்–எருசலேம் பாழா கும்.
133 பாழாகி யெங்கும்–பரிதாப மாயலைவீர்
    வாழ்விழந்து போவீர்கள் – வன்கொலையாய்க் கொன்றீரே.

(இன்னும் வரும்.)

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச் சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால் தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

## புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| எக்காலக் கண்ணி ... ... ... ... | 0 | ½ |
| எபேசியர் நிருப வியாக்கியானம் ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2–ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபை சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலை தியானம் ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலை தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| பரிசுத்த ஜீவியம் ... ... ... ... | 0 | 2 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| " " பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| " " நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| " ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாசரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

ஜனுவரி.மீ பஞ்சாங்கம்.—

| வாரம். | ஜனுவரிமீ = மார்கழி—தை. ⊙ பௌர்ணமி, 22உ ● அமாவாசை, 7உ | | | | | மார்கழி—தை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... ... | | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 7 | 14 |
| திங்க ... ... | | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 1 | 8 | 15 |
| செவ் ... ... | | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 2 | 9 | 16 |
| புதன் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 3 | 10 | 17 |
| வியா ... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 4 | 11 | 18 |
| வெள் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 5 | 12 | 19 |
| சனி ... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 6 | 13 | ... |

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத் துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத் தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக் கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

FEBRUARY, 1913.　　PRICE, 1 PIE.—விலை, க பை.　　பெப்ருவரிமீ, 1913.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**மதுபான கிரகங்கள்.**—வேல்ஸைச் சேர்ந்த ஆங்கிலிஸி என்றவிடத்தில் 42 குரு விசாரணை ஸ்தானங்கள் உண்டு. ஆனால் மதுபான ஸ்தலம் ஒன்றுமில்லை.

**இசிவு ஜன்னி குணமாக்கப்பட்டது.**—லண் டன் நகர் செயின்ட் தோமாஸ் ஆஸ்பத்திரியின் ரணவைத்தியர் இசிவு ஜன்னி நேரிட்ட இரண்டு பேர்களுக்கு நிணநீர் பிரயோகித்து ஜன்னியைக் குணமாக்கினார்.

**டெலிபோனைக் கண்டுபிடித்தவர்.** — டெலி போன் சூத்திரத்தை 1853–ஆம் வருஷத்தில் கண்டு பிடித்த எம். வி. பார்விசியல் என்ற ஒரு பிரெஞ் சுக்காரர் மரணமடைந்துவிட்டார். அப்போது அவருடைய வயது 83.

**நான்கு சகோதரர்கள் நகராதிகாரி வேலை யிலிருப்பது.** — பிரான்சுதேசத்தைச் சேர்ந்த டிகான் ஜில்லாவில் நான்கு சகோதரர்கள் அந்த ஜில்லாவின் நான்கு நகரங்களில் நகராதிகாரிவேலை பார்த்து வருகிறார்களாம்.

**மதுபானத்தினால் நேரிட்ட குற்றம்.**—பவேரி யாதேசத்தில் சென்ற 1910–ஆம் ஆண்டு மதுபா னத்தினால் நேரிட்டிருக்கும் கேசுகள் 8,814. இந் தக் கேசுகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டது.

**சுரங்க வேலைகள்.**—சுரங்க வேலைகளில் முழு உலகத்திலும் வேலை செய்துவரும் மொத்த நபர் கள் 6,250,000; சென்ற 1910-ஆம் வருஷத்தில் முழு உலகத்திலும் வெட்டி எடுக்கப்பட்டிருக்கிற நிலக்கரியின் கிரயம் 420,000,000 பவுண்ட்.

**மதுபானத்தைக் குறைக்க ஒருபாயம்.**—ஜர் மனிதேசத்தில் மதுபானத்தைக் குறைப்பதற்காகக் கைத்தொழிற் சாலைகளின் சொந்தக்காரர்கள் தங் களுடைய வேலைக்காரர்களுக்கு கொள்முதற்படி யே தேத்தண்ணீரை விற்றுவருகிறார்கள்.

**மரணத்துக்குச் செலுத்தவேண்டிய சட்ட ணங்கள்.**—வியன்னா பட்டணத்திலுள்ள பாரன் ராத்ஸ்சயில்ட் குடும்பம் சென்ற வருஷம் கவர்ன் மெண்டுக்குச் செலுத்தவேண்டிய 10 லட்சம் பவுண்ட் மரணவரி பண்டு செலுத்திவிட்டார்கள்.

**டாக்டர் ஜெமீசன்.**—திரான்ஸ்வால்தேசத்து ஐக்கிய கூட்டத்தாருக்கு அவயவமாயிருக்கிற டாக் டர் ஜெமீசன் என்பவர் தற்போது தனக்கு நேரிட் டிருக்கும் வியாதியைக் கருதி மகா மந்திர சபையி லிருந்து நீங்கிப்போக உத்தேசித்திருக்கிறாராம்.

**ஆஸ்போர்ன் காட்டேஜ்.**—ஐல் ஆவ் வெயிட் என்னும் தீவிலுள்ள ஆஸ்போர்ன் காட்டேஜில் பிரின்செஸ் ஹென்ரி ஆவ் பாட்டன்பர்க் அவர் கள் சிலகாலமாக வசித்துக்கொண்டு வந்தார்கள். அந்த காட்டேஜ் தற்காலம் விலைக்கு வந்திருக்கிறது.

**பழைய பென்னிகள்.** — ஸ்டெப்கர்லி கோவிலை இடித்து வேலைசெய்துகொண்டிருக்கும் போது ஹென்றி III என்ற அரசர் ஆண்டகாலத் தில் 1248, 1272 இந்த வருஷங்களில் அச்சிடப் பட்ட 500 வெள்ளி நாணயங்கள் கண்டுபிடிக்கப் பட்டன.

**பள்ளிக்கூடங்களில் படிக்கிற பெண்பிள்ளை கள்.**—ஜபான்தேசத்துப் பெண்பிள்ளைகளைக் கணக் கிட்டுப் பார்க்கும்போது அவர்களில் 100–க்கு 96 விழுக்காடு பள்ளிக்கூடங்களில் படித்துவருகிறார் கள். நமது இந்தியாதேசத்துப் பெண்பிள்ளைகளைக் குறித்து என்ன?

**2,300 நட்புக் கடிதங்கள்.**—ஆஸ்டிரேலியாதே சத்து மெல்போர்ன் பட்டணத்தில் பூர்த்தியாக 82 வயதாகிக் கலியாணமாகாமல் இறந்துபோனவனு டைய ஒரு பெட்டியில் ஆறு சிறுமிகளால் எழுதப் பட்டிருந்த 2,300 நட்புக் கடிதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

**கட்டடங்கள்.**—கனடாதேசத்திலுள்ள மன்டி ரீல் நகரில் சென்ற வருஷம் 3,314 கற்கட்டடங் கள் கட்டப்பட்டிருப்பதில் இருநூற்று அறுபத்து நாலு லட்சத்து முப்பத்தோராயிரத்துத் தொளாயி ரத்து எழுபத்தேழு டாலர் பணம் செலவாயிருப்ப தாகத் தெரியவருகிறது.

**ஸ்காட்லாண்ட் தேசத்தில் நடந்தேறிய விவா கங்கள்.** — ஸ்காட்லாண்ட் தேசத்தில் சென்ற 1910–ஆம் ஆண்டில் 15 வயதான நான்கு சிறு மிகளும், 16 வயதான 56 சிறுமிகளும், 17 வயதான 342 சிறுமிகளும், 18 வயதான 954 சிறுமிகளும் விவாகமடைந்தனரென்று தெரியவருகிறது.

**ஆபிரிக்காகண்டத்திலுள்ள வரிக்கழுதையின் நாவு.**—ஆபிரிக்காகண்டத்திலுள்ள வரிக்கழுதை யின் நாவு வெகு நீளமாக (கடவுளினால்) சிருஷ்டிக் கப்பட்டிருப்பதினால் அது தன்னுடைய நாவை மரங்களின் கிளைகளில் மடிப்பு மடிப்பாக விட்டுப் பின் அதைத் தன் நாவுக்கு இழுத்துக்கொள்ளுமாம்.

**ஒரு பெரிய வயிரக்கல்.**—தென் ஆபிரிக்காதே சத்து "ரான்ட்" என்னும் வயிர சுரங்கங்களிலி ருந்து 1,649 காரட் நிறையுள்ள ஒரு வயிரக்கல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு கோழி முட்டை பருமனாகத் தலையில் வெட்டப்பட்டிருப்ப தோடு, 1,863 காரட் நிறையுள்ள கோஹினூருக்குக் குறைவுள்ளது

**ஆபில் பழத்தோட்டம்.**-யூனைட்டட்ஸ்டேட்ஸ் தேசத்திலுள்ள "பார்கர் ஆர்சார்ட்" என நாமகர ணம் சூட்டப்பட்டிருக்கிற ஆபில் பழத் தோட்டம் 12,000 ஏகரா விஸ்தீரணமுள்ளதென்றும், அதில் 96,000 ஆபில் மரங்கள் நாட்டப்பட்டிருக்கிற தென்றும், அதின் கிரயம் சுமார் 600,000 டாலர் மதிப்பாகிறதென்றும் தெரியவருகிறது.

**புதிய கம்பியில்லாத டெலிபோன்.**—டாக்டர் ரிக்கார்டோ மொரிட்டி என்பவர் டெலிபோன் சூத் திரத்தில் கம்பியில்லாமல் ஒரு நூதனமான டெலி போனைக் கண்டுபிடித்திருப்பதாகவும் அதை இதாலி தேசத்து அரசர் ரோமாபுரி பட்டணத்திற்கும், திரிப்போலிக்கும் போட்டுச் சமாசாரங்களை அறிந்து கொண்டுவருவதாகவும் தெரியவருகிறது.

**ரெயில்வே வண்டிகளை ஏககாலத்தில் பூட்டு கிற ஓர் கருவி.** — பீஸ்டன் பட்டணத்திலுள்ள வி. இ. காண்டிராட் கம்பெனியார் ரெயில்வே வண் டிகளை ஏககாலத்தில் பூட்டவும் திறக்கவும்கூடிய ஒரு கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இக் கருவியைக்கொண்டு கார்ட் எல்லா வண்டிகளை யும் ஒரேசமயத்தில் சாத்தவும் திறக்கவும் கூடும்.

**1¼ மைல் நீளமுள்ள ரெயில்வண்டித்தொடர்.**— அமெரிக்காதேசத்து பென்சில்வேனியா ரெயில்வே அதிகாரிகள் 133 வண்டிகள் அடங்கிய ஒரு தொட

ளைக் கூட்டி, அவைகள் மூன்று இன்ஜின்களால் இழுக்கப்படும்படி செய்துவருகிறார்கள். அந்த வண்டிகளின் நீளம் 7,000 அடியாகிறது. அதாவது $1\frac{1}{4}$ மைல் நீளத்திற்கு அதிகம். உலகத்திலுள்ள வண்டித்தொடர்களில் இதுதான் முதன்மையானது.

**டாக்டர் லிவிங்க்ஸ்டன் என்பவரின் தோழன்.**—டாக்டர் லிவிங்க்ஸ்டன் என்பவர் ஆபிரிக்காகண்டத்தின் பல பாகங்களில் பிரவேசித்துப் பரிசோதனை செய்துகொண்டு போனபோது அவருடன் உழைத்த தோழர்களில் சர். ஜான் கிஸ்ட் என்பவர்மாத்திரம் உயிரோடிருக்கிறார். அவருக்குத் தற்போது 80 வயதாகிறது. இவர்தான் அடிமை வியாபாரத்தொழிலை நிறுத்தினதற்குக் காரணகர்த்தாவென்று சொல்லக்கூடும்.



பார்லிமெண்ட் மண்டபம்.

**வெள்ளீரலும் ஆகாயமும்**—சுகத்தைப் பேணிக்கொள்ள நமது தேகத்திலுள்ள முழு வெள்ளீரலிலும் சுத்தமான ஆகாயம் பரிசிக்கும்பட்சத்தில் யாதொரு வியாதியும் உடலுக்கு நேரிடாது.

**கவர்னர் ஜெனரல்.**—லார்ட் ஹார்டிங் பிரபு தினத்துக்குத் தினம் சுகப்பட்டும் பலப்பட்டும் வருகிறார். வெடியெறிந்தவன் இன்னும் அகப்படவில்லை.

**டர்க்கி யுத்தம்.**—இந்தக் கடும் யுத்தம் இனி நிறுத்தப்பட்டு சமாதானமாய்விட்டது டர்க்கிக்கு கான்ஸ்தாந்திநோபில் தவிர ஐரோப்பாவிலே வேறு பூமி கிடையாது ராஜ்யமெல்லாம் நமது ஆசியா கண்டத்திலே இருக்கும்.

## 1913.

## NEW YEAR.

## புதிய வருஷம்.

சத்தியதூதனை வாசிக்கும் என் நேயர்களுக்கு இப்புதிய வருஷ வாழ்த்துதல் கூறுகிறேன். கடவுள் கடந்த வருஷத்தில் நம்மோடிருந்து நமக்கு வரக்கூடிய எல்லாத் தீங்கிலிருந்தும், ஆபத்திலிருந்தும் காப்பாற்றி, அவர் தம்முடைய உக்கிராண வீட்டிலிருந்து உண்ண உணவையும், உடுக்க உடையையும் கொடுத்து, நம்முடைய நாசியிலே சுவாசத்தை நிறுத்தி, இப்புதிய வருஷத்தை ஜீவனோடு பார்க்கும்படி செய்த நம்முடைய பரம பிதாவாகிய கடவுளுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

கடந்த போன வருஷத்தில் நம்முடைய அநுபவத்தில் கண்ட சில சத்தியங்களை உணர்ந்து நமக்குப் படிப்பனையாக இவ்வருஷத்தில் கையாடவேண்டும்.

1. **நம்முடைய மதியீனம்.** நம்முடைய ஜீவியத்தில் எவ்வளவோ மதியீனம் காணப்பட்டிருக்கும். நாம் தங்கவேண்டிய இடத்தில் தங்காமலும், செய்யவேண்டியதைச் செய்யாமலும் நம்முடைய பிரயாணத்தை அதிக மதியீனத்தோடு நடத்தியிருப்போம். நம்மைப் பிழைப்பூட்டி நாசியிலே சுவாசத்தை வைத்துக் காப்பாற்றின கடவுளில்விட உலகத்திலே அதிகப் பற்றுதலை வைத்திருந்தோம். உலகப்பொருள்களை அதிகமாய் நம்பி இருந்தோம். இப்படிப்பட்டவைகளைச் சுத்த மதியீனத்தினாலேயே அப்படிச் செய்துவந்தோம். நாம் காப்பாற்றப்பட்டது எதினாலே, உலக ஆஸ்தியாலல்ல, கடவுள் நம்மை ஜீவனோடு வைத்ததினால்தான். ஆகையால் நாம் நன்றியறிதலான இருதயத்தோடே இந்தப் புதிய வருஷத்தில் நம்முடைய பரம பிதாவைக் கிட்டிச் சேருவோமாக.

2. **நாம் மனுஷரை நம்பினோம்.** போன வருஷத்தில் நாம் கண்டுபிடித்த சத்தியம் என்ன? நாசியில் சுவாசமுள்ள அநேகரை நம்பினோம், வெளித்தோற்றத்தால் நல்லவர்கள் என்று நினைத்த அவர்கள் கெட்டவர்களாய்க் காணப்பட்டார்கள். நன்மையை அவர்களிடம் நாம் நாடினபோது தீமையைப் பார்த்தோம். அவர்களை நம்பினபோது நம்மை முழுதிலும் கைவிட்டார்கள். ஏமாற்றப்பட்டோம். இனியேது, அப்படிப்பட்டவர்களை நம்புவதில் யாதொரு பிரயோஜனமில்லை என்று சொன்னோம். ஆகையால் இவைகளை நாம் உணர்ந்து, நம்முடைய பரம பிதாவாகிய கடவுள் ஒருவரையே நம்பி, அவரையே சேவிக்கப் பிரயாசப்படுவோமாக. அவர் ஒருவரே நம்முடைய சிநேகிதரும், அன்பரும், ஆபத்துக்காலத்தில் உதவிசெய்கிறவருமாயிருக்கிறார்.

3. **விழுந்த அநேகர் நமக்கு எச்சரிப்பு.** கடந்த வருஷத்தில் எத்தனையோ பலவான்கள், தனவான்கள், கனவான்கள் விழுந்துபோனார்கள். மரணத்திற்கு இரையாய்ப்போனார்கள். இது நம்முடைய கண்கண்ட காட்சி. மரணம் நமக்கும் திடீரென்று வரும். நமக்கு ஏன் வம்பும் தும்பும்? கர்வமும் வீண்பெருமையும் என்னத்திற்கு? நம்மைத் தாழ்த்தி நல்ல குணத்தை அடைந்து, நமக்குக் கடவுள் கொடுக்கிற நாள்மட்டும் அவருடைய நாமத்திற்கு மகிமையாக ஜீவித்து, நம்முடைய ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிப்போமாக.



4. **கடந்துபோன வருஷத்தினால் நமக்குண்டான ஆதாயம்.** தேசசரித்திரம், ஜாதிகளின் அழிவு, ராஜ்யங்களின் முடிவு, யுத்தத்தில் மடிந்த பலவான்களின் சாக்ஷி, ஜெயித்த வீரசிகாமணிகளின் மாதிரி, மனுஷர்களுடைய பிரபலம், தவறுதல், விழுதல் எல்லாம் நமக்குப் படிப்பனை. இவைகள் மூலமாய் அறிவு விர்த்தியடைந்தது. மற்றவர்களால் அறிவில் தேர்ச்சியடைந்தோம்.

5. **மற்றவர்களுடைய ஆஸ்தி நம்முடையது.** முந்தின தலைமுறையாரின் பிரயாசத்தால் நாம் ஆஸ்திக்காரர்களானோம். புஸ்தகசாலையில் உள்ள புஸ்தகங்கள் நம்முடையதல்ல, மற்றவர்களுடைய பிரயாசை. நீராவி மரக்கலம் நாம் உண்டுபண்ணவில்லை, மற்றவர்களுடைய பிரயாசை. இருப்புப் பாதை வண்டித்தொடர் நம்முடையதல்ல, மற்றவர்கள் பிரயாசையினால் நம்முடைய வசதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் ஆஸ்திக்காரர்.

6. **நாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.** இலவசமாய் அநேக நன்மைகளைப் பெற்ற நாம், நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மற்றவர்களிடத்திலிருந்து இலவசமாய்ப் பெற்றதை இலவசமாய் மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும். கடவுளுடையதை கடவுளுக்கும், ராஜனுடையதை ராஜனுக்கும், மனுஷனுடையதை மனுஷனுக்கும் கொடு. இந்தப் புதியவருஷம் நம்மெல்லாருக்கும் ஆசீர்வாதமாய் இருக்கவேண்டுமானால் முற்கூறிய காரியங்களைக் கவனித்து நடப்போமாக. உங்கள் எல்லாருக்கும் புதிய வருஷ வாழ்த்துதல் கூறுகிறேன்.

## HINDUISM.

## ஹிந்துமார்க்க அக உதாரணங்களின் பரீட்சை.

(தொடர்ச்சி.)

வேதாந்தக் கொள்கையைக் குறித்தது.

வேதாந்தக் கொள்கையில் சாங்கியம், நியாயம் என்ற வேறிரண்டு வகையுண்டென்று சொன்னோமே, அவைகளில் சாங்கியமானது கபிலர் என்று பேர்போன ஒரு பூர்வீக வித்துவானாலே ஏற்படுத்தப்பட்டது. இதிலடங்கிய கொள்கைப்படி புத்தியும் சித்தமுமில்லாத சடப்பொருளாலேயே உண்டானதாம். இப்படியாகக் கபிலருடைய கொள்கை உலகாயிதமென்று சொல்லப்படும் நாஸ்திக வகைப்பாடுள்ளதென்று சொல்லவேண்டும்.

நியாயமென்று சொல்லப்படுகிற வகையுள்ளது முன் சொல்லப்பட்ட மற்றவைகள்போல் அவ்வளவான விகற்பமுள்ளதல்ல என்று தோன்றும். கடவுள் ஒருவர் உண்டென்றும், அவருக்குப் புத்தி, சித்தம், சக்தியுண்டென்றும், அவருக்கும் மற்ற வஸ்துக்களுக்கும் வேற்றுமையுண்டென்றும் ஒத்துக்கொள்வார்கள். ஆனாலும் இந்தக் கொள்கையில் கடவுளுடைய நீதி, பரிசுத்தம்முதலிய இலட்சணங்களைக்குறித்தும், அவர் உலகத்தை ஆளுகிற அதிகாரத்தைப்பற்றியும் ஒன்றும் சொல்லப்படாதிருக்கிறது அக்கொள்கைக்கு முக்கிய குறைவு.

இப்படி ஹிந்துக்களுடைய சாஸ்திரக் கொள்கைகளை ஆராயும்போது அவைகளை எழுதின வித்துவான்கள் தங்கள் திராணிக்கு மிஞ்சின விஷயங்களில் பிரவேசித்து, தங்கள் மனதில் தோன்றினபடி அநேகவித வீண் எண்ணங்களைச் சாதித்து, தங்களையும் மற்றவர்களையும் வஞ்சித்தார்களென்பதுபோலக் காணப்படும். சத்தியவேதத்தில் சொல்லியபடி "உலகத்தார் தங்கள் சொந்த ஞானத்தினாலே கடவுளை அறியவில்லை." கடவுளையும் அவருடைய சித்தத்தையும் அறிய விரும்புகிறவன் அவர் அருளிய மெய்வேதத்தை வாசித்து அறியவேண்டும். கடவுள் தம்மை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். கடவுள் தம்மைப் பூரணமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். கடவுளுடைய நீதி, பரிசுத்தம், அன்பு யாவற்றும் இயேசுகிறிஸ்துவுக்குள் பூரணமாய் வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்து கடவுளுடைய தத்துவத்தின் நிறைவெல்லாம் உடையவர்.

தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக இயேசுகிறிஸ்துவுக்குள் வாசமாயிருந்தது. ஆகையால் "இயேசுகிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட தேவன்." "கிறிஸ்துவாகிய மாமிசத்திலே, கடவுள் வெளிப்பட்டார்." இயேசுகிறிஸ்து சொல்லுகிறதைக் கவனியுங்கள்: "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்." "நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம்." "என்னை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமல் இருப்பான்." "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்." "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." "நான் பிழைக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள்" என்று சொன்னார். இயேசுகிறிஸ்து கடவுளுடைய உள்ளத்தையும், சைதன்யத்தையும் மனுஷர்களுக்குக் காண்பிக்கிறார். கடவுளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம், நாம் நடக்கவேண்டிய விதம், கடவுளோடு நாம் ஐக்கியப்படுகிற விதம், அவரோடு பேசி உறவாடுகிற விதம் எல்லாவற்றையும் இயேசுநாதர் காண்பித்திருக்கிறார். ஆகையால் நம்முடைய சொந்த ஞானத்தினால் கடவுளை அறியும்படி பிரயாசைப்படுவதை விட்டு, இயேசுநாதர் காட்டிய வழியில் நின்று, கடவுளை அடைய பிரயாசைப்படுவோமாக.

(இன்னும் வரும்.)

## A CHRISTIAN'S COMFORT.

## கிறிஸ்தவனுக்கு ஆறுதல்.

TUNE: "While the days are going by."

Sacred Songs and Solos. New 802; Old 323.

1\. துன்பம் உன்னைச் சூழும்போது
கருத்துடன் ஜெபஞ்செய்;
இன்பமற்றுப் போகும்போது
கருத்துடன் ஜெபஞ்செய்;
தேற்ற ஓராளுமின்றி
வேற்றாளாய்ப் போகும்போது
கிறிஸ்தேசுவை நம்பி
கருத்துடன் ஜெபஞ்செய்.
ஜெபஞ்செய், ஜெபஞ்செய்;
ஜெபஞ்செய், ஜெபஞ்செய்;
கிறிஸ்தேசுவை நம்பி
கருத்துடன் ஜெபஞ்செய்.

2\. நீ நேசித்தோர் பகைத்தாலும்
கருத்துடன் ஜெபஞ்செய்;
உன் இனத்தார் கைவிட்டாலும்
கருத்துடன் ஜெபஞ்செய்;
குற்றங்கள் உன்மேல் சாட்டி,
பற்றறப் பழித்தாலும்
கிறிஸ்தேசுவை நம்பி
கருத்துடன் ஜெபஞ்செய்.

3\. கையில் காசில்லையானாலும்
கருத்துடன் ஜெபஞ்செய்;
மெய்வருத்தம் மேலிட்டாலும்
கருத்துடன் ஜெபஞ்செய்;
வாலிப பலங்குன்றி
தீரா ரோகியானாலும்
கிறிஸ்தேசுவை நம்பி
கருத்துடன் ஜெபஞ்செய்.

P. B.

'Paradise Lodge,'
**Royapuram**, Madras,
*1st January*, 1913.

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

*விராதன் துதியில்*

கடுத்தகராம் கதுவநிமிர் கைபெடுத்து மெய்கலங்கி,
உடுத்ததிசை அனைத்தினும்சென் றோலிகொள்ள உறு
துயரால், அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பரமேஎன், றெடுத்தொருவா ரணமழைக்க நீயோஅன் றேஎன்றாய்?

என கஜேந்த்ரோபாக்யானத்தைக் குறித்ததில், 'ஏன் என்றாய்' என்றதனால், "மற்ற தேவர்கள் யானையின் இன்னலைக் கேட்டும் வாளா இருந்தனர். பரமே என்றபோது, தாங்கள் க்ஷுத்ர தேவதைகளாதலின் கஜேந்த்ரன் அழைப்பது தம்மை அன்றெனவாளா இருந்தனர். அவர்களெல்லாம் ஏனென்றுதானுங் கேளாத பாவிகள். திர்யக்கான ம்ருகத்தை ஏனென்று வந்து ரக்ஷித்த நீ என்னை ரக்ஷிக்காமல் விடுவாயோ" என்று இங்ஙனம் இனமான பல பொருள்கள் தோன்ற நிற்பது ப்ரத்யக்ஷம்.

**காவ்ய பாத்ரங்களின் மனநிலைக் கியைந்தவாறு கவிகளை இயைப்பது** காவ்யங்களில் பொருட்சுவை சிறத்தலான உபாயம். காளிதாஸன் ஷேக்ஸ்பியர் முதலிய நாடக கவிகளைப்போல் கம்பரும் தமது காவ்யத்தில் சில ஸந்தர்ப்பங்களில் இந்த மர்மத்தை அநுஸரித்திருப்பதனால், இவர் மனுஷ ப்ராக்ருதியை நுணித்தறிந்தவர் என்பது புலனாகின்றது.

சூர்ப்பநகை உவமை முதலிய உதவிகொண்டு சொல்லளவாகச் சொல்லக்கேட்டு இராவணன் ஸீதையின் ஸௌந்தர்ய லஹரியில் மயங்கியிருக்கையில் காணும் உருவெளித்தோற்றப் பகுதியை ஆராய்ந்து பார்ப்போம். ஒரு பொருளை நேரிற் கண்டவர்கள், பின் நனவில் கருதும்போது அதனைக் கண்டது கண்டவாறே சித்ரித்துக்கொள்வது கூடும்: கனவில் தோன்றினும் அப்பொருள் கண்டது கண்டபடியே தோன்றும். நேரில் காணாமல் ஒருவர் உரைப்பக் கேட்ட பொருள், கேட்ட உரையின் உதவியால், உரைத்தவர் உரைத்த ஆற்றலுக் கேற்ப, ஒருவாறு மனத்தில் சித்ரித்துக்கொள்வது கூடுமேயன்றி, உள்ளது உள்ளபடியே தோன்றுவது இல்லை.

அம்பும் அனலும் நுழையாக் கனவந்த காரத்
தும்பர் மழைகொண் டயலொப் பரிதாய துப்பின்
கொம்பர் குரும்பைக் குலங்கொண் டதுதிங்கள் தாங்கி
வெம்பும் தமியேன்முன் விளக்கெனத் தோன்று மன்றே.

மருளூடு வந்த மயக்கோ மதிமற்று முண்டோ
தெருளாது தென்னோ திணிமை யிழைத்தாலும் ஒவ்வா
இருளூடிரு குண்டலம் கொண்டும் இருண்ட நீலச்
சுருளோடும் வந்தோர் சுடர்மாமதி தோன்று மன்றே.

புடைகொண்டெழு … … …
இடைகண்டிலம் அல்ல தெல்லா வுருவுந் தெரிந்தாம்.
விடறங்கிய கண்ணுடை யார்இவர் மெல்ல மெல்ல
மடமங்கைய ராய்என் மனத்தவர் ஆயி னாரே.

இம்மூன்று செய்யுளும் இராவணன் கண்ட உரு வெளித்தோற்றம். மூன்றாவது செய்யுளில் "மெல்ல மெல்ல, மடமங்கையராய் என் மனத்தவர் ஆயினாரே" என்று இராவணன் உரைக்கும் உரையின் உள்ளுறையை உள்ளுற நோக்குமிடத்தில், சூர்ப்பநகை காட்டிய உவமானங்களால் உவமேயங்களை ஒவ்வொன்றாக ஒன்றோடொன்று பொருத்தி இராவணன் கருத்தில் அமைத்துக்கொண்ட உருவமே ஈண்டு வெளித்தோற்றமான ஸீதையின் தோற்றம் என்பதும், இங்கே ஸீதையின் வர்ணனை ப்ரத்யக்ஷபாவனையைத் தருவதின்று என்பதும், இச்செய்யுள்களை மேலோட்டாக ஓதுவார்க்கும் நன்கு புலப்படும்.

இங்ஙனம் தான் கண்ட உருவம் ஸீதையோ அன்றோ என்று ஐயுற்றவன், சூர்ப்பநகையை அழைத்து "இந்நின்றவ ளாங்கொல் இயம்பிய ஸீதை?" என்று கேட்க, இராமானந்தபரவசையான அவள், இராவணன் கேட்கின்ற நோக்கத்தை அறியாது, தன்னையும் மறந்து, தனக்கு உருவெளித்தோற்றமாக,

செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயினொடும்
சந்தார்தடந் தோளொடும் தாழ்தடக் கைக ளோடும்
அந்தார்அக லத்தொடும் அஞ்சனக் குன்ற மென்ன
வந்தான்இவ னாகும்அவ் வல்வில் இராமன் என்றாள்.

(இன்னும் வரும்.) T. C. M.

## MEDITATIONS ON THE PASSION.

## திவ்ய ரட்சகரின் பாடுகளின் பேரில் ஒப்பாரி.

(தொடர்ச்சி.)

134. கொல்லவென்று சேவகர்கள்—குருசை யிறக்கிவைத்து
எல்லாருங் காணநம—தேசுவை யதிற்கிடத்தி.
135. கிடத்தியிரு கால்கரத்தில்—கெட்டியா யாணி தைத்து
மடக்கச் சிலுவையொடு—மதிமுகத்தைக் கீழே வைத்தார்.
136. வைத்ததின் பின்னூன்றி – வலதிடது பக்கமதில்
சுத்தனொடு வேறிரண்டு—சோரர் சிலுவைநட்டார்.
137. சோரரிரு பக்கம்நின்று—தூஷித்துக் கொண்டிருக்க
பாரி லிருள்மூடப்—பகருவா ரென்பிதாவே.
138. பிதாவேயித் துர்ச்சனர்கள் – பிசகாகச் செய்கிறதை
எதென் றறியார்—இதயத்தெண் ணாதிருப்பீர்.
139. எண்ணா திருப்பீர் — எனமொழிந்த தைக் கேட்டு
அண்ணாந்து பார்த்து—அவர்வலது பாகமதில்.
140. பாகத் திருந்தகள்ளன்—பகருவா னாண்டேநீர்
போகும்ராஜ் யத்தடியேன்—போகவருள் தாருமென்றான்.
141. என்ன இரக்கமுள்ள-ஏசையா சொல்வாராம்
இன்றைக்கென் னோடுபா – தீசிலிருப்பையென்றார்.
142. தீசிலிருப்பை யென்று-திருவா யுரைத்திடவும்
மாசில்லா நாதன்—மரத்தடியி லந்நேரம்.
143. நேரத்தி லங்குநின்ற—ஸ்திரீகள் கூட்டமொடு
ஆரணியத் தன்னைமரி—யம்மாளும் வந்துநிற்க.
144. நிற்கவே தாயாரும்—நேசமுள்ள யோவானும்
கற்பகஞ் சேர்வாயாற்—கனிந்துரைப்பா ரிஸ்திரீயே.
145. ஸ்திரீயே யீதோ—இவனுன் மகனெனவும்
உத்தம வென்சீஷா—உனக்கிவள்தா யாரெனவும்.

(இன்னும் வரும்.)

## THE DECALOGUE IN VERSE.

## தசப்பிரமாண விளக்கம் (தொடர்ச்சி).

முத்திக்கவி— களவு.

பல்லவி.

முத்தி கிடையாதடா—ஒருக்காலும்
முத்தி கிடையாதடா.

சரணங்கள்.

38
சொத்தைச் சுகத்தைச் சுயாதீனம் நற்புகழை
எத்திக் கவருகின்ற ஈனத் திருடருக்கு— முத்

39
வஞ்சகவர்த் தகம்பண்ணி மாயாண்டி வேஷமிட்டு
லஞ்ச மநீதிவட்டிப் பொன்சேர்த்து வாழ்பவர்க்கு —முத்

40
பந்தயஞ் சூதாட்டம் பாவாசை லாட்டரியில்
குந்தியிருந் தாதாயம் கொள்ளுகின்ற சோம்பருக்கு —முத்

41
அறிந்த விலைப்பொருளை யவசரக் காரரிடம்
குறைந்த விலைகொடுத்துக் கொள்ளுந் திருடருக்கு —முத்

42
வறியர் எளியவர்மேல் வன்கண்மை யாயிருந்து
திரவிய மேகுவிக்குந் தீய பிசினிகட்கு— முத்

43
ஓதுந் திருமறையை உலகில் பரப்புதற்கு
ஏதுங் கொடாம லிறுமாந் திருப்பவர்க்கு— முத்

44
வீணாய்ப் பிறர்புகழ விருப்போடு கேட்டிருந்து
நாணமற் றேபெருமை நாடுந் திருடருக்கு— முத்

45
நாவா லெழுத்தால் நடையுடை பாவனையால்
ஓவாப் புகழ்படைக்கு மாயத் திருடருக்கு— முத்

46
ஆட்டுத்தோல் மேல்வேஷம் அகத்திலோ நாய்வே [ஷம்
கூட்டித்தன் னயநாடுங் குருக்களடியாருக்கு—முத்

47
மங்கையைத் திருடவந்த மதிகெட்ட அலகையைச்
சிந்துதிரப் போர்புரிந்து ஜெயித்தானைச் சேரார்க்கு —முத்

(இன்னும் வரும்.) G. S. V.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

## புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் … … … … | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் … … … … | 0 | 3 |
| எக்காலக் கண்ணி … … … … … | 0 | ½ |
| எபேசியர் நிருப வியாக்கியானம் … … | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை … … … | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2–ம் பதிப்பு … | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் … … | 0 | 8 |
| கிரணமாலிகை … … … … … | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) … … | 1 | 0 |
| ஆடவர் கும்மி … … … … … | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் … … … | 0 | 3 |
| திருச்சபை சரித்திரம் … … … … | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம் … … … … | 0 | 9 |
| வேதோபகரணம் … … … … … | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் … … | 0 | 8 |
| மாதர் கும்மி … … … … … | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் … … … | 0 | 1 |
| காலை தியானம் … … … … … | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் … … | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் … … | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலை தியானம் … … … … … … | 0 | 8 |
| சற்குரு சதகம் … … … … … | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை … … … … | 0 | 1 |
| பரிசுத்த ஜீவியம் … … … … … | 0 | 2 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் … … … … … | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் … … … | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் … … … … … | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி … … … … | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்… … … … | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு … | 0 | 3 |
| „ „ பெரிய பதிப்பு … … … | 0 | 4 |
| „ „ நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| „ ஞான கீதங்கள் பெரியது… … … | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்… … … … | 0 | 2 |
| மூதேவி ஸ்ரீதேவி வீடுகள் (ஓர் கதை) … … | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாசரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் … … … … … | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு… … | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) … … … … … | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

## பெப்ருவரிமீ பஞ்சாங்கம்.—

| வாரம். | பெப்ருவரிமீ = தை—மாசி. ⊙ பௌர்ணமி, 22உ ● அமாவாசை, 5உ | | | | | தை—மாசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி… … | … | 2 | 9 | 16 | 23 | … | 21 | 28 | 5 | 12 |
| திங்க… … | … | 3 | 10 | 17 | 24 | … | 22 | 29 | 6 | 13 |
| செவ்… … | … | 4 | 11 | 18 | 25 | … | 23 | 30 | 7 | 14 |
| புதன்… … | … | 5 | 12 | 19 | 26 | … | 24 | 1 | 8 | 15 |
| வியா … … | … | 6 | 13 | 20 | 27 | … | 25 | 2 | 9 | 16 |
| வெள்… … | … | 7 | 14 | 21 | 28 | … | 26 | 3 | 10 | 17 |
| சனி … | 1 | 8 | 15 | 22 | … | 20 | 27 | 4 | 11 | … |

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MARCH, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. மார்ச்சுமீ, 1913.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**சிரஞ்சீவி மருந்து.**—மாலை 6 மணிக்குமேல் ஒன்றுஞ் சாப்பிடாதே என்பது டாக்டர் ஸால் என்பவரின் விதியாம்.

**போஸ்ட்மென் நடை.**—ஒரு போஸ்ட்மென் தன் 27 வருஷ சர்விசிலே 1 லட்சம் 30,000 மைல் நடந்ததாகத் தெரியவருகிறது.

**உயர்தர மாணுக்கர்.** — இந்தியா முழுவதும் 31,486 உயர்தர அல்லது காலேஜ் மாணுக்கருண்டு. இவர்களில் 374 பேர்மாத்திரம் பெண்களாம். அன்றி, இவர்களிலே கிறிஸ்தவ ஸ்டுடெண்ட்மார் ஒருவேளை ஆயிரம்பேர்தான் இருக்கலாம்.

**வைஸ்ராயவர்கள்.** — நமது கவர்னர்ஜெனரல் தினந்தோறும் சுகப்பட்டுவருகிறார். சீக்கிரத்தில் சிம்லா மலைக்குப் போவார். இந்திய ஸ்திரீரத்னங்களெல்லாரும் வந்தனோபசாரப் பத்திரிகை தத்தம் ஊர்களிலிருந்து கவர்னர்கள் மூலமாய் அனுப்புகிறார்கள். அவர்களுக்குண்டான விபத்தைப்பற்றித் தேசமெங்கும் துக்கம் பரவியிருக்கிறது.

**லார்ட் பேர்ட்லண்ட்.** — நமது கவர்னரவர்கள், இதற்குமுன்னே வேறு யாரும் செய்யாத விதமாய், பள்ளிக்கூடங்களையெல்லாம் போய்ப் பார்த்துவருகிறார். இது நல்லகாரியம். இதனாலே கல்வி யபிவிர்த்திக் கிடமுண்டாகிறது. கவர்னர் துரைசானியம்மாளும், அப்படியே பெண்கள் பாடசாலைகளைக் கண்டு உற்சாகப்படுத்திவருகிறார்கள். இவர்கள் ஆட்சிக்காலத்தில் நமது ராஜதானியில் மிக்க கல்விச்செல்வம் உண்டாகுமெனக் கோருகின்றோம்.

**பால்கன் டர்க்கி யுத்தம்.** — இந்தப் பெருஞ் சண்டை மறுபடியும் ஆரம்பித்திருக்கிறது. இரண்டாம் நகரமாகிய ஆதிரியனோப்பில் முற்றிகை போட்டிருக்கிறது. ஆகாயத்திலிருந்தும் குண்டுகள் கீழே விழுந்து வெடிக்கின்றன. பட்டணவாசிகளுக்கு மெத்தக் கஷ்டமும் பட்டினியுமுண்டு. நம்ம தேசத்திலுள்ள மகம்மதியர் வெகு துக்கங் கொண்டாடுகிறார்கள். ஒருவேளை யூரோப்பு முழுதுஞ் சண்டைப்பூமியானாலும் ஆய்விடுமென்று அநேகர் அஞ்சுகிறார்கள்.

**ஆப்பிள் பழங்கள்.** — படுக்கைக்குப் போகுமுன் ஒரு ஆப்பிள் பழத்தைப் புசிப்பது மருந்து சாப்பிடுவதைவிட நேர்த்தியான வழக்கமென்றும், அப்படிச் செய்வதினால் அஜீரணம் சூரியனைக் கண்டபனிபோல் நீங்கிவிடுமென்பதும் ஒரு வைத்திய நிபுணருடைய கோட்பாடு.

**கடன்செலுத்தல்.** — ஸ்டிராட்போர்ட் பட்டணத்தில் சால்வேஷன் சபையில் புதிதாய்ச்சேர்ந்த ஒருவன் அந்த சால்வேஷன் ஆபீசரிடம் நான்கு வருஷத்திற்கு முந்தி கடனாக வாங்கின 6 பென்ஸுக்கு ஒரு ஷிலிங்கு வட்டியுடன் முதலை மேற்படி ஆபீசரிடம் செலுத்தினானென்று தெரிகிறது.

**புராதன தபால் முத்திரைகள்.** — அடியில் கண்ட விபரப்படி ஒரு பழைய பிரிட்டிஷ் தபால் முத்திரை 5 பவுண்டுக்கும், யூனைட்டட்ஸ்டேட்ஸ் முத்திரை ஒன்று 60 டாலருக்கும், பிரிட்டிஷ் தென் ஆபிரிக்கா முத்திரை ஒன்று 10 பவுண்டுக்கும், ஒரு ஆஸ்டிரேலியா முத்திரை ஒன்று 100 பவுண்டுக்கும் விலைகூறி விக்கிரயத்திற்கு வந்திருக்கிறது.

**ஸ்திரீகளுக்கு வோட்டு.** — புருஷரைப்போலவே ஸ்திரீகளும் வோட்டுக் கேட்கிறார்கள். மேற்கே ஸ்திரீஜனங்கள் அதிகக் கல்வியும், நாகரீகமும், ஸ்வாதீனமும் அடைந்தவர்களானதால், ஆண்களைப்போல அவர்களும் உயர்தர உத்தியோகஞ் செய்துவருகிறார்கள். இங்கிலீஷ் பார்லிமெந்திலே தங்கள் வழக்கைத் தீர்த்து முடிக்க வேண்டுமென்று பலவாறு பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். இப்போது நடவாமற்போயினும், விரைவில் அவர்களுக்கு வோட்டுக் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

**பிரிட்டன்தேசத்துச் செல்வம்.** — பிரிட்டன் தேசத்தில் வசூலாகிக்கொண்டுவருகிற தனத்தைக் குடிகளுக்குச் சரிசமமாகப் பிரித்துக்கொடுக்கும் பட்சத்தில் ஒவ்வொரு குடித்தனக்காரனுக்கு 200 பவுண் விழுக்காடு பாகம் கிடைக்குமென்று தெரியவருகிறதோடு அதை 100–க்கு 4 விழுக்காடு வட்டி கணக்கிட்டுப் பார்த்தால் பிரதிதினம் நபர் ஒன்றுக்கு 5¼ பென்னி கிடைக்குமென்று வற்படுகிறது.

**ஒரு புதிய லோகம்.**—துர்க்கிஸ்தான்தேசத்து பாமிர் நாட்டுக்கு வடக்கிலிருக்கிற திர்கானு மலையில் ஒரு நூதனமான லோகம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது பழுப்புநிறமுள்ள பசையைப்போல் அதிக பளுவானதாகவும் திராவகத்தில் சம்பந்தப்பட்டவுடன் அதிக குளிர்ச்சியாய்விடுகிறதென்றும் ஆனால் எந்த வஸ்துவாவது அதினுடன் சம்பந்தப்பட்டால் அது நிறையில் குறைந்துபோகிறதென்றும் தெரியவருகிறது.

**வெண்ணெய் கெட்டுப்போகாம லிருக்கும்படி செய்தல்.**–வெண்ணெய் கெட்டுப்போகாமலிருக்கும்பொருட்டுக் கொஞ்சம் வெடியுப்பைத் தண்ணீரில் கரைத்து வெண்ணெய் அடங்கிய பாத்திரத்தை அந்தத் தண்ணீர்மட்டத்தின் ஆழம்வரையில் சேரும்படி வைத்து அதின்பேரில் ஒரு ஈரத்துணியை மூடிபோல் போட்டு மூடி அந்தத் துணியின் ஓரங்கள் மேல்கண்ட வெடியுப்பு ஜலத்தில் தொட்டுக்கொண்டிருக்கும்படி வைத்துவந்தால் வெண்ணெய் ஒருபோதும் கெட்டுப்போகாமல் புது வெண்ணெய்போலிருக்கும்.

**நார்வே தேசம்.**—ஐரோப்பாகண்டத்திலுள்ள நார்வே தேசத்தில் ஞாயிற்றுக்கிழமை என்ற ஓய்வு நாள் எவ்விதமாக ஆசரிக்கப்பட்டுவருகிறதென்று பின்வருமாறு கவனிப்போமாக. அத்தினத்தில் சனிக்கிழமை மாலை 5 மணிமுதல் திங்கள்கிழமை காலை 8 மணிவரையில் அத்தேசத்திலுள்ள எல்லா ஸ்டோர்களும், ஆபீஸ்களும், மதுபானக்கடைகளும், கைத்தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவருகிறது. சென்ற 1892–ஆம் ஆண்டுமுதல் ஞாயிற்றுக்கிழமையில் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகிறதில்லை. 1895–ஆம் ஆண்டுமுதல் அந்நாளில் ரொட்டிகிடங்குகளில் ரொட்டி சுடுகிறதில்லை. பிரதான பட்டணமாகிய கிறிஸ்தியானநகரின் தெருக்களில் வண்டிகள் அந்தநாள் காலையில் ஓட்டப்பட்டு வருகிறதுமில்லை. அந்தநாளில் கடிதங்களும் ஜனங்களுக்கு போஸ்ட் இலாகாதாரர்களால் கொடுக்கப்பட்டு வருகிறதுமில்லை.

**யுத்த பயங்கரம்.** — தேசத்தில் யுத்தம் நடக்கிறபோது பிரஜைகள் எவ்வித கஷ்டத்தை யடைவார்க ளென்பதற்குப் பிற்கூறிய செய்தி போந்த அத்தாக்ஷியாகும். திரிப்போலியிலிருந்து மால்ட்டா

வுக்கு வந்த ஜனங்களைப்பற்றி ஒரு விகிதர் எழுதுகிறதாவது:—"இவ்விதக் கோரக்காட்சியை நான் எக்காலத்துங் கண்டதில்லை. காவில்வர்த் என்கிற ஸ்டீமரில் நிற்கக்கூட இடமில்லாதபடி ஜனங்கள் ஏறிவந்து மால்ட்டா சேர்ந்தார்கள். அன்ன ஆகாரமின்றி அவர்கள் பட்டபாட்டை விவரிக்க முடியாது. ஒவ்வொருவரும் திகில்பட்டுப் பரிதாப நிலைமையி லிருந்தனர். என்னைக்கண்டதும் டாக்டர் என நினைத்து எனக்கு முன்வந்து சிலர் முழங்காலில் நின்று கும்பிட்டார்கள். சிலர் கையை முத்தமிட்டார்கள். ஸ்திரீகளும் பிள்ளைகளும் வயோதிபரும் தேம்பித் தேம்பி யழுதார்கள். அக்காட்சி நெஞ்சுருகத்தக்கதாயிருந்தது." தெய்வ கடாட்சத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் இவ்வித பயங்கரத்தை நாமறியாதிருக்கிறோம்.

**ஆலோசனைத் தலைவர்.**—தற்போது இங்கிலாந்துதேசத்து ஆலோசனைத் தலைவராயிருக்கிற மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் என்பவரின் தகப்பன் இறந்துபோகும் 2 வருஷத்துக்கு முன்கூட உபாத்தியாயர்வேலை செய்துவந்து 44—ம் வயதில் மரணமடைந்தார். ஆனால் இறந்துபோனவருடைய சகோதரனும் ஆலோசனைத்தலைவருக்கு சிற்றப்பனுமாகிய மிஸ்டர் ரிச்சர்ட் ஜார்ஜ் என்பவர் இவனை வளர்த்துக் கல்வியறிவைப் புகட்டினவர் டன்ட்வே கிராமத்தில் ஒரு பிரதானமான சக்கிலித் தொழில் வியாபாரம் நடத்திவந்தவரென்று தெரியவருகிறது.

**சமாதியி லிறங்கிய பிணம் திரும்பினது.** — போலாண்டில் சூராவிக்கா என்னுங் கிராமத்தில் மாஸ்னி என்கிற ஒரு மிராசுதார்வலிகண்டு கீழே விழுந்து ஸ்மாரணையற்றுப் போனார். தகுந்த டாக்டர்கள் அங்கிராமையால், மிருக வைத்தியன் ஒருவன் வந்து பார்வையிட்டு, மாஸ்னி யமலோகஞ் சேர்ந்துவிட்டதாய்க் கூறினன். மனைவி மக்கள் சுற்றத்தார் எல்லாரும் மார்பிலறைந்து புலம்பி, மாஸ்னியைப் பெட்டியில் வைத்துக் கல்லறைக்குக் கொண்டுபோய் ஜெபம்பண்ணிக் குழிக்குள் இறக்கினார்கள். மண்ணைவாரிப் போடுஞ்சமயத்தில் பெட்டி மைந்து உள்ளிருந்து மெல்லிய சத்தமொன்று கேட்டது. சமாதியைச் சூழ நின்றவரிற் பலர் பயந்து ஓட்டமெடுத்தனர். சில விவேகிகள் உடனே குழிக்குள்ளிறங்கிப் பெட்டியைத் திறக்க, மரித்த மாஸ்னி உல்லுயிர்கொண்டு குழிவிட்டு வெளியேறினான். அவனுடைய பிரேத உடையின்மேல் ஒரு இரவல்சட்டை வாங்கிப் போட்டுக்கொண்டு வீடு சேர்ந்தான். சுடுகாட்டுக்குப் போன பிணந் திரும்புமா? என்கிற பழமொழி பொய்த்தது.



வெனிஸ் நகரப் பெருமூச்சுப் பாலம்.

## FAMINE.

## பஞ்சம்.

இந்தியாவில் பல இடங்களில் பஞ்சத்தைப் பற்றி அதிக பயங்கரமாயிருக்கிறது. சில இடங்களிலுள்ள கழனிகள் ஒன்றுமில்லாமல் மொட்டையாய் விடப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம், ஆடுமாடுகள் தங்கள் ஜீவனத்திற்குரிய புற்களைத் தேடியும் அகப்படாமல் போகிறது. அவைகளை யுடையவர்களும், தங்கள் மிருகத்திற்கான ஜீவனங்களைத் தேடியும் அகப்படாததினால் மிருகங்கள் பசியினால் வருந்தி சாகிறது. இந்தியாவில் சில இடங்களில்மட்டும் நல்ல மழை பெய்திருக்கிறது. ஆனால் சில இடங்களில் பெய்த மழையினால், கழனியிலுள்ள பயிர்களைப் பசுமையாய் வைத்திருந்தபோதிலும், நல்ல விளைவைக் கொடுக்கும் என்பதைப்பற்றி நம்பிக்கையில்லை. ஜனங்கள் பற்பல இடங்களில் இரவும்பகலுமாய் மழை வருமாவென்று ஆவலோடு காத்திருக்கிறார்கள். மழை வரும் என்கிற அடையாளம் ஒன்றுமே காணாததினால் அதிகமாய் மனமுறிவடைகிறார்கள்.

மழைபெய்யாததைப்பற்றிச் சில ஜனங்கள், "கடவுள் நம்மை தண்டிக்கிறார்" என்றுசொல்லுகிறார்கள். நம்முடைய அன்பு நிறைந்த பரமபிதா என் நம்முடைய ஜனங்களை வதையவிடுகிறார் என்பதைப்பற்றித் திட்டமாய் அறிய முடியாது. ஆனால் ஒன்றுமாத்திரம் நமக்குத் தெரியும், அதாவது ஜனங்கள் தங்களுக்குக் கஷ்டம் வரும்போது மாத்திரம் கடவுளை நினைக்கவும் தேடவும் ஆரம்பிக்கிறார்கள். கடவுள் நல்லவரும், ஞானமுள்ளவர் என்பதும் நிச்சயம். ஆகையால் அவர் துன்பத்தை அனுப்பினாலும் அது நம்முடைய நன்மைக்கென்றே யிருக்கும்.

சில ஜனங்கள், இப்படிப்பட்ட பஞ்சம் உண்டாகிறதற்குக் காரணம் இங்கிலீஷ் துரைத்தனத்தின் பலன் என்று சொல்லுகிறார்கள். இது அறியாமையினால் அப்படிச் சொல்லுகிறார்கள். இங்கிலீஷ் துரைத்தனம் இந்தியாவுக்கு வருகிறதற்கு முந்திக் கொடிய பஞ்சங்கள் உண்டாயிருந்தது. இப்படிப்பட்ட கொடிய சம்பவங்களைப்பற்றிச் சரித்திரக் குறிப்பில் தற்காலத்தில் மதிக்கிறமாதிரி முற்காலத்திலே மதிக்கவில்லை. ஆகையால் அதைப்பற்றி நமக்குத் திட்டமான அறிவு இல்லை. ஆனபோதிலும் முற்காலத்திலும் அதிகக் கொடிய பஞ்சங்கள் இருந்தது என்பது திட்டம்.

அதுநிற்க, இங்கிலீஷ் துரைத்தனத்தார் இந்தியாவில் பஞ்சம் உண்டாகாதபடி அவைகளைத் தடுக்க அநேக ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அநேக நாடுகளிலுள்ள கழனிகளுக்கு நீர்பாய்ச்சத்தக்க கால்வாய்களை வெட்டியிருக்கிறார்கள். இங்கிலீஷ் துரைத்தனத்திற்கு முந்தியகாலத்தில் இவ்வித நீர்பாய்ச்சும் கால்வாய்கள் கிடையாது. மழை வந்தாலொழிய மற்றப்படி தண்ணீர் கிடையாது. அதோடுகூட சர்க்கார், பஞ்சகாலத்தில் ஏழை ஜனங்களுக்கு வேலைகளைக் கொடுத்து உதவி செய்கிறார்கள். வேலை செய்யத் திறமையற்றவர்களுக்கு, கஞ்சித்தொட்டிகளைக் கட்டி ஏராளமான பலவீன ஏழைகளுக்கு ஆகாரம் கொடுக்கிறார்கள். பஞ்சகாலங்களிலே விசேஷமாய், இங்கிலாந்து, அமெரிக்கா இன்னும் பல இடங்களிலிருந்து, இத்தேசத்து ஜனங்களுக்கென்று எப்போதும் பணமும் ஆகாரமும் அனுப்பப்படுகிறது.

மனுஷர்கள் ஒருவரோடொருவர் பக்ஷமுள்ளவர்களாய் ஒருவர் குறைவை ஒருவர் நிவிர்த்தி செய்து ஏழைகளையும் பலவீனர்களையும் காக்கும்படிக்கான ஒரு நல்ல பாடத்தை நமக்குக் கற்றுக் கொடுக்கவே கடவுள் இவ்விதப் பஞ்சத்தை அனுப்புகிறார் என்று ஒருவாறு சொல்லலாம்.

கடவுள் நமக்களித்திருக்கிற நன்மைகளிலே, தன்னயமற்றவர்களாய்க் குறைவில் நாம் பகிர்ந்து கொடுக்கிறதுக் குண்டாகிற ஆசீர்வாதத்திற்கு மிஞ்சின ஆசீர்வாதமில்லை.

கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிற பொருள்களெல்லாம் நமக்குச் சொந்தமல்ல, அவைகளெல்லாம் இரவல் என்றே சொல்லவேண்டும். நாம் அவைகளைக் கொஞ்சக்காலம் உபயோகப்படுத்திக் கொள்ள இரவலாக வாங்கியிருக்கிறோம். அப்படியிருக்க, அப்பொருள்களையெல்லாம் தன்னயத்தோடும், ஆத்திரத்தோடும் நாமே அநுபவிக்கப் பார்க்கிறதினால் ஆசீர்வாதமல்ல, கடவுளுடைய சாபமே உண்டாகும்.

ஆகையால் இவ்விதமான நல்ல பாடங்களை மனுஷர்களுக்குக் கற்றுக்கொடுக்கவே பஞ்சத்தைக் கடவுள் அனுப்புகிறார் என்று சொல்லலாம்.

## SCIENCE IN HINDUISM.

ஹிந்துமார்க்கத்தில் கற்பிக்கப்படுகிற

## சாஸ்திரப் பிரமாணங்கள்

அல்லது

## கல்விக் குறிப்புகளைக் குறித்தது.

ஹிந்துக்களுடைய ஆகமங்களை ஆராய்ந்திருக்கிற வித்வான்கள் உபநிடதங்களிலும், சூத்திரங்களிலும் அநேகவகைத் தப்பிதங்கள் இருக்கிறதைப் பார்த்து, தங்களுக்குள் வழங்கிய ஆகமங்கள் கடவுளால் அருளிச்செய்யப்பட்டதென்றால், சாஸ்திரம் அல்லது கல்வி விஷயங்களைப்பற்றிய இந்தத் தப்பிதங்கள் எப்படி வருமென்று கூச்சப்படுகிறார்கள். இதற்கு வேறே போக்குச்சொல்ல இடமில்லாமல், அவர்களில் அநேகர் இப்படிச் சொல்லுவார்கள். "ஹிந்துக்களுடைய சாஸ்திரப்பிரமாணங்கள் பேர்பிரஸ்தாபமானவராகிய வேதவியாசரால் முதலில் முறையாய் ஏற்படுத்தப்பட்டது. இவ்வகைப்பட்ட சாஸ்திரக் கொள்கைக்கும், வேதாந்தக் கொள்கைக்கும் சம்பந்தமில்லை. சாஸ்திரம் வேறே, வேதம் வேறே" என்பார்கள். பெரும்பாலும் இது உள்ளதுதான். ஆனாலும் ஹிந்துக்களுடைய ஆகமங்களில் இவ்விரண்டும் சேர்க்கையாய்வருகிற முறையைப் பார்க்கும்பொழுதில் இப்பொழுதுள்ள ஹிந்துக்கள் இவைகளை வேற்றுமைப்படுத்துவது நியாயம் என்று தோன்றவில்லை. உபநிடதங்களை எழுதினவர்கள் இப்படிப்பட்ட வேற்றுமைக் குறிப்பு ஒன்றாவது காட்டவில்லை. "இன்னது வேதம், இன்னது சாஸ்திரம்" என்றும், "இன்னதைத் தள்ளவேண்டும் இன்னதை அங்கிகரிக்கவேண்டும்" என்றும், "இன்னது மனிதர் ஏற்பாடு இன்னது தேவ ஏற்பாடு" என்றும் ஒருபோதும் வகுப்புப்படுத்திச் சொல்லுகிறதில்லை. அவர்களுடைய எண்ணப்படி எல்லாவகை ஞானமும் ஒன்றே. எல்லாவகை ஞானமும் பிரமத்தை அறிவதற்கு அநுகூலப்படுமென்று நினைத்தவர்கள்போலவே எழுதியிருக்கிறார்கள். வேதாந்த தரிசனத்திலும், உபநிடதங்களிலும், போதித்திருக்கிற விஷயங்களெல்லாம் சேர்க்கையாயும், ஒரே நூலுக்குக் கிளைகளாயுமிருந்தாற்போல், அவைகளைச் சிஷருக்குப் படிப்பிக்கிற குருக்கள் இவைகளை ஓதுவிக்கும்பொழுது, இன்னின்னது அக்காலத்தில் அபிப்பிராயமாகக் கொண்டதாய்ப்போதியாமல் இவை ஒவ்வொன்றும் மெய்ப்பொருள்போலவே போதிக்கிறார்கள். இப்படியாக, கட உபநிடதத்தில் யாமா என்பவர் தாராளமாய்ச் சொர்க்கத்தைக்குறித்தும், பிரமலோகத்தைக் குறித்துஞ் சொல்லி, அவ்விடத்தில் ஒருவன் சேரவேண்டிய வகையையுந் தெரியக் காட்டுகிறார். அதைச்சொல்லியதுபோலவே மனிதருடைய இரத்தப்பையாகிய சுரற்குலையும், மூளையும் சம்பந்தப்பட்டிருக்கிற வகையையும் சொல்லுகிறார். அவர் சாதித்திருக்கிற இந்த இருவிஷயங்களையும் நாம் பிரிப்பதெப்படி? சொர்க்கத்தைக்குறித்து அவர் சொல்லியிருக்கிறதை நம்புவோமா? அல்லது இரண்டும் தப்பிதம் என்று தள்ளுவோமா? ஆராய்ந்து அறியக்கூடியதில் அவர் தப்பிதம் பண்ணினாரென்றால், ஆராய்ந்து அறியக்கூடாததில் அவர் தப்பிதம் பண்ணவில்லை என்பதற்கு நிச்சயமென்ன? அப்படியே மண்டூகத்தில் அங்கிரா என்பவர் சௌனகருக்கு உபதேசம் பண்ணுவதில் பிரம ஞானத்தினால் உண்டாகிய சிறந்த பலனை விஸ்தரித்துக் கற்பிக்கிறதுபோலவே இப்பூமியினுடைய ஸ்திதிகளைக் குறித்தும் கற்பிக்கிறார். இதில் அளவிறந்த தப்பிதங்களிருக்கின்றது. ஆனாலும் இவ்விரண்டு விஷயங்களையும் இவர் ஒன்றுபோலவே அதிகாரத்தோடு உபதேசித்திருக்க, பிரம ஞானத்தைக்குறித்துத்தான் அவர் சொன்னதை ஒப்புக்கொள்ளவேண்டும்; மற்றதை ஒப்புக்கொள்ளக் கூடாதென்று என்னமாய்ச் சொல்லலாம். நாம் இவைகளை இப்படிப் பிரிக்கக்கூடாது, ஹிந்துக்களுடைய சாஸ்திரம் தப்பிதம் என்றால், அவர்களுடைய வேதமும் தப்பிதமென்றே தீர்மானிக்கவேண்டும். இப்படியிருக்கிறபடியால், இந்தக் காரியத்தைச் சற்று ஆராய்வோமாக.

(இன்னும் வரும்.)

## "TRUST AND OBEY."

## "நம்பு, கீழ்ப்படி."

Tune and words:
" When we walk with the Lord."
Sacred Songs and Solos:—No. 642, New.

1. யேசுவோடு கூட
வேதங்காட்ட நட,
என்ன, நல்வெளிச்சங் காட்டுவார்!
நற்சித்தம் செய்யப்பார்,
உன்னோடு வசிப்பார்,
நம்பிக் கீழ்ப்படிந்தால் வசிப்பார்.

*Chorus.* நம்பு, பணி, இல்லை வேறு வழி,
யேசுவில்ஆநந்திக்கநம்பிக்கீழ்ப்படி.

2. துன்பம், துயரமோ!
துஷ்டர் விரோதமோ!
இன்பமுகம் பறக்கடிக்கும்;
சந்தேகம், பயமோ!
கண்ணீர் பெருமூச்சோ!
நம்பிக் கீழ்ப்படிந்தால் பறக்கும்.

3. பாரமோ, பளுவோ!
களைப்போ, இளைப்போ!
படும் பாட்டுக்கு உண்டு பாக்யம்;
நஷ்டமோ, நாசமோ!
கஷ்டமோ, குருசோ!
நம்பிக் கீழ்ப்படிந்தால் சலாக்யம்.

4. பேரன்பை ருசிக்க,
யேசுவில் களிக்க,
ஒப்புக்கொடு எல்லாவற்றையும்;
மா அருள் பொழிவார்,
பேரின்பந் தருவார்,
நம்பிக் கீழ்ப்படிவோரெல்லார்க்கும்.

5. இன்ப ஐக்யம் நாடி,
யேசு பாதந் தேடி,
யேசுவோடு கூட நடப்பேன்;
சொன்னபடி செய்வேன்,
சொல்லுமிடஞ் செல்வேன்,
நம்பிக் கீழ்ப்படிந்து அஞ்சிடேன்.

P. B.

'Paradise Lodge,'
Royapuram, Madras.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

நம் தேசத்து ஜனங்களில் பின்வரும் மதானுசாரிகள் உண்டு. 1911–ம் வருஷக் கணக்கின்படி,

| | |
|---|---|
| யூதர் | 21,000. |
| பார்ஸீயர் | 1,00,000. |
| சமணர் | 12,48,000. |
| சீக்கியர் | 30,14,000. |
| கிறிஸ்தவர் | 38,76,000. |
| ஆவேச வணக்கக்காரர் | 1,02,95,000. |
| புத்தர் | 1,07,21,000. |
| மகம்மதியர் | 6,66,23,000. |
| இந்து சமயிகள் | 21,75,87,000. |

வேறுவிதமாய்ச் சொல்லின், இத்தேசத்தவர்களில் நூறுபேருக்கு அறுபத்தொன்பதுபேர் இந்துக்கள், இருபத்தொருபேர் மகம்மதியர், மூன்றுபேர் புத்தர், மூன்றுபேர் ஆவேச வணக்கக்காரர், ஒருவன் கிறிஸ்தவன். யூதரும் பார்ஸீயரும் மிச்சமாய்ப் பம்பாய் ராஜதானியில் வசிக்கின்றனர். சமணைப் பம்பாய், ராஜபுதனம், மத்திய இந்தியா நாடுகளில் காணலாம். சீக்கியர் பஞ்சாபுக்குரியவர்கள். புத்தரில் பெரும்பான்மையோர் பர்மாவில் உண்டு. மகம்மதியரையும் கிறிஸ்தவர்களையும் ஏகதேசம் நம் தேசத்தின் எப்பாகத்திலும் காணலாம். மகம்மதியரில் 2,50,000 பேர் கீழ்வங்காளத்தில் வசிக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் மொத்தத் தொகையில் மூன்றில் இரண்டு பங்குப்பேர் சென்னை ராஜதானியிலுண்டு. பர்மா ஒன்றுதவிர, மற்றெல்லாப் பிரிவுகளிலும் இந்து சமயத்தார் ஏராளமாய் உண்டு.

மேலேகாட்டிய சமயங்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் சிற்சில குறிப்புகள் இங்கு வரைவோம்.

1. **யூதசமயம்.**—யூதர் நம் தேசத்தில் பூர்வகாலம் தொடங்கி வாசம்பண்ணி வந்திருப்பதாய்த் தோன்

றுகிறது. உத்தேசம் கிறிஸ்துவுக்குப்பின் முதலாம் இரண்டாம் நூற்றுண்டுகளில் அவர்கள் இங்கே வந்து குடியேறியிருக்கலாம் என்பது அநுமானம். பம்பாய், பூனு, கொச்சி என்ற நகர்களில் யூதர் குடியேற்றங்கள் உண்டு. இவ்விடங்களில் பல ஜெப ஆலயங்களும், ஜெப ஆலயங்களைச் சேர்ந்த பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. தோல் சுருளில் எழுதிய பழைய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதிகளிலிருந்தே இன்னும் பாடம் வாசிக்கிறுர்கள். குறிக்கப்பட்ட பாடத்தை நின்று வாசிக்க, ஜெப ஆலயத்தின் மத்தியில் ஓர் பீடமும், சுவரோரம் ஆசனங்களும், ஸ்திரீகள் ஆராதிக்க மேல்தட்டில் ஆரோகண ஆசனங்களும் உண்டு. பழக்க ஒழுக்கங்களில் இவர்களும் பூர்வகாலத்து யூதரைப்போலவே சடங்காசாரக்காரராயும் மதவைராக்கிய முடையோராயும் விளங்குகின்றனர். யூதர் பெருத்த வியாபாரிகள்; மிகுந்த ஐசுவரியவான்கள். இவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பாதபடியால் "மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறது." சில இடங்களில் இவர்கள் பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலைக்கு வருகிறுர்கள். நம் தேசத்தில் வசிக்கும் 21,000 யூதருக்காக விசேஷமாய்ப் பிரார்த்திப்பது நமது கடமை. (இன்னும் வரும்.)

## THE DECALOGUE IN VERSE.

### தசப்பிரமாண விளக்கம் (தொடர்ச்சி).

8. முத்திக்கவி—போய்.

பல்லவி.

முத்தி கிடையாதடா—ஒருக்காலும்
முத்தி கிடையாதடா.

சரணங்கள்.

48

உள்ளதை யில்லதென்றும் இல்லதை யுள்ளதென் [றும்
வல்ல சாதுரியத்தால் வழக்காடும் பொய்யருக்கு-மு

49

கூட்டிக் குறைத்துப்பல கோணல்களை நோக்கி
நீட்டிப் புரட்டிநடு நீதியைக் கெடுப்பவர்க்கு—முத்

50

அச்ச முகத்தாட்சி ஆதாய மொன்றைநாடி
பட்சபாதக சாட்சி பகர்ந்திடும் பொய்யருக்கு—முத்

51

ரண்டருத்தம் படப்பேசி நன்மைவரத் தீமைசெய்து
ஒன்றுசெய் தொன்ருய்நடிக்கும் உயர்ந்த புளுகரு [க்கு—முத்

52

சிற்றின்பக் கவிபாடிச் சிறுவர்களைக் கெடுத்து
மற்றுஞா ஞர்த்தமோதும் வஞ்சகர் கவிஞருக்கு-மு

53

மிஞ்சிக் கடன்வாங்கி மேன்மையற வாக்குமீறி
அஞ்சாது மேல்மினுக்கும் அற்பத்தன யோக்கியர்க் [கு—முத்

54

முன்ஞக நின்று முகத்துதிகள் பேசி [கு—முத்
பின்னேபோய் நிந்தைசொல்லும் பேயி னடியார்க்

55

மல்லிகை முல்லைரோஜா மானேயென்றுந் தேனே [யென்றும்
பொல்லாத பெண்டுகளைப் போற்றுகின்ற பொய்ய [ருக்கு—முத்

56

நல்ல மனைவிகளை நாயென்றும் பேயென்றும்
சொல்லி மனமுறிக்குந் துடிநாக் குடையவர்க்கு-மு

57

ஏக மனுக்குலத்தை எத்தனையோ ஜாதிகளாய்ப்
பாகம் பிரித்துப் பகைவிளைக்கும் பொய்யருக்கு—மு

(இன்னும் வரும்.) G. S. V.

## MEDITATIONS ON THE PASSION.

### திவ்ய ரட்சகரின் பாடுகளின் பேரில் ஒப்பாரி.

(தொடர்ச்சி.)

146. தாயாரை ஒப்புவிக்கச்—சகிக்காம லம்பாளும்
வாயாரக் கூவ—வடியுதே கண்ணீரும்.

147. கண்ணீரா ருயோடக்—கதறி யழுதழுது
மண்மீதி லேபுரண்டு—மார்பி லடிப்பாளாம்.

148. அடிப்பாள் துடிப்பாள்தன் – அங்கங் குலையு தென்பாள்.
படிமீதிற் பாவிகட்காய்-பலியான தன் மகனுல்.

149. தன்மகனுற் பூலோகம் — தழைப்பதுண்மை யானுலும்
கன்மனதோ வென்மனது-கலங்காதோ சொல்லுமென்பாள்.

150. என்று புலம்பியம்மாள்—இருக்குமந்த வேளையிலே
குன்றில் நடந்தசெய்தி—கூறக்கே ளந்நேரம்.

151. அந்நேரம் வீரவர்—அங்கிக்காய்ச் சீட்டெழுதி
சொன்னபடி போட்டெடுத்துச்—சோமனைப் பங்கிட்டார்கள்.

152. பங்கிடும் நேரத்திலே—பகருவா ரன்தேவே
இங்கெனைக் கைவிட்ட—தேதோவென் ஐயாவே.

153. ஐயாவே மாந்தருமக்—கனியாயஞ் செய்ததற்கோ
தூய்யா வுமதுமுகந்—தோன்றுதில்லை கொஞ்சமெனும்.

154. என்றுபெருஞ் சத்தமிட்டு—எல்லாருங் கேட்பதற்கு
இன்றெனக்கு மெத்த—இருக்குதே தாகமென்ருர்.

155. தாகமென்ருேர்க் கீசோப்பு – தண்டிற்கடற் காளானை
அவசர மாய்ப்பூட்டி—அதிற்காடி யைத்தோய்த்து

156. தோய்த்துக் கொடுக்கச் – சுவைத்து முடிந்ததென்று
சாய்த்தார் தலையைப்பின்—தம்பிதா வைநோக்கி.

157. பிதாவே உமதுகரம் – பிரியமா யென்னுவி,
இதோநான் தாறேன்—என்றுரத்த சத்தமுடன்.

158. சத்தமா யொப்புவிக்க—ஜடுதியா யவ்வுயிரும்
அத்திசை யோரறியக்—கர்த்தனிடம் போனதுவே.

159. போனவுட னந்தப்—பூமிய திர்ந்திடவும்
வானம் மிகக்கறுத்து—வரைகள் பிளந்திடவும்.

160. பிளந்திடவு மாலயத்தின்—பெரிய திரைகிழிந்து,
தளங்கள் கலங்கிடவும்—சமாதி திறந்திடவும்.

(இன்னும் வரும்.)

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager,
Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| எக்காலக் கண்ணி ... ... ... ... ... | 0 | ½ |
| எபேசியர் நிருப வியாக்கியானம் ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபை சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றுட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலை தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலை தியானம் ... ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| பரிசுத்த ஜீவியம் ... ... ... ... ... | 0 | 2 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணு, 7 அணு. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### மார்ச்சுமீ பஞ்சாங்கம்.—

| வாரம். | மார்ச்சுமீ — மாசி—பங்குனி. ⊙ பௌர்ணமி, 22உ ● அமாவாசை, 7உ | | | | | | மாசி—பங்குனி. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 19 | 26 | 3 | 10 | 17 |
| திங்க ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 20 | 27 | 4 | 11 | 18 |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| புதன் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 23 | 30 | 7 | 14 | ... |
| வெள் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 24 | 1 | 8 | 15 | ... |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 18 | 25 | 2 | 9 | 16 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913

Registered No. M. 442.

# THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

APRIL, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. ஏப்பிரல்மீ, 1913.

## NEWS AND NOTES.

### வர்த்தமானக் குறிப்புகள்.

**நிறம்பிடிக்கிற படம்.** — உடல் நிறத்தையும் உடை நிறத்தையும் உள்ளபடி பிடிக்கிற யந்திரங்கள் இப்பொழுது உண்டுபண்ணியிருக்கிறது.

**பத்திரக் குறிப்பு.** — பெருவிரல் குறிப்பை விடப் பற்குறிப்பு பத்திரங்களுக்குப் பக்குவமானவை என்று ஒரு விசென்னு வைத்தியன் கூறுகிருர்.

**கிரீஸ் ராஜன் கொலை.** — சென்றமீ குடிகார கிரேக்கன் ஒருவன், கிரீஸ் அரசன் உலாவிக்கொண்டிருக்கையில் அவரைச் சுட்டுப்போட்டான். காரணத்தை வெளியிடவில்லை.

**கவர்னர்ஜெனரல்.** — லார்ட் ஹார்டிங்கவர்கள் இப்பொழுது பூரண சௌக்கியமடைந்திருந்தாலும், இன்னும் கொஞ்சம் பலஹீனமாயிருக்கிருர். இந்துராஜியம் முழுவதும் அவருக்கு நேரிட்ட விபத்தைப்பற்றித் துயருற்றிருக்கிறது.

**அச்சிடப்பட்ட புஸ்தகங்கள்.** — அச்சியந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட காலம் முதற்கொண்டு 4 கோடி புஸ்தகங்கள் அச்சிடப்பட்டனவென்று ஒரு வித்வான் கணக்கிட்டிருக்கிருர். முதல் அச்சடித்த நூல் பைபில் என்கிற வேத புஸ்தகம்.

**ஸ்திரீகளும் உயர்ந்த கல்வியும்.** — இப்பொழுது இந்தியாவிலே உயர்தரக் கல்வி பயின்று வருகிற பெண்களின் தொகை ஏறக்குறைய ஆயிரம்; இது நூதனமல்ல. பூர்வத்தில் அநேக ஸ்திரீகள் வித்வான்களாயிருந்தார்கள்.

**இந்திய பிஷப்.**—கனம்பொருந்திய அசரியா ஐயர் டோர்னக்கல் நாட்டுக்கு பிஷப்பாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிருர். சுதேசி பிஷப் ஆனது இதுதான் முதல்தடவை. இனி அநேகம் பேர் இந்த உயர்ந்த ஸ்திதிக்கு வருவார்களென்று நம்பப்படுகிறது.

**யாசகரில்லாத ஊர்.**—லாங்டம் என்கிற ஒரு இங்கிலீஷ் ஊரிலே ஒவ்வொரு மனிதனும் குடித்தனக்காரனுனபடியால் அதிலே பிச்சைக்காரரே கிடையாதாம். லண்டன் பட்டணத்திலே யாரும் பிச்சை கேட்கக்கூடாது; பிச்சை கேட்டால் உடனே ஜெயிலுக் கனுப்பப்படுவார்கள்.

**பால்கன் யுத்தம்.**—இது இன்னும் நடந்துவருகிறது. டர்க்கி சமாதானத்துக்கு வந்தாலும் நஷ்டம் கட்ட முடியாதென்றது. பால்கன் ராஜ்யங்கள் பணமும், நிலமும் கொடுத்தாலன்றி யுத்தம் நிறுத்தப்படாதென்கிருர்கள். ஆதிரியநோப்பில் முற்றிக்கைபோட்டிருக்கிறது. திடீரென விழுந்துவிடுமென்று அநேகர் நினைக்கிருர்கள்.

**சீனு.**—சீனராஜ்யம் இப்பொழுது "ரிபப்லிக்" என்னும் சுய அரசு ராஜ்யமாய்விட்டது, இனிச் சக்கரவர்த்தி கிடையாது. இப்பொழுது ரஷியாவுக்கும் போர்ட் ஆர்த்தருக்கும் சுமார் 4,000 மைல் நீளமான ஒரு இருப்புப்பாதை போட்டிருக்கிறது. 18 தினத்தில் பீற்றர்ஸ்பர்க்கிலிருந்து போர்ட் ஆர்த்தருக்குச் சௌக்கியமாய்ப் பிரயாணம்பண்ணலாம்.

**தேன்முனை விபத்து.** — தென்முனையண்டை போயிருந்த காப்டன் ஸ்காட் முதலானேர் அங்குள்ள சீதளத்தைச் சகிக்கமாட்டாமலும், ஆகாரமில்லாமையாலும் ஒருவர்பின் ஒருவராய் உயிர் மாண்டார்கள். ஸ்காட் மரிக்கும்வரையும் எழுதிக்கொண்டிருந்தாராம். அவர்கள் விதவைகள், மக்களுக்காக இப்பொழுது 6 லட்சம் ரூ சேகரித்திருக்கிறது. இப்பொழுது வடமுனையும், தென்முனையும் கண்டுபிடிக்கப்பட்டது. இதுகளை எப்படி உபயோகிக்கப்போகிருர்களோ?

**பண்டித ராமபாய்.** — இந்த மாதுசிரோமணி 1,600 விதவைகளை ஆதரித்து, கல்வியும் கைத்தொழிலும் கற்பித்துவருகிருர்கள். இந்த மாது கிறிஸ்துவின் அடியாள். விதவைகளின் மதத்தை மாற்றிவிடுகிறதில்லை; ஆனுல் அவர்கள் சுயேச்சையாய் மாற்றிக்கொள்ளலாம். இது நடக்கிற ஸ்தலம் ஒரு பெரிய கிராமம்போலிருக்கிறது. அதில் பயிர் வேலை, நெசவுவேலை, அச்சிடுவேலை ஆகிய பல தொழில்கள் நடந்தேறிவருகின்றன. சென்னையிலும் இப்பொழுது எழு விதவைகள் சேர்ந்த ஒரு ஸ்தலமுண்டு.

**வடக்கே இரட்டைக் கொலை.**—கிளார்க்கென்கிற ஒரு வைத்தியனும், அவன் வைத்திருந்த புல்லாம் என்கிற ஒரு ஸ்திரீயும் கலியாணஞ்செய்துகொண்டு வாழலாமென்று துர் எண்ணங்கொண்டு, கிளார்க்கு தன் மனைவியையும், அவள் தன் அருமை நாயகனையும், இருவருஞ் சேர்ந்து நஞ்சிட்டும் கத்தியால் வெட்டியும் கொன்றுபோட்டார்கள். பிறகு இருவரும் பிடிக்கப்பட்டு, தூக்கிவிடும்படித் தீர்ப்புப்பெற்றுர்கள். ஆனுல் அப்பெண்ணுக்குப் பிரசவகாலமாயிருந்தபடியால், அவளுக்குத் தீர்க்காயுசுக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டது.

**கல்கத்தாவில் சத்தி.** — புருஷன் இறந்தால் பெண்ஜாதி உடன்கட்டை ஏறவேண்டுமென்கிற ஒரு ஹிந்து வழக்கமுண்டு. இதை அநேக வருஷங்களுக்கு முன்பு பென்டிங் கவர்னர்ஜெனரல் நிறுத்திப்போட்டார். ஆனுல், காலாகாலங்களில் ஒரு மனைவி தன்னையே தகித்துக்கொள்வது உண்டு. சென்ற வாரத்தில் தன் நாயகனைப் பறிகொடுத்த 45 வயதுள்ள ஒரு மாது, அவன் பிரேதத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோக இனத்தார் ஆயத்தப்படுகையில், மெத்தைமேல் போய்த் தேகமெல்லாம் கெரோசின் எண்ணெய் ஊற்றிக்கொண்டு தீக்கொளுத்திக்கொண்டாளாம். அது கேட்டு ஜனங்கள் மேலே போகிறதற்குள்ளே அவள் எரிந்து சாம்பலாய்ப் போய்விட்டாள். பிறர் கொலைமாத்திரமல்ல, தற்கொலையும் பெரும் பாதகம்.

**கல்வி இலாகா.** — இந்திய கவர்ன்மெண்டார் கல்வி விஷயத்திலே அநேக சீர்திருத்தங்கள் ஏற்படுத்தியிருக்கிருர்கள். பிரைமெரி கல்வி என்கிற ஆரம்ப வித்தியாபயிற்சி இந்துதேசமெங்குங் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பரவவேண்டுமென்று தீர்மானித்திருக்கிருர்கள். உயர்தர உபாத்தியாயர் 40 ரூ. சம்பளம் தொடங்கி 400 ரூ. வரையும் விர்த்தியடையும்படியும், இன்னும் அநேக நல்ல ஏற்பாடுகளும் செய்திருக்கிருர்கள். ஆகிலும், பிரைமெரி பாடசாலைகளிலே நல்ல உதவி கிடைக்கிறதில்லை. உபாத்தியாயர் சம்பளத்தில் 3 ரூ. மாத்திரம் கவர்ன்மெண்டார் உதவிபுரிகிருர்கள். இது பெருத்த அநியாயம். சம்பளத்திற் பாதியாகிலும் சகாயஞ்செய்யவேண்டும். அப்பொழுது பாடசாலைகள் கிராமங்கள்தோறும் ஸ்தாபிக்கப்படும். பெண் கல்விக்கு இன்னும் அதிகமான உதவி அருளவேண்டும்.

**நாகதாளியும் அதன் பிரயோஜனமும்.**—சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்றதுபோல், அற்பமாய்க் காணப்படுகிற வஸ்துக்களும் கூர்ந்து கவனிக்கும்போது பிரயோஜனப்படுகிறது. நாகதாளி சாதாரணமாய் வேலி அடைக்கமாத்திரம் கொஞ்சம் உதவுகிறதேதவிர மற்ற விஷயத்திற்கு உதவாதது போல் இருக்கிறது. அப்படிப்பட்ட விஷயத்திற்கும் அதிகமாய் உபயோகிக்கிறதில்லை. ஆனால் அப்படிப்பட்ட முள்நிறைந்த நாகதாளி ஆடுமாடுகளுக்கு உணவாக இருக்கிறது. அமெரிக்கா கண்டத்தின் ஒருபாகத்தில் மழை பெய்கிறதில்லை. அப்படிப்பட்ட இடத்தில் இவ்வித நாகதாளி ஒரு உதவியுமில்லாமல் ஏராளமாய் வளருகிறது. ஆகையால் இந்த நாகதாளியை அநேக ஏக்கர் நிலத்தில் பயிர்செய்து ஆடுமாடுகளைப் போஷிக்கிறார்கள். இந்தியாவிலும் அப்படிப்பட்ட நாகதாளி ஏராளமாய் வளருகிறது. இந்தியாவில் இப்போதுதான் அதைப்பற்றிச் சோதித்துவருகிறார்கள். அம்முயற்சி பலிதப்படும்பக்ஷத்தில் பஞ்சகாலத்தில் ஜலத்தினுடைய உதவியில்லாமலேயே, பெரிய அநுகூலமடையலாம். இதே நாகதாளியினால் கடிதம் செய்யக்கூடுமென்று தெரியவருகிறது. இது உண்மையானால், இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட தாவரவர்க்கத்தில் மூன்றாவதாக எண்ணப்படும். இதினாலே, துவிசக்கரவண்டிக்கும் ரப்பர்டையர் செய்யக்கூடுமென்று சொல்லப்படுகிறது. வர்ணம், சுண்ணாம்பு முதலியவைகளுக்குப் பதிலாக இவைகள் பிரயோஜனப்படுகிறது.

**இரட்டைக் கொலை.**—தன் சொந்த மனைவியையும் தன் சோரப்பெண்ணின் நாயகனையும் கொல்வித்த கிளார்க்கு மரணத்தீர்ப்புப் பெற்றும், இரக்கத்துக்காக ராஜாவுக் கபயமிட்டான். ஆனால் அது பலிக்கவில்லை. இந்தப் புத்தி முன்னமேயிருந்திருக்கவேண்டும்.



ஸ்டொன்ஹெஞ்சென்னும் பூர்வ பாழ்கட்டடம்.

## A GOOD FATHER AND A BAD SON.

## நல்ல தகப்பனும் கெட்ட குமாரனும்.

இங்கிலாந்திலே ஒரு நல்ல பிரபு இருந்தார். அவருக்கு ஒரே ஒரு அருமையான மகனிருந்தான். அவனை அவரும், அவருடைய மனைவியும் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய் வளர்த்து நன்னெறி ஊட்டிவந்தார்கள். பையன் தினந்தோறும் பள்ளிக்குப் போய் வருவான். தாயும் தகப்பனும் அவனுக்கு வேண்டிய சகல பொருள்களையும் கொடுத்துப் பையன் கல்வித்தேர்ச்சியடையவேண்டுமென்று அதிக கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். இவ்வண்ணமிருக்கையில் ஒருநாள் அவனுடைய உபாத்தியாயர் அப்பையனுடைய வீட்டிற்கு வந்து அவனுடைய தகப்பனாரைப் பார்த்து, "ஐயா, உம்முடைய குமாரனுக்கு என்ன சுகவீனம்? அவன் பள்ளிக்கூடத்திற்குச் சுமார் பத்து நாட்களாய் வருகிறதில்லையே, அதைப்பற்றி விசாரிக்க வந்தேன்" என்றார். உடனே தகப்பனாருடைய முகம் வேறுபட்டது; முகம் சிவந்துபோனது, கண்களில் தண்ணீர் கலங்கினது. அப்போது அவர் உபாத்தியாயரைப் பார்த்து, "ஐயா, நீர் பையனைப்பற்றி விசாரிக்க வந்ததற்காக அதிக நன்றி செலுத்துகிறேன், பையன் நல்ல சுகம்தான். நாங்கள் அவனை தினந்தோறும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக்கொண்டுதான் வருகிறோம். ஆனால் அவன் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் இவ்வளவு திருட்டுத்தனம் செய்வான் என்று ஒருபோதும் நினைக்கவில்லை, என் மகன் இவ்விதமாய்க் கெட்டுப்போனதைப்பற்றி நான் அதிக துக்கப்படுகிறேன். அவன் இப்போது வீட்டிற்கு வருவான் எல்லாவற்றையும் விசாரிக்கிறேன்" என்று தகப்பனார் சொன்னார்.

பிறகு உபாத்தியாயர் அவ்வீட்டைவிட்டுப் போனபிறகு, தகப்பனார் அதிக கவலையுள்ளவராய்ப் பையனுடைய தீயகுணத்தை யோசித்து அதிக ஆயாசப்பட்டுக்கொண்டிருந்தார். அவர் எங்கும் அன்று சாயரட்சை வெளியே போகாமல் பையனுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்; தெருக்கதவு மூடப்பட்டிருந்தது. பையன் சுமார் 5½ மணிக்கு பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்கு வருகிறதுபோல மாரீசம்பண்ணி வீட்டிற்குள் நுழைய வந்தான். ஆனால் கதவு சாத்தப்பட்டிருப்பதால் கொஞ்சம் பிரமித்து கதவைத் தட்டினான். அப்போது அவனுடைய தகப்பனார் உடனே எழுந்துபோய்க் கதவைத் திறந்தார். அவர் அவனைப் பார்த்தவுடனே என்ன செய்திருப்பார் என்று நினைக்கிறாய்? அவனைப் பிடித்து அடிக்கவில்லை, கோபமாய்ப் பேசவில்லை, எந்தவார்த்தையாலும் திட்டவில்லை. ஆனால் தகப்பனார் செய்ததென்ன? பையனை உற்றுப்பார்த்தார், பையனும் தகப்பனைப் பார்த்தான். தகப்பனுடைய கண்கள் கலங்கி, கண்ணீர் வடிந்தது, முகம் சிவந்துபோய் இருந்தது. இவ்விதக்குறிகளோடே மகனைப் பார்த்து, "மகனே நீ இப்படிச் செய்தாயா?" என்று மாத்திரம் சொன்னார். உடனே பையன் தன் குற்றத்தை அறிந்துகொண்டான். அன்புள்ள தகப்பனுடைய முகத்தைப் பார்க்க வெட்கப்பட்டான். அவனுடைய முகம் வேறுபட்டது. அப்போது தகப்பன் அவனைப் பார்த்து, "நீ செய்த குற்றம் என்ன? அதை நீயே கண்டுபிடி, மெத்தைக்குப் போ" என்றார். மெத்தைக்கு மேலே போன பையன், "நான் என் தகப்பன் மனம் புண்பட அவரைக் கனவீனப்படுத்தினேனே" என்று மனங்கசந்து அழுதுகொண்டிருந்தான்.



கீழே அவனுடைய அருமையான தகப்பன் அதிக கவலையுள்ளவராய் இருந்தார். அவர் ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்துகொண்டு கையில் ஒரு புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கிறதைப்போல் வைத்துக்கொண்டிருந்தார். புஸ்தகத்தைத் தலைகீழாய்ப் பிடித்திருந்தார், அவருடைய கண்கள் புஸ்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது. அவர் எவ்விதமாய் அப்புஸ்தகத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறார் என்று அவர் அறிந்துகொள்ளவில்லை. அந்தப் பையன்பேரிலிருந்த துக்கம் அவருடைய கண்களை மூடிவிட்டது. அவர் புஸ்தகத்தைப் பார்த்தவிதமாய் இருந்தாலும், அவருடைய யோசனை சிந்தனை எல்லாம் பையன்மேல் இருந்தது; என்ன ஆயாசம்? என்ன சிந்தனை? எவ்வளவு மனநோவு, இவைகளெல்லாம் அந்தப் பையனாலே நேரிட்டது. அவருடைய மனைவி அவருடைய பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு முன்னாக ஒரு சின்ன தையற்கூடையிருந்தது, அவள் கையில் ஒரு ஊசியும் நூலும் இருந்தது; அந்தம்மாள் ஊசியின் காதிலே நூலைச் செலுத்திக்கொண்டிருந்தாள். சுமார் முக்கால்மணி நேரமாய் இப்படிச் செய்கிறாள், நூலை ஏன் இன்னும் கோக்கவில்லை. கண் ஊசியின்மேல் இருந்தாலும், யோசனை சிந்தனையெல்லாம் பையன்மேல் இருந்தபடியால் அந்த நூலைக் கோக்க முடியவில்லை. கண்களிலிருந்து ஓடிவருகிற தண்ணீர் கண்களை மூடினது. கடைசியாக, தகப்பனும் தாயும் சாப்பிட உட்கார்ந்தார்கள். என்னத்தைச் சாப்பிட்டார்களோ அவர்களுக்கே தெரியாது. வெகுசீக்கிரம் மேஜையைவிட்டு எழுந்தார், சாப்பிட மனம் இல்லை, விசாரம் அதிகரித்தது, தூங்குகிறதற்குப் படுக்கைக்குப் போனார்கள், தூக்கம் பிடிக்கவில்லை, புரண்டு புரண்டு பார்த்தார்கள்; தூக்கம் சற்றேனும் வரவில்லை. இந்தப்பாடு ஏன்? இவர்கள் செய்ததென்ன? இவர்கள் ஒன்றும் செய்யவில்லையே; பிள்ளையின் தீயகுணம் இவர்களைப் பாடுபடும்படி செய்கிறது. கடைசியாக இரண்டு பேரும் மேல்மெத்தைக்குப் போனார்கள். பிள்ளையைப்பார்த்துக் கண்ணீர் விட்டு அழுதார்கள், அப்பையனும் அழுது அவன் செய்த குற்றத்தை உணர்ந்தான். இதை வாசிக்கும் என் நேசர்களே! பையனுடைய தாயும் தகப்பனும் ஏன் இப்படி வேதனை அடையவேண்டும்? என்னத்திற்கு இவ்வளவு கவலை கொள்ளவேண்டும்? பையன்பேரிலிருந்த அன்புதான் அப்படிச் செய்தது. அழிந்துபோகிற இவர்களுக்கு அவ்வளவு அன்பும் கவலையுமிருந்தால் நம்முடைய பரமபிதாவாகிய கடவுளுக்கு நம்மைப் பற்றி எவ்வளவு அன்பும் கவலையும் இருக்கும்.

கடவுளுக்கும் நமக்கும் சம்பந்தம் இல்லை என்று அநேகர் நினைக்கிறார்கள், அது சுத்த தப்பிதம். அவர் நம்முடைய பிதா, நாம் அவருடைய பிள்ளைகள். அவருக்கும் நமக்கும் அதிக சம்பந்தம் இருக்கிறது. நாம் அவருடைய பிரமாணத்தைமீறி வழிவிலகும்போது அவர் நம்பேரில் அதிக துக்கமுள்ளவராயும் கவலையுள்ளவராயும் இருக்கிறார். இயேசுகிறிஸ்துநாதர் இவைகளையெல்லாம் போதித்து அன்புநிறைந்த பிதாவை வெளிப்படுத்தினார். அவருடைய ஜீவிய சரித்திரத்தை வாசித்துப்பாருங்கள். இயேசுகிறிஸ்து பரமபிதாவைக் கனப்படுத்தினதுபோல நாமும் பரமபிதாவைக் கனப்படுத்தப் பிரயாசைப்படுவோமாக.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

2. **ஸொரோஸ்தர் சமயம்.**-ஸொரோஸ்தர் என்பவர் கிறிஸ்துவுக்கு சுமார் ஏழு நூற்றாண்டுக்குமுன் பாரசீகதேசத்தில் வசித்த ஓர் மார்க்க சீர்திருத்தக்காரர். இவர் ஏற்படுத்திய மார்க்கத்துக்கு ஸொரோஸ்தர் சமயம் எனப் பேர் வழங்குகின்றது. இதுவே பார்ஸிகள் வழிபடும் மார்க்கம். இவர்களுடைய திருவாசகத்தின் பெயர் **அவெஸ்தா**. ஸொரோஸ்தர் இயற்றிய அதிபூர்வ பாடல்கள் இவ்வாகமத்தில் அடங்கியிருக்கின்றன.

சுமார் ஆயிரம் வருஷங்களுக்குமுன், அரபியர் பாரசீகதேசத்தை ஜெயித்துக் கீழ்ப்படுத்தி, மகம்மது மார்க்கத்தை அனுஷ்டிக்கும்படி குடிகளைப் பலாத்காரம் செய்தகாலத்தில், பாரஸீகரில் பலர் மாட்டோமென்று மறுத்து, இஸ்லாமியருடைய பட்டயத்துக்கு பயந்து, தங்கள் சுயதேசம் விட்டு ஓடி, கடைசியாய்ப் பம்பாயிலும் அதின் சுற்றுப்புறங்களிலும் குடியேறினார்கள். பார்ஸிகளை "கீழ்தேச ஆங்கிலேயர்" என்னும் சிறப்புப்பெயரால் அழைப்பதுமுண்டு. வியாபார விருத்தியிலும், குன்றா முயற்சியிலும், பொதுஜன பரோபகாரத்துவத்திலும், நாகரீகத்தேர்ச்சியிலும் எம்மதஸ்தரும் இவர்களுக்கு இணையாகார். ஆண்களில் நூற்றுக்கு 75—பேரும், பெண்களில் 53—பேரும் வாசிப்புக் கற்றவர்கள்.

இப்பிரபஞ்சத்தின்கண் விளங்கும் இடி, மின்னல், சூரியன், சந்திரன் முதலிய சிருஷ்டிப் பொருட்களைத் தெய்வங்களாக தன் தேசத்தவர் வழிபட்டு நிற்குமிடத்து, ஸொரோஸ்தர் உள்ளத்தில் மெய்யறிவு உதிக்கவே, இம்மஹான் கடவுள் ஒருவரே ஒருவர் என்னும் சத்தியத்தை மூலவுபதேசமாக வைத்து ஓர் மார்க்கம் ஸ்தாபித்தனர். சர்வேஸ்வராகிய ஒரே கடவுளை **ஆர்மஸ்ட்** (ஞானகர்த்தா) என்ற நாமத்தினால் அழைத்தார். இந்த சர்வேஸ்வரருக்குத் தாழ்ந்த அந்தஸ்தில் **அம்ஷாஸ் பந்துக்கள்** என்று பெயர் தரிக்கப்பெற்ற நற்குணசீலரான சிரேஷ்ட தூதாக்கள் ஆறுபேரும், இச்சிரேஷ்ட தூதாக்களின் சொல் வருதிக்குள்ளான **யாஸ்தாக்கள்** என்னும்சாமான்யதூதாக்கள் பலரும் உளதாகக் கற்பித்தனர். விக்கிரக வணக்கத்திற்குக் கிஞ்சித்தேனும் வழியில்லாதபடிக்கும், ஞானகர்த்தா என்னும் ஈஸ்வரமூர்த்தியைமாத்திரம் ஜனங்கள் அர்ச்சனைசெய்து வழிபடவேண்டுமென்ற நோக்கத்தினாலும், பார்ஸீயரும் இந்துக்களும் ஏக குடும்பமாய் வசித்துவந்தகாலத்தில் பூஜைசெய்து நமஸ்கரித்த தேவர்கள் தேவதைகளை தெய்வஸ்தானத்தினின்று கீழே இறக்கி, அவைகளை யானிடர்க்குத் தொண்டுசெய்யும் **யாஸ்தாக்கள்** என்ற தூதாக்களாகவும், நற்சிந்தை, உத்தமநீதி, சுயாதிபத்தியம், தூயபக்தி, ஆரோக்கியம், நிர்மலம் என்ற குணப்பெயர்பெற்ற **அம்ஷாஸ் பந்துக்களை** சிரேஷ்ட தூதாக்களாகவும் அமைத்தனர். இவ்வித நாமங்களைப்பெற்ற வஸ்துக்களுக்கு ரூபம் படைப்பது அசாத்தியம் என்று இவ்வாறு செய்தார்.

மனோவாக்குக்காயங்களினால் தீமை செய்வதை ஆதியில் தெரிந்துகொண்ட **அஹ்ரிமான்** என்னும் ஓர் தீய ஆவியினாலேயே இவ்வுலகின்கண் நேரிடும் சகல சன்மார்க்க நெறி தவறுதல்களும், பிரகிருதியில் நேரும் சகல தீங்குகளும் விளைகின்றனவென்பது ஸொரோஸ்தர் கோட்பாடு. இப்பொல்லாத ஆவியோடும், அதின் கர்த்தத்துவங்களோடும் ஓய்வின்றிப் போர்செய்வதே ஆயுள்காலத்தின் வேலையாம். இவ்வுலகத்திலிருக்கையில் நற்சிந்தை, நல்வாக்கு, நற்கிரியை முதலிய சுகுணங்களைப் பேணி வளர்க்கும் பக்தர் மரணத்திற்குப்பின் "கீதகிரஹம்" என்ற சுவர்க்கத்தில் தேவனோடு நீடூழிகாலம் ஆனந்தங்கொண்டாடுவார்களென்றும், பேய் பிசாசுகளை நமஸ்கரித்து சேவிக்கின்றவர்களோ "அபத்த கிரஹம்" என்ற இடத்தில் வேதனையடைவார்களென்றும், கடைசியாக, **சாஷியாந்து** (=இரக்ஷகர்) என்னுமொருவரை ஸொரோஸ்தர் அற்புதமாய் அனுப்புவாரென்றும், அந்த இரக்ஷகர் அக்னிமயமான உலோகப் பிரளயத்தை மேலுலகில் நின்று திறந்துவிடுவாரென்றும், அப்பிரவாகம் அஹ்ரிமானையும், அவனைச்சேர்ந்த பொல்லாத ஆவிகளையும் நிக்கிரகம்பண்ணி, உலகத்தைச் சுத்திகரித்துப் புதுப்பிக்குமென்றும் பார்ஸீ சமயிகள் நம்புகிறார்கள்.

நற்கிரியைகளினால் புண்ணியம் சம்பாதித்துக்கொள்ளலாமென்பது பார்ஸிகளது அபிப்பிராயம். இதினாலேயே பரோபகாரமான பல பெருத்த நன்கொடைகள் இச்சமயத்தவர்களால் அளிக்கப்படுவதுண்டு. பிருதுவி, அப்பு, வாயு, அக்னி என்ற நான்கு பூதங்களுக்கும் வணக்கம் செலுத்துகிறார்களெனச் சொல்லத்தகுமாறு அவற்றைக் கனபக்தியுடன் மதித்துவருகிறார்கள். அக்னிபக்தி இவர்களில் விசேஷித்துக் காணப்படுவதுண்டு. அக்னி, அப்பு, வாயு, பிருதுவி முதலிய பூதங்கள் அசுசிப்படாது காக்கப்படவேண்டுமென்ற கருத்தினால், தங்கள் பிரேதங்களை "மௌன துருக்கம்" என்னும் கோட்டைக்குள் வைத்து பக்ஷிராசிகள் பக்ஷணம் செய்வதற்குப் போட்டுவிடுகிறார்கள். பம்பாயில் இத்துருக்கத்தை யாரும் போய்ப் பார்க்கலாம்.

பிரக்யாதிபெற்ற பார்ஸிகளில் சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களேயன்றி, ஏனையோர் சுவிசேஷ நற்செய்தியை அங்கீகரிக்கப் பொதுவாக மனமற்றிருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். ஸொரோஸ்தர் கற்பிதத்துக்கு மேலாக, இயேசுகிறிஸ்து என்னும் சாஷியான்று (ரக்ஷகர்) அழிக்கிறதற்கல்ல, பார்ஸிகளையும் இரட்சிக்கவே வந்திருக்கிறார். இதை அவர்கள் அறிய தேவன் தாமே இவர்கள் கண்களைத் திறந்தருளுவாராக. பார்ஸிகளுக்குக் கிறிஸ்துபெருமான் அவசியம். கிறிஸ்து பெருமானுக்கு பார்ஸிகளும் அவசியமே.

(இன்னும் வரும்.)

## SCIENCE IN HINDUISM.

## ஹிந்துமார்க்கத்தில் கற்பிக்கப்படுகிற சாஸ்திரப் பிரமாணங்கள் அல்லது கல்விக்குறிப்புகளைக் குறித்தது.

(தொடர்ச்சி.)

மனிதருக்குள் ஆகாரம் ஜீரணிக்கிற வகையைக் குறித்துச் சூத்திரங்களில் வியாசர் எழுதியிருக்கிறதென்ன? "பூமியிலிருந்து விளைகிற பயிர்முதலான பதார்த்தங்கள் சதையாகும். அதனுடைய மெல்லிய அணுக்களினால் மனம் வளருகிறது. ஜலத்தினாலே இரத்தமுண்டாகிறது. அதனுடைய மெல்லிய அணுக்களால் சுவாசமுண்டாகிறது. எண்ணெய் முதலிய எரியத்தக்க பதார்த்தங்கள் ஊன்களாகின்றன. அதன் மட்டி பகுதிகள் எலும்பாய் மாறும். அதன் மெல்லிய பகுதிகள் பேசுஞ் சக்தியை வளர்க்கின்றது" என்கிறார். தரிசனத்திலே எழுதியதெல்லாம் தெய்வீகமாய்க் கிடைத்ததென்று பண்டிதர்கள் சொல்லுவார்களே. மேற்சொல்லிய விஷயத்தைக்குறித்து இப்பொழுதுள்ள பண்டிதர் நன்றாகச் சகலத்தையும் கண்ணாரக்கண்டு எழுதியிருக்கிற வக்கணையின்படி ஆராய்வோமாக. அவர்கள் இதைக்குறித்துத் தீர்மானித்திருக்கிறார்கள். எவ்வகையான தின்பண்டங்கள், அவை மாமிச பதார்த்தங்கள் என்றாலும் சரி, கீரைப்பதார்த்தங்களென்றாலுஞ் சரி, சகலமும் இரத்தமென்ற ஒரே சாரமாகமாத்திரம் மாறுகிறது. அந்த ரத்தம் தேகத்திலெங்கும் சென்று அங்கங்குள்ள பாகங்களுக்கு வளர்ச்சியைத் தரும் என்கிறார்கள். இந்தக் கொள்கைக்கும், வியாசர் கொள்கைக்கும் வெகு வித்தியாசம் உண்டு. இதில் எதைச் சரி என்று ஒப்புக்கொள்ளவேண்டும்?

சூத்திரங்களில் சொல்லிய சாஸ்திரப்பிரமாணங்கள் தப்பிதமாயிருக்கிறதுபோலவே உபநிடதங்களிலுள்ள சாஸ்திரப்பிரமாணங்களும் தப்பிதமென்று காணலாம். திருஷ்டாந்தமாகச் சூரிய சந்திராதிகளுடைய முறையைச் சொல்லுமிடத்தில், சூரியனே முதலாவது பூமிக்குக் கிட்டத்திலுள்ளதென்றும், அதன்பிறகு சந்திரனென்றும், அதன்பிறகு மின்

மண்டலமென்றும், அதற்கப்புறம் மேகமண்டலமென்றும் உபநிடதங்களில் எழுதியிருக்கிறது. இதெல்லாம் தப்பிதமென்று நாம் ரூபகாரப்படுத்தவேண்டியது அவசியமா? தற்காலத்து அறிவு, அக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடுமா? இவைகள் தெய்வீகமாய்க் கிடைத்ததென்றால் மனுஷ ஞானத்திற்கும் குறைவுள்ளதாய்க் காணப்படுகிறதே. இதினாலே அக்கொள்கைகளெல்லாம் சுத்த தப்பிதம் என்று சரியாய் நிதானிக்கலாம் அல்லவா?

(இன்னும் வரும்.)

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

(பெப்ருவரிமீ தொடர்ச்சி.)

இவள் இராமனை நேரிற் கண்டவளாதலின், இவளுக்குப் புலனான உருவெளித் தோற்றத்தின் வர்ணனை, இராமனது உருவப்படத்தை எதிரில் வைத்துக் காட்டினாற்போல இராநின்றது. இங்ஙனம் இராவணன் நேரில் காணாத ஸீதையின் உருவெளித்தோற்ற வர்ணனையை ஏற்றபெற்றி மங்கலாகவும், சூர்ப்பநகை நேரிற்கண்ட இராமனது உருவெளித்தோற்றத்தை ஏற்றபெற்றித் தெளிவாகவும் அமைத்திருப்பதும், இதற்கடுத்தனவாக

பெண்பாலொரு நான்இது கண்டது. பேதை நீஇண்
டெண்பாலும்இ லாததொர் ஆணுரு வென்றி என்னே?
கண்பாலுறு மாயை கவற்றுதல் கற்ற நம்மை
மண்பாலவ ரேகொல் விளைப்பவர் மாயை என்றான்.

ஊன்றும்உணர் வப்புறம் ஒன்றினும் ஓட லின்றி
ஆன்றும்உள தாம்நெடி தாசை கனற்ற நின்றாய்க்(கு)
என்றுன்எதி ரேவிழி நோக்கும் இடங்க டோறும்
தோன்றும்அனை யாள்இது தொன்னெறித் தாகும் என்றாள்.

அன்னாள் அதுகூற அரக்கனும் அன்ன தாக
நின்னால் அவ்விராமனைக் காண்குறு நீர்என் என்றான்.
எந்நாள் அவன்என்னை இத்தீர்வரும் இன்னல் செய்தான்
அந்நாள் முதல்யானும் அயர்த்திலனாகும் என்றாள்

என வரும் மூன்று செய்யுள்களும், கம்பர் மனுஷ ப்ரக்ருதி யறிந்த மஹாகவி என்பது புலப்படுத்தும். நாகபாசம் எய்வதற்கு முற்பட்ட கவிகளின் பாவத்தையும் பிற்பட்ட கவிகளின் பாவத்தையும் உய்த்துணர்க.

**பாவிகம்.**—'பாவிகமென்பது காப்பியப் பண்பு.' அஃதாவது, ஒரு காப்பிய முற்றிலும் கவியின் கருத்தால் அமைந்ததோர் பண்பு: என்றால் உலகியலில் சில உத்தம தர்மங்களும் சில அதம தர்மங்களும் கவி கருதியாங்கு அமைந்து தோன்றுவது என்பதாம். உலகியலாவது எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழ்வது. காவ்யத்துக்கு கௌரவம் ஏற்படுவது பாவிகத்தால். இதற்குக் காரணம் கவிகற்பனை. கவி கற்பனையாவது, உத்தம பாவங்களும் அதம பாவங்களும் தாமே விளங்குமாறு சரித்ரத்தைக் கவியானவன் ஏற்றபெற்றி இயைத்துக்கொள்வதே. இன்னும் இந்த பாவிகம் ஸந்தர்ப்பத்திற் கேற்றவாறு காவ்ய பாத்ரங்களுடைய உள்ளக் கருத்தாலும் ஸம்பாஷணையாலும் விளங்கும்.

ஒருவர் வார்த்தையை நம்பலாமா நம்பலாகாதா என்கிற ஸந்தர்ப்பத்தில், 'அவ்வார்த்தை இராமோக்தியா கிருஷ்ணோக்தியா' என்று உசாவுவது ஒரு வழக்கு உண்டு. அதனால் பெறப்படுவதாவது, இராமனுடைய குணவிசேஷம் உறுதிப்பாடு: 'இராம வாக்குக்கு இரண்டுண்டா' என்பது. இராமாயணத்தில் இவ்வுறுதிப்பாடானது, பிதுர் வாக்ய பரிபாலனம் ஸஹோதர வாஞ்சை நட்பு தஞ்சமாக அடைந்தவரை ஆதரித்தல் முதலியவற்றில் சிறந்து தோன்றுவது ப்ரத்யக்ஷம். இங்ஙனமே ஸீதையின் கற்புநிலைமையும் உடன்பிறந்தோ ரொற்றுமையும் அதர்மத்தின் விளைவும் முதலியன இராமாயணத்தில் சிறந்து தோன்றுவதும் ப்ரத்யக்ஷமே. இவையெல்லாம் கதையில் அங்குரித்த அம்சங்களேயாயினும், சில சில ஸந்தர்ப்பங்களில் இவை கம்பராமாயணத்தில் கவிகற்பனையால் மிகவும் கௌரவமாக உள்ளத்தைக் கவர்கின்றன.

(இன்னும் வரும்.) T. C. M.

## MEDITATIONS ON THE PASSION.

## திவ்ய ரட்சகரின் பாடுகளின் பேரில் ஒப்பாரி.

(தொடர்ச்சி.)

161. திறந்தசமாதி விட்டுச்—செத்தசுத்தர் வந்திடவும்
உரங்கொண்டோர் நெஞ்சம்—உடனே நடுங்கிடவும்.
162. நடுங்கப் பலபுதுமை—நடக்கவே யூதர்களும்
அடுத்ததோ ரோய்வெனவே—அப்போ தெழுந்துபொங்கு.
163. பொங்குப் பிலாத்திடத்தில்—போய்ச்சொல்வாரிப்போதே
அந்த வுடல்களைநீர்—அகற்ற உத்தாரந்தாரும்.
164. உத்தாரந் தாருமென—உடனே பிலாத்துத்துரை
அத்தருணமே போய்—அதையிறக்கச் சொல்லிவிட்டான்.
165. சொன்னவுட னுயிரை—சோதிக்கப் போர்வீரர்
அந்நேரம் போககய—தாண்டவரோ டேயறைந்த.
166. அறைந்தவிரு சோரருயிர் — அழியாததைக் கண்டு
முறித்தானே காலெலும்பை—மூர்க்கமுள்ள சேவகனும்.
167. சேவகனேசுவண்டை—திரும்பி வருகையிலே
தேவசுதன் ஜீவன்முன்னே—சென்றதெனக் கண்டான்.
168. கண்டுவொரு ஈட்டியினால்—கர்த்தர் விலாவதிலே
சண்டாளன் குத்தரத்தம்-ஜலம்ரண்டும் பாய்ந்ததுவே.
169. பாய்ந்த உதிரமது—பாரச் சிலுவையெல்லாம்
தோய்ந்ததால் பார்த்தவர்க்கு — தோன்றுதே செம்மரம்போல்.
170. தோன்றச் சிலுவையின்மேல் — துரையேசு யூதருட
தோன்ற லெனவெழுதித்—தொங்கவைத்தார் கண்டீரே.
171. கண்டதுபோல் கேட்டீரோ—கல்வாரிச் செய்தியெல்லாம்
தொண்ட ரிருவரந்தத்—துரையிடத்தில் கேட்டு வந்து.
172. வந்து திருவுடலை—மரத்திலிருந் திறக்கி,
கந்த நிறைவெள்ளைக்—கரிய போளத்துடனே.
173. உடனே திருவுடலை—ஓர்புடவை யால்மூடி
அடக்கிச் சமாதியின்வாய் — அடைத்தாரே கற்புரட்டி.

(இன்னும் வரும்.)

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

## புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... .. ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| எக்காலக் கண்ணி ... ... ... ... ... | 0 | ½ |
| எபேசியர் நிருப வியாக்கியானம் ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2—ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபை சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெபிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலை தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலை தியானம் ... ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| பரிசுத்த ஜீவியம் ... ... ... ... ... | 0 | 2 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### ஏப்பிரல்மீ பஞ்சாங்கம்.—

| வாரம். | ஏப்பிரல்மீ = பங்குனி—சித்திரை. ⊙ பௌர்ணமி, 20௳ ● அமாவாசை, 6௳ | | | | | பங்குனி—சித்திரை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 1 | 8 | 15 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 2 | 9 | 16 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 3 | 10 | 17 |
| புதன் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 4 | 11 | 18 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| வெள் ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 7 | 14 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MAY, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. மேமீ, 1913.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**பல்வலிக்குச் சிகிச்சை.** — மங்கல் நிறமான ஒரு துண்டு காகிதத்தைக் காடியில் ஊறவைத்து எடுத்து அதன்மேல் மிளகு தூளைத் தூவிப் பல்வலியுள்ள பாகத்தில் முகத்தில் போடுவதால் பல்வலி பறக்கும் என்று கூறப்படுகிறது.

**சிலோனில் சாராயக்கடைகள்.** — சிலோன் நாட்டில் தற்காலத்திலிருக்கிற சாராயக்கடைகளைவிட அதிகமான கடைகள் இனி திறக்கக்கூடாதென்று 5,000 புத்த குருக்கள் கலோனியல் செக்ரடெரிக்கு மனு செய்துகொண்டிருக்கிறார்கள்.

**42 பிள்ளைகள் பெற்றவள்.** — ரக்பி என்னுமிடத்துக் கருகில் வசித்துக் காலஞ்சென்ற ஜான் மாட் என்பவன் மனைவி எலிஸ் மாட் என்பவள் 44 வருஷம் புருஷனோடு வாழ்ந்திருந்து 42 பிள்ளைகள் பெற்றாள் என்று அவளுடைய கல்லறைமேல் எழுதியிருக்கிறது.

**விநோதமான தண்டனை.** — சின்சினாட்டி என்னுமிடத்தில் நியாயஸ்தலத்திற் குற்றஞ்சாட்டப்பட்ட 50 ஸ்திரீகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனை யென்னவெனில், அவர்கள் நான்கு வாரம் கிரமமாய்க் கோவிலுக்குப் போகவேண்டுமென்பதே. இது விநோதமான தண்டனையல்லவா?

**ஜலதிருஷ்டிக் கண்ணாடி.** — தந்தியில்லாமல் செய்தியனுப்பும் வித்தையைச் சிருஷ்டித்த மார்க்கோனி என்பவரின் பள்ளித்தோழன் ஒருவர், சமுத்திரத்தின் ஆழத்திலுள்ள பொருட்களைக் காட்டும் ஜலதிருஷ்டிக் கண்ணாடி யொன்றை உண்டுபண்ணியிருக்கிறார். இதனால் பெரும்பயன் விளையுமென்னத் தடையில்லை.

**காலினால் சாப்பிடுங் கன்னிகை.** — ஈஸ்ட்போர்ன் என்னுமிடத்தில் இரண்டு கைகளுமில்லாத ஸ்திரீயொருத்தி தன் கால்விரல்களால் கரண்டிபிடித்து வெகு நேர்த்தியாய்ப் போஜனம்பண்ணுகிறாளாம். சமீபகாலத்தில் ஒரு பெரிய விருந்துசாலையில் பலரோடு இவள் இவ்விதம் சாப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது.

**சீனாவும் அபினியும்.**—சீனாவில் ஷாங்காய் என்னுமிடத்தில் அபினி சாப்பிடுவதை நிறுத்த உடன்படாத ஒரு ஸ்திரீயை அவ்விராஜாங்கத்தார் சுட்டுப்போடத் தீர்ப்பு செய்தார்கள். இது குரூர தீர்ப்பென்றாலும் அபினியை அத்தேசத்தார் எவ்வளவாய் வெறுக்கிறார்களென்று இதனால் விசதமாகிறது. இங்கிலாந்து இதைக் கவனிப்பது நல்லது.

**அசாதாரண போஸ்ட் மிஸ்ட்ரஸ்.**—பிரான்ஸ் தேசத்தில் 1863-ஆம் தன் 13 பிராயத்தில் போஸ்ட்டாபீஸ் வேலையில் பிரவேசித்த ஒரு ஸ்திரீ இப்போது 65-ம் வயதில் 49 வருஷகாலம் வேலைசெய்த பிறகு பென்ஷன் பெற்றுக்கொண்டாள். இவளைப்பற்றிய விசேஷமென்னவெனில், இந்த 49 வருஷகாலத்தில், சாதாரண ரஜாநாட்கள் தவிர வேறொரு நாளிலாவது இவள் வேலைக்கு ஆஜராகாதிருந்ததில்லையாம்.

**ஒரு விதவையின் நன்கொடை.** — 76 பிராயமுடைய சுவிஸ் ஏழை விதவை யொருத்தி பிரிம்கார்டன் என்கிற தன்னூரிலுள்ள ஆலயத்துக்கு 820 பவுண் பெறுமான கடியாரமொன்று நன்கொடை செய்திருக்கிறாள். இவள் கொடிய தரித்திரதசையி லிருந்தவளாயினும், 50 வருஷகாலம் தன்னை யொறுத்து ஒவ்வொரு பென்னியாகச் சேர்த்து இந்த விலைபெற்ற நன்கொடை கொடுத்திருக்கிறாளென்று சொல்லப்படுகிறது.

**அலுமினியம் தொப்பிகள்.**—அமெரிக்காவில் ஜான் பென்ஜான் என்பவன் அலுமினியத்தால் ஸ்திரீகளுக்குத் தொப்பிகள் செய்து விற்பனை செய்கிறான். இந்த உலோகத்தை எவ்வகையிலும் வளைத்து இஷ்டம்போலச் செய்யக்கூடியதா யிருக்கிறபடியால் பலவித விசித்திரமாய்த் தொப்பிகள் செய்யக்கூடியதா யிருக்கிறதென்றும், ஒரு தொப்பி ஜீவகாலமெல்லாம் வரக்கூடியதென்றும், இந்தப்படி, புது தொப்பிகளுக்கு வருஷவாரி செலவாகிற 60 லக்ஷம் பவுண் தேசத்துக்கு மிச்சமாகுமென்றுஞ் சொல்லுகிறான்.

**புகையிலையின் மகத்துவம்.**—புகையிலை சாப்பிடுவதும், புகை குடிப்பதும் மிக அசுத்தமான பழக்கமாயினும், அது வியாதிகளை உற்பத்திசெய்கிற கிருமிகளைக் கொல்லுஞ் சக்துடையதென ஆயுள்வேத பண்டிதர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். பெர்லின் நகரில் இதுவிஷயமாய்ச் சோதனை செய்தபோது, புகையிலைப் புகையினால் விஷக்கிருமிகள் சாகிறதென்றும், பெரும்பாலும் புகையிலைக் கைத்தொழிற்சாலைகளில் விஷபேதி வருகிறதில்லையென்றும், விஷபேதிக் கிருமியைப் புகையிலை 5 நிமிஷத்தில் கொல்லுகிறதென்றும் கண்டறிந்தார்களாம்.

**கிரீஸ் இராஜன்.** — நமது மாட்சிமைதங்கிய அலெக்சந்திரா சக்கரவர்த்தினியின் சகோதரரும், கிரீஸ் தேசத்து மன்னனுமாகிய முதலாம் ஜார்ஜ், சலோனிக்காவில் ஒன் கொலையுண்டாரென்று தெரிவித்தோமல்லவா? அவர் குமாரன் கான்ஸ்டன்டைன் அரசன் என்கிற நாமத்தோடு கிரீஸுக்கு அரசனாகப் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டிருக்கிறார். இவர் பேர்பெற்ற யுத்தவீரன்; துருக்கியோடு நடக்கும் யுத்தத்திலுங்கூடத் தளகர்த்தனாயிருந்தார். இவர் குடிகள்மீது மிகவும் பக்ஷமுள்ளவரென்றும், எல்லா இராணுவவீரராலும் மதிக்கப்பட்டவரென்றுங் கூறப்படுகிறது.

**ஸ்திரீ சுதந்தரவாதிகள்.** — இங்கிலாந்தில் ஸ்திரீகளுக்கு இராஜாங்க விஷயத்தில் உரிமை வேண்டுமென்று போராடிவருகிறார்க ளல்லவா? இவர்கள் வேண்டுகோள் நிறைவேறாதிருப்பதைக் கண்டு, கொடிய கிருத்தியங்கள் செய்து, மந்திரிகளை உபத்திரவிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அநேக வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்திவருகிறார்கள். மிஸ்டர் லாயிட் ஜார்ஜ என்கிற மந்திரியின் வீட்டை வெடிவைத்துத் தீக்கிரையாக்கினர். இதுசம்பந்தமாய்ப் பிடிபட்ட மிஸிஸ் பாங்க்ஹர்ஸ்ட் என்கிற மாதுக்கு 3 வருஷக் கடுங்காவற் சிக்ஷை விதிக்கப்பட்டது. இவர்கள் காவலுக்கும் அஞ்சுவதில்லை. காவலில் யாதொரு ஆகாரமுங் கொள்ளாமல் பட்டினியிருந்து அதிகாரிகளை யுபத்திரவிக்கிறார்கள். இவர்களுடைய தூர்க்கிருத்தியங்களைத் தடுக்க இவர்களைத் தேசப்பிரஷ்டம் செய்துவிடவேண்டுமென்று சிலர் யோசனை கூறுகிறார்கள். இதற்காக ஒரு சட்டமுண்டுபண்ண முயற்சி நடந்தேறிவருகிறது.

**துருக்கி பல்கேரிய யுத்தம்.**—துருக்கி இராணுவம் வெகு வீராவேசத்தோடு காத்த ஏடிரியானோபில் என்கிற பட்டணத்தை மார்ச்சுமீ கடைசியில் எதிரிகளுக்கு ஒப்படைத்துவிட்டார்கள்.

கிழக்கே பல்கேரிய இராணுவங்களும், மேற்கே செர்விய சைனியமும் உயிர் நஷ்டத்தைக் கவனியாமல் வெகு துணிகரமாய்க் கோட்டைகளை நெருங்கி யடித்துப் பட்டணத்துக்குள் பிரவேசித்துத் தங்கள் கொடியை நாட்டி ஏடிரியாநோபிலைப் பிடித்துக்கொண்டார்கள். இந்தத் துணிகரமான சண்டையில் இருகக்ஷியாருக்கும் மிகுந்த உயிர்ச்சேதம் நேரிட்டது. பல்கேரியருக்கு 11,000 பேர் சேதம். செர்வியருக்கு 1,200 பேர் சேதம். துருக்கி பக்கம் 10,000 சேதம். பட்டணத்தைப் பாதுகாத்த 60,000 துருக்கிவீரர் பல்கேரியர் கையில் கைதிகளானார்கள். இவர்களில் 800 பேர் உத்தியோகஸ்தர். ஜெனரல்கள் மாத்திரம் 9 பேர். துருக்கி கமாண்டரின்சீப்பும் ஜெனரல்களும் பல்கேரிய இராஜதானிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். இதோடு யுத்தம் முடிந்ததென்னலாம். இப்போது சண்டையை நிறுத்திச் சமாதானமாய்ப் போகும்படி இருபக்கத்தாரும் முயற்சித்துவருகிறார்கள். ஐரோப்பா துருக்கியில் கான்ஸ்தாந்திநோபில் தவிர மற்ற இடங்களெல்லாம் துருக்கி வசத்தி லிருந்து போய்விட்டது. இனி எல்லை குறிப்பதில் கொஞ்சம் தகராரிருக்கிறது. சீக்கிரம் ஒழுங்குக்கு வந்துவிடும். இந்த யுத்தத்தில் மான்டினிகிரோவுக்கும், ஆஸ்டிரியாவுக்கும் ஸ்கூடாரி என்கிற இடத்தைப்பற்றி ஒரு தகராருண்டாகிப் பலர்கள் அதைப் பைசல்செய்யத் தலையிட்டிருக்கிறார்கள். அதுவும் ஒரு முடிவுக்கு வருமென்றெண்ணுகிறோம்.



காஸ்மீரத்து ராஜதானி ஒரு நகரம்.

TROUBLES IN CHINA.

## சீனதேசத்தில் அந்நிய நாட்டாருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் உண்டான துன்பம்.

சில வருஷங்களுக்குமுன் பாக்ஸர்கள் என்கிற ஒருவித வகுப்பாரால் சீனதேசத்தில் கலகம் உண்டானது. அத்தேசத்தில் குடியேறி இருந்த அந்நிய நாட்டாரையும், கிறிஸ்துசமயத்தைத் தழுவினவர்களையும் அத்தேசத்தில் இராமல் அவர்களைத் துரத்திவிடவும், கூடுமானவரையில் அவர்களைக் கொன்று போடவும் வேண்டும் என்கிற நோக்கத்தோடே இக்கொடியர் அங்குமிங்கும் அலைந்து, கிறிஸ்தவர்களையும், அந்நிய நாட்டாராகிய ஐரோப்பியரையும் வதைத்துக்கொண்டிருந்தார்கள். அக்கலகம் நேரிட்ட சமயத்தில் அத்தேசத்தின் ஒருபக்கத்தில் கிறிஸ்துமார்க்கத்தைப் பிரசங்கம் செய்கிற ஒரு மிஷனெரியும், அவருடைய மனைவியும், அவர்களுடைய இரண்டு அருமையான பிள்ளைகளும், அவர்களோடுகூட உடன் ஊழியஞ்செய்துகொண்டிருந்த ஒரு துரைசானி அம்மாளும் ஆகக்கூடி ஐந்து பேர் அடங்கிய ஒரு சிறந்த குடும்பம் ஜீவித்துக் கொண்டுவந்தார்கள். சிலர் யாரோ திடீரென்று ஓடிவந்து அந்த மிஷனெரியைப் பார்த்து, "ஐயா, நாளையதினம் பாக்ஸர்கள் உம்முடைய வீட்டிற்கு வரப்போகிறார்கள்; ஆகையால் நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்" என்றதாகச் சொன்னார்கள். இதைக்கேட்ட அந்த மிஷனெரி, அந்த இரவே அவ்வீட்டைவிட்டுத் தன் குடும்பத்தோடே வேறே இடத்திற்கு ஓடிப்போனார். அவர் போகும்போது அவருடைய இரண்டு பிள்ளைகளையும், தோளின் மேல் தூக்கிக்கொண்டு கால்நடையாய் நடந்து, அதிகக் கஷ்டத்தோடே ஒரு விக்கிரகக்கோவிலண்டை போனார். அந்தக் கோவிலிலுள்ள பூசாரி இந்த மிஷனெரியை நன்றாய் அறிந்தவனாய் இருந்தான். ஆனபடியால், இந்த மிஷனெரி குடும்பத்திற்கு உடனே அந்தக் கோவிலில் ஒரு மறைவான இடத்தில் அடைக்கலம் கொடுத்துச் சிலநாள் அங்கேயே தங்கியிருக்கும்படி செய்தான். ஆனால் தூர் அதிர்ஷ்டமாக இவர்கள் இங்கே ஒளிந்துகொண்டிருக்கிற சமாசாரம் எப்படியோ பாக்ஸர்களுடைய காதுக்கு எட்டினது. அப்போது அந்த பாக்ஸர்கள் இவர்களைப் பிடித்துக் கொன்றுபோடும்படி தேடிக்கொண்டு வந்தார்கள். இந்த சமாசாரம் அந்தப் பூசாரிக்குத் தெரிந்தவுடனே, இந்த மிஷனெரி குடும்பத்தை அவ்விடத்தில் இராதபடி அதிக துரிதப்படுத்தி, அங்கோர் மலைக்குகையில் ஒளித்துக்கொள்ளும்படி செய்தான். இவர்கள் அங்கே சிலநாள் தங்கினார்கள். பாக்ஸர்கள் இவர்களைக் கோவிலில் தேடியும் அகப்படாமல் போனபடியால், வேட்டைக்காரர் வேட்டையாட மிருகங்களைத் தேடுகிற மாதிரி இவர்களைத் தேடிக்கொண்டேயிருந்தார்கள். மிஷனெரி குடும்பம் இந்தக் குகையில் ஒளிந்து



கொண்டிருந்த சமயத்தில், ஒரு கனத்தமழை அடித்தபடியால் இவர்களுடைய வஸ்திரமெல்லாம் நனைந்துபோனது மாத்திரமல்ல, இவர்கள் படுக்கிற இடமெல்லாம் ஈரமாய்ப் போய்விட்டது. ஆகையால் இவர்களுக்குப் படுக்கக்கூட இடமில்லாமல் சில நாள் உட்கார்ந்துகொண்டிருக்கும்படி நேரிட்டது. இவர்களுக்கு ஆகாரம் கிடைக்காமல் சில ரொட்டித் துண்டுகளைமாத்திரம் தின்றுவிட்டு, பிறகு எத்தனை நாளோ ஆகாரமில்லாமல் பசி பட்டினியாய் இருக்க நேரிட்டது. இவர்கள் இவ்விதமாய்ப் பரிதாபமான நிலைமையிலிருக்கும்போது, பாக்ஸர் அந்த இடத்திலும் வந்து இவர்களைக் கண்டுபிடிக்கப் போகிறார்கள் என்கிற சங்கதி இந்த மிஷனெரிக்குத் தெரிந்தவுடனே, இவர் தம்முடைய குடும்பத்தோடே அந்தக் குகையை விட்டுவிட்டுக் காட்டுக்குள் இருந்த ஒரு குடிசைக்குள் போய் ஒளிந்துகொண்டார்கள். இவ்விதமாயிருக்கையில் இந்தப்பாக்ஸர் எப்படியோ இந்த இடத்தைக் கண்டுபிடித்து அருகாமையில் வரும்போது இனி நம்முடைய ஜீவன் தப்ப முடியாதென்று மிஷனெரி நம்பினபடியால், அவர் தம்முடைய மனைவி பிள்ளைகளுடைய ஜீவனைக் காப்பாற்ற அக்கொடியவர்களைக் கண்டு கெஞ்சும்படி வெளியே வந்தார். உடனே ஒரு மனுஷன் இவரைக் கைத்துப்பாக்கியினால் சுட்டான். அந்தக் குண்டு இவர்பேரில் பட்டவுடனே இவர் கீழே விழுந்துபோனார். ஆனாலும் இவருக்கு உயிர் போகத்தக்க அவ்வளவு பலமான காயம் படாவிட்டாலும், அதிகநோயை உண்டாக்கத்தக்கவிதமாய்க் காயம் பட்டது. இந்தத் துப்பாக்கியின் வெடி சத்தத்தைக் கேட்டவுடனே, இனி நாம் உள்ளே இருக்கிறதினால் பிரயோஜனமில்லை. நாம் இப்போது மாணத்திற்குச் சமீபமாய் இருக்கிறோம் என்றதாக நினைத்து, அக்குடும்பத்தார் உடனே வெளியே வந்தார்கள். இவர்கள் வெளியே வந்தவுடன், நாலுபேர் தங்கள் கைகளில் அதிக நீளமும் கூர்மையுமான பட்டயத்தை வைத்துக்கொண்டிருக்கக் கண்டார்கள். இந்த மிஷனெரி குடும்பம் வெளியே வந்தவுடன் இந்த பாக்ஸர்கள் உள்ளே போய், அவர்களுடைய படுக்கைகளையும், வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு, துரைசானி கையிலிருந்த விவாக மோதிரத்தைக் கழட்டிக்கொண்டு, அவர்களை நன்றாய் அடித்து, அந்தத் துரைசானியுடைய கையையும் காலையும் கட்டி, ஒரு மூங்கில் தடியில் ஒரு மிருகத்தை மாட்டித் தூக்கிக்கொண்டு போகிறதைப்போல் தூக்கிக்கொண்டு போனார்கள். இவர்கள் இவ்விதமாய்ப் போகும்போது இந்தம்மாளுக்கு ஒரு பெரிய கல்லின்மேல் தலை மோதப்பட்டபடியினால் பெருங்காயம் உண்டாகி, இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. இவ்விதமாய்க் கொஞ்சம் தூரம் கொண்டுபோய், கடைசியாக இவர்களைக் கொன்றுபோடாமல், ஒரு பக்கத்திலே எறிந்துவிட்டுப் போய்விட்டார்கள். இவ்விதமாய் இவர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல. இப்படிப்பட்ட கலகங்கள் மும்முரமாய் நடக்காமல் தக்க ஏற்பாடுகள் நடந்தது, கலகம் ஒழிந்தது. இந்த மிஷனெரி குடும்பத்திற்கு உண்டான துன்பத்தினால், ஒரு பிள்ளைமாத்திரம் அதிக வியாதியில் விழுந்து இறந்துபோய்விட்டது. மற்றவர்கள் எல்லாரும் வியாதிப்படுக்கையில் விழுந்தார்கள். ஆகையால் இவர்கள் தங்களுடைய தேகசுகத்தை அடைந்துகொள்ளும்படி தங்களுடைய சொந்தத் தேசத்துக்குப் போனார்கள். இவர்களுக்கு நல்ல தேகசுகம் உண்டானபிறகு என்ன செய்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? ஒருவேளை இவ்வளவு துன்பம் அடைந்த அந்த சீனதேசத்துக்குத் திரும்பிவந்து அக்கொடிய துரோகிகளுடைய முகத்தைப் பார்க்கவேமாட்டார்கள் என்று நினைக்க நேரிடும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அந்தச் சத்துருக்களை இன்னும் நேசித்தார்கள். அதினாலே அவர்கள் திரும்பவும் அந்தத் தேசத்துக்கு வந்து, அத்தேசத்தார் இரட்சிப்பின் மார்க்கத்தை அடைந்து; சீரடையும்படி அவர்களுக்கு மார்க்கத்தைப் போதிக்கும்படி அங்கேயே இருக்கிறார்கள். பார்த்தீர்களா? இவர்களுடைய குணம் எவ்வளவு சிறந்ததாயிருக்கிறது? இப்படிப்பட்ட குணம் எப்படி வந்ததென்றால், இவர்கள் சேவித்துவருகிற இயேசுநாதர் மூலம்தான். இயேசுநாதர் அப்படிப்பட்டவர். அவர் உலக சஞ்சாரம்செய்து "சத்துருக்களையும் நேசியுங்கள், தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்" என்று போதித்தது மாத்திரமல்ல, அவர் அப்படியே தம்முடைய கிரியையிலும் காண்பித்தார். இயேசு கிறிஸ்து கடவுளைப்பற்றிப் போதித்து நன்மைகளைச் செய்துகொண்டிருந்த சமயத்தில் ஜனங்கள் இவர்பேரில் பொறாமைகொண்டு, இவரைப் பிடித்து, சிலுவைமரத்தில் அறைந்துபோட்டார்கள். ஆனாலும் இயேசுகிறிஸ்து தம்முடைய சத்துருக்களைச் சபிக்காமல், பிதாவாகிய கடவுளை நோக்கி, பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; இவர்கள் அறியாமையில் இப்படிச் செய்கிறார்கள் என்று வேண்டுதல் செய்தார். இப்படிப்பட்ட சிறந்த விஷயம் எந்த மார்க்கத்திலும் கிடையாது. சத்துருக்களையும் நேசிக்கச் சொல்லிக்கொடுக்கிற மார்க்கம் கிறிஸ்துமார்க்கம் தான். இதை வாசிக்கிற என் நண்பர்களே, இயேசுநாதர் நம்மெல்லாருடைய பாவங்களையும் சுமந்து, நமக்காகப் பாடுபட்டு, நாம் சத்துருக்களாய் அவருக்குத் துரோகம் செய்தாலும் நம்மை நேசிக்கிறார். ஆகையால் அவருடைய அருமையான செய்கைகளையெல்லாம் கவனித்து, அவரைப் பின்பற்றுவோமாக. அவரை அண்டிக்கொள்ளுகிற எந்தப் பாவியையும் அவர் தள்ளுகிறதில்லை; அவரை அண்டிக்கொள்ளுகிற ஒவ்வொருவனுக்கும் அவருடைய குணம் வருகிறது; இது நிச்சயம்.

THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

3. **சமண சமயம்.**—பிராமணர்களது குரு தந்திரங்களையும், வீண் நைவேத்தியானுஷ்டானங்களையும் எதிர்த்து இவ்விந்தியாவின்கண் பூர்வத்தில் தோன்றிய மதங்களில் சமண சமயம் ஒன்று. வர்த்தமானன் அல்லது மகாவீரன் என்ற வோர் க்ஷத்திரிய அரசனால் இச்சமயம் ஸ்தாபிக்கப்பட்டது. அவன் புத்தன்காலத்தில் தோன்றினவன். ஆயினும் புத்தனைவிட வயதில் மூப்புற்றிருந்தவன்.

ஜைனர் என்னும் பதம் ஜினனது தொண்டர் எனப் பொருள்படும். ஜினன் என்பது மகாவீரனுக்கு சூட்டப்பட்ட ஓர் நாமம். அதற்கு ஜெயவீரன் என்றர்த்தம். அதாவது மன மொழி மெய்களை யடக்கி வெற்றிபெற்றவன் என்ற கருத்து. காலத்தை தொடர்பான யுகங்களாகப் பிரித்து யுகம் ஒன்றுக்கு இருபத்துநான்கு "தீர்த்தங்கரர்" ("தடம் குறிப்பிடுவோர்") உண்டென்று ஜைனர் சொல்வர். கடைசியில் தோன்றிய பரசுநாதன் (மகாவீரனது ஆசிரியர்), வர்த்தமானன் என விரண்டு தீர்த்தங்கரரையும் மற்றவரைப்பார்க்கிலும் அதிகமாய் ஜைனர் கொண்டாடுவர்.

ஜைனர் ஆலயம் கட்டுவதில் கீர்த்திபெற்றவர்கள். ஜனங்கள் உபயோகத்திற்கென்று ஆலயங்களைக் கட்டாமல், ஓர் புண்ணிய தொழிலாகப் பாவித்துக் கட்டுவது அவர்கள் வழக்கம். சோலைகளடர்ந்த மலைகளையும் ஏகாந்தமான அலங்காரத்தாவுகளையும் புண்ணிய க்ஷேத்திரங்களாகக் குறிப்பிட்டு, அங்கு ஆலயங்களைக் கட்டி, வெண் சலவைக்கல் அல்லது அரைசாந்தில் வெகு விநோதமாய்ச் சித்திரிப்பார்கள். வங்காளத்திலுள்ள பரசுநாத சிகரம், கதியவாரிலுள்ள பலிட்டான நகரம், ஆபுமலை முதலிய இடங்களில் திருஷ்டாந்தபூர்வமாய் இவ்வுண்மையைக் கண்டுகொள்ளலாம். ஜைன ஆலயங்களைச் சுற்றி உயரமும் அரணிப்புமான மதில்கள் உண்டு. ஆலயங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே அடக்கமாயிருக்கும். பூசாரிகளில் சிலர் செய்யவேண்டிய நித்தியானுஷ்டானங்களைச் செய்து, ஆலயங்களிலேயே படுத்துக்கொள்வர். இடத்தைச் சுத்தம் செய்வதற்கும், கோவில் புறாக்களைப் போஷிப்பதற்கும் வேலைக்காரர் சிலர் எப்பொழுதும் அங்கேயே தங்கியிருப்பார்கள். பிரயாணியாவது யாத்திரிகராவது அத்திருச் சிகரத்தின்மீது தன் ஆகாரத்தைச் சமைக்கவாவது, அருந்தவாவது, நித்திரை செய்யவாவது கூடாது. தேவர்களது நகரமாதலின் அவர்களை யொழிய வேறொருவரும் உபயோகிக்கலாகாது என்பது கோட்பாடு.

ஜைனரில் "திகம்பரர்," "ஸ்வதாம்பரர்" என இருவகுப்பினர் உளர். திகம்பரர் எனின் ஆகாய உடை புனைந்தவர் எனப் பொருள்படும். இவர்களுடைய விக்கிரகங்களுக்கு யாதொரு உடையும் கிடையாது. இவர்கள் சந்நியாசிகளும் நிர்வாணிகளாகவே அலைவார்கள். பெண்மக்கள் முத்தியடைவது அசாத்தியமென்றும் கூறுவர். "ஸ்வதாம்பரர்" எனின் வெள்ளுடை தரித்தவர் என்றர்த்தம். பெண்மக்களும் முத்தியடையலாம் என்பது இவரது கோட்பாடு. இவர்கள் சந்நியாசிகள் வெள்ளுடை போர்த்துக்கொள்வர். விக்கிரகங்களுக்கும் வெள்ளுடை தரிப்பர். சிறிது காலத்திற்குமுன் ஸ்வதாம்பரர் என்னும் முக்கிய வகுப்பைச்சார்ந்த சிலர், வேறொரு கிளையாய்ப் பிரிந்து "துண்டியர்" எனப் பெயர்பெற்றிருக்கின்றனர். இவர்கள் எவ்வித ஜீவவதையும் செய்யக்கூடாதென விரதம் பூண்டவர்களாயும் விக்கிரகங்களுக்குப் பதிலாக குருக்களை வணங்குகிறவர்களாயும் இருக்கின்றனர்.

சமணர் (அல்லது ஜைனர்) கொள்கைப்படி ஆத்ம ஈடேற்ற மடைவதற்குரிய சாதனங்கள் மூன்றுள. அவையாவன:—தீர்க்கஞானம், சற்புத்தி, நற்சீலங்களாம். தீர்க்க ஞானமெனின் ஆவிக்கும் சடலத்திற்குமுள்ள உறவை கிரஹித்தறிந்த சக்தியாம். அருகன் சொன்ன வார்த்தையையும் நாற்பத்தைந்து ஆகமங்களில் கூறப்பட்டனவற்றையும் பூராவாக நம்பும் நம்பிக்கையே சற்புத்தியாம். நற்சீலங்களெனின், (1) உயிர்வதை செய்யாமை; (2) தயாளம், உண்மையுரைத்தல்; (3) களவு செய்யாமை; (4) மனோவாக்குக் காயங்களில் கற்புடைமை; (5) உலக ஆசை வெறுத்தல் முதலியவைகளைக் குறிக்கும். (இன்னும் வரும்.)

KAMBAN THE POET.

## கம்பநாடர்.

(தொடர்ச்சி.)

இராமன் முடிதரிக்க இயைந்ததும் பிதுர் வாக்ய பரிபாலனம்: பரதனுக்கு அதனைத் தரிக்க இராமன் இயைந்ததும் பிதுர் வாக்ய பரிபாலனமே. முடி புனையுமாறு தசரதன் வேண்டின போது,

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லித்திலன் இகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்து
யாது கொற்றவன் ஏவினன் அதுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துதன் பணிதலை நின்றான்.

"பரதன் அரசாள்க: நீ வனவாஸம் செய்க" என்று தசரதன் ஏவலாகக் கைகேசி கூறியபோதும்,

மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ?
என், பின்னவன் பெற்றசெல்வம் அடியனேன் பெற்ற
தன்றோ?, என் இனி உறுதி அப்பால்?, இப்பணி தலைமேற்
கொண்டேன்:, மின்னொளிர் கானம். இன்றே போகின்
றேன்: விடையுங் கொண்டேன்

என்றான். கைகேசியின் உரையைக் கேட்குமுன் கொண்டிருந்த முகச்செவ்வி அவள் உரைக்கும் போதும் வேறுபட்டா னல்லன்; அவள் உரைத்த பின்னும் வேறுபட்டா னல்லன்.

இப்பொழு தெம்ம ஞோரால் இயம்புதற் கெளிதே யாரும், செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கில், ஒப்பதே முன்பு பின்(பு)அவ் வாசகம் உணரக் கேட்ட, அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

இங்ஙனம் சிந்தையிலும் வார்த்தையிலும் தோற்றத்திலும் எவ்வித வேறுபாடும் தோன்றாது பிதுர் வாக்ய பரிபாலனத்தில் திரிகரண சுத்தியுடையனாக இருந்தான் என்று காட்டிய பாவிகத்தில் வேறொரு அம்சத்தையும் கம்பர் தொடர்பு படுத்தினார். அது ராஜ்யபாரப் பொறுப்பின் அருமை. இவ்வருமையை இராமன் நன்குணர்ந்தவன். ஆகவே கைகேசியின் ஸதி ஸர்ப்பனையால் அரசை இழப்பதை இழவாகக் கொள்ளாது நலமாகவே கொண்டானென்பது

தெருளுடை மனத்து மன்னன் ஏவலிற் றிறம்ப அஞ்சி,
இருளுடை உலகம் தாங்கும் இன்னலுக் கியைந்து நின்றான்,
உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரே,
றருளுடை யொருவன் நீக்க அப்பிணி அவிழ்ந்த தொத்தான்

என்ற கவிக்கூற்றால் போதரும். வீதை எரியுற்று மீண்டபோது அங்குற்று மகனைக் கண்டு அகமகிழ்ந்த தசரதன் தன்னிடம் ஒரு வரம் வேண்டிக் கொள்ளுமாறு மகனை வேண்ட, இராமனும்

தீய ளென்றுநீ துறந்தவென் தெய்வமு மகனும்
தாயும் தம்பியு மாம்வரம் தருகெனத் தாழ்ந்தான்.

அதற்கு தசரதன்

பரதன் அன்னது பெறுகதான் முடியினைப் பரித்திவ்
விரத வேடமற் றுதவிய பாவிமேல் விளிவு
சரதம் நீங்கல தாமென்றான்.

அப்போது இராமன்

ஊன்பி ழைக்கிலா உயிர்கெடி தளிக்கும்நீ ளாசை
வான்பி ழைக்கிது முதலென தாள்வுற மதித்து
யான்பி ழைத்தல் லால்என்னை ஈன்றளம் பிராட்டி
தான்பி ழைத்த துண்டோ என்றான்.

இதுவும் முற்கூறியதைப் பின்னும் நன்றாக வற்புறுத்துகின்றது. அன்றியும், தந்தை தாய்ப் பேணு நலமும் ஸஹோதர வொற்றுமையு மாகிய பல அம்சங்கள் இந்த ஸந்தர்ப்பத்தில் பாவிகமானவாறு காண்க. (இன்னும் வரும்.) T. C. M.

## MEDITATIONS ON THE PASSION.

## திவ்ய ரட்சகரின் பாடுகளின் பேரில் ஒப்பாரி.

(தொடர்ச்சி.)

174. வாசலிலே கற்புரட்டி—வைத்தவர்கள் சென்றபின்பு,
தேசத் ததிபனிடம்—சென்றுரைப்பார் யூதர்களும்.
175. அதிபதியே அம்மனிதன்—அகிலத் திருக்கையிலே
புதுஉயிரோ டெழுந்து — புவனத் திருப்பனென்றான்.
176. இருப்பேனென்ற ஞேர்வேளை—இவனுடைலச் சீடர்களும்
திருட்டா யெடுத்திவனும்—செப்பினது உண்மையென்பார்.
177. உண்மையோ வென்றறிய—உடனேநீர் சேவகரைக்
கண்விழிப்பாய்ப் பார்த்திருக்க—காவல்வைக்க வேண்டுமென்றார்.
178. வேண்டுமென்றால் வையுமென—விண்டான் பிலாத்துத்துரை
ஆண்டவர் சமாதிசுற்றி—அறுபதுபேர் சேவகரை.
179. சேவகரை வைத்து—திறப்பிலடை யாளமிட்டு,
காவல் செய்துநிற்கக்—கதிரோன்நாள் வைகறையில்.
180. கறையிலா வெண்ணுடையுங் — காந்திமுகச் சாயலொடு
சிறையா ருடையாண்டு—தேவ தூதர்கள் வந்து.
181. வந்து சமாதியுட—வாசலடைப்பைப் பேர்க்க
அந்த அறுபதுபேர்—அருண்டு பிரேதமென.
182. பிரேத மெனவிழுந்து—பிரக்ஞை யிலாதிருக்க
ஆரணமெலாம் புகழும்—அமலன் திருச்சுதனார்.
183. சுதனார் சமாதிவிட்டு—ஜோதிப் பிரகாசமொடு
உதயாதி யங்குவந்த—உத்தமியைக் கண்டிரங்கி.
184. இரங்கி யவளிடத்தில்—எதுசொல்வா ரென்றாக்கால்
ஆரைநீ தேடுகிறாய்—அழுவதேன் கூறிடுவாய்.
185. கூறுவா யென்று—குமரக் கடவுள்சொல்ல
வேறாரோ வென்று—விசனமாகத் திரும்பி.
186. திரும்பி யவளையந்தத்—திருத்தோட்டக் காரனெனக்
கருத்துடனே எண்ணிக்—காதலனை நீரெடுத்து.
187. காதலனைக் கொண்டு—காணாது வைத்தீரேல்
ஏதும் பிசகாமல்—எடுத்துரைப்பீ ரிப்போதே.
188. இப்போதே சொல்லும்—எடுத்துக்கொள் வேனெனவே
அப்போதேநேசமுள்ள-ஆண்டவர்மரியாளே.
189. மரியாளே யென்றழைக்க—மனது பொறுக்காமல்
துரிதாய் ரபூனியென்று-தொடுவதற்குச்சென்றாளே.
190. சென்றவளைத் தடுத்துச்—சீரேசு ஐயருமே
இன்றேயென் சீஷருக்கு—இயம்புவா யிச்செய்தி.
191. இச்செய்தி கூறென்ன—எதுந் தாமதமின்றி
அச்சணமே யோடி—அறிவித்தான் யாவையுமே.
192. அறிந்தவர்க ளெல்லாரும் — அந்நேரங் கூடியொன்றாய்த்
தெரிந்துவா லாமென்று—தீர்க்கமாய்த் தோட்டத்துக்கு.
193. தோட்டத்துக்குப் போயங்கே—சொன்னபடி கண்டாரே
வாட்டமாய் யூதர்களும்—வகைமோசஞ் செய்தாரே.
194. மோசம்வருமென்று-முக்கியர்கள்சேவகர்க்குக் காசைக் கொடுத்துக் — கனநித்ரை செய்கையிலே.
195. நித்திரை செய்கையிலே—நிசமாயச் சீடர்களும் எத்தா யவரையெடுத் — தெழுந்தா ரெனச் சொன்னார்.

N. B.—கடந்த சில மாதங்களாக இப்பத்திரிகையில் பிரசுரித்துவந்திருக்கும் நமது திவ்ய ரட்சகரின் பாடு, மரணம், உயிர்த்தெழுத லொப்பாரியைத் தப்பில்லாது சேர்த்துவைத்திருக்கும் கிறிஸ்தவ சகோதரர் இதைப் பெறும்பொருட்களில் அரும்பொருளாகவும், பொக்கிஷங்களில் முக்கியமாகவும் கருதி, ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இதைத் தங்கள் குடும்பசகிதமாய்ப் பிரலாபித்துத் தங்கள் பாவங்களை நினைத்து கண்ணீர் சிந்தி மனந்திரும்புவதால் அவருடைய பாடு மரணம் உயிர்த்தெழுதலின் பலனுக்குப் பங்காளிகளாவர்.

W. S. SATHIANATHAN,
FOR. REV. SARGUNAN SATHIANATHAN,
*Of Suviseshapuram District,*
*C. M. S.*

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரு. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| எக்காலக் கண்ணி ... ... ... ... ... | 0 | ½ |
| எபேசியர் வியாக்கியானம்2 –ம் பதிப்பு ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2–ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபை சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலை தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலை தியானம் ... ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| பரிசுத்த ஜீவியம் ... ... ... ... ... | 0 | 2 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரணம் (லாசரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

மேமாத பஞ்சாங்கம்.—

| வாரம். | மேயீ = சித்திரை—வைகாசி. ⊙ பௌர்ணமி, 20உ ● அமாவாசை, 6உ | | | | | சித்திரை—வைகாசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 5 | 12 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 6 | 13 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 7 | 14 |
| புதன்... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 1 | 8 | 15 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 2 | 9 | 16 |
| வெள்... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 3 | 10 | 17 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | 31 | 21 | 28 | 4 | 11 | 18 |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

THE REGISTRAR ... REGISTERED ... 1913 ... MADRAS.

# சத்திய தூதன்.

JUNE, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூன்மீ, 1913.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**ஸ்திரீ மூளை.** — ஸ்திரீயின் மூளை புருஷன் மூளையைவிடத் தீவிரகதியாய் முதிர்ச்சியடைகிறதென்றும், நெடுங்காலம் சத்துவங் குன்றாதிருக்கிறதென்றும் ரூபிக்கப்பட்டிருக்கிறது.

**ஒரு நூதன துப்பாக்கி.** — ஒரு ஜெர்மன்காரன் நூதனமான துப்பாக்கியொன்று செய்திருக்கிறான். அதை யொருவன்மேல் பிரயோகித்தால் அவனைக் கொல்லாமல் புகையினால் அவனை மயக்கிக் கீழே தள்ளிவிடுகிறது. திருடர்களையும் குற்றவாளிகளையும் கொல்லாமற் பிடிக்கப் போலீஸாருக்கேற்ற ஒரு நல்ல ஆயுதமா யிருக்குமென்னத் தடையில்லை.

**இராக்ஷத பீரங்கி.**—அமெரிக்காவில் பெரிய பீரங்கியொன்று செய்யப்பட்டிருக்கிறது. இதன் வாயகலம் 14 அங்குலம். நிறை 50 டன். செலவு 22 ஆயிரம் பவுண். ஒரு வெடிக்குச் செலவு 150 பவுண். 5½ அடி நீளமும் 1660 பவுண் நிறையுமுள்ள இருப்பாயுதத்தை 6 மைல்தூரம் எறியக்கூடியது. இவ்வளவுதூரம் குண்டு செலுத்தக்கூடிய பீரங்கி இதுமட்டுஞ் செய்யப்பட்டதில்லை.

**நமது அரசரும் பைபிளும்.**—32 வருஷங்களுக்கு முன்னர் நமது மாட்சிமைதங்கிய 5–ம் ஜார்ஜ் அரசர், தினந்தோறும் சத்தியவேதப் புஸ்தகத்தில் ஒரு அதிகாரம் வாசிப்பதாகத் தமது அன்னையாருக்கு வாக்களித்தார். அந்தப்பிரகாரமே அவர் நாடோறுஞ் செய்து 8 முறை சத்தியவேதப் புஸ்தகத்தை முடித்து 9–ம் முறை இப்போது வாசிக்க ஆரம்பித்திருக்கிறார். இவரைப்போல எத்தனை பேர் செய்யக்கூடும்?

**உள்நோய் காட்டுங் கருவி.**—பெர்லின் ஆயுள்வேதப் பண்டிதர் ராசன்தாட் என்பவர் மனிதருடைய தேகத்துக்குள் ளிருக்கும் உறுப்புகளிலுள்ள வியாதியைக் காண்பிக்குங் கருவி யொன்றைச் செய்திருக்கிறார். வியாதியின் கூறறியாது செய்வதினாலுண்டாகும் பல கஷ்டங்களும், பெரும்பாலும் உள்ளுறுப்பைச் சரிப்படுத்த நிறைவேறும் சத்திர சிகிச்சையும் இனிக் குறைவுபடு மென்பதற்குச் சந்தேகமில்லை.

**உலகிற் சமாதான செலவு.**—உலக முழுமையிலும் சமாதானத்தை நிலைநிறுத்தவும், சமாதானக் கேடுண்டாயின் யுத்தத்துக் காயத்தமாயிருக்கவும் ஐரோப்பிய ஜாதியார் வருஷவாரி செலவிடும் பணத்தொகை 350,000,000 பவுண். இத்தொகை எவ்வளவு பெரிதென்றால், ஒரு ரெயில்வண்டித் தொடரில் இதை ஏற்றினால் வண்டியொன்றுக்கு 10 டன் நாணயங்கள் ஏற்றின வண்டித்தொடர் ஒருமைல் நீள மிருக்குமென் றறிக.

**குழந்தைகளைத் தபாலில் அனுப்பல்.**—எல்லா ஆச்சரியங்களும் பிறக்கிற ஆச்சரிய கண்டமாகிய அமெரிக்காவிலிருந்து குழந்தைகளையுந் தபாலிலனுப்புகிற இந்த ஆச்சரிய செய்தி வருகிறது. அமெரிக்க ஐக்கியமாகாணத்தில் குழந்தைகளைப் பெற்றோர் தூரத்திலிருக்கும் பாட்டன் பாட்டிமார் பார்க்க ஆசித்தால் பிள்ளையொன்றை 10 பவுனுக்கு இன்ஷியூர் செய்து தபாலி லனுப்பிவருகிறார்கள். இதற்குத் தபால் கட்டணம் 7½ பென்ஸ்.

**லண்டனில் நிலத்தின் கிரயம்.**—சென்னையில் நிலத்தின் கிரயம் ஏறிக்கொண்டு வருவதைக் குறித்து ஆச்சரியப்படவேண்டியதில்லை. லண்டன் நகரில் அச்சுறுத்தும்விதமாய் அது உயர்ந்து வருகிறது. சேரிங்கிராவில் ஒரு துண்டு நிலம் 14 லக்ஷம் பவுனுக்கு விலைபோயிற்று. இதன்படி ஒரு சதுர அடியின் கிரயம் 32 பவுனாகிறது. லண்டன் நடுப்பட்டணத்தில் ஒரு ஏகர் 20 லக்ஷம் டவுண் விற்கிறதென்றால், அப்பட்டணத்து மண்ணும் பொன்னேவென் றெண்ணவேண்டியதாகிறது.

**அதிபூர்வ மனிதன்.** — பாரீஸில் நெவிலி என்னுமிடத்தில் நப்போலியன் என்கிற சக்கரவர்த்தியால் குழந்தையாகத் தூக்கப்பட்ட பூர்வ காலத்து மனித னொருவனிருக்கிறான். இவன் இரண்டு பிரஞ்சு சக்கரவர்த்திகளையும் மூன்று அரசர்களையும், பத்துப் பிரஜாதிபதிகளையுங் கண்டவன். இவன்காலத்தில் இருமுறை இராஜாங்க மாறுதலும் ஒரு குடிஜனக்கலகமும் நேர்ந்தது. "மனிதர்க்கு வயது நூறல்லதில்லை" யென்பது இவன்விஷயத்தில் பொய்த்ததென்றே கூறல் வேண்டும்.

**உலகில் நீளமான பாலம்.** — உலகின்கண்ணுள்ள பாலங்களெல்லாவற்றினும் பெரிதெனச் சொல்லக்கூடிய பாலமொன்று இப்போது நியூயார்க் நகரிற் கட்டப்பட்டுவருகிறது. இதன் நீளம் 15,840 அடி. தற்காலத்திற் பெரிதென்னக் கூடியது டேபிரிட்ஜ் என்கிற பாலம். இதன் நீளம் 10,780 அடிமாத்திரம். புதிதாகக் கட்டப்படுகிற ஹெல்கேட் பாலம் என்னப்படும் நியூயார்க் பாலத்துக்குச் செல்லும் செலவு 12 லக்ஷம் பவுண் என்றும், இது கட்டி முடிய 4 வருஷஞ் செல்லுமென்றுங் கூறப்படுகிறது.

**தற்கால வாலிபர்கள்.**—பிரஞ்சுப் பத்திரிகை யொன்று தற்காலத்து வாலிபர்களுக்குள் காணப்படும் நிஷிதமான குணங்களில் ஏழு குணங்களை யெண்பிக்கும்படி அப்பத்திரிகையை வாசிக்கும் பெண்பாலரைக் கேட்க, பிற்கூறிய குணங்கள் பெரும்பாலாரால் எண்பிக்கப்பட்டன. அகந்தை இதை 10,014 பேர் குறித்தனர். சோம்பலும், எல்லாந் தெரியுமென்கிற அகம்பாவமும் இவைகளைக் குறித்தவர் 7,000. அமிதஜீவியம், சூது, குடி, வரம்பற்ற விளையாட்டு இவைகளைக் குறித்தவர் 6,000. மதிக்கேடு கடையாகப் பலரால் குறிக்கப்பட்டன.

**அமெரிக்க ஆராதூரித்தனம்.**—அமெரிக்க ஐஸ்வரியவான்களின் ஆராதூரித்தனம் அளவுகடந்து போகிறதென்பதற்குப் பிற்கூறிய திருஷ்டாந்தமே சாலும். காலிபோர்னியாவின்கண்ணுள்ள மிஸிஸ் கிளாரா பால்ட்வின் என்னுஞ் சீமாட்டி தரிக்கிற கவுன் என்கிற உடையின் விலை 72 ஆயிரம் பவுண். பாதரக்ஷை வயிர மிழைத்தது. அவளுடைய தலைக்கிரீடமும் மேற்போர்வையாகிய உடையுமாத்திரம் 80 ஆயிரம் பவுண், அதாவது 12 லக்ஷம் ரூபாயென்றால் இத்தகைய வீணடம்பாத்திலும் மிஞ்சினதுண்டோவென் றெவரும் யூகித்துக் கொள்ளலாம்.

**குஷ்டரோகிகள் சம்ஹாரம்.**—சீனாவில் குவாங்ஸி என்னுமிடத்தில் நடந்த குஷ்டரோகிகள் சம்ஹாரமென்கிற ஒரு பரிதாப செய்தி வந்திருக்கிறது. குஷ்டரோகிகள் வசித்த ஒரு கிராமத்தைச் சுமார் நூறு இராணுவ வீரர் முற்றுகைபோட்டு ஆண்

பெண் பிள்ளைகளென்கிற வித்தியாசமின்றி யவர்களையெல்லாம் தங்கள் துப்பாக்கி யீட்டியாற் குத்தித் தள்ளி, ஒரு பெரிய குழியிற் போட்டுக் குவித்துக் கெரிசன் எண்ணெயை யூற்றித் துப்பாக்கி வெடிசுட்டுத் தீக்கொளுத்தி அவ்வளவுபேரையும் நீற்றிவிட்டார்களாம். மெய்நடுங்கும்படியான இக் கொடுங் கிருத்தியத்தைச் செய்த நோக்க மின்னதென விளங்கவில்லை.

**ஐரோப்பிய துருக்கி யுத்தம்.** — கக்ஷிப் பிரதிகக்ஷிக்காரர் சண்டையை நிறுத்திச் சமாதானத்துக்குரிய ஒழுங்குகளைக்குறித்துப் பேசிவருகிறார்கள். துருக்கி, ஐரோப்பா, துருக்கியில் கான்ஸ்தாந்திநோபிலாகிய தலைநகரையும், அதையடுத்த வெகு சொற்பமான பூமியையுந் தவிர மற்ற இடங்களையெல்லாம் இழந்துவிட்டது. பிடித்த இடங்களை அந்தந்த நாட்டார் அப்படியப்படியே தங்களுடையதாக்கிக்கொண்டார்கள். இந்தவிஷயத்தில் மாண்டிநிகிரோவுக்கு ஆஸ்டிரியாவும் அதன் சொல்லைக் கேட்டு ஐரோப்பிய பெரிய அரசுகளும் செய்தது அநியாயமென்றே சொல்லவேண்டும். மாசிடோனியாவைக் கிரீஸூம், தெரேசை பல்கேரியாவும் கைப்பற்றிக்கொள்ள, மாண்டி நிகிரோ பிடித்தஸ்கூடாரியை அது விடவேண்டுமென்று ஆஸ்டிரியா நிர்ப்பந்திக்க, மாண்டி நிகிரோ மிகுந்த வியாகுலத்தோடு அதை விட்டுவிட்டது. மாண்டி நிகிரோவுக்கும், செர்வியாவுக்கும் மற்றப் பாகங்களில் சில இடங்கள் கிடைக்கும். அல்பானியாவில் சுய இராஜாங்க ஏற்பாடு நடக்கிறது. இதற்கிடையில் அல்பானியாவின் மேலதிகாரம் துருக்கிக் கிருக்க வேண்டுமென்று துருக்கி பிரயத்தனப்படுகிறது. இதற்குச் சண்டைசெய்த 4 இராஜாங்கத்தாரும் விரோதமாயிருக்கிறார்கள். யுத்த நஷ்டமாக துருக்கி 60 லக்ஷம் பவுண் செலுத்தவேண்டுமென்று 4 இராஜாங்கத்தாருங் கேட்டிருக்கிறார்கள்.



கிலேனியாதேசத்து எரிமலை.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

மேலிந்தியாவில் சமணர் இருக்கும் இடங்களிலெல்லாம் மிருகங்களை வைத்துப் போஷிக்கிற தரும வைத்தியசாலை பட்டணத்திற் கொன்றுண்டு. அதைக் கவனிக்குங்கால் ஜைனர் ஜீவபிராணிகளை எவ்வளவு பயபக்தியுடன் மதிக்கின்றனர் என்பது எவர்க்கும் எளிதில் புலப்படும். கூச் மாகாணத்திலுள்ள தருமசாலையொன்றில் ஐயாயிரம் எலிகள் இவ்வாறு பராமரிக்கப்பட்டுவந்தன. புத்த சமயிகளைப்போல் சமணரும் சதுர்வேத ஆதாரத்தை மறுப்பரெனினும், "நிர்வாண" என்னும் கொள்கையை ஏற்றுக்கொள்ளார். ஆன்மா பிறவியினின்று மீட்படைந்தபின், மகாத்மாக்கள் வாசஞ்செய்யப்பெற்ற ஏதோ பதவி ஒன்றில் வைதீக ஜீவனம்செய்ய ஆரம்பிக்கின்றனவெனக் கூறுவர்.

சமணர் அநேகர் பம்பாய் ராஜதானியிலும் அதைச்சார்ந்த சிற்றரசு நாடுகளிலும் வசிக்கின்றனர். பெரும்பான்மையோர் வியாபாரிகளாயும் உண்டியல்காரராயுமிருப்பதால் இம்மதானுசாரிகள் தனவான்களென்றும் புத்திக்கூர்மையுள்ளவர்களென்றும் சில விஷயங்களில் முன்னுக்கு வந்திருக்கிறவர்களென்றுமே சொல்லவேண்டும். சமணரில் அநேகர் தங்களை இந்துக்களென்று பாராட்டி வருவதால், 1901–ஞு ஜனசங்கை மதிப்பில் அவர்களுடைய ஜனத்தொகையில் நூற்றுக் கைந்துவீதம் குறைவு காணப்பட்டது. 1911–ன் கணக்குப்படி மறுபடியும் நூற்றுக்கு ஆறுவீதம் இவர்கள் குறைந்திருக்கிறார்கள்.

4. **சீக்கியமதம்.**—சீக்கியர் மதத்தை ஸ்தாபித்ததாகப் பெயர்பெற்றுவரும் நாநுக் என்பவன் லாகூர் பட்டணத்திற்கருகில் 1469–ம் வருஷத்தில் பிறந்தான். சீக்கிய சமயமெனின், இந்து மார்க்கத்துக்கும் மகம்மதிய மார்க்கத்துக்கும் பொதுவாயுள்ள உண்மைகள் ஒருங்கு திரட்டப்பட்ட ஓர் மதமாம். ஆதியில் இந்த சமயத்திலுள்ள ஜாதிபேதத்திற்கும் விக்கிரகாராதனைக்கும் விரோதமாக இச்சமயம் ஏற்படுத்தப்பட்டது. சீக்கியர் ஒரே தேவனை வழிபடுவர். பல தேவர்களைப் பூசிப்பது தவறு என்பது அவரது கோட்பாடு. சீக்கியர் சமயம் விக்கிரகாராதனை, ஸ்தலயாத்திரை, சகுனம் பார்த்தல், மந்திரித்தல் முதலியன தப்பிதம் என்று அவற்றைக் கண்டனம் செய்கின்றது. ஜாதிபேதமுண்டென்றாவது, பிராமணர் மற்றவரைவிட மேலானோர் என்றாவது, பிறப்பு இறப்புகளில் செய்ய வேண்டிய சடங்காசாரங்களை அநுசரியாததால் தீட்டு உண்டென்றாவது சீக்கியர் சமயத்தில் ஏற்படவில்லை. நாநுக்கின் தொண்டருக்கு சீக்கியர் என்று பெயர். சீக்கியர் என்னும் பதத்திற்கு சீஷர் என்றர்த்தமாம். தம் குருக்களின்மீது பாராட்டிய வைராக்கியமே சீக்க சமயிகள் நடத்தையில் விசேஷ லட்சணம். 1538–ம் ஆண்டில் பாபா நாநுக் தேகவியோகமானான். அவனும் அவன்பின் தோன்றிய ஒன்பதுபேரும் பத்து முக்கிய குருக்களாக எண்ணப்படுகின்றனர். ராமதாஸ் என்னும் நாலாம் குரு "அமிர்த்சர்" அல்லது "அமிர்த தடாகம்" என்றழைக்கப்படும் சதுரமான பெரிய தடாகமொன்றை வாங்கி, அதன் நடுவில் பின் கீர்த்தி பெற்று விளங்கிய பொற்கோவில் ஒன்றைச் சமர்ப்பித்தான். இதுவே சீக்கியருக்கு சிரேஷ்ட கோவில். அவனது புத்திரனும் ஐந்தாவது குருவுமாகிய அர்ஜன், முதற்குரு நாநுக்கும் இன்னும் மற்ற மூன்று குருக்களும் அருளிச்செய்த பாடல்களை



சங்கிரகமாகத் திரட்டி, ஆதிகிரந்தம் அல்லது முதல் நூல் என அதற்கு நாமகரணம் சூட்டி, அதை மேற்கூறிய பொற்கோவிலில் வைத்திருந்தான். இதே சீக்கிய சமய நூல்களிலெல்லாம் சிறப்புற்றதாக வழங்கிவருகிறது. அக்கால முதல் குருபாத்தியதை தலைமுறை தத்துவமாயிற்று. பின்தோன்றிய ஐந்து குருக்களும் ஆசிரியர்போல் நடவாமல், அதிகாரிகள்போல் நடந்ததால், மொகலாய சக்கரவர்த்தி அவர்களுடைய கர்வத்தை யடக்க நேரிட்டது. ஒளரங்கசீப் சக்கரவர்த்தி பிறப்பித்த கட்டளையால் ஒன்பதாவது குரு கொல்லப்பட்டதுமன்றி, மற்ற சீக்கியரும் மதத்துவேஷ காரணமாய் துன்புறுத்தப்பட்டனர். இவ்விசேஷம் சீக்கியரது பின் சரித்திரத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. எப்படியெனில் பத்தாவது குருவாகிய குருகோவிந்தன் சீக்கியரெல்லாரையும் யுத்தத்தில் பழக்குவித்து, மகம்மதியரானாலும் சரி, இந்துக்களானாலும் சரி எவரையும் நாம் பகைப்போம் என்னும் பிரதிக்கினையையும் பண்ணச்செய்தான். சிங்கமென்றர்த்தங்கொள்ளும் 'சிங்' பட்டத்தைத் தங்கள் தங்கள் பெயருடன் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், நீண்ட ஜடையாக ரோமம் வளர்க்கவேண்டுமென்றும், தலைச்சவரமாவது, முகச்சவரமாவது செய்யக் கூடாதென்றும், தொப்பி ஒருபொழுதும் தரிக்கக்கூடாதென்றும், போஜனமருந்தும் சமயத்திலுங்கூட எடுக்காமல், எப்பொழுதும் தலைப்பாகையே தரித்துக்கொள்ளவேண்டுமென்றும், மகம்மதியருடன் ஓயா யுத்தம்புரிவதற்கு அறிகுறியாக எப்பொழுதும் வாள் கையில் வைத்திருக்கவேண்டுமென்றும், புகையிலை பரிச்சேதம் பிரயோகிக்கக் கூடாதென்றும் ஆஞ்ஞாபித்தான். (இன்னும் வரும்.)

## SCIENCE IN HINDUISM.

ஹிந்துமார்க்கத்தில் கற்பிக்கப்படுகிற

## சாஸ்திரப் பிரமாணங்கள்

அல்லது

## கல்விக்குறிப்புகளைக் குறித்தது.

(தொடர்ச்சி.)

3. மழை சந்திரனிடத்திலிருந்து வருகிறதென்றும், சந்திரனிடத்திற்குத் திரும்புகிறதென்றும், இராகு, கேது என்று இரண்டு சர்ப்பங்கள் சூரியனையும், சந்திரனையும் விழுங்குகிறதினாலே கிரகணமுண்டாகிறதென்றும், சூரியன் அக்கினியிலிருந்து உண்டானதென்றும், அக்கினி வாயுவிலிருந்து உண்டானதென்றும், மின் மழையிலிருந்து உண்டாகியதென்றும் உபநிடதங்களில் சாதிக்கப்படுகிறது. இவைகளெல்லாம் தப்பிதமான எண்ணமென்று நாம் ரூபகாரப்படுத்த வேண்டியதுண்டா? இக்காலத்தில் கல்விகளைப் பயிற்சிசெய்கிற எந்த மாணாக்கரும் இதெல்லாம் தெரியாமையாய் எழுதிப் போட்டார்களென்று நிச்சயமாய்ச் சொல்லுவார்களே.

4. ரசாயனத்தைக்குறித்து விசாரித்தாலும் அப்படியே அநேகவிதமான தப்பித சாதனங்களைக் காண்போம். ஹிந்துக்கள் இவ்விஷயத்தைப்பற்றி உபநிடதங்களில் காட்டிய முறைப்படி சகலவித சடப்பொருள்களுக்கு ஆதாரமாக ஐந்து பூதங்களுண்டாம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பனவாம். இதில் ஐந்தாவது சொல்லப்பட்ட ஆகாயமென்பது சமஸ்த பொருட்களுக்கும் இடங்கொடுக்கிற சுத்தவெளியாம். அப்படிபபட்டது மெய்யாகவே இருக்கப்பட்ட சடப்பொருள் என்பதற்கு ஒரு திருஷ்டாந்தமுமில்லை. இப்படியிருக்க, அதை ஐந்து பூதங்களில் ஒன்றாக வைக்கிறார்கள். மற்ற நான்கைக்குறித்து விசாரித்தால், அதது ஏகப்பகாப் பொருளாயிராமல், பகுபொருளாகவே இருக்கிறது. இதனுடைய சேர்க்கையை அறிவதால், ஜலத்தையும் பிரிக்கலாம், காற்றையும் பிரிக்கலாம், இவையே மூலப்பூதங்களாயிருக்குமாயின் அப்படிப் பிரிக்கக்கூடாதே.

5. உடற்கூறு சாஸ்திரத்தைப்பற்றி, கட உபநிடதத்தில் சொல்லிய ஒரு விநோதத்தைக் கவனிக்கவேண்டும். அந்தப் பிரமாணத்தை யாமா என்பவர் நச்சிகேத்தருக்குச் சொல்லுகிறார். என்னவெனில், "இரத்தப்பையிலிருந்து நூற்றொரு நாடிகள் புறப்படுவதில், அவைகளில் பிரதானமானது மூளைக்குள் செல்லுகிறது" என்கிறார். மனிதருடைய தேகங்களை நாடோறும் ஆராய்ந்து பரிசோதித்திருக்கிற பண்டிதர் யாவரும் மேற்சொல்லியது சுத்தப் பொய்யென்றும், இரத்தப்பையிலிருந்து புறப்படுகிற நாடிகள் ஏழுமாத்திரமென்றும், அவைகளில் இரண்டு நாடிகள் சிரசில் சென்று மூளைக்குள் நடுவாகச் செல்லாமல், கபாலத்தின் பக்கமாகவே சாய்ந்து செல்லுகிறதேயல்லாது, ஆத்துமா தேகத்தை விட்டுப் பிரியும்படியாக, இரத்தப்பையிலிருந்து ஏகுழலாய் மூளைக்கு நடுவாகத் தலையுச்சிக்கு நேராய்ச் செல்லுகிறதே இல்லையென்றும், சந்தேகத்துக் கிடமில்லாமல் ஒப்புவிப்பார்கள். யாமா என்பவரும் இரத்தப்பையிலிருந்து சிரசுக்குச் செல்லுகிற நாடிகள் இத்தனை என்று தெரியாவிட்டால் ஆத்துமத்தைக்குறித்து அவர் சொல்லிய விஷயங்களை நாம் நம்புவதெப்படி? ஹிந்து சாஸ்திரங்களில் சொல்லிய சொப்பனங்களைக் குறித்தும் தசவாயுகளைக்குறித்தும், கண் சிமிட்டுகிறதைக்குறித்தும், ஆத்துமாவினுடைய மூன்று சரீரங்களைக்குறித்தும், இவைபோல்வன மற்றும் அநேகவகையான விஷயங்களைக்குறித்தும், விவரித்துச் சொல்லலாம். ஆனாலும் சொன்னதே போதும், சொன்ன குறிப்புகளை எவ்வளவேனும் யோசித்துக்கொள்ளுகிறவன், ஹிந்து சாஸ்திரங்களை மெச்சிக்கொள்ள வகை காணமாட்டான். இந்த சாஸ்திரங்கள் உலகக்கல்வியால் அறியத்தக்க விஷயங்களை இவ்வளவு தப்பிதமாய்க் காட்டியிருக்குமென்றால் அதரிசன விஷயகங்ளாகிய கடவுளைக்குறித்தும், ஆத்துமத்தைக்குறித்தும், மறுமையைக்குறித்தும்சொல்லியவைகள் மெய்யென்று எப்படி நம்பலாம்? நம்புகிறதற்கு இடமே இல்லை.

(இன்னும் வரும்.)

## DEPRESSED CLASSES ELEVATION SOCIETY OF SOUTH INDIA.

## தென்னிந்தியா ஒடுக்கப்பட்டவர்கள் சங்கம்.

### நான்காம் மஹா ஜனக்கூட்டம்.

ஜூன்மீ 11, 12உ புதன், வியாழம்.

வைகாசிமீ 29, 30உகளில் தஞ்சாவூர் ஜில்லாவில் தென்னிந்தியா ஒடுக்கப்பட்டவர்கள் சங்கத்தின் மஹா ஜனக்கூட்டம் நடத்தப்படும்.

பொதுக்கூட்டத்தில் தீர்மானமாகவேண்டிய விஷயங்கள்: — (1) குடியிருப்புப் பாத்தியம், (2) ஐம்பது வருஷமாகக் கிடைக்கும் ஒரேவிதக் கூலி, (3) கி. மு. செய்யும் தண்டனை, (4) படிப்பு, (5) கிராமங்களில் பிள்ளைகளின் ஆஜர் சங்கிலை, (6) தேசாதிசெட்டி செய்யும் அநியாயம், (7) ஆதரிப்புப் பாடசாலை.

பயிர்வேலை, வண்டி, சேவகம், சமையல், பாதரக்ஷை முதலிய தொழில் செய்யும் ஒடுக்கப்பட்டவர்கள், ஜாதி, மதபேதமின்றி, மஹா ஜனக்கூட்டத்துக்கு வரலாம்.

இடம் இன்னதென்று காரியதரிசிகளுக்கு எழுதவேண்டியது.

கனதனவான்களும் மேற்படி கூட்டங்களுக்கு வந்து உதவிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொதுக்கூட்டங்கள் செலவுக்குத் தங்களால் கூடிய பணச்சகாயம்: சென்னை, வில்லிவாக்கம், ம-௱-௱-ஸ்ரீ, மா. வேதமுத்து அவர்களுக்கு அனுப்பவேண்டியது.

மஹா ஜனக்கூட்டம் நடத்தப்படப்போகும் இடம் இன்னதேன்று அறியவும். மற்ற விஷயங்களுக்கும் அடியிற்கண்ட காரியதரிசிகளுக்கு எழுதிக்கொள்ளலாம்.

நாகபட்டணம், வெளிப்பாளையம் A. சிவராமசாமி.
சிதம்பரம்........................பா. சாலொமோன்.
சீர்காழி, மணிக்கிராமம், இரங்கசாமி பண்டாரம்.
திருவள்ளூர்......பாண்டூர்.......V. D. ஸ்தேவான்.
அரக்கோணம்......திருவேலங்காடு......V. தாவீது.

11–5–13.
சீர்காழி, மாதர்வேளூர்.
தஞ்சாவூர் ஜில்லா.

V. P. ஆனந்தன்,
பிரயாண காரியதரிசி.

## THE CHARACTER OF JESUS.

## இயேசுரட்சகரின் திவ்ய குணசீலங்கள்.

இராகம், ஜிம்பை. திரிபுடைதாளம்.

பல்லவி.

ஏசு ராஜா நல்லவரே—அவர்
கேட்பதெல் லாம்தர வல்லவரே.

அநுபல்லவி.

மாசணுகாத க்ருபாகரரே—அதி
மகிமைவிளங்கும் நிறைவாகரரே—ஏசுராஜா

சரணங்கள்.

1. பொன்னக ராளுநற் பூபதியே—அவர்
பூதலத் தோர்க்குயர் அதிபதியே
மன்னுயிர்க் கானநல் குணபதியே—தினம்
மாதவர் தொழுதிடுஞ் ஸ்ரீபதியே— ஏசுராஜா
2. விண்புவி யாவையும் படைத்தவரே—அவர்
வலுசர்ப்ப மதின்தலை யுடைத்தவரே
பின்னு மலகைவாயை அடைத்தவரே—அதி
பிரபல அரணுகக் கிடைத்தவரே— ஏசுராஜா
3. பாவிகட் காய்பரம் விட்டவரே—அவர்
பாரினில் பாடுகள் பட்டவரே
மேவி தமைபலி யிட்டவரே—அதி
மேன்மை ஜெயக்கொடி நட்டவரே—ஏசுராஜா
4. பாவிதம் மிடம்வரச் சொன்னவரே— அவர்
பாரி லுள்ளவர்க்கு மன்னவரே
தாவி யடைந்தவர்க்கு விண்ணவரே—பெருந்
தாபர மானகன் மலையவரே— ஏசுராஜா
5. பாவ பாரமதை யொழிப்பவரே—அவர்
பாவிகளைக் கண்டு களிப்பவரே
ஆவலுடன் மன்னிப் பளிப்பவரே—அதி
அகமகிழ் வானநல் செழிப்பவரே— ஏசுராஜா
6. ஆதரவற் றவர்க்கனு கூலனே—அவர்
ஆறுதலளித் திடும்மனு வேலனே
பூதலமீ துற்றமரி பாலனே—அதி
புகழ்மிகும் புண்ணியகுண சீலனே—ஏசுராஜா
7. துன்பங்கள் யாவையும் தீர்ப்பவரே—அவர்
துணைபுரிந்தே தினங் காப்பவரே
பொன்னுலகி லெமைச் சேர்ப்பவரே—மிக
பூரண பலன்தரப் பார்ப்பவரே— ஏசுராஜா

தஞ்சை, J. பொன்னுசாமி,
சுவிசேஷப் பிரசங்கி.

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

(தொடர்ச்சி.)

ஸீதையின் கற்பின் திறம் பலவிடங்களில் பல விதமாக உரைத்திருக்கின்றது. ஸீதை தீக்குளித்து மீண்டவளவில் அக்னிதேவன் இராமனை நோக்கி,

அங்கியான் என்னைஇவ் வன்னை கற்பெனும்
பொங்குவெந் தீச்சுடப் பொறுக்கி லாமையால்
இங்கணைத் தேன்உறு மியற்கை நோக்கியும்
சங்கியா நிற்றியோ எவர்க்கும் சான்றுளோய்

என்றுனைக் கூறியிருப்ப தொன்று. திருவடி தொழுத படலத்தில் ஸீதையின் கற்பை விளக்கிய பல செய்யுள்களில்

விற்பெருந் தடந்தோள்வீர வீங்குநீ ரிலங்கை வெற்பின், நற்பெருந் தவத்தாளாய நங்கையைக் கண்டே னல்லேன்:, இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும், கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்

என்றது நனிநயம் பயப்ப தொன்றே. இராமதூதனை அரக்கனோ எவனோ என்றையுற்ற ஸீதை, இரக்கமே யாகவந்தெ னெம்பிரா னுமஞ் சொல்லி, [டோ உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிரிதின் உதவியுண் என்றதும் ஒன்றே. ஸீதை சிறையிருந்ததை அநுமான் கண்டதான காட்சிப்படலத்தில் மூன்று முதல் இருபத்தொன்பதுவரையில் இருபத்தேழு செய்யுள்களும் ஸீதையின் இருப்பை விளக்குவன. அவற்றில் பல கூறுகள் அவள் கற்பின் திண்மையை விளக்குவனவே. அவற்றுள் கற்பின் பாவிகத்தை, நடு நாயகமாக நின்ற

அருந்து மெல்லட காரிட அருந்துமென் றழுங்கும்; விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும், மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்; இருந்த மாநிலம் செல்லரித் திடவுமாண் டெழாதாள்

என்ற செய்யுள் நன்கு விளக்குகின்றது. இச்செய்யுளின் ஈற்றடி நாயகமணியின் ஒளியேபோலும்.

இராமனுடைய தம்பியரில் இலக்குவன் இராமனிடத்தில் பாராட்டிய அன்பின் விசேஷம், ஸுமித்ரா இலக்குவனை நோக்கி

ஆகாத தன்றால் உனக்கவ்வனம் இவ்வயோத்தி
மாகாத லிராமன் நம்மன்னவன் வையமீந்தும்
போகாத உயிர்த்தாயர் நம்பூங்குழல் சீதைஎன்றே
ஏகாய்இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்.
மகனே! இவன்பின் செல்தம்பி
என்னும் படியன் றடியாரின் ஏவல் செய்தி:
மன்னும் நகர்க்கே இவன்வந் திடின்வா அதன்றேல்
முன்னம் முடி

என்று கற்பித்த முன்னரே விளங்கிற்று. இராமனுக்கு நீர்வேட்கை தணிக்கத் தண்ணீர் கொணரச் சென்ற இலக்குவன் அயோமுகியால் சிறிதுநேரம் வரவியலாமல் காலந் தாழ்த்தபோது, இருட்டிலே தம்பியை நினைந்து புலம்புகின்ற இராமன்

என்னைத் தருமஎந் தையைஎன் னையரைப்
பொன்னைப் பொருகின் றபொலன் குழையாள்
தன்னைப் பிரிவேன் உளன்ஆ வதுதான்
உன்னைப் பிரியா தஉயிர்ப் பலவோ?

என்றுனைக் கூறியிருப்பது இலக்குவனிடத்தில் இராமனுக்குள்ள அன்பை விளக்குகின்றது.

கிட்கிந்தையில் ஸீதையின் அணிகல முடிப்பை அவிழ்த்துக் காட்டியபோது, இராமன் ஏனை அணிகலங்களை ஸீதைக் குரியவை என அடையாளக் குறிப்பறிந்து பாதசிலம்புகளை ஐயமுற்றவிடத்து, இலக்குவன் பாதசிலம்புகள் ஸீதைக்கே உரியனவென்று உறுதிகூறி ஏனையவற்றை அறியகில்லானாக இருந்தனன் என வருவது இலக்குவனுடைய நிறையை நன்குணர்த்தும். இலக்குவனுடைய உத்தமோத்தம குணம் புலப்படுவது ஓரிடத்தில். இலங்கையின் மேலைக்கோட்டை வாயிலில் இராவணன் வந்து இலக்குவனோடு போர்புரிந்து தோல்வியுறுவானாக, தனது தோல்விக்கு விபீஷணன் காரணமாதல் அறிந்து விபீஷணன்மீது ஒரு சக்தியை ப்ரயோகித்தான். அப்போது,

தோற்ப னென்னினும் புகழ்நிற்கும்: தருமமும் தொடரும்:, ஆர்ப்பர் நல்லவர். அடைக்கலம் புகுந்தவன் அழியப், பார்ப்ப தென்?நெடும் பழிவந்து தொடர்வதன் முன்னம், ஏற்பன் என்தனி மார்பினென் றிலக்குவன் எதிர்ந்தான்.

அதுகண்டு அதைத் தம்மார்பில் ஏற்றுக்கொள்ளுமாறு விபீஷணனும் அங்கதனும் சுக்ரீவனும் அநுமனும் ஒருவர்முன் ஒருவராக விரைந்து செல்லலுற்றனர். இவ்வனைவரையும் விலக்கி இலக்குவன் முந்துறச் சென்று அந்த சக்தியைத் தன் மார்பில் ஏற்றுக்கொண்டான்.

தசரதகுமாரர் நால்வருடைய குணவிசேஷமும்,

கானாள நிலமகளைக் கைவிட்டுப் போவானைக் காத்துப் பின்பு, போனானும் ஒருதம்பி. போனவர்கள் வருமவதி போயிற் றென்னா, ஆனாத உயிர்விடஎன் றமைவானும் ஒருதம்பி. அயலே நானாது, யானுமிவ் அரசாள்வன். என்னேஇவ் வரசாட்சி இனிதே யம்மா.

மன்னிற்பின் வளநகரம் புக்கிருந்து வாழ்ந்தானே பரதன் என்னும், சொன்னிற்கும் என்றஞ்சிப் புறத்திருந்தும் அருந்தவமே தொடங்கினனே, என்னிற்பின் உளனிவனு மென்றேபின் அடிமையுனக் கிருந்ததேனும், உன்னிற்பின் இருந்ததுவும் ஒருகுடைக்கீழ் இருப்பதுவும் ஒக்குமென்றான்

என்ற சத்ருக்நன் கூற்றால் விளங்கும். இவன் குணம் விளங்கும் இடம் வேறில்லை. பரதனை மெச்சாதவரும் மெச்சினர். இராமனை ஏசலுற்ற வாலி

வாய்மையு மரபுங்காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனேநீ பரதன்முன் தோன்றி னாயே

என்றான். ஸேனையை அக்கரையில் கண்டு கறுவுதலுற்ற குகன் பரதனுடைய விரத வேடத்தைக் கண்டபோது,

ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியின் அம்மா

என்று புகழ்ந்தான். கைகேசியிடமிருந்து கோசலையிடஞ் சென்று வருந்திய பரதனுடைய கருத்தையறிந்த கோசலை

முன்னை நங்குல முதல்உ ளோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?

என்றாள்: பதினான்கு வருடமுங் கழிதலுற்ற அளவில் இராமன் வந்திலனென்று தீப்பாயப் புகுதலைக் கண்டு,

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கரு காவரோ?
புண்ணி யம்எனும் நின்உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?

என்று கூறினன். சுக்ரீவன் வாலியைப் போர்க்கழைத்தது கண்ட இலக்குவன் அது அந்யாயமென்று இராமனிடம் முறையிட, இராமன்:

பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேச லாமோ?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தமன் ஆவ துண்டோ?

என்றான். இங்ஙனம் இக்குமாரிடம் விளங்குங் குணவிசேடத்தைக் காட்டினும் உலகில் ஸஹோதரர்களுக்கு ஏற்றமான பாவிகம் வேறென்ன வேண்டும்?

(இன்னும் வரும்.) T. C. M.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, Madras.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. Lazarus, Vepery, Madras.



## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னப்பட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரு. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| எக்காலக் கண்ணி ... ... ... ... ... | 0 | ½ |
| எபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 5 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர்) ... ... ... ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| „ „ பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| „ „ நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| „ ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 9 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.



### ஜூன்மீ பஞ்சாங்கம்.—

| வாரம். | ஜூன்மீ = வைகாசி—ஆனி. ⊙ பௌர்ணமி, 18உ ● அமாவாசை, 4உ | | | | | வைகாசி—ஆனி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 2 | 9 | 16 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 3 | 10 | 17 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 4 | 11 | ... |
| புதன்... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 5 | 12 | ... |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 6 | 13 | ... |
| வெள்... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 7 | 14 | ... |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 1 | 8 | 15 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR ... 1 JUL 1913 ... MADRAS.

# THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

JULY, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூலைமீ, 1913.

## THE VICEROY'S BIRTHDAY.

## பிரதிநிதியின் ஜனனோற்சவம்.

நமது பிரதிநிதியார் சுடப்பட்டும் தப்பிக்கப்பட்ட காரணத்தால் அவருக்குச் செலுத்தின காணிக்கைகள் லட்சத்தொகையானவை. இதன் வட்டியைக்கொண்டு இந்திய ஆஸ்பத்திரிப் பிள்ளைகளுக்கு அவர் பிறந்த தினமாகிய ஜூன்மீ 20உ தோறும் இனும் முதலியவை கொடுக்கத் தீர்மானமாயிற்று. அவ்வாறு சென்றமீ 20உயில் இந்திய பிள்ளைகள் எத்தனையோ கோடிப் பேருக்குப் பரிசுகளும், பலகாரங்களும் பரிமாறப்பட்டன. அன்று தேசமெங்கும் மகோற்சவம் கொண்டாடப்பட்டது.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**இந்தியாவில் பெரிய ஏரி.**—இந்தியாவிலுள்ள ஏரிகளிற் பெரியது மைசூரிலிருக்கும் மாரிக்கணவாய் ஏரியாம். இது ஜலாதாரத்துக்காக மனித முயற்சியால் வெட்டப்பட்டது. இதன் நீளம் 18 மைல். விஸ்தீரணம் 30 சதுரமைல். இதற்குச் செலவான தொகை 45 லக்ஷம் ரூபாய்.

**ஒட்டிக்கொண்டிருந்த பிள்ளைகள்.** — சீயம் நாட்டுக் கூலியாள் ஒருவனுடைய மனைவி இரட்டைப் பிள்ளைகள் பிரசவித்தாள். அவை தோளிலிருந்து இடுப்புவரையில் முதுகுபுறமாய் ஒன்றைவிட்டொன்று பிரியா தொட்டிக்கொண்டிருந்தன. பிரசவித்து ஐந்து நிமிஷத்துக்குள் மரித்துப் போயின.

**ஒரு ஜப்பானியப் பெண்.** — மிஸ் சூரோ ஆராய் என்கிற ஒரு ஜப்பானியப் பெண் நியூயார்க்கிலுள்ள கொலம்பியா சர்வகலாசாலையின் கடைசிப் பரீக்ஷையில் தேறித் தத்துவசாஸ்திர பண்டிதப் பட்டத்தைப் பெற்றாள். அவளுடைய தேசத்தில் இவள்தான் முதல்தடவையாக இந்தப் பட்டத்தைப் பெற்றாள்.

**நீண்ட பிரசங்கம்.**—ஆஸ்டிரிய டிபுடி யொருவர் மந்திராலோசனை சபையில் இரவு 8 மணிக்கு ஆரம்பித்த பிரசங்கத்தை, மறுநாள் பகல் 12 மணிவரையில் முடிக்கவில்லையாம். இடையில் சற்றும் நிறுத்தாமல் செய்த இந்தப் பிரசங்கம் ஒரு பெரிய பிரபந்தமாகக்கூடும் என்னப்படுகிறது. செய்தவரின் சாமர்த்தியம் மாத்திரமன்று, கேட்டிருந்தவர்களின் பொறுமையும் வியக்கத்தக்கதே.

**பெரிய திருகாணிகள்.** — உலகின்கண் செய்யப்பட்டிருக்கிற திருகாணிகள் எல்லாவற்றிலும் பெரியவை பென்சல்வேனியா இஞ்சினீரிங் கம்பெனியார் செய்திருக்கிறார்கள். இவை ஒவ்வொன்று 19 அடி 4 அங்குலம் நீளமும், தடித்த பாகத்தில் 29½ அங்குலம் அகலமுமுள்ளது. பிரதி ஆணியும் 3 டன் நிறையுள்ளது. மீன்களினின்று எண்ணெய் பிழிந்தெடுக்க இவ்வாணிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**வரியைக் குறைத்தல்.** — அமெரிக்க புதிய பிராஜாதிபதி வில்ஸன் துரையும் அவர் மந்திராலோசனை சபையாரும் தங்கள் தேசத்தில் ஆகாரத்துக்குரிய சாமக்கிரியைகள்மேல் விதித்திருக்கிற வரியை நீக்கிவிடத் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். இதனால் 8 கோடி டாலர் நஷ்டம் வருமாம். என்றாலும் வருமான வரியை அதிகப்படுத்தி அந்த நஷ்டத்தை நிவிர்த்திக்க முயற்சி செய்கிறார்கள். இது பொதுஜன நன்மைக்கேற்ற முயற்சியென்பதற்குத் தடையில்லை.

**அபினிமீது சீனருக்குள்ள பகை.** — அபினியைச் சீன துரைத்தனத்தார் எவ்வளவாய் வெறுக்கிறார்க ளென்பதற்குப் பிற்கூறியதே போதுமான சாக்ஷி. மேல் இயூனனில், ஜனங்களில் தலைவரும் மற்றவரும், அபினியைக் கண்டிக்கிற விஷயத்தில் இராஜாங்க இராணுவத்தார் செய்யும் கொடுமைகளைக் கண்டித்துப் பேச ஒரு கோவிலில் கூட்டங்கூடியிருக்கையில், இராஜாங்க இராணுவத்தார் அந்தக் கோவிலை வளைந்து அதற்குத் தீயிட்டு உள்ளிருந்த ஜனங்களை உயிரோடே தகனித்துவிட்டார்கள்.

**கடவுளுக்கு அனுப்பிய கடிதம்.** — ஜெர்மன் பாஷையி லெழுதப்பட்டு "மோக்ஷத்திலிருக்கிற எனதன்புள்ள கடவுளுக்குச் சேர்வது" என்று விலாச மெழுதப்பட்டிருந்த ஒரு கடிதம் ரஷிய போஸ்டாபீஸ் ஒன்றில் காணப்பட, அது அந்தப் போஸ்ட் மாஸ்டரால் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டது. ஜெர்மன் போஸ்ட் மாஸ்டர் அக்கடிதத்தின்மேல் "இந்த விலாசத்தார் மோக்ஷத்திலிருக்கிறார்; அந்த இடத்துக்கும் நமக்கும் கடிதப்போக்குவரவு கிடையாது" என்றெழுதித் திருப்பியனுப்பிவிட்டார்.

**நோக்காடில்லாத துப்பாக்கி குண்டு.**—அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் நோக்காடுதராத துப்பாக்கி குண்டு செய்து பரீக்ஷித்தார்கள். இந்தக் குண்டுக்குள் கொஞ்சம் வச்சைநாபி வைத்திருக்கிறபடியால், இது ஒரு வீரன்மேல் பட்டமாத்திரத்தில் தூக்கத்தை வருவித்து நோக்காடு தெரியாதபடி செய்துவிடுகிறதாம். மரணகாயம் படுமானால், நோய் தெரியாமலே அவன் மரித்துப்போவானும். உயிரை வாங்கும்போதும் தயாளத்தோடு உயிர் வாங்குவது நாகரீககாலத்தின் விசேஷம்போலும்.

**ஒரு சிறு பையனுக்குக் கிடைத்த பரிசு.** — ஐக்கிய மாகாணத்தின் மேல்பக்கத்தில் வசித்துக்கொண்டிருந்த பென்ஜமன் கார்ட் என்ற ஒரு சிறுவன் ஒரு நூதனமான எலி பிடிக்கும் கண்ணி ஒன்றைக் கண்டுபிடித்தான். அதன் மூலமாய் யுத்தக் கப்பல்களில் மனுஷர்களுக்கு அதிக தொந்தரவைக் கொடுத்துக்கொண்டிருந்த அநேகக் கணக்கான எலிகளை, சங்கரித்ததாகக் கருதப்படுகிறது. இதற்காக அந்தப் பையனுக்கு மூன்று லக்ஷம் ரூபாய் துரைத்தனத்தாரால் வெகுமதி கொடுக்கப்பட்டது. அச்சிறுவன் இன்னும் ஒரு உயர்தரப் பாடசாலையில் படித்துக்கொண்டுவருகிறான்.

**வங்காளத்தில் இராஜ கலகம்.** — வங்காளத்தைப் பிரித்ததே கலகத்துக்குக் காரணமென்றும், அதை யொன்றுபடுத்திவிட்டபிறகு கலக மற்றுப் போமென்றும் சொன்னது உண்மையல்லவென்றேறபட்டது. தற்காலத்தில் வங்காளத்தில் பலவிடங்களில் கொள்ளைகள் நடக்கின்றன. இவைகளிற் பெரும்பாலானவை இராஜ துரோகிகளால் நடக்கிறதாய்த் தோன்றுகிறது. தவிர, சமீபத்தில் பாரிஸால் என்னுமிடத்தில் இரகசிய சபையைச் சேர்ந்த 44 பேர் பிடிபட்டிருக்கிறார்கள். இவர்கள் இராணுவ வீரர்களைத் தூண்டித்தேச கலகத்தையெழுப்ப முயற்சித்ததாக ஆதாரங்கள் கிடைத்திருக்கி

றது. இவர்களுடைய விசாரணையில் பல நூதன விஷயங்கள் வெளியாக ஏதுவுண்டு.

**கடமையை நிறைவேற்றுவதால் உண்டான பலன்.** — இப்பத்திரிகையை வாசிக்கிற நமது நேயர்கள் எல்லாருக்கும் சில காலத்திற்கு முந்தி டிட்டானிக் என்கிற ஒரு பெரிய நீராவிக்கப்பல் முழுகி ஆயிரத்துக்கு மேலான ஜனங்கள் மாண்டார்கள் என்கிற சங்கதியைப்பற்றி ஞாபகமிருக்கும். அந்தச் சமையத்தில் இன்னொரு கப்பலிலிருந்த ஒரு காப்டன் அவர்களுக்கு உதவிசெய்யும்படி போய் அநேகரை இரட்சித்தான். அவன்மூலமாய் ரட்சிக்கப்பட்டவர்கள் தங்கள் நன்றியறிதலைக் காட்டும்படி ஒரு அழகான கோப்பையை இனாமாகக் கொடுத்தார்கள். இதுவுமல்லாமல் உதவிசெய்ய வந்த அந்தக் கப்பல்காரர் எல்லாருக்கும் ஒவ்வொரு மெடலை இனாமாகக் கொடுத்தார்கள்.

**யுத்த முடிவு.** — ஐரோப்பிய துருக்கி யுத்தம் முடிவாய்விட்டது. மே மாதக் கடைசியில் சமாதான உடன்படிக்கை யேற்படுத்திக் கக்ஷிக்காரர் கையெழுத்துப் போட்டுவிட்டார்கள். இந்தச் சமாதான ஏற்பாட்டுக்குப் பெரும்பாலும் பிரிட்டிஷ் துரைத்தனத்தாரின் முயற்சியே காரணம். ஆகையால் கொடுமையான உயிர்ச்சேதமுள்ள இந்த யுத்தம் முடிவடையக் காரணமாயிருந்த பிரிட்டிஷ் இராஜாங்கத்தாருக்குச் சகலரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். யுத்தம் முடிவடைந்தாலும், செர்வியா கிரீஸ் முதலிய யுத்தஞ்செய்த கக்ஷியாருக்குப் போதுமான திருப்திகர மேற்படாதபடியால் அவர்கள் மறுபடியும் யுத்தஞ்செய்யத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். இதையும் மத்தியஸ்தர்கள் ஒழுங்கு செய்வார்களென்று நம்புகிறோம்.



நேப்பில்ஸ் குடாக்கடல்.

## KOHINOOR.

## கோஹிநூர் என்கிற விலைமதியாத வயிரம்.

கோஹிநூர் என்று சொல்லப்படுகிற இந்த விலைமதியாத வயிரம், பூர்வீக காலத்தில் அரசர்கள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்து ஜெயம் பெற்ற அரசர்களுக்கு தேவர்களால் பரிசளிக்கப்பட்டதென்று பாரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிறது. இந்தச் சிறந்த வயிரக்கல்லுக்கு உற்பத்தி இந்தியா தேசம்தான். இந்த வயிரம் பூர்வீக அரசர்களின் கையில் கிடைத்தபோது, தலைமுறைச் சொத்தாகப் பிள்ளைகளின் பிள்ளைகள் படிப்படியாய் அநுபவியாமல் கைமாறிப் பலர் கைக்குப் போனது. கோஹிநூர் என்கிற இந்த வயிரக்கல் விலைமதியாததும், அதிக உயர்வையுடையதாயு மிருந்தபடியால் பற்பல அரசர்கள் இதை அபகரிக்க ஆசைப்பட்டு, இந்த வயிரத்தை வைத்துக்கொண்டிருக்கிறவனோடு யுத்தம் செய்தாவது, அல்லது கொன்றுபோட்டாவது, அல்லது திருட்டுத்தனமாகவாவது இப்பொருளை அபகரித்துப் போனார்கள். இப்பொருளின் நிமித்தியம் அநேகர் தங்கள் உயிரையும் இழந்தார்கள். இவ்விதமாக அப்பொருள் ஹிந்து ராஜாக்களுடைய காலத்தில் ஒருவருடைய கையிலிருந்து இன்னொருவருடைய கைக்குப் பலாத்காரமாய் வந்துகொண்டேயிருந்தது. இப்படியிருக்கையில் அல்லாவுதீன் என்றொரு மகபதிய அரசன் இந்தியாவின்மேல் படையெடுத்து கொள்ளை அடித்தபோது, இந்த வயிரக்கல் அவனுடைய கைக்குப் போனது, பிறகு படிப்படியாய் இந்தப் பொருள் மொகல் அரசர்களிடம் டில்லியில் இருந்தது. கடைசியாய் இந்தியாதேசத்தில் வெகு காலமாக இருந்துகொண்டிருந்த இந்த வயிரக்கல் பெர்ஷியா தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. அதற்குக் காரணம் எப்படி என்றால், பெர்ஷியாதேசத்து அரசனாகிய நாதர்ஷா என்கிறவன், இந்தியாதேசத்தின் ஐசுவரியத்தையும், டில்லி ராஜ அரண்மனையிலுள்ள மயில்வாகன சிம்ஹாசனம் பல விலையுயர்ந்த கற்களையுடையதா யிருக்கிறதையும் கேள்விப்பட்டு, இந்தியாவுக்கு வந்து, மொகல் ஜாதியாருக்கு விரோதமாக எழும்பி, அங்குள்ள விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு போனான். ஆனால் கோஹிநூர் என்று சொல்லப்படுகிற கல் தன் கைக்குக் கிடைக்க வில்லையென்று அதிக விசனப்பட்டு, அதை எப்படியாகிலும் உபாயத்தினால் சம்பாதிக்கவேண்டுமென்று யோசித்துக்கொண்டிருந்த சமையத்தில், அந்த வயிரக்கல்லைப்பற்றிய சங்கதி இவனுடைய காதுக்கு எட்டினது. அதாவது, டில்லி அரசன், அந்த வயிரக்கல்லை எப்போதும் தன் தலைப்பாகையில் ஒளித்துவைத்திருக்கிறான் என்று நாதர்ஷா கேள்விப்பட்டான். அதனாலே அந்த வயிரத்தைச் சம்பாதிக்கும்படி டில்லி அரசனிடம் அதிக நேசமுள்ளவனைப்போல் மாரீசம் பண்ணி, அவனுடைய வீட்டிற்கு விருந்துண்ணும்படி போனான். அப்பொழுது டில்லி அரசன் அவனுக்குப் பயந்தபடியால் அவனை அதிக பட்சமாய் ஏற்றுக்கொண்டு கடைசியாய் நாதர்ஷாவை வழிவிட்டனுப்புகிற சமையத்தில், நாதர்ஷா டில்லி



அரசனுடைய தலைப்பாகைக்குள் கோஹிநூர் வையிரம் இருக்கிறதென்று முன்னமே அறிந்திருந்தபடியால், டில்லி அரசனைப் பார்த்து: தான் அவன் பேரில் அன்புள்ளவனாய் இருக்கிறதாக அதை விளக்கும்படி தன் தலைப்பாகையை டில்லி அரசனுக்கும், அவனுடையதை நாதர்ஷாவுக்கும் கொடுக்கும்படி கேட்டான். இப்படி நாதர்ஷா கேட்டதினால் டில்லி அரசன் அப்படித் தன் தலைப்பாகையைக் கொடுக்க விருப்பமற்றவனாய் இருந்தபோதிலும், அப்படிக் கொடாவிட்டால், ராஜமுறைமைக்கு அழகாகக் காணப்படாதென்று மரியாதைக்குப் பயந்ததினால், அவன் ஒன்றும் பேசாமல் நாதர்ஷாவுக்குத் தன் தலைப்பாகையைக் கொடுத்துவிட்டான். இவ்விதமாய்ப் பெர்ஷியாதேசத்து அரசனாகிய நாதர்ஷா தந்திரமாய் இந்த வயிரக்கல்லை அபகரித்துக்கொண்டு போய்விட்டான். இவ்விதமாய் இந்தக் கல் பெர்ஷியாதேசத்து அரசர்களிடம் சிலகாலம் இருந்தது.

நாதர்ஷா காலஞ்சென்ற பிறகு அந்தக் குடும்பத்திலிருந்து ஒருவன் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய ஆதீனத்தில் இந்த வயிரக்கல் இருந்தது. இப்படியிருக்கையில் இவனுடைய தம்பி ஒருவன், அண்ணனைக் கொன்றுபோட்டுத் தான் பட்டத்திற்கு வரவேண்டுமென்ற நோக்கமுடையவனா யிருந்தபடியால், இவன் தன் ராஜ்யத்தை விட்டுத் தம்பிக்குப் பயந்து ஓடிப்போனான். இவன் இப்படி ஓடிப்போகும்போது இந்த வயிரக்கல்லையும் தன்னோடு எடுத்துக்கொண்டு போனான். இந்தக் கல்லை இவனுடைய் கையிலிருந்து எடுத்துக்கொள்ளும்படி எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் இவன் அந்தப் பொருள் என்னிடம் இல்லை என்று ஒரேசாதனையாய்ச் சொல்லிவிட்டு, அந்த வயிரத்தைச் சுவரில் ஒரு பள்ளம் செய்து புதைத்துவைத்திருந்தான். அதன்பிறகு எப்படியோ இவன் புதைத்துவைத்த இடம் இவனுடைய இன்னொரு தம்பியினால் கண்டுபிடிக்கப்பட்டு, அவன் அதை எடுத்துக்கொண்டு காஷ்மீர் தேசத்துக்கு ஓடிப்போனான். இந்த வயிரத்தை இவனுடைய கையிலிருந்து பிடுங்கும்படி பெர்ஷியா அரசன் பிரயத்தனப்பட்டபோது, இந்த மனுஷன் காஷ்மீர் அரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அப்போது காஷ்மீர் அரசனாகிய ரஞ்சித்சிங் இவனுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாதிருக்கும்படி உதவிசெய்தான்.

கடைசியாய்க் காஷ்மீர் அரசன் இவனோடு நயநயப்பான வார்த்தைகளைப் பேசி மெதுவாய் அவன் கையிலிருந்த கல்லை அபகரித்துக் கொண்டான். அதன்பிறகு இந்த வயிரம் ரஞ்சித்சிங் என்கிற அரசனுடைய கையில்தான் இருந்தது. அவன் இந்த வயிரத்தைப்பற்றிப் பல தினங்களாய்ப் பற்பலவிதமாய் யோசிக்கலானான். அதாவது இந்தக் கல் தேவர்கள் மூலமாய் அரசர்களுடைய கைக்கு வந்து மூவாயிரம் வருஷமாகிறது. இந்தக் காலங்களில் இந்தப் பொருள் எத்தனையோ பேர் கையில் மாறிமாறி வந்தது. இது யார் யார் கைக்குப் போனதோ அவர்கள் எல்லாரும் ஈனதசையடைந்துபோனார்கள். ஆகையால் இது நம்முடைய கையிலிருந்தால் சாபமாய் இருக்கும் என்று நினைத்தான். அதன்பிறகு ரஞ்சித்சிங் மரணப்படுக்கையில் விழுந்தபோது அவன் தன் மந்திரி பிரதானிகளை அழைத்து, 'நான் மரணமடைந்தபிறகு இந்த வயிரத்தை அரண்மனையில் வைக்கக்கூடாது. இதைப் பூரி ஜெகநாத் கோவிலிலுள்ள விக்கிரகத்திற்குக் கொடுத்துவிடும்படி சொன்னான். ஆனால் அவர்கள் ரஞ்சித்சிங் சொன்னபடி செய்யவில்லை. அதன்பிறகு அந்தப் பொருள் டலீப்சிங் கைக்கு வந்தது. 1849–ம் வருஷத்தில், குவீன் விக்டோரியா அரசியாரின்காலத்தில் இந்த வயிரம் லண்டன் பட்டணத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. சர் ஜான் லாரன்ஸ் கவர்னர் ஜெனரல் மூலமாய்க் குவீன் விக்டோரியா அரசிக்குக் கொடுக்கும்படி டலீப்சிங் கொடுத்துவிட்டான். டலீப்சிங் கையிலிருந்து சர் ஜான் லாரன்ஸ் வாங்கும்போது பலாத்காரமாயாவது, சண்டைபோட்டாவது வாங்காமல், டலீப்சிங் தன் மனோராஜியாய்க் கொடுத்தான். சர் ஜான் லாரன்ஸ்மூலமாய்க் குவீன் விக்டோரியாவுக்குக்கொடுத்தபோது, அந்த அரசி அதைத்தன் கிரீடத்தில் வைத்துக்கொண்டார்கள். சர் ஜான் லாரன்ஸ் என்கிறவர் இந்த வயிரத்தை டலீப்சிங்கையிலிருந்து வாங்கி அவர் தன் சட்டைப்பையில் போட்டுவைத்தார். அந்தச் சட்டையைக் கழற்றிவைத்து அந்தக் கல்லை வெகுநாளாக மறந்துபோனார். பிறகு இந்தக் கல்லைப்பற்றிய பேச்சு வந்தவுடன் தன் ஞாபகத்துக்குவந்து உடனே பல இடங்களில் தேடியும் அகப்படாமல் அதிக துக்கத்தோடிருக்கும்போது, அவருடைய வேலைக்காரன் ஒருவன் வந்து அவர் தேடுவது என்ன என்று விசாரித்தான். அப்போது அவனுக்குச் சொன்னவுடனே அந்தக் கிளாஸ்துண்டா? அதோ அது என்னிடத்திலிருக்கிறது என்று அதைக் கொண்டுவந்து தன் எஜமானனிடத்தில் கொடுத்தான். அவர் அதன்பிறகுதான் அதைக் குவீன் விக்டோரியா அரசிக்குக் கொடுத்தார்.

1849–ம் வருஷம் பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் பஞ்சாபை எடுத்துக்கொண்டபிறகு அதை அரசாண்டுகொண்டிருந்த டலீப்சிங் என்றவனுக்கு வருஷம் எட்டு லக்ஷம் ரூபாய் பென்ஷன் கொடுத்தார்கள். அதனாலேயே அவன் அதிக சந்தோஷத்தோடு மேற்படி வயிரத்தை சர் ஜான் லாரன்விடம் கொடுத்தான்.

அநேக ஹிந்து ராஜாக்கள், இந்த வயிரம் தேவர்களால் கொடுக்கப்பட்டதென்றும், இந்த வயிரம் யாருடைய கைக்குப் போகிறதோ அந்த இடம் விர்த்தியடையாதபடிக்குச் சாபமுள்ளதென்றும் பயந்திருந்தார்கள். அப்படி நினைக்கவும் பயப்படவும் வேண்டியதில்லை. ஆனால் ஒரு காரியம்மாத்திரம் தெரிந்த விஷயம். அதாவது, இந்த வயிரத்தை ஒருவர் கையிலிருந்து ஒருவர் திருட்டளவாய் வஞ்சித்து அபகரித்துக்கொண்டே வந்தபடியால், ஒவ்வொருவருடைய கையிலும் ஞாயமான வழியில் வரவில்லை. அதினிமித்தியம் அந்தப் பொருள் சாபமாயிருந்ததென்று சொல்லலாமேயொழிய மற்றப்படி அந்த வயிரத்தை வீட்டில் வைப்பதால் சாபம் வராது. இப்போது பிரிட்டிஷ் ராஜ அரண்மனையில் அந்த வயிரம் இருக்கிறது. அது அவர்களுக்கு ஒரு சாபமாய் இருக்கிறதில்லை.

இதைப்போன்ற இன்னொரு வயிரம் ருஷியா தேசத்து அரசனிடமிருக்கிறது. இந்த வயிரம், கோஹிநூர் வயிரத்தின் ஜோடி என்றும், இதை ஐரிஷ் வியாபாரி இந்தியாவிலிருந்துகொண்டுருஷியாவுக்கு விற்றுப்போட்டதாக எண்ணப்படுகிறது. ஆகக்கூடி இவ்வயிரங்கள் முன் இருந்த அளவிற்குக் குறைந்துகொண்டேவருகிறது. பலருடைய கைக்கு இந்த வயிரம் போனபோது அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் ஆபரணம் செய்ய யோசித்தபோது அதைக் கொஞ்சம்கொஞ்சமாகத் தறித்தபடியால் இடை குறைந்துகொண்டே வந்திருக்கிறது. இதிலிருந்து நாம் ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். அதாவது உலகத்திலே நாம் எவ்வளவு விலையுயர்ந்த பொருளை உடையவர்களாயிருந்தாலும், அவைகள் உலகத்தோடே முடிவுபெறுகிறது. உலகப்பொருள் எல்லாம் இரவல். அவைகள் ஒருவன் கையிலிருந்து இன்னொருவன் கைக்குச் செல்லுகிறதாயிருக்கிறது. ஆகையால் அழிந்துபோகிற அல்லது நம்மை விட்டுப்போகிற பொருள்பேரில் கவனம்வையாமல் என்றும் அழியாத ஆத்ம ஜீவனைப்பற்றிச் சிந்தையுடையவர்களாயிருந்து அதைப் பெற்றுக்கொள்ளப் பிரயாசப்படவேண்டும்.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

குருகோவிந்தன் இரண்டாவது கிரந்தம் என்னப்பட்ட புத்தகத்தை யெழுதி ஆதி கிரந்தத்துடன் சேர்த்தான். இரண்டாவது கிரந்தத்தில் யுத்தாபேக்ஷைகளுள்ள பாடல்கள் அநேகமுள. ஆதி கிரந்தத்திலோ அப்படியில்லாமல் சமாதானத்தையும் சாந்தத்தையும் குறிக்கும் பாடல்கள்மாத்திரமே உண்டு. 1764–ம் வருஷத்தில் பஞ்சாபு முழுவதையும் சீக்கியர் ஜெயித்து அங்கு சுய அரசாட்சி நடத்திவந்தனர். 1848–ம் ஆண்டில் ஆங்கிலேயர் பஞ்சாபை தம் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டனர்.

சீக்கியர் விக்கிரகங்களை ஆராதிப்பதில்லையெனினும், அமிர்த்சர் நகர் கோவிலிலுள்ள ஆகம கிரந்தத்தை உண்மையாகவே ஜீவனுள்ள ஓர் தெய்வமாகப் பாவித்துவருகின்றனர் என்று சொல்லலாம். நாடோறும் விடியற்காலம் விலையுயர்ந்த பட்டாடை யொன்றை அதற்கு உடுத்தி மணிபதித்தமைக்கப்பெற்ற ஓர் விதானத்தின்கீழ் சிங்காசனத்தின்மீது பயபக்தியுடன் அதை வைப்பர். இவ்விதானம் அமைக்க ரூ. 50,000 சென்றதாகப் பிரஸ்தாபம். பகல் முப்பது நாழிகையும் இவ்வாகமத்திற்கு வெண்சாமரம் வீசி, சாயங்காலமானவுடன் மற்றொரு ஆலயத்துக்கு எடுத்துக்கொண்டு போய் அங்கு அசுத்த கைகள் அதில் பட்டுவிடாதபடி அளிப்பாய்ச்சிய திருமண்டப மொன்றில் பொற்கட்டிலின்மீது கிடத்துவர்.

தற்காலத்தில் சீக்கியர் அநேகர் தம் சமயக்கோட்பாட்டிற்கு மாறாக "வர்ணபேதம்," பார்க்கவும், பூணூல்தரிக்கவும், இந்து விழாக்களைக்கொண்டாடவும், இந்துக்கோவில்களிலுள்ள விக்கிரகங்களுக்குக் காணிக்கைகள் சமர்ப்பிக்கவும்கூட தலைப்பட்டிருக்கின்றனர். ஒருவன் சீக்கியனா அல்லவா என்று கண்டுபிடிக்க வேண்டுமெனின், அவன்மீது சவரகன்கத்தி பட்டிருக்கிறதாவென்றும், அவன் புகையிலை உபயோகிக்கிறானோவென்றும் அறிந்து தீர்க்கவேண்டுமென்று 1891–ம் ஆண்டு கானிஷ்மாரி கணக்குப் புஸ்தகத்தில் கண்டிருக்கிறது. ஏனெனில், புகையிலை உபயோகிக்கவும், முகச்சவரமாவது தலைச்சவரமாவது செய்துகொள்ளவுங் கூடாதென்ற கட்டளையைத்தான் சீக்கியர் மகா திட்பநுட்பமாய் அனுஷ்டித்துவந்தார்கள். இப்பொழுதோ, தங்கள் முடியைக் கத்தரித்துக்கொள்ளும் "மூனா சீக்கியர்" என்ற வோர் வகுப்பாரும் எழும்பியிருக்கின்றனர். தற்காலத்தில் சீக்கியர் அநேகர் தங்களை இந்துசமயிகளில் ஒரு கிளையாகப் பாவிக்கவும் குருகோவிந்தனால் விதிக்கப்பட்ட மத அடையாளங்களை அனுசரியாமல் தவிர்த்துவிடவும் தலைப்பட்டிருக்கின்றனர். என்றாலும், 1901–ம் வருஷத்து ஜனசங்கை மதிப்பில் சீக்கியர் நூற்றுக்குப் பதினைந்துவீதம் அதிகரித்திருந்தார்கள். 1911–ன் கணக்கைப் பார்த்தாலோ, நூற்றுக்கு இருபத்தேழுவீதம் சீக்கியர் பெருகியிருப்பதாகத் தெரிகிறது.

"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடுந் தொழுதுகொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாய் இருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" (யோவான், 4. 23.). ஆண்டவர் தம்மைத் தொழுதுகொள்ளுவதற்காக தொண்டர்களைத் தேடுகிறார். நாம் அவரின் உடன் வேலைக்காரர். கர்த்தரைத் தடவியாகிலும், கண்டுபிடிக்கத்தக்கதாகத் தேடிக்கொண்டிருக்கும் இக்கோடாகோடி மானிடருள் சிலர் அவருக்கு மெய்த்

தொண்டராக வேண்டுமென்று கர்த்தர் தேடுகிறார். அவருடன் சேர்ந்து நாமும் அவர்களைத் தேடுகிறோமா? "வழியும் சத்தியமும் ஜீவனுமான" அவரை நம் சுயதேசத்தவர் அறிவது அத்தியந்தாவசியமே. அவர்கள்மேல் மனதுருகி அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோமா? (இன்னும் வரும்.)

## CHRIST'S NAMES IN THE BIBLE.

கிறிஸ்துவுக்கு

## வேதத்திலுள்ள பற்பல நாமதேயங்கள்பேரில் கும்மி.

1. கர்த்தன் கிறிஸ் திறைவனுக்கு வேதத்தில்
காணப்படும் பல பேர்களதை
சித்த மகிழ்ந்துநற் கும்மியாகச் சேர்த்து
சீராகப் பாடுவோம் ஞானப்பெண்ணே.

2. அத்தன் அடைக்கல முமதி சயமும்
அன்பின் அதிபதி யானவராம்
சுத்த அபிஷேகம் பண்ணப்பட் டவராம்
சித்த மகிழ்ந்திடு ஞானப்பெண்ணே.

3. அப்போஸ்தலன் அன்பர் அஸ்திபாரம் இவர்
ஆதாம் ஆசாரியர் ஆதிஆகும்
செப்பரும் ஆண்டவர் ஆலோச னைக்காரர்
சீர்மிகும் ஆஸ்தியாம் ஞானப்பெண்ணே.

4. மேசியா மேய்ப்பர் வயித்தியர் வார்த்தையாம்
மேன்மை விடிவெள்ளி வாசல்வழி
காசினி யில்விசு வாசக்கர்த்தன் இதை
கண்டறிந்து பாரு ஞானப்பெண்ணே.

5. மத்தியஸ்தர் மணவாளர் மனுஷர், நல்
மீகாவேல் மீட்பர் முடிமூலைக்கல்
பத்தன் மனுஷ குமாரர் பரிசுத்தர்
பாலகன் ஆனவர் ஞானப்பெண்ணே.

6. பாவநா சர்பரி மளம்பலி பணி
பாக்கிய முள்ளான் பிணையாளன்
தேவனு டைய குமாரர் நீதிபரர்
தேவபலன் ஞானம் ஞானப்பெண்ணே.

7. நித்தியன் நித்திய ஜீவன் நீண்டாயுளர்
நீடிய சாந்தன் மகிமையுள்ளார்
சுத்திக ரிப்போன் சுயாதிபதி செங்கோல்
சேனபதி தங்கம் ஞானப்பெண்ணே.

8. தாவீது மைந்தன் தலைவன் தேவாலயம்
தேவ சோதுபன் தேவசுவு
மேவிடு நீதியின் சூரியன் நம்பிக்கை
மேலான தாபரம் ஞானப்பெண்ணே.

9. தீவினை யற்றேன் நல் தீர்க்கதரிசியாம்
தீரன் பிரதான ஆசாரியன்
பாவிகளின் நல் சிநேகிதன் போக்கிஷம்
பண்புள்ள போதகர் ஞானப்பெண்ணே.

10. நியாயா திபதி நியாய நெறியாளர்
நித்திய பிதா பிரபுதேவன்
சேயோவா ஜீவ விருக்ஷம் ஜீவஅப்பம்
ஜீவன் சுதந்தரன் ஞானப்பெண்ணே.

11. இம்மானுவேல் இசரவேல் ஏசு ராஜா
இரட்சகன் ஊற்று இரக்கமுள்ளோன்
நம்மையாளுங் கர்த்தன் கன்மலை கண்காணி
நற்சபைத் தலைவர் ஞானப்பெண்ணே.

12. சாலமோன் சாக்ஷி சிருஷ்டிகன் கேடயம்
சர்வ வியாபி காரியக்காரர்
ஞாலமிதில் ஒளி ஏணி எருசலேம்
நாயகன் கிறிஸ்து ஞானப்பெண்ணே.

13. சத்தியம் சர்வ வல்லோன் கிருபையுள்ளார்
சர்வஞ்ஞர் வார்த்தையும் ஆனவராம்
உத்தம உன்னத மானேன் தூதன்தானும்
உவந்து போற்றிடு ஞானப்பெண்ணே.

தஞ்சை: J. பொன்னுசாமி,
சுவிசேஷ பிரசங்கி.

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

(தொடர்ச்சி.)

இராமன் குகனிடம்கொண்ட நட்பின் திறம், வனம் புகுமுன் தம்மோடு உடன் வருவதாக வருந்தி வேண்டிய குகனை நோக்கி

முன்புளம் ஒருநால்வேம் முடிவுள தெனவுன்று
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளர்ஆனோம்

என்றதனால் விளங்கும். அனுமன் வந்தபோது அசோகவனத்தில் புலம்பியிருந்த வீதை

ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிஉன் தம்பிநீ
தோழன் நங்கை கொழுந்தி எனச்சொன்ன
ஆழி நண்பினை உன்னி அழுங்குவாள்

என்றது அதற்குற்ற ஸாக்ஷி. சுக்ரீபனோடும் விபீஷணனோடும் கொண்ட நட்பு வேறு திறத்தது.

**ஸந்தர்ப்பத்துக் கேற்ற சந்தம்.** — கம்பரிடத்தில் மற்றொரு விசேடம் உண்டு. அவர் நடையானது ஸந்தர்ப்பத்திற் கேற்றவாறாக கம்பீரமும் இன்னோசையும் மிடுக்கும் தளர்ச்சியும் உடையதாயிருப்பது. ஸந்தோஷசெய்தி உரைக்குமிடத்தில் சந்தத்திற்கேற்பக் கூத்தாடவுங்கூடும். வ்யஸனமான செய்தி உரைக்குமிடத்தில், படிக்கின்றவன் பாட்டைப் பரபரப்பாக படிக்கப் புகுந்தாலும், அந்தப் பாடல்கள் பரபரப்பாக நாவிலே உழல்வதில்லை. கதாநாயகன் அழுகின்ற இடத்தில் கதையைப் படிக்கின்றவனும் அழுவான்; அவன் களிக்கின்ற இடத்தில் இவனும் களிப்பெய்துவான். இது கவிவல்லோர்க்கு மாத்ரமே கைவந்த மர்மம்; எல்லார்க்கும் இது செய்ய இயலாது.

**கம்பநும் வால்மீகியும்.**—இங்ஙனமாகக் கம்பராமாயணத்தின் அழகுகளையும் நயங்களையும் எடுத்துக்காட்டுவது எப்படிப்பட்டவர்களுக்கும் இலகுவான காரியம் அல்ல. அழகு நிறைந்திருக்கின்ற இடத்திலே தனித்தனியான கூறுகளின் அழகை எடுத்துக்காட்ட இயலுமோ? ஆனாலும், கம்ப ராமாயணம் வால்மீகி ராமாயணத்தின் ஆதாரவைக் கொண்டு பாடினதுதானே: இதற்கென்ன ஏற்றமுண்டு எனச் சிலர் கூறுவர். இரண்டையும் படித்துப் பார்த்தவர்களே இதற்கு ஸமாதானம் கூறத் தகுந்தவர்கள். கால்ட்வெல் என்னும் அத்யக்ஷர் "ஹோமருடைய இலியட்டுக்கும் போப்பினுடைய இலியட்டுக்கும் என்ன பேதமோ, அதே பேதம் வால்மீகி ராமாயணத்துக்கும் கம்ப ராமாயணத்துக்கும் உண்டு" எனச் செப்பியிருக்கிறார். பௌவர் என்னும் அத்யக்ஷர் "நாம் வால்மீகி ராமாயணத்தையும் படித்திருக்கிறோம்; கம்ப ராமாயணத்தையும் படித்திருக்கிறோம் வால்மீகி முனிவர், விரிவாய்க் கூறுகின்றவராயினும் விளங்கக் கூறுகின்றவர்; கம்பர், சில இடங்களில் சுருங்கக் கூறுகின்றவராயினும் சில இடங்களில் விஸ்தாரமாய்க் கூறுகின்றவர். இன்பந் தருவனவான சொற்போக்குகளும் அலங்காரமான கற்பனைகளும் ஆங்காங்கு விசேஷமாயிருக்கின்றன. ஆயினும், வால்மீகியை வியந்து கூறுவதோ கம்பனையே உவந்து கூறுவதோ எனத் துணிதல் கூடாமல் இடர்ப்பட்டோம்" என்றெழுதியிருக்கிறார்.

(இன்னும் வரும்.) T. C. M.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager,
Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரு. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| " " பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| " " நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| " ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாசரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### ஜூலை பஞ்சாங்கம்.—

| வாரம். | ஜூலை = ஆனி—ஆடி. ⊙ பௌர்ணமி, 18உ ● அமாவாசை, 4உ | | | | | ஆனி—ஆடி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 30 | 5 | 12 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 31 | 6 | 13 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 32 | 7 | 14 |
| புதன்... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 1 | 8 | 15 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 2 | 9 | 16 |
| வெள்... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 3 | 10 | ... |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 4 | 11 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட ஒரு வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு வருஷத்துக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

AUGUST, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. ஆகஸ்ற்றுமீ, 1913.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**பெரிய முட்டை.** — உவேர் என்னுமிடத்தில் ஒரு பெட்டைக்கோழி யிட்ட முட்டையின் சுற்றளவு 9½ அங்குலம். நிறை 7 அவுன்ஸ். இது பிரிட்டிஷ் மியூஜியத்துக் கனுப்பப்பட்டிருக்கிறது.

**தேனீக்கள் ரெயில்வண்டியை நிறுத்தினது.**— நெட்டாலில் ஒரு கூட்டம் தேனீக்கள் வந்து ஸ்டேஷனிலிருந்தவர்களையும், ரெயில்வே ஊழியர்களையும் கொடுக்கினால் கொட்டி உபத்திரவப்படுத்தினதால் எல்லாரும் ஸ்டேஷனைவிட்டு ஓடிப்போக வண்டிகள் அந்தந்த இடத்தில் நின்றுபோயின.

**நூதன உலோகம்.** — "கனடியம்" என்னும் நூதன உலோகமொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது வெள்ளியைப்போன்ற வெண்ணிறமும் பளபளப்புமுள்ளதா யிருக்கிறதென்றும், இலேசாயுமிருக்கக் கூடியதென்றுஞ் சொல்லப்படுகிறது.

**நூதன சூரிய கடிகாரம்.** — லண்டனில் லைப்குரோவர் என்கிற விற்பன்ன ரொருவர், நூதன விதமான சூரிய கடிகாரமொன்று நிருமாணித்திருக்கிறார். இது மணிக்கணக்கைக் காட்டுவதன்றிச் சூரியோதயம், சூரியாஸ்தமனம், அதன் மூடம், அதன் இராசிப்பிரவேசம் இவைகளின் திட்டமான காலத்தையுங் காண்பிக்கின்றதாம்.

**காகிதப் பீரங்கிகள்.**—ஜெர்மனியில் காகிதத்தால் பீரங்கி செய்கிறார்கள் காலாட்படைகளுக்கு இந்தப் பீரங்கிகள் செய்யப்படுகின்றன. பீரங்கிகளை இழுக்கும் வண்டிகள் கிடையாதிருக்கும்போது ஒவ்வொரு வீரனும் இலகுவாய்த் தன்னோடு கொண்டுபோவதற் கேதுவாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் குழல் குறுக்களவு இரண்டங்குலம்.

**பிள்ளைகளே பெரிய விளையாட்டு.** — நமது காருண்ய மகாராணி மேரி பெருமாட்டியாரை நோக்கி அவரது குமாரத்தி பிரின்செஸ் மேரி, "அம்மா, விளையாட்டுப் பொருட்களில்லாமல் நீங்கள் எவ்வாறிருக்கிறீர்கள்?" என்று கேட்டபொழுது "பெற்றோருக்கு அவர்களுடைய பிள்ளைகளே அருமையான விளையாட்டுகள்" என்று சொன்னார்களாம்.

**குடிக்குக் காரணமென்ன?** — அநேகம்பேர் குடியராகிறதற்குக் காரணம், அவர்கள் வீடுகளில் சரியானபடி பதார்த்தங்களைச் சமைக்காததே காரணமென்றும், குடியை நிறுத்தவேண்டுமானால் அது ஸ்திரீகளால்தான் ஆகவேண்டுமென்றும் டாக்டர் மேரி மர்டாக் என்கிற லேடி டாக்டர் அபிப்பிராயப்படுகிறாள். மனைவிகள் இதைக் கவனிக்க வேண்டும்.

**லண்டன் டாக்டர்களும், மதுபானமும்.**—பர்மிங்காம் டாக்டர்கள் 57 பேர் கூடி ஒரு விளம்பரம் பிறப்பித்திருக்கிறார்கள். அதிலே மதுபானமானது கிஞ்சித்தும் நன்மை பிறப்பிக்கிறதில்லையென்றும், அநேகமாய் அதிகமான தீமையை விளைக்கிறதென்றும், ஆகையால் மதுபானம் அருந்தும் கொடிய வழக்கத்தை முற்றுந் துறந்து, மயக்கந்தராதமற்றப் பானங்களை அருந்துவது நலமென்றும் தெளிவா யெடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

**உன்னத மாளிகை.**—நியுயார்க் நகரில் உவிட்வொர்த் மாளிகையென்று மிக வுன்னதமான மாளிகையொன்று இப்போது கட்டி முடிந்திருக்கிறது. அதற்கு 50 தளங்களுண்டு. உயரம் 758 அடி. அது கட்டப்பட்ட நிலத்தின் கிரயம் 10 லக்ஷம் பவுன். கட்டிடத்தின் செலவு 17 லக்ஷத்து 50 ஆயிரம் பவுன். வருஷவாரி வரக்கூடிய வாடகை 5 லக்ஷம் பவுன். முதல் வைத்துக் கட்டினவர்களுக்கு நூற்றுக்கு 20 லாபம் கிடைக்குமாம்.

**மனுஷரா, குரங்குகளா?** — பெர்லின் பட்டணத்தில் இரண்டு குரங்குகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவைகள் மனுஷரைப்போலவே சகல நடவடிக்கைகளும் நடத்துகின்றன. உடையணியவும், களையவும், டைப் ரைற்றரில் எழுதவும், சுலபமான வார்த்தைகளால் பேசும் நான்கு பாஷைகளை யறிந்துகொள்ளவும், மற்றவர்களோடு உட்கார்ந்து சிறிதும் வழுவின்றிப் புசிக்கவும், திராணியுடையவைகளா யிருக்கின்றன. இவை ஆபிரிக்கா காடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட வாலில்லாக் குரங்குகள்.

**பாண்டிக் கோலக்கேஸ்.**—தன் மருமகளைக் கொலைபுரிந்ததற் குடந்தையாயிருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, தஞ்சாவூர் செஷன் ஜட்ஜால் தூக்குத்தண்டனை விதிக்கப்பெற்ற வேலாயுதம்பிள்ளை, இங்கிலாந்தில் மகாராஜாவுடைய பிரிவிகவுன்ஸலுக்கு அப்பீல்செய்துகொள்ள, அந்தக் கவுன்ஸலார் சாக்ஷியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, குற்றவாளியைத் தூக்கிற் போடுவதற்கான குற்றம் போதுமானபடி ருஜுவாகவில்லையென் றபிப்பிராயப்பட்டுத் தண்டனையை ரத்துசெய்து குற்றவாளியை விடுதலைசெய்துவிடத் தீர்ப்புச்செய்தார்கள்.

**சட்டிக்குள்ளடங்கின சித்திரக்குள்ளி.**—பிரான்ஸில் ஒரு ஹோட்டலில் ஒரு விருந்து நடந்தபொழுது, விருந்தாளிகள் மேஜையில் விசேஷ பதார்த்தமடங்கின ஒரு சட்டி கொண்டுவரப்பட்டது. அச்சட்டியை மூடியிருந்த வஸ்துவை நீக்கி யுள்ளிருந்த பதார்த்தத்தை யெடுத்துச் சாப்பிடப்போகையில், அங்குள்ளோரனைவருந் திடுக்கிடும்படி சட்டிக்குள்ளிருந்து ஒரு சித்திரக்குள்ளி குதித்தெழும்பிச் சபையாரை வணங்கினாள். அவள் அலங்காரமா யுடுத்தியுமிருந்தாள். அவளுடைய உயரம் 23 அங்குலம்; நிறை 12 பவுண். உலகத்திலுள்ள குள்ளரில் இவளே சிறியவளென்னப்படுகிறது.

**பணப்பித்துக்கொண்ட பாதகன்.** — பிராங்க்போர்ட் போலீஸார் கார்ல்ஆப் என்கிற ஒரு பணப்பித்துக்கொண்ட பாதகனைப் பிடித்துக் கைதுசெய்திருக்கிறார்கள். இவன் பண ஆசையினாலே, தன்னுடைய தாயார், முறையே மூன்று மனைவிகள், நான்கு பிள்ளைகளை விஷம் வைத்துக் கொன்றான். அவர்களில் தனித்தனி ஒவ்வொருவர்பேராலும் இன்ஷூரன்ஸ் கம்பெனியில் பெருந்தொகைக்குப் பணங்கட்டி அவர்களை விஷம் வைத்துக் கொன்று பணத்தை யபகரித்துவந்தான். கடைசியில் மூன்றாம் மனைவியைக் கொல்ல யத்தனித்தபோது "பலநாட்கள்ள னொருநாள் அகப்படுவான்" என்றபடி யகப்பட்டுக்கொண்டான். ஒருவனைக் கெடுத்து ஒருவன் வாழ்ந்தது கிடையாது. "பண ஆசை சகல பாவங்களுக்கும் வேர்."

**இந்தியாவில் வியாபாரம்.**—சென்ற வருஷத்தில் இந்தியாவில் உண்டான ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களில் கிடைத்த லாபம், ஜெர்மன், ஐக்கிய

மாகாணம், கிரேட்பிரிட்டன் என்கிற இந்த விசேஷித்த பட்டணங்களைவிட அதிகமாய்க் கிடைத்தது. இதனுலே இந்தியாவில் வியாபாரவிஷயமாய் வைக்கப்பட்டிருக்கிறதொகை மற்றதேசங்களைவிட அதிகம் என்றல்ல. இந்தியாவில் சொற்பத்தொகையைக்கொண்டு செய்த வியாபாரத்தில், மற்ற தேசங்களைவிட நல்ல லாபம் கிடைத்தது என்பதுதான். இந்தியாவில் இறக்குமதியின் ஒரு பொருளால் ஜனங்களுடைய பழக்கம் மாறிவிட்டதாகக் காணப்படுகிறது. அதாவது இத்தேசத்தில் சாதாரணமாக வழங்கப்படுகிற பித்தளைச்சாமான்களுக்குப்பதிலாக அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியான எனுமல் பீங்கான் சாமான்களை உபயோகிக்கிறுர்கள். அதினுல் இந்தியாவில் கொஞ்சம் கொஞ்சமாய் வீடுகளில் பித்தளைச் சாமான்களின் உபயோகம் குறைந்துகொண்டுவருகிறது. இன்னொரு விஷயத்தில் கூட இந்தியா தேசத்தில் ஒரு பழக்கம் குறைந்துவிட்டதென்று சொல்லலாம். விசேஷமாய் விளக்குகள் இறக்குமதியாகிறபடியால் முன்னே உபயோகித்துக்கொண்டிருந்த விளக்குகளையெல்லாம் நிறுத்திவிட்டுக் கிரோசின் எண்ணெய் விளக்குகளை விசேஷமாய் உபயோகிக்கிறுர்கள். இன்னும் கொஞ்சநாளைக்குள் இந்தியாவில் சமையல் செய்கிறதற்குத் தக்க விளக்குகள் கொண்டுவரப்படும் என்று எண்ணப்படுகிறது. அதனுலே, வறட்டி உபயோகம் எடுபட்டுப்போகும். இப்படி வறட்டி உபயோகம் எடுபட்டுப்போவதால், அவைகளையெல்லாம் எருவாக உபயோகப்படுத்தும்போது நிலங்கள் செழிப்பாகி அதிக தானியங்களைக் கொடுக்கும்.



வெசுவியஸ் தீமலை.

## TOES USED AS FINGERS.

## கைவிரல்களால் வேலைசெய்கிறது போலவே கால்விரல்களாலும் வேலைசெய்தல்.

அமெரிக்கா தேசத்தில் சில வருஷங்களுக்கு முன்னே ஒரு சிறு பெண் நெருப்பினுல் அதிகமாய் வெந்துபோனுள். அச்சிறு பெண்ணுக்கு நெருப்பினுல் அதிகக் காயம் உண்டானபடியால் அவள் பிழைப்பாளோ என்கிற பயம் அதிகமாய் இருந்தது. கடைசியாக அவளைச் சிகிச்சை செய்யும்போது, அவளுடைய இரண்டு கைகளையும் எடுத்துவிட நேரிட்டது. இரண்டு கைகள் என்று சொல்லும்போது முழங்கையிலிருந்தல்ல, தோளிலிருந்து இரண்டு கைகளையும் எடுக்க நேரிட்டது. இப்போது அந்தச் சிறுபெண் ஒருபெரிய ஸ்திரீயாக இருக்கிறுள். அவள் இப்போது பாதைவழியாய் உட்கார்ந்துகொண்டு பிச்சை எடுக்கிறுள் என்று நீ நினைக்கிறுயா? அல்லது அவளுக்கு அந்த இரண்டு கைகளும் இல்லாமையால் உபயோகமற்றவளாய் இருக்கக்கூடும் என்று நினைக்கிறுயா? இல்லை, இல்லை. அநாத பிள்ளைகளுக்கும் முடவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஓர் பள்ளிக்கூடத்திற்கு அந்த ஸ்திரீ பணவிஷயமான காரியதரிசியாக இருக்கிறுள். இப்படிப்பட்ட வேலையை அவள் எடுத்துச் செய்வதால், தன் கணக்கு முதலானவைகளைச் சரியாய்ப் பதிவு செய்ய அதிக எழுத்துவேலை உண்டு. இரண்டு கைகளும் இல்லாத ஒரு ஆள் பேனவை எடுத்து எழுதக்கூடுமோ? ஆனுல் இந்த ஸ்திரீயால் அப்படி எழுத முடியும். இந்த அம்மாளுடைய பெயர் கிட்டி சிமித். இவள் நெருப்பினுல் வெந்து, அந்தப் பயங்கரப்படத்தக்க காயங்களிலிருந்து சொஸ்தமாக்கப்பட்டபிறகு ஒருநாள், அவள் தனக்கு அறிமுகமானவர்களின் மூலமாய், "கையால் வேலை செய்வதுபோலவே, பழக்கினுல் காலாலும் செய்யக்கூடும்" என்கிற விஷயத்தைக் கேள்விப்பட்டிருந்தாள். இவள் கேட்ட இந்த விஷயம் அவள் மனதில் ஆழ்ந்தவிதமாய்ப் பதிந்துகொண்டது. ஆகையால் அவள் கேட்டுச் சும்மாவிராதபடி உடனே அவள் தன் பாதங்களால் பொருட்களை எடுக்கவும், பிடுங்கவும் அப்பியாசஞ் செய்தாள். இந்தியாவின் ஜனங்களில் கைகள் இருக்கிறவர்கள்கூட இவ்விதமாய்த் தங்கள் பாதங்களால் பொருட்களை எடுக்கவும் பிடுங்கவும் செய்கிறுர்கள். அவர்கள் தங்கள் தலையின்பேரில் சாமான்களைத் தூக்கிக்கொண்டு போகும்போது, எதாவது ஒரு வஸ்துவை எடுக்கவாவது, பிடுங்கவாவது வேண்டுமானுல், குனிந்து செய்ய முடியாது. ஆகையால் பாதத்தாலேயே சாமர்த்தியமாய் எடுக்கவும் பிடுங்கவும் கற்றிருக்கிறுர்கள். அதுபோலவே கிட்டி சிமித் என்பவளும் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பழகிச் சாமர்த்தியமுள்ளவளானுள். அவள் எவ்விதமாய் இப்பழக்கத்தில் தேர்ந்துகொண்டாள் என்பதைப் பற்றி நீ இப்பொழுது சுளுவாய் அறிந்துகொள்ளக்கூடும்.

கிட்டி சிமித் என்பவள் தன் பாதத்தை அதிகமாய்ப் பழக்கி அப்பியாசித்துவந்தாள். அதனுலே அவள் ஒரு வருஷத்திற்குள்ளாகத் தன் பாதத்தால் நன்றுய் எழுதும்படி கற்றுக்கொண்டாள். அதோடு



கூடக் கொஞ்சம் தைக்கவும் கற்றுக்கொண்டாள். இவைகளிலெல்லாம் சித்தியடைந்தவளவே சித்திரப்படமு மெழுதவேண்டுமென்று ஆரம்பித்தாள். அநேக மணிநேரங்களாகப் பேனவைத் தன் பாதவிரல்கள் மத்தியில் வைத்துக்கொண்டு, கறுப்பு மையினுல் சித்திரமெழுதுவாள். அதன்பிறகு அச்சு எழுத்து அடிக்கிற (Type Writer) வேலையைக் கற்றுக்கொள்ளப் பிரயாசப்பட்டாள். சில மாதத்திற்குள்ளாக அதிக துரிதமாய்க் கடிதத்தின்மேல் அச்சு எழுத்துக்களை அடிக்கக் கற்றுக்கொண்டாள். இப்போது அவள் அதிக துரிதமாய் அடிக்கிறதைப் பார்க்கிற மற்றவர்கள் பொருமைப்படுவார்கள். இரண்டு கைகளுள்ளவர்கள்கூட அவளுக்கு மிஞ்சி அடிக்க முடியாது. அவள் அந்த அச்சுகளை அடிக்கும்போது, சாதாரணமான நாற்காலியைவிடச் சற்று உயரமான நாற்காலியின்மேல் உட்கார்ந்து டைப் ரைட்டிங்பெட்டியைக் காலண்டை வைத்து அழுத்தமாய்ப் பிடித்துக்கொண்டு, கால்விரலாலேயே அதிக சாமர்த்தியமாயும் விரைவாகவும் அச்சுகளை அடிப்பாள். பியானு (Piano,) என்கிற கின்னரத்தைக்கூடக் கொஞ்சம் வாசிக்கமுடியும். அவள் அதை வாசிக்கும்போது படிகள் வைத்திருக்கிற ஒரு ஏணியின்மேல் உட்கார்ந்துகொண்டு கின்னரத்தைக் கால்விரல்கள் படும்படி வைத்துக்கொண்டு விரல்களால் அழுத்தி வாசிப்பாள்.

கிட்டி சிமித் அம்மாள் ஆயுதங்களைத் தன் பாதங்களால் எடுத்து, மரச்சாமான் வேலைகளைக்கூட வெகு நேர்த்தியாய்ச்செய்வாள். கைகளையுடைய ஸ்திரீகள் செய்யக்கூடாதவிதமாய், சிமித் அம்மாள் பாதத்தாலேயே வாளைப் பிடித்துப் பலகைகளை அறுப்பாள். சுத்தியைப் பிடித்து ஆணியை மரத்தில் அடிப்பாள். அவள் தன் சாமர்த்தியத்தினுல் புஸ்தகங்கள் வைக்கத் தட்டுகளையும், நாற்காலிகளையும், மேஜைகளையும் செய்வாள். அவைகளையெல்லாம் அவள் பார்த்து, "நான் செய்த அநேக பொருட்களைவிட, இந்தச் சாமான்களைச் செய்தபடியால், நான் அதிக பெருமையாய் இருக்கிறேன்" என்று அடிக்கடி சொல்லுவாள். ஒருவேளை இப்படிப்பட்ட சாமான்களைச் செய்யக்கூடியவர்கள் வெகு சொற்ப ஸ்திரீகள்மட்டும் உண்டு. இந்த ஸ்திரீயோ இரண்டு கைகளும் இல்லாமல், செய்த இச்சாமான்களைப் பற்றிப் பெருமைப்பட வேண்டியதாய் அப்படிச் சொல்லியிருக்கக்கூடும்.

இரண்டு கைகளும் இல்லாத ஒரு ஆள் எப்படி சாப்பிடக்கூடும்? நிச்சயமாகவே யாராகிலும் ஒரு ஆள் ஊட்டவேண்டும். ஆனுல் இந்த அம்மாளுக்கு அப்படி யாரும் ஊட்டுகிறதில்லை. இந்தப் பேர்போன ஸ்திரீ தானே சாப்பிட்டுக்கொள்வாள். அவள் ஒரு மேஜை அண்டை உட்கார்ந்துகொண்டு சாதாரணமான பீங்கானிலேதான் சாப்பிடுகிறுள். அவள் எப்படி எடுத்துச் சாப்பிடுகிறுள் என்று நான் திட்டமாய்ச் சொல்ல முடியாது. அவள் ஒரு மேஜையண்டை உட்கார்ந்துகொண்டு தனக்குமுன் வைத்திருக்கிற ஆகாரத்தைச் சாப்பிடும்படி தயாராய் உட்கார்ந்துகொண்டிருக்கிற பாவனையைக் காட்டுகிற ஒரு படத்தைமட்டும் பார்த்திருக்கிறேன்.

"நான் என் சிநேகிதர் இனத்தாருக்குப் பாரமாய் இராதபடி, எனக்குரியதை நானே சம்பாதித்துக் கொள்ளவும், எனக்கு நானே உதவிசெய்துகொள்ளவும் தீர்மானஞ் செய்துகொண்டேன்" என்று அடிக்கடி சொல்லுவாள். "அதினிமித்தமே, இந்த முடப் பிள்ளைகளுக்கு உதவிசெய்ய நான் வேலை செய்கிறேன், நான் அவர்களுக்குச் சரியானபிரகாரம் என்னுடைய அநுதாபத்தைக் காட்டி, அவர்களும் என்னைப்போலவே மற்றவர்கள்பேரில் எப்போதும் சார்ந்திராதபடி தங்களுக்குரியவைகளைச் சம்பாதித்துக்கொள்ளத்தக்க விஷயங்களை அவர்களுக்குக்கற்றுக்கொடுக்கிறதில் உதவிசெய்கிறேன். இதனுலே அவர்கள், அதாவது அங்குள்ள ஆண்களும், பெண்களும், தங்கள் சொந்த மரியாதையை இழந்துபோகாதபடி, காத்துக்கொள்ளுவார்கள்" என்று அந்தம்மாள் சொல்லுவாள்.

## HIS GREAT TREASURE.

## பெரிய பொக்கிஷம்.

ஒருநாள் ஒரு இடைப்பையன் நேர்த்தியான பசும்புற்களும், புஷ்பங்களும் நிறைந்த ஒரு காட்டில் தன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான்; அந்தச் சமயம் அந்தப் பையன் அதிக சந்தோஷமாய் இருந்தபடியால், அக்காட்டிலுள்ள குன்றுகளும் எதிரொலிக்கத்தக்கவிதமாய் அதிக உரத்த சத்தமாய்ப்பாடிக்கொண்டிருந்தான். அந்தநாள் காலையில் அந்த ஊரை ஆளும் ராஜன் வேட்டைக்காக அந்தக் காட்டுக்குள் பிரவேசித்தான். அப்போது அந்த ராஜன், அந்தப் பையன் அவ்வளவு சந்தோஷமாய்ப்பாடிக்கொண்டிருப்பதைக்கண்டு, ஆச்சரியப்பட்டு, அப்பையனிடம் போய், "ஓ பையா! நீ என் அவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறுய்?" என்று கேட்டான். அதற்கு அந்தப் பையன், "நான் என் சந்தோஷமாய் இருக்கக்கூடாது, எங்கள் ஊரையாளும் ராஜன் என்னைப்பார்க்கிலும் ஐசுவரியமுள்ளவரல்லவே" என்று பையன் மறுமொழி கூறினுன். அதற்கு அந்த ராஜன் அப்பையனைப் பார்த்து, அப்படியா? நீ ராஜனைப்பார்க்கிலும் ஐசுவரியமுள்ளவனுனுல், உன் கைஇருப்பு என்ன என்று கேட்டான். அதற்கு அந்த ஆடுகளை மேய்க்கும் பையன், ராஜனைப் பார்த்துச் சொன்னதாவது: "தன் ஒளிக்கிரணங்களை வீசி, பிரகாசமாய்ச் சுவாலிக்கிற இந்த சூரியன் எனக்குப் பிரகாசத்தைக் கொடுக்கிறதைப் போலவே ராஜனுக்கும் கொடுக்கிறது. அம்மலையின்மேல் மலருகிற புஷ்பங்களும், இப்பள்ளத்தாக்கிலுள்ள பசும்புற்களும், என் கண்களைக்கவர்ந்து என்னை மகிழச்செய்கிறபடியே ராஜனையும் செய்விக்கிறது. எனக்குக் கடவுள் சிருஷ்டித்துக்கொடுத்த இந்தக் கைகளுக்குப் பதிலாக லக்ஷம் பவுண் கொடுத்தாலும் நான் வாங்கமாட்டேன். என்னுடைய இரண்டு அழகான கண்களும், உலகத்திலுள்ள வயிரக்கற்களைப்பார்க்கிலும் விலையுயர்ந்ததாயிருக்கிறது. நான் சாப்பிட எனக்குப் போதுமான ஆகாரமும், உடுக்க உடையுமிருக்கிறது. அப்படியிருக்க, நானும் ராஜனைப்போல் சமானமான ஐசுவரியமுள்ளவனல்லவா" என்று அந்தப் பையன் அரசனைப் பார்த்துச் சொன்னுன்.

அதற்கு அரசன், "நீ சொன்னது சரி, ஆனுல் உன்னிடத்திலுள்ள ஒரு விசேஷித்த பொக்கிஷம் என்னவென்றுல், அது உன் மனதில் உள்ள திருப்திகரம்தான். ஆகையால் அதை இழந்துபோகாதே. அந்தப் பொக்கிஷத்தை எப்போதும் உன் மனதில் வைத்தால், நீ எப்போதும் சந்தோஷமாய் இருப்பாய்" என்று அந்த அரசன் அப்பையனைப் பார்த்துப் புன்னகையோடு சொன்னுன்.

## PHYSICAL EXERCISE AND HEALTH.

## தேக அப்பியாசத்தினுல் உண்டாகும் சுகம்.

ஐம்பது வருஷத்திற்குமுந்திப் பெங்கால்தேசத்துப் புருஷர்களுக்குத் தேக அப்பியாசஞ் செய்கிற வழக்கம் கிடையாது என்று பெரும்பாலும் சொல்லப்படுகிறது. "நிற்கிறதைப்பார்க்கிலும் உட்காருகிறதும், நடக்கிறதைப்பார்க்கிலும் நிற்கிறதும் நல்லதென்றும், ஓடுவது அதிக வெறுப்பானதென்றும்" அத்தேசத்தாருக்குள்ளிருந்த எண்ணம் என்றதாக ஒருவர் சொல்லுகிறுர். இப்பொழுது அப்படிப்பட்ட பழைய எண்ணங்களெல்லாம் மாறிவிட்டது. சிலநாட்களுக்கு முந்தித்தான் பெங்காளி புட்பால் டீம் (Foot ball Team) ஐச் சேர்ந்த சில பெங்காளி வாலிபர்கள், ஐரோப்பிய புட்பால் டீம் உடன் விளையாடி ஜெயித்துக்கொண்டார்கள். இந்தியர்களுடைய க்ஷேமத்தை விரும்புகிற ஒவ்வொருவருக்கும் பெங்காளிகளுக்குள் இவ்விதமாய் உண்டாயிருக்கிற தேர்ச்சியைப்பற்றி அதிக சந்தோஷம். நிற்கிறதைப்பார்க்கிலும், உட்கார்ந்துகொண்டிருப்பதையும், நடக்கிறதைப்பார்க்கிலும் நின்றுகொண்டிருப்பதையும் விரும்பி, ஓடுகிறதைச் சுத்தமாய் வெறுக்கிற அப்படிப்பட்ட ஜனங்கள், தங்கள் ஜீவியகாலத்தில் எந்த ஜாதியாரையும் ஜெயிக்கத் தகுதியற்றவர்களாயிருக்கிறுர்கள். ஆகையால் இந்தப் பெங்காளி வாலிபர்கள் தேகத்திற்குச் சுகத்தைக் கொடுக்கக்கூடிய புட்பால் விளையாட்டைக் கற்றுக்கொள்ளுகிறதைப்பற்றி அறிந்து அதிக சந்தோஷப்படுகிறும்.

புருஷர்கள் தங்கள் சுகத்தை நாடித் தேக அப்பியாசஞ்செய்யக்கற்றுக்கொண்டபோதிலும் ஸ்திரீகளோவென்றுல் அதைப்பற்றி மிகவும் பிந்தினவர்களாயிருக்கிறுர்கள். வீட்டைவிட்டு வெளியே போகாத ஸ்திரீகள் எத்தனைபேரோ, வீட்டில் சமையல் முதலான சுலபமான வேலைகளைச் செய்துவிட்டுச் சும்மாவிருக்கிற ஸ்திரீகள் எத்தனைபேரோ, சும்மா தாழ்வாரத்தில் உட்கார்ந்து அல்லது படுக்கையிலே படுத்துப்புரண்டு அல்லது சோம்பலாய் வீணைவார்த்தைகளை அலப்பிக்கொண்டிருக்கிற ஸ்திரீகள் எத்தனைபேரோ, பின்னும் கவைக்குதவாத சில புஸ்தகங்களை வாசித்துக் காலம் கழிக்கிற ஸ்திரீகள் எத்தனைபேரோ உண்டு. என்னுடைய பெங்காளி சிநேகிதர்களை நான் அடிக்கடி காணும்போதெல்லாம் அவர்களுடைய சுகவீனத்தைப்பற்றிப் பலமுறையும் முறையிட்டிருக்கிறுர்கள். அவர்கள் தங்களுடைய பலத்தை விர்த்திசெய்ய யாதொரு அஸ்திபாரமற்றவர்களைப்போல் காணப்படுகிறுர்கள். அவர்கள் தங்களுடைய சுகத்தைக் கோரி மருந்து சாப்பிடுகிறுர்கள். சில சமயங்களில் மந்திரங்களை உபயோகித்துத் தங்கள் தேவர்களுக்குப் பொருத்தனை செய்கிறுர்கள். ஆனுல் சுகத்திற்கு அத்தியாவசியமானது சுத்த ஆகாயமும், தேக அப்பியாசமும்தான், பிள்ளைகள் ஓடித் திரிந்து விளையாடக்கூடும். அதனுலே அவர்கள் சாதாரணமாய்ச் சுகமுள்ளவர்களாயிருக்கிறுர்கள். ஸ்திரீகளோ அடைக்கப்பட்டிருக்கிறுர்கள். இருட்டாகிறதற்கு முன்னே வெளியே உலாவக் கூடாதவர்களுமாயிருக்கிறுர்கள். இதுவுமல்லாமல், ஸ்திரீகள் எந்தவிதமான சுறுசுறுப்புள்ள விளையாட்டிலும் சேரக்கூடாது. ஏனென்றுல், அப்படிப்பட்ட விளையாட்டில் சேரும்போது வெளியே வர நேரிடுகிறது. அப்படியானுல் அதற்குச் சிகிச்சை என்ன? ஸ்திரீகள் வெளியே போகாமலேயே அவர்கள் தேக அப்பியாசஞ் செய்ய நிச்சயமாய் விரும்பினுல் அப்படியே செய்யக்கூடும். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் அநேகவிதமான அப்பியாசங்களையும்தேகமுயற்சிகளையும்செய்கிறுர்கள். அப்படிப்பட்ட அப்பியாசங்களைத் தினந்தோறும் செய்தால் தேகத்தைச் சுகமாய் வைத்துக்கொள்ளக்கூடும். மிகவும் லேசான ஒரு அப்பியாசம் என்னவென்றுல், நேராய் நின்றுகொண்டு இரண்டு கைகளையும் பக்கத்தில் தொங்கவைப்பதுதான். அதன்பிறகு கையை மாற்றிமாற்றி இடுப்புவரையிலும் குனிந்து முழங்காலைத் தொடுவது. இவ்விதமாய் ஒவ்வொரு கையாலும் ஆறுதரம் செய்யவேண்டும். அதன்பிறகு நேராய் நின்றுகொண்டு, ஒரு காலைத் தூக்கி, எவ்வளவு உயரம் உயர்த்தக்கூடுமோ அவ்வளவு உயரம் உயர்த்தி ஆறுதரம் காலை மாற்றி வீசவேண்டும். தினந்தோறும் இப்படிப்பட்ட அப்பியாசத்தை ஒருதடவை செய்துகொண்டுவந்தால் அதிக நன்மை உண்டாகும்.

இன்னொரு விசேஷித்த அப்பியாசம் எதுவென்றால், மூச்சை மெதுவாய் உள்ளுக்கு இழுத்து, அதன்பிறகு கொஞ்சநேரம் அடக்கி பிறகு அந்த மூச்சை மூக்கின் மூலமாய்ச் சீக்கிரம் விடவேண்டும். இந்தவித அப்பியாசத்தைச் சுத்தமான வெளி ஆகாயத்தில் செய்யவேண்டும். வேறுவிதமான அநேக அப்பியாசங்களைச் செய்யலாம். இவைகளைத் தினந்தோறும் செய்வதினால், தேக சுகத்திற்கு அநேக நன்மையை உண்டாக்கும்.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

5. **ஆவேச வணக்கம்.**—இந்துதேசத்தின் பூர்வ குடிகளான மலைவாசிகள் அநுசரிக்கும் மதத்திற்கு **ஆவேச வணக்கம்** என்று பெயர். இவர்கள் ஆத்துமா உண்டென்றும் மறுமை உண்டென்றும் ஒப்புக்கொள்ளுவார்கள். சகல நன்மைக்கும் தீமைக்கும் ஒவ்வோர் தேவர் தேவதைகளைக் குறிப்பிடுவார்கள். இன்னும் அநேக பேய் பிசாசுக்களும் உண்டென்று நம்பி பயந்து அவைகளைச் சாந்தி செய்ய முயற்சிப்பார்கள். கிராமங்களிலுள்ள இந்துக்களில் பல ஜாதியாருங்கூட பேய்க்குக் கொடுத்து, பேயாட்டம் ஆடி, பற்பல ரோஹங்களுக்கு பற்பல அம்மன்களைக் குறிப்பிட்டு, இவைகளைத் தூரத்தும் வழக்கத்தை யாவரும் கவனித்திருக்கலாம். இவ்வித ஆசாரங்கள் இப்பூர்வ ஆவேச வணக்கத்திலிருந்தே வந்தவைகளென்பது சாஸ்திரிகளின் பொது அபிப்பிராயம்.

ஆவேச வணக்கத்தின் பூரண கோட்பாடுகளை மிச்சல் சாஸ்திரியார் பின்வருமாறு கூறுகிறார் "ஆவேச வணக்கத்தார்:

1. எல்லாவற்றிற்கும் மேலான கடவுள் ஒருவர் உண்டென்று ஒப்புக்கொள்வார்கள். ஆகிலும்,
2. அநேக பேய் பிசாசுக்கள் உண்டென்றும், இவைகளனைத்தும் குரூர சித்தமுடையவைகளென்றும் நம்புவார்கள். அவைகளைச் சாந்தி செய்யும்படி அவைகளுக்குக் கொடை கொடுப்பார்கள்.
3. இவ்வாறு சாந்தி செய்யும்படி கொடுக்கும் கொடைகளில் எவ்விதமாயாவது ரத்தம் சிந்திப் பலியிடுவது ஒரு பாகமாயிருக்கும்.
4. பேயாட்டம் முதலிய கோரணிகள் உண்டு.
5. விக்கிரகம், ஆலயம், பூசாரி என்பவற்றை அத்தனையாய் மதிக்கமாட்டார்கள்.
6. மனுஷரைப் பேய் பிடித்துக்கொள்ளும் என்று நம்புவார்கள்.
7. பில்லிசூனியம், வஞ்சனை வைத்தல் இவற்றை அதிகமதிகமாய்க் கையாடுவார்கள்" என்கிறார்.

மற்றோர் வித்வான் சொல்லுகிறபடி, ஆவேச வணக்கத்தார் எந்த ஆலயத்துக்கும் போகமாட்டார்கள். பிராமணர் முதலிய பூசாசாரிகளைத் தேடவுமாட்டார்கள், மதிக்கவுமாட்டார்கள். எந்தப் பாறைக்குள்ளும், அடர்ந்த எந்த விருக்ஷத்தின்கீழும், பயங்கர நீரருவிகளிலும், ஆறுகளிலும், பேய்பிசாசுக்கள் உண்டென்றும், விஷபேதிக்கு ஒரு பேய், வைசூரிக்கு ஒரு பேய், மிருகஜாதி ரோஹங்களுக்கு ஒரு பேய் இவ்வாறாக பேய்களும் பிசாசுக்களும் ஆவேசங்களும் மனுஷனைப் பிடித்து விழுங்குவதற்கு எப்போதும் வாயை ஆவென்று திறந்து கொண்டிருக்கிறாப்போல் எண்ணித் தங்கள் ஜீவகாலத்தையெல்லாம் பயத்திலேயே போக்குகிறவர்களாயிருக்கிறார்கள். இவைகள்மேலுள்ள அன்பினாலல்ல, ஏதேனும் தீமை செய்துவிடாதபடி தடுப்பதற்காகவே இவைகளுக்குப் பூஜைகள் நடப்பிப்பார்கள் என்கிறார்.

மேற்காட்டியபிரகாரம் ஆவேச வணக்கத்திலிருந்து பல கொள்கைகளும் கோட்பாடுகளும் இந்து சமயத்திற்குட் பிரவேசித்திருக்கின்றனவென்று காணலாம். இந்து மதத்திலுள்ள அத்வைத்யக் கொள்கைக்கும், புனர் ஜனனக் கோட்பாட்டுக்கும் ஆதிமூலம் ஆவேச வணக்கம் என்று சாஸ்திரிகள் நினைக்கிறார்கள். ஆவேச வணக்க பழக்க வொழுக்கங்களைத் தத்துவ சாஸ்திரத்தைக்கொண்டு அலங்கிர்தப்படுத்தினதினால் வந்த பலனே தற்கால இந்து சமயமென்று சொல்லுவாருமுளர். இந்து சமயம் என்ற பொதுப்பெயரின்கீழ் எத்தனையோ விதம் விதமான அனுஷ்டானங்களும், ஆசாரங்களும், கோட்பாடுகளும், சித்தாந்தங்களும் அடங்கியிருக்கின்றனவே, அவற்றின் ஒரு கடைசியில் ஏராளமான ஆவேச வணக்கப் பழக்கங்கள் உண்டென்பதற்குச் சந்தேகமில்லை. (இன்னும் வரும்.)

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

(தொடர்ச்சி.)

வடமொழிப் பயிற்சி இல்லாதவர்களும் வால்மீகி ராமாயணத்தின் நேரான இங்க்லிஷ் மொழிபெயர்ப்பை எதிரில் வைத்துக்கொண்டு ஒத்திட்டுப் பார்த்தால், கம்பரும் ஸாமான்யரல்லர் என்பதும், கதையளவாக மாத்ரமே வால்மீகி ராமாயணத்தைத் தழுவினவர் என்பதும், அங்கைக் கனியாகும். வால்மீகி ராமாயணத்தின் பாலகாண்டத்தின் முதலிலுள்ள பாகமெல்லாம் பிற்பட்ட வடமொழி ஆசிரியர்களால் ஏற்றப்பட்ட சுலோகங்கள் என்று அநேக இங்க்லிஷ் ஆசிரியர்கள் யூகிக்கின்றார்கள். இப்படிப்பட்டவைகளைக் கம்பர் தழுவினாரல்லர். வால்மீகி ராமாயணத்தில், தசரதன் பிள்ளைப்பேறடையும்படி என்ன செய்யலாமெனத் தன் மந்த்ரிமார்களைக் கூட்டி ஆலோசனை செய்ததாகவும், அவர்களும் அந்த யாகத்தைச் செய்யலாம் இந்த யாகத்தைச் செய்யலாமென்று பலபடப் பேசுவதாகவும், அதன்மேல் ஸுமந்த்ரன் தான் ஸனற்குமார மகரிஷியிடம் கேட்ட மர்மத்தை அரசனிடம் அந்தாங்கமாய் உரைத்ததாகவும், அதன்மேல் அரசன் கலைக்கோட்டு மகாமுனிவர் வரத்தக்கதென் றறிந்ததாகவும் உரைத்திருக்கிறது. "பிள்ளைப்பேறில்லையே இனி நாடென்னாகும்" என்ற தசரதனை நோக்கி வசிட்டர் தேவரஹஸ்யத்தை மனத்தில் சிந்தித்துக் கலைக்கோட்டு முனிவரை அழைத்துப் புத்ரகாமேஷ்டியாகம் பண்ணினால் புத்ரபாக்யம் உண்டாகுமெனக் கூறினதாய்க் கம்ப ராமாயணத்தில் சுருக்கி இன்றியமையாத அளவாகக் கூறியிருக்கின்றது. வால்மீகத்தில் வருகின்ற கலைக்கோட்டு முனிவர் ஸாதாரணராகக் காண்கின்றனர். கம்பருடைய கலைக்கோட்டு முனிவரை நினைக்கும்போதே அச்சமும் அற்புதமும் மனத்தில் உதிக்கின்றன. ஜனக மகாராசன் தசரதற்குத் தூதுபோக்கினதுமுதல் பரசுராமரைக் கண்டவரையில் நிகழ்ந்த சரிதம் வால்மீகத்தில் மிகச் சுருக்கமாகக் கூறியிருக்கக் கம்பநாடர் அச்சரிதத்தைத் தாம் வேண்டியவாறு மலைகளையும் காடுகளையும் ஸேனைகளையும் வர்ணித்து வளர்த்திவிட்டார். இரண்டாவது அயோத்யாகாண்டத்தை வால்மீகி ராமாயணத்தில் படிப்பது மிகவும் ஆயாஸம் தருவதாய் இராநின்றது.

(இன்னும் வரும்.) T. C. M.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.


## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரு. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2–ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2–ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்ருட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| " " பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| " " கல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| " ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.


### ஆகஸ்ற்றுமீ பஞ்சாங்கம்.—

| வாரம். | ஆகஸ்ற்றுமீ = ஆடி—ஆவணி. ⊙ பௌர்ணமி, 16உ ● அமாவாசை, 2உ | | | | | | ஆடி—ஆவணி. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 19 | 26 | 2 | 9 | 16 |
| திங்க ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 20 | 27 | 3 | 10 | ... |
| செவ் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 21 | 28 | 4 | 11 | ... |
| புதன் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 22 | 29 | 5 | 12 | ... |
| வியா ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 23 | 30 | 6 | 13 | ... |
| வெள் ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 17 | 24 | 31 | 7 | 14 | ... |
| சனி ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 18 | 25 | 1 | 8 | 15 | ... |


### விளம்பரம்.

ஒருவருஷச் சைகொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.


S. P. C. K. Press, Vepery, Madras—1913

egistered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR ... MADRAS


सत्यमेवजयति
THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

SEPTEMBER, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. செப்டெம்பர்மீ, 1913.


## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**முழுக்கிராமம் தீக்கிரையானது.**—ஆகஸ்ட்டு மாத ஆரம்பத்தில் பர்மாவில் மிங்கியானுக் கருகிலுள்ள செனிடோன் என்கிற கிராமத்தில் தீ பிரவேசமாகி 300 வீடுகளடங்கிய முழுக்கிராமமும் பஸ்மீகரமானது. 1000 பேர் வீடுவாசலற்று வருந்துகிறார்கள்.

**நீளமான பாலம்.**—உலகிலுள்ள பாலங்களில் அதிக நீளமானது, சீனாவில் சாங்காங்குக் கருகில் மஞ்சள் கடல்மேல் கட்டப்பட்டிருக்கும் சிங்கப்பாலம் என்பதாம். அதன் நீளம் 5¼ மைல். பிரமாண்டமான 300 கல்வளைவுகள் அதைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன.

**உலகிற் பெரிய எஃகு மாளிகை.**—கிளாஸ்கோ கல்விச்சபையார் உலகிலுள்ள மண்டபங்களிலெல்லாம் பெரிதாக ஒரு எஃகு மண்டபம் கட்டத் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்கு 50 ஆயிரம் பவுன் செலவு பிடிக்கும். இதில் 15 ஆயிரம்பேருக்கு உட்கார இடமுண்டு.

**விலையேறப்பெற்ற சித்திரம்.** — பாரீஸில் நிகழ்ந்த ஏலத்தில் "பத்சேபாள் சித்திர" மென்கிற ஒரு படத்தை 40 ஆயிரம் பவுனுக்கு லண்டன் வியாபாரி யொருவன் வாங்கினான். இந்தப் படத்தில் பத்சேபாள் நீராடுவதைத் தாவீது தனது மாடத்திலிருந்து பார்ப்பதுபோற் காட்டப்பட்டிருக்கிறது. இது 1643–ம் ஆண்டில் எழுதப்பட்டதாம்.

**புதிய மலைவழி.** — கன்னடிய பஸிபிக் ரெயில்வே கம்பெனியார் ராக்கி மவுண்டன்ஸ் என்கிற மலைத்தொடர்க்குள்ளே 16 மைல் நீளமான மலைவழியொன்று துளைக்க உத்தேசித்திருக்கிறார்கள். இதற்கு 140 லக்ஷம் பவுன் செலவு பிடிக்குமாம். தற்போது ஆல்ப்ஸ் மலைக்குள்ளே துளைத்திருக்கிற சிம்ப்ளான் மலைவழியின் நீளம் 12 மைல். இதுவே தற்காலத்துள்ளவைகளிற் பெரிது.

**கிழக் கலியாணம்.**—சில தினங்களுக்கு முன்னே லண்டன் பட்டணத்தில் ஒரு கலியாணம் நடந்தது. கலியாண மாப்பிள்ளைக்கு வயது 83. பெண்ணுக்கு வயது 80. இருவரும் பென்ஷன்காரராம், அலக்சந்திரா மகாராணி விவாகஞ்செய்த அதே முகூர்த்தத்தில் இவ்வயோதிபர் கலியாணஞ் செய்தமையால் அந்த மகாராணி இவர்களுக்கு 2 பவுன் இனம் அனுப்பினார்கள்.

**கல்கத்தா நகரம்.**—கல்கத்தா நகரம் பிரிட்டிஷ் ராஜ்யத்திலுள்ள பெரிய பட்டணங்களில் இரண்டாவதானது. அதன் ஜனத்தொகை 1,043,307. உலக முழுமையிலுமுள்ள 12 பெரிய நகரங்களிலிது ஒன்று. 51 பாஷைகள் பேசப்படுகின்றன. அவைகளில் 28 இந்திய பாஷைகள். புருஷர்களில் மூன்றி லொருவனுக்கு வாசிக்கத் தெரியும். பெண்களில் எழிலொருத்திக்குப் படிக்கத் தெரியும். 5,624 பிச்சைக்காரருண்டு.

**கலியாண வெகுமதிகள்.** — சமீபகாலத்தில் நிறைவேறின ஜெர்மன் சக்கரவர்த்தி மகள் கலியாணத்தின்போது மணமகளுக்கு வந்த வெகுமதியின் கிரயம் 5 லக்ஷம் பவுன்; அதாவது 75 லக்ஷம் ரூபாய். அமெரிக்காவிலே பிலிப்பைன் மாணாக்கன் ஒருவன் தன்னாசிரியனுக் களித்த வெகுமதியென்னவெனில், கர்த்தருடைய ஜெபமும், அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணமும் எழுதிய ஒரு காட்டுப் பன்றியின் கொம்பாம்.

**பூமிப் பிரதக்ஷிணஞ் செய்தவன்.**—சகலவித பிரயாண வசதிகளும் ஏற்பட்டிருக்கிற இக்காலத்தில் அநேகர் பூமியைச் சுற்றிப் பிரயாணஞ் செய்து வருவதென்று நிர்ணயம்பண்ணி வெகு சுருக்க காலத்தில் பூமிப்பிரதக்ஷணஞ்செய்துவருகிறார்கள். சமீபத்தில் நியூயார்க்கில் மீர்ஸ் என்கிற பத்திராசிரியன் கொஞ்சங்குறைய முப்பத்துமூன்று தினங்களுக்குள் பூமியைச் சுற்றிப் பிரயாணம் பண்ணித் தன்னூர் சேர்ந்தான்.

**வேத புராதன ஆபரணம்.**—புராதன வஸ்து பரிசோதகராகிய பண்டிதர் பீட்ரீ என்பவர் எகிப்தில் வெகு புராதனமான ஆபரணமொன்று கண்டெடுத்திருக்கிறார். இந்த ஆபரணம் கி. மு. 3400 வருஷங்களுக்கு முந்தியிருந்த பார்வோனொருவனாற் செய்யப்பட்டதாம். இதன் விலை மதிக்கக்கூடாதென்றும், அநேக வருஷங்களாய்ப் பூமியிற் புதைக்கப்பட்டிருந்ததென்றுஞ் சொல்லப்படுகிறது. இப்போது இங்கிலண்டிலிருக்கிறது.

**வங்காளத்தில் வெள்ளச்சேதம்.** — இவ்வருஷத்தில் பல பாகங்களில் மழைக்குறைவு நேரிட்டிருந்தும், வங்காளத்தில் சில விடங்களில் அபரிமிதமான மழை பெய்து வெள்ளங்களுண்டாகி அநேக கிராமங்கள் அழிக்கப்பட்டுப்போயின. பர்த்வானில் 300 கிராமங்கள் வெள்ளத்தா லழிவுண்டன. கால்நடைச் சேதம் ஏராளமெனப்படுகிறது. மனிதர்களுக்கும் உயிர்ச்சேத முண்டாயின. இதனால் அந்தப் பாகங்களில் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறதாகத் தெரிகிறது.

**ஆகாய கமனிகள் ஜீவரக்ஷை.** — தற்காலம் ஆகாயத்தில் இரதமேறி யுலாவும் ஆகாய கமனிகளுக்கு எந்த நிமிஷமும் ஆபத்து நேரிடக்கூடியதாயிருக்கிறபடியால், யந்திரத்துக்கு ஏது ஆபத்து நேரிட்டபோதிலும் அதிலுள்ளோர் தங்கள் ஜீவனுக்கு ஹானி நேராதபடிக் காத்துக்கொள்ளும் விதமாய் ஒரு அமெரிக்க சாஸ்திரி ஒரு யந்திரஞ் செய்திருக்கிறார். அந்த யந்திரத்துடன் குடையொன் றிருக்கிறது. அக்குடை யுதவியால் உயிராபத்துக்குத் தப்பிக்கொள்ளலாமாம்.

**இந்தியாவுக்குப் பறந்து வருதல்.**—அக்டோபரில் லண்டனிலிருந்து ஆகாய ரதமேறி இந்தியாவுக்குப் பறந்து வருவதற்கான முயற்சி நிகழ்ந்தேறி வருகிறது. இந்த ஆகாய ரதத்தை டாய்ட் என்பவரும், எர்னெஸ்ட் எஸ்டேல் என்பவரும் நிருமாணித்து வருகிறார்கள். மார்க்கம் பிரான்ஸுக்கு வந்து அங்கிருந்து இற்றலியைக் கடந்து ஆப்பிரிக்காவில் கேய்ரோ கார்ட்டூம் வழியாய் ஏடனைத் தாண்டிக் காராச்சிக்கு வருவதாம். இம்முயற்சி யிடையூறின்றி சித்திபெறுவதாக.

**அமெரிக்க கன்னிகா சங்கம்.** — அமெரிக்க ஐக்கியமாகாணத்தில் காலெஜில் படிக்கிற கன்னிகைகள் ஒன்றுசேர்ந்து ஒரு கன்னிகா சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதி லிப்போது 1000 அங்கங்க ளுண்டாம். இவர்களுடைய விசேஷ கொள்கை யென்னவெனில், உயர்தரப் பரீக்ஷையில் ஒப்பேறி மூன்றுவருஷஞ் செல்லாமல் ஒருவரும் விவாகஞ் செய்யக்கூடாது; வருஷவாரி 1000 பவுனுக்குக் குறைந்த வருமானமுடைய கணவனை

மணஞ்செய்யக்கூடாது என்பதாம். இத்தேசத்தில் பாலிகா விவாகம் எடுபடவேண்டுமாயின், கல்விச் சாலையிலுள்ள மாணவரெல்லாரும் ஒன்றுசேர்ந்து தாங்கள் கல்வியை முடிக்காமல் விவாக நிலைமைக் குட்படுவதில்லையென்றும், வயதுக்குவராத பெண்களைக் கலியாணஞ் செய்வதில்லையென்றும், ஒரு நிர்ணயம்பண்ணிக்கொள்வது அவசியமாகும்.

**அஸ்ஸாமில் வெடிகுண்டு.** — சில மாதங்களுக்கு முந்தி டில்லியில் வைசிராய் நகர்ப்பிரவேசஞ் செய்தபோது அவர் உயிரை வாங்கும்படி எறியப்பட்ட வெடிகுண்டு சத்தத்தைக்கேட்டோம். இப்போது அஸ்ஸாமிலுள்ள மௌல்வி பஜாரிலிருந்து ஒரு வெடிகுண்டு சத்தம் பிறந்திருக்கிறது. அவ்விடத்து டிவிஷனல் ஆபீஸர் மிஸ்டர் கார்ன் என்பவருடைய வீட்டண்டை ஒருநாள் ஒரு வெடிகுண்டு சத்தம் கேட்டது. இதை யாரும் கவனிக்கவில்லை. பிறகு என்ன விளங்கிற்றென்றால், கார்டன்துரை உயிரை வாங்கும்படி வெடிகுண்டு கொண்டுவந்த ஒரு வாலிபன் தான் நினைத்த காரியத்தை முடிக்கு முன்னரே தானே அக்குண்டு தற்செயலாய் வெடித்துச் செத்துக் கிடந்தான். விசாரணையில் அவன் சுவாமி தயானந்தா ஆசிரமத்தைச் சேர்ந்தவனென்று தெரியவந்தது. சுவாமி தயானந்தா இராஜதுரோகக் குற்றத்தால் சிக்ஷிக்கப்பட்டவன். இப்போது இதுசம்பந்தமாய் இன்னொருவன் பிடிபட்டிருக்கிறான். அரசாங்கத்தவர் ஜாக்கிரதையா யிராவிடில் இனி வடஇந்தியாவில் வெடிகுண்டு அதிகப்பட்டுப்போகத் தடையில்லை.

## IDOL WORSHIP IS A VAIN ATTEMPT.

## விக்ரகபூஜை வீண்பிரயாசை.

"பட்டவர்க்குப் பலனுண்டு" என்பதோர் பழமொழி; என்றாலும் பயனில்லாப் பாடுபடுவாருமுண்டு என்பது பலரறிந்தவிஷயம்: இத்தகைய பாடெல்லாம் வீண்பிரயாசை எனப்படும். விக்ரகபூஜை இப்படிப்பட்டது. இஃதெப்படி என்றறிவதற்குரிய சில குறிப்புகளை இவ்விடத்தெழுதுகிறோம்.

**I. விக்ரகத்தை உண்டுபண்ணுவது வீண்பிரயாசை.**—கடவுளைக் காட்டுமோர் குறிக்கொம்பாக விக்ரகத்தை உண்டுபண்ணுவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், "காணப்படாதவைகளாகிய அவருடைய நித்ய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படுவது" பிரத்தியட்சமாயிருக்க, விக்ரகமென்னும் வேறோர் குறிக்கொம்பு வேண்டுமென்பதவசியமில்லை. அன்றியும், தச்சனுடைய சாமர்த்தியம் அவன் சமைக்கும் மரச்சாமான்களினாலும், தட்டானுடைய சாமர்த்தியம் அவன் செய்யும் ஆபரணங்களினாலும் விளங்கவேண்டியதாயிருக்க, தச்சனுடைய சாமர்த்தியத்தைக் கம்மலைக்கொண்டும், தட்டானுடைய சாமர்த்தியத்தை நாற்காலியைக்கொண்டும் தீர்மானிக்கத் தகுமோ? அப்படியிருக்க, கடவுளை அவருடைய கரத்தின் சிருஷ்டிகளைக்கொண்டு ஒருவாறு அறியக்கூடுமேயொழிய, மனுஷன் உண்டுபண்ணுகிற விக்ரகங்களைக் கொண் டவைகளை அறிந்துகொள்ளுவ தெப்படி? இது கூடாததாகையால், கடவுளைக் காட்டுங் குறிக்கொம்பாக விக்ரகங்களை உண்டுபண்ணுவது வீண்பிரயாசை என்க.

**II. விக்ரகத்தை வணங்குவது வீண்பிரயாசை.** — வணக்கம் இருவகைப்படும்; மனுஷர், அவரவ ரந்தஸ்துக் கேற்றவாறு ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளும் மரியாதை ஓர் வணக்கம்; இது நிற்க, மனுஷருக்கும் மற்றெல்லாச் சிருஷ்டிக்கும் கர்த்தாவாயிருக்கிற கடவுளுக்கு அச்சிருஷ்டிகள் செலுத்தவேண்டிய மரியாதையே மேலான வணக்கம்; இது கடவுள் ஒருவருக்கே யுரியது. "நான் **கர்த்தர், இது என்** நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், **என் துதியை விக்ரகங்களுக்கும் கொடேன்**" என்றவ ருரைத்திருப்பதால், இந்தத் திவ்ய வணக்கத்தை விக்ரகத்துக்குச் செலுத்துவது பாவம். இப்படிச் சொல்லுகையில், 'எங்கள் வணக்கம் கேவலம் விக்ரகத்துக்கல்ல, அதற்குள் வசிக்கும் கடவுளுக்கே அற்பிதமாகிறது' என்று நம்மவர் வாதிக்கிறார்கள். இதைச் சற்று விசாரிப்போம். கடவுள் இதர வஸ்துக்களி லிராவண்ணம் விக்ரகங்களுக்குள் ளிருப்பதெப்படி என்று வினவும்போது, மந்திர சக்தியினால் பிராமணன் கடவுளை விக்ரகங்களில் ஆவாகனம் பண்ணி அவைகளைப் பிரதிஷ்டிக்கிறான் என்கிறார்கள்.



எகிப்திய கோபுரங்கள்.



இஃதின்மையானால், இதர வஸ்துக்களுக்கும் இவ் விக்ரகங்களுக்குமுள்ள வித்யாசமென்னவாம்! அந்தந்த விக்ரகங்கள் தத்தம் வாயினால் பேசவும், கண்களால் காணவும், காதுகளால் கேட்கவும், மூக்கினால் முகரவும், கைகளினால் தொடவும், கால்களினால் நடக்கவும், தொண்டையினால் சத்தமிடவுங் கூடுமானாலல்லவோ கடவு ளவற்றுள் வசிக்கிறாரென்றாகும்? இவற்றி லெதுவும் விக்ரகத்தில் எட்டுணையு மில்லையாதலால், இதர வஸ்துக்களைவிட விக்ரகம் எவ்வளவும் விசேஷித்ததல்ல வென்க. அன்றியும், கடவுளை அவருடைய சாயலின்படி சிருஷ்டிக்கப்பட்டு, சகல சிருஷ்டிக்கும்மேலானவனாக விளங்காநின்ற மனுஷனுடைய உணர்ச்சியுள்ள இருதயங்களில் வருவிப்பதோ, அல்லது, அவன் கையிலகப்பட்டு அசைவற்றுக் கிடக்கும் மரத்துக்குள்ளும் மண்ணுக்குள்ளும் வருவிப்பதோ, எது எளிது? இஃதன்றி, "கடவுளை முதலாவது கல்லுக்குள் ஆக்ரஷித்து, பிறகங்கிருந்தவரை மனுஷனுடைய மனதுக்குள் கொண்டுவருதைவிட, அவ னவரை நேராய்த் தனக்குள் வருவித்துக்கொள்ளுவது இலேசான காரியமல்லவா? இப்படியிருக்க, விக்ரகத்துக்குள் கடவுளிருக்கிறா ரென்றெண்ணி, அவைகளை வணங்குவது காரியத்துக்குதவாத பூஜையாதலால், அது வீண்பிரயாசை என்கிறோம்.

**III. விக்ரகவணக்கம் சரியென்று சாதிந்து ரைப்பது வீண்பிரயாசை.** — ஒருவன், "நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று சாதித்து நின்றா லதுவீண்பிரயாசையாகும். விக்கிரகவணக்கம் அத்யாவசியமென்பதும் அதுபோலவே வீண்பிரயாசையாகும். இஃதெப்படியென் றுதகரிப்போம்.

1. **முன்னோர் வழக்கமெனல் வீண்பிரயாசை.**—விக்ரகபக்தி தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் ஓர் சிறந்த வழிபாடாதலால் அதனை நிக்ரகம் பண்ணுவது சரியல்லவென்கிறார்கள். (வழக்கங்களுள் தள்ளுதற்குரியன எவை, தழுவத்தக்கன எவை என்று சற்றுக் கவனிக்கவேண்டும்; என்றாலும்) முன்னோரென்பார் யாரென்று விசாரிக்கப் புகுங்கால் புராணகாலத்தவரைவிடச் சதுர்வேத காலத்தவரே புராதன முன்னோரென்று புலப்படுகிறது. சதுர்வேத காலத்திலோ விக்ரகபூஜை சற்றேனும் தலைகாட்டவில்லை. அப்படியானால், விக்ரகபூஜை நம்முன்னோர் வழக்கமெனல் பொருந்தாச் சாதனையென்க. இஃதன்றி, விக்ரகாராதனை அனுஷ்டானத்துக்குவந்த புராணகாலத்திலுங்கூட, அது இதர வழிபாடுகளனைத்திலும் அதிநீசமான சேவையென் றெண்ணப்பட்டிருக்கிறது. திருஷ்டாந்தமாக, மூடாத்துமாக்கள் கட்டையிலும், கல்லிலும் சிவனிருப்பதாய் நினைக்கிறார்கள் என்று ஸ்கந்த புராணத்திலும், "முட்டாளுக்குத் தெய்வம் கல்லிலும் கட்டையிலும்" என்று வேறோரிடத்திலும் கண்டிருக்கிறது. அன்றியும், ஈஸ்வர பக்திவிஷயமாய் நாம் பின்பற்றவேண்டிய முன்னோருள் முக்யமானவர்கள் ரிஷிபக்தரல்லவா? அப்படியிருக்க வியாசர் முதலிய ரிஷீஸ்வரர் யாதொரு விக்ரகத்தையாகிலும் பூஜித்தார்களென்று எந்தக் கௌரவ நூலிலுங் காணக்கிடையாதாகையால், இவர்கள் காலத்திலில்லாத அர்ச்சைத் தொழுகையை அதிபூர்வமான தொழுகையென்றும், அனைவராலும் அனுஷ்டிக்கத்தக்க வழிபாடென்றுஞ் சொல்லத் துணிவது எவ்வளவு கேவலம்! சுருதியில் சுத்தமாய்க் காட்டப்படாமலும், புராணங்களில் அதிக கேவலமானதென் றிழித் துரைக்கப்பட்டுமிருக்கிற விக்ரகபூஜையை வியந்துபேசி, அதை ஊர்ஜிதப்படுத்த முயல்வது வீண்பிரயாசையல்லவா? . . .

2. **மனதிற்கெட்டாத கடவுளை மாம்சக்கண்ணால் பார்த்துப் பூஜிக்கவேண்டுமெனல் வீண்பிரயாசை.**—"தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்" என்று ஜகத்குருவாகிய இயேசுபெருமா னருளிச்செய்திருக்கிறார். இதனால் கடவுள் ஆவிஸ்வரூபமா யிருக்கிறாரென்றும், அந்த ஸ்வரூபத்திலேயே அவரைத்தொழுதுகொள்ளவேண்டுமென்றும், அதற்கு மனுஷனிலுள்ள ஆவிமாத்திரம் சமர்த்துள்ளதென்றும் விளங்குகிறது. அன்றியும், "மனவினாலேமாத்திரம் அவனைக் (கடவுளை) அறியக்கூடுமேயன்றி, அவனை யறியப் பலவழிகளில்லை" என்று ஹிந்துசமய ஸ்ருதிவாக்கு முண்டு. நிற்க, "முகத்தின் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள், அகத்தின் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" என்னும் ஆன்றோர் வாக்கையும் கவனிக்க. இப்படிப்பட்ட ஞானிகளும், பக்தசிரோமணிகளும் ஒன்றுசேர்ந்து கடவுளை மாம்சக்கண்ணால் காணவேகூடாது; ஆதலால், அதற்காகப் பிரயாசப்படுவது மூடத்தனம் என்று ஏகோபித் தொப்புவித்திருக்கும்போது, இதற்கெதிரிடையாகக் கொள்ளுங் கொள்கை யாவும் இரண்டுமிரண்டும் நான்கென்பதை மறுத்து, அஃதைந்து என்று ரூபித்துக்காட்ட முயற்சிப்பதற்கொத்த வீண்பிரயாசையாகும். இப்படிச் சொல்லும்போது, சிலர், ஆம், இந்தச் சுருதிப் பிரமாணங்களும், ஞானிகளி னனுபவமும் தேர்ந்த ஞானிகளுக் குரியனவேயொழிய, அற்ப அறிவுள்ளவர்களுக் கல்லவே என்று குதர்க்கம் பேசுகிறார்கள். ஆனால் இலக்ஷக்கணக்கான மகமதியருக்குள்ளும், உலகமெங்கும் பரவியிருக்கிற கிறிஸ்தவர்களுக்குள்ளும் அற்ப அறிவுள்ளவர்கள் ஆயிரக்கணக்கா யிருக்கிறார்களே; இத்தனைபேருக்கும் மானத பூஜையினாலேயே காட்சிகொடுத்து அருளையும் பொருளையும் அளித்துவரும் கடவுள் நம்மவர்களுக்கும் அவ்வாறு செய்யாரோ என்று இவர்கள் எண்ணுமற்போகிறது அதிசயமே. (இன்னும் வரும்.)

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

மேலும் 'இந்துமதம்' என்று சொல்லும்போது, வேதாந்தக் கொள்கைகளும் யோகாப்பியாசங்களும் பரப்பிரமத்தின் மீதுள்ள நாட்டமும் தேட்டமும் அடங்கிய உன்னத ஞானபோதகம் என்று முற்றிலுமாய் நினைத்துவிடப்படாது. தங்களை 'இந்துக்கள்' என்று பாராட்டிக்கொள்வோரில் லக்ஷாதி லக்ஷம்பேரின் கொள்கை இவையன்று. உலகமே சதம் என்றாற்போல் எண்ணி பூலோக சௌக்கிய க்ஷேமத்தையே நாடுவதும் இதற்கு ஏதேனும்பங்கம் நேரிட்டுவிடாதபடி மந்திரிப்பதும் நேர்ந்துகொள்வதும் கொடுப்பதுமே இந்துக்களில் மிச்சமானவர்களுடைய நாடோடிய இந்துமதம். இது ஆவேச பக்தியேயன்றி வேறல்லவே.

ஆகிலும், திட்டமாய்ச்சொன்னால், இந்துக்களுக்கும், சுயமான ஆவேச வணக்கக்காரருக்கும் பேதம் என்னவென்றால்: பிராமணர்களுடைய தலைமையை அங்கீகரித்துக்கொண்டு ஜாதிக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவர்கள் இந்துக்கள் என்றும், இவற்றை ஒப்புக்கொள்ளாதவர்கள் ஆவேச பக்திக்காரர் என்றும் சொல்லத்தகும்.

வங்காளம், சென்னை, மத்திய மாகாணங்களிலுள்ள பீலர், காண்டர் ஜனங்களும், அஸ்ஸாம் நாட்டில் வசிக்கும் காரோவர், காஷியர், நாகர்ஜனங்களும், பர்மா தேசத்திலுள்ள சீனியர், கச்சினர், காரேனர் முதலியோரும், நீலகிரி தொதுவர், மலையாளம் மலைப்பழியர், தெலுங்குநாட்டு கோயிகள் முதலானோரும் ஆவேச பக்திக்காரரே, இவர்களில் ஒருகோடி ஜனங்கள் உண்டு. இவ்வகுப்பாரனேகருக்குட் கிறிஸ்துமார்க்கம் அதிக விஸ்தாரமாய்ப் பரவியிருக்கிறது. சாந்தாலியர், காரேனர் முதலிய ஜனங்களிலிருந்து ஆயிரமாயிரமானவர்கள் கிறிஸ்து சபையைச் சேர்ந்திருக்கிறார்கள். ஜாதிக்கட்டுப்பாடு இவர்களுக்கில்லாமைபற்றி இவர்களைக் கிறிஸ்துவின் சுவிசேஷ ஒளிக்குள் இழுப்பது பிரயாசமன்று.

"இந்தத் தொழுவத்திலுள்ளவைக ளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்குண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும்" என்று அருள்நாதர் திருவாய்மலர்ந்தருளினார் (பரி. யோவான், 10. 16.). இதுவே அவரது ஓயாத பேராசை. ஈசனைப்போலத் தாசனும் இருக்கவேண்டாமா? இன்னும் கிறிஸ்துசபைக்குட் சேர்க்கப்படாத ஆடுகள் இந்தியாவின் காடுகளிலும், மலைகளிலும் ஆயிரமாயிரமாய் அலைந்துதிரிகின்றன. அவைகளையும் கொண்டுவருகிறதற்கு ஊழியர் வேண்டும். நான் போக ஆயத்தமா?

6. **புத்தமதம்.** — புத்தமதத்தை ஸ்தாபித்தவன் கௌதமமுனி. இந்துமதத்தில் பிராமணர் ஏற்படுத்திய நானாவித நைவேத்திய அனுஷ்டானங்களை வெறுத்துத் தள்ளி சீர்திருத்தம் உண்டாக்குவதற்கு ஏற்பட்ட முயற்சிகளில் இதுவுமொன்று. சமண மத உற்பத்திக்கும் இதுவேகாரண மென்று முன் கூறினோமே. சமணமதம் இந்துதேசத்திலேயே நிலைத்துக்கொண்டது. புத்தமதம் தன் ஜனனதேசத்தை விட்டுப் பூராவாய்ப் போய்விட்டது. பர்மாவிலும் அதைச்சேர்ந்த மலைநாடுகளிலும் மாத்திரமே இப்போது புத்தர் உண்டு. இலங்கையில் இவர்கள் ஏராளம். சிங்களவர் அனைவரும் புத்த சமயத்தவரே.

காசிக்கு நூறு மைலுக்கு வடக்கேயுள்ள கபிலவஸ்து என்றபூர்வநகரில் கிறிஸ்துவுக்குமுன் சுமார் 560–ம் ஆண்டில் சித்தார்த்தன் எனப் பெயர் வஹித்த க்ஷத்திரிய ராஜபிரபு பிறந்தான். இவ[illegible] பிற்காலத்தில் புத்தன் என்ற நாமதேயம் [illegible] இவன் குடும்பப்பேர் கௌதமன். இவனுக்குப் பிராயம் வந்து விவாஹம் செய்யவே ரஹூலன் என்ற ஓர் புத்திரனும் பிறந்தான். ராஜ அரமனையில் சம்பிரமமாய் சகல பவுசும் அனுபவித்து சம்போகமாய் ஜீவனம் பண்ணிவந்தகாலத்தில் ஓர்நாள் இரத சவாரி செய்துவருங்கால், வயோதிபம், ரோகம், மரணம் இவற்றைக் குரூரரூபமாய்க் கண்டு இவ்வித நிர்ப்பந்த நிலைமை தனக்கும் ஒருநாள் வருமே என்ற பயத்தினால் அது முதல் பீடிக்கப்பட்டு, கலக்கமடைந்தவனாய், இல்வாழ்க்கையின்மேல் வெறுப்புற்று, தன் தந்தையின் கண்ணீர் புலம்பலைக் கவனியாது, வீடுவாசலையும் நிலம் கரைகளையும், மனைவி பிள்ளையையும் துறந்து, இருபத்தொன்பது வயதில் சந்நியாசிகோலமாய் அலைந்து திரியப் புறப்பட்டான். முக்தியடையும் வழியைக்கண்டுபிடிக்கும்படி, அதாவது ஜன்மமீட்சி அடையும் வகையைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு, யோகாப்பியாசம் செய்யவேண்டுமென்பதே அவன் நோக்கம். சில வருஷங்களாய்த் தபசு செய்து நிஷ்டை அனுசரித்த பின்னர், இவ்விதப் பயற்சியினால் லாபமில்லையென்று கண்டு, சுய சித்திரவதை செய்ய ஆரம்பித்தான். சிறிதுகாலம் சென்றபின் அன்னபானத்தைக் குறைத்து, கடைசியில் தினமொன்றுக்கு ஒரே ஒரு அரிசியைமாத்திரம் தின்னும் நிலைமைக்கு வந்து, உயிர் வதைத்துச் சாகும் தறுவாயில் இன்னும்மெய்வழி புலப்படாததுகண்டு இதிலும் காரியமில்லையென்று சொல்லி இச்சித்திரவதையை நிறுத்தி போஜனஞ்செய்ய ஆரம்பித்தான். இவனோடு சேர்ந்து தபசு செய்ய வந்திருந்த ஐந்து சந்நியாசிகளும் இப்போது இவனை விட்டு நீங்கிக்கொண்டார்கள். அப்பால் மனதில் மிகுந்த போராட்டம் வந்து, கடைசியாக அரசுமரத்தின் கீழ் நாற்பத்தொன்பதுநாள் உட்கார்ந்து தியானிக்கவே திடீரென்று ஞானம் பிறந்துவிட்டதாம். இது முதல் "புத்தன்" அதாவது "புத்திமான்" "தெளிவுற்றவன்" ஆகிவிட்டான். (இன்னும் வரும்.)

## EARTHLY TIES VANISH.

இராகம், மோகனம். ரூபகதாளம்.

பல்லவி.

ஏசுவே, எழுந்தருளும்—இந்த
ஏழையின்மீது கண்ணோக்கியருளும்.

அநுபல்லவி.

நேச ஏசுவே, நீரே என் தஞ்சம்;
நேசிப்போருண்டோ நீசப்பாவி என்னை?—ஏ.

சரணங்கள்.

1

பெற்ற பிதா மாதா எங்கே?—கூட்டை
விட்ட பட்சிபோற் பறந்துபோனாரே;
நீரே என் தந்தை; நீரே என் நற்றாய்;
வேறே ஓர் தஞ்சம் எனக்குண்டோ சொல்லும்?—ஏ.

2

கூடப் பிறந்தோரும் எங்கே?—என்னைக்
கூடக் கூட்டிக்கொண்டு போனாரில்லையே;
நீரே என் அண்ணன், நீரே என் அக்காள்,
நீரே என் தங்கை, நீர்தான் என் தம்பி. — ஏசுவே.

3

நல்லுப காரிகள் எங்கே?—என்னை
நன்றிகெட் டோனெனத் தள்ளிவிட்டாரே;
நீரே உபகாரி, நீரே பரிகாரி,
யாரண்டை போவேன்? நீர்தான் என் தஞ்சம்.—ஏ.

4

உற்ற சிநேகிதர் எங்கே?—என்னைப்
பெற்ற தாயைப்போல் நேசங் காட்டினாரே;
காலத்துக்குத் தக்க வேஷம் போட்டாரே,
கோலத்தைக் கண்டு குதித் தோடினாரே.—ஏசுவே.

P. B.

Paradise Lodge,
*26th August, 1913.*

## KAMBAN THE POET.

### கம்பநாடர்.

(தொடர்ச்சி.)

இங்கே வால்மீகி வார்த்தை கிழவார்த்தையாகக் காண்கின்றது. இங்கே கம்பநாடர், சரிதத்தை வெகு திறமாக நாடக அமைப்பேபோல உலகத்தோடு மிகப் பொருந்துமாறு உரைத்திருக்கின்றனர். இந்தக் காண்டத்தில் உள்ள வேற்றுமையை மாணுக்கர்கள் நேரிலே படித்துப் பார்த்தே கம்பருடைய ஸாமர்த்யத்தைச் சீர்தூக்கி யறியவேண்டும்.

தமிழ் இராமாயணத்துக்கு வால்மீகமே முதனூலென்று கம்பரே சொல்லிவிட்டார். யுத்தகாண்டத்திற் கூறிய இரணியப்படலம் கம்பருடைய ஸ்ருஷ்டி. இராம சரிதத்தில் இரணியவதையை இடைப்பெய்து கூறுவது மற்றொன்று விரித்தலென்ற குற்றமாம் என்பர் சிலர். பாரகாவியம் செய்த ஆசிரியர் இது குற்றமாகுமென்று கொண்டால் அங்ஙனம் கூறார். ப்ரஹ்லாத சரித்ரத்தில் மிகப் பற்றுடையராய் அங்ஙனங் கூறினாருமல்லர். இந்த சரித்ரத்தை விபீஷணன்வாயில் வைத்தன்றோ கூறியது? ஸ்ரீராமருடைய மஹிமையை இராவணனுக்கு வற்புறுத்திக்காட்டி இராவணன் வணங்கி உய்யுமாறு எடுத்துரைத்தது இச்சரித்ரம். ஆகவே இது மற்றொன்று கூறலாகாது. இரணியப்படலம் ஒன்றுதவிர ஏனைக் கம்பராமாயண முற்றும் அழிந்துவிட்டாலும் பெரிதல்ல; கம்பருடைய கவிதா ஸாமர்த்யத்தையும் இயற்கைப் புலமையினையுங் காட்ட இப்படலமொன்றுமே போதுமான சான்றாகும். யுத்தகாண்டமே கம்பராமாயணத்தில் மிக மிடுக்கான காண்டம் எனத் தமிழ்வல்லார் கூறுவதுண்டு. இவ்விரணியப்படலமோ அக்காண்டத்தின் ஏனைப்படலங்களினும் மிடுக்குடையது. ஆசிரியருடைய கருத்துக்களும் நடையும் மெய்ப்பாடுகளும் இந்தப் படலத்தில் அத்தனை உரம்பெற் றிருக்கின்றன. எவரோ பாடி இடைப்பெய்து வைத்தது இப்படலம் என்று கூறுவாரும் இக்காலத்துளர். நாகபாசப் படலத்தைப்பற்றி இன்னும் எவரும் இங்ஙனம் கூற எழவில்லை.

ஸந்யாசியாக வந்த இராவணன் ஸீதையை ஒரு கையால் கூந்தலையும் ஒருகையால் தொடைகளையும் பிடித்தெடுத்துத் தேரில் வைத்துக்கொண்டு போனான் என்றது வான்மீகி ராமாயணம். கற்புடையாளை அவர் விருப்பின்றித் தீண்டினால் உடல் வெடிப்பதாக என்று இராவணன் பெற்றுள்ள சாபமொன்றை அடியிட்டுக்கொண்டு, கம்பர், இராவணன் நிலத்தைக் கீண்டு ஸீதையைப் பன்னசாலையோடு தேரில் எடுத்து வைத்துக்கொண்டு போனான் என்று கதையைத் திரித்துக்கொண்டார். மாரீசனைக் கொன்று வந்தபிறகு ஸீதையையும் பன்னசாலையையும் காணாஞகி இராமன் கவன்ற விடத்து, இதற்கேற்ப,

> துய்த்து வாழ்தர வேறொரு பொருளிலான் உதவ
> வைத்த மாநிதி மண்ணொடு மறைந்தன வாங்கிப்
> பொய்த்து ளோர்கொளத் திகைத்தவின் றுரையும்
> போன்றான்

என்று உவமானம் காட்டினர். சூடாமணிப் படலத்தில் ஸீதை அநுமனிடத்தில்,

> தீண்டு வானெனின் இத்தனைச் சேண்பகல்
> ஈண்டு மோவுயிர் மெய்யினி மைப்பின்முன்
> மாண்டு தீர்வனென் றேநிலம் வன்மையால்
> கீண்டு கொண்டெழுந் தேகினன் கீழ்மையான்.
>
> மேவு சிந்தையின் மாதரை மெய்தொடின்
> தேவு வன்றலை சிந்துக தீதெனப்
> பூவின் வந்தபு ராதன னேபுகல்
> சாவ முண்டென தாருயிர் தந்ததால்

என்றும்,

> ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்துகொண்
> டீண்டு வைத்த நிலவல் இயற்றிய
> நீண்ட சாலை யொடுநிலை நின்றது
> காண்டி ஐயநின் மெய்யுணர் கண்களால்.
>
> தீர்வி லேனி தொருபக லும்சிலை
> வீரன் மேனியை மானுமிவ் வீங்குநீர்
> நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவென்
> சோரு மாருயிர் காக்குந் துணிவினால்

என்றும் உரைத்ததாகவும், திருவடி தொழுத படலத்தில் ஸ்ரீராமனிடத்தில் அநுமன்,

வேலையுள் இலங்கை யென்னும் விரிநகர் ஒருசார் விண்டோய், காலையு மாலை தானும் இல்லதோர் கனகக் கற்பச், சோலையங் கதனின் உம்பி புல்லினால் தொடுத்த தூய, சாலையின் இருந்தாள் ஐய தவஞ்செய்த தவமாந் தையல்.

மண்ணொடுங் கொண்டு போனான் வானுயர் கற்பினாடன், புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான் உலகம் பூத்த, கண்ணகன் கமலத் தண்ணல் கருத்திலாட் டொடுதல் கண்ணின், எண்ணருங் கூறாய் மாய்தி என்றதோர் மொழியுண் டென்பான்

என்றுரைத்ததாகவும் உரைத்து, இங்ஙனம் தானாட்டித் தனது நிறுத்தலாக இந்த விஷயத்தை உறுதிப் படுத்தி யிருப்பதைக் காண்க.

(இன்னும் வரும்.) T. C. M.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPOT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2–ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2–ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றுட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... .... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... .... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### செப்டெம்பர்மீ பஞ்சாங்கம்.—

| வாரம். | செப்டெம்பர்மீ = ஆவணி—புரட்டாசி. ⊙ பௌர்ணமி, 15உ ● அமாவாசை, 29உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆவணி—புரட்டாசி. | | | |
| ஞாயி ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 6 | 13 |
| திங்க ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 7 | 14 |
| செவ் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 1 | 8 | 15 |
| புதன்... | 3 | 10 | 17 | 24 | ... | 19 | 26 | 2 | 9 | ... |
| வியா ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 3 | 10 | ... |
| வெள்... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 4 | 11 | ... |
| சனி ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 5 | 12 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913.

Registered No. M. 442.

OFFICE OF ... 3 OCT 1913 ... MADRAS.

सत्यमेव जयते
THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

OCTOBER, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. அக்டோபர்மீ, 1913.

## NEWS AND NOTES.

### வர்த்தமானக் குறிப்புகள்.

**உலகில் பெரிய கப்பல்.**—உலகிலுள்ள கப்பல்களி லெல்லாம் பெரிதென்று சொல்லக்கூடிய "வாட்டர் லாண்ட்" என்னும் ஹாம்பர்க் கப்பல் ஏப்பிரல்மீ 3உ ஜலத்தில் விடப்பட்டது. இதன் நீளம் 905 அடி. 50,000 டன் பாரம் ஏற்றக்கூடியது. 83 ஜீவ வள்ளங்களையுடையது. ஒரே பக்கத்தில் 70 ஜீவ வள்ளங்களைத் தண்ணீரில் இறக்கக்கூடியதாம்.

**கண்ணாடி தரித்த காகம்.**—கண்தெரியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒரு காகத்தின் கண்ணிலிருந்து மனுஷர்களுக்குச் செய்யும்மாதிரி புரையுரித்துச் சொஸ்தப்படுத்தியும் கண்பார்வை தெளிவாயிராததினால் அதற்குத் தக்க மூக்குக்கண்ணாடியொன்று செய்து அதற்குத் தரிப்பித்து அதை லண்டன் தேசத்து மிருகக்காட்சிச்சாலையில் வைத்து வளர்த்துவருகிறார்களாம்.

**இரண்டாயிரம் வயதுள்ள மரம்.**—இங்கிலாண்டில் ஸப்பக் என்னும் ஊரில் கருவாலி (Oak) மரம் ஒன்று 2,000 வருஷம் ஜீவித்திருக்கிறதாம். அதின் அடிமரத்தின் சுற்றளவு 36 அடியாம். ஆதியில் 13–ம் நூற்றாண்டுகளுக்கு முன்னமே ஆங்கிலேயருக்கு சத்திய வேதத்தைப் போதிக்கப்போன குருக்கள் அம்மரத்தடியில் நின்று வேதம் போதித்தார்களாம். அதன் நிமித்தம் அது சுவிசேஷ மரம் என்று சொல்லப்படுகிறதாம்.

**கோடிய ரெயில்வே விபத்து.**—ஏப்ரில்மாதக் கடைசியில் ஜி. ஐ. பி. ரெயில் பாதையில் அகோலாவுக்கு அருகில் ஒரு பிரயாணிவண்டி ஓட்டத்தில் ஒருசாமான் வண்டியோடு மோதினதால் வண்டித்தொடரிற் பல வண்டிகள் நொறுங்கிப்போனதோடு பலத்த உயிர்ச்சேதம் நேரிட்டது. விபத்து மகா கொடுமையானதென்றும், இந்தியாவில் அநேக வருஷகாலமாய் அப்படிப்பட்ட ரெயில்வே விபத்து நேரிடவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது. அங்ஙனமிருந்தும் பிரயாணிகளில் மாண்டவர் 30 பேரென்றும், காயமுற்றோர் 14 என்றுங் கூறப்படுகிறது. உயிர்ச்சேதம் இன்னுமதிக மிருக்குமென் றஞ்சுகிறோம்.

**நியூயார்க்குக்குப் பறந்துபோதல்.** — மிஸ்டர் கிரேஹாம் உவொயிற்று என்பவர் 30 மணி நேரத்தில் அத்லாந்திக் சமுத்திரத்தைக் கடந்து நியூயார்க்குக்குப் பறந்துபோவதற்கு ஒரு யந்திரம் செய்துவருகிறார். இது 250 குதிரை பலங்கொண்ட நான்கு எஞ்சின்களால் நடத்தப்படும் பெரிய ஆகாயரதம். சமுத்திரத்தில் விழுந்தாலும் நீரின் மேலுஞ் செல்லக்கூடியது. மணிக்கு 100 மைல் வேகம் செல்லும். இதில் நடத்துகிறவர் இருவர், பழுது செப்பனிடக் கூடியவர் இருவர், பிரயாணிகளிருவர் ஆக அறுவர் ஏறிப்போகக் கூடும். இதை நிருமாணிக்குஞ் செலவு ஏகதேசம் 20 ஆயிரம் பவுண். "முயற்சியுடையோ ரிகழ்ச்சியடையார்."

**நெருப்புக்குச்சி.** — இரவும் பகலும் ஒரு வருஷத்தில் எத்தனை நெருப்புக்குச்சிகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றதென எவரும் நினைப்பதில்லை. பகல் இரவாகிய ஒவ்வொரு நிமிஷமும் 30 லட்சம் நெருப்புக்குச்சிகள் உலகத்தில் கொளுத்தப்படுகின்றது. அத்தொகையை ஒரு வருஷத்தின் நிமிஷங்களால் பெருக்கினால் 1,57,6800,000,000 ஆகிறது. திகைப்புக்குரிய அத்தொகையான குச்சிகளைச் செய்ய லக்ஷாதிலக்ஷமான மூலதனமும் ஆயிரமாயிரமான வேலையாட்களும் தேவையாயிருக்கின்றன. பசிபிக் சமுத்திரக் கரையிலுள்ள நெருப்புக்குச்சி செய்யும் ஒரு யந்திரசாலை 240 ஏக்ரா பூமியைக் கவர்ந்துகொண்டிருக்கிறது. முடிகணுவில்லாத மரங்கள் உபயோகப்படுகின்றன. சாதாரணமாய் மஞ்சள் தேவதாரு விருக்ஷம் உபயோகப்படுகின்றது.

**கையை வெட்டிக் கடவுளுக்குப் படைத்தவன்.** — மத்திய மாகாணத்தில் நிமார் ஜில்லாவில் லட்சுமணன் என்கிற படிப்பறியாத குடியானவனொருவன் சாதுவேடம்பூண்டு காலங்கழித்தான். ஒருநாள் அவன் இராமன் கோவிலுக்கு முன் சென்று தன் இடதுகையைத் தறித்து சுவாமிக்குக் கொடுத்ததாகப் பூசாரியிடங் கூறினான். கோவிலுக்குமுன் அவனுடைய தறிக்கப்பட்ட கை கிடந்தது. அவன் தேகத்தினின்று இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவன் நோவில்லாதவன்போல இருந்தான். போலீஸார் வந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக, அவனுடைய கை முரட்டுத்தனமாய்த் தடிப்பான கத்தியால் மூன்று வெட்டு வெட்டித் தறிக்கப்பட்டிருந்ததைக் கண்டு சத்திர சிகிச்சை செய்து காயங்கட்டினார். அவன் சுவாமியால் தனக்கு யாதுந் தீங்கு வாராதென்று சொல்லிச் சந்தோஷமாய்ப் போனான்.

**[illegible] சுதந்தரவாதிகள் வரம்பற்ற நடத்தை.**—இங்கிலாண்டில் பெண் சுதந்தரவாதிகள் தங்கள் வேண்டுதல்படி இராஜாங்கத்தார் செய்யவில்லையென்று நாளுக்குநாள் கொடிய துஷ்கிருத்தியங்களைப் புரிந்து ஜனங்களை அச்சுறுத்தி வருகின்றனர். வீடுகளைத் தீக்கொளுத்துஞ்செயல் அதிகரித்து வருகிறது. இரண்டொரு அழகான கோவில்களையும் அரமனைகளையுந் தீக்கிரையாக்கிவிட்டனர். ஒருவாரத்தில் 44 ஆயிரம் பவுண் இவர்களால் சேதமென் றறிவிக்கப்படுகிறது. தவிரப் பலவிடங்களில் வெடிகுண்டுகளை வைத்து ஜனங்களோடே கட்டிடங்களை யழிக்க முயலுகின்றனர். செண்ற் பால்ஸ் அத்தியக்ஷாலயத்திலும், பெரிய போஸ்டாபீஸிலும் வெடிக்குமுன் இவ்விதக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதால் அநேக ஆருயிர்கள் ஆபத்துக்குத் தப்பின. இந்த ஸ்திரீ யுத்பாதங்களின் வரம்பற்ற செய்கைகளைத் தவிர்க்க அதிகாரிகள் என்ன செய்யப்போகிறார்களோ இனி தெரியும்.

**கனத்தைச் சம்பாதித்த ஒரு வாலிபன்.**—சென்னபட்டணத்திலிருக்கிற சி. வி. ஷேவியர் என்கிற ஒரு வாலிபன், பூர்வகாலத்திலும் தற்காலத்திலும் புதிதாய்க் குடியேறின ஸ்தலங்களைப்பற்றியும், அவைகளின் விர்த்தியைப்பற்றியும், அப்படி குடியேறின ஜனங்களின் சொந்தநாடுகளுக் குண்டாயிருக்கும் சம்பந்தத்தைப்பற்றியும ஒரு வியாசம் எழுதினதினால், லார்ட் மீத் பந்தய கோப்பையைக் கெலித்தார். இவ்விதமாய் அந்தப் பந்தயத்தைக் கெலித்தபடியால், அந்த வாலிபனுக்கும் இந்தியாவுக்கும் கீர்த்தியை உண்டாக்கிற்று. ஏனென்றால், இங்கிலாந்திலுள்ள அநேக வாலிபர்களும், குடியேறி இருந்த இதரநாட்டு வாலிபர்களும் இந்தப் பந்தயத்தைக் கெலிக்கும்படி பிரயாசப்பட்டார்கள். சி. வி. ஷேவியர் என்கிற இந்த வாலிபனுக்கு 20 வயது, இவர் முதல்முதல் பெங்களூரிலுள்ள ஒரு

மிஷன் பாடசாலையில் படித்தவர். அவர் பரீட்சையில் முதல்தரமாகத் தேறினதினால், அவருக்கு உபகாரச்சம்பளம் கிடைத்தது. F. A. பரீட்சைக்குப் படிக்க வித்தியாசாலையில் சேர்ந்திருக்கிறார்.

**கான்பூர் மசூதிக் கலகம்.**—கான்பூரில் இஸ்லாமியருடைய மசூதியிற் புதிதாகச் சேர்க்கப்பட்ட ஒரு பாகத்தை இடித்துவிடவேண்டுமென்று உள்ளூரதிகாரிகள் வற்புறுத்த, ஜனங்கள் சம்மதியாதபடியால், அதிகாரிகளே அதை இடித்துவிடக் கட்டளை பிறப்பித்தார்கள். இதனால் ஜனங்கள் ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் ஒரு பெரிய கூட்டமாகக் கூடிக் கலகநோக்கமாய் இடிந்த பாகத்தைக் கட்ட ஆரம்பித்து, ஆக்ஷேபித்த போலீஸாரைக் கல்லாலெறிந்தார்கள். கலெக்டர் ஆயுதங்களோடுகூடிய போலீஸாரைக் கொண்டுவரக் கலெக்டரையும் கல்லால் காயப்படுத்தினர். இதமான வழியில் கலகமடங்காமல் முற்றிக்கொண்டு வருவதைக் கண்டு கலெக்டர் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்து கூட்டத்தைக் கலைக்க உத்தரவுசெய்தார். இதனால் 14 பேர்வரையில் மரிக்கவும், 40 பேர்வரையில் காயமடையவும் நேர்ந்தது. போலீஸார் பக்கத்திலும் அநேகருக்குப் படுகாயமுண்டானது. ஒருவன் மரித்துப்போனான். கலகத்துக்குக் காரணமாயிருந்தவர்களைப் பிடித்துக் கைது செய்யப்பட்டது. 100 பேர்வரையில் இப்போது கலகஞ்செய்த குற்றத்துக்காக நீதிஸ்தலத்தில் விசாரணை செய்யப்பட்டுவருகிறார்கள்.

## A GOOD EXAMPLE.

## ஒரு நன்மாதிரி.

மிருகக் காட்சிகளுக்காக ஜப்பான் தேசத்தில் விலங்கினங்களை வைக்கும் ஒரு நேர்த்தியான தோட்டம் இருக்கிறது. அந்தத் தோட்டத்தில் பழகாத ஒரு காட்டுயானையிருக்கிறது. அது தன்னுடைய சிநேகிதர் இன்னார் என்று அறிந்துகொள்ளக்கூடிய அறிவுள்ள மிருகம். தனக்கு யாராகிலும் தீங்கு செய்கிறவர்களென்று அறியும்போது, அவர்களைப் பிடித்துத் தீங்குசெய்யும். அந்தத் தோட்டத்தில் ஒரு மனுஷன் உண்டு. அவன் அந்த யானையைத் தன் இஷ்டப்பிரகாரம் தொட்டும், தனக்கு அந்த யானை யாதொரு தீங்குஞ்செய்யாமல் காத்துக்கொள்வான். அந்த மனுஷன் யாரென்றால், விலங்கின் நோயை ஆற்றக்கூடிய ஒரு இரணவைத்தியன். அந்த யானை தனக்கு உண்டான ஒரு கொடிய நோயால் ஆயுதப்பிரயோக சிகிச்சைக்காக இந்த இரணவைத்தியனிடம் வந்தபடியால், இந்த இரணவைத்தியன் அந்த யானைக்குச் சிநேகிதனானான். ஒருநாள் இந்த யானை தரையில் படுத்து எழுந்திருக்கும்போது, அதனுடைய கண்ரெப்பை ஒரு ஆணியில் மாட்டிக்கொண்டு, அந்த இடத்தில் ஒரு அவலக்ஷணமான காயம் உண்டாகி, அதிலிருந்து கண்ரெப்பை கிழிந்து தொங்கிக்கொண்டிருந்தது.

அந்த யானைக்கு இந்த இரணவைத்தியன் எப்படி சிகிச்சை செய்தான் என்று அவனே சொல்லுகிறதாவது:

"ஒருநாள் இந்த யானைக்குச் சிகிச்சை செய்யும்படி அழைக்கப்பட்டேன். ஆனால் அந்த யானை அதிகம் கொடியதென்று கேள்விப்பட்டு, அதற்கு எப்படி நான் சிகிச்சை செய்யக்கூடும் என்று அதிகமாய்ப் பயப்பட்டேன்; ஆனாலும் அதற்கு எப்படியாகிலும் சிகிச்சை செய்தே தீரவேண்டுமென்று தீர்மானித்தேன்.



பக்தர் யானையாற் கொல்லப்படுகிறது.

முதலாவது அந்த யானையினுடைய தும்பிக்கையை ஒரு பலமான கயிற்றில் கட்டி, ஒரு பெரிய இரும்புக் கம்பத்தில், கட்டிவைத்து அதன் அருகில் போகப் பிரயத்தனப்பட்டேன்; ஆனால் முடியவில்லை. அந்தப் பெரிய மிருகம் கொஞ்சநேரத்திற்குள்ளாக அந்தக் கயிற்றை அறுத்துப்போட்டது. அதனாலே நான் அந்த யானைக்கு ஒன்றும் செய்ய இயலவில்லை. இந்தவிதமான ஏற்பாட்டினால் அதற்குச் சிகிச்சைசெய்ய முடியாமற்போனபடியால், பலாத்காரமாய் அப்பெரிய மிருகத்திற்குச் சிகிச்சை செய்வது கூடாதகாரியம் என்று நான் அறிந்துகொண்டேன். இப்படியிருக்கக் கடைசியாய் எனக்கு ஒரு நல்ல எண்ணம் உண்டானது. அது



என்னவென்றால், நான் அங்கிருந்த யானைப்பாகனைக் கூப்பிட்டு, அவன் தன் கண்களில் ஏதோ நோய் இருப்பதாகச் சைகையின்மூலமாய் மாரீசம் செய்யும்படி சொல்லிக்கொடுத்தேன். அவன் அப்படியே தன் கண்களில் நோய் இருப்பதைப்போல் அந்த யானையின்முன் பாசாங்கு செய்துகொண்டு என்முன் நின்றான். நான் உடனே அந்த யானையின்முன் அவனுடைய கண்களைச் சிகிச்சைசெய்து ஒரு துணியினால் அவனுடைய கண்களைக் கட்டி அனுப்பினேன். இப்படியே மூன்றுநாள் செய்தேன். இவைகளையெல்லாம் அந்த யானை அதிக கவனமாய்ப் பார்த்துக்கொண்டேவந்தது.

கடைசியாய் அந்த மனிதன் மூன்றாவதுதரம் என்னிடம் வந்தபோது, அவனுடைய கண்களில் கட்டியிருந்த கட்டை அவிழ்த்து, கண்களைக் கழுவிவிட்டு, தனக்குக் கண்கள் நன்றாய்ச் சொஸ்தமானதைப்போல் பாசாங்கு செய்யும்படி சொன்னேன். அவன் அப்படியே அந்த யானை கவனிக்கும்படியாகப் பாசாங்கு செய்து, எனக்கு அவன் அதிக நன்றியாய் இருப்பதுபோல அநேக சலாம் செய்துவிட்டுப் போனான்.

அதன்பிறகு நான் வெகு தைரியத்தோடே அந்த யானைக்குச் சமீபம்போய் ஒரு ஏணியைப் போட்டு, அதன்மேல் ஏறி, கருக்கான கத்தரிக்கோலால் அதன் கண்ணிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த ரெப்பைத்துண்டைக் கத்தரிக்கத் துவக்கினபோது, அந்த யானை உடனே ஒரு பெருஞ்சத்தம் போட்டது. அந்தமாதிரியான சத்தத்தை நான் கேட்டதே இல்லை. அதனால் நான் அதிகமாய்ப் பயந்து கீழே குதித்து ஓடினேன்.

கீழே இறங்கிக் கொஞ்சம்தூரம் வந்து அதன்பிறகு அந்த யானையை ஏறிட்டுப் பார்த்தபோது, நான் கத்தரிக்கத் துவக்கின அந்தக் கத்தரிக்கோல் அந்த யானையின் ரெப்பையிலேயே தொங்கிக்கொண்டிருந்தது. அதன்பிறகு திரும்பவும் அந்த யானையின் அருகாமையில் போய் அதன்மேல் ஏறி என் உயிரைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டதுபோல வெகு பயத்தோடு கத்தரித்தேன். நான் ஆரம்பித்த என் வேலையில் முற்றும் ஜெயமடைந்தேன். ஆகையால் அதன் பிறகு அதற்குச் சிகிச்சை செய்யவும், அதன் கண்களைக் கழுவவும் ஆரம்பித்து எல்லாவற்றிலும் சித்தி அடைந்தேன்.

இவ்விதமாய் அதற்குச் சிகிச்சை செய்யச் சில காலமாய்த் தினந்தோறும் அந்த யானையிடம் போனேன். அதற்குள்ளாக அந்த யானை என்பேரில் அதிக பிரீதியுள்ளதாகவும் நன்றியுள்ளதாகவும் காணப்பட்டது. நான் அந்த யானைக்குச் சிகிச்சை செய்யப் போகும்போதெல்லாம், அது தன் முழங்காலில் ஊன்றி தன் தலையைக் குனிந்து காட்டும். நான் இவ்விதமாகப் பலாத்காரமாய்ச் சிகிச்சை செய்கிறதற்குப் பதிலாக உபாயத்தால் அதற்குச் சிகிச்சை செய்து சித்திபெற்றேன். நான் 2 வாரத்திற்கு ஒருமுறை இந்த யானையைப் பார்க்கப் போகிறதுண்டு. நான் போகும்போதெல்லாம் அந்த யானை என்னை அறிந்துகொண்டு தன் சிநேகிதனாக என்னை அங்கீகரிக்கிறது.

## WEDDINGS IN AFRICA.

## ஆப்பிரிக்கா விவாகங்கள்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் ஒரு மனிதன் தனக்கு மனைவியைச் சம்பாதிக்கவேண்டுமானால், அவளுக்காக ஒரு தொகையைக் கொடுக்கவேண்டும். தெரிந்துகொள்ளப்படுகிற மனைவி நல்ல வயதுடையவளும், பலமுள்ளவளும், புருஷனுடைய சொந்த வேலைகளைச் செய்வதில் அவனுக்குப் பிரயோஜனமுள்ளவளுமாய் இருக்கவேண்டும். ஒரு மனைவியை நியாயப்பிரகாரம் சம்பாதிக்கப் பணமோ, பொருளோ இல்லாமற்போனாலும், அல்லது வேறே எந்தக் காரணத்தாலோ பணம் கொடாமல் ஒரு பெண்ணை எடுத்து அவளோடு ஜீவித்து, அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கிறபோது, அப்பிள்ளைகள் தாய்க்கும் தகப்பனுக்கும் சொந்தமானவர்களல்ல, அந்தத் தாய் தகப்பன் அப்பிள்ளைகள் மேல் யாதொரு உரிமையும் பாராட்டக்கூடாது.

ஆப்பிரிக்காவில் பெண்களை வீட்டிலேயே போட்டு அடைத்துவைக்கிற வழக்கம் கிடையாது. பெண்கள் தங்கள் இஷ்டப்பிரகாரம் எங்கும் நடமாடலாம். அச்சமயங்களில் வாலிபன் தன் மனதிற்குத் தகுந்த மனைவியைத் தெரிந்துகொண்டு, தன் தாயினிடம் போய், தான் தெரிந்துகொண்ட பெண்ணை விவாகம் செய்து முடிக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி வேண்டிக்கொள்வான். இவன் இப்படித் தன் பிரியத்தைத் தன் தாயினிடம் சொன்னபிறகு, தாய் அப்பெண்ணின் தாயிடம் போய், தன் மகன் விருப்பத்தை வெளியிடுவாள். அதன்பிறகு அப்பெண்ணின் தாய் இந்த விஷயத்தைத் தன் வீட்டிலுள்ள எல்லாருக்கும் சொல்லுவாள்; இதைக்கேட்ட எல்லாரும், அந்த மாப்பிள்ளை அப்பெண்ணுக்குத் தக்க புருஷனாய் இருப்பான் என்று ஒத்துக்கொண்டால், பிறகு இந்த இரண்டு தாய்மார்களும், விவாக காரியத்தை யோசித்து, அதற்குரிய ஏற்பாடுகளை ஒழுங்கு செய்வார்கள். இவ்வளவு ஏற்பாடுகள் ஆகிறவரையிலும் பெண்ணுக்கு ஒன்றுமே சொல்லமாட்டார்கள்; விவாகத்துக்குரிய எல்லாக் காரியங்களையும் ஒழுங்கு செய்துகொண்டு, அதன்பிறகு மாப்பிள்ளையைப் பெண்ணுக்கு அவன்தான் உன் புருஷன் என்று சொல்லுவார்கள். சில சமயங்களில், மாப்பிள்ளையின் இஷ்டமில்லாததினால், பெண் கதறவும், தடை செய்யவும் நேரிடுகிறதுண்டு; ஆனால் அவைகளையெல்லாம் பெற்றோர் கவனிக்கவேமாட்டார்கள். அவளுடைய இஷ்டம் ஒன்றுக்கும் செல்லாது.

விவாகத்திற்கென்று நாள் குறிக்கப்படும். அப்போது, மாப்பிள்ளை பெண்ணுக்காகக் கொடுக்க வேண்டியதை ஆயத்தம் செய்வான். அப்படி கொடுக்கப்படுகிற பொருட்கள் எவை என்றால், மண்வெட்டி முதலிய சாமான்கள் ஏறக்குறைய தொகையில் இருபது இருக்கவேண்டும். சீட்டித் துணி, மணி, நகைகள், பணம், விருந்துக்காக ஒன்று அல்லது இரண்டு ஆடுகள் இவைகளையெல்லாம் மாப்பிள்ளை தன் வீட்டில் சேகரித்து வைத்தபிறகு, பெண்ணின் தாயும் இன்னும் சில பெண்களும் போய், இந்தச் சாமான்களைப் பெண்ணின் வீட்டிற்குக் கொண்டுவருவார்கள். அப்போது மாப்பிள்ளையும் அவனுடைய தோழர்களும் அவர்களைப் பின்தொடர்ந்து போவார்கள்.

சில தினங்களாய்ப் பெண்ணின் சொந்தக்காரர் கலியாணத்திற்கு வருவார்கள். அப்போது, அவர்கள் ஒவ்வொருவரும் மாப்பிள்ளையிடமிருந்து, சில வெகுமதிகளை எதிர்பார்ப்பார்கள். விவாக காலத்திலெல்லாம், மாப்பிள்ளையை வந்தவர்களெல்லாரும் பரியாசம்செய்து, திட்டிக்கொண்டேயிருப்பார்கள். இப்படியே இரவும் பகலுமாய் நடந்துகொண்டிருக்கும். அவனிடத்தில் ஏதாகிலும் தகாத நடத்தை இருக்குமானால், அவைகளையெல்லாம் வெளியே கொண்டுவந்து அவமானப்படுத்துவார்கள். அவர்கள் எல்லாரும் இவ்விதமாய்த் திட்டித் தூஷிக்கிறதை மாப்பிள்ளை கேட்டுச் சகிக்கமுடியாமல் போவானானால், அவன் அந்த இடத்தைவிட்டு ஓடிப்போய், இவர்கள் பேசி முடியுமட்டும் ஒளித்திருப்பான். கடைசியாக அவன் போட்டிருக்கும் வஸ்திரங்களை யெல்லாம் உரிந்துகொள்ளுவார்கள். இப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கையில், பெண் எந்தவிஷயத்திலும் பிரவேசிக்காமல் பேசாமல் இருப்பாள்; ஆனால் அவளுடைய பந்துக்கள் அவளை வெகுநாளாய்ச் சாப்பிடவிடமாட்டார்கள். இப்போது மாப்பிள்ளை, தன்னை விவாக புருஷனாக ஏற்றுக்கொள்ள, அந்தப் பெண்ணைச் சம்மதிக்கச் செய்யவேண்டும். சில சமயங்களில் இவளைச் சம்மதிக்கச் செய்யும்படி ஒரு மாதம் அல்லது ஒரு வருஷம்கூடச் செல்லும். கடைசியாய் அந்தப் பெண் இந்த மாப்பிள்ளையோடு வாசச் சம்மதப்படாமற்போனால், வெகுநாள்பொறுத்துப் பிறகு அந்த மாப்பிள்ளை தகுதியான ஆளை அவளிடம் அனுப்பி அவளைப் பலாத்காரமாய்த் தூக்கிக்கொண்டுவரும்படி செய்வான். சில சமயங்களில் பெண் புருஷனுடைய வீட்டில் போய் வாழப் பிரியப்படாவிட்டால், புருஷன் பெண்வீட்டில் போய் வசிப்பான். பெண்வீட்டில் குடியிருப்பது மாப்பிள்ளைக்குப் பிரியமிருக்கிறதில்லை. ஏனென்றால், மாப்பிள்ளை எப்போதும் மாமியார் எதிரில் உட்காரவே கூடாது. மாமியாரைத் தன் கண்ணினால் ஏறிட்டுப் பார்க்கவும் கூடாது. மாமியாரை எப்போதும் அதிகமாய்க் கனப்படுத்தவேண்டும். ஏனென்றால், அவள் தன் மனைவியைப் பெற்றுக்கொடுத்தபடியால். பெண் புருஷனோடு கூடப்போக இஷ்டப்படாமலிருப்பது, அவன்மேல் உள்ள மனஸ்தாபத்தினால் அல்ல. பெண்ணுக்குப் புருஷன்மேல் இஷ்டமிருந்தாலும் அவனோடு உடனே போவது ஒரு வெட்கமானகாரியம் என்று நினைப்பாள். ஒருவேளை தப்பித் தவறிப் பெண் புருஷனோடு உடனே போய்விடுவாளானால் எல்லாரும் அவளை அவமானப்படுத்தி, சில சமயங்களில் துன்பப்படுத்துவார்கள். அதினாலேதான் பெண் அதிக லேசாய்ப் புருஷனோடு போகிறதில்லை.

இப்படிப்பட்ட வழக்க பழக்கங்களால் மேற்கொள்ளப்படுகிற தேசத்தார் முற்கூறிய வழக்கங்களை ஒத்துப்பார்த்து யோசிப்பது மிகவும் உசிதம்.

## "HE IS FAITHFUL THAT PROMISED."

## "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே."

(எபி. 10. 23.)

இராகம், காம்போதி. அடதாளசாப்பு.

பல்லவி.

பரம பிதாவே, கிருபாகரரே,
வரந்தர வந்தருளும் வருத்தப்படும் எனக்கு.

சரணங்கள்.

1. மத்தேயு வரைந்த சுவிசேஷத்திலே,
அத்தியாயம் ஏழினிலே, ஏழாம் எட்டாம் வாக்கியங்கள்,
"கேளுங்கள், அப்பொழுது கொடுக்கப்படும்;
தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;
தட்டுங்கள், அப்பொழுது திறக்கப்படும்;
கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்;
தேடுகிறவன் எவனும் கண்டடைகிறான்;
தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்."
அன்று ஏசு மொழிந்த திருவாசகம்
இன்று என்னில் பலிக்காதோ என் ஸ்வாமி?
கேட்கிறவன் எவனும் என்றார் ரட்சகர்;
கேட்கிற பாவி எனக்கு இரங்கீரோ?— பரம

2. மத்தேயு வரைந்த சுவிசேஷத்திலே,
அத்தியாயம் பத்தெட்டு, பத்தொன்பதாம் வாக்கியம்,
"உங்களில் ரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளும்
எந்த நற்காரியத்தைக் குறித்தாகிலும்
பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால்,

வானிலிருக்கிற பிதா அதைக் கேட்டு
அது அவர்களுக்கு உண்டாகும் என்று
இதை உங்களுக்குச்சொல்லுகிறேன்'' என்று
அன்று ஏசு மொழிந்த திருவாசகம்
இன்று என்னில் பலிக்காதோ என் ஸ்வாமி?
என்னோடு செபிக்க வேறாரும் இல்லையே!
என்னோடு செபியும் என் ஏசு ரட்சகா.—பரம

3. மத்தேயு வரைந்த சுவிசேஷத்திலே,
அத்யாயம் இருபத்தொன்று, இருபத்திரண்
டாம் வாக்கியம்,
''நீங்கள் விசுவாச முள்ளவர்களாக
நீங்கள் ஜெபத்திலே கேட்பீர்களானால்,
எவைகளை நீங்கள் ஜெபத்தில் கேட்பீர்களோ
அவைகளையெல்லாம்பெறவே பெறுவீர்கள்.''
அன்று ஏசு மொழிந்த திருவாசகம்
இன்று என்னில் பலிக்காதோ என் ஸ்வாமி?
கேட்டு எவைகளையும் பெறலாம் என்றார்;
கேட்டதை எனக்குத் தரத் தடையுண்டோ?
என் ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் நான்,
என் அவிசுவாசம் நீங்கும்படி செய்யும்.—பரம

4. சுவிசேஷமாம் யோவான் எழுதிய,
பதினாலாம் அதிகாரம், பதின்மூன்று, பதினாலு,
நீங்கள் என்னுடைய நாமத்தினாலேயே
நீங்கள் எதையாகிலும் கேட்பீர்களானால்,
குமாரனில் பிதா மகிமையடைய
குமாரனாகிய நானே அதைச் செய்வேன்;
''என் நாமத்தினாலே எதையுங் கேட்டாலும்
என் சொற்படி அதை நான் உங்கட்குச் செய்
வேன்''
அன்று ஏசு மொழிந்த திருவாசகம்
இன்று என்னில் பலிக்காதோ என் ஸ்வாமி?
பாவியாகிய நான் நேரே வரலாமோ!
பாவியின் நேசரே பரிந்து பேசுவார்.—பரம

5, உடன்படிக்கையை மீறேன் என்றவரே,
உதடு விளம்பினதை மாற்றிதப்பேன் என்
றீரே;
நீர் உண்மையுள்ளவர் என்று நானறிவேன்;
நீர் என்றும் மாறாது இருக்கவே இருக்கிறீர்;
நாசியில் சுவாசம் உள்ள மனிதனை
நான் நம்பவேமாட்டேன்; நான் நம்பவே
மாட்டேன்;
காற்றடிக்குந் திசை பார்த்துத் திரிவார்கள்;
மாற்றி வாக்குகளை மறுக்க அஞ்சார்கள்; [கள்;
நெருக்கிப் பிடித்தால் நீ பொய்யன் என்பார்
செருக்கினால் பல தீமைகள் செய்வார்கள்;
உன் வாயை விரிவாய்த் திற என்றீரல்லோ?
என் வாயை நிரப்பும், விடுவேனோ உம்மை?—ப

P. B.

'Paradise Lodge,'
*27th September*, 1913.

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

(தொடர்ச்சி.)

கம்பராமாயணத்தை வாசித்த வடநூல் வல்லவ ராகிய சில அந்தணர்கள், கம்பர் சில இடங்களில் வான்மீகியைக் காட்டிலும் விஞ்சியிருப்பதாகக் கூறி, சித்ரகூடவர்ணனை வாலி வதை முதலிய இடங்களில் அதிசயம் அடைகின்றனர்.

**கம்பநுடைய கவிகதி.** —''ஒட்டக்கூத்தர் கடலுவு படலம் பாடிவருகின்றனர்; நீர் எம்மாத்திரம் பாடினீர்?'' எனக்கேட்ட அரசனையும் பிறரையும் நோக்கிக் கம்பர், ''நாம் சேதுபந்தனப் படலம் பாடாநின்றோம்'' எனக் கூறினதாகக் கூறும் கன்ன பரம்பரையான வரலாறும், அதன்மேல் இராமாயணத்தை இரண்டு வாரத்தில் தினம் எழுநூறு விருத்தமாகப் பாடி முடித்தனர் எனக் கூறும் வரலாறும், உண்மையென்றே தோற்றுகின்றன. இராமாயணத்தில் எந்த ஏட்டைத் தள்ளிப் பார்த்தாலும், கவிகதி தட்டுத்தடையின்றி நீரோட்டமே போலச் செல்வது கட்புலனாகும். யாதொரு வரிதானும் வருந்திப் பாடினதான குறிகள் யாதொன்றும் தோன்றுவதில்லை. உலகியலை நன்கறிந்தவராய்க் கல்விக் களஞ்சியமாய்க் கவிபாடுந் திறம் முதிர்ந்தவரான கம்பர் அஸாதாரணமான காவ்யத்தை அநாயாஸமாகவே செய்து முடித்தார். பாஷைநடையின் ஸூக்ஷ்மங்களையும் சொல்லாற்றலையும் பொருளாற்றலையும் நன்குணர்ந்தவராதலின், இவர் கவிபாடா நிற்கையில் கருத்தொன்றனையே கருதியிருப்பர். சொற்கள் அதற்கியையத் தாமே வந்தியையும், ''சேதுபந்தனம் வரையில் பாடிவிட்டீரா? அப்படியானால் அந்தப் படலத்தில் ஒரு கவியைச் சொல்லிக் காணீர்'' என்ற உடனே,

> குமுத னிட்ட குலவரை கூத்தரில்
> திமிதி மிட்டுத் திரியுந் திரைகடல்
> தமித மூர்புக வானவர் துள்ளினர்
> அமுத மின்னு மெழுமெனு மாசையால்

என்று அப்பொழுதே பாடினரென்பதற்கு வேறு சான்று வேண்டா: அவர் முதனாள் பாடிய ஆற்றுப் படலத்தில்,

> மலையெ டுத்து மரங்கள் பறித்துமா
> டிலைமு தற்பொருள் யாவையு மேந்தலால்
> அலைக டற்றலை யன்றணை வேண்டிய
> நிலையு டைக்கதி நீத்தமந் நீத்தமே

என்று பாடிய விருத்தமே அதற்கு இன்றளவும் சான்று பகர்கின்றது. நேற்றுப் பாடிய சேதுபந்தனப் படலத்தின் செய்தி, இன்று ஆற்றை வர்ணிக்கும்போது கற்பனையாக அமைந்ததன்றோ? ஆகவே இவர் ''எழுந்த நாயிறு விழுவதன் முன் கவி பாடின தெழுநூறே'' என்பதில் ஐயமில்லை.

**அவர் இயற்றிய ஏனை நூல்கள்.** —கம்பநாடருடைய கவித்திறமெல்லாம் இராமாயணத்தில் முற்றும் ஏறிநின்றது. அத்திறம் கட்புலனாகின்ற மற்ற நூல் சடகோபரந்தாதி ஒன்றே. ஸரஸ்வதியந்தாதியைச் சிறுபிராயத்தில் பாடினார் போலும். அவ்வந்தாதியில் ஆசிரியரது முதிர்ந்த திறம் கட்புலனாவதின்று. குமரகுருபரர் பாடிய சகலகலாவல்லிமாலையின் சிறப்புத்தானும் கம்பர் பாடிய ஸரஸ்வதி யந்தாதியில் த்வனிப்பதில்லை. ஆயினும், ஸரஸ்வதியை உபாசித்துவந்தால் வாக்கு வளம் உண்டாகுமென்று அவர் நம்பினவரே யாவர்.

> படிக நிறமும் பவளச்செவ் வாயும்
> கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
> அல்லும் பகலு மநவரத முந்துதித்தால்
> கல்லுஞ்சொல் லாதோ கவி.

இலக்குமி யந்தாதி என்பதொன்று இவர் பாடினதாகக் கூறுகின்றனர். இதில் கம்பர் வாக்கு ஓரடியளவாகத்தானும் இலதென்றே காண்கின்றது.

(இன்னும் வரும்.) T. C. M.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager,
Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### அக்டோபர்மீ பஞ்சாங்கம்.—

வாரம். அக்டோபர்மீ = புரட்டாசி—ஐப்பசி. ⊙ பௌர்ணமி, 14உ ● அமாவாசை, 29உ

| வாரம். | | | | | | புரட்டாசி—ஐப்பசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 3 | 10 |
| திங்க ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 4 | 11 |
| செவ் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 5 | 12 |
| புதன்... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 30 | 6 | 13 |
| வியா ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 31 | 7 | 14 |
| வெள்... | 3 | 10 | 17 | 24 | 31 | 18 | 25 | 1 | 8 | 15 |
| சனி ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 2 | 9 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மெமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 4 NOV 1913 MADRAS
161197

सत्यमेव जयति
THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

NOVEMBER, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. நவம்பர்மீ, 1913.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**உலகில் கனத்தியான பெண்.** —லாம்பெஸ்ட் என்று ஒரு வாலிபப் பெண்ணிருக்கிறாள். அவளுக்கு வயது இருபதுதானாகிறது. ஆயினும் அவளுடைய நிறை 560 பவுன், அதாவது 4 ஆள் கனமிருக்கிறாள்.

**அஜீரணத்துக்கு மருந்து.** —ஒரு உவெயின் கிளாஸ் சுத்த ஜலத்தில் ஒரு தேக்கரண்டி கிளிஸெரின் விட்டு போஜனத்துக்குப்பின் உட்கொண்டு வந்தால் எப்படிப்பட்ட அஜீரணமும் நிவிர்த்தியாகுமென்று சொல்லப்படுகிறது.

**பால்கன் யுத்தம்.**—இந்த யுத்தத்தினால் உண்டான பயன்: (1) துருக்கி இராஜ்யம் ஒரு பாகத்தை இழந்துவிட்டது. (2) பால்கன் அரசுகளுக்குச் சுயாதீனம் உண்டாயிற்று. (3) கீழ்நாட்டுக் காரியாதிகளைக் குறித்த விஷயத்தில் வலிய அரசுகளுக்கிருந்த காரிய கருத்து மாறுதலடைந்தது.

**பொன் கடிதம்.** —மாஸ்கோ நகரில் ஸ்பிரிடினாப் என்று ஒரு தனவந்தனுண்டு. அவன் தன் கலியாண நாளைக் கொண்டாடினபோது, முழுமையும் பசும்பொன்னாற் செய்த கடிதங்களில் திருமுகமெழுதித் தன் சிநேகிதர்களுக் கனுப்பிவைத்தான். பிரதி கடிதத்தின் விலை 6 பவுன் அல்லது ரூ. 90. இப்படி 200 திருமுக மனுப்பிவைத்தான். ''பணம் பத்துவகையும் பண்ணும்.''

**லண்டனில் நிலக்கிரயம்.** —லண்டன் பட்டணத்தில் சில விடங்களில் நிலங்களுக் கிருக்கிற விலையைக் கவனித்தால் பிரமிப்பை யுண்டாக்கும். செரிங் கிராஸ் என்னுமிடத்தில் 46½ சதுர அடி நிலம் 11,737 பவுனுக்கு விற்கப்பட்டது. இந்த விகிதப்படி ஒரு எக்கருக்கு 11,09,000 பவுனாகிறது. இன்னொரு இடத்தில் ஒரு அடி நிலம் 70 பவுனுக்கு விற்கப்பட்டது. இதன்படி ஒரு எக்கர் 30,49,200 பவுன் அல்லது 457 லக்ஷம் ரூபாயாகிறது.

**ஆகாய கமன வித்தையில் தேர்ச்சி.**—ஆகாய கமன வித்தையில் ஆச்சரியமான தேர்ச்சி யுண்டாயிருக்கிறது. பீகூட் என்கிற பிரஞ்சு ஆகாய கமனி தன்னுடைய ஆகாய ரதத்திலேறி மேலே பறந்து போய் ஆச்சரியமான வித்தைகளைச் செய்து காட்டினார். இரதத்தைத் தலைகீழாய்ப் புரட்டி மேல் புறமும் பக்கமும் பறந்துபோனார். அவர் தலை கீழும் இரதத்தின் சக்கரம் மேலுமிருக்க அவர் மேலே பறந்துபோனது ஜனங்களுக்குப் பிரமிப்பையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கினது. சகல காரியத்திலும் தேர்ச்சியுண்டாய் வருவதை நாம் கவனியாமலிருக்க முடியாது.

**குருடி கண்பெற்றது.** —சிகாகோ பட்டணத்தில் 50 வருஷம் குருடாயிருந்த ஒரு ஸ்திரீ வைத்திய சிகிச்சையால் கண்பெற்ற சங்கதி வந்திருக்கிறது. அவள் 16-ம் வயதில் கண்களை இழந்துவிட்டாள். 20-ல் கலியாணஞ் செய்து 8 பிள்ளைகளைப் பெற்றாள். அவைகளில் 6 இன்னு முயிரோடிருக்கின்றன. சில வருஷங்களுக்கு முன்னே அவளது கணவன் இறந்துபோனான். அவனை அவள் கண்ணால் பார்த்ததேயில்லை. இப்போது அவள் கண் கிடைத்த பிறகு தன் பிள்ளைகளைக் காண எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்! தன் கணவன் கல்லறையண்டை போய் ''சமயம் போயிற்றே, சமயம் போயிற்றே'' என்று ஓலமிட்டழுதாள்.

**திராஜனும் ரபியும்.** —திராஜன் சக்கரவர்த்தியைக் குறித்து எபிரெய கதை யொன்றுண்டு. அவன் ஒரு யூத ரபியை நோக்கி, ''கடவுள் எங்குமிருப்ப துண்மையானால் இப்பொழுது இங்கே அவரை நான் பார்க்கட்டும்'' என்றானாம். ரபி, சக்கரவர்த்தியை அழைத்துக்கொண்டுபோய், ''கடவுளுடைய ஸ்தானாபதிகளி லொன்றாகிய இந்தச் சூரியனை நோக்கிப் பார்'' என்ன, சக்கரவர்த்தி ''என் கண் கூசுகிறது'' என்றானாம். அப்போது ரபி, ''நல்லது அவரது ஸ்தானாபதிகளி லொன்றையேறெடுத்துப் பார்க்கக்கூடாத நீ, இவைகளையெல்லாம் சிருஷ்டித்த சிருஷ்டிகரின் அளவற்ற மகிமையை எப்படிப் பார்க்கக்கூடும்'' என்றுத்தரவு சொன்னாராம்.

**கார்டிப் நிலக்கரிக்கனி ஆபத்து.** —வேல்ஸ் நாட்டில் கார்டிப் நகரில் அக்டோபர்மீ 13உ ஒரு பெரிய நிலக்கரி சுரங்கத்தில் வெடியாபத்துண்டாகிப் பயங்கரமான உயிர்ச்சேதம் நேரிட்டது. 500-க் கதிகமான சுரங்க வேலையாட்கள் இரண்டு மைல் ஆழத்தி லிறங்கி வேலை செய்துகொண்டிருக்கையில் வெடியுண்டாகித் தீப்பிடித்து 400-க் கதிமானபேர் வெந்தும் பூமியில் புதைக்கப்பட்டும் போனார்கள். தப்பித்தவர் பெரும்பாலும் காயமடைந்தவர்களே. மொத்தம் 417 பேர் மடிந்துபோனதாகக் கணக்கிடப்படுகிறது. பலர் ஆஸ்பத்திரியில் படுகாயமாய்க் கிடக்கிறார்கள். சென்ற 70 வருஷ காலமாய் இவ்வளவு பெரிய ஆபத்து நடக்கவில்லை என்னப்படுகிறது. ஆயிரத்துக் கதிகமான ஸ்திரீ பிள்ளைகள் நாதனற்றுப் போனார்கள். ஒரு ஸ்திரீயினுடைய கணவன், மூன்று சகோதரர், இரண்டு பிள்ளைகள் சுரங்கத்தில் மாண்டுபோயினர். பிரேதங்களை எடுக்கக்கூட வழியில்லாமல் புதைக்கப்பட்டுப் போயினர். உயிர்ச்சேதமொழிய கம்பெனியாருக்கு 100,000 பவுன் பொருள் நஷ்டமும் நேரிட்டது.

**அல்பானியாவின் நிலைமை.**—பால்கன் நாடுகளில் ஒன்றான அல்பானியா, சமீபகாலத்து யுத்தத்தினால் சுயாதீனமாகித் தனியரசுக்குரிய நாடாகும் சிலாக்கியத்தைப் பெற்றபோதிலும், ஐரோப்பிய வலிய அரசுகளின் சிரத்தைக் குறைவால் மகா நிர்ப்பந்த நிலைமையிலிருக்கிறது. வலிய அரசுகள் ஏற்பாடுசெய்த எல்லை முறையை அல்பானியர் அங்கீகரியாமல், சர்வியரோடும் கிரேக்கரோடும் முரணிப் போர் தொடுத்துக்கொண்டார்கள். அரசுகள் பிரேரபணைப்படி ஐரோப்பிய இளவரசை அந்நாட்டின் மன்னனாக நியமனஞ்செய்யுமுந்தித் தான்தோன்றி யரசுகள் இரண்டு அந்நாட்டில் முளைத்துக்கொண்டன. இதனால் அந்நாடு முழுவதும் தாறுமாறாயிருக்கிறது. வலிய அரசுகள் முயன்று அந்நாட்டைச் சீர்ப்படுத்தினால்மாத்திரம் பால்கன்நாட்டில் சமாதானமிருக்கும். இல்லையானால் செர்வியரும், பல்கேரியரும் அல்பானியாவுக்கு விரோதமா யெழும்பி அதைத் தங்களுக்குள்ளே பங்குபோட்டுக்கொள்ள நேரிடும். வலிய அரசுகள் பால்கன் யுத்தம் நெடுகிலும் காட்டின வெதுவெதுப்பையே காட்டுமோ அல்லது சுறுசுறுப்பைக் காட்டுமோ இனிப் பார்க்கவேண்டும்.

**சிலோனில் வெள்ளச்சேதம்.** — அக்டோபர் மாத ஆரம்பத்தில் சிலோனில் அபரிமிதமான மழை வருஷித்ததினாலே பல இடங்களில் வெள்ளமுண்டாகி அநேக கிராமங்களும் பயிர் நிலங்களு மழிக்கப் பட்டுப் பல உயிர்ச்சேதங்களும் நேரிட்டன. கொளும்பு பக்கத்தில் வெள்ளம் அபரிமிதமாயிருந்தது. ஒரு கிராமத்தில் 250 பேர் மீண்டுவர வழியின்றி வெள்ளத்தி லகப்பட்டுக்கொண்டார்கள். தாழ்விடங்களிலுள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் வீடு வாசலிழந்து தவிக்கிறார்க ளென்னப்படுகிறது. இரத்னபுரத்தில் மிகு சேதம் நேரிட்டது. ஆஸ்பத்திரியில் வெள்ளம் வந்து நோயாளிகளைக் காப்பாற்றினது அற்புதமாய் முடிந்தது. கண்டிப் பிராந்தியங்களிலும் பெருவெள்ளம் வந்தது. கிதாய்பேயில் அநேக வீடுகள் அடித்துக்கொண்டு போகப் பட்டன. ஜனங்கள் மரங்களிலும் கிளைகளிலு மேறி உயிர்தப்பினர். பிரசவ நிலைமையிலிருந்த ஒரு ஸ்திரீ மரத்தில் தொத்திக்கொண்டிருந்தாள். இந்த வெள்ளம் இப்படி அநேகருக்கு நஷ்டமாயிருந்தாலும் ஒரு மகமதியனுக்கு லாபமாயிருந்தது. எப்படியெனில் வெள்ளத்தி லடித்துப்போன ஒரு மூங்கில் தடியை அவனிழுத்து அதன் நுனியில் துணியால் அடைக்கப்பட்டிருந்ததை யெடுத்துப் பார்க்க, 3,000 ரூபாய் நோட்டுகள் அதிலிருந்து எடுத்துக்கொண்டான்.



பூகம்பம்.

## CLEANLINESS.

## சுத்தம்.

"சுத்தம் சோறிடும்" என்று மனிதர் இயல்பாகச் சொல்லிக்கொள்வது உலக வழக்கமாயிருக்கிறது. சுகத்தைப் பேணிக்கொள்வதற்கான முறைமைகளில் சுத்தமும் ஒன்று. சுகாதார விதிகளை நாம் ஆராய்ந்து பார்க்குமளவில் சுத்தம் அத்யாவசியமானதென்று தெளிவாய் அறிகிறோம். சாதாரணமாக மனிதர்களுக்குள் ஐரோப்பியரான வெள்ளை மனிதர் சுத்தத்தை யனுசரித்துத் தங்கள் தேகம், உடை, பாண்டங்கள், வீடு இதுமுதலான யாவற்றையும் கூடியவாறு சுத்தமாக வைத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். இப்படிப் பற்பல விதங்களில் சுத்தமாய் இருக்க விரும்புவோர் தங்கள் தேக ஆரோக்கியத்தை முன்னிட்டே அவ்வண்ணம் செய்துகொள்ளுகிறார்கள் என்பதாகக் காணப்படுகிறது. இது நல்லதுதான். ஆதலால் இதுசம்பந்தமாய் நான்குவித சுத்தாங்கங்களைப்பற்றிச் சில விஷயங்களை நாம் அறிந்துகொள்வது மிகவும் உசிதமாயிருக்கும்.

1. **சரீர சுத்தம்.**—சரீர சுத்தம் தேகசுகத்துக்குப் போந்த ஆதாரமாயிருப்பதால் மனிதர் அடிக்கடி குளித்துத் தங்கள் தேகத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இப்படிச் செய்வது பற்பலவித வியாதிகள் கூடியவாறு அணுகாமலிருப்பதற்கு ஏற்ற சாதனமாய் இருக்கிறது. ஆதலால் சுத்தமே சுகத்துக்கு அவசியம் என்பதைத் தெளிவாய் அறிகிறோம்.

2. **வஸ்திர சுத்தம்.** — கந்தைத்துணியும் காரிவேஷமுமாய் அழுக்கு வஸ்திரங்களை அணிந்திருக்கும் மனிதர் அல்லது பிள்ளைகள் மற்றவர்களுடைய பார்வையில் அருவருப்பை யுண்டாக்கக் கூடியவர்களா யிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய தோற்றமும் அவ்வசுத்த வஸ்திரங்களிலிருந்து உண்டாகும் துர்நாற்றமும் மிகவும் அரோசிக்கப்படத்தக்கதாயிருக்கின்றது. இப்படிப்பட்ட அசுத்த வஸ்திரங்களணிந்து நிர்ப்பாக்கிய கோலமாயிருப்பவர்களெநேகர் பற்பலவிதமான வியாதிஸ்தர்களாயும் சுகவீனர்களாயு மிருக்கக்கூடு மென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வித ஸ்திதியிலுள்ளவர்களைப் பிறர் கேவலமாய் நினைப்பதற்கும், அவர்களோடு நெருங்கி வாசஞ்செய்வதற்கும், மதிப்பாய் எண்ணுவதற்கும் கிஞ்சித்தும் இடமிராது. ஆதலால் வஸ்திர சுத்தம், மதிப்புக்கு அவசியமானதென்று நாம் தெளிவாய் அறிந்துகொள்ளுகிறோம்.

3. **நடக்கைச் சுத்தம்.**—ஒருவன் தன்னைச் சீர்கேடான நிலைமைக்குட்படுத்திச் சேவலமான நடையுடை பாவனைகள் தன்னில் காணப்படும்படி செய்துகொள்ளுகிறபோது அவனுடைய நிலைமை



கள் பரிதபிக்கப்படக் கூடியவைகளாயிருக்கின்றன. அவன் மனைவி மக்கள் அவனை வெறுக்கின்றனர்; பெற்றோர் புறக்கணிக்கின்றனர், அயலகத்தார் அவமதிக்கின்றனர், சிநேகிதர் இகழ்கின்றனர். எல்லோராலும் அவன் கனவீனப்படுத்தப்பட்டுக் கடைசியாக அவமானத்துக்குள்ளாகிறான். இப்படிப்பட்டவனுடைய நிலைமைகளும் ஜீவியமும் எவ்வளவோ பரிதபிக்கப்படக் கூடியதாக விருக்கின்றது. ஆதலால் நடக்கைச் சுத்தம் கனத்துக்கு அவசியம் என்றறிகிறோம்.

4. **இருதய சுத்தம்.**—இந்தச் சுத்தம் மேற்சொல்லப்பட்ட மூவகையான சுத்தங்களைவிடச் சிறந்ததும் அதிசிரேஷ்டமுமானது. ஏனென்றால் அவைகள் லௌகிக சம்பந்தமான இம்மைக்குரிய காரியங்களாயும் மனுஷரால் கவனிக்கப்படக்கூடிய காரியமாயு மிருக்கின்றன. ஆனால் இருதய சுத்தமோ வைதிக சம்பந்தமான மறுமைக்குரிய காரியமாயும் பாவஜென்மிகளான மனுஷரால் அல்ல, பரிசுத்தமுள்ள பரமபிதாவாகிய தேவாதி தேவனால் கவனிக்கப்படக் கூடியதாயு மிருக்கிறது.

ஒருவன் சுகத்தைப் பாதுகாத்துக்கொள்ளத் தன் தேகத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளக் கூடும். மற்றவர்கள் தன்னை மதிக்கத்தக்கதாகச் சுத்த வஸ்திராபரணங்களை அணிந்துகொள்ளக் கூடும். பிறரால் கனத்தை யடைந்துகொள்ளும் நோக்கமாய்த் தன் நடக்கைகளைச் சீர்படுத்திக்கொள்ளக்கூடும். ஆனால் அவன் தன் இருதயத்தைத் தானாகவோ அல்லது மற்றவர்களைக்கொண்டோ சுத்தப்படுத்திக்கொள்வது கிஞ்சித்தும், கூடாதகாரியம். ஏனென்றால் மனிதன் புறம்பான தோற்றங்களையும் நிலைமைகளையும் லேசில் கண்டுகொள்ளக்கூடும். ஆனால் உள்ளான காரியங்களையும் நிலைமைகளையும் கண்டுகொள்ள முடியாது. சத்தியவேதமும் அப்படித்தான் சொல்லுகிறது. "மனிதன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயங்களைப் பார்க்கிறார்" என்கிற திருவசனத்திற்கேற்கக் கடவுள் ஒருவரே மனிதனுடைய உள்ளும் புறம்புமான காரியங்களையும் நிலைமைகளையும் அறிந்துகொள்ளக் கூடியவர். புண்ணிய நதிகள் என்று இந்துக்கள் சாதாரணமாய்ச் சொல்லிக்கொள்ளுகிற ஆறுகளில் ஸ்நானம் செய்வதினால் தங்கள் பாவங்கள் விமோசனமடைகின்றனவென மௌடீகத்தனமாய் நினைப்பவர்களைப் போல ஒருவன் அப்படிப்பட்ட நதிகளில் முழுகித் தன் இருதயத்தைச் சுத்தப்படுத்தப் பார்ப்பது மதியீனம். அப்படிப்பட்ட முழுகுதல் தேக அழுக்கை நீக்குமேயன்றி உள்ளான இருதய அழுக்காகிய பாவத்தை நீக்கவும் சுத்தப்படுத்தவும் கூடாது. தன்னால் அப்படிச் செய்துகொள்ளக் கூடாவிட்டாலும் மற்றவர்களைக்கொண்டு அப்படிச்செய்துகொள்ளலாம் என்று யோசிக்கும் ஒருவன் சுத்த மதியீனன். ஏனென்றால், மானிட ஜென்மிகள் யாவரும் அவ்வித ஸ்திதியில் இருப்பவர்களே. எல்லாருடைய இருதயங்களும் கேடுபாடுகள் நிறைந்துள்ள இருதயங்களாய்த்தான் இருக்கின்றன. சத்திய வேதமும் அப்படித்தான் சொல்லுகிறது. "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? (எரே. 17. 9.) என்று தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் "இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாக்ஷிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்" (மத். 15. 19, 20.) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட கேவலமான ஸ்திதியில் இருக்கிற இருதயத்தை எவ்வாறு ஒருவன் சுத்தப்படுத்திக்கொள்ளக்கூடும்?

மேலும் ஒருவன் மேற்சொல்லப்பட்ட மூவகையான சுத்தங்களை யனுஷ்டித்து இருதய சுத்தத்தை அலக்ஷியஞ்செய்து கவலையீனமாய் இருப்பானேயானால் அவனுடைய பிந்தின நிலைமைகள் முந்தின நிலைமைகளைப்பார்க்கிலும் மிகவும் கேவலப்படத் தக்கதாயிருக்கும். பாவஜென்மிகளான மனிதர், பாவமும், அக்கிரமமும், இருளும் நிறைந்த தங்கள் இருதயத்தைச் சுத்தப்படுத்திக்கொள்ளத்தங்களாலே கூடாதென்கிறோமானால், அதைச் சுத்தப்படுத்தக் கூடியவரும், பாவம் கிஞ்சித்தேனுமில்லாத ஓர் பரிசுத்தமுள்ள புண்ணியவானிடத்தில் அதை ஒப்புக்கொடுத்துவிட வேண்டியது அவசியம். ஏனென்றால், மரணத்துக்கேதுவான வியாதியுள்ள ஒருவன் தானே அவ்வியாதியைத் தீர்த்துக்கொள்ளக் கூடாமல் வியாதிகளைக் கூடியவாறு குணமாக்கக் கூடிய தக்க வைத்தியனைத் தேடி, அவிழ்தங்களைச் சாப்பிட்டு அதின் மூலமாய்ச் சுகத்தைப் பெற்றுக்கொள்வதுபோல இருதயம் சுத்தமாக்கப்படப் பரம வைத்தியனாகிய சாக்ஷாத் கடவுளை அவன் அவசியம் தேடவேண்டும்.

காரியங்கள் இப்படியாக இருப்பதால், பாவங்களைச் சுத்தமாக்கக் கூடியவரும் பாவம் நிறைந்த இருதயத்தைத் துப்புரவாக்கக் கூடியவருமான ஓர் புண்ணியவானைத்தேடினதுண்டா? இல்லையானால் இதுவே சமயம். இன்றே ஏற்றநாள். பாவம் போக்கும் பிராயச்சித்த பலியாக இப்பூலோகத்தில் மனுஷாவதாரமாய்த் தோன்றிய தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவே அந்தப் பரிசுத்தமுள்ள புண்ணியநாதர். இவர் ஒருவரே பாவ இருதயங்களைச் சுத்தமாக்கக் கூடியவர்; இவர் சர்வ வல்லமையும், சர்வ ஞானமும், சர்வ சக்தியுமுள்ளவர். வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரும் அதிபதியுமானவர். சகலமும் இவருக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இவரால் உண்டான புண்ணிய பலன்களால், இருதய சுத்தமும், பாவமன்னிப்பும் இலவசமான இரட்சிப்பும், நித்திய ஜீவனும் உண்டாயிருக்கிறது. அவர்தாமே தாம் அருள்செய்திருக்கும் திருமறையில் "அப்பொழுது நான் உங்கள் பேரில் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும், உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி, உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தையும் கொடுப்பேன்" என்று எசே. 36. 25-ல் தெளிவாய்ச் சொல்லுகிறார். இப்படியாக இருதயம் சுத்தமாக்கப்பட்டதின்பின் நமது ஜீவியம் புதிது. நடக்கை, செய்கை, கிரியைகள் சீர்மையுள்ளது. பரிசுத்தமுள்ள தேவனைச் சந்திக்கச் சிலாக்கியம் பெறுகிறோம். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத். 5. 8.) என்று திருமறை நமக்குத் தெளிவாய்ச் சொல்லுகிறது. இருதய சுத்தம் பரத்துக்கு அவசியமாய் இருப்பதால், இந்தச் சிறந்த பாக்கியத்திற்குப் பாத்திரவான்களாகும்படி பிரயாசப்படுவோமாக.

தஞ்சை: J. பொன்னுசாமி.
சுவிசேஷப் பிரசங்கி.

## WHATEVER IS TOUCHED BECOMES GOLD.

## தொட்டதெல்லாம் தங்கமானது.

கிரேக்க தேசத்தில் ஒரு கதை சொல்லுவார்கள். அது என்னவென்றால், ஒருகாலத்தில் ஒரு இராஜன் இருந்தானும், அவனுடைய பெயர் மிடாஸ். அவன் எதை விரும்பிக் கேட்டாலும், அவன் கும்பிட்டுவந்த தேவதை தருமாம். ஆகையால், அவன் ஒருநாள் தன் தேவதையினிடம் சென்று, தான் தொட்டதெல்லாம் தங்கமாக வேண்டுமென்று வேண்டிக்கொண்டான், அப்படியே அந்த ராஜனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அந்தத் தேவதை வரம் கொடுத்ததாம். இந்தவித வரத்தை அவன் பெற்றதால், அவன் தன் ஜீவகாலத்தில் அறியாத துன்பத்தை அநுபவித்தான். இவன் கல்லுகளையும் மரங்களையும் தங்கமாக்கிக் கடைசியாய் இவைகளை எல்லாம் பார்த்து, "ஓ! இவைகள் எல்லாம் இருந்து எனக்கு என்ன பிரயோஜனம். எனக்குச் சாப்பிட ஆகாரம் இல்லையே, எனக்கு அதிக பசி எடுக்கிறதே என்றான்." ஏனென்றால், இவன் தொட்டதெல்லாம் தங்கமாக மாறினது. இவன் சாப்பிடும்படி தொட்ட ஆகாரம் தங்கம், குடிக்க எடுத்த தண்ணீர் தங்கம், இவனண்டை வந்த பிள்ளைகளை முத்தமிட்டவுடனே அவர்களும் தங்கம், இவனுடைய மனைவியைத் தொட்டவுடனே அவளும் தங்கம், எல்லாம் தங்கம், கடைசியாக, இந்த ஐசுவரியத்தால் வெகு பாடுபட்டு, திரும்பவும் தன் தேவதையிடம் சென்று, தனக்கு அளித்த அந்த வரத்தை எடுத்துப்போடும்படி பிரார்த்தனை செய்தானும்.

## THE GOOD NEED NOT FEAR DEATH.

## பக்தன் மரணத்திற்குப் பயப்பட வேண்டியதில்லை.

இவ்விருத்தாந்தத்தில் சொல்லப்படுகிற ஒரு விருத்தாப்பியனைப்போல் நம்மிலே யார் மரணத்தைப்பற்றிச் சொல்லக்கூடும்?

விருத்தாப்பியமான ஒரு மனுஷன், தன்னுடைய எழுபத்தைந்தாம் வருஷத்தை முடித்தபிறகு, தன் சிநேகிதனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் உள்ள அவனுடைய சொந்த வார்த்தைகளை இங்கெடுத்துக் காட்டுவோம்.

"நான் இன்று எழுபத்தைந்து வயதுடையவனாய் இருக்கிறேன். இவ்வளவு வயதுடையவனாய் இருக்கிறேனே என்பதைப்பற்றி எனக்குக் கொஞ்சமேனும் அச்சமும் பயமும் இல்லை. நான் அறிந்தமட்டும் இன்னும் பத்து வருஷம் அல்லது அதற்கு மேலே ஜீவிப்பேன் என்று சொல்லக்கூடும், நான் அப்படி ஜீவிக்கும்போது, நான் என்னையே கவனித்துக்கொள்ளச் சக்தியும், நான் நேசிக்கிறவர்களுக்கு உதவி செய்யக்கூடுமானால் நான் அப்படி ஜீவிக்கச் சந்தோஷப்படுவேன். இதோடுகூட, எனக்கு முன்னாலே என்னைவிட்டுப் பிரிந்துபோய் இருக்கிறவர்களைப் பார்க்கும்படி நான் அதிகமாய் வாஞ்சிக்கிறேன். இதினிமித்தம் மரணம் எனக்கு ஒரு பயங்கரமானதல்ல, நான் ஒரு மகிமையான ஜீவியத்தில் பிரவேசித்து, நாவினால் சொல்லக் கூடாத சந்தோஷத்தை அனுபவிக்க, மரணமானது ஒரு வாசலைப்போல் அதற்குள் வழி நடத்துகிறது என்று அறிந்திருக்கிறேன்.

நான் மரணத்தைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் ஒரு நிச்சயமான ஆறுதல் எனக்கு உண்டாகிறது; அது என்னவென்றால், எப்படியிருந்தாலும் நான் ஒருநாள் மரணதூதனைச் சந்திப்பேன்; அவன் என்னைத் தன் கட்கத்தினால் வெட்டுவான், அப்போது நான் அந்த யுத்தத்திலிருந்து ஜெயம்பெற்று நித்திய ஜீவனில் பிரவேசிப்பேன் என்று சந்தேகமில்லாத மனஉறுதி எனக்குள் நிலைகொண்டிருக்கிறது."

## MAN'S MASTERY OF THE AIR AS A ROADWAY.

## ஆகாயத்தில் பாதைபோட மனுஷனுக்குண்டான வெற்றி.

ஆகாய விமானம் அல்லது பறக்கிற இயந்திரம், ஒரு இடத்தைவிட்டு இன்னொரு இடத்திற்குப் போகத்தக்க ஏதுவான கருவியாய் ஸ்திரப்பட்டுவிட்டதென்று காணப்படுகிறது.

ஏறக்குறைய இரண்டு வருஷத்திற்கு முந்தித் தான் ஒரு பிரான்சுக்காரன் தன் ஆகாய விமானத்திலேறி, ஆங்கில நீர்க்கால்களைக் கடந்து பிரயாணஞ் செய்து தன் தைரியத்தை வெளிப்படுத்தி உலகத்தார் எல்லாரையும் ஆச்சரியத்தால் வியக்கும்படி செய்தான். ஜூலை மாதம் கடைசியில் ஒரு நாள் பதினொருபேர் மேற்படி கால்வாய்களை யாதொரு சேதமும் ஆபத்தும் நேரிடாதபடி சுகமாய்க் கடந்து போனார்கள். அவர்களில் ஒருவன் ஒரு பிரயாணியைக்கூடத் தூக்கிக்கொண்டு போனான். அமெரிக்கா தேசத்தில் சமீபமாய் ஒரு துரைமகன் தன் ஆகாய விமானத்திலேறி, பாஸ்டனிலிருந்து புறப்பட்டு, கொஞ்சதூரம் ஒரு பட்டணத்தின் வழியாய்ப் போகும்போது, அங்கே சில மாணாக்கர்கள் போட்டி பந்தயமிடுகிறதை ஆகாய விமானத்தில் இருந்து கொண்டே, ஒரு பறவை தன் இறக்கைகளை அடித்துக்கொண்டு வட்டமிடுகிறதைப்போல் செய்து, அந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு, அதன்பிறகு நியூயார்க் என்கிற இடத்திற்கு வந்து, திரும்பவும் அந்த இடத்திலிருந்து அநேக ஸ்தலங்களுக்குச் சுற்றுப்பிரயாணஞ் செய்தார். அவரும், ஒரு பிரயாணியை அவரோடு கூட்டிக்கொண்டுப் போனார். ஒரு அபாயமும் கஷ்டமும் நேரிடவில்லை.

இதினாலே, ஆகாய விமானம் கூடிய சீக்கிரத்தில் ஒரு சாதாரண கருவியைப்போல் அபாயமில்லாமல் தானாய் இயங்கும் இயந்திரம்போலாகும்.

THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

இந்த உன்னத இரகசியத்தை அறிந்தவன் இனி செய்யவேண்டியது என்ன? தான்மாத்திரம் முக்தியடைந்தது போதும் என்ற எண்ணம் முதலில் உண்டானபோதிலும், மானிடர்மீது தயைகூர்ந்து சர்வத்திராளுக்கும் இச்செய்தியைப் பிரசுரிக்கத் தீர்மானித்தான். அவனுடைய உபதேசத்தின் சாராம்ஸம் பின்வருவதே:—

1. பிறப்பு சஞ்சலம், வயோதிபம் சஞ்சலம், வியாதி சஞ்சலம், மரணம் சஞ்சலம், லோகாசாபாசம் சஞ்சலமே.

2. பிறப்பும், மறுபிறப்பும், புனர் ஜன்மமும், ஜீவன தாகத்தினாலும் இச்சையினாலும் உண்டாகிறதேயொழிய வேறல்ல.

3. இத்தாகத்தினின்று விடுதலைபெறும் வழி இச்சை நிக்ரகமே.

4. இச்சை நிக்ரகம் செய்வதற்கு அஷ்டமார்க்க முள. அவையாவன:—

1. நல்லெண்ணம், அதாவது வீண்பக்தி மாயையைக் கடந்த யோசனை.

2. நல்லாசை, அதாவது அறிவுள்ளோர்க்கேற்ற உன்னத அபேக்ஷை.

3. நல்வாக்கு, அதாவது தயை உண்மை நிறைந்துள்ள கபடற்ற பேச்சு.

4. நன்னடக்கை, அதாவது சமாதானமும் உண்மையும் சுத்தமுமுள்ள நடபடி.

5. நல்ஜீவனம், அதாவது உயிர்ப்பிராணி எதையும் வதைக்காத பிழைப்பு.

6. நன்முயற்சி, அதாவது சுயபயிற்சிக்கும் தன்னடக்கத்திற்கும் வேண்டிய பிரயாசம்.

7. நன்மனம், அதாவது ஜாக்கிரதையும் விழிப்புமுள்ள மனசு.

8. நல்தியானம், அதாவது ஜீவனத்தின் உன்னத இரகசியங்களைப்பற்றிய ஆழ்ந்த யோசனை.

புத்தனும் அவனுடைய ஆதி சீஷரும் இச்சத்தியங்களை வெகு தாராளமாய்ப் போதித்தார்கள். புத்தன் தானே பேஹார், அயோத்தியா மாகாணங்களில் அலைந்து திரிந்து இப்புது உபதேசத்தை எங்கும் பிரபல்லியமாக்கினான். இதுவரை பிராமணர் மதம் ஜனங்கள் அறியாத சமஸ்கிருத பாஷையிலிருந்தது. இப்போதுதான் மத உபதேசங்கள் சாதாரண ஜனங்கள் பேசும் பாஷையில் முதல் முதல் தெரிவிக்கப்பட்டது. புத்தன் கி. மு. 477—ல் காலஞ்சென்றான்.

புத்தன் மரணத்துக்குப் பிற்பாடு அரசர் செல்வாக்கினாலேயே புத்தமதம் விருத்தியடைந்தது. கி. மு. 259—ல் அசோகன் அரசன் இம்மத பிரபல்லியத்திற்காக எடுத்துக்கொண்ட பிரயாசம் இம்மட்டென்றல்ல. புத்தமதமே தன் ராஜ்யத்தில் ஏற்பட்ட சமயமென்று விளம்பரஞ்செய்தான். புத்தமத சித்தாந்தங்களை உறுதிப்படுத்த ஓர் சங்கம் கூட்டினான். இக்கோட்பாடுகளை பிரபலமாக்கும் கட்டளைகளைப் பிறப்பித்தான். இவற்றைத் துப்புரவாய்க் காத்துக்கொள்ள ஓராலோசனைச்சபையை ஏற்படுத்தி அதை ராஜாங்கத்தில் ஓர் இலாக்காவாக நியமித்தான். இவ்வுபதேசங்களை எங்கும் பிரசித்தஞ்செய்வதற்காக மிஷனெரிமாரை அனுப்பினான். புத்தமத நூல்களை அதிகார பூர்வமாய்த் திருத்தி வெளியாக்க ஏற்பாடுசெய்தான். இவ்விதமாய்ப் புத்தமதம் நிலைவரப்பட்டு பெலன்கொள்ள பெரும் சகாயம்புரிந்தான். தன் சொந்தக் குமாரனையும் குமாரத்தியையும் இலங்கைக்கு மிஷனெரிமாராக அனுப்பினான். வலசைபோன தூராணியரால் புத்தமதம் தீபேத்துக்கும், சீனாவுக்கும் பரம்பினது. அங்கிருந்து கொரீயா, ஜப்பான் தேசங்களுக்குச் சென்றது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பர்மாவில் பரம்பினது. எழாம் நூற்றாண்டில் சீயம் ராஜ்யத்தின் மதமாகிவிட்டது. இதற்குள்ளாக இந்தியாவில் அது க்ஷீணதசை யடைந்துவிட்டது. பன்னிரண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை கொஞ்சம் கொஞ்சம் அது இந்துதேசத்தில் ஆங்காங்கு நிலைத்திருந்ததுண்டு; அப்பால் பூராவாய் அற்றுப்போயிற்று. இப்பொழுது பர்மா, இலங்கை, தீபேத்து, சீனா, ஜப்பான் தேசங்களில் புத்தமதம் வியாபித்திருக்கின்றது; இலங்கையில் சுமார் 22 லக்ஷம் புத்தர் உண்டு.

புத்தமார்க்க சித்தாந்தங்களை உற்றாராயுங்கால், அவற்றில் சில தவறுகள் உளவென விளங்கும். சர்வேஸ்வர வஸ்து ஒன்று உண்டென்று புத்தர் நம்புகிறதில்லை. கௌதமனுடைய கோட்பாட்டிற்கு கடவுள் அவசியமில்லை. புத்தோபதேசத்தின் ஆதியும் அந்தமும் மனுஷனே. மனுஷன் தானே தன் சுயசக்தியினால் முக்தி சம்பாதித்துக்கொள்ளவேண்டியதே விதி. ஆகிலும் புத்தமத ஆலயங்களில் போய்ப் பார்த்தால், புத்தனையே கடவுள் ஸ்தானத்தில் வைத்து, புத்த பிரதிமைக்கு புஷ்பாலங்காரம் செய்து, தேவாராதனை நடப்பிப்பதைக் காணலாம். மானிடஜாதிக்குக் கடவுள் இல்லாமற் தீராதென்பது இதினால் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. பர்மாவிலுள்ள புத்த ஆலயங்களில் நாம் காணும் சுரூபங்களைப்போல அத்தனை ஏராளமான விக்கிரகங்களை எந்த இந்து ஆலயத்திலும் காண்பதரிது.

(இன்னும் வரும்.)

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ¼ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager,
Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.


## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிறுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாசரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2—ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருக்கள், 2—ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 9 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.


நவம்பர்மாத பஞ்சாங்கம்.—

| வாரம். | நவம்பர் = ஐப்பசி—கார்த்திகை. ⊙ பௌர்ணமி, 13உ ● அமாவாசை, 27உ | | | | | | ஐப்பசி—கார்த்திகை. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 17 | 24 | 1 | 8 | 15 |
| திங்க ... | ... | 3 | 10 | 17 | 24 | ... | ... | 18 | 25 | 2 | 9 | ... |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 19 | 26 | 3 | 10 | ... |
| புதன் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 20 | 27 | 4 | 11 | ... |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| வெள் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 16 | 23 | 30 | 7 | 14 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 5 DEC 1913 MADRAS.




# சத்திய தூதன்.

DECEMBER, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. டிசெம்பர், 1913.

NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**சீனாவின் ஜனத்தொகை.** — சீனாவின் ஜனத்தொகை 40 கோடி. இது உலகத்தின் ஜனத்தொகையில் கால்வாசி; கிறிஸ்தவர்களல்லாத பறமதஸ்தருள் அரைவாசி.

**பேசுகிற கடிகாரங்கள்.** — சுவிட்சர்லாந்தில் பேசும் கடிகாரங்கள் அதிக சாதாரணமாய்விட்டன. அவைகளுக்கு முகப்பாவது முள்ளாவது கிடையாது. ஒரு பொத்தானை அழுத்தினவுடனே இத்தனை மணியென்று சொல்லிவிடுமாம்.

**பூமியின் அயனம்.**—பூமியானது தனது அயனத்தில் சூரியனைச் சுற்றியோடும் வேகம் மணிக்கு 1,100 மைல் என்னப்படுகிறது. இது எக்ஸ்பிரஸ் புகைவண்டி வேகத்துக்கு 1,000 மடங்கு அதிகம். துப்பாக்கிக்குண்டு வேகத்துக்கு 40 மடங்கு அதிகம்.

**நித்திரை சுகம்.**—மிஸ்டர் ஸ்டீவன் மார்ச்சண்ட் என்கிற கோடீசுவரன், தன் மனைவிக்குக் கட்டின பள்ளியறையை ஜோடிக்க 2 லக்ஷம் பவுன் செலவு செய்திருக்கிறார். கட்டிலின் விலைமாத்திரம் 38,000 பவுன். இது முழுமையும் பொன்னாலும் தந்தத்தினாலும் செய்யப்பட்டது.

**ஸ்திரீ ஜவான்கள்.** — சிகாகோபட்டணத்தில் போலீஸ் பந்தோபஸ்துக்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஜவான்களில் 12 பேர் ஸ்திரீகள். இந்த ஸ்திரீ ஜவான்கள் பித்தளை பொத்தான் தைத்த நீலச் சட்டைகள் தரித்தவர்களாய்த் தோட்டங்களிலும் ஜனங்கள் உலாவும் இடங்களிலும் காவல்புரிகிறார்கள்.

**ஐரோப்பாவில் வைத்தியர்.**—ஐரோப்பா கண்டத்தில் மாத்திரம் ஆயுர்வேத பண்டிதர் லக்ஷம் பேரிருக்கிறார்கள். அவர்களில் இங்லாந்தில் 28,900; ஜெர்மனியில் 22,500; பிரான்ஸில் 19,800; இற்றலியில் 18,270 எனப்படுகிறது. "அறிவு பெருத்தவன் நோய் பெருத்தவன்" என்கிற மூதுரைப்படி அறிவு விர்த்தியடைய அடைய வியாதிகளும் வைத்தியர்களும் விர்த்தியடைகிறார்கள்.

**பகல் வெளிச்ச விளக்கு.** — நமது நாட்டில் பகல் வெளிச்சமென்று மத்தாப்பு வெளிச்சத்துக்குச் சொல்லுவர். எண்ணெய் தீவட்டி வெளிச்சத்துக்கு மத்தாப்பு வெளிச்சம் மிஞ்சினபடியால் அதற்கு அப்படிச் சொல்லுவார்கள். ஆனால் டாக்டர் ஹெர்பர்ட் ஐவ்ஸ் என்கிற ஒரு பண்டிதன், பகல் வெளிச்ச விளக்கொன்று இப்போது உண்டு பண்ணியிருக்கிறார். இது தற்காலம் உபயோகத்திலிருக்கும் சாந்த விளக்குக்குச் சிரேஷ்டமானது. சூரிய வெளிச்சத்துக்குச் சமானமாய் வெளிச்சங் கொடுக்கிறதாகக் கூறப்படுகிறது.

**ராத்சைல்டின் ஆஸ்தி.**—பிரசித்திபெற்ற ராத்சைல்ட் என்கிற கோடீசுவரனுடைய ஆஸ்தியின் மொத்தம் 40 கோடி பவுன் என்று சொல்லப்படுகிறது. இதில் பாரீஸ் ராத்சைல்டுக்கு 8 கோடியும், பிரஞ்சு கிளைக்கு 11 கோடியும், வியன்னா ராத்சைல்டுக்கு 2 கோடியும் சொந்தமாம். இக்குடும்பத்துக்குத் தலைவனான ஆன்ஷல் ராத்சைல்ட் என்பவர் ஒரு நூற்றாண்டுக்கு முன்னிருந்தவர். தற்காலம் உலகத்திலுள்ள தனிகர்களில் லண்டன் ராத்சைல்ட் சிரேஷ்டமானவர். இராஜ்யங்களில் பணமுட்டு நேரிடும்போது இவருடைய ஆலோசனையைக் கேட்பது வழக்கம்.

**முதுமைக்குக் காரணம்.**—மனிதர் கிழப்பருவமடைவதற்குக் காரணம் அவர்களுடைய குடலுக்குள் ஏதோ ஒரு புளிப்பு வஸ்து இருப்பதுதானென்றும், அதை அழிப்பதற்குரிய இனிப்பு பிறப்பிக்கும் பூச்சிகளை வளர்க்கக்கூடிய பதார்த்தங்களைச் சாப்பிட்டுவந்தால் நீடிய ஆயுசு உண்டாயிருக்குமென்றும் ஒரு சாஸ்திரி கூறுகிறார். சர்க்கரைவள்ளி, காஜர்கிழங்கு, பேரீச்சம்பழம் இவைகளை அதிகமாய்ச் சாப்பிடுவதால் இப்பூச்சிகளை உற்பத்தி செய்யலாமென்றுஞ் சொல்லுகிறார். இந்நாட்டு யூனானி வைத்தியர்கள் இதைக் கொஞ்ச மறிந்தே காஜர்கிழங்கு, பேரீச்சம் இவைகளைத் தங்கள் அவிழ்தங்களில் கூட்டுகிறார்கள்போலக் காணப்படுகிறது.

**சீனாவில் மாறுதல்.**—சீனாவில் உண்டாகிவருகிற விசேஷ மாறுதலைக்குறித்து டாக்டர் தீமோத்தேயு ரிச்சார்ட் எழுதுகிறார்: புத்தர், தாதர், கன்பூசியர், மகம்மதியர் ஆகிய சகல மதஸ்தரும் தங்கள் வேற்றுமைகளை யொழித்து ஒன்றுகூடிபேசி மிஷனெரிகளைத் தங்களுக்கு உதவிசெய்யக் கேட்கிறார்கள். கன்பூசியரான மூன்று முக்கிய அரசாங்கத் தலைவர் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் கிறிஸ்துமார்க்க நூல்களைப் பாடமாக வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சீன வாலிப கிறிஸ்தவ அரசாங்கத்தலைவர்களின் சரித்திரங்களை ஆவலோடே படிக்கிறார்கள். இந்தியாவிலே இந்த ஆவல் எப்போது உதிக்குமோ?

**"இயேசுநாதர் மரிக்கவில்லை."** — சீனாவில் மிஸ்டர் வூங் ஷியோஜன் என்கிற சீனத்தலைவன் துன்மார்க்கரால் வன்கொலையுண்டார். இவர் பிரேதத்தை க்ஷேமிக்க எடுத்துக்கொண்டுபோகையில் ஜனங்கள் கொடிகளைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அதில் ஒருகொடியில் "இயேசுநாதர் மரிக்கவில்லை" என்று பெரிய எழுத்தால் எழுதியிருந்தது. இவர்கள் கிறிஸ்தவர்களல்லர். ஆயினும் இந்தச் செய்கை கிறிஸ்துமார்க்கம் அவர்களுக்குள் விளைத்திருக்கும் மேலான எண்ணத்தைக் காண்பிக்கிறது. வன்கொலையுண்ட தலைவர் மரித்தாலும் அவர் செயல்கள் மரிக்கவில்லையென்பது அந்த வாசகத்தின் கருத்து.

**உலகில் பெரிய கப்பல்.**—டைற்றானிக் கப்பலைவிட பெரிய கப்பலொன்றை ஜெர்மன்காரர் கட்டியிருக்கிறார்கள். இதற்கு "இம்பரேற்றர்" என்று பெயர். இதன் நீளம் 920 அடி. அகலம் 90 அடி. ஆழம் 68 அடி. 57,000 டன் சாமான் ஏற்றக்கூடியது. டைற்றானிக் கப்பல் 882 அடி நீளமாத்திரமே. இந்த "இம்பரேற்றர்" நீரில் மிதக்கும் ஒரு மாளிகை என்றே சொல்லவேண்டும். 11 அடுக்கு பங்களா இதில் கட்டப்பட்டிருக்கிறது. உஷ்ணகால பங்களாக்களும், மாரிகால பூங்காவனமும், நடனசாலையும், சிலம்பர்கூடமும், நீந்துதுறையும், பலவித கேளிக்கை சாலைகளும் இக்கப்பலிலுண்டாம். இக்கப்பலிலுள்ள விருந்துசாலையின் நீளம் 300 அடியென்றால் இதன் பெருமையை இதை வாசிப்பவரே யூகித்தறியவேண்டும்.

**தென்னாப்பிரிக்காவில் இந்தியர்.**—தென்னாப்பிரிக்காவில் தற்போது 150,000 இந்தியரிருக்கிறார்கள். இவர்களிற் பெரும்பாலார் கூலியாட்களாய்ப் போய், அந்நாட்டில் குடியமர்ந்தவர்கள். இவர்களில் அநேகர் அந்நாட்டில் நிலம் பலம் படைத்து மரி

யாதையான குடித்தனக்காரராகவும், வாணிபம் வியாபாரம்முதலியவை நடத்திச் சொத்துச் சுதந்தரம் உடையவர்களாகவுமிருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து கூலியாட்கள் வந்து அந்நாட்டிலிருக்கும் சுரங்கங்களிலும் கரும்புத்தோட்டங்களிலும் அடிமைவேலை செய்து பாதமுறியாய்க் கிடக்கவேண்டுமென்பது அந்நாட்டிலுள்ள வெள்ளைக்காரருடைய விருப்பமானாலும், அவர்கள் ஒப்பந்தம் முடிந்தபிறகு அந்நாட்டில் தங்கிப் பிழைத்துப் பொருள் சேகரஞ் செய்யக்கூடாதென்பது அவர்களுடைய தீர்மானம். ஆகவே சுயாதீனராய்த் தென்னாப்பிரிக்காவிலிருக்கிற இந்தியரையெல்லாம் அந்நாட்டு வெள்ளைக்காரர் கொடுமையாய் நடத்திப் பலவித கடுமையான சட்டங்களால் அவர்களை உபத்திரவித்துவருகிறார்கள். பலவருஷகாலமாயிருந்துவருகிற இந்த உபத்திரவம் இப்போது அதிகப்பட்டிருக்கிறது. இந்தியரில் சுயாதீனரான புருஷரும் ஸ்திரீகளும் தலைக்கு 3 பவுன் வரி செலுத்தவேண்டுமென்று ஒரு கடுமையான சட்டஞ்செய்யப்பட்டதால், இந்தியர் செலுத்த நிருவாகமின்றி ஜெயிலுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். தவிர கலகம் பிறந்தால் நியாயம் பிறக்குமென்று இந்தியர் ஒன்றுகூடி, வேலைகளை நிறுத்தி, அரசாங்கத்தாருடைய கடின தண்டனைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்தியரின் தலைவர் கனம்: கந்தி ஜெயிலிலிருக்கிறார். இந்தியாவிலுள்ள இந்தியரெல்லாரும் தென்னாப்பிரிக்காவில் கஷ்டப்படுவோருக்குப் பொருள் சேர்த்து அனுப்பிவருகிறார்கள்.



பிரபுக்கள் ஆலோசனை மண்டபம், லண்டன்.

## THE GOSPEL THE ONLY WAY.

## சத்தியவேதமே இரட்சிப்பின் வழி.

சத்துராதிகளின் கையினின்றாயினும் பயங்கரமான ஆபத்துகளினின்றாயினும் விடுதலையாக்கப்படுகிறதே இரட்சிப்பாம். சில சமயம் குளம் குட்டைகளிலாயினும் கிணறுகளிலாயினும் தவறி விழுந்துவிடும் ஆண் அல்லது பெண் அல்லது ஒரு குழந்தையையாகிலும் அல்லது ஆடு மாடு முதலிய மிருகங்களையாகிலும் ஜீவன் தப்ப காப்பாற்றுவதும் இரட்சிப்பாம். அப்படிக் காப்பாற்றுகிறவனை இரட்சகன் என்போம். அப்படியானால் மானிட ஜென்மிகளான இவ்வுலகத்தாருக்கு இரட்சிப்பு அவசியமாவென்று பார்ப்போம்; அவசியந்தான். என் அவசியம்? காரணமென்ன? மனிதருக்கு நேரிட்டிருக்கிற ஆபத்து என்ன? சர்வஞானமும், சர்வவல்லமையும், பரிசுத்தமும் நிறைந்த பாப்பிரம்மமாகிய தேவன் மனிதனைத் தமது சாயலின்படியும் ரூபத்தின்படியும் சிருஷ்டித்து, அவர்களுக்கு ஞானம் பரிசுத்தம் பாக்கியம் என்னும் மேலான திவ்ய வரப்பிரசாதங்களை யளித்து, தம்மையே அறிந்து வணங்கும்படி ஆக்யாபித்திருக்க, மனிதர் தங்கள் சிருஷ்டிகராகிய மெய்த்தேவனை மறந்து, தங்களுக்குக் கிடைத்திருந்த மேன்மையான வரப்பிரசாதங்களை இழந்து, பாவத்துக்குட்பட்டு தேவகோபத்துக்கும் தேவதண்டனைக்கும் பாத்திரரானார்கள். இப்படி ஆனதினால் சகல மனிதரும் பாவம் என்கிற படுகுழியில் விழுந்தவர்களா யிருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன? தேவ கற்பனையை மீறினதே பாவத்திற்குக் காரணமாம். பாவம் தேவ மகிமைக்கு விரோதமாயும், அவர் ஏற்படுத்திய ஒழுங்குகளைக் கெடுக்கிறதாயுமிருக்கிறபடியால் சகலரையும் மரணத்துக்கும் தண்டனைக்கும் பாத்திரமாக்கிற்று. அதுமாத்திரமல்ல, பாவத்தின் சம்பளம் மரணமென்றும், வேதப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறயாவையும் கைக்கொள்ளாதவன் சபிக்கப்பட்டவனென்றும், ஒரு கற்பனையைமாத்திரம் அலட்சியம் செய்கிறவன் எல்லா கற்பனைகளுக்கும் விரோதமான குற்றவாளியா யிருக்கிறானென்றும் சத்தியவேதம் தெளிவாய் அறிவிக்கிறது.

இப்படிப் பரிதபிக்கப்படக்கூடிய ஸ்திதியில் இருக்கிறவர்களும் பாவாத்துமாக்களுமான மானிட ஜென்மிகளுக்கு இரட்சிப்பும் ஓர் இரட்சகனும் அவசியம். மனிதர் தங்களைத் தாங்களே மீட்டுக்கொள்ள அல்லது இரட்சித்துக்கொள்ளக் கூடாது. ஆதலால் இதற்கு ஒரு வழியுண்டாகவேண்டும். பாவிகளான மனுமக்கள் தங்கள் பாவதோஷங்களுக்கு விலகி, சிருஷ்டிகருடன் சமாதானப்படவும், அவரை அறிகிற அறிவைப் பெறவும், அந்தியத்திலே மோக்ஷானந்தத்தை அடையவும், நமது புத்திக்கெட்டாத ஞானமும் அன்பும் நிறைந்த பூரண இரட்சிப்பின் வழி கிறிஸ்துமார்க்க சத்திய வேதாகமம் ஒன்றில் மாத்திரந்தான் வெளியரங்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3. 16.). மேலும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர் அவருக்கு விரோதமாய்க் குற்றம் செய்து அவரது கோபாக்கினைக்கு இலக்கானவர்களாயிருந்தாலும் அவர்கள் கெட்டுப்போவது தமக்குச் சித்தமல்லவென்று அவர்தாமே திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ. 2. 4.). மேலும் அன்புள்ள ஒரு தகப்பன் தன் பிள்ளைகள் குற்றம் செய்தவர்களாயிருந்தாலும் அவர்கள்மேல் இரக்கமுள்ளவனாய் இருப்பதுபோலவே, பரிசுத்தமுள்ள தேவன் தமது கரத்தின் சிருஷ்டிகளும் பிள்ளைகளுமான எல்லா மனிதர்பேரிலும் இரக்கம் வைத்து, தமது பூரண ஞானத்தால் ஒரே இரட்சண்யவழியை ஏற்படுத்தி, மற்றெவராலும் அளவிடக்கூடாத தமது சர்வ வல்லமையினால் நிறைவேற்றினார். இந்த நிறைவேறுதலைப் பூரணப்படுத்த தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து மனிதவதாரமெடுத்து துர்ச்சீனா நற்சீராக்கவும், பிசாசையும் இப்பிரபஞ்ச இச்சைகளையும் ஜெயிக்கவும், தத்துவ போதனைகளைப் போதித்து, அப்போதனைகள் அவர்களுக்கு விளங்கத்தக்கதாக தாமே முன்மாதிரியாக நடந்துகாட்டி, அவர்களுடைய பாவதோஷங்களுக்குப் பிராயச்சித்தம் செய்யவும், தேவனோடு அவர்களை ஒப்புரவாக்கவும், தம்மைத்தாமே ஒரு தகுதியான இரட்சண்ய பலியாக ஒப்புக்கொடுத்தார். "இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்." (எபி. 10. 10.)



மேலும், இந்துசமய நூல்களிலானாலும், வேறு எந்தசமய நூல்களிலானாலும், இப்படிப்பட்ட ஓர் இரட்சிப்பைப்பற்றியானாலும், அல்லது ஓர் இரட்சகனைப்பற்றியோ ஒன்றும் சொல்லியிருக்கக் காணோம். பாவங்கள் மன்னிக்கப்படவும் பரகதியடையவும் வேண்டுமானால், புண்ணிய நதிகள் என்று இந்துக்கள் சொல்லிக்கொள்ளுகிற ஆறுகளிலே தீர்த்தமாடுவதினாலும், தேவஸ்தலங்களைத் தரிசித்துக்கொள்வதினாலும், காவடி சுமப்பதினாலும், அங்கப்ரதட்சணம் செய்வதினாலும், சந்நியாசங்கொள்வதினாலும், சடைவளர்ப்பதினாலும், தானதர்மங்களைச் செய்வதினாலும், சத்திரஞ் சாவடிகளைக் கட்டிவைப்பதினாலும், இன்னும் பற்பல விதமான சரீர முயற்சிகளை அனுஷ்டிப்பதினாலும் இந்த இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அநேகர் நினைக்கலாம். ஐயோ! இது என்ன பரிதாபம்! இது எப்படியாகும். கனவில் கண்டபணம் செலவுக்குதவாததுபோல, இப்படிப்பட்ட எண்ணங்களும், வீண் பிரயாசைகளும், வீண் சடங்காசாரங்களும், இந்தச் சிறந்த இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளத்தக்க வழிகள் அல்ல. பாவங்கள் மன்னிக்கப்படவும், இலவசமான இரட்சிப்பைப் பெறவும், கிறிஸ்துமார்க்கம் ஒன்றே வழி. இப்பூலோகத்தில் பரிசுத்த மனிதவதாரம்பூண்டு சற்குருவாய் வந்த இயேசுகிறிஸ்துவே இந்த இரட்சிப்பைத் தரக்கூடிய புண்ணியமூர்த்தி. சத்தியவேதமும் அப்படித்தான் சொல்லுகிறது. "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்புண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது." (ரோம. 1. 16.)

ஆதலால் இரட்சிப்பை அருளக்கூடிய சற்குருவாகிய இயேசுகிறிஸ்துவின் திவ்ய உபதேசங்கள் மனிதனை நன்மை செய்ய ஏவி, கடவுளில் அன்புகூரப்பண்ணி, பரிசுத்தத்தையும் மனப்பாக்கியத்தையு மீந்து, பக்தியில் நிலையூன்றப்பண்ணி, இரட்சண்யவழியைத் தெளிவாக விளக்குகின்றதினாலே தேவபெலமுள்ளதென்பது தெளிவாயிருக்கிறது. ஆகலால் இவ்வுபதேசம் எவ்வருணத்தாருக்கும், எத்தேசத்தாருக்கும், எப்பாஷைக்காருக்கும் ஏற்றதாகவே இருக்கிறபடியால், கிறிஸ்துமார்க்க சத்தியவேதமொன்றே பூரண இரட்சண்ய வழியைத் தெளிவாய்க் காட்டுகிறது. இதுவே சத்தியம்.

தஞ்சை: J. பொன்னுசாமி,
சுவிசேஷப் பிரசங்கி.

## VEGETABLES AND DRUGS.

## மரக்கறிகளும், மருந்துசரக்குகளும்.

ஜலதோஷத்தினால் மிகவும் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த ஒரு மனுஷன், லண்டன் பட்டணத்தில் மிகவும் கீர்த்திபெற்ற ஒரு வைத்தியனிடம்போய், தன் வியாதி நீங்கும் வழியைப்பற்றி ஆலோசனைக் கேட்டான். அப்பொழுது அந்தப் பண்டிதர் அந்நோயாளியைப் பார்த்து, "சாதாரணமான நோய்களுக்கெல்லாம் மருந்து சாப்பிடவேண்டிய அவசியமில்லை." உன் தேகத்திலுள்ள இரத்தம், யூரிக் ஆசிட் (Uric Acid) என்கிற ஒருவிதமான விஷத்திலிருந்து கொஞ்சம் மட்டாய் நீங்கியிருக்குமானால், இரண்டொருநாள் உருளைக்கிழங்கைச் சமைத்துச் சாப்பிடுவதால், நீயே உன் ஜலதோஷத்தை வெகு லேசாய் சொஸ்தப்படுத்திக் கொள்ளக்கூடும். உருளைக்கிழங்கு ஜலதோஷத்திற்கு மாற்று. அவ்விதமான மாற்றைத்தான் மருந்தாகக் கடையிலிருந்து நோயாளிகள் வாங்கி அருந்தும்படி என்னால் கற்பிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்.

அநேக காய்கறி வகைகளும் பழதினுசுகளும் பலவிதமான வியாதிகளைச் சொஸ்தப்படுத்தக்கூடியதாயிருக்கிறது. ஆனால் சுகத்தை இழந்துபோன அநேகர் அப்படிப்பட்ட பதார்த்தங்களை உபயோகித்து தங்களுக்கிருக்கும் வியாதியைச் சொஸ்தப்படுத்திக்கொள்ளாம லிருக்கிறார்கள்.

**சிலரி** (Celery) என்கிற ஒருவிதமான செடியின் கீரை, வாதரோகத்திற்கும், குன்மத்திற்கும், நரம்பைப்பற்றிய நோய்களுக்கும் குணத்தைக் கொடுக்க அதிக சிரேஷ்டமானது. பச்சையையாகிலும் அல்லது குழம்பு செய்தாகிலும் சாப்பிடலாம். தலைநோய், ஒற்றைத் தலைநோய் முதலான நரம்பைப்பற்றிய வியாதிகளுக்கு அதிகம் தண்ணீர் ஊற்றாமல் சமைத்துச் சாப்பிடவேண்டும்.

**தக்காளிப்பழம்**, இதை "தாவர இரசபஸ்பம்" (Vegetable Calomel) என்று அழைக்கப்படுகிறது இரசபஸ்பம் எப்படி ஈரல் நோய்க்கு உதவுகிறதோ, அப்படியே தக்காளிப்பழம், பித்தாசயம், ஈரல் குலைநோய்க்கு உதவுகிறது. சமைத்துச் சாப்பிடுவதால் அதன் சத்து கெட்டுப்போகிறது. ஆகையால் பச்சையோடு சாப்பிடவேண்டும்.

**வெங்காயம்**, நரம்பைப்பற்றிய வியாதிகளுக்கு அதிகச் சிறந்தது. நரம்பைப்பற்றிய வியாதியினால் கீழே விழுந்துபோனவர்களும் பெரும்பாகமான வெங்காயங்களைச் சாப்பிட்டுக்கொண்டு வந்தபடியால், நல்ல சுகம் அடைந்து இருக்கிறார்கள்.

**கார்ரட்ஸ், பீட்ரூட்** (Carrots and Beetroots) என்கிற இங்கிலீஷ் கிழங்குகள் இரத்தத்தை அதிகப்படுத்தக்கூடிய குணமுடையது. இவைகளைப் பச்சையோடு சாப்பிடவேண்டும்.

காய்கறிகள் சுகம் கொடுக்கிறதுபோலவே, சில பழதினுசுகளும் நல்ல குணங்களையுடையதா யிருக்கிறது. எலுமிச்சை, பித்தத்திற்கும், ஈரல் வியாதிக்கும், வாதரோகத்திற்கும் மிகவும் நல்லது.

மருந்தைச் சாப்பிடுவதைப்பார்க்கிலும், காய்கறிகள், பழதினுசுகள் மூலமாய் நோயைப் போக்கடித்துக்கொள்வது அதிக நல்லது. இப்படிப்பட்ட பதார்த்தங்கள் தேகத்தைப் புஷ்டிசெய்து வியாதியையும் நீக்குகிறது. மருந்து வாங்கிச் சாப்பிடுவதினால் அதிகச் செலவாகிறதோடுகூட சில சமயங்களில் பிரயோஜனமற்றதாய்ப்போகிறது.

## THE FRAGRANT INNER LIFE.

## உள்ளான சுகந்த ஜீவியம்

வியாபாரத் தொழிற்சாலையில் வேலைசெய்து கொண்டிருந்த ஒரு சிறுபெண், ஒருநாள் பின்வருமாறு சொல்லுகிறாள்:—"நான் அதிகமாய் நேசித்து வருகிற ஒரு சிநேகிதி, ஒருநாள் எனக்கு ஒரு ரோஜா புஷ்பத்தைக் கொடுத்தாள். நான் அந்தப் புஷ்பத்தை வாங்கி, அதிக சந்தோஷத்தோடே அநுபவித்தேன். நான் அந்தப் புஷ்பத்தைப் பார்த்தபோது, அந்தப் புஷ்பம் மெழுகினால் செய்யப்பட்டிருந்ததைப்போல் காணப்பட்டதினால், அது மெழுகாகவே இருக்கவேண்டும் என்று யோசித்தேன். ஆனால் நான் அந்தப் புஷ்பத்தை என் கையில் எடுத்தபோது, மறைவாகக் காணப்பட்ட சுகந்த வாசனை அதிலிருந்து வீசிற்று. ஆகையால் அது ஒரு உண்மையான புஷ்பமென்று அறிந்துகொண்டேன். அதுபோலவே நான் எவ்வளவுக்கு அதிகமாய் இயேசு ரட்சகரண்டைப் போகிறேனோ, அவ்வளவுக்கு அதிகமாய் அவர் உண்மையுள்ளவரென்று அறிந்துகொள்ளக்கூடும். அவரைச் சமீபித்துச் சேருவதால் அவருடைய உள்ளான சுகந்த ஜீவியம் என்னைப் பற்றிக்கொள்ளும் என்று அறிந்துகொண்டேன். நான் எதிலும் உண்மையையே விரும்புகிறேன். நீங்கள் அப்படி விரும்புகிறதில்லையா?" என்று சொன்னாள்.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

ஓர் கைப்பிடி புஷ்பத்தை புத்த பிரதிமைமீது சாற்றி, தீவர்த்தி பொருத்திப் படைத்து, 108 மணிகளுள்ள ஜெபமாலையைக் கையில் வைத்து, அநித்தியம், துக்கம், சூனியம் என்று மாறி மாறி 108 தடவை கிளிப்பிள்ளைபோல் சொல்லிவிட்டு, வாரத்திற் கோர்முறையும் திருவிழா தினங்களிலும் ஆலயம் தொழுவதுமே பர்மாதேசத்திலுள்ள புத்தர்களின் தேவதாபக்தி. பர்மர் தங்கள் வீடுகளில் பேய் பிசாசுக்குப் பயப்பட்டு, திருஷ்டிக்கழிப்புக் கழித்து, 'நத்' என்னும் பேய்வணக்கம் செய்துவருகிறார்கள். நத் வணக்கத்தை புத்தமதக் குருக்கள் கண்டனம் செய்தபோதிலும், சாதாரண ஜனங்கள் வெகுவாய் அநுசரித்துவருகிறார்கள்.

புத்தசமயத்தின் நீதிநெறி உன்னதமும் சிரேஷ்டமுமானதென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டியது. சர்வத்திராணும் சமானமென்று உபதேசிப்பதால் புத்தசமயத்தில் ஜாதிபேதத்திற் கிடமில்லை. ஸ்திரீகளுக்குப் பூரண சுயாதீனம் உண்டு. கல்வி, வித்தை, கலைஞான நூல்கள் இவற்றை புத்தமதஸ்தர் வெகுவாய் விருத்திசெய்திருக்கின்றனர். தற்காலத்தில் இந்துக்களைப்பார்க்கிலும், புத்தசமயிகளுள் வாசிக்க எழுதக் கற்றவர்கள் ஜாஸ்தி. ஆகிலும் புத்தமதம் நாஸ்திக மதமே. ஆனதுபற்றி, பாவம் இரட்சிப்பு என்பதைப்பற்றிய சரியான அறிவு இவர்களுக்குக்கிடையாது. மனுஷன் தன் சுயபிரயாசையினால் தானே தனக்கு மீட்பைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்பதே முக்கிய உபதேசம். புண்ணியம் சம்பாதிப்பதற்குப் பல வழிவகைகளைக் காண்பிப்பதினால், மனுஷன் தன் சுயநீதியின்மேல் சார்ந்து, தற்பெருமைகொள்ள ஏதுவுண்டாக்கிவிடுகிறது.

நிர்வாணதசை யடைவதே புத்தமதஸ்தர் நாடுகிற மோக்ஷபதவி. 'நிர்வாணு' என்றால் 'ஆசையின்மை' என்றர்த்தம். அதென்னவென்றால், தன்னறிவு யாதுமற்று, நன்மை தீமை ஆசை ஏதுமின்றி சும்மாயிருக்கும் பதவியே நிர்வாணமாம்! இதுவும் ஓர் உன்னத பதவியா?

இந்துமதம் புத்தமதத்தை இத்தேசத்தைவிட்டுப் பூராவாய்த் துரத்திவிட்டபோதிலும், புத்தமதத்திலிருந்து அநேக கொள்கைகளையும், கோட்பாடுகளையும் சேர்த்துக்கொண்டதென்று அறியவேண்டும். புத்தன் விஷ்ணு அவதாரங்களில் ஒன்றுனன். ரத்தபலிகள் நின்றுபோயின. உயிர்வதை மட்டுப்பட்டது.

புத்தமதக் கோட்பாடுகளில் குறைவுகள் பல இருப்பினும், அதிலுள்ள சில சத்தியங்களைப் பிரபலமாக்குவதற்கு அம்மதஸ்தர் பட்ட பிரயாசத்தைக் கவனிக்கும்போது வியந்துகொள்ளவேண்டியதே. இந்தியாவில் பிறந்த இம்மதம் மானிடஜாதியில் பாதிப்பங்குபேர் நம்பும் நம்பிக்கைக்கு ஆதாரமாகிவிட்டது ஆச்சரியமல்லவா? புத்தனுக்காக அவர்கள் இவ்வரிய ஊழியத்தைச் செய்தனர். இயேசுகிறிஸ்துவுக்காக நாம் அவ்வளவு செய்யக்கூடாதா?

7. **மகம்மது மார்க்கம்.**— வடமேற்கிலிருந்து இந்ததேசத்துக்குள் படையெடுத்துவந்த சேனைகள் மூலமாய் கி. பி. 711–ம் ஆண்டில் மகம்மது மார்க்கம் இந்தியாவுக்குள் வந்தது. பட்டயத்தினாலும், சட்டதிருப ஆக்ஞையாலும் இம்மார்க்கம் நிலைவரம் பெற்று, பத்து நூற்றூண்டுகளாக அதிவிரைவில் வியாபித்தது. தற்காலத்தில் இந்தியாவிலுள்ள ஜனங்களில் ஐந்திலொரு பங்குக்கு அதிகமானவர்கள் மகம்மதியர். பாரசீகம், அரேபியா, துர்க்கிய ராஜ்யம், எகிப்து முதலிய தேசங்களில் வசிக்கும் மகம்மதியரிலும் ஜாஸ்தியான மகம்மதியர் நம் தேசத்திலிருக்கிறூர்கள். இந்தியாவிலுள்ள ஆறரைக்கோடி மகம்மதியரில் மூன்று கோடிப்பேர் வங்காள மாகாணங்களிலும், ஒருகோடியே இருபது லக்ஷம்பேர் பஞ்சாபிலும், வடமேற்கு எல்லை மாகாணத்திலும், உத்தேசம் எழுபது லக்ஷம்பேர் ஐக்ய மாகாணங்களிலும், சுமார் நாற்பத்தொன்பது லக்ஷம்பேர் பம்பாயிலும், நாற்பது லக்ஷம்பேர் தென்னிந்தியாவிலுமுண்டு. கடந்த பத்து வருஷத்தில் நூற்றுக்கு 6½ வீதம் இவர்கள் பெருகியிருக்கிறூர்கள்.

(இன்னும் வரும்.)

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

(அக்டோபர்மீ தொடர்ச்சி.)

அவ்வந்தாதியின் 15–வது செய்யுளைக் கேளுங்கள்:—

*தாயக மேயெவ் வுலகுக்கும் யார்க்கும் தயாநிதியாம்*
*காயக மேகின் சரணும் புயங்களை நாடுமன்டர்*
*தூயக மேவிளங் கும்விளக் காயவட் டேருள்கூர்*
*சாயக மேயன்ன கண்ணியம் போருகஞ் சார்டவளே.*

சரஸ்வதி யந்தாதியின் 15–வது செய்யுளையுங் கேளுங்கள்:—

*நாயக மான மலரக மாவது ஞானவின்பச்*
*சேயக மான மலர்க மானதுந் தீவினையா*
*லேயக மாறி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்*
*தாயக மாவதுந் தாதார் சுவேத சரோருகமே.*

இவ்விரண்டுடனே சடகோபரந்தாதியைத் தட்டித் திறந்த யாதொரு பக்கத்தில் கண்ணிற்கு முதலிலே காணப்படுகின்ற யாதொரு செய்யுளை ஒப்பிட்டுப் பாருங்கள். இதோ 45–வது செய்யுள்,

*சேரா தனவுள வோபெருஞ் செல்வர்க்கு வேதஞ்செப்பும்*
*பேரா யிரந்திண் பெரும்புய மாயிரம் பெய்தளவத்*
*தாரார் முடியா யிரம்குரு கூர்ச்சட கோபன்சொன்ன*
*ஆரா வமுதக் கவியா யிரமவ் வரியினுக்கே.*

இதன் வாக்கும் போக்கும் முன்காட்டிய செய்யுளின் வாக்குப் போக்குகளைக்காட்டிலும் சிறந்ததென்டதை எவர்தான் அன்றெனக் கூறுவர்? சோனுடைய ஸமஸ்தானக் கவிராயர்கள் கம்பரிடங்கொண்ட மாற்சரியத்தால் அவரை அம்பட்டனுடைய பங்காளியெனக் கற்பித்தகாலையில் பாடினதாகும் ஸரஸ்வதியந்தாதி, அவளருளுடனே அவள் பாதச்சிலம்பு பெறற் பொருட்டெனக் கூறுவாருமுளர். பரம்ஹம்ஸனுடைய அருள்பெற்றபோது பாடினரெனக் கூறுவது முண்டென முன்னமே கூறினேமன்றே. இவ்விருதிறவர் கூற்றையும் மெய்ப்பிக்கலாவதான சான்று யாதொன்றும் அந்நூலகத்துக் காண்கின்றிலது. ஏரெழுபதின் எழுவாயை முன்னரே குறித்திருக்கிறோம். எப்படியும் இந்நூல் கம்பர் பேரும் புகழும் எய்தினபின்னரே பாடியதெனக் காண்கின்றது. செம்பொற் சிலையெழுபது வெகுவாய் ஏரெழுபதின் போக்கே போக்காக அமைந்திருப்பினும், அதனை இயற்றினர் கம்பரென்றே துணிந்து சொல்வதற்கான ஆதாரம் இலது. காஞ்சிப்புராணம்—காஞ்சிப்பிள்ளைத்தமிழ்—சோழக்குறவஞ்சி—திருக்கைவழக்கம் என்னும் நூல்களும் கம்பர் இயற்றினரெனச் சிலர் கூறுகின்றனர். இவற்றில் திருக்கைவழக்கம் தவிர மற்றவைகள் அச்சிற்காணுமையால் எவர்க்கும் கிடைத்த லரிதாயிராநின்றன. அச்சிட்ட பிரதிகளில் தானும் திருக்கைவழக்கம் பிரதிக்கு பிரதி மாறுபடுதலான், கம்பர் பாடின அடிகள் இன்னின்னவையே எனத் துணிந்துகொள்ளக்கூடவில்லை. கம்பர் ஓரகராதியும் இராமாயண வசனமும் எழுதினரெனச் சிலர் கூறுகின்றனர்.

**கம்பநுடைய குணவிசேஷம்.**—யாதொரு கவியின் நூலைக் கற்றுவைத்தும், அக்கவியை இன்னதன்மையரென அறியமாட்டாதவன், தான் நேரில் கண்ட யாதொரு கவியைத் தானும் இன்னதன்மையரென அறிவதிலன் என்றெரு இங்கிலிஷ் ஆசிரியர் இயம்புகின்றனர். இராமாயணத்தால் கம்பர் இன்னதன்மையரென அறிதலாகுமோ என்று ஆராய்தல்வேண்டும். அயோத்திமாநகரத்தை

*ஏகம் முதற்கல்வி மூளைத்தெழுந் தெண்ணில் கேள்வி*
*ஆகம் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்*
*சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து*
*போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே*

என வர்ணித்திருத்தலால், இவர் கல்வி கேள்விகளின் அருமையைப் பாராட்டினவரென்பது பெறப்படும். ஆயினும், அக்காலத்துக் கணக்காயர் கல்வி கற்பிக்கும் முறையைக் கம்பர் வியந்தவரல்லரென்பது

*கல்வியிற் றிகழ்கணக் காயர் கம்பலைப்*
*பல்விதச் சிறுஅரெனப் பகர்வ பல்லரி*
*செல்விடத் தல்லதொன் றுரைத்தல் செய்கலா*
*நல்லறி வாளரி னவிந்த நாவெலாம்*

என்ற கார்கால வர்ணனையால் பெறப்படும்.

*பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்*
*பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்*
*வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்*
*விருந்து மன்றி விளைவன யாவையே*

என்றதனால் இவர் பெண்கல்வியின் நன்மையை அக்காலத்திலேதானே உணர்ந்தவரென்பது தேற்றம்.

(இன்னும் வரும்.) T. C. M.

## NOTICE

**Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.**

All orders to be sent to the Manager,
Tract Dépôt, MADRAS.

**Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.**


## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

## புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2–ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருக்கல், 2–ம் பதிப்பு .... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| அதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றுட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 6 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆகாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணு, 7 அணு. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.


**டிசெம்பர்மீ பஞ்சாங்கம்.—**

| வாரம். | டிசெம்பர்மீ = கார்த்திகை—மார்கழி. ⊙ பௌர்ணமி, 13உ ● அமாவாசை, 27உ | | | | | கார்த்திகை—மார்கழி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 7 | 14 |
| திங்க ... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 1 | 8 | 15 |
| செவ் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 2 | 9 | 16 |
| புதன்... | 3 | 10 | 17 | 24 | 31 | 18 | 25 | 3 | 10 | 17 |
| வியா ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 4 | 11 | ... |
| வெள்... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 5 | 12 | ... |
| சனி ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 6 | 13 | ... |

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... JAN 1914 MADRAS.


सत्यमेव जयति
THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

JANUARY, 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜனுவரிமீ, 1914.


## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**கலியாண வெகுமதி.**—சார்லஸ் ஷ்வாப் என்கிற தனிகனுடைய சகோதரியின் கலியாணத்தின்போது அந்தப் பிரபு அவளுக்குக் கொடுத்த வெகுமதி அல்லது ஸ்ரீதனம் 800,000 பவுன். இது அவளுடைய நிறைக்கு நூறுமடங்கு அதிகமான பொன்னுகும்.

**உயரமான போர்வீரன்.**—ஜெர்மானிய இராணுவத்தில் பீற்றர் ஜிம்மர்மான் என்று ஒரு வாலிபப் போர்வீரனிருக்கிறுன். அவன் உயரம் 6 அடி 9¼ அங்குலம். நிறை 18 ஸ்டோன், 10 பவுண்ட். வயது 22. இவனே ஜெர்மானிய இராணுவ போர்வீரருள் உயரமானவன்.

**மரணம் நேரிடாததுமே பம்.**— நாட்டிங்காம் என்னுமிடத்தில் ஒரு குடும்பத்திலுள்ள தலைவர்கள் சமீபகாலத்தில் வைரவதுவை மகோற்சவங் கொண்டாடினூர்கள். அப்போது அவர்களுடைய குமாரர், குமாரத்திகள், பேரப்பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிள்ளைகள் யாவரும் கூடிவந்திருந்ததாகவும், பிறந்தவர்களில் ஒருவராவது அதுவரை மரணத்துக் குட்படாதிருந்ததாகவும் கூறப்படுகிறது.

**உவேல்ஸ் இளவரசர் விஜயம்.** — 1914–ம் வருஷம் இதே குளிர்காலத்தில் நமது மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தி திருமகன் உவேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு விஜயஞ் செய்வாரென்று கூறப்படுகிறது. அச்சமயத்தில் பம்பாய்நகரில், இந்தியாவில் இதுகாறும் நடத்தியிராத ஒரு கைத்தொழில் காக்ஷி நடத்தப்படுமென்றும், அதை இளவரசரே திறந்து பிரதிஷ்டை செய்வாரென்றும் தெரியவருகிறோம்.

**பாம்புக்கடிக்குக் குளிர்ந்த ஜலஸ்நானம்.**—பவநகரில் குப்தா என்று பெயர்கொண்ட போஸ்ட்மாஸ்டர் ஒருவர் பாம்புகடித்து ஸ்மாரணையற்றுப் போனூர். மரித்துப்போனூரென்றே ஜனங்கள் கருதினூர்கள். ஆனல் அவ்விடத்து



ஃபிரீசின் கலாசாலை.

உபாத்தியாயரொருவர் சுமார் 25 குடம் ஜலத்தை அவர் தலையின்மேல் ஊற்றிக்கொண்டேயிருக்க, அவர்க்கு ஸ்மரணை பிறந்து பிறகு கொஞ்சங் கொஞ்சம் சுகமடைந்து கூற்றவனுக்குத் தப்பிக்கொண்டாரென்று அறிவிக்கப்படுகிறது.

**புகையும் மரம்.**—ஜப்பான் தேசத்தில் ஒஹோ என்னுமிடத்தில் ஒரு ஆச்சரியமான மரமிருக்கிறதாம். சூரிய அஸ்தமன மானவுடன் அந்த மரத்தின் உச்சியினின்று புகை யெழும்பிச் சூரிய உதயம்வரையில் புகைந்துகொண்டே யிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

**இந்து சிலோன் இருப்புப்பாதை.**—இந்திய இருப்புப்பாதையை சிலோன் இருப்புப்பாதையோடு சேர்க்கும் வேலை ஜரூராய் நடந்துவருகிறது. ஜனுவரிமாதத்தில் இது முடிந்துபோகுமென்று கருதப்பட்டது. இப்போது பெப்ருவரி 24உ யாகுமென்று கூறப்படுகிறது. சென்னை கவர்னரும் சிலோன் கவர்னரும் சேர்ந்துவந்து இந்தப் பாதையில் வண்டி விடுவதைக் கவனிப்பார்களாம்.

**சீனவில் கிறிஸ்துமார்க்கம்.** — இன்றைக்கு 106 வருஷங்களுக்கு முன்னர் ராபர்ட் மாரிஸன் சீனவுக்குச் சுவிசேஷங் கொண்டுபோனர். 30 வருஷகாலம் சுவிசேஷத்துக்கு அத்தேசம் இடந்தரவில்லை. 70 வருஷகாலமாய் 5 கடற்றுறைப்பட்டணங்களில்மாத்திரம் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. உள்நாட்டில் கிறிஸ்துமார்க்கம் பிரவேசித்து 50 வருஷந்தானுகிறது. இப்போது சீனவில் சுவிசேஷம் போகாத ஒரு சிறு கிராமமாவது கிடையாது. பிரஜாதிபத்திய அரசாங்கத்தில் கிறிஸ்துமார்க்கத்துக்குச் சுயாதீனம் உண்டாயிருக்கிறது. இனி கிறிஸ்தவர்கள், இராஜ்யத்தில் உயர் பதவியும் பெறலாம்.

**கிரீஸும் பல்கேரியாவும்.** — துருக்கியோடு யுத்தம் தொடங்கும்போது கிரீஸும் பல்கேரியாவும் சிநேகபான்மையா யிருந்தபோதிலும், ஜெயித்த இடங்களைப் பங்கிட்டுக்கொள்ளுவதில் இரண்டுக்கும் பலத்த மாற்சரிய முண்டாகி நாளதுவரையில் ஒன்றோடொன்று பகைகொண்டிருந்தது. சில பல்கேரிய யுத்தகைதிகளைக் கிரீஸ் விடுதலைசெய்யாமல் இன்னும் மறியல் செய்திருக்கிறது. இப்போது கிரீஸ் இனி அப்படிப் பகைசாதிப்பதில் பலனில்லையென்று கண்டு, திரேஸில் பல்கேரியர் கிரேக்க பிரஜைகளை நியாயமாய் நடத்தும்பக்ஷத்தில் யுத்தகைதிகளைத் தான் விடுதலை செய்துவிடுவதாகவும், இனி இரண்டு நாடுகளுக்கும் பழைய சிநேகபாவமிருக்கவேண்டுமென விரும்புவதாகவும் பல்கேரியாவுக்குத் தெரிவிக்க, பல்கேரியாவும் சந்தோஷமாய் அதை யங்கீகரித்திருக்கிறது.

**கிரேத்தாதீவும் கிரீஸும்.**—கிரேத்தாதீவு 1669—ஹு துருக்கியருடைய ஆளுகைக் குள்ளானது. அந்நாள்முதல் அத்தீவின் குடிஜனங்கள் துருக்கியருக் கடங்காமல் பலமுறையுங் கலகஞ் செய்துவந்தார்கள். 1898—ல் பெரிய கலகமுண்டானபோது கிரேட்பிரிட்டன், பிரான்ஸ், ருஷியாமுதலிய வலிய அரசுகள் பிரவேசித்து அதைச் சுயாதீன அரசுக்குள்ளாக்கின. என்றாலும் துருக்கியின் மேலதிகாரத்துக் குட்பட்டிருந்தது. இடையில் கிரீட்டின் ஹை கமீஷனர் கிரீஸ் அரசனல் நியமிக்கப்பட்டு வந்ததால், கிரீஸ் ஸ்டாம்புகளும், கிரீஸ் கொடிகளுமே அந்நாட்டில் உபயோகிக்கப்பட்டுவந்தன. 1908—ல் கிரீட் முழுமையும் கிரீஸோடு சேரவேண்டுமென்று விரும்பி ஜனங்கள் முயற்சிசெய்ய, அதன் பலனுக இப்போது அது முழுமையும் கிரீஸோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது. டிசெம்பர்மீ 14உ கிரீஸ் அரசன் கிரீட்டுக்குச் சென்று ஆடம்பரங்களோடே அத்தீவை கிரீஸோடு சேர்த்துக்கொண்டார். பால்கன் யுத்தம் நேர்ந்திராவிடின் கிரீட் கிரீஸோடு சேரத் துருக்கியர் இடங்கொடுத்திருக்கமாட்டார்கள்.

## THE BREAD OF LIFE.

## ஜீவ அப்பம்.

ஒரு கூட்டமான கிறிஸ்தவ ஊழியர்கள், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்யும்படி விசேஷித்த எத்தனத்தோடு ஒருமாதம் புறப்பட்டுப் போனர்கள். அவர்கள் பற்பல இடங்களுக்குப் பிரசங்கவேலையாய்ப் பிரிந்துபோகுமுன், அவர்களுக்கு மத்திய ஒரு இடத்தைத் தெரிந்துகொண்டு அங்கே எல்லாரும் ஒன்றுகூடி கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அவர்களுடைய ஊழியத்திற்குப் பெற்றுக்கொள்ளவும், அவருடைய சித்தத்தை அறிந்து அதன்பிரகாரம் அவருடைய ஊழியத்தைச் செய்யத்தக்கவிதமாய் கர்த்தர் அதை அவர்களுடைய இருதயத்தில் வெளிப்படுத்த வேண்டுமென்றும் ஜெபித்தார்கள். கிராமங்கள்தோறும் புறப்பட்டுப் போய்ப் பிரசங்கித்து, 'கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்'' என்று ரோமர் 10, 9-ல் சொல்லப்பட்ட வசனத்தை அந்த ஜனங்களுக்குக் கற்பித்துக்கொண்டே போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

ஒருநாள் காலை 8 மணிக்கு ஜனங்கள் எல்லாரும் ஒரு ஆலயத்தில் கூடி ஒரு ஆராதனை வைத்தார்கள், அந்த ஆராதனை முடிய ராத்திரி ஒன்பதுமணியானது, அவர்கள் அவ்வளவுநேரம் அக்கூட்டத்திலிருக்கும்படி அவர்களுக்கு யாரும் சொல்லவில்லை. அங்கிருந்த குருவானவர்கூட அவர்களைச் சீக்கிரத்தில் அனுப்பிவிட வேண்டுமென்று பலமுறையும் பிரயத்தனப்பட்டார். ஜனங்களோ அக்கூட்டத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. இவ்வளவுநேரமாக அவர்கள் யாரும் சாப்பிடவில்லை, அப்படியிருந்தும் அவர்கள் ஆகாரத்திற்காக எதிர்பார்க்கவில்லை, அவர்கள் இதுவரையிலும் சாப்பிடாமல் பட்டினியாய் இருப்பதையும் ஒருபொருட்டாக எண்ணவில்லை, பசி என்பதை உணராமலிருந்தார்கள். இப்படி அவர்கள் இருந்ததற்கு அக்கூட்டத்திலிருந்த விசேஷம் என்ன? கர்த்தருடைய பரிசுத்தஆவியின் மகத்துவமான பிரசன்னம் அவர்கள் மத்தியிலிருந்தது. ஆகையால்தான் அவர்கள் எல்லாரும் தங்கள் புதிய ஜீவியத்தைப்பற்றி சிறந்த சாட்சி கொடுக்க கர்த்தர் அவர்களைப் பரிசுத்தாவியினலே நிரப்பி இருந்தார். எல்லாரும் சாட்சி கொடுத்தார்கள். ''பாவத்திலிருந்து இரட்சிப்பு'' என்கிற விஷயம் என்ன என்று இதுவரையிலும் அறியாமலிருந்தேன்; ஆனல் இயேசு என் இருதயத்தில் பேசி என் பாவங்களையெல்லாம் கழுவி என் இருதயத்தை ஆனந்தத்தால் நிரப்பி இருக்கிறர்'' என்று ஒவ்வொருவரும் அக்கூட்டத்தில் சாட்சி சொன்னர்கள். அவர்கள் எல்லாரும் இரட்சிப்பின் சந்தோஷத்தை அடைந்தபடியால் அக்கூட்டத்தில் கொஞ்சமாவது தளர்ச்சி அடையாமலும், பசியின் கொடூரத்தை உணராமலு மிருந்தார்கள்.

ஒரு இடத்தில் ஒரு விருத்தாப்பியமுள்ள ஸ்திரீ தனிமையாய் ஜெபம் செய்ததை சிலர் கேட்டிருந்தார்கள். அந்த ஜெபத்தின் சுருக்கமாவது: ''கர்த்தராகிய இயேசுவே, நான் சிறுவியாய் இருக்கும்போதே இந்த நற்செய்தியை எனக்கு அனுப்பியிருப்பீரானல் நான் நன்ருய் வாசிக்கக் கற்றுக்கொண்டிருப்பேன். அதன் மூலமாய் உமக்குச் சிறந்த ஊழியத்தைச் செய்து அநேகரை உம்மண்டை வழிநடத்தியிருப்பேன். இப்போ நானே கிழவியாய் இருக்கிறேன், இனிமேல் வாசிக்க நான் கற்றுக்கொள்ள முடியாது. ஆனலும் என்ன, என் முழுப்பலத்தை, ஆண்டவரே, உமக்குத் தத்தம் செய்து இரவும் பகலுமாய் உமக்கே ஊழியஞ் செய்வேன்'' என்று சொல்லி உடனே பிரசங்கம் செய்யும்படியாய் வெளியே புறப்பட்டாள். அந்த நாளெல்லாம் வேலைசெய்து இருட்டாயும் அநேக மணிநேரங்களாய் வேலைசெய்து, திரும்பவும் காலை ஐந்துமணிக்கெல்லாம் எழுந்து தன்னுடைய வேலையைத் துவக்கி, மாலை இரண்டுமணிவரையிலும் இயேசுநாதர் அவளுக்குச் செய்த காரியங்களைச் சொல்லி அங்குள்ள ஜனங்களைக் கிறிஸ்தவர்களாகும்படி ஏவி அவர்களோடு ஜெபித்துப் போராடிக்கொண்டிருந்தாள். அவள் அந்த வேலையை நிறுத்தவே இல்லை. இவைகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ஒரு குருவானவர் அவளிடம் போய் ''அம்மா, ஏதாகிலும் ஆகாரம் சாப்பிட்டாயா?'' என்று கேட்டார். அதற்கு அவள், ''ஆம்''என்றுள். அதற்கு குருவானர் அவளைப்பார்த்து, ''அம்மா, நீ இன்று காலையில் எழுந்தது முதற்கொண்டு இதுவரையிலும் பிரசங்கித்துக்கொண்டே யிருக்கிருயே, அப்படியிருக்க் நீ எப்போ சாப்பிட்டாய்?'' என்றுர்.

அதற்கு அந்த ஸ்திரீ ''ஐயா, நான் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வதே எனக்கு ஆகாரம், ஆகையால் எனக்குப் பசி இல்லை, ஆத்துமாக்களை என் இரட்சகரிடம் நடத்த எனக்கு அவர் உதவிசெய்தார்'' என்று சொன்னுள். அப்போது அந்த குருவானவர், அவருடைய வேலைக்காரனிடம் அந்தம்மாளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி உத்தரவு கொடுத்தார். அந்தம்மாள் அந்த ஆகாரத்தைச் சாப்பிட்டுக்கொண்டே கர்த்தர் அவளுக்கு அந்தக் காலையில் செய்த நன்மைகளையெல்லாம் சொல்லி அவரை ஸ்தோத்திரித்தாள்.

''வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்'' என்றும், ''நானே ஜீவ அப்பம்'' என்றும், இயேசுநாதர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறர்.

## GOD'S TEN ATTRIBUTES AND THE BIBLICAL AUTHORITIES THEREOF.

## கடவுளின் தச லக்ஷணங்களும் வேதாகம அத்தாட்சிகளும்.

வானத்தையும், வானத்திலுள்ள சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் முதலிய நவக்கிரகங்களையும், பூமியையும் பூமியிலுள்ள சர்வ சிருஷ்டிகளையும் மஹா விஸ்தாரமான சமுத்திரங்களையும் அதிலுள்ள சர்வ ஜீவராசிகளையும் ஆகாயத்தில் பறக்கும் பட்சிகளையும் நாம் வெகு நுட்பமாய்க் கவனித்துப் பார்க்குமளவில், ஆச்சரியப்படத்தக்கதான இப்படிப்பட்ட பொருட்களைச் சிருஷ்டித்த கடவுள் ஒருவர் உண்டென்று நாம் தெளிவாய் அறிகிறோம். அதுமாத்திரமல்ல, இப்படிப்பட்ட சிருஷ்டிகளை நாம் கவனிக்கும்போது அவருடைய வல்லமையையும், அளவில்லாத சிறந்த ஞானத்தையும் அறிந்துகொள்ளுகிறோம். அதோடுகூட அவருடைய சர்வ லட்சணங்களையும் நாம் அறியவேண்டும்.

மேலும் இந்துக்கள் பூஜித்து வணங்கிவரும் திரிமூர்த்திகளி லொருவரான விஷ்ணுதானே கடவுளுடைய இலட்சணங்களைப்பற்றி ''அனதி புருஷனய் சத்துவாதி குணசூனியனய், பிரகிர்தி பிரத்தியேக சொரூபனய் சுயம்பிரகாசமாய், பிரபஞ்சத்துக் காதாரபூதனய், சர்வ இலட்சணனய் இருப்பவனெவனே அவனே ஆதியந்தமில்லாத சுயம்புவாய் இருக்கப்பட்ட கடவுளாவார்'' என்று சொல்லுகிறர். மேலும் நாரதமுனி விஷ்ணுவாகிய நாராயணனிடத்தில் வந்து, ''எந்த தேவனை அல்லது பிதாவைத் தொழுதுகொள்ளுகிறீர் அது எங்களுக்குத் தெரியவில்லை'' என்று கேட்க, அதற்கு நாராயணன், ''தியானத்தில் ஓரேவிஷயமாக எவ்வற்றிற்கும் மேலான ஆவியைத் தியானிப்பாயாக'' என்று சொன்னனும். அப்போது நாரதமுனி, அந்த மேலான ஆவியின் தரிசனை பெறும்படி மேருபருவதத்திற்குப் போனன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக, திரிமூர்த்திகள் தாமும் எங்கும் தேஜோன்மயமாய் விளங்காநிற்கும் பராபரமும், யாதொன்றிலிருந்தும் உற்பத்தியாகாதவருமான ஒரே அனதி நித்ய வஸ்துவாகிய மெய்த்தேவனை வணங்கவேண்டும் என்று ரூபிக்கிறபடியால் இவரையே சகலரும் அண்டிக்கொள்வது மாத்திரமல்ல; அவரது சகல லக்ஷணங்களையும் அறிந்து அவரையே வழிபடுதல் இகபர பாக்கியங்களுக்கு ஆதிகாரணமாயிருக்கிறது. கடவுளின் தச லக்ஷணங்களாவன:—

1. **நீத்தியமானவர்.**—''நீத்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறர்.'' ஏசா. 57. 15. ''உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது; நீர் அனதியாயிருக்கிறீர்.'' சங். 93. 2. ''கர்த்தராகிய நீரோ என்றென்றைக்கும் இருக்கிறீர்; உம்முடைய பேர் பிரஸ்தாபம் தலைமுறை தலைமுறையாக நிற்கும்.'' சங். 102. 12. ''அவைகள் அழிந்துபோகும், நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம்; அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர்; அப்பொழுது மாறிப்போம்.'' சங். 102. 26.

2. **சர்வ வல்லமையுள்ளவர்.**—''அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சலைப்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வ வல்லமையுள்ள தேவனுகிய கர்த்தர் இராஜ்யபாரம் பண்ணுகிறர்'' என்று சொல்லக் கேட்டேன். வெளி. 19. 6. ''இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவன் சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ளவர்; செயலிலே வல்லவர்.'' எரே. 32. 18.

3. **சர்வ வியாபகமுள்ளவர்.**—''கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது.'' நீதி. 15. 3. ''பாதாளமும் அழிவும் கர்த்தரின் பார்வைக்குப் பிரத்தியட்சமாயிருக்க, மனுபுத்திரருடைய இருதயம் அதிக பிரத்தியட்சமா யிருக்குமல்லவோ.'' நீதி. 15. 11. ''என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்.'' சங். 139. 2–3. ''நான் வானத்திற்கு ஏறினலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கைபோட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலேபோய்த் தங்கினலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும். உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.'' சங். 139. 8–10.

4. **சர்வ ஞானமுள்ளவர்.** — ''இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது; அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்.'' ஏசா. 28. 29. ''ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்.'' ரோம. 11. 33. ''அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயு மிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.'' எபி. 4. 13.

5. **மாறதவர்.**—''உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும். நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர்; அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமையாய்ப்போம்; அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறுதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை.'' சங். 102. 24–27. ''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.'' யாக். 1. 17.

6. **தயையும் இரக்கமுமுள்ளவர்.** — ''தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறர்.'' சங். 103. 13. ''அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள். கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர்; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது.'' சங். 145. 7–9. ''தேவனே இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்.'' எபே. 2. 4, 5.

7. **பரிசுத்தமுள்ளவர்.**—''கர்த்தரைப்போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை.'' 1 சாமு. 2. 2. ''கர்த்தரால் எங்கள் கேடகமும், இஸ்ரவேலின் பரிசுத்தரால் எங்கள் இராஜாவும் உண்டு.'' சங். 89. 18. ''உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.'' லேவி. 19. 2. ''சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்.'' ஏசா. 6. 3. ''இவ்விதமாய் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவிலே என் பரிசுத்த நாமத்தைத் தெரிவிப்பேன்; என் பரிசுத்த நாமத்தை இனி பரிசுத்தக் குலைச்சலாக்க ஒட்டேன்; அதினல் நான் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தர் என்று புறஜாதிகள் அறிந்துகொள்வார்கள்.'' எசே. 39. 7.

8. **நீதியுள்ளவர்.**—''கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது.'' சங். 11. 7. ''நியாயமும் நீதியும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்.'' சங். 89. 14. ''எங்கள் தேவனுகிய கர்த்தர் தாம் செய்துவருகிற தம்முடைய கிரியைகளில் எல்லாம் நீதியுள்ளவர்.'' தானி. 9. 14. ''பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.'' வெளி. 15. 3. ''அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர்; அவர் மகா நீதிபரர்.'' யோபு, 37. 23.

9. **உண்மையுள்ளவர்.**—''கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது; உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது.'' சங். 36. 5. ''அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; கர்த்தரின் உண்மை என்றென்றைக்கு முள்ளது.'' சங். 117. 2. ''அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கு முள்ளது.'' சங். 100. 5. ''வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரா யிருக்கிறுரே.'' எபி. 10 23. ''பொய் சொல்ல தேவன் ஒரு மனிதனல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனுமல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றுதிருப்பாரா.'' எண். 23. 19.

10 **அளவற்றவர்.** — ''ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாய் இருக்கிறது. அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்.'' ரோ. 11. 33. ''கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத் தக்கவருமாயிருக்கிறர்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.'' சங். 145. 3. ''இதோ, தேவன் மகத்துவமுள்ளவர்; நாம் அவரை அறிய முடியாது.'' யோபு, 36. 26. ''கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு மகத்துவமானவைகள்! உமது யோசனைகள் மகா ஆழமானவைகள்.'' சங். 92. 5. ''அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது.'' ஏசா. 40.28.

தஞ்சை: J. பொன்னுசாமி,
சுவிசேஷப் பிரசங்கி.

## THE RELIGION OF CHRIST.

## கிறிஸ்துமார்க்கம்.

கிறிஸ்துமார்க்கமானது, பெரிதும், சிறப்பும், பிரகாசமுடையதும், மனுஷனுடைய ஜீவியத்தில் வரக்கூடியதும், எல்லாத் தீய வல்லமையிலிருந்தும் மனுஷனைத் திருப்பி அவனுடைய இருதயத்தில் ஊக்கத்தை எழுப்பி, சமாதான முழக்கின் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதுமாயிருக்கிறது.

கிறிஸ்துவின் வழி, சந்தோஷகரமான வழி, உலகம் அளிக்கிறதைவிட ஆழ்ந்த சந்தோஷமுடையது; ஏனென்றால், அது தன் சுயாதீன செல்வத்திலும், சுயாதீன குணத்திலும் பிறந்து தேவனுடைய அன்பினலேயே உற்பத்தியானது. அழியாத அன்பின் நிச்சயத்தை அடைந்திருக்கிற கிறிஸ்தவர்களாகிய நம்மையல்லாமல் யார் சந்தோஷமாய இருக்கக்கூடும்? பெருத்த சந்தோஷத்தின் செய்தியைக் கேட்டிருக்கிற நம்மையல்லாமல் யார் அச்சந்தோஷத்தை அறியக்கூடும்?

கடவுளின் நித்தியகரத்தால் தாங்கப்பட்டு வருகிறோம் என்று அறிந்திருக்கிற நம்மையல்லாமல் யார் சமாதானத்தில் நிலைபெறக்கூடும்?

## COUNT YOUR BLESSINGS.

## பெற்ற ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்.

Tune and words:
"When upon life's billows you are tempest toss'd"

Sacred Songs and Solos:—No. 745, New.

1. துன்பமாம் புயல் உன்மேல் மோதினலும்,
எல்லாம் இழந்தே னென்றெண்ணிச் சோர்ந்தாலும்,
எண்ணிப்பார் பெற்ற ஆசீர்வாதங்களை,
வியப்பைத்தரும் உன் கர்த்தர் செய்தவை.

*Chorus.*
எண்ணிப்பார் உன் ஆசீர்வாதங்கள்;
எண்ணிப்பார் கர்த்தர் செய்தவைகள்;
ஒன்றொன்ருக எண்ணிப்பார் யாவும்;
கர்த்தர் செய்தவைகள் வியப்பைத் தரும்.

2. கவலையாம் பாரம் ஏற்றப்பட்டாலும்,
சிலுவை உனக்குப் பாரமாயினும்,
எண்ணிப்பார் நன்மைகள், சந்தேகந்தீரும்;
பாடிக்களித்து நாள் கழிந்தேபோகும்.

3. நிலம், பணம், பொருள் உன்னோரைப்பார்த்து,
மகிழ் ஏசு தரும் ஆஸ்தி நினைத்து;
எண்ணிப்பார் பணந்தரா நன்மைகளும்,
மோட்சவீடும், பரம பொக்கிஷமும்.

4. சிறு, பெரு சங்கடங்கள் மத்தியில்
சோர்ந்துபோவதேன் கர்த்தன் ஆளுகையில்?
பெற்ற ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்;
மோட்சஞ் சேருமட்டும் தூதர் தேற்றுவார்.

P. B.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

இந்தியாவில் வசிக்கும் மகம்மதியர் இரு பிரதான வகுப்பினர். ஒரு வகுப்பாருக்கு "ஸுன்னிகள்" என்றும், மற்ற வகுப்பாருக்கு "ஷீயர்கள்" என்றும் பேர். வடஇந்தியாவிலுள்ள மகம்மதியர் பெரும்பாலும் மார்க்க வைராக்கியரான ஸுன்னி வகுப்பைச்சேர்ந்தவர்கள். இத்தேச முழுவதிலும் ஷீயர்கள் வகுப்பினர் சுமார் ஐம்பது லக்ஷம்பேர் மாத்திரம். மகம்மது சமயத்திற்கு இஸ்லாம் என்றும் பேர் வழங்குவதுண்டு. "இஸ்லாம்" என்ற பதம் "பக்தி," அல்லது "கையளித்தல்" என்று பொருள்படும்.

இஸ்லாமியர் யாவரும் தங்கள் மார்க்கம் இமான் என்னும் சித்தாந்தமும் தீன் என்னும் அனுஷ்டானமும் அமைந்துள தென்கிறார்கள். மார்க்க பக்தரான மகம்மதியர் விசுவாசிக்கவேண்டிய சித்தாந்தம் யாதெனில், தேவன், தூதர், ஆகமங்கள், நபிமார், நடுத்தீர்ப்புநாள், நன்மை தீமை, முன்குறித்தல் என்பவைகளே.

1. **தேவன்.** — ஒரே தேவன் உண்டென்றும், அவர் சர்வ வல்லவர் என்றும் இஸ்லாமியர் விசுவாசிக்கிறார்கள். தேவனைத்தவிர வேறே தேவனில்லை என்பதே அவர்களுடைய விசுவாசப்பிரமாணத்தின் மூலவாசகம். அல்லா என்பது "தேவன்" என்று பழைய ஏற்பாட்டு ஆகமங்களில் திருப்பியிருக்கும் "எல்," "ஏலோகீம்" என்ற பதத்தின் அரபி ரூபமேயாம். தேவன் ஒருவரே என்னும் ஏகேஸ்வர வணக்கத்தைச் சாதிப்பதில் மகம்மதுமார்க்கம் புத்த இந்து மதங்களிலும் சிரேஷ்டமானது. என்றாலும் தேவனைப்பற்றிய மெய்யறிவில் இஸ்லாம் குறைவுள்ளதென்றே சொல்லவேண்டும். "மகம்மது மார்க்கத்தின்படி, சுயாதிபத்தியமும் கருணையற்ற சர்வ வல்லபமுமே தேவனுடைய லக்ஷணங்கள்; சிருஷ்டிகளின் நன்மை தீமைகளில் கடவுள் பச்சாத்தாபப்படுகிறவரல்ல; 'தேவன் அன்பாகவேயிருக்கிறார்' என்னும்கிறிஸ்து மார்க்க சத்தியம் அறிவாளிகளான மகம்மதியர் பார்வையில் தேவதூஷணமாகவும், அறிவிலிகளின் புத்திக்கு மறைபொருளாகவும் விளங்குகின்றது" என்று மகம்மதிய நூல்களை உற்றாராய்ந்த சுவிமர் சாஸ்திரியார் பகர்ந்திருக்கிறார்.

2. **தேவதூதர்கள்.**—மூன்று வகுப்பான அசரீரி வஸ்துக்களுண்டென்பது இஸ்லாமியர் கோட்பாடு. அவைகளாவன: — தேவதூதர், ஆவிகள், சாத்தானும் அவன் கணங்களும்.

3. **ஆகமங்கள்.**—தேவன் இவ்வுலகத்திற்கு 104 திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்களருளினரென்றும்; அவற்றில் நான்கு நூல்கள் தவிர, மற்றவையெல்லாம் சோர்ந்துபோயினவென்றும் மகம்மதியர் சொல்லுகிறார்கள். அந்த நான்கு நூல்களாவது:— மோசேயின் நியாயப்பிரமாணமாகிய **தௌராத்**, தாவீதின் சங்கீதங்களெனப் பேர் வழங்கும் **சபூர்**, ஈசாநபியின் **இஞ்ஜீல்**, மகம்மதுநபி அருளின **கொரான்** என்பவைகளே. இவற்றில் கொரான் அநாதியாய் எவராலும் சிருஷ்டிக்கப்படாத நூல் என்று மகம்மதியர் பாராட்டிக்கொள்வர். மற்ற மூன்று கிரந்தங்களையும் கொரான் புகழ்ந்து பேசினபோதிலும், அவை மூன்றிலும் தப்பறை உபதேசங்கள் நுழைந்துவிட்டனவென்றும், கடைசி நபியாகிய மகம்மதுநபிக்கு அருளப்பட்ட கொரான் வந்தபோது மற்றவற்றில் கண்ட கற்பனையனைத்தும் தள்ளுபடியாகிவிட்டனவென்றும் இஸ்லாமியர் சொல்லுகிறார்கள்.

கொரான் ஓர் விசேஷித்த நூல் என்பதற் கையமில்லை. பரிமாணத்தில் நமது புதிய ஏற்பாட்டை விடச் சற்று சிறியதே. அதில் 114 அத்தியாயங்கள் உண்டு. அத்தியாயங்களில் வரும் ஒவ்வோர் விசேஷ பதங்களைக்கொண்டு, அத்தியாயங்களுக்குச் சிறப்பு நாமங்களிட்டிருக்கிறார்கள். உதாரணமாக: பசு, தேனீ, ஸ்திரீ, எறும்பு, சிலந்திப்பூச்சி முதலிய விநோத நாமங்கள் அத்தியாயங்களுக்குண்டு. இதில்கண்ட சரித்திரங்கள் காலக்கிரமப்படி ஒழுங்குப்படுத்தப்படவில்லை. தவிரவும், இந்நூலில் நியாய தோரணை கண்டுபிடிப்பது அரிது; இதிலடங்கிய செய்யுட்களில் ஒன்றுக்கொன்று பொருத்தமற்ற பொருட்கள் துக்குடி துக்குடியாக வருவதுமன்றி, பொய்யும் மெய்யும், சரித்திரமும் கட்டுக்கதையும், பிரார்த்தனையும்சாபங்களும்ஒழுங்கில்லாமல்கலந்து வருகின்றன. மகம்மதியரோ பாஷைநடையிலும் சொல்லலங்காரத்திலும்கொரானுக்குநிகரான நூல் கிடையாதென்றும், அதின் உற்பத்தி, பொருள், ஆக்ஞை யாவும் அற்புத பூர்வீகமானதென்றும் சொல்லிக்கொள்ளுவார்கள்.

கொரானில் கண்ட உபதேசங்களில் குறைகள் பலவுள:—(1) சரித்திரப் பிசகுகள் மிகுதி. (2) பிராண்ட கட்டுக்கதைகள் அனந்தம். (3) உலக சிருஷ்டிப்பின் விவரம் தப்பு. (4) வீண் ஐதீகங்கள் ஏராளம். (5) அடிமைத்தனம், பலதாரம் படைத்தல், இஷ்டப்படி மனையாளைத் தள்ளிவிடல், மார்க்க விஷயமான நிஷ்டூரம், ஸ்திரீ ஜனங்களை அந்தர்ப்புரத்தில் அடைத்து அறியாமையில் வளர்த்தல் முதலிய குரூர ஒழுங்குகளை நிலைப்படுத்திவிடுகிறது.

4. **நபிமார்.** — "நபி" என்றால் "தீர்க்கதரிசி" என்றர்த்தம். இஸ்லாமியர் நபிமார் பலரை ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்களில்பெரும்பான்மையோர் நம்முடைய பழைய ஏற்பாட்டாகமத் தீர்க்கதரிசிகளே. நபிகள் எல்லோரையும் ஒன்றுபோல நேசித்து மதிக்கிறதாக மகம்மதியர்சொல்லிக்கொண்டபோதிலும், மகம்மதுநபியையே உள்ளக்கனிவுடன் நேசித்து, அவருடைய போதனை சாதனையையே தங்கள் நடக்கைக்குப் பிரமாணமாக வைத்து வருகிறார்கள்.

5. **நடுத்தீர்வை நாள்.** — இஸ்லாமியரின் விசுவாச சூத்திரத்திலும் கொரானிலும் நடுத்தீர்ப்பு நாளைப்பற்றிச் சவிஸ்தாரமாய் சொல்லியிருக்கின்றது. உயிர்த்தெழுதலின் நாள் என்றும், பிரிக்கும் நாள் என்றும், கணக்கிடும் நாள் என்றும் அந்நாள் அழைக்கப்படுகிறது. மார்க்க பக்தருக்கு சரீர இன்பங்களும் அவிசுவாசிகளுக்குச் சரீர வேதனைகளும் நித்தியமாய் லபிக்குமென்பது மகம்மதியரின் நம்பிக்கை. "இஸ்லாமியருடைய சுவர்க்கம் இரத்தினக் கம்பள மஞ்சங்களும், பளிங்கு ஜாடிகளும், திராட்சரசம் நிரம்பி வடியும் பாத்திரங்களும் நிறைந்துள்ள மனோஹர நந்தவனம் என்றும், அவ்விடத்திலிருப்போரின் கண்கள் இருளடைவதுமில்லை, புத்தி மயங்குவதுமில்லை என்றும், நித்திய கன்னிகைகளை அவர்கள் சதாகாலமும் அநுபவிப்பார்கள்" என்றும் கொரானில் வர்ணித்திருக்கின்றது.

(இன்னும் வரும்.)

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager,
Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.


## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2–ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2–ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணு, 7 அணு. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.


### ஜனுவரிமாத பஞ்சாங்கம்.—

| வாரம். | ஜனுவரிமீ = மார்கழி—தை. ⊙ பௌர்ணமி, 12உ ● அமாவாசை, 26உ | | | | | மார்கழி—தை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 5 | 12 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 6 | 13 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 30 | 7 | 14 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 1 | 8 | 15 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 2 | 9 | 16 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 3 | 10 | 17 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 4 | 11 | 18 |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1913.

Registered No. M. 442.




# சத்திய தூதன்.

FEBRUARY, 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. பெப்ருவரிமீ, 1914.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**பெரிய சிங்கம்.**—காலிபோர்னியாவில் லாஸ் ஆஞ்சிலஸ் என்னுமிடத்தில் சிங்கத்தின் மண்டையோடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதன் நீளம் 18 அங்குலம். அகலம் 12 அங்குலம். இது இக்காலத்திலுள்ள சிங்கங்களின் மண்டைக்கு இரண்டத்தனை பெரிது.

**பக்ஷியைப்போல் பறத்தல்.**—பிரெஞ்சு ஆகாய கமனிகள் ஆகாயகப்பலின் உதவியில்லாமல் ஆகாயத்தில் பக்ஷிகளைப்போல பறந்துபோக ஒரு யந்திரம் செய்துவருகிறார்கள். இந்த யந்திரத்துக்கு "ஏயிறட்" என்று பெயர். வெகு நீளமான செட்டைகளிருக்கும். இந்தச் செட்டைகளின் அகலம் 3½ அடி; வாலுமிருக்கும். அதன் நீளம் 4½ அடி.

**நோபில் பரிசு.** — வங்காளத்துப் புலவனான ரபீந்திரநாத தாகோருக்குக் கிடைத்த நோபில் பரிசின் கிரயம் 8 ஆயிரம் பவுண், அதாவது 120,000 ரூபாய். இந்தப் பரிசைப்பெற்ற ஒரே பிரித்தானிய பிரஜை ரட்யார்ட் கிப்ளிங் என்ற புலவன். இவ்வளவு சிறந்த பரிசைத் தற்காலத்திலுள்ள ஒரு இந்தியன் பெற்றது இந்தியாவுக்கே பெருமை என்ன வேண்டும்.

**வளர்த்தியால் வந்த வம்பு.** — காலிபோர்னியாவில், லாஸ் ஆஞ்சிலாவில் 20 வயதுள்ள ஒரு வாலிபன் 7 அடி 2 அங்குலம் வளர்ந்திருக்கிறான். அவனுடைய உயரத்தினிமித்தம் அவனைக் கால்பந்து பந்தயத்தில் சேர்க்கிறதில்லை. ரெயில்வண்டியில் அவன் வசதியாய்க் கால்நீட்டிப் படுக்க இடமிருக்கிறதில்லை. டிராம் வண்டியில் ஏறக்கூட அதிக கஷ்டப்படுகிறான்.

**1914-ம் வருஷப்பலன்.**—தேபெஸ் அம்மையென்கிற இரேகாலக்ஷண சாஸ்திர விற்பன்னி, நிகழ் வருஷத்துப் பலன்களை முன்னுரைத்திருக்கிறாள். இவ்வருஷம் செழிப்புள்ளதாயிருக்குமாம். ஆயினும் பல குழப்பங்களுமிருக்கும்; யுத்த பயங்கரங்களிருக்கும்; ஜெர்மனியில் விபரீத பழிகளேற்படும்; இங்கிலாந்தில் வெள்ளச்சேதமுண்டாகும்; போர்த்துக்கல்லில் இராஜாதிபத்தியம் ஏற்படும் என்கிறாள்.

**உலகிற் பெரிய பாலம்.**—ஜெர்மனியில் றைஜனுக்கும் மத்தியநாட்டுக்கும் இடையில் இந்த வருஷம் ஒரு பாலம் கட்டப்போகிறார்கள். இது உலகிலுள்ள பாலங்கள் யாவற்றிலும் பெரிதாயிருக்கும். 3,580 கெஜம் நீளத்துக்கு அதிகமாயிருக்குமாம். இதன் செலவு 10 லக்ஷம் பவுண் என்று திட்டஞ் செய்திருக்கிறது. 4–வது பாலத்துக்குப் பிடித்த செலவில் இது நான்கிலொரு பங்குதான் என்னப்படுகிறது.

**அருமையாய்ச் சீர்திருந்தும் பிராணி.**—எல்லாப் பிராணிகளிலும் அதிக அருமையாய் மனிதனால் சீர்திருத்தப்படும் பிராணி ஸ்திரீயே என்று ஒரு ஆங்கில பண்டிதர் சில நாட்களுக்குமுன் வெளியிட்டார். ஸ்திரீயைச் சீர்திருத்தஞ் செய்ய வெகுகாலஞ் செல்லுமென்றும், சீர்திருத்தஞ் செய்வதற்கு எதிரிடையாய் நிற்கும் அவளுடைய குணமே ஸ்திரீகளுக்குள்ளே அவளை மதிப்புள்ளவளாக்குகிறதென்றும் அவர் அபிப்பிராயங் கூறினார்.

**ஜப்பானில் பூகம்ப சேதம்.**—ஜப்பானில் சக்குராஷிமா என்னுமிடத்தில் எரிமலை வெடித்ததினாலும் அதன்மூலமாக உண்டான பூகம்பத்தாலும் அநேக ஊர்களழிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான ஜனங்கள் மடிந்துபோனார்கள். எரிமலையிலிருந்துண்டான தீ அநேக மைல் தூரம் பெரிய கற்பாறைகளை எறிந்ததாகவும் அக்கினிக்காக்ஷி வெகு பயங்கரமாயிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. வெள்ளங்கள் புரண்டும் பலத்த உயிர்ச்சேதங்கள் நேரிட்டன.

**மின்சாரக் கப்பல்.**—கானடா மான்ட்ரீல் பட்டணத்துக்கு ஒரு மின்சாரக் கப்பல் கட்டப்பட்டிருக்கிறது. மின்சார சக்தியால் நடத்தப்படும் முதல் கப்பல் இதுவே. இதன் நீளம் 250 அடி. அகலம் 42½ அடி. ஆழம் 16 அடி. 2,400 டன் பாரம் ஏற்றக்கூடியது. 6 சிலண்டர் யந்திரத்தால் 1,200 குதிரை பலத்தோடு இது நடத்தப்படும். நீராவி சக்தியின் மகிமை இவ்வளவு சீக்கிரம்குறைய ஆரம்பித்துவிட்டது, மானிட விவேகத்தின் அளப்பரிய ஆற்றலைக் காண்பிக்கிறது.

**ஒட்டியிருந்த இரட்டைப்பிள்ளைகள்.**—பாரீஸ் நகரத்து வைத்தியசாலைகளி லொன்றில் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகள் சில தினங்களுக்கு முன் கொண்டுவரப்பட்டன. அவைகளை டாக்டர்கள் ஜாக்கிரதையாய்ப் பரிசோதனை செய்தார்கள். புகைப்படமும் எடுத்து வைத்திருக்கிறார்கள். எக்ஸ் ரேய்ஸ் என்கிற ஒளிக்கருவியைக்கொண்டு சோதித்து இரண்டையும் நுட்பமாய்ச் சத்திரஞ்செய்து பிரித்துவிடலாமென் றபிப்பிராயப்படுகிறார்கள்.

**9,000 மைல் படகில் பிரயாணம்.** — கைஷராக் என்கிற கல்கத்தா வியாபாரியொருவர் கல்கத்தாவிலிருந்து இங்கிலாந்துக்குப் படகிலேயே பிரயாணஞ் செய்யவேண்டுமெனத் துணிந்து ஒரு படகு செய்திருக்கிறார். இந்தப் படகின் நீளம் 82 அடி, 9 அங்குலம். அகலம் 19 அடி. ஆழம் 10 அடி, 9 அங்குலம். மோடார் சக்தியாலும், பாயினாலும் நடத்தப்படும். தேர்ந்த கடற் பிரயாணிகள் 9 பேர் அவரோடு போவார்கள். மால் தீவு கடலோடிகள் அவரோடு போகிறார்கள். இந்தப் படகு பிரயாணமாகிவிட்டது

**எதிரிடையான செய்கைகள்.** — பர்மிங்காம் பட்டணத்தில் 12 வயதுள்ள ஒரு பெண்ணிருக்கிறாள். அவள் எந்தக் காரியத்தையும் எதிரிடையாகவே செய்துவருகிறாள். படிப்பு கொஞ்சம் மாறுதல் செய்தபோதிலும், எழுதுகையில் வலது புறத்திலிருந்து இடதுபுறமாய் எழுதுகிறாள். இந்தச் செய்கைக்குக் காரண மென்னவென்று வைத்திய நிபுணர் பரிசோதித்தபோது, அவளுடைய இருதயம் இடதுபுறத்திலிருப்பதற்குப் பதிலாய் வலதுபுற மிருப்பதாகவும், மூளையும் இன்னும் பல உறுப்புகளும் இடமாறியிருப்பதாகவும் தெரிய வந்தது.

**ரேடியம்.**—ரேடியம் என்கிற தாது உலகத்தில் அபூர்வமாயிருப்பதால் அதன் விலை அளவுகடந்து உயர்ந்திருக்கிறது. ஒரு கிராம் அல்லது 15 கிரெய்ன் ரேடியம் 30,000 பவுண் விலையாகிறது. தற்காலம் உலகமுழுமையிலும் உள்ள ரேடியம் 10 கிராம். இதில் வியன்னாவில் 4 கிராம். லண்டன் ரேடியம்சாலையில் 4 கிராம் இருக்கிறது. இப்படியிருக்க ஆஸ்டிரியாவில் ரேடியம் கனியொன்று

Vol. XXVII. No. 4.

கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாகவும் 4 டன் நிறையுள்ள பிச்சுக்கட்டித் துத்தநாகத்திலிருந்து 15 கிராம் ரேடியம் எடுக்கப்படுகிறதாகவும் அறிவிக்கப்படுகிறது.

**கிளாட்ஸ்டன் மந்திரி சாக்ஷி.**—பேர்போன கிளாட்ஸ்டன் மந்திரியின் சரித்திரமெழுதின டாக்டர் டால்மேஜ், ஒரு சமயத்தில் மந்திரியை நோக்கி: "உமது விருத்தாப்பியம் கிறிஸ்துமார்க்கத்தின் மீதுள்ள உமது நம்பிக்கையைப் பலப்படுத்தினதா குறைத்ததா?" என்று கேட்டாராம். அதற்கு மந்திரியார் பிற்கூறியபடி விடை பகர்ந்ததாய் அவர் எழுதிவைத்திருக்கிறார்:—"நமது நாட்டில் உன்னத நிலைமையி லிருப்பவர்களெல்லாரும் கிறிஸ்து மார்க்க விசுவாசிகள். இங்கிலாந்தில் சிரேஷ்டரான ஆயுர்வேத பண்டிதராயிருக்கும் நால்வரும் வைராக்கியரான கிறிஸ்தவர்கள். நான் பிரதம மந்திராலோசனை சபையில் 46 வருஷமிருந்த காலத்தில் உயர்தர அறிவாளிகளோடெல்லாம் பழக்கமாயிருந்தேன். அந்த 60 பேரில் 5 பேர் தவிர மற்றப்பேரெல்லாரும் உத்தம கிறிஸ்தவர்கள். அந்த 5 பேருங்கூட கிறிஸ்துமார்க்கத்தை மிகவும் மதித்தவர்கள். நாம் பல காரியங்களைப் பேசலாம். ஆனால் தேவையான காரியம் ஒன்றே, அதாவது சுவிசேஷம் எல்லா நிலைமையிலுமுள்ளவர்களுக்கு எவ்வாறு பயன்படுமென்பதே." இந்த வார்த்தைகளால் அந்த உத்தம மந்திரியின் விசுவாசமாத்திரமல்ல, சுவிசேஷப் பிரபல்லியத்தில் அவருக்கிருந்த அபிலாஷையும் நன்கு விளங்குகிறது.



பிளாரென்ஸ் பட்டணம்.

## CARE OF INFANTS.

## குழந்தைகளைப் பத்திரமாய்ப் பேணுவதைப் பற்றியது.

இந்தியாவில் அநேக சிறு குழந்தைகள் மரித்துப்போகிறதற்குக் காரணம் என்னவென்றால், அக்குழந்தைகளின் பெற்றோர்களுடைய அறிவீனமும் அவர்கள் அநுசரித்துவருகிற சடங்காசாரமுமே. குழந்தைகள் பிறந்த நாளிலிருந்து சில வாரம் அவர்கள் பெறக்கூடிய சரியான பார்வை இல்லாமையால் அநேக குழந்தைகள் மரித்துப் போகிறார்கள்.

அநேக குழந்தைகளுடைய ஜீவன் சரியான முகாந்தரமில்லாமல் வியர்த்தமாய் நாசமாகிறதையும், அதனால் அக்குழந்தைகளின் தாய்மார்கள் துக்கசாகரத்தில் மூழ்கிப்போகிறதையும் நான் அடிக்கடி அதிக விசனத்தோடு காண்பதுண்டு. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் விஷயத்தில் கொஞ்சம் அறிவை உபயோகித்து கவனத்தைச் செலுத்துவார்களானால் இவ்விதமாய்க் குழந்தைகள் சாகவேண்டிய அவசியமில்லை. முக்கியமாய் தாய்மார்களுடைய அறிவீனத்தினாலேயே குழந்தைகள் சாகும்படி நேரிடுகிறது. அப்படியிருக்க, "கடவுள் ஏன் இந்தப் பிள்ளையை எடுத்துக் கொண்டார்." "கண்கெட்ட தெய்வம் அப்படிச் செய்ததே." "இதெல்லாம் தலைவிதி" என்கிற இம்முதலான வார்த்தைகளைச் சொல்லி தாய்மார்கள் கடவுளை நிந்திக்கிறார்கள். தங்களுடைய சொந்த அறிவீனத்தினாலும், தாங்கள் மூடத்தனமாய் அநுசரித்துவருகிற சடங்காசாரத்தினாலும் விளைந்த மோசத்தை அறிந்து, தங்கள் அறிவீனத்தையும் சடங்காசாரத்தையும் நிந்திக்கிறதற்குப் பதிலாகக் கடவுளை நிந்திப்பது சரியல்ல.

கிராமவாசிகளில் சிலருக்குள்ளே ஒருவித தப்பெண்ணமிருக்கிறது. அதாவது, குழந்தை பிறந்தவுடன் எட்டுநாள்வரையிலும் தாய்ப்பாலை கொடுக்கக்கூடாது என்பதே. இவ்வித கோட்பாடுகளினால் குழந்தை தாயிடம் பால் அருந்தாமல் விலக்கி வைக்கிறார்கள். இப்படி குழந்தையை சிலநாள் நீக்கிவைப்பதால், தாயினுடைய பால் சொறியும் மார்கள் கடினப்பட்டு, பால் தயிரைப்போல் உறைந்துபோகும். குழந்தையை அதன் தாய்ப் பாலைக் குடிக்காமல் விலக்கிவைக்கிற நாள்மட்டும் பசும்பாலினாலே குழந்தையைப் போஷிக்கிறார்கள். அப்படி பிள்ளைக்கு உபயோகிக்கும் பாலை சரியாய் கலக்காமல் குழம்பாய் கொடுப்பார்கள். இன்னும் அழுக்கான கந்தைத்துணிகளால் முலைக் காம்பைப்போல் செய்து பாலை தோய்த்து குழந்தையை உறியும்படி செய்வார்கள். இதினால் போதுமான பாலை உட்கொள்ள சக்தியில்லாமல் குழந்தை பலஹீனத்தினாலும் பட்டினியினாலும் செத்துப்போகும். தாய்ப்பாலை உடனே ஊட்டாமல் விலக்கி வைக்கிற பிள்ளைகள், பட்டினியினாலாகிலும், அல்லது பாலை சரியாய்க் கலக்காமல்



கொடுப்பதால் அஜீரணமுண்டாகி அதன் மூலமாய் வயிற்றுப்போக்கு உண்டாகுவதினாலும், அல்லது பாலை உபயோகிக்கும் பாண்டங்கள் சுத்தமில்லாமலும், அழுக்கான கந்தைத்துணிகளை முலைக்காம்பாக உபயோகப்படுத்துவதினாலும் வயிற்றில் பலவித கோளாறுகள் உண்டாகி குழந்தை எப்படியும் வியாதிப்பட்டு மரித்துப்போகும். குழந்தைகளுக்கு இன்னொருவகையாய் வயிற்றில் உண்டாகக்கூடிய உபத்திரவம் உண்டு. அதாவது குளிர்ந்துபோன பாலைக் கொடுப்பதுவும் அல்லது ஜீரணிக்கக் கூடாதவிதமாய்ப் பாலைத் திரும்பவும் திரும்பவும் காய்ச்சுவதும்தான். இவ்விதமான ஒழுங்கீனங்களினாலும் அறிவீனங்களினாலும் குழந்தைகளுக்கு மோசம் நேரிட்டு மரணம் உண்டாகிறது.

குழந்தையினுடைய ஜீவன் ஒரு நுண்ணிய நூலின்மேல் தொங்குகிறதைப்போல் அவ்வளவு நுட்பமாய் இருக்கிறதென்பதைப்பற்றி இந்திய தாய்மார்கள் அறிந்துகொள்ளுகிறதில்லை. ஒரு இடத்தில் சில நிமிஷங்களுக்கு முன்னே பிறந்த ஒரு குழந்தையைப் பார்த்தேன். அந்தக் குழந்தைக்குச் சூடு உண்டாக்கும்படி, நெருப்பின்பேரிலிருந்து கிளம்பிவருகிற புகைக்குமேலே தூக்கிப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அந்த அறை நிறைய புகையால் மூடப்பட்டிருந்தது. நான் அந்த அறைக்குள் பிரவேசித்தபோது மூச்சுவிட கஷ்டப்பட்டேன். அப்படியிருக்க அச்சிறு குழந்தையைப் புகையின்மேல் பிடிக்கும்போது மூச்சுவிட எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கவேண்டும்.

இன்னும் சில சமயங்களில், குழந்தைகளுக்குச் சூடு உண்டாக்குகிற விஷயத்தில் கவனம் செலுத்தாமலேயே சும்மா போட்டுவிடுகிறார்கள்.

சில வாரங்களுக்குமுன் வியாதியாயிருந்த ஒரு சிறு குழந்தையைப் பார்வையிடும்படி அழைக்கப்பட்டேன். அந்தக் குழந்தை பிறந்து ஐந்து நாள்தான் ஆனது. ஆனால் அக்குழந்தை தன் தாடையை திறக்கக்கூடாமல் கிட்டிக்கொண்டிருந்தது. அந்தக் குழந்தை அப்படிக் கிட்டிக்கொண்டிருப்பதைப்பற்றி அக்கிராமத்திலுள்ளவர்கள் இது கண் திருஷ்டி என்று சொன்னார்கள். நானோ, அது அப்படி அல்ல. இது குளுமையினால் உண்டானதென்று சொன்னேன். மண் தரையின் மேலே ஒரு சிறு பாயைப் போட்டு, அதன் சில மெல்லிய கந்தைத் துணிகளின்மேல் அந்தக் குழந்தையை நிர்வாணமாய்ப் போட்டிருந்தார்கள். அந்த சமயம் மழைகாலமாய் இருந்தது. இதினாலே அக்குழந்தைக்குக் குளுமை உண்டாகி, தாடை கிட்டிக்கொண்டது.

நான் அந்த வியாதியைப்பற்றிக் கண்டுபிடித்த குறிப்பை அங்குள்ளவர்களுக்குச் சொன்னபோது, அங்குள்ளவர்களுக்குத் திருப்தி உண்டாகவில்லை. அதினாலே, அவர்களுடைய சொந்த வைத்தியன் ஒருவனை அழைத்துக் காண்பித்தார்கள். அவன் சில மந்திரங்களை முணுமுணுவென்று சொல்லி அந்தப் பிள்ளையின்பேரில் ஊதி அக்குழந்தையின் கழுத்திலும், கைகளிலும், கயிறுகளினால் குளிசம் கட்டினான்.

குழந்தை நல்ல சுகமுள்ளதும், பலமுள்ளதுமாயிருந்தாலும் கடைசியாக இரண்டொரு நாளைக்குள் மரித்துப்போனது.

இத்தேசத்தில் சிறு குழந்தைகளுக்குச் சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்கக்கூடாதென்கிற ஒருவித தப்பிதமான எண்ணமிருக்கிறது. ஆனால் சிற்றாமணக்கெண்ணெய் வெகு அருமையானதும், குழந்தைகள் கஸ்திபடுகிற அநேக வியாதிகளுக்கு நல்ல குணத்தைக் கொடுக்கக்கூடியதுமா யிருக்கிறது.

குழந்தைகளுக்கு மலச்சிக்கல், அஜீரணபேதி, ஜுரம், குளுமை, வயிற்றுவலி, இசிவு, அல்லது ஜன்னி இம்முதலானவைகளுக்கெல்லாம் சிற்றாமணக்கெண்ணெய் அதிக நல்லது.

பின்வரும் சில பிரமாணங்களைக் கவனிப்பதால் பிள்ளைகளை வளர்க்கும் தாய்மார்களுக்கு அதிக பிரயோசனப்படும்.

1. பிள்ளையைச் சூடாய் வைக்கவேண்டும். ஆனால் முகத்தையும் தலையையும் மூடவேண்டாம். முக்கியமாய் கைகளும் பாதங்களும் சூடாய் இருக்கும்படி செய்யவேண்டும்.

2. சுத்தமுள்ள ஆகாயத்தை நன்றாய் சுவாசிக்கத்தக்க இடத்தில் வைக்கவேண்டும்.

3. குழந்தை பிறந்த அந்த மணிநேரத்திற்குள்ளாக தாயின்பாலையே கொடு, மற்றபடி வேறொன்றையும் கொடாதே.

4. குழந்தையினுடைய தாய் மரணமடைந்ததினாலும், அல்லது ஏதோ ஒரு முகாந்தரத்தினால் தாயினுடைய பாலை கொடுக்க முடியாவிட்டால், குழந்தையைக் கை பாலினாலே போஷிக்கவேண்டும். அப்படிச் செய்யும்போது, குழந்தைக்கு உபயோகப்படுத்தும் புட்டியும், ரப்பரும், எப்போதும் சுத்தமாய் இருக்கும்படி அடிக்கடி நன்றாய்க் கழுவவேண்டும். ஒருபங்கு பாலில் இரண்டு பங்கு தண்ணீர்விட்டு அதில் கொஞ்சம் உப்பு கலந்து கொடுக்கவேண்டும். ஆனால் சர்க்கரை கலக்கவேகூடாது.

5. குழந்தைக்குக் கொடுக்கும் பசும்பாலை பால்காரனிடமிருந்து வாங்கினவுடன் அடுப்பிலேற்றி மூன்று நிமிஷத்திற் கதிகப்படாமல் காய்ச்சி கொடுக்கவேண்டும். ஒவ்வொரு தடவையும் இப்படியே, குழந்தை குடிக்கும் அளவான பாலை எடுத்து சூடாக்கி கொடுக்கவேண்டும்.

6. குளிர்ந்துபோன பாலை குழந்தைகளுக்குக் கொடுக்காதே.

7. குழந்தைக்கு சுகவீனம் உண்டானவுடனே, ஒரு நல்ல டாக்டரை அழைத்துக் காண்பி. அவர் சொல்லுகிறபிரகாரம் தவறாமல் செய். அயலகத்தாரும், பந்துக்களும் சொல்லுகிற வீணான வார்த்தைகளுக்கெல்லாம் செவிகொடுக்காதே.

8. டாக்டர் முதல்தரம் கொடுக்கும் மருந்தினாலேயே குழந்தைக்கு சுகம் உண்டாகாவிட்டால், அதினால் உன் டாக்டரை மாற்றவேண்டாம். பொறுமை, விசுவாசம், விடாமுயற்சி, சாதாரண அறிவு, இவைகளில் உறுதியாய் நில்.

S. பக்கிங்கேல் அம்மாள்,
பிராமின்பரியா.

## THE HABIT OF GIVING.

## கொடுக்கும் வழக்கம்.

ஒருகாலத்தில் உலகப் பிரசித்தியடைந்த ஒரு ஜனோபகாரி இருந்தார். அவரைப்பற்றி ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஜனோபகாரி, அநேக ஜனங்களுக்கு உபகார புருஷனாக துலங்கி அதிக உதாரத்துவத்தோடு நன்மை செய்துகொண்டுவந்தபோது, ஜனங்கள் அவரைப் பார்த்து "ஐயா, நீர் அதிக உதாரத்துவமுள்ள ஜனோபகாரி, நீர் அநேகருக்கு நன்மை செய்கிறீர்" என்று புகழ்ந்து பேசினார்கள். அதற்கு அந்த ஜனோபகாரி அவர்களைப் பார்த்து, "நீங்கள் தப்பிதமாய்ச் சொல்லுகிறீர்கள், நான் உதாரத்துவ குணமுள்ளவனல்ல, சுபாவமாய் நான் அதிக பொருளாசைக்காரன்" என்று அவர்களுக்குச் சொன்னார். பின்னும் அவர் சொன்னதாவது, நான் சிறுவனாக இருக்கும்போது எனக்குப் போதுமான அறிவு இருந்தது. அதனால்தான் எவ்வளவு பிசினித்தனமும், கேவலமான குணமுமுள்ளவனாய் இருக்கிறேன் என்று அறிந்துகொண்டேன். அதினிமித்தம் அக்கேவல பொருளாசையை விட்டு பிறருக்குக் கொடுக்கும் குணம்வர முயற்சிசெய்தேன். ஒரு தம்படி மற்றவர்களுக்குக் கொடுப்பது எனக்கு அதிக வேதனையாயிருந்தது. அப்படியிருக்க, உதாரத்துவகுணம் என்னிடத்தில் சரியாய் படிகிறவரையிலும், அதிகமாய் முயற்சித்தேன். உதாரத்துவகுணத்தைப் பழகுகிறவிஷயத்தில் எனக்கிருந்த கஷ்டம் கொஞ்சமல்ல. எனக்கு எதிலும் அவ்வித கஷ்டம் இருந்ததில்லை. ஆனால் இப்போதோ, நான் பிறருக்குக் கொடுக்கிறவிஷயத்தில் மகிழ்ச்சி அடைகிறேன். அதையே நான் அதிகமாய் விரும்புகிறேன் என்று சொன்னார்.

## HIS LOVE FOR ANIMALS.

## பிராணிகளிடம் வைத்த அன்பு.

ராபர்ட் பிரௌணிங் என்றவர் நூறுவருஷத்திற்கு முந்தி மே மாதத்தில் பிறந்தவர். ஆங்கில பாஷையைப் பேசும் எல்லா இடங்களிலும் அவருடைய பிறப்பின் நாள் கொண்டாடப்பட்டது. அவ்விதமாய் அவருடைய பிறப்பின் நாளைக் கொண்டாடுவதற்குக் காரணம் என்னவென்றால்: இவர் அதிக நல்ல மனுஷனும், இங்கிலாந்து தேசத்தில் பிறந்த பெரிய கவிஞர்களில் ஒருவராகவும் இருந்தார். இவருடைய தாயார் விசேஷித்தவிதமாய் புஷ்பங்களின்பேரிலும் ஜீவப்பிராணிகளின்பேரிலும் அதிக பிரீதியுடையவர்கள். இக்குணத்தை இவரும் இவருடைய தாயாரிடத்திலிருந்து சுதந்தரித்துக்கொண்டார். அவரிடத்தில் ஒரு விபரீதமான வல்லமையிருந்தது. அதனால் அவர் மறைவிடங்களிலுள்ள பல்லிகளையும் சிலந்திப்பூச்சிகளையும் ஒருவிதமான பாஷையின்மூலமாய் நயப்படுத்தி, அவைகளைத் தமக்கு வசப்படுத்தக் கூடியவராய் இருந்தார்.

மண்டூகங்களைக்கூட வசப்படுத்தவும், தோட்டத்திலுள்ள பாப்பாத்தி பூச்சிகளையும் தமக்கு இணங்கிவரும்படி செய்வதில் பேர்பெற்றவராய் இருந்தார். இவருடைய ஜீவகாலமெல்லாம், இவ்விதப் பிராணிகளின்பேரில் அவருடைய அன்பு பெருகிக்கொண்டேவந்தது.

இவர் பேர்போன ஒரு கவிஞனாய்த் தேறியிருந்தபோது, இவருடைய வீட்டில் சிநேகிதர்கள் பல விஷயத்தின்பேரில் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது, அச்சம்பாஷணைகளுக்குத் தடைஉண்டாகத் தக்கவிதமாய் இவருடைய வீட்டின் பின்புறத்திலிருந்து கீச் கீச் என்கிற சப்தம் கேட்கும், அப்போது பிரௌணிங் என்பவர், "அதோ அங்கே என் செல்லங்களிருக்கிறது, அவைகள் அதிக பக்ஷமுள்ள பிராணிகள்" என்று சொல்வார். அந்தச் செல்லங்கள் எவை என்றால், அவலக்ஷணம் பொருந்திய இரண்டு வாத்துக்கள்தான்.

## A LITTLE GIRL'S DEED.

## ஒரு சிறுபெண்ணின் செய்கை.

ஒரு வாரத்திற் கொருமுறை பிரசுரஞ் செய்யப்படுகிற ஒரு பத்திரிகையுண்டு. அதன் விசேஷம் என்னவென்றால், உலகத்தில் நன்மைக்கென்று செய்யப்படுகிற ஊழியத்தில், சிறு பையன்களும் சிறு பெண்களும், எவ்வளவுதூரம், அவ்வூழியத்திற்கு உதவிக் கருவிகளாய் இருக்கிறார்களென்கிற விஷயத்தைத் தெரிவிக்கும்பொருட்டு, அதற்கென்று அந்தப் பத்திரிகையில் ஒரு பிரத்தியேகமான இடம் குறித்துவிடப்பட்டிருக்கிறது. அப்பத்திரிகையில், ஒரு சிறுபெண் செய்த ஒரு பெரிய நன்மையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்

றெது. அந்தப் பெண்ணின் பெயர் ராகேல், சாதாரணமாய் அப்பிள்ளையை "குருட்டு ராகேல்" என்று அழைப்பது வழக்கம். ஏனென்றால் அந்தப் பெண் இரண்டு கண்ணும் தெரியாத குருடி. நியாய சட்டங்களை உண்டுபண்ணும் பட்டணமாகிய ஆல்பனி என்றொரு பட்டணம் உண்டு. அங்கேதான் நியாய சாஸ்திரங்கள் உண்டுபண்ணுகிறது. அந்த இடத்திற்கு இக்குருடியான இச்சிறுபெண் பிரயாணப்பட்டுப் போனாள். அதன் பிறகு அங்குள்ள நியாய சாஸ்திரத்தை உண்டு பண்ணுகிற சாஸ்திரிகளைக் கண்டு, உலகத்தில் குருடர்களாய்ப் பிறந்திருக்கிற குழந்தைகளுக்கு கவர்ன்மெண்டார் நன்மை செய்யவேண்டுமென்று அவர்களோடு அதிகமாய் வழக்காடினாள். இவள் இவ்விதமாய் வழக்காடுகிறதற்கு முந்தி சர்க்கார் எட்டுவயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளை, அவர்கள் ஏற்படுத்தியிருக்கிற பாடசாலைகளில் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. ஆனால் இந்தக் குருடியான சிறுபெண் அந்த நியாய சாஸ்திரிகளிடம் அதிகமாய்த் தர்க்கித்து, குருடர்களாய்ப் பிறந்திருக்கிற சிறுபிள்ளைகளுடைய நிற்பந்த நிலைமையை வெகு நேர்த்தியாய் அவர்களுக்கு எடுத்துக் காட்டினபடியால், இவளுடைய கனிவான ஞாயம் அங்கிகரிக்கப்பட்டது. இவள் இவ்விதமாய்ப் பேசி தன் சொந்த இடத்திற்கு வந்தவுடன், இவளுக்குச் சர்க்காரிடமிருந்து ஒரு தந்தி சமாசாரம் வந்தது. அதிலுள்ள விஷயம் என்னவென்றால், "குருடர்களாய்ப் பிறந்திருக்கிற பாலர்கள் எல்லாரும், அவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற பாடசாலையில் வந்து சேரலாம்" என்பதே. இவ்வளவு பெரிய நன்மை உண்டானதற்குக் காரணம், குருடியாய் இருந்த அச்சிறுபெண்ணின் செய்கையே.

## PRAISE TO GOD.

## போற்றித் திரு விருத்தம்.

காப்பு.

*திருவிருத்துஞ் சீமானைத் திரித்துவனைப் போற்றித்*
*திருவிருத்தப் பாமாலை செய்ய—ஒருவருக்கும்*
*ஆராய ஒண்ணு அருளாவி யெஞ்ஞான்றும்*
*சீராய செல்வத் துணை.*

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

1. அகிலமும் படைத்தாய் போற்றி
   யகாதிமெய்ப் பொருளே போற்றி
   கருசுட ரொளியே போற்றி
   காகர்த முதல்வா போற்றி
   மிகுதயா நிதியே போற்றி
   விமலவித் தகனே போற்றி
   யிகலுடை யெனையாட் கொண்ட
   வெந்தையே போற்றி போற்றி.

2. ஆர்கவி சலவு பாரை
   யறுதினத் தலங்க ரித்த
   சீர்கதித் தோங்கும் ஞான
   தேசிகா போற்றி மாந்தர்
   ஏர்பட வதிவ தற்கா
   வேதெனைத் தந்தாய் போற்றி
   நேர்தா வெனையாட் கொண்ட
   நித்தனே போற்றி போற்றி

3. ஆதியி லாத மேவை
   யருங்கனி புசித்த ஞான்று
   நீதியி னன்னோர் வீய
   நியமனந் தந்து பின்னும்
   ஏதிலா நரரை மீட்ப
   லென்றவாக் களித்த வுந்தன்
   கோதிலாக் கருணை போற்றி
   கொற்றவா போற்றி போற்றி.

4. விஞ்சிய பாவம் மாள
   வியனுல கத்தை நீரால்
   எஞ்சுறச் செற்ற போது
   மெளியரோ வாவை யாண்ட
   வஞ்சமி லரசே போற்றி
   வழியொரீஇ நின்ற வென்னை
   யஞ்சலென் றழைத்தாய் போற்றி
   யண்ணலே போற்றி போற்றி.

5. ஆண்டுநா லாயி ரங்க
   ளாயபோழ் தன்று தந்த
   மாண்டகு மாற்ற முற்ற
   மதித்தவாய் மையனே போற்றி
   ஆண்டகை யுருவா யேழை
   யரிவைபால் வந்தாய் போற்றி
   யீண்டெனை யாண்டாய் போற்றி
   யேசுவே போற்றி போற்றி.

6. வித்தக வாவி தூய்மை
   மிடைதரச் சேயாய் நின்ற
   வுத்தம வள்ளா லுன்ற
   னுபயபொற் கமலம் போற்றி
   இத்தகை நீசர் நெஞ்சி
   னிருளறக் கிளைத்த ஞானச்
   சத்திய வொளியே நின்சீர்
   சார்வதா போற்றி போற்றி.

7. புல்லிய சேக்கை புல்லாப்
   புல்லிய மெய்யா போற்றி
   யெல்லிய லாடை யில்லா
   வெளியகற் குமரா போற்றி
   மெல்லியன் மடிவ திந்த
   மேதகை யவனே போற்றி
   யல்லிய னெஞ்சி னேனை
   யாண்டவா போற்றி போற்றி.

8. பாந்தளின் விடத்தைக் காயும்
   பரமமெய்ம் மருந்தே போற்றி
   ஆந்துயர் விடாயைத் தாழ்த்து
   மாருயிர்ப் புனலே போற்றி
   மாந்தளிர் மேனிப் பாவை
   மரிவயிற் றுதித்த விண்ணின்
   எந்தலே போற்றி யெந்த
   னிறைவனே போற்றி போற்றி.

9. நினைப்பினு நின்று காயு
   நிலநெடு வனத்த லைந்து
   தனித்துற நீழற் காணுத்
   தகையின ரண்மி யாறும்
   வனப்பவிர் தருவே போற்றி
   வாடிய பைங்கூழ்க் கேற்ற
   பனிப்புயர் மழையே போற்றி
   பண்ணவா போற்றி போற்றி.

10. கண்பட்ட கையிற் பட்ட
    காற்பட்ட மேனி பட்ட
    எண்பட்ட குறைக ளெல்லா
    மெடுபட்ட மகிமை நின்ற
    விண்பட்ட வமுதே போற்றி
    விரிபட்ட மறையே போற்றி
    புண்பட்ட பொல்லே னின்னைப்
    புகல்பட்டேன் போற்றி போற்றி.

M. P. A. *(இன்னும் வரும்.)*

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager,
Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிறுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம் ... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றுட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணு, 7 அணு. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### பெப்ருவரி௴ பஞ்சாங்கம்.—

| வாரம். | பெப்ருவரி௴ = தை—மாசி. ⊙ பௌர்ணமி, 10உ. ● அமாவாசை, 24உ. | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தை—மாசி. | | | |
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 19 | 26 | 4 | 11 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 20 | 27 | 5 | 12 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | 21 | 28 | 6 | 13 |
| புதன் ... | 4 | 11 | 18 | 25 | 22 | 29 | 7 | 14 |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | 23 | 1 | 8 | 15 |
| வெள் ... | 6 | 13 | 20 | 27 | 24 | 2 | 9 | 16 |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | 25 | 3 | 10 | 17 |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒருத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒருத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 3-MAR 1914 MADRAS.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MARCH, 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. மார்ச்சுமீ, 1914.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**பாதரக்ஷை துடைக்கும் யந்திரம்.**—பாதரக்ஷை துடைக்கவும் மெருகிடவும் ஒரு யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 25 விநாடிக்குள்ளே அது பாதரக்ஷைகளைத் துடைத்து மெருகிடக் கூடுமாம். 10 ஷிலிங் 6 பென்ஸ் இந்த யந்திரத்தின் கிரயம்.

**பையனா பூதமா?**—பிலதெல்பியாவில் இளைஞர் படையில் 13 வயதுடைய குக் என்கிற பையனொருவனிருக்கிறான். அவனுடைய உயரம் 6 அடி 7 அங்குலம். நிறை 13 ஸ்டோன் அதாவது 182 பவுண்ட். இவ்வளவு பெரிய இளைஞன் உலகத்திற் கிடையாது.

**சிறுவன் சம்பாதனை.**—பிரஞ்ச் உயிர்படக்காக்ஷி கம்பனியொன்றில் அமர்த்தப்பட்டிருக்கிற தேபாஸ் என்கிற 7 வயது பையன் ஒருவன் வருஷத்தில் 4,000 பவுன் சம்பாதிக்கிறதாகச் சொல்லப்படுகிறது. இவ்வளவு பெருத்த சம்பாதனையுடைய சிறுவன் வேறே யாருமில்லை.

**கோடீஸ்வரன் விருந்து.**—நியூயார்க் நகரில் ஒரு தனிகன் தனது தோழர்களுக்குச் செய்த விருந்தில் ஆளொன்றுக்கு 125 பவுன் அதாவது 1,975 ரூபாய் செலவு செய்தானாம். 150 பேருக்கு 18,750 பவுன் செலவு பிடித்ததென்று சொல்லப்படுகிறது. பணம் பத்துவகையும் பண்ணும்.

**சாகிறநாளில் சங்கீதமா?**—கென்சிங்டனில் 71 பிராயமுடைய ஆனி காலுவி என்கிற கிழவி தான் அறியாமையில் கழித்துவிட்ட காலத்தைக் குறித்து துக்கித்து இப்போதுதான் எழுதவும் படிக்கவும் கற்றுவருகிறாளாம். "அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வாராது; பாடையேறினும் ஏடு கைவிடேல்."

**அதிநுட்ப சித்திரம்.**—இத்தாலிய மாது ஒருத்தி அதிநுட்பமான சித்திரமொன்று வரைந்திருக்கிறாள். அதில் வாயுயந்திரம், யந்திரதாரிகள், வண்டி, குதிரை, பிரயாணிகள் யாவுந் தெளிவாய்ச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அரைகோதுமை மணியானது மூடிக்கொள்ளக் கூடிய இடத்தில் இவ்வளவுஞ் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. "சித்திரமுங் கைப்பழக்கம்."

**வியாச்சிய விருப்பம்.**—தற்காலத்திலே ஜனங்களுக்குள் காணப்படுகிற வியாச்சிய விருப்பத்தினால் லாயர்கள் எவ்வளவு பணக்காரராகிறார்களென்று அநேகருக்குத் தெரியாது. லண்டனில் இப்போது பெரிய நீதிபதியாயிருக்கிற சர் ஐசிக் ரூபஸ் லாயர்வேலை செய்தபொழுது வருஷத்தில் 30,000 பவுன் சம்பாதித்தாராம். இந்தியாவிலும் அநேக லாயர்கள் நீதியதிபர்களுக்கு மேலான சம்பாத்தியம் பண்ணுகிறார்கள்.

**வேத சரித்திர உண்மை.**—எடின்பரோவில் சிலாசாசன ஆராய்ச்சியில் அதிசிரேஷ்டரான சர் உவில்லியம் மிச்சல் ராம்சே என்பவர், இயேசுநாதர் பிறந்தகாலத்தில் சீரியாவுக்குத் தேசாதிபதியாயிருந்தவன் சிரேனே என்பவனே என்று ரூபிக்கிற சாசனங்களைக் கண்டுபிடித்திருக்கிறார். லூக்கா சுவிசேஷகன் எழுதின இக்காரியத்தைப்பற்றி இதுவரையில் படிப்பாளிகளுக்குள்ளே யிருந்த பெருந்தர்க்கம் இனி தலைக்காட்ட நியாயமில்லை.

**விவாகச் சின்னம்.**—இத்தேசத்தில் ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகஞ் செய்துகொள்ளுவதற்கு அடையாளமாக மாங்கல்யம் பூணுகிறான். ஆங்கிலேயர்களுக்குள்ளே கணையாழி தரிக்கிற வழக்கமிருக்கிறது. ஆனால் ஸ்பானியாவில் கலியாண மாப்பிள்ளை, பெண் தன் தலையிற் சூடியிருக்கிற ரோஜா புஷ்பத்திலொன்றை இடதுபக்கத்திலிருந்து வலதுபக்கம் தள்ளுவானானால், அதுவே அவன் அப்பெண்ணை மணஞ் செய்துகொண்டானென்பதற்கு அடையாளம். தேசங்கள்தோறும் வழக்கங்கள் வேறு.

**குழந்தைப் பாடகி.**—ஒளன்ஸ்லோ என்னுமிடத்தில் 5 பிராயமுடைய பெண்குழந்தை யொன்றிருக்கிறது. சென்ற வருஷம் ராயல் காலேஜில் 14 வயது பெண்களுக்கு வைத்த சங்கீதப் பரீக்ஷையில் அவள் 150-இலே 143 மார்க்கு வாங்கி ஒப்பேறினாள். பியானு என்கிற வாத்தியக் கருவியில் அநாயாசமாய்ச் சங்கீதம் வாசிக்கிறாளாம். மற்றப் பிள்ளைகளைப்போலவே ஒரு நாளெல்லாம் பொம்மையோடு விளையாடிக்கொண்டிருந்து முக்கால் மணி நேரமட்டும் வாத்திய அப்பியாசஞ் செய்கிறாளென்று சொல்லப்படுகிறது. அவளுடைய பேர் ஜோன் லாய்ட்.

**குடியுந் தருமமும்.**—பிரித்தானியர் குடிக்கும் மற்றக் காரியங்களுக்குஞ் செலவிடுகிறதைப்பற்றி ஒருவர் கணக்குப் போட்டிருக்கிறார். ஒவ்வொரு நிமிஷத்திலும் சாராயத்துக்குச் செலவாகுந் தொகை 320 பவுன். இராணுவத்துக்குச் செலவு 120 பவுன். புகையிலைச் செலவு 36 பவுன். படிப்புச் செலவு 30 பவுன். மிஷன் ஸ்தாபனங்களுக்குத் தருமச்செலவு 2¾ பவுன். குடியோடு தருமத்தை யொப்பிட்டால் தருமச்செலவில் குடிச்செலவு 108 மடங்கு அதிகப்பட்டிருக்கிறதென்கிறார். "துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும், நஞ்சுண்பார் கள்ளுண் பவர்."

**கர்த்தருடைய ஜெபம்.**—ஆக்ஸ்போர்ட் மான்ஸ்பீல்ட் காலேஜில் கிரீக் வித்தியாபாரகரான டாக்டர் ஜேம்ஸ் மாபட், கர்த்தருடைய ஜெபத்தை மூலத்துக்குச் சரியாய் மொழிபெயர்த்திருக்கிறார். அது வருமாறு: "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் வந்திக்கப்படுவதாக; பரலோகத்தில் உமது சித்தம் நிறைவேறுமாப்போல், பூமியிலேயும் நிறைவேறுவதாக. நாளைக்குரிய எங்களாகாரத்தை இன்று எங்களுக்குத்தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னித்துவிட்டதுபோல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். சோதனைக் குட்படப்பண்ணுமல் எங்களைத் தீமையினின்று தற்காத்தருள்க." இதிலுள்ள மாற்றங்களைக் கவனிக்க.

**கணவனோடு மடிந்தவள்.**—சில தினங்களுக்கு முன்னர் கல்கத்தாவுக் கருகில் ஒரு கிராமத்தில் நாராயணதாஸ் சாட்டர்ஜி என்கிற இந்து ஒருவன் விஷபேதி கண்டு மரித்துப்போனான். 42 பிராயமுடைய அவனுடைய மனைவி துக்கஞ் சகிக்கக்கூடாமல் ஒரு அறைக்குள்ளே பிரவேசித்துப் புருஷனுடைய சொக்காயை எடுத்துப் போட்டுக்கொண்டு பகவத்கீதை புஸ்தகத்தை மார்பின்மேல் வைத்தபடி தன் தலைமயிரில் தீயிட்டுக்கொண்டாள். ஜனங்கள் ஓடிவந்து தடுக்கிறதற்குள் அவளுடைய தேகம் வெந்து நான்குமணி நேரத்துள் மடிந்தாள். இரு

வருடைய பிரேதங்களும் ஒன்றாய்த் தகனிக்கப்பட்டன. இவ்வித செய்கையில் பார்த்தா விசுவாசம் இருப்பதுபோற் காணப்பட்டாலும், இது துக்க காலத்திலுண்டாகிற மதிமயக்கத்தினாற் செய்து கொள்ளுகிற தற்கொலையேயொழிய மற்றப்படியன்று. திடசித்த மின்மையே பெரும்பாலும் இதற்குக் காரணம்.

**இராஜாங்கக்கொலை.**—ஜனுவரி மீ 19உ மாலை 7 மணிக்கு கல்கத்தாவில் கிரேதெருவில் போலீஸ் துப்பறியும் படையைச்சேர்ந்த நிரிப்பேந்திரநாத் கோஸ் என்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் டிராம் வண்டியை விட்டிறங்கி வீட்டுக்குப் போகையில், பெங்காலி வாலிபர் இருவர் காத்திருந்து அவர் மேல் துப்பாக்கியால் சுட்டார்கள். ஒரு குண்டு மார்பிலும் இன்னொன்று தலையிலும் பட்டு உடனே கீழே விழுந்து மடிந்தார். அவரோடிருந்த ஒருவன் சுட்டவர்களைத் துரத்திக்கொண்டோடி மற்றவர் உதவியால் ஒருவனைப் பிடித்துக்கொண்டான். ஓடும்போது கொலையாளி தன்னைத் துரத்தினவர் மேல் குண்டு பிரயோகஞ்செய்ய, ஒரு பெங்காலிப் பையன்மீது பட்டு அவன் செத்தான். இரண்டாவது ஆசாமியும் பிடிபட்டான். ஒருவன் கையில் துப்பாக்கியும் மருந்துகளு மிருந்தது. இந்தக் கொலைகாரனை செஷன் கமிட்டி செய்திருக்கிறது. கொலையுண்ட உத்தியோகஸ்தன் மதிக்கப்பட்ட பெரிய மனிதன். பிடித்தவர்களுக்கு சர்க்கார் தக்க வெகுமதி செய்தார்கள். சர்க்கார் தக்க ஏற்பாடுகளைச் செய்து இந்த இராஜதுரோக கூட்டத்தை வேரறுக்காவிட்டால் இராஜாங்க கொலைகளுக்குக் குறைவிருக்கமாட்டாது.

## RAMAMANDIRAM.

## ராமமந்திரம்.

நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே இராமவென் றெழுத்தி ரண்டினால்.

அதாவது "ராமா" என்கிற இரண்டெழுத்தை யனுதினமும் உச்சரிக்கிறவனுக்கு இப்பிறப்பில் நலமும் ஐஸ்வரியமும், நாள்தோறும் உண்டாகும், தீவினையும் பாவமும் அழிந்து தேய்ந்துவிடும், பிறப்பும், இறப்பும் இனி இல்லாமல் அற்றுப்போய் விடும் என்பதாம்.



மஹாஜனக்கூடம்.

நண்பரே! இதென்ன விபரீதம்! இதென்ன விந்தை!! கடப்பாரையை விழுங்கின ஒருவன் அதை ஜீரணிக்க சுக்கு கஷாயத்தைக் குடிப்பது போல் இருக்கிறது. இரண்டு அக்ஷரங்களாலமைந்த ராமா என்கிற பதத்தை உச்சரிப்பதினால் இப்படிப்பட்ட மேன்மைகள் உண்டாகக்கூடுமானால் ஒருவன் கடவுளைத் தேடவேண்டிய அவசியமில்லை. அவன் பஞ்சமாபாதகங்களைப் பலகாலும் புரிந்துவரலாம். சன்மார்க்கமாய் ஜீவிக்கவேண்டிய அவசியமில்லை. பரமபதத்தை அடையவேண்டி கவலைப்படவேண்டியதில்லை. அவன் தன் மனம் போனபடி நடந்துகொள்ளலாம். ஐயோ! இப்படிப்பட்ட வீண் எண்ணத்தோடும் வீண் நம்பிக்கையோடும் தன் வாழ்நாட்களை கழித்துவரும் ஒருவனுடைய நிலைமையும் முடிவும் வெகு பரிதாபக் கோலமாயிருக்கும். ராமாவென்னும் சொல் அப்படிப்பட்டவனை தெய்வதண்டனைக்கும், நித்தியநரக ஆக்கினைக்கும் உட்படுத்துமேயல்லாமல் வேறெவ்விதமான நன்மைகளுக்கும் அவனைப் பாத்திரவானாக்காது. ஏனென்றால் ராமாவென்ற நாமதேயத்தை யுடையவனுடைய நிலைமைகளும் முடிவும் அப்படிப்பட்டதாக விருந்தது.

விஷ்ணுவின் ஏழாம் அவதாரமாகிய ராம அவதாரத்தில் அவன் தன் பத்தினியாகிய சீதை என்பவளோடு சிலகாலம் வனவாசம் செய்துகொண்டிருந்தகாலத்தில் இலங்காபுரியிலிருந்து தன் வலுமையினால் மூவுலகத்தையும் தனது ஆட்சிக்குட்படுத்தி, தேவர் முனிவர் யாவருக்கும் அதிக துன்பம் செய்துகொண்டிருந்த இராவணன் என்னும் இராட்சதன் சீதையைக் கவர்ந்துகொண்டுபோன சங்கதியை ராமன் தன்னில்தானே அறிந்துகொள்ள சக்தியற்றவனாய் அலைந்து திரிந்து அங்கலாய்த்துக்கொண்டிருந்தபோது, அனுமான் சுக்ரீவன் என்பவர்களால் அறிந்துகொண்டானென்றும், அதன்பிறகு தன் மனைவியை மீட்டுக்கொண்டுவர கிஞ்சித்தும் சக்தியற்றவனாய் வானரசேனைகளின் உதவியால் தன் மனைவியைத் திரும்ப மீட்டுக்கொண்டானென்றும், கடைசியாய் அவளுடைய கற்புநிலையின் ஸ்திதியைத் தன் ஞானதிருஷ்டியினாலோ அல்லது சுயசக்தியினாலோ அறிந்துகொள்ளக்கூடாமல் சோதித்தானென்றும், முடிவாக அவன் சரயு நதியில் விழுந்து அழுந்திப்போனானென்றும் காண்கிறோம். இப்படிப்பட்டவனுடைய நாமதேயம் மனிதருக்கு என்ன நன்மை செய்யும். அவனுடைய நாமமாகிய ராமா



என்னும் பெயரை உச்சரிப்பவர்களுக்கு அவனுக்கு நேரிட்டதுபோல் நேரிடுமேயன்றி யாதொரு பிரயோசனமு முண்டாகாது. இந்த நாமத்தால் இப்பிறப்பில் ஐஸ்வரியம் உண்டாவதும், தீவினையும் பாவமும் அழிந்து தேய்ந்துவிடுவதும், பிறப்பும், இறப்பும் இனியில்லாமல் அற்றுப்போவதும் சுத்தப் பிசகு. பிரணவமந்திரமாகிய "ஓம்" என்னும் சொல்லும், காயத்திரி மந்திரமாகிய ஓம்—பூர்—புவ—ஸ்வ:—தத்சவிதுர்வரேண்யம் பர்கோதேவஸ்ய தீமஹி யோ யோ ந:—பிரசோதயாத் என்னும் சொற்களாகிலும் "நமசிவய" என்னும் பஞ்சாக்ஷரமாகிலும், "ஓம் நமோ நாராயணாய" என்னும் அஷ்டாக்ஷரமாகிலும் மனிதனுக்கு எவ்விதத்திலும் எவ்விதமான பிரயோசனத்தையும் தரமாட்டாது. இது இவ்வாறிருக்க இதற்கு சுத்த எதிரிடையாய் சிவமதஸ்தர் "விஷ்ணுவைக் காண்பதினாலே சிவத்துரோகமுண்டாகும், சிவத்துரோகத்தினாலே வெகு குரூரமான நரகம் நேரிடுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் விஷ்ணுவின் பெயரை ஒருக்காலும் உச்சரிக்கக்கூடாது" என்று சொல்லுகிறார்கள். இப்படி வைஷ்ணவரும் சைவரும் ஒருவருக்கொருவர் விரோதமாய்ச் சாதிக்கிறதில் எதை மெய்யென்று நம்பலாம்? சைவர் சொல்வது மெய்யானால், சிவன், தான் புரிந்த பாதகங்களைத் தானே தொலைக்கமாட்டாமல் ரிஷிகள் முதலியோர் இட்ட சாபத்தால் லிங்கம் இழந்தலைவானேன்? பிரமஹத்தி பிடித்து பிச்சை எடுத்துண்பானேன்? மற்றொரு தெய்வத்தைப் பூசித்து அவனுடைய ஒத்தாசையால் விடுதலை அடைவானேன்? அல்லது வைஷ்ணவர் சொல்வது நிசமானால், விஷ்ணுவானவன் தான் செய்த பாவத்தினிமித்தம் ஸ்திரீகள் முதலியோர் இட்ட சாபத்தால் மனைவியை இழந்து புலம்பியழுவானேன்? மக்களை இழந்து மனவேதனைப்படுவானேன்? மற்றொரு தெய்வத்தின் பெயரை உச்சரித்து ரட்சிக்கப்படுவானேன்? இத்யாதி விஷயங்களை நாம் ஆய்ந்தோய்ந்து பார்க்குமளவில் "இலவுகாத்த கிளி போல்" ஆகக்கூடியதேயன்றி யாதொரு பிரயோசனத்தையும் காணோம்.

நண்பரே! இந்த ஜீவியத்திற்கு வேண்டிய நன்மைகளும், வரும் ஜீவியத்திற்கு வேண்டிய பரமபாக்கியங்களும் உங்களுக்கு வேண்டுமானால் "யேசு" என்னும் இரண்டு எழுத்தாலாகிய பதமே அவ்வித சிலாக்கியங்களைத் தரக்கூடியது. "யேசு" என்னும் பதத்துக்கு ரட்சிக்கிறவர் என்றருத்தம். இந்த நாமதேயத்தையுடையவர் ஆதியந்தமில்லாதவர், அளவில்லாதவர், ஞானம் நிறைந்தவர், எங்கும் நிறைந்தவர், சர்வ சக்தியுள்ளவர், மாறாதவர், வல்லமையுள்ளவர், மஹா பரிசுத்தமுள்ளவர், பாவவிமோசனத்தை அருளக்கூடியவர். இவர் 1914 வருஷங்களுக்கு முன்னதாக மனுஷருக்கு பாவமன்னிப்பீந்து, பரகதி வாழ்வை யருளும்படி மனுவடிவாக இப்பூலோகத்தில் சற்குருவாய்த்தோன்றி, நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்து, பாவஜென்மிகளான சகல மனிதரும் பட்டனுபவிக்கவேண்டிய எல்லாப் பாடுகளையும் தாமே யனுபவித்து, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மறுபடியும் மூன்றாம் நாள் ஜெயகெம்பீரராய் உயிர்த்தெழுந்து, இவ்விதமாய்ச் சகலருக்கும் ரட்சிப்பின் சுதந்தரத்தையும் அதன் நிச்சயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார். இவரே மெய்யான கடவுளும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். இவரைச் சரணடைபவர்களுக்கு இவ்வுலகத்துக்குரிய நன்மைகளும், பரம பாக்கியங்களுமுண்டாகும்.

தேனினி மையினும் யேசுவின் நாமம்
திவ்ய மதுர மாமே—அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர்
திரள் திரளாக நிதம்.

தஞ்சை: J. பொன்னுசாமி,
சுவிசேஷப் பிரசங்கி.

## PREVENTION AND TREATMENT OF CHOLERA.

## விஷபேதியைத் தடுத்தலும், அதற்குரிய சிகிச்சையும்.

விஷபேதி பாவாமல் அதைத் தடுக்க அநேக காரியங்களைச் செய்யலாம். ஒருகாலத்தில் இங்கிலாந்து தேசத்திலும், ஐரோப்பியருடைய நாடுகளிலும், விஷபேதி மும்முரமாயிருந்தது. ஆனால் தற்காலத்திலோ அப்படிக்கொன்று மிராமல் சில சமயங்களில்மாத்திரம் அங்குமிங்கும் வெகு அரிதாய்க் காணப்படுகிறது. இதற்குக் காரணம், கீழ்நாட்டுப் பிரயாணிகளின் வரத்துப்போக்கினால் விஷபேதியின் நுண்ணிய பூச்சிகள் அங்கு தலைகாட்ட நேரிடுகிறது.

விஷபேதி ஒருவித சிறு பூச்சிகளினால் உண்டாகிறது. அப்பூச்சிகள் நம்முடைய கண்களுக்குத் தென்படக்கூடாத அவ்வளவு சிறியதாயிருக்கிறது. அதை ஒருவித பூதக்கண்ணாடியின் மூலமாய்த்தான் அறிந்துகொள்ளக்கூடும். துலாம்பரமாகவும், சுத்தமாகவும் காணப்படுகிற தண்ணீரிலும் லக்ஷம் கணக்கான பூச்சிக ளிருக்கக்கூடும். ஒரு சின்ன செம்பு நிறையுள்ள ஜலத்திலும், அல்லது ஒரு இலையின்மேல் போட்டிருக்கிற சாதத்திலும், உயிரைக் கொல்லக்கூடிய இவ்விதப் பூச்சிகளின் தொகை, சென்னையிலுள்ள ஜனங்களின் தொகையைப்பார்க்கிலும் அதிகமாய் இருக்கும்.

இவ்விதப் பூச்சிகள், நம்முடைய ஆகாரத்தின் மூலமாயும் நாம் குடிக்கும் தண்ணீர் மூலமாயும் உள்ளுக்குப் போகிறது. பூச்சிகள் உள்ளுக்குச் சென்றவுடன் வெகு துரிதமாய் நம்முடைய வயிற்றிலும், குடலிலும் ஏராளமாய்ப் பெருகி நோயாளியின் மலபாதையிலும், வாந்தியிலும் திரள் திரளாய் பெருகிப்போகும். இவ்விதமாய் நோயாளிகளிடத்தில் உண்டாகிற எல்லாப் பூச்சிகளையும் ஒன்றையும் மீதிவிடாமல் கொன்றுவிடுவோமானால், இனி இந்தியாவில் விஷபேதி இல்லாமல் ஒழிந்துவிடும்.

விஷபேதியினால் வருந்தும் நோயாளியினுடைய மலத்தையானாலும் சரி, அல்லது அவன் வாந்தி செய்யும் எந்த வஸ்துவையானாலும் சரி, அவைகளைக் குளத்தண்டை எடுத்துப்போகலாகாது. ஊரில் விஷபேதி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எந்தச்சமயத்திலும் ஊரண்டை சாப்பிடத்தக்க ஜலமிருக்கும் குளத்தில்போய், அசுத்தமான சாமானங்களைக் கழுவவாவது, பானை, சட்டி முதலியவைகளை அக்குளத்தில் போடவாவது, அல்லது வஸ்திரங்களைத் துவைக்கவாவது, அசுத்தமான கால் கைகளைக் கழுவவாவது, குளிக்கவாவது கூடாது. விஷபேதி நடமாடுகிற சமயத்தில் எப்போதும், தண்ணீரை நன்றாய்க் காய்ச்சி வடிகட்டிச் சாப்பிடவேண்டும்.

தண்ணீரை அடுப்பில் ஏற்றிக் காய்ச்சும்போது நன்றாய்க் கொதி கிளம்பவேண்டும். கொதி கிளம்பின பிறகுகூட தண்ணீரை உடனே இறக்கிவிடாமல் ஐந்து நிமிஷம்வரையிலும் அடுப்பிலேயே தண்ணீர் நன்றாய்க் கொதித்துக்கொண்டே யிருக்கவேண்டும். அதன்பிறகு அதை இறக்கிவைத்து இன்னொரு சுத்தமான ஜாடியை எடுத்து, அதைக் கொதிக்க வைத்தத் தண்ணீரால் நன்றாய்க் குலுக்கிக் கழுவி, அதன்பிறகு கொதிக்க வைத்தத் தண்ணீரை ஊற்றி ஆறவைத்துச் சாப்பிடவேண்டும்.

குளிர்ந்துபோன சாதத்தைச் சாப்பிடக்கூடாது. எப்போதும் சமைத்த சாப்பாட்டை சுடும்போதே சாப்பிடவேண்டும். நன்றாய்ப் பழுக்காத காய்களைச் சாப்பிடுவதும், முற்றின காய்களை சமைத்துச் சாப்பிடுவதும், ஜீரணிக்கக்கூடாத வஸ்துக்களை அருந்துவதும் கூடாது. குளிர்ந்துபோன பாலையாவது, பழத்தையாவது சுடவைக்காமல் அருந்தக்கூடாது. வயிற்றுப்போக்கை உண்டுபண்ணக்கூடிய எந்த விதமருந்தையும் உட்கொள்ளக்கூடாது.

கள் குடிப்பதினால் குடல்களெல்லாம் வெந்துபோயிருப்பதால், கள்ளுண்பவர்களுக்கு விஷபேதி வெகு லேசாய் வரக்கூடும். ஆகையால், கள்ளை அருந்தாமல் விட்டுவிடுவது அதிக அவசியம்.

சுத்தம் அதிக அவசியம், நாம் சாப்பிடப்போகுமுன், நம்முடைய சாப்பாடு, தண்ணீர், ஏனங்கள், கைகள் எல்லாம் சுத்தமாய் இருக்கவேண்டும்.

விஷபேதியினால் வருந்தும் நோயாளியிடம் ஒரே ஒரு ஆள்மாத்திரமிருந்து உதவிசெய்யவேண்டும். அந்த ஆள் வேறெந்த வேலைகளையும், முக்கியமாய் சமையலுக்கடுத்த வேலைகளைச் செய்யக்கூடாது. 6 டிராம் கர்பாலிக் சொலுஷனை (Carbolic Solution) 1 படி தண்ணீரில் கலந்து எப்போதும் தயாராய் ஒரு பாத்திரத்தில் வைத்திருக்கவேண்டும். நோயாளியிடம் நர்ஸ் வேலை செய்கிற ஆள் வெளியே போகும்பட்சத்தில் கைகளை நன்றாய் மேல்படி கர்பாலிக் மருந்தில் துவைத்து கழுவி பிறகு வெளியேறவேண்டும். நோயாளியினுடைய வாந்தி, மலம் படும் தரைகளையும், சுவர்களையும், இன்னும் பல சாமான்களையும், நன்றாய் மேல்படி கர்பாலிக் தண்ணீரினால் சுத்தமாய்க் கழுவவேண்டும். இவ்வித பிரயோஜனத்திற்கென்று கர்பாலிக் சொலுஷன் (Carbolic Solution) எப்போதும் ஆயத்தமாய் இருக்கவேண்டும். நோயாளிக்கென்று உபயோகப்படுத்துகிற வஸ்திரங்கள், ஏனங்கள், ஜலமலபாதைகளைப் பிடிக்கும் பாண்டங்கள், இவைகளையெல்லாம் கர்பாலிக் சொலுஷனால் குறையாமல் ஒன்றரை மணிநேரம் அதிலேயே ஊறவேண்டும்.

கர்பாலிக் திராவகத்திற்குப் பதிலாக, பொட்டாஸியம் பர்மங்கநேட் (Potassium Permanganate) என்ற மருந்தை உபயோகிக்கலாம்.

தண்ணீர் சுத்தச் சிவப்பாய் மாறுகிறவரையிலும் பர்மங்கநேட்டை உபயோகிக்கவேண்டும். வாந்தி, ஜலமலபாதை செய்யும் பாண்டங்களை இவ்வித மருந்துகளினால் நன்றாய்ச் சுத்தம் செய்யவேண்டும். இவ்வித சொலுஷனை இன்னொரு சுத்தமான பாண்டத்தில் வைத்து, சமையல் அறையில் வேலை செய்கிறவர்கள்கூட கைகளை முன்னடியாகவே தோய்த்துக்கொள்வது அதிக நலம். அப்படியே சாப்பிடப்போகுமுன்கூட கைகளைத் தோய்த்துக் கழுவவேண்டும்.

சில சமயங்களில், ஒரு கிலாஸ் தண்ணீரில் 4 அல்லது 5 துளி, அறமாட்டிக் சல்பூரிக் திராவகம் (Aromatic Sulphuric Acid) விட்டு உட்கொள்வதால், வயிற்றைச் சரிப்படுத்தி, விஷபேதிப் பூச்சிகள் உள்ளுக்குப் போயிருந்தாலும் அவைகளைக் கொன்றுவிடும்.

நோயாளி சுகமடைந்தவுடன் ஸ்நானம் செய்விக்கவேண்டும். தேகம் தலைமயிர் முழுதும் கர்பாலிக் சொலுஷனால் கழுவி சுத்தம் செய்யவேண்டும். சுத்தமான வஸ்திரத்தை உடுத்தி, வேறே அறைக்கு மாற்றவேண்டும்.

நோயாளிக்கென்று உபயோகப்படுத்தின பழைய வஸ்திரங்களையும், பாய்களையும் கொளுத்திவிடவேண்டும். சுவர், வீடு முழுவதும், கர்பாலிக் சொலுஷனால் கழுவவேண்டும். கூடுமானால் வீட்டை முழுவதும் வெள்ளை அடிப்பது உத்தமம். நோயாளியின் அருகாமையிலிருந்து உதவிசெய்த நர்ஸ், கர்பாலிக் சொலுஷனால் தேகத்தையெல்லாம் கழுவி, ஸ்நானம்செய்து தன் வஸ்திரங்களைச் சொலுஷனில் தோய்த்து அதிகநேரம் ஊறவைத்து சுத்தம் செய்யவேண்டும்.

நோயாளி மரித்துப்போனால், பிரேதத்தை அறையிலிருந்து கொண்டுவருகிறதற்குமுன் சொலுஷனால், நனைக்கப்பட்ட வஸ்திரத்தால் சுற்றி வைக்கவேண்டும்.

நாம் எல்லாரும் இந்த அகோர வியாதியிலிருந்து நம்மையும் நம்முடைய பிள்ளைகளையும் காப்பாற்ற அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

## PRAISE TO GOD.

## போற்றித் திரு விருத்தம்.

(தொடர்ச்சி.)

11. செத்துநாண் மூன்று சென்றும்
 செய்யலா சருவைக் கூவ
நத்தியன் ஞேனைக் கூய
 காதனே போற்றி போற்றி.
ஒத்தபல் பவங்க ளாற்றி
 யுணர்விலா திறந்த வென்னை
வித்தக வாவி தன்னால்
 விளித்தவா போற்றி போற்றி.

12. பன்னிரு சீடர்ச் சேர்த்துப்
 பரிந்துவா னுலக ராச்ய
முன்னிய துணர்மி னென்ன
 மொழிதா விடுத்தாய் போற்றி
என்னுய ரடிமை நீங்க
 வெண்ணில புரிந்தாய் போற்றி
யுன்னரு முந்தைக் காய
 ஒருவனே போற்றி போற்றி.

13. வெள்ளநீர் வேலி சூழ்ந்த
 மேதினி யுய்யு மாறு
கள்ளநீ டியூதர் நாப்பண்
 களையறு கடின வாதை
யுள்ளநீ டுவகை துங்க
 வுத்தரித் திடச்ச னித்த
வள்ளனீ ரன்றோ ஞான
 வாரியே போற்றி போற்றி.

14. நந்தனத் துற்ற கேடு
 நந்தகத் துற்றாய் போற்றி
யந்தரத் தண்ணல் சித்த
 மாக்குவான் வந்தாய் போற்றி
முந்திரத் தத்தின் வேர்வை
 மூடிடப் பெற்றாய் போற்றி
யெந்திரத் தினைய வேற்ற
 இளவலே போற்றி போற்றி.

15. கைதவ மனத்தி யூதர்
 கழிவசைப் பரவை நீந்த
வெய்திய வார்வம் போற்றி
 யிரங்கிய வதனம் போற்றி
மைதவழ் மனத்தி னன்னோர்
 வழங்கிய வடிக ளுண்ட
மெய்தினம் போற்றி யேற்ற
 விநயமும் போற்றி போற்றி.

### வேறு.

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

16. செழுங்காவிற் கொழுங்கனியாற் சேர்ந்த பாபச் சிக்ககல விப்புவியி லுதித்துக் காவி, லழுங் காநொந் தயர்ந்துவினை சுமந்து மட்டில் ஆற்றல் குலைந் திருந்தநா வுருவே போற்றி, விழுங்காதின் றடியாளை வெய்ய தீயில் விருத்தவரும் பேய்மடிய வெற்றி கொண்ட, ஒழுங்கார்ந்த பேரின்பப் பெருக் கே யீறில் உன்பெருமை யெந்நாளும் போற்றி போற்றி.

17. முந்துயரப் படிதணந்து முடிவி லாற்றன் முழுதுமிகந் தகமுவந்து நாளை யிந்த, வெந்துயரப் படிநின்று மீட்ப லென்று விளங்கிழையின் கருவு தித்த வேந்தே போற்றி, நொந்தயரப் புரிபேயை நொறுக்கி யெம்மை நோவகலத் தடுத்தாண்ட நுவ லொணாத, விந்தயருட் கடனிது விமல நீர்மை மென்மேலு மென்மேலோய் போற்றி போற்றி.

18. புன்மையறப் பரிசுத்த ஆவி தன்னாற் பொன்னூடு புகுவிக்கும் பொருவி னேசத், தன்மையுடை யொருதாதைக் கொத்த தூய தகைசான்ற குமாரநின் சரணம் போற்றி, எண்மையறக் கழுவியெனி லின்ப வூற்றா யிருந்துமிடி பொருந்தாறு தென்று மூவா, நன்மைவாக் கடைக்கணிக்கு நாதாநின்மென் கனிமலர்ப் பதவிணைகள் போற்றி போற்றி.

19. என்றென்று மூவாத இறைவா போற்றி யிரக்ஷணிய சன்மார்க்க நெறியே போற்றி, ஒன்றென்று மூன்றென்று முற்ற மூல திரித்துவத்தி லொன்றான தேவே போற்றி, அன்றன்று மூசுதுயரனைத்துந் தூர மாகவடி யார்ப்புரக்கு மருளே போற்றி, நன்றென்றுந் தீதென்று முணரா வென்னை நயந்தடிமை கொண்டவனே நாதா போற்றி.

20. பெற்றோர்கள் பிறந்தார்கள் பெண்டீர் மக்கள் பேசரிய நேசர்முத லான பேரும், பற்றாக ளாகி யெமை நீத்த போதும் பரிவோடா தரித்தருளும் பரனே போற்றி, செற்றார்க டமக்காகச் செபித் துச் சீவன் சிலுவைமிசை விட்டெழுந்த சீமா போற்றி, நற்றாதை மருங்கிருந்து நாருக்காக நாடொறுமன் றாடுபவா போற்றி போற்றி.

M. P. A. (இன்னும் வரும்.)

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(ஜனுவரி௴ தொடர்ச்சி.)

6. முன்குறித்தல்.—இஸ்லாமியருடைய விசுவாச அறிக்கையின் கடைசி அம்சமாகிய இதுவே மகம்மது சமயத்தின் நெற்றிக்கல்போன்ற பிரதான உபதேசம். இதின் பலன் விதிவச நம்பிக்கையே. இஸ்லாமியரில் பல பிரிவினர் மனுஷன் சுயாதீன சித்தமுள்ளவனல்லவென்றும், கடவுளின் நித்திய ஆக்ஞைக்குக் கீழடங்கி நடக்கவேண்டியவனாயிருக்கின்றதால் தான் நடப்பிக்கும் பாவபுண்ணிய கர்மங்களுக்கு அவன் உத்தரவாதியல்லவென்றும் சொல்லுகிறார்கள். மகம்மதியரின் மார்க்கத்துக்கு இஸ்லாம் என்பது தகுந்த நாமதேயமே. விதிவசத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுதல் என்பதே அதின் கருத்து. இக்கோட்பாடே மகம்மது சமயிகளின் நாகரீக விருத்திக்கு இடறுகட்டையாய் விளங்கி நிற்கின்றது. "இவ்வுபதேசத்தைப்பற்றிக் கொரானில் கண்ட வியாக்கியானம் என்னமாயிருந்தாலும் சரி, மகம்மதிய தேசங்களிலெல்லாம் பிரதான பிரமாணம் விதிவசமே. இஸ்லாம் சமயத்தையமைந்த ஜாதியார் யாவரும் க்ஷீணதசை யடைவதற்குக் காரணம் இந்த உபதேசமே" என்று கனோன் செல் ஐயர் பகர்ந்திருக்கின்றனர்.

தீன் என்னும் அனுஷ்டானங்கள் ஐந்து:—(1) தேவனைத்தவிர வேறே தேவன் இல்லையென்றும், மகம்மதுநபியே தேவனுடைய அப்போஸ்தலன் என்றும் சாட்சி பகர்வதி; (2) ஜெபத்தில் திட்டவட்டமாயிருப்பது; (3) ஏற்பாட்டின்படி தர்மம் செய்வது; (4) ரம்ஜான் மாதத்தில் உபவாசமிருப்பது; (5) பொருளிருக்குங்கால் மெக்காவுக்கு ஸ்தலயாத்திரை செய்வது, தேவதீர்மானத்துக்குத் தன்னைக் கையளித்து, தேவ சித்தத்துக்குக் கீழடங்கி, இப்பஞ்சானுஷ்டானங்களை நிறைவேற்றுபவனே இஸ்லாமியன் என்று மகம்மது நபி உரைத்திருக்கின்றனர். இந்த ஐந்து நியமங்களையும் அனுஷ்டிக்கிறவர்களுக்குப் புண்ணியமுண்டாம். இவைகள் மார்க்க ஆதாரங்களெனப் பெயர்பெறும். இவற்றைப் பக்திவிநயமாய் அநுசரிப்பதே உத்தம மகம்மதியனுக்கு அடையாளம். இவைகளில் ஒன்றில் தவறினாலும் ஆக்கினை லபித்துவிடுமாம்.

(இன்னும் வரும்.)

### NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, Madras.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. Lazarus, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபக் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள்; சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரணம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

### மார்ச்சு௴ பஞ்சாங்கம்.—

| வாரம். | மார்ச்சு௴ = மாசி—பங்குனி. ⊙ பௌர்ணமி, 11௳ ● அமாவாசை, 26௳ | | | | | மாசி—பங்குனி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 2 | 9 | 16 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 3 | 10 | 17 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 4 | 11 | 18 |
| புதன் ... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| வெள் ... | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 30 | 7 | 14 | ... |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 1 | 8 | 15 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒருத்தருக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒருத்தருக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக் கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 3 APR 1914 MADRAS.




# சத்திய தூதன்.

APRIL, 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. ஏப்ரல்௴, 1914.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**நீண்ட கொம்புள்ள மிருகம்.**—ஆசியாக்கண்டத்தைச் சேர்ந்த மான் வகைகளில், ஒரு மிருகம் சமீப காலத்தில் சுடப்பட்டது. அதனுடைய கொம்பு 48 அங்குல மிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

**கல்வித் தானம்.**—ஸன்லைட் சோப் காருகசாலைத்தலைவர் சர் வில்லியம் லெவர் என்பவர் தாம் பிறந்த பட்டணமாகிய போல்டனில் கல்வியை அபிவிர்த்தி செய்ய 10,000 பவுன் நன்கொடை கொடுத்திருக்கிறார்.

**பணக்காரரில் பெரியவன்.**—உலகத்திலுள்ள பணக்காரரெல்லாரிலும் பெரியவன் யாரென்றால் வின்சென்ட் ஆஸ்டர் என்பவராம். இவர் இப்பொழுதுதான் சுயாதீன பருவத்தை அடைந்திருக்கிறார். இவருடைய ஆஸ்தி 2 கோடி பவுன், அல்லது 10 கோடி டாலர், அல்லது 30 கோடி ரூபாய்.

**அதிசய புஸ்தகம்.** — உலகிலுள்ள புஸ்தகங்களில் அதிக அதிசயமானது பைபில் என்கிற கிறிஸ்தவ வேதாகமமே. ஆக்ஸ்போர்ட் பைபில் என்கிற புஸ்தகங்களைக் கட்டுவதற்கு மாத்திரம் வருஷவாரி 100,000 மிருகங்களின் தோல் தேவையாயிருக்கிறது. அப்புஸ்தகங்களுக்குக் கில்ட் எழுத்துப்போட 400,000 பொன் தகடு பிடிக்கிறது.

**கனவின் பிரயோஜனம்.**—பலர் நினைக்கிறபடி நாம் காண்கிற கனவினால், நமது தூக்கம் கலைந்து போகிறதில்லையென்றும், மற்றப்படி தூக்கசமயத்தில் நமக்குண்டாகிற ஸ்மரணையற்ற நிலையை நீடிக்கவிடாமல், தூக்கத்துக் கனுகூலஞ்செய்கிறதென்றும், இப்படி அது செய்யாவிடில் வெகு சீக்கிரம் தூக்கங் கலைந்துபோமென்றும் பிரென்ட் என்கிற வித்துவான் கூறுகிறார்.

**நூதன ரத்னம்.**—தென்மேற்கு ஆபிரிக்காவில் ஹெலியோடார் என்று ஒரு நூதனவித இரத்தினக் கல் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது மிகவும் பிரகாசமான பொன்மஞ்சள் நிறம் வீசுகிறதாம். இராவில் பசுமையாய்க் காணப்படுகிறதாம். ஜெர்மன் சக்கரவர்த்தினி இக்கல்லிழைத்த சிலுவையொன்று தரித்திருக்கிறாள். அது சக்கரவர்த்தியால் கொடுக்கப்பட்டது.

**தீவிர ஆகாய கமனம்.**—ஆகாய கமனத்தில் இப்போது அதிக தேர்ச்சியுண்டாயிருக்கிறது. ஒரு அமெரிக்க ஆகாய கமனி அடுத்த ஜூன் மாதத்தில் நியூபவுண்ட்லாந்திலிருந்து ஐர்லாண்ட் வரையில் அத்லாந்திக் சமுத்திரத்தின்மேல் 1,600 மைல் தூரம் ஒரே பகல் 12 மணிநேரத்துக்குள் பறந்துபோகத் தீர்மானித்திருக்கிறான். மணிக்கு 134 மைல் பறந்துபோவது சாமானியமாகமாட்டாது.

**கோரியாவில் கிறிஸ்தவர்.** — கொரியாவில் மணிக்கு ஒருவன் கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்து கொண்டே யிருக்கிறான். அங்கு கிறிஸ்துமார்க்கத்திற் சேருகிறவர்கள் பைபில் என்கிற வேதாகமத்தை அதிகமாய் விரும்புகிறார்கள்; ஜெபவாஞ்சையுடையவர்களாயிருக்கிறார்கள்; தாராளமாய்ப் பொதுஜன நன்மைக்குப் பணஉதவி செய்கிறார்கள்; மார்க்கத்துக்காக வைராக்கியமாய் உழைக்கிறார்கள்.

**கல்மழையைத் தடுத்தல்.**—சில இடங்களில் கல்மழையினாலே திராக்ஷைத்தோட்டங்களுக்கும், மற்றும் பயிர்வகைகளுக்கும் சேதமுண்டாவதால், அம்மழையைத் தடுக்கும்படி நூதனமான யந்திரமொன்று செய்யப்பட்டிருக்கிறது. 100 முழ உயரமான ஒரு தூணின்மேல் மின்னல் வாங்கிக் கருவியைப்போன்ற ஒரு கருவியாலமைந்திருக்கிற இந்த யந்திரம் கல்மழை பூமியில் விழாதபடி தடுத்துவிடுகிறதாம்.

**கடந்த வருஷத்துப் பாடம்.**—கடந்த வருஷத்தில் நேர்ந்த சம்பவங்களினாலே நாம் கற்றுக்கொண்ட பாடங்க ளிவையென்று ஒரு இங்கிலீஷ் பத்திரிகை யெடுத்துக் கூறுகிறது. அவைகளில், கிறிஸ்தவ சைனியங்களெல்லாம் ஒன்றுசேர்ந்தால், உலகத்தைக் கிறிஸ்துவுக்காக ஜெயிக்கலாமென்றும், யோசனையோடு நடத்தப்படுகிற சுவிசேஷப் பிரபல்ய முயற்சி சபைகளின் விருதுமொழியா யிருக்க வேண்டுமென்றுங் குறிப்பிடுகிறது.

**தீப்பற்றாத ரெயில்வண்டி.**—மேல்நாடுகளில் ரெயில்வண்டிகளில் அடிக்கடி தீப்பற்றுவதைக் கண்டு இங்கிலண்டில் தீப்பற்றாத வண்டித்தொடரொன்று செய்திருக்கிறார்கள். இது முழுமையும் உருக்கினாற் செய்யப்பட்டிருக்கிறது. 8 வண்டிகள் இணைத்த இத்தொடரின் நீளம் 471 அடி. 152 முதல் வகுப்புப் பிரயாணிகளும், 228 மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளும் பிரயாணம் பண்ணக் கூடும். பலவித அனுகூலமும் இவ்வண்டியிலுண்டு.

**ஆலயம் பள்ளிக்கூடமானது.** — சீனாவில் சியாகன் நாட்டில் யுங்ஷான் என்று ஒரு பட்டணமிருக்கிறது. அப்பட்டணத்தில் மிஷன் ஸ்தாபனத்துக்கருகிலிருந்த ஒரு புத்தமத கோவிலை அதிகாரிகள் கிறிஸ்தவ பாதிரிமார்வசம் ஒப்புவித்துப் பெண்கள் படிக்கும் பாடசாலையாக உபயோகித்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதிலிருந்த பெரிய பித்தளை விக்கிரகம் நீக்கிவிடப்பட்டது. பூசாரிகள் தங்கள் தங்கள் ஊர்களுக்கனுப்பிவிடப்பட்டார்கள்.

**பூமிக்குட் செல்லும் கட்டிடங்கள்.**—நியூயார்க் முதலிய சிறந்த பட்டணங்களில் ஆகாயத்தில் அதியுன்னதமாய் எழும்பிய கட்டிடங்களைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறோம். ஆனால் இனிமேல் அவைகள் கீழ்நோக்கிப் பூமிக்குள்ளே கட்டப்படப் போகின்றனவென்று இப்போது அறிவிக்கப்படுகிறது. நியூயார்க்கில் பூமிமட்டத்துக்குக் கீழே 60 அடுக்கு மாளிகையொன்று கட்டப்பட ஏற்பாடு நடந்துவருகிறதாம். இனி கட்டிடங்கள் பூமி பாதாளம் ஆகாயம் யாவையுஞ் சூழ்ந்துகொள்ளும் போலும்.

**காலஞ்சென்ற லார்ட் மிண்டோ.**—இப்போதிருக்கிற நம்முடைய இராஜப்பிரதிநிதிக்குமுன் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாகவும், இராஜப் பிரதிநிதியாகவுமிருந்த லார்ட் மிண்டோ பிரபு மார்ச்சு௴ 1௳ இங்கிலாந்தில் காலஞ்சென்றுபோனார். இந்தக் கவர்னர்ஜெனரல் இந்தியாவை அரசாட்சி செய்துவந்த காலம் மிகவும் கலகம் நிறைந்த காலம். அப்படிப்பட்ட காலத்தில் இவர் பொறுமையைக் கையாடி அநேக அனுகூலங்களைச் செய்து, பிரஜைகளைச் சாவதானத்தோடே ஆளுகை செய்தார். இவருடைய மரணம் இந்தியாவைப் பெருந்துக்கத்தி லாழ்த்தியிருக்கிறதெனத் தடையில்லை.

**தென்னாப்பிரிக்காவின் நிலைமை.**—தென்னாப்பிரிக்காவில் சுரங்கங்களிலும், ரெயில் பாதைகளிலும் வேலைசெய்கிறவர்கள் கட்டுப்பாடுபண்ணி,

வேலையை நிறுத்தி, அரசாங்கத்துக்கு மிகுந்த தொல்லையை விளைத்துவருகிறார்கள். இந்த வேலையாட்கள் இந்தியனைப்போலாகாது வெள்ளைக்காரரும் அந்நியருமாயிருப்பதால், வெடிகளை ரெயில்பாதைகளில் வைத்தும் வேறுவித முயற்சிகளைச் செய்தும் அரசாங்கத்தாரோடு எதிர்த்து நிற்கிறார்கள். அரசாங்கத்தார் இராணுவங்களைக்கொண்டு இவர்களை அடக்கமுயலுகிறார்கள். இச்சமயத்தில் இந்தியர் அரசாங்கத்தோடு முரணி, அவர்களுக்கு அதிக கஷ்டத்தைத் தராமல் சாந்தமும் அமைதியுமாயிருக்கிறார்களென்று கேட்பது எவ்வளவோ சந்தோஷத்தைத் தருகிறது.

**பிசகாய்ப் பெண்களை மணந்தவர்.**—ஷெப்பீல்ட் நகரில் ஒரு பாதிரியார் ஏககாலத்தில் இரண்டு கலியாணங்களை நடத்திவைத்தார். அவர் மோதிரத்தை யெடுத்துக் கொடுக்கும்போது, கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்தான் என்பதுபோல, ஏதோ குழப்பத்தால் ஒருவன் இன்னொருவனுக்குக் குறிக்கப்பட்ட பெண்ணுக்கும், இன்னொருவன் மற்றவனுக்குக் குறிக்கப்பட்டவளுக்கும், மோதிரத்தைப் போடுவித்து, விவாகத்தை நிறைவேற்றிவிட்டார். பிறகு தான் செய்த பிசகையறிந்து என்ன விமோசனஞ் செய்வதென்று விழித்துக்கொண்டிருக்கையில், மாப்பிள்ளைகளிலொருவன், "ஐயரே, இந்தப் பெண் எனக்கே மனைவியாக இருப்பதாகச் சம்மதிக்கிறாள்; நீர் கவலைப்படவேண்டியதில்லை" என்றானாம். இந்தப்படி நினையாத மனைவிகளை அவர்கள் மணம்புரிந்து போயினரெனக் கூறப்படுகிறது.

## MAN MUST BECOME HOLY.

## மனிதன் பரிசுத்தமுள்ளவனாயிருக்கவேண்டும்.

சர்வவல்லமையும் சர்வஞானமும் நிறைந்த கடவுள் மனிதனைத் தமது சாயலின்படியும், ரூபத்தின்படியும், ஞானம், பரிசுத்தம், பாக்கியம் என்னும் மேலான வரப்பிரசாதங்களுடையவனாகவும், நன்மை தீமைகளைப் பகுத்தறியக்கூடிய புத்தி சித்தமுள்ள ஆன்மதேகியாகவும் சிருஷ்டித்து, மற்ற எல்லாச் சிருஷ்டிகளைப்பார்க்கிலும், அவனை மேலான நிலைமையிலும் அந்தஸ்திலும் வைத்திருக்க, அவனோ கடவுளுடைய கற்பனைகளை மீறி, அவரது திருச்சித்தத்திற்கு எதிர்த்து நின்று, இவ்விதமாய் அவன் அவருடைய பார்வையில் பாவாத்மாவாகி பரிதாப ஸ்திதிக்குட்பட்டுத் தான் பெற்றுக்கொண்ட பரம பாக்கியங்களை இழந்து பாபதோஷங்களுக்கு ஆளானான். ஆகவே, அவனது வித்தில் உற்பத்தியான மனிதர் யாவரும் அதே நிலைமைக் குட்பட்டிருக்கிறார்கள். இப்படியிருந்தாலும் மனிதர் இப்படிப்பட்ட ஸ்திதியிலேயே இருந்துவிடக் கடவுளுக்குப் பிரியமில்லை. ஆகையினாலேதான் மனிதன் பரிசுத்தமுள்ளவனாயிருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். முந்திப் பரிசுத்தத்தைப் பெற்று, அதை இழந்துபோன மனிதன் மறுபடியும் அந்தப் பரிசுத்த நிலைமைக்குட்படவேண்டுமானால், அவன் அந்தப் பரிசுத்தத்தைப் பெற தன்னில்தானே சக்தியுள்ளவன் அல்ல. முந்தி இந்தப் பரிசுத்தத்தை அளித்த பரம தந்தையாகிய கடவுள் ஒருவரே மறுபடியும் அவனுக்கு இந்தச் சிலாக்கியத்தைத் தரக்கூடிய சர்வ சக்தியுள்ளவராயிருக்கிறார்.

மேலும் பரிசுத்தமானது பணத்தைக்கொண்டு பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உலகப்பொருளல்ல. புண்ணிய கிருத்தியங்களைச் செய்து, அதன் மூலமாய்ப் பெறலாமென்றால், அப்படியும் கூடிய காரியமல்ல. புண்ணிய ஸ்தலங்களென்றும் புண்ணிய நதிகளென்றும் மனிதர் வீணாக நினைத்துக்கொள்ளுகிற ஸ்தலங்களைத் தரிசிப்பதினாலும், நதிகளில் ஸ்நானம் செய்வதினாலும் இந்தப் பரிசுத்தத்தைப் பெறமுடியாது. ஸ்தலயாத்திரைகளினால் தேக கஷ்டங்களும் பண நஷ்டங்களும் உண்டாகும். முழுகிக் குளிப்பதினால் ஒருவாறு தேகத்திலுள்ள அழுக்கு நீங்கலாம். ஆனால் இப்படிச் செய்வது பரிசுத்தமடையும் வழி அல்ல. அன்னதானம், சொர்ணதானம், கோதானம், பூதானம் முதலிய தானதர்மங்களைச் செய்வதினாலும், சத்திரஞ் சாவடிகளைக் கட்டிவைப்பதினாலும், சந்நியாசங்கொண்டு ஜடை வளர்ப்பதினாலும், சரீரவதை செய்துகொள்வதினாலும், இல்லறம் விட்டுத் துறவறம் புகுவதினாலும் இந்தப் பரிசுத்தத்தைப் பெறமுடியாது. மனிதன் இந்தப் பரிசுத்தத்தைப் பெறாவிட்டாலோ, கடவுள் தமது ஆதீனத்தில் தீர்மானித்திருக்கும் பரம பாக்கியங்களுக்குப் பங்குள்ளவன் ஆகமாட்டான்.

ஆதலால் மனிதன் பரிசுத்த மடைவதெப்படி? அவன் தேவசித்தத்துக்கு இணங்கி, பாவத்தையும் உலக ஆசாபாசங்களையும் வெறுத்து, தெய்வீக நோக்கத்துக்குள்ளாகி, அவருடைய நடத்துதலுக்குக் கீழமையவேண்டும். ஏனென்றால், திரியேக தெய்வமாகிய கடவுள் பரிசுத்தர். அதாவது, நினைவிலும், வாக்கிலும் செய்கையிலுமுண்டாகும் எல்லாப் பாவங்களு மற்றவராயிருக்கிறார். அவருடைய சுபாவத்திலும் சித்தத்திலும் பரிசுத்தமுள்ளவராகவே இருக்கிறார். பாவம் அவருக்கு அருவருப்பு. அவர் ஒருவரே சுயமாய் பரிசுத்தமுள்ளவரும், மற்றவர்களில் பரிசுத்தத்திற்குக் காரணராயு மிருக்கிறார். இப்படிப்பட்ட களங்கமற்ற பரிசுத்தரான கடவுள் பாவிகளான மனுமக்களுக்குப் பரிசுத்தமென்னும் பெரும்பேற்றை அருளச் சித்தமுள்ளவரா யிருக்கிறார். அப்படிப்பட்ட சித்தத்தை மனிதருக்கு வெளிப்படுத்தியு மிருக்கிறார். இந்த வெளிப்படுத்தல் மனிதனுடைய பாவ வீழ்ச்சிக்குப் பின் உலகத்தாருக்கு அறிவிக்கப்பட்டது. பாவிகளான மனுமக்களுக்கு பரிசுத்தத்தையும், *பாவ மன்னிப்பையும் அருளும்படியாகப் பரிசுத்தமுள்ள கடவுள் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்னும் இரட்சண்யமூர்த்தியை பாவம் போக்கும் ஜீவபலியாக இப்பூலோகத்திற்கு அனுப்பி, இவ்விதமாய்ப் பரிசுத்தமுள்ள கடவுள் தமது நோக்கத்தை நிறைவேற்றினதே அந்த வெளிப்படுத்தலாம். இயேசுகிறிஸ்து பூலோகத்திற்கு வந்ததினால் பாவ மன்னிப்பு மாத்திரமல்ல, பரிசுத்தத்தை அடையக்கூடிய வழியும் உண்டாயிருக்கிறது. "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று திருமறையும் சாக்ஷி பகர்கின்றது. "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று புண்ணிய மூர்த்தியாகிய இயேசுகிறிஸ்துவும் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். மனிதன் இழந்துபோன பரம பாக்கியங்களையும், பரிசுத்தத்தையும் மறுபடியும் அடையவேண்டுமாயின், அவைகளைக் கிறிஸ்துவின் மூலமாகத்தான் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படிப் பெறாவிட்டால் அவனுடைய அந்தியகால நிலைமைகளும் முடிவும் மிகவும் பரிதபிக்கக் கூடியதாம். ஏனென்றால், "பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை." (எபி. 12. 14.) பரிசுத்தத்தைப் பெற்றுக்கொண்டவன் பாக்கியமுள்ளவன். ஏனென்றால், "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." (மத். 5. 8.)

நண்பரே! மேகம்போன்ற இத்தனைத் திரளான சாக்ஷிகள் நம்மைச் சூழ்ந்திருக்க, பாரமான யாவற்றையும் நாம் அப்புறப்படுத்தி, பாவிகளை இரட்சிக்க இப்பூலோகத்தில் சற்குருவாய்த் தோன்றிய இரட்சகபெருமானாகிய இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகரென்றும், பாவம் போக்கும் ஜீவபலி என்றும், பரிசுத்தத்தை அருளக்கூடிய அருமை மீட்பரென்றும், உள்ளான இருதய விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டால், பாவ மன்னிப்பையும், நித்திய ஜீவனையும், பரிசுத்தத்தையும் மோக்ஷ பேரின்ப பாக்கியங்களையும் அடைவீர்களென்பது சத்தியம்.

தஞ்சை: J. பொன்னுசாமி,
சுவிசேஷப் பிரசங்கி.



வியென்னா நகரம்.

## ஆயுள் நீடிப்பு.

கிரேட் பிரிட்டனில் 10 லக்ஷம்பேரில் ஒருவனும், ரஷியாவில் 20 லக்ஷம்பேரில் ஒருவனும், நூறு வயதுடையவர்களாயிருக்க, பல்கேரியாவில் 1,133 பேரில் ஒருவன் நூறு வயதுடையனென்று சொல்லப்படுகிறது. பல்கேரியாவில் நீண்ட ஆயுளுக்குக் காரணம் அங்கேயுள்ளவர்கள் புளித்த பாலைப் பருகுவதே என்றும் கூறப்படுகிறது.



## INSTRUCTIVE STORIES.

## சன்மார்க்க அதிசயக் கதைகள்.

முதலாவது கதை.

### தென்தேசத்தில் நடந்த சம்பவம்.

விருத்தம்.

ஆட்டுக் கறியும் சோறு மிருக்க
அம்மனும் சாமியும் உள்ளே யிருக்க
ஏற்றிய விளக்கிருக்க சாற்றிய கதவிருக்க
ராத்திரி வந்த கள்ளனாரடி வயிரவசாமி
நாய னல்லோ சிட்சை சொல்லடி.

ஒரு ஏழை மனிதன் எப்போதும் அதாவது வருஷத்துவக்கத்தில் தைமாதத்தில் தன் தொழிலாகிய பனைமரம் ஏறி, அதன் பலனை எடுக்குமுன்னதாக, அம்மன் சாமிக்கு ஆடுவெட்டிப் பொங்கவிட்டுப் படைத்துவிட்டுத்தான் பனைமரம் ஏறுகிறது அவன் வழக்கமாக இருந்தது.

ஒரு வருஷத்தில் இந்த ஏழை மனிதன் பொங்கவிட்டுப் படைக்காதபடி போய் மரம் ஏறினான். கொஞ்சந்தூரம் போய்த் திரும்பி இறங்கிவிட்டான். உடனே வீட்டுக்குப் போய்ப் பெண்சாதியைக் கூப்பிட்டு: அடி, நான் மரம் ஏறினேன்; என் காலும் கையும் நடுங்குகிறது. நான் நினைக்கிறேன் அம்மனுக்கும் சாமிக்கும் இந்த வருஷம் பொங்கவிடாதபடி ஏறினதினாலே இப்படி இருக்கிறது. ஆகையினால், உடனே பொங்கலிட்டுத்தான் வேலைக்குப் போகவேண்டும் என்றான். கையிலும் பணம் இல்லை. பொங்கலுக்கு எப்படியாவது 10 ரூபாய் பிடிக்கும். உடனே பெண்சாதிமேலிருந்த நகை ஒன்றைக் கழற்றி, 10 ரூபாய்க்கு ஈடுவைத்து, கடைக்குப் போய் 4 ரூபாய்க்கு நல்ல ஒரு ஆடும், மற்றப் பணத்திற்கு அம்மன்சாமியும், அதற்கு வேண்டிய வெற்றிலைப்பாக்கு, பழம், கர்ப்பூரம், சாம்பிராணி, தேங்காய், பூ, மஞ்சள், குங்குமப் பொடி இன்னும் மற்ற சாமானங்களும் வாங்கி, மீதிப்பணத்துக்குக் கோயில் சுத்தம்செய்து, வெள்ளையடித்து, கூரைமேல் புது ஓலையும் வைத்துக் கட்டினதினால், கையிலுள்ள பணமெல்லாம் ஆய்விட்டது.

உடனே அந்த ஏழை மனிதன் பொங்கலிடும்படி தானும் தன் பெண்சாதிப் பிள்ளைகளும் எல்லாச் சாமானங்களையும் எடுத்துக்கொண்டு கோயிலுக்குப் புறப்பட்டுப் போனார்கள். போய் அம்மன்சாமியை கோயிலுக்குள் வைத்து, மஞ்சள் குங்குமம் பூசி, சுத்தம்பண்ணி, பூமாலைபோட்டு, அதன் முன்னதாக மற்ற சாமானங்களை வைத்து, ஆடு வெட்டினார்கள், பொங்கலிட்டார்கள். பொங்கல் ஆனதும் கறியும் சோறும் கம கம வென்ற வாசனையோடு அம்மன்சாமி முன்னதாக எடுத்துவைத்து, அவர்கள் குறைவுகளை அம்மனிடம் சொல்லி, எல்லாம் நிவிர்த்தி செய்யவேணும் சாமி என்று விழுந்து விழுந்து கும்பிட்டார்கள். நேரமும் பொழுதும் போய்விட்டது. சாமியும் இன்னும் உத்தரவு கொடுக்கவில்லை. இரவு 9 மணி ஆய்விட்டது. இன்னும் உத்தரவைக் காணோம். பெண்சாதியும் பிள்ளைகளும் புருஷனைத் திட்டி அடா பாவி, வீணாய் நகையை அடகுவைத்து 10 ரூபாய்ச் செலவுசெய்தாயே, ஒரு இழவையும் காணோமே என்று புருஷனைத் திட்டிவிட்டு, பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டாள்.

புருஷன்மாத்திரம் கோயிலுக்குள் நின்று கும்பிட்டுக் கும்பிட்டுப் பார்க்கிறான். சாமி, உத்தரவைக் காணோம். மணியும் 11 ஆகிவிட்டது. இவனுக்கும் தூக்கம் கண்ணை மிரட்டுகிறது. வெற்றிலையாவது போடலாமென்று மடியைப் பார்த்தான். மடியில் வெற்றிலை பாக்கு இருக்கிறது. சுண்ணாம்பு இல்லை. சாமிக்குப் படைத்த சுண்ணாம்பும் உத்தரவுக்குமுன் தொடக்கூடாது. மணியும் 12 ஆகிவிட்டது. உடனே என்னசெய்தான்? பக்கத்து வீடுகளில் போயாவது சுண்ணாம்பு எடுத்துவாலாமென்று எண்ணி, அம்மன்சாமியும் உள்ளே இருக்கிறது; இரண்டு பக்கமும் விளக்குகள் அதிகப் பிரகாசமாக எரிகிறது. சாமிமுன்னதாக எல்லாம் படைத்து வைத்திருக்கிறது. கதவைமாத்திரம் கொஞ்சம் சாத்திவிட்டு, பக்கத்து வீட்டில் போய்க் கதவைத் தட்டி, அவர்களை எழுப்பி, சுண்ணாம்பு வாங்கி வெற்றிலையும் போட்டுக்கொண்டு கோயிலுக்கு வருகிறான். இங்கேயோ இரண்டு பெரிய நாய்கள் இந்த ஆட்டுக்கறி வாசனையினால் கோயில் பின்னாலே காத்துக்கொண்டே இருந்தது. இந்த ஏழை மனிதன் சுண்ணாம்புக்குப் போனதும், இரண்டு நாய்களும் இதுதான் நல்ல சமயமென்று உள்ளேபோய், ஆட்டுக்கறியும் சோறும் பெரிய பெரிய கவளமாக அள்ளித் தின்று எல்லாம் உருட்டிப் புரட்டிச் சிந்தி நாசம்செய்தது.

இவன் கோயிலுக்குள் நுழைந்ததும் இரண்டு நாய்களும் நம்மை அடித்துப் போடுவான் என்று நினைத்து குலைத்துக்கொண்டு வெளியே ஓடிவந்துவிட்டது. இவன் உள்ளே பார்க்கிறான். எல்லாச் சாமானங்களையும் நாசம்பண்ணி சிதறிவிட்டது. இதைப் பார்க்கவும் இவன் மனம் கொதிக்கிறது. அடடா! நன்றாய்ச் சாப்பிடலாமென்று இந்தவேலை உண்டுபண்ணிக் கடைசியில் ஒரு பிரயோஜனமும் இல்லையே. இந்த ஓட்ட உருவமாகிய அம்மனும் சாமியும் பார்த்துக்கொண்டேயிருந்ததே, இதாவது துரத்தக்கூடாதா? அப்போது இதனிடத்தில் என்னவல்லமை இருக்கிறது. ஒன்றும் இல்லையென்று தைரியம்கொண்டு, ஒரு சாமியைத் தூக்கி மறுசாமி மேல் அடித்து, உடைத்து நாசம்செய்து மேல் கூரையில் நெருப்புவைத்துக் கொளுத்திச் சாம்பலாக்கிவிட்டு, 2 மணிக்கு வீட்டுக்குப் போனான்.

அங்கே போய்க் கதவைத் தட்டி, பெண்சாதியை எழுப்பினான். உடனே பெண்சாதியும் பிள்ளைகளும் ஆவலோடு ஓடிவந்து கதவைத் திறந்தார்கள். பிள்ளைகளெல்லாம் ஆவலாய்ச் சாப்பிடலாமென்று ஓடிவந்து பார்க்க, தகப்பன் கையில் ஒன்றும் இல்லாமல் வெறுமையாக வந்திருக்கிறதைப் பார்த்து, என்ன அப்பா, பொங்கல் சாமானங்களெல்லாம் எங்கே? நீ ஒண்டியாய்ச் சாப்பிட்டுவிட்டாயோ என்று கேட்டார்கள். அப்போது தகப்பன் சொன்னான், பிள்ளைகளே, நாம் படைத்த சாமானங்களை எல்லாம் கடவுள் வயிரவசாமியைவிட்டு ஏற்றுக்கொண்டார் என்று சொன்னான். உடனே பெண்சாதி பிள்ளைகள் அவனைத் திட்டிப் பேசிவிட்டு, விசனத்தோடு போய்ப் படுத்துக்கொண்டார்கள். விடிந்ததும், பெண்சாதியும் பிள்ளைகளும் கோயிலைப் பார்க்கப் போனார்கள். அங்கே கோயில் மேல்கூரை எல்லாம் எரிந்து சாம்பலாயும் அம்மன் சாமியெல்லாம் உடைந்தும் கிடக்கிறதைக் கண்டு, அடா, பாவி, தெய்வமே! உனக்குக்கூட இந்தக்கதி ஆகிவிட்டதே. நீ ஒரு தெய்வமா? உன்னை நாங்கள் கட்டிக் கும்பிட்டோமே. நாங்கள் சுத்த நிர்மூடர்கள்தான் என்று சொல்லி, மண்ணைவாரி அதன் மேல் எறிந்துவிட்டு, வீட்டுக்கு வந்தார்கள்.

அப்போது அந்தப் பிள்ளைகளில் பெரியபையன் சொன்னதாவது: — அம்மா! நான் கிறிஸ்தவ பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது, அவர்கள் போதித்துவந்த வார்த்தைகளெல்லாம் உண்மைதானென்று எனக்கு இப்போதுதான் தெரிகிறது. ஆகையினால் அவர்கள் தொழுதுகொள்ளுகிற தெய்வம் தான் சத்தியமான தெய்வம். நான் சொன்னதை நம்பாவிட்டாலும், அந்தக் குருவானவரிடம் வாருங்கள். நாம் அதை நன்றாய் விசாரிக்கலாமென்று தாயையும் தகப்பனையும் கூட்டிப்போய் நடந்த சங்கதிகளையெல்லாம் குருவானவரிடம் சொன்னார்கள். அப்போது குருவானவர் சொன்னதாவது: அது மூடத்தனம். சாமிக்கு நாம் படைக்கவேண்

டியது நம்முடைய இருதயத்தைத்தான். அதாவது கடவுள் நம்மைப் பார்த்து மகனே, மகளே, உன் இருதயத்தைமாத்திரம் எனக்குத் தா. மற்றும் உலகத்தில் காணப்படுகிற வஸ்துக்களெல்லாம், உங்களுக்கு உபயோகமாகத்தான் படைத்திருக்கிறேன் என்று வேதத்தில் சொல்லியிருக்கிறார். மேலும் நீங்கள் சாமி உத்தரவுக்காக அதிகநேரம் காத்திருந்தீர்கள். அது ஏன் உத்தரவு கொடுக்கவில்லை தெரியுமா? அந்தக் கூடை புதிதாகக் கட்டினது; அதில் பல்லி இல்லை. பழைய கட்டடமாக இருந்தால் பல்லி செதிள் தின்னும்படியாக, அவ்விடங்களில் அதிகமாக வாசம்பண்ணும். அப்போது அது தீனிக்காக சத்தம்போது, நீங்கள் மூடத்தனமாக சாமி உத்தரவு கொடுத்துவிட்டாரென்று சந்தோஷத்தோடு எடுத்துச் சாப்பிடுவீர்கள். ஆனால் அன்று புதுக்கட்டடமாக இருந்தபடியினால், அதில் பல்லி இல்லை. அதுதான் நீங்கள் ஏமாந்துபோனீர்கள் என்றுசொல்லி, பிற்பாடு கடவுளுடைய நாமத்தை அவர்களுக்குத் தெளிவாகப் போதித்து, அந்தகாரத்தின் இருளை நீக்கி, ஞான ஒளியை அவர்களுக்குப் போதித்து, அவர்கள் மனமாறுதலடைய நற்போதகங்களை ஊட்டி நன்மையான வழியிலே ஏவினார். அவர்களும் சீக்கிரத்தில் குணப்பட்டு மனமாறுதல் அடைந்து, பொய்யான விக்கிரகங்களை அன்றுமுதல் குப்பையில் தள்ளிவிட்டு, மெய்க் கடவுளாகிய ஜெகத்ரட்சகனை விசுவாசித்து அவருடைய பிள்ளைகளாக ஜீவித்தார்கள்.

**இதனால் நாம் படித்துக்கொள்ளவேண்டியதாவது:**—பொய்யான விக்கிரகங்களை நாம் கும்பிடுகிறதினால் நம்முடைய ஆத்துமத்துக்கு ஒரு நன்மையும் இல்லை. அந்த விக்கிரகத்துக்குக் கண்களிருந்தும் காணுகிறதில்லை, காதுகளிருந்தும் கேட்கிறதில்லை, மூக்கிருந்தும் சுவாசிக்கிறதில்லை, கைகளிருந்தும் தொழுகிறதில்லை, கால்களிருந்தும் நடக்கிறதில்லை. ஆகையினால் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிற புத்தியினால், இதை நாம் பார்த்தும் திரும்பத் திரும்ப அதைக் கட்டித் தொழுதுகொள்ளுகிறோம். ஆனால் நம்மை உண்டாக்கிக் காப்பாற்றிவருகிற தெய்வத்துக்கு எவ்வளவு கோபத்தை உண்டுபண்ணுகிறவர்களாக இருக்கிறோம். ஆனாலும் அவர் இரக்கமும் நீடிய சாந்தமும் உள்ளவரானதினால், அவர் பொறுமையாகப் பார்த்துக்கொண்டு இருக்கிறார். கடைசிக்காலத்தில், நாம் அவருக்குக் கணக்குக்கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும் என்கிற பழமொழிப்படி அவர் உடனே தண்டிக்கிறவர் அல்ல. ஆனாலும் நியாயத்தீர்ப்பு நாளிலே நம்மைக் கணக்குக் கேட்பார்.

"கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை." (உபா. 4. 35.)

"எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் இரக்ஷகர் இல்லை." ஏசா. 43. 10, 11.

G. D.

## PRAISE TO GOD.

## போற்றித் திரு விருத்தம்.

*(தொடர்ச்சி.)*

21. நெருக்கோடுந் திரளுடு சிலுவை தாங்கி நெட்டுயிர்த்துத் தட்டழிந்து நீசன் போலத், தெருக்கோடி கடந்திளைத்துக் கொல்க தாவிற் செம்மையிலாத் திருடர்களுட் டிருட னென்னத், திருக்கோடுங் கலுழியொடும் செய்ய சோரிப் பெருக்கோடும் நின்றவநி யனைந்து காயத், திருக்கோலக் காட்சியென தகத்தை நீங்காச் செம்மலே நின்பொறுமை போற்றி போற்றி.

22. உழுந்துருளு மெல்லையினுள் உலப்பி லாத ஓராயி ரஙகோடி யுலக மாக்கி, யழுந்தமடி விக்கவல அரசே போற்றி அன்புடையார்க் கின்புடையா யமுதே போற்றி, தொழுந்தகைய வொழுங்கினர்தந் துதியே போற்றி தோத்திரசங் கீர்த்தனத்தின் தொனியே போற்றி, கொழுந்தயவு காட்டியெனைக் கூட்டி யாளும் குணக்கடலே வணக்கமுடன் போற்றி போற்றி.

23. அஞ்ஞானத் திமிரமற வளவி லன்பின் அளக்கருதித் திலகுமணிக் கதிரே போற்றி, மெஞ்ஞானத் திறமடிய ருளத்தி லூன்ற விரித்துறத் துங் குருபரமெய் வாழ்வே போற்றி, எஞ்ஞான்று மெப்போது மிருந்த வாறே இருந்தணுவு மாறாத இருப்பே போற்றி, இஞ்ஞால முயமனுவாய் வந்து தோன்றி யிறந்தெழுந்த துரந்தரனே போற்றி போற்றி.

24. மனத்திடமி லாதவனை வாவா வென்ன மறகியலைத் தணைத்தரிய வாஞ்சை யாக, இனித்திடுநல் லுபைசரு மெந்தாய் போற்றி இருவினைக்கு மருந்துதவு மிறையே போற்றி, வனத்திடமெய் வழிதப்பிப் பிரிந்த மந்தை வழிப்படுமா வெளிப்பட்ட மன்னே போற்றி, நுனித்திடுவெண் மதியில்லா நொய்ய னென்னை நோக்கிவிளித் தாள்பவனே போற்றி போற்றி.

25. நஞ்சத்தை யமுதென்ன நச்சு மாபோல் நானிலத்து வாழ்க்கையினை நச்சி வாளா, வஞ்சத்தைப் பயின்றலைந்த வறியேன் பானீர் மற்றொன்றும் வேண்டாது மாபொல் லாத, நெஞ்சத்தைக் கேட்பதனு லீந்தே னின்னே நேரிலா வெனக்குனது நிகரி லாத, தஞ்சத்தை யளிக்க நினைக் கெஞ்சு கின்றேன் தற்பரநின் பொற்கமலம் போற்றி போற்றி.

### வேறு.

*எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.*

26. சோதியாய்ச் சுடராய்ச் சுத்தமெய்ப் பொருளாய்த் துலங்குமா தூயனே போற்றி, ஆதியீறில்லா வநாதியா யென்றும் அருட்கட லாயவா போற்றி, நீதிசேர் வேத வித்துமாய் வித்தில் நிமிர்ந்தெழு தருவுமாய் நின்ற, கோதிலாப் பரம குணப்பெருங் குன்றே குறைவிலாக் கருணையே போற்றி.

27. உண்பதே கருத்தா யுடுப்பதே பொருட்டா யுறங்கவே யுலப்பருஞ் சுகிப்பா, ஃயெண்படு மனத்தோ டினைந்துநீ ணரகை யிருப்பிட மாக்குபு நின்றோர், ஒண்பதம் பெறுமா றொருசுத னென்னவும் உன்னிடா தலகினுக் கீந்த, பண்பினை யெவரே பகர்ந்துனைப் பாவார் பண்ணவா நின்புகழ் போற்றி.

28. கண்ணிணை யிருந்துங் கண்டிடாக் கல்லைக் கடவுளென் றெண்ணிய மடத்தால், உண்ணினைந் தேத்து முவாழற் கிடங்கி லுழன்றிடா வாறொரு சுதனை, விண்ணினின் றிந்த விரிகடல் வளைப்பில் விடுத்தவா நின்சரண் போற்றி, அண்ணலே நினக்கே யடிமையான் பூண்டேன் ஐய நின் தயைதினம் போற்றி.

M. P. A. *(இன்னும் வரும்.)*

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Dépôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாசரஸ் ஐயர் இயற்றிய சபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாசரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி .... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| " " பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| " " நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| " ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாசரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

தபாற்கூலி வேறே.

### ஏப்பிரல்மீ பஞ்சாங்கம்.—

| வாரம். | ஏப்பிரல்மீ = பங்குனி—சித்திரை. ☉ பௌர்ணமி, 10உ ● அமாவாசை, 25உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பங்குனி—சித்திரை. | | | |
| ஞாயி ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 7 | 14 |
| திங்க ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 1 | 8 | 15 |
| செவ் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 2 | 9 | 16 |
| புதன் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 3 | 10 | 17 |
| வியா ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 4 | 11 | 18 |
| வெள் ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| சனி ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 6 | 13 | ... |

### விளம்பரம்.

இருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக் கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 5 MAY 1914 MADRAS.

# THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MAY, 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. மேமீ, 1914.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**வர்த்தகக் கப்பல்கள்.**—அயல்நாட்டு வியாபாரங்களை நடத்துகிற கப்பல்கள், இங்கிலண்டுக்கு 11,500; ஜெர்மனிக்கு 2,000; ஜப்பானுக்கு 1,000; அமெரிக்க ஐக்கிய மாகாணத்துக்கு 9 மாத்திரம்.

**பெரிய யானைத்தந்தம்.**—டார்லிங்டன் கோன் என்னுமிடத்தில் செப்டெம்பர் மாதத்தில் பூமியிலிருந்து ஒரு பெரிய யானைத்தந்தம் தோண்டியெடுக்கப்பட்டது. அதன் நீளம் 9 அடி. அடிப்புறத்தின் கனதி 53 அங்குலம்.

**நான்கு பாஷை தெரிந்த சிறுமி.**—உவில்லிச் என்னுமிடத்தில் 14 பிராயமுடைய சிறுமி ஒருத்தியிருக்கிறாள். அவளுக்கு நான்கு பாஷையில் பேசுந்திறமை யுண்டு. அவ்விடத்தில் துவிபாஷி உத்தியோகஞ் செய்துவருகிறாள்.

**உலகத்தின் ஜனத்தொகை.** — சமீபத்திலே எடுக்கப்பட்ட சங்கியையின்படி உலகமுழுமையிலுமுள்ள ஜனங்களின் தொகை 190 கோடி. இதற்கு முந்தின கணக்கின்படி 150 கோடி. ஆகையால் 40 கோடி அதிகரித்திருக்கிறதாகத் தெரிகிறது.

**நூதன ஜாதிக்குரங்கு.**—லண்டன் மிருகக்காக்ஷிசாலையில் இதுவரையிலில்லாத நூதன ஜாதிக் குரங்கு கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உடம்பெல்லாம் குட்டையான ரோமமிருக்கிறது. விசன முகமுடையதாகவு மிருக்கிறது.

**ஆஸ்திமான் மனைவி ஆபரணம்.**—பனாமா வாய்க்காலை வெட்டின இஞ்சினீர் மிஸ்டர் ஐராமாரிஸ் என்பவரின் மனைவி அணிந்துகொண்டிருக்கிற வைரமாலையின் விலை ஒரு லக்ஷம் பவுண். அவளுக்கிருக்கிற மற்ற நகைகளின் கிரயம் 4 லக்ஷம் பவுண்.

**உலகிற்பெரிய யுத்தக்கப்பல்.**—உலகின்கண்ணுள்ள யுத்தக் கப்பல்களிற் பெரிது கிரேட் பிரிட்டனுக்குரிய சூப்பர்டிரட்னட் வார்ஸ்பைட். 15 அங்குலம் குழாயுடைய பீரங்கிகள் 8 இதற்குண்டு. உலக முழுமையும் சுற்றிவரப் போதுமான எண்ணெய் இதிலிருக்கும்.

**சித்திரக்கண்ணாடிப் பலகணி.**—ஹேரவ் என்னுமிடத்தில் காலஞ்சென்ற எட்வர்ட் சக்கரவர்த்தியவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு பெரிய சித்திரக் கண்ணாடிப் பலகணி நிருமிக்கப்படப்போகிறதாம். அதன் நீளம் 40 அடி; அகலம் 20 அடி. சிருஷ்டியும், இரக்ஷகர் பிறப்பும் அதில் சித்திரிக்கப்படுமாம்.

**சமாதான நன்கொடை.**—உலக முழுமையிலும் சமாதானத்தை நிலைநிறுத்த மிஸ்டர் கார்னகி என்கிற தனவான் 20 லக்ஷம் பவுண் நன்கொடை செய்திருப்பது போதாமல், சமாதான விஷயத்தில் கிறிஸ்துசபைகள் செய்கிற யத்தனங்களை ஊர்ச்சிதப்படுத்த இப்போது 4 லக்ஷம் பவுண் கொடையளித்திருக்கிறார்.

**இராணுவத்தில் பிராமணர்.**—ராவால்பிண்டி ஜீலம் இவ்விடங்களிலுள்ள பிராமணர் தங்களைப் பிரிட்டிஷ் இராணுவத்தில் வீரர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று, சேனாதிபதியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சேனாதிபதி தகுந்த சமயம் வரட்டும் பார்ப்போமென்று விடை பகர்ந்திருக்கிறார். கீதையின் உபதேச மெங்கே?

**கலியாண வெகுமதி.**—உருக்கு இராஜா என்று சொல்லப்படும் மிஸ்டர் டிரிக் என்கிற கோடீஸ்வரன் தன் குமாரன் கலியாணத்தின்போது, அவனுக்குக் கொடுத்த வெகுமதி 140 லக்ஷம் டாலர். அதாவது 28 லக்ஷம் பவுண். கலியாணப்பெண்ணுக்குக்கொடுத்தது 4 லக்ஷம் பவுண். பெண்வெகுமதி பொன்னால் அவளுடைய நிறைக்கு ஐந்து மடங்கு அதிகம்.

**வட்டி கணிக்கும் யந்திரம்.**—ஹங்கேரியன் ஒருவன் ஒரு அதிசயமான யந்திரம் செய்திருக்கிறான். அதைக்கொண்டு ஒரு விநாடியிலே எவ்வளவு பெரிய தொகைக்கும் வட்டிவிகிதம் இவ்வளவென்று கணித்துப்போடலாமாம். கைக்கடியாரம்போலிருக்கிற இந்த யந்திரத்தில் ஒரு முனைத்தள்ளினவுடனே வட்டியின் தொகை இவ்வளவென்று காட்டிவிடுமாம்.

**மேல்நாடும் கீழ்நாடாகிறதோ?** — கீழ்நாட்டில் அதிலும் இந்தியாவில்தான் 80 வயது கிழவன் அறியாக் குழந்தையான பத்துப்பன்னிரண்டு வயதுப்பெண்ணை விவாகஞ்செய்யும் துர்ப்பழக்கமிருக்கிறது. ஆனால் இப்போது மேல்நாட்டிலுங்கூட அவ்வித வழக்கத்தை ஒருவர் அனுசரித்ததாய்க் கூறப்படுகிறது. ஜோசப் மில்லர் என்கிற 74 பிராயமுடைய ஒரு பாதிரி 19 வயதுப் பெண்ணை விவாகஞ் செய்துகொண்டாராம். இந்தப் பாதிரியின் மாதிரி பரிதாபத்துக்குரியதே.

**தென்னாப்பிரிக்காவில் இந்தியர் கஷ்டம்.**—இதைக்குறித்துத் திட்டமாய் விசாரித்துச் சில சிபாரிசுகளைச் செய்யும்படிக்கு ஒரு விசாரணைச்சங்கம் நியமிக்கப்பட்டிருந்ததல்லவா? அச்சங்கத்தார் தீர்க்க விசாரணை செய்தபிறகு, தங்கள் அபிப்பிராயங்களையும் சிபாரிசுகளையும் அவ்விடத்து அரசாங்கத்தாருக்குமுன் சமர்ப்பித்திருக்கிறார்கள். இவர்களுடைய சிபாரிசுகளின்படி 3 பவுண் வரி எடுபட்டுப்போமென்றும், கலியாணவிஷயத்தில் இந்தியாவில் கலியாணஞ்செய்த ஒரு மனைவியின் காரியம் அங்கீகரிக்கப்படுமென்றும், இன்னுஞ் சில சாதக ஏற்பாடுகள் நடக்குமென்றுஞ் சொல்லப்படுகிறது. இது சந்தோஷத்துக்குரிய செய்தியென்னத் தடையில்லை.

**கடல் தந்தி வேண்டியிராது.**—மின்சார அலைகள் வெளிச்சத்தைப்போலவே விநாடிக்கு 1,86,000 மைல் செல்லுகிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தவிர வெளிச்சத்தைப்போலவே மின்சார அலைகள் எவ்வித தடைகளையும் கடந்து செல்லுகிறதென்றும் தெரியவந்திருக்கிறது. நியூபவுண்ட்லாந்திலிருந்து இங்கிலாந்துக்குக் கம்பியில்லா மின்சாரசெய்தி யனுப்பிவைக்க இடையில் 110 மைல் சமுத்திரமிருந்தும் மின்னலைகள் விக்கினமின்றிக் கடந்து சென்றன. ஆகவே செய்தியனுப்பும் ஸ்டேஷனில் சக்தியைச் சற்று அதிகப்படுத்தினால் தூர இடங்களுக்கெல்லாம் செய்தி யனுப்பப்படலாமென்றும், அப்போது கடலுக்குள் போட்டிருக்கிற தந்தி அவசியமில்லையென்றும் யூகிக்கப்படுகிறது.

**ஐர்லாந்துக்குச் சுவராஜ்யம்.** — ஐர்லாந்துக்குச் சுவராஜ்யம் கொடுக்கும் நோக்கமாய்க் கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவை, அந்நாட்டிலுள்ள அல்ஸ்டர் மாகாணத்தவர் ஆக்ஷேபித்து, அப்படி தங்கள் விருப்பத்துக்கு விரோதமாய்க் கொடுக்கும் பக்ஷத்தில், தாங்கள் குடிஜன சண்டையையெழுப்பி, இராஜாங்கத்தார் கைகளில் மடிந்துபோவோம்

என்று பிடிவாதமா யிருந்துவருவதும், அரசாங்கத்தாரும் தங்கள் பிடியை விடாமல் சுவராஜ்யம்கொடுத்தே தீர்வோமென்று சாதிப்பதும், இடையில் இராணுவ உத்தியோகஸ்தர் அல்ஸ்டர் மாகாணத்தார் விஷயத்தில் அனுதாபங்கொண்டு, பலர் அவர்களுக்கு விரோதமாய்ச் சண்டைக்குப் போகோமென்று வேலையை ராஜிநாமா செய்துவிட்டதுமான இந்தக் குழப்பங்கள் இன்னும் உச்சநிலையிலேயே இருந்துவருகிறது.

**வேலி பயிரை மேய்ந்தது.**—திருநெல்வேலி அம்பா சமுத்திரம் தாலுக்காவிலுள்ள கடயம் என்னுமிடத்தில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டராயிருந்த லக்ஷ்மி நாராயண ஐயர் ரூ. 175 லஞ்சம் வாங்கினதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணையாகி சேரன்மாதேவி ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டால் 9 மாதக் கடினக்காவல் சிக்ஷையும், 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். மாஜிஸ்டிரேட் தமது தீர்ப்பில் சொன்னது.—"குற்றவாளி கடயம் சப் இன்ஸ்பெக்டராயிருந்ததால் அந்தப் பிராந்தியங்களில் பிரிட்டிஷ் நீதியைப் பாதுகாக்கவேண்டியவன்; சப் இன்ஸ்பெக்டர்களுக்குப் பரிசோதனையில் அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் அதிகாரத்தைத் துர்வினியோகஞ் செய்வார்களாகில் அவர்கள் போலீஸ் படைக்கு அவமானத்தைக் கொண்டுவருவது மாத்திரமன்றி சர்க்கார் பேரில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கையையும் குலைத்துவிடுகிறார்கள்."



மெக்கா நகரம்.

## INSTRUCTIVE STORIES.

## சன்மார்க்க அதிசயக் கதைகள்.

இரண்டாவது கதை.

### 2. A MIRACULOUS INCIDENT.

### கிறிஸ்தவனுக்கும் மகமதியனுக்கும் நடந்த அதிசய சம்பவம்.

ஒரு கிராமத்தில் ஒரு ஏழைக்கிறிஸ்தவன் தன் குடும்பத்தோடு ஜீவனம் செய்துவந்தான். அவன் தொழில் கோரைப்பாய் முடைகிறது. இவனுடைய வீட்டார் யாவரும் அந்த வேலைதான் செய்வார்கள். ஆறுமாதம் முழுவதும் முடைந்த பாய்களை மொத்தமாகச் சேர்த்து 10 மைல் தூரத்தில் இருக்கிற பெரிய கிராமத்தில் ஒரு வர்த்தகனிடம் கொடுத்து, மொத்தமாய்ப் பணம்வாங்கிவந்து, ஆறு மாதத்துச் சாப்பாட்டுக்கு அதை யூகமாய்ச் செலவு செய்து, தன் குடும்பத்தை ஆதரித்துவருகிறது இவனுடைய வழக்கமாயிருந்தது. ஆனால் இந்த ஏழைமனிதன் அதிகமாகத் தெய்வத்தை நேசித்து நம்பினவனாக இருந்தான். இப்படி இவன் தன் காலத்தைக் கடத்திவந்தான்.

ஒருதடவை இவன் வழக்கம்போல் ஆறுமாசமாகக் கஷ்டப்பட்டு முடைந்த கோரைப்பாய்களை மொத்தமாகச் சேர்த்துப் பக்கத்துக் கிராமத்தில் அந்தப் பெரிய வர்த்தகனிடம் கொண்டுபோய்க் கொடுத்துக் கணக்குப் பார்த்து, அதில் கிடைத்த பணம் 200 ரூபாயும் வாங்கி மூட்டையாகக் கட்டிக்கொண்டு, தன் கிராமத்துக்கு வரப் புறப்பட்டான். சாயந்தரம் மணி நாலு ஆய்விட்டது. ஆனாலும் அவன் இராத்தங்காதபடி வீடுபோய்ச் சேரும்படி தன் பயணத்தைத் தொடங்கினான். இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு இருந்த ஒரு மகமதியன், அந்தப் பணத்தை அபகரிக்கும்படி மனங்கொண்டு, இந்த ஏழைக்கிறிஸ்தவன் பின்னால் போய், ஐயா! எங்கே போகிறீர் என்று கேட்டான். கிறிஸ்தவன் கபடில்லாமல் தான் போகும் இடத்தையும் சொல்லிவிட்டான். அப்போ மகமதியன், ஐயா! நானும் அங்கேதான் போகிறேன். இருவரும் பேசிக்கொண்டு போகலாமென்று சொல்லி, இருவரும் நடந்துபோனார்கள். கொஞ்சதூரம் போனதும் மகமதியன் ஐயா, நான் இதோ தெரிகிற கிராமத்தில் வெற்றிலை பாக்கு வாங்கிவருகிறேன் சற்றுநேரம் இங்கே உட்காரும் என்று கேட்டான். அதற்கும் கிறிஸ்தவன் அப்படியே ஆகட்டும் பொழுது போய்விடுகிறது சீக்கிரம் வாருமென்றுசொல்லி அவ்விடத்தில் உட்கார்ந்தான்.

மகமதியனோ அவ்விடம் போய் நல்ல ஒரு கத்தியெடுத்து மறைத்து வைத்துக்கொண்டு, கையில் வெற்றிலை பாக்கும் எடுத்துக்கொண்டுவந்து, போகலாம் புறப்படுமென்று சொல்லி இருவரும் நடந்தார்கள். மணியும் 6 ஆய்விட்டது, பொழுதும் போய்விட்டது; 1 மைல் தூரம் போனதும் காட்



டுப்பாதையானதினால் ஜனப்போக்கு இல்லாதிருந்தது. அப்போது மகமதியன் இடுப்பில் இருந்த கத்தியை உருவிக்கொண்டு பணத்தைத் தருகிறாயா அல்லது வெட்டட்டுமா என்றான். உடனே கிறிஸ்தவன் சொல்வான்: சாய்பு, நீர் இவ்வளவுதூரம் வந்து கடைசியாக என்னை வெட்டிப் பணத்தைப் பிடுங்கவாவந்தீர்? நீர் அவ்விடத்திலேயே கேட்டிருந்தால் கொடுத்துவிட்டிருப்பேனே, பறவாயில்லை. நான் இப்போது பணம் கொடுத்துவிடுகிறேன், யாதொரு தடையும் இல்லை என்று சொல்லி மூட்டைப் பணத்தைத் தூக்கி மகமதியன் கையில் கொடுத்துவிட்டான். மகமதியன் மூட்டையை வாங்கித் தலைமேல் வைத்துக்கொண்டு, திரும்பித் தன் கிராமத்துக்கு ஓடி வருகிறான்.

ஏழைக்கிறிஸ்தவன் கடவுளிடத்தில் தன் கஷ்டத்தை அறிக்கை செய்துகொண்டு நடந்துபோகிறான். இந்த மகமதியனையோ தன் மனம் வாதிக்கிறது. எப்படியென்றால் ஒருமனம் சொல்லுகிறது: அடே, பணத்தைத் தூக்கிக்கொண்டு சந்தோஷமாய்ப் போகிறாயே, காலையில் போலீஸ்காரனோடு வந்து மடக்கிக்கொள்வானே; அப்போது ஜெயிலுக்குத் தண்டனை ஆவாயே அவனை ஒருவெட்டாய்வெட்டிவிட்டு வந்துவிடு என்று ஒருமனம் சொல்லுகிறது. ஒருமனம்: ஐயோ, கேட்ட உடனே கொடுத்துவிட்டான்; அவனுக்கு ஒரு தீங்கும் செய்யாதே யென்று சொல்லுகிறது. இப்படிப் பலமாதிரியாக மனம் அவனை வாதித்தது. கடைசியாக ஒருமனம் அவனை வெட்டிப்போடு என்று ஒரே பிடியாய்ச் சாதித்தது. அப்பொழுதவன் உடனே திரும்பிக் கிறிஸ்தவனைத் தொடர்ந்து ஓடிவருகிறான். வந்ததும் கிறிஸ்தவனைப் பார்த்து அப்பா நான் உன்னை வெட்டிப்போட்டுத்தான் போவேன் என்றான். அதற்குக் கிறிஸ்தவன் சொன்னான்: சாய்பு, நீர் இனிமேல் என்னை வெட்டாமல் போகமாட்டீர் என்று தெரிகிறது; அக்கறையில்லை. என்னை வெட்டிவிடலாம்; ஆனாலும் நான் உம்மை ஒரு கேள்வி கேட்டுக்கொள்ளுகிறேன்: அதாவது உங்கள் மதத்தில் ஆடு, கோழி, முதலான உயிர்ப் பிராணிகளை வெட்டும்போது பாத்தியா ஓதாமல் செய்யமாட்டீர்கள். ஆகையினால் நீர் என்னை வெட்டு முன்னதாக நீர் பாத்தியா ஓதும், நானும் கொஞ்சம் ஜெபம் செய்கிறேனென்று கேட்டான். உடனே மகமதியன், சரி நல்லது ஆகட்டுமென்று சொல்லி பக்கத்தில் இருந்த ஆற்றில் இறங்கினார்கள்; அதில் தண்ணீர் இல்லை. மணல் அதிகமாக இருந்தது, மழைச்சாரல் தூறுகிறது, அதிக இருட்டாக இருக்கிறது; ஆற்றின் மணலில் இருவரும் உட்கார்ந்து, மகமதியன் தன் பணமூட்டையைப் பக்கத்தில் வைத்துவிட்டு பாத்தியா ஓதுகிறான். கிறிஸ்தவனும் பக்கத்தில் முழங்காலை ஊன்றிக் கடவுளை நோக்கி ஜெபிக்கிறான். அவனுடைய ஜெபம் யாக்கோபின் ஜெபம்போல் இருந்தது. கர்த்தரைக் கெட்டியாய்ப் பிடித்துப் போர்செய்கிறான். அதற்குள்ளாக மகமதியன் பாத்தியா ஓதி முடித்துவிட்டு என்ன வெட்டட்டுமா? சீக்கிரம் எழுந்திரு என்று சொன்னான்.

அப்போது ஏழைக்கிறிஸ்தவன்: சாய்பு, ஜெபத்தை அலக்ஷியம் செய்யாதேயும்; நான் ஜெபத்துக்கு முடிவு ஆமெனென்று சொல்லுவேன், அப்போது ஒரு வெட்டாக வெட்டிவிட்டு நீர் போகலாமென்று சொல்லிவிட்டு மறுபடியும் கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறான். அந்த ஏழைக்கிறிஸ்தவன் எப்போதும் கர்த்தரைத் தன் பக்கமாக வைத்துச் சம்பாஷணைசெய்து ஜெபிக்கிற பக்தன். ஆகையினால் அவன் விண்ணப்பத்துக்குக் கடவுளுங்கூட ஆமெனுக்குத்தான் காத்திருக்கிறார். மகமதியனும் ஆமெனுக்குத்தான் காத்திருக்கிறான். இப்படியாக இவன் ஜெபத்தின் அங்கலாய்ப்பு தெய்வசமுகம் எட்டி அவர் முடிவுக்குத்தான் காத்து இருக்கிறார். கிறிஸ்தவன் தன் ஆவியைக் கர்த்தரிடத்தில் ஒப்புவித்துவிட்டு ஜெபம் முடிந்து ஆமென் என்பதற்கு ஆ உச்சரிக்கிறான். மகமதியன் கை ஓங்கினான். வானத்திலிருந்து இடி மகமதியன் தலைமேல் விழுந்து பஸ்பமாக நீறிப்போய்விட்டான். கிறிஸ்தவன் இடியின் ஒளிமயக்கத்தினால் கீழேவிழுந்து, சிறு சத்தமாக உளறிக்கொண்டே கிடந்தான். கொஞ்ச நேரத்துக்குள்ளாக நிலவு உதயமானது. அதற்குள்ளாகப் பக்கத்துரோட்டில் சில வண்டிக்காரர், வண்டி ஓட்டிக்கொண்டு போகிறார்கள். அவர்கள் ஆற்றுக்குள் ஏதோ துயர சத்தம் கேட்கிறதே போய்ப்பார்க்கலாமென்று சொல்லி, வண்டிகளை நிறுத்திவிட்டு ஒரு விளக்கும் எடுத்துப் பிடித்துக்கொண்டு ஆற்றுக்குள் இறங்கிப் பார்த்தார்கள். அங்கே இந்தக் காட்சியைப் பார்த்துத் துயரப்பட்டு தண்ணீர் கொண்டுவந்து, அந்த ஏழைக்கிறிஸ்தவனுக்குக் கொடுத்து, அவன் களைபை ஆற்றி என்ன சங்கதியென்று கேட்டார்கள். அவன் எல்லாச்சங்கதிகளையும் விவரமாய்ச் சொன்னான். அப்போது அந்த வண்டிக்காரர் பரிதாபப்பட்டு பக்கத்திற் கிடந்த பணமூட்டையையும் அவன் கையில் தூக்கிக் கொடுத்து, அவனையும் தங்கள் வண்டியில் ஏற்றி, அவனுடைய வீட்டிற்குக் கொண்டுபோய்ப் பத்திரமாகச் சேர்த்தார்கள். அவனும் கடவுள் தன்னை அபாயமான மரணத்திலிருந்து அற்புதமாகக் காத்ததினால் அவருக்குத் தோத்திரகாணிக்கை செலுத்தி, இன்னும் அதிகமாய்க் கர்த்தரை நெருங்கிப் பிடித்து ஜீவித்தான்.

இதனால் நாம் கற்றுக்கொள்ளவேண்டியது இந்த ஏழைக்கிறிஸ்தவன் எவ்வளவாய்க் கடவுள்மேல் நம்பிக்கையாய் அவரைப் பிடித்ததுபோல், நாமும் நம்மை முற்றுமாக அவருக்குத் தத்தம்செய்து, அவருக்குள் ஜீவிப்போமாக. அப்பொழுது அவர் இம்மையிலும் மறுமையிலும் நம்மை ஆசீர்வதிப்பார்.

"நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்." (சங். 34. 17.)

G. D.

## THE RELIGIONS OF INDIA.

## இந்துதேச சமயங்கள்.

(மார்ச்சுமீ தொடர்ச்சி.)

மகம்மதுநபி மரித்து இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இயற்றப்பட்ட பாரம்பரை நூற்றிரட்டில் இந்த அனுஷ்டானங்கள் யாவும் விஸ்தாரமாயும் திட்பநுட்பமாயும் கூறப்பட்டிருக்கின்றன.

1. **அறிக்கை.**—இஸ்லாமியரின் விசுவாச சூத்திரமே சகல மதஸ்தருடைய விசுவாசப்பிரமாணங்களிலும் ரத்னச் சுருக்கமானது: "லா–இலாஹா–இல்ல–லாகூ; மகம்மது–ரசுல்–அல்லா." தேவனைத்தவிர வேறே தேவன் இல்லை; மகம்மது அவருடைய தீர்க்கதரிசி என்பது அவ்வறிக்கையின் பொருள். இதுவே இஸ்லாம் சமயத்தின் சட்டவாக்கியம். உலகத்தின்கண்ணுள்ள எத்தேசத்து மகம்மதியனும் எச்சமயத்திலும் இந்த எழு அரபிப் பதங்களையுமே தன் விசுவாச அறிக்கையாக உச்சரிப்பான்.

2 **ஜெபம்.**—கிழக்கு வெளுக்கும் நேரத்திலும், மதியம் திரும்பும்போதும், சூரிய அஸ்தமனத்திற்கு இரண்டுமணி நேரமிருக்கும் வேளையிலும், அஸ்தமன சமயத்திலும், பொழுதுபோய் இரண்டுமணி நேரம் கழிந்த தருணத்திலும் ஆகத் தினமொன்றுக்கு ஐந்துவேளை மகம்மதியன் ஒவ்வொருவனும் அரபிபாஷையில் ஜெபம் சொல்லவேண்டுமென்பது ஏற்பாடு. நோக்கி ஜெபிக்கவேண்டிய திசை, ஜெபத்திற்குத் தகுதியான அங்கநிலை, அவசியமான சரீர சுத்தம் யாவும் மகா முக்கியம். இவைகளில் தினையளவு தவறிவிட்டாலும் ஜெபத்திற்குப் பலிதமுண்டாகாதாம். பள்ளிவாசல் ஒவ்வொன்றிலேயும் பிரதிதினம் ஐந்துமுறை மோல்வி இரைந்து ஜெபத்துக்கு ஜனங்களை அழைப்பான். அரபிபாஷையில் அவன் வசனிக்கும் வார்த்தைகளின் பொருள் யாதெனின்: "தேவன் மகா பெரிய தேவன்! தேவன் மகா பெரிய தேவன்! தேவன் மகா பெரிய தேவன்! தேவனைத்தவிர வேறே தேவனில்லை. மகம்மதுவே தேவனுடைய நபி! மகம்மதுவே தேவனுடைய நபி என்று சாட்சியாய்க் கூறுகிறேன்! ஜெபம் செய்ய வா! ஜெபம் செய்ய வா! நல்வாழ்வடைய வா! நல்வாழ்வடைய வா! தேவன் மகா பெரிய தேவன்! தேவன் மகா பெரிய தேவன்! தேவனைத்தவிர வேறே தேவனில்லை" என்பதே. கிழக்கு வெளுக்கும் சமயத்தில் அழைக்கும்போது, "நித்திரையைவிட ஜெபம் சிரேஷ்டம்! நித்திரையைவிட ஜெபம் சிரேஷ்டம்!" என்று, "நல் வாழ்வடைய வா" என்னும் வசனங்களுக்குப்பின் கூட்டிக்கொள்வதுண்டு. இது நல்லகாரியமென்றபோதிலும் செய்யப்படும் ஜெபம் அரபிபாஷையில் சொல்லப்படுவதால் அதை இருதயப் பிரார்த்தனையோடு சேர்க்கப்படாது. உலகத்திலுள்ள மகம்மதியரில் முக்கால்வாசிப்பேர் தாங்கள் அறியாத பாஷையிலேயே தினசரி ஐந்துதடவை ஜெபித்துவருகிறார்கள். ஆகவே ஜெபம் அவர்களுக்கு வீண் வார்த்தைகளை அலப்பும் வாடிக்கையாகவும், கிளிப்பிள்ளை பாடமாகவுமே ஆகிவிடுகிறது.

3. **உபவாசம்.**—இஸ்லாமியருக்குப் பிரதான உபவாசகாலம் ரம்ஜான் மாதம். இம்மாதத்தில் பிரதிதினமும் அருணோதயத்திற்கும் அஸ்தமனத்திற்குமிடையில் ஒருசொட்டுத் தண்ணீராவது ஒரு வாய் அன்னமாவது எவரும் தொடக்கூடாது. தவிரவும் இந்நாட்களில் அன்னபானம் மட்டுமல்ல, ஸ்நானம், சுருட்டு, மூக்குத்தூள் முதலியவற்றையும் கட்டோடே விலக்கவேண்டும். ஓர் புஷ்பத்தை முதலாய் முகர்ந்து பார்க்கக்கூடாதென்பது விதி என்றாலும் மற்றெந்த மாதத்தைப்பார்க்கிலும் உணவுக்கென்று மகம்மதியர் இம்மாதத்திலேயே அதிகச் செலவு செய்கிறார்களென்பது வாஸ்தவமே. இராமுழுவதையும் சிற்றின்பத்திலும் விருந்துகளிலும் சம்பிரம போஜனாதிகளிலுமே கழிப்பது சகஜம். (இன்னும் வரும்.)

## CLOSING HYMN FOR SUNDAY SCHOOLS.

## ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களுக்கு ஓர் முடிவுரைப் பாட்டு.

இராகம். "இங்கே சொந்த கொண்டிரோம்."

1. ஏகமாகக் கூடினோம்
ஓய்வுநாளில் பாடினோம்
வீட்டுக்குப் போகிறோம்.

பல்லவி. ஆ எங்கள் ராஜா,
கூட, வாரும், பாரும்
ஆ எங்கள் ராஜா
நீருமிருள் யாவையும்.

2. கற்ற நல்ல பாடங்கள்
கல்மேல் எழுத்துப் போலவே
பதியச் செய்யுமே. ஆ எங்கள்

3. இன்னோர் வாரம் முற்றுமாய்
திண்ணமாகக் காருமே
தேவாதி தேவனே. ஆ எங்கள்

4. நேசமுள்ள உபாத்திமார்
பாசமுடன் கற்பித்தார்
தாசரைக் காருமே. ஆ எங்கள்

5. வந்தனங்கள் அன்புடன்
தந்தனம் கர்த்தனுக்கே
வந்த யாவருக்கும். ஆ எங்கள்

S. D. P.

## KAMBAN THE POET.

### கம்பநாடர்.

(டிசெம்பர்மீ தொடர்ச்சி.)

"துன்புளதெனினன்றோசுகமுளது"

எனக் கூறினாராதலின் இவர் வறுமையிற் செம்மையைக் கண்டவரென்பதும்,

"யாவையாதுமிலார்க்கிலையயாதவே"

என்றதனால் வறுமையின் கொடுமையைக் கண்டறிந்தவரென்பதும் தெளிவாகின்றன. ஆண்பாலினரைக் காட்டில் பெண்பாலினர் காம மிக்கவரல்லர் என

"மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றே"

என்ற அடியில் வற்புறுத்தினாரேனும், ஆண்பாலினர் கேடெய்துவது பெண்பாலினர் தரும் காமவின்பத்தால் என

தூம கேது வெனப்புவித் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே

என்ற விருத்தத்திலே கூறினர். இவ்வுண்மையைப் பின்னும்,

மங்கையர் பொருட்டா லெய்து மாந்தர்க்கு மரணமென்றல், சங்கையின் றுணர்தி வாலி செய்கையாற் சாலு மின்னும், அங்கவர் திறத்தி னாலே யல்லலும் பழியு மெய்தல், எங்களிற் காண்டி யன்றே இதற்குவே றேதி யாதோ

எனவும் வற்புறுத்தினர். சித்ரகூடப் பருவதம் முதலான வர்ணனையால், இவர் எல்லாக் காட்சிகளையும் நேரில் கண்டனுபவித்தவர் என்பது நன்கறியப்படும். கற்பனாசக்தியால் மாத்ரம் அவைகளை நன்கு வர்ணிக்க இயலாது என்பது அவ்வர்ணனைகளைப் படித்தவர்கட்கு மெய்ப்படும். சடையப்பமுதலியாரையும் அவருடன் பிறந்தாரான சண்ணனையும், சராமனையும் இராமாயணத்தில் ஆங்காங்கு புகழ்ந்திருத்தலானும்,

சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வ, பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை, வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றல் மாயா, உதவிகொன் றார்க்கென் றேனு மொழிக்கலா முபாய முண்டோ

எனப் பாடியிருத்தலானும், இவர் மிகவும் செய்ந்நன்றி யறிதலுடையவர் என்பது தேற்றம். கள்ளுண்டலைக் கடிந்து சினந்தவரென்பது பின்வரும் செய்யுளால் போதரும்:—

வஞ்சமுங் களவும் பொய்யு மயக்கமு மரபில் கோட்பும், தஞ்சமென் றாரை நீக்குந் தன்மையுங் களிப்புந் தாக்கும், கஞ்சமெல் லணங்குந் தீருங் கள்ளினா லருந்தினாரை, நஞ்சமுங் கொல்வ தல்லா னரகினை நல்காதன்றே.

தமிழையும் தமிழ் நாட்டையும் குறிக்க நேரிடுகின்ற இடங்களில் அதிக உற்சாகமுடையவராகக் காண்கின்றனர்.

கம்பர் சைவரோ வைணவரோ என்பதைத் துணிகின்றதில் இருதலைக் கொள்ளியிடை எறும்பேபோல இடர்ப்பட வேண்டுவதா யிருக்கின்றது. கம்பர் பிள்ளையின் பெயர் அம்பிகாபதி என்பது உலகப்ரஸித்தம். ஏரெழுபதில் விநாயக வணக்கம் வைத்திருக்கின்றது. இராமாயணத்தில் சிவபெருமானைக் குறிக்கின்ற இடங்கள் பெருமையாகவே குறித்திருக்கின்றன. சில ப்ரதிகளில் "ஆதியந்த மரியென யாவையும்" என்றும், சிலவற்றில் "ஆதியந்தம் அரியன யாவையும்" என்றும் இருக்கிறது.

(இன்னும் வரும்.) T. C. M.

## PRAISE TO GOD.

### போற்றித் திரு விருத்தம்.

(தொடர்ச்சி.)

29 உற்பவ மான நாண்முதற் பிழைகள் உமக்கெதி ருஞற்றியா னுள்ளேன், அற்பனு வெனையாளுடையைநீ யென்ற அச்சமொன் றின்றியானலைந்தேன், எற்பரிந்தாண்ட வேனுளா யேழையேதுகைம் மாறினிப் புரிவேன், தற்பரா வறியேன் தமியனுக் கருள்வாய் சந்தத நின்னளி போற்றி.

30. காலமோ யாமற் கடுகுதல் கண்டுங் கனிவிலா நெஞ்சனுய்த் தீமை, சாலவே யிழைத்துச் சாவெனும் படுகர் சரிந்திடா தெளியனைத் தடுப்பாய், ஞாலநா யகனே நற்பரம் பொருளே, நண்ணரும் வெளிச்சமே போற்றி, சீலயார் தூய திரித்துவ முதலே செம்மலே நின்கழல் போற்றி.

31. மாறிடாப் பிறவி வரும்வரு மெனவே
மாழ்கிவா ளுட்களை யகற்றி
யீறிலா நிரய பாதலத் தந்தோ
வெரியுண விருந்தவிக் கொடியேன்
நாறிடா நின்ற நவிபெரும் பவத்தின்
நவையெலாங் கழுவியாட் கொண்ட
மாறிலாப் புகழ்சேர் மகத்துவ வேந்தே
வழுத்துவே னென்றுமே போற்றி.

#### வேறு.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

32. ஞானத்தின் முதிர்ந்த பேரு
நண்ணரும் பரம வாழ்க்கைத்
தானத்தைப் புடவி மாக்கள்
தமதெனப் பெறுவான் தோன்றி
யூனத்தைச் சகித்தாய் போற்றி
யுயிர்தெறப் பட்டாய் போற்றி
வானத்தை மண்ட லத்தை
வகுத்தவா போற்றி போற்றி.

33. பொய்ம்மணி மவுலி யேழை
மூடனேன் றாங்க முள்ளாற்
செய்ம்மணி மகுட மேற்ற
செம்மலே நின்சீர் போற்றி
பொய்ம்மலி வாழ்க்கை நீத்துப்
புரவலர்க் கடியே னாக
மெய்ம்மலி வழிந டந்த
வேதனே போற்றி போற்றி.

34. அலைகட னடந்தாய் போற்றி
யறிதயி லமர்ந்தாய் போற்றி
மலைதரு திரையைக் காலை
மடக்கிய விறலோய் போற்றி
சிலைமிசைத் தினக ரன்போற்
சிறந்தபுங் கவனே போற்றி
குலைவிலா மகத்வ வேந்தின்
குமாரனே போற்றி போற்றி.

(இன்னும் வரும்.) M. P. A.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Dépôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சங்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிறுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாசரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு ... ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 1½ |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்றாட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

மே-மீ பஞ்சாங்கம்.—

மேமீ = சித்திரை—வைகாசி. ⊙ பௌர்ணமி, 9௳ ● அமாவாசை, 24௳.

| வாரம். | | | | | | | சித்திரை—வைகாசி. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 21 | 28 | 4 | 11 | 18 |
| திங்க ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 22 | 29 | 5 | 12 | ... |
| செவ் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 23 | 30 | 6 | 13 | ... |
| புதன் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 24 | 31 | 7 | 14 | ... |
| வியா ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 25 | 1 | 8 | 15 | ... |
| வெள் ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 19 | 26 | 2 | 9 | 16 | ... |
| சனி ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 20 | 27 | 3 | 10 | 17 | ... |

#### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலைச் சேர்ந்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... 1914 MADRAS.

सत्यमेव जयति

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

JUNE, 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூன்மீ, 1914.

## NEWS AND NOTES.

### வர்த்தமானக் குறிப்புகள்.

**நகர விருத்தி.**—இக்காலத்தில் பட்டணங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் விருத்தியடைகிறதென்பதற்கு அடியிற் கண்டது திருஷ்டாந்தமாகும். சென்ற வருஷத்தில் நியூயார்க் நகரில் புதிதாய்க் கட்டப்பட்ட கட்டிடங்களின் தொகை 12,000. அவைகளின் செலவு 41,400,000 பவுண்.

**பிரஜைகளில்லாத அரசன்.**—பிரிட்டிஷ்வாய்க்காலில் ஷெப் ஹோல்ம் என்று ஒரு சிறு தீவுண்டு. அதில் ஜேம்ஸ் அரசனென்றும், மாட்ஜ் ராணியென்றும் ஒரு இராஜாவும் இராணியுமிருக்கிறார்கள். அத்தீவில் இவர்களைத்தவிர வேறு ஜனங்கள் சஞ்சரிக்காதபடியால் இவர்களைப் பிரஜைகளில்லாத இராஜா இராணி யென்னலாம். அங்குள்ள மிருகங்களும் பக்ஷிகளுமே இவர்களுடைய பிரஜைகள்.

**புலியும் சிங்கமும்.**—சிங்கம் மிருகங்களுக்கு இராஜாவானபோதிலும் சிங்கத்தைவிடப் புலியே அதிக பலமுடையது. மிருக சாஸ்திர நிபுணர்கள் சொல்லுகிறபடி ஒரு புலியை அடக்கிப் பிடிக்க ஒன்பதுபேர் தேவை. சிங்கத்துக்கு ஐந்து பேர் போதும். சிங்கம் மிருக இராஜனானது பலத்தாலல்ல; அதன் பெருந்தன்மையான குணத்தால். ஆகவே புத்திமானைவிட நீதிமான் பலவான் என்பதறிக.

**நூதன ஆகாயக் கப்பல்.**—சமுத்திரத்தில் செல்லும் கப்பலைப்போலவே ஆகாயத்திற் செல்லும் நூதன கப்பலொன்றை சிக்கார்ஸ்கி என்கிற ருஷிய இஞ்சினீர் 44,000 பவுண் செலவிட்டுச் செய்திருக்கிறார். மின்சாரத்தினால் இதற்கு வெளிச்சமும், புகையிஞ்சினால் சூடும் உண்டாகுமாம். மேல்தட்டில் 6 பிரயாணிகளுக்கு இடமுண்டு. காற்றினாலே கிஞ்சித்தும் அலைக்கப்படாது. வெளியே பார்க்க 8 பலகணிகள் உண்டு.

**அமெரிக்க நீகிரோவர்.**—அமெரிக்காவில் நிகிரோவருக்கு அடிமைத்தனம் நீங்கி 50 வருஷமாகிறது. இந்த 50 வருஷத்தில் 40 லக்ஷத்திலிருந்து 100 லக்ஷமாகப் பெருகியிருக்கிறார்கள். இவர்களில் 75 பேர் குடியானவர்கள். மற்றவர்கள் வேறு பல உத்தியோகங்களிலிருப்பவர். இவர்களுக்கு ஏராளமான சொத்து உண்டென்றும், 35,000 ஆலயங்கள் உண்டென்றுஞ் சொல்லப்படுகிறது. எங்கே சுயாதீனமுண்டோ அங்கே விருத்தியுமுண்டு.

**அத்லாண்டிக்கைக் கடத்தல்.**—நிபுணர்களான ஆகாய கமனிகள் உயிருக்கஞ்சாமல் ஆகாய ரதமேறி ஆகாய சஞ்சாரஞ் செய்துவருகிறார்கள். அத்லாண்டிக் மகா சமுத்திரத்தின்மேல் ஒரு முனை தொடங்கி மறு முனைமட்டும் கடந்துபோக வேண்டுமென்பது சிலருடைய நிர்த்தாரணம். கிராஹாமெர் உவொயிட் என்பவர் ஆறு பிரயாணிகளோடு ஆகாய ரதமேறி 60 மணி நேரத்துள் அத்லாண்டிக்கைக் கடந்துபோவதாகச் சபதம் செய்திருக்கிறார். துணிந்தவனுக்குத் துக்கமில்லை.

**நல்ல மறுமொழி.**—வீணையும் விருதாச் சிந்தையுமுள்ள ஒருவனுக்கு ஒரு பெரியவர் உரைத்த மறுமொழி:—"நீ பத்திரிகை யெழுத முடியாது. சட்டமோ, வியாபாரமோ, போதக அலுவலோ, வைத்தியமோ இவைகளைப்பற்றியும் நினைக்காதே. நீ குடியானவனாய், போர்வீரனாய், கப்பலோட்டியாய் இருக்கவும் முடியாது. படிக்கவும் வேண்டாம், நினைக்கவும் வேண்டாம். உனக்கு உலகத்தில் உன் மனதுக்கேற்ற வசதியான ஒரே ஒரு இடம் உண்டு. அது உன்னுடைய சமாதியே." இது நல்ல மறுமொழி.

**ஒட்டிக்கொண்டிருந்த இரட்டைப் பிள்ளைகள்.**—சென்ற நவம்பர் மாதத்தில் சீயம்நாட்டில் தாய்வயிற்றிலிருந்து பிறக்கும்போதே இரண்டு பெண் குழந்தைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு பிறந்தன. டாக்டர்கள் அவைகளைச் சத்திரஞ்செய்து பிரித்துவிடலாமென்று அபிப்பிராயப்பட்டார்கள். இப்போது மிகவும் பேர்போன ஒரு பிரஞ்சு டாக்டர் அவைகளைப் பிரித்துவிட்டாரென்றும், பிள்ளைகள் சுகமாயிருக்கின்றனவென்றுஞ் சொல்லப்படுகிறது. வயிற்றுப்புறம் அவைகள் ஒட்டிக்கொண்டிருந்தனவாம்.

**ஸ்திரீ சுதந்தரவாதிகள்.**—இங்கிலாண்டில் ஸ்திரீ சுதந்தரவாதிகள் செய்துவருகிற மிதமிஞ்சின நியாய விரோத செய்கைகளைப் பார்த்துப் பலர் பல யோசனைகளைச் சொல்லுகிறார்கள். பைரன் சீமாட்டி, ஸ்திரீகளுக்காகப் பார்லிமெண்டில் ஒரு மந்திரியிருப்பது நலமென்றும், ஸ்திரீகளும் அரசாங்க விஷயங்களைத் தக்கவாறு அறிந்துகொள்ள மந்திரிகளுதவியால் ஒரு சங்கமா யேற்பட்டுக் காரியங்களை நன்கறிய வேண்டுமென்றும் ஆலோசனை கூறியிருக்கிறாள். வீண் குழப்பம் செய்வதைவிட இப்படிப்பட்ட நல்யோசனையோடு காரியங்களைக் கற்று உரிமைக்காகப் போராடுவது நல்லது.

**சிறுமியின் விவேகம்.**—சில தினங்களுக்கு முன்னே மார்சேல்ஸ் என்னுமிடத்தில், ஒரு திருடன் ஒரு வீட்டுக்குள்ளே பிரவேசித்து, கையில் வைத்திருந்த கைத்துப்பாக்கியைக் காட்டி வீட்டிலிருந்தவர்களைப் பயமுறுத்தி விலையுள்ள பொருட்களைத் திருடிக்கொண்டிருக்கையில், 12 பிராயமுடைய ஒரு சிறு பெண் அதிக தைரியமாய் ஒரு பெட்டி மூக்குப்பொடியைக் கொண்டுவந்து அவனுடைய இரண்டு கண்களிலும் கொட்டிவிட்டாள். அவன் எரிச்சல் பொறுக்க முடியாமல் துள்ளிக் குதித்துக் கடைசியில் கையிலிருந்த துப்பாக்கியால் தன்னையே சுட்டுக்கொண்டு மடிந்துபோனான். இந்தப்படி அந்தச் சிறுமி தன் விவேகத்தினாலும் தைரியத்தினாலும் அவ்வீட்டிலுள்ளவர்களையும் பொருட்களையுங் காப்பாற்றினாள்.

**எரிமலை தீக் கொப்பளித்தல்.**—ஆம்பரிம் தீவிலுள்ள எரிமலை பலநாட்களாக பயங்கரமாய்த் தீக்கொப்பளித்துக்கொண்டிருக்கிறது. 6௳ ஆறு இடங்களில் அக்கினி வெடிப்புகளுண்டாயின. 7௳ மின்னி யென்கிற மலை அதிர்ந்து சரிந்துபோனது. பக்கங்களில் குடியிருந்த ஜனங்கள் படகுகளிலேறியோடி உயிர்தப்பினார்கள். தீயாறு புறப்பட்டுவந்து வடக்கிலிருந்த ஒரு கிராமத்தை யழித்துவிட்டது. வெள்ளைக்காரர் உயிர் பிழைத்ததாகவும் சுதேசிகள் பலர் மடிந்ததாகவும் தெரியவருகிறது. ஆறுகளெல்லாம் நெருப்பாறுகளாய் மாறினதாகவும், பலசாவிகள் சிறு தோணிகளிலேறி உயிர்தப்ப, ஸ்திரீகளும் பிள்ளைகளும் மடிந்ததாகவும், பிரான்ஸ் என்கிற ஸ்டீமர் 500 பேரை இரட்சித்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

புஸ்தகம். உஎ. நெ. அ.

**சட்ட விரோதமான கல்யாணம்.**—சில தினங்களுக்கு முன்பு திருநெல்வேலி செஷன்ஸ் ஜட்ஜ் ஒரு வியாஜ்ஜியத்தில் தீர்ப்புக்கொடுத்தார். உரோமான் கிறிஸ்தவளான ஒரு நாடார் பெண்ணை, இந்து மார்க்கத்தானான ஒருவன் அழைத்துப் போய் தன் வீட்டில் வைத்து ராத்திரிக்கு ராத்திரியாய் இந்து முறைமைப்படி கலியாணஞ் செய்துகொண்டான். பெண்ணுக்குப் பெற்றோரும், பெண்ணும் தங்களுடைய பிரியத்துக்குவிரோதமாக அது செய்யப்பட்டது என்று சொன்னார்கள். கலியாணஞ் செய்துகொண்டவன், அவர்கள் சம்மதத்தின்மேல் அவர்களை இந்துக்களாக ஆக்கி இந்து கலியாணமாகச் செய்யப்பட்டதென்றான். ஜட்ஜ் கலியாண மாப்பிள்ளைக்கும் பெண்ணுடைய தகப்பனுக்கும் 6 மாதக் கடினகாவலும், பெண்ணுக்கு 2 மாதக் கடினகாவலும் சிக்ஷை விதித்தார். இந்தத் தீர்மானத்தைக் கிராம சபைகளிலிருக்கிற கிறிஸ்தவர்கள் கவனிக்கவேண்டும்.

**மதபைத்தியம்.**-அமிர்தசாரில் கோபாலதாஸ் என்கிற ஒரு பிராமண வாலிபன் தன் மனைவியோடு தீவளர்த்திப் பலநாள் ஹோமம் செய்து வந்தானாம். ஒருநாள் திடீரென்று அந்தத் தீக்குள்ளே சாடினான். அதைப்பார்த்த மனைவியும் சாடினாள். மற்றவர் வந்து எடுப்பதற்குள் இருவரும் வெந்து மடிந்தார்கள். குழந்தை வேலைக்காரனிடம் இருந்தபடியால் உயிர்தப்பினது. சில நாளைக்கு முன்னே சென்னை பைராகிமடம்கோவிலில், ஒரு மார்வாடி பிராமணன் தன் மனைவி குனிந்து சேவை செய்யும்போது அவளைக் கழுத்தை வெட்டிப்போட்டான். அவனைப் பிடிக்கவந்த இருவரை வெட்ட ஒருவன் உயிர்துறந்தான். இவன் செஷன்கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வருகிறான்.

## A NOBLE DEED.

## மேன்மையான செய்கை.

அமெரிக்கா தேசத்திலுள்ள ஒரு பட்டணத்தில் ஒரு மனுஷன் இருந்தான். அவன் பெயர் "பில்லி." அவன் அந்தப் பட்டணத்தின் தெருக்களில் சமாசார பத்திரிகைகளை விற்று ஜீவனம் செய்துவந்தான். அவன் இதற்கு முந்தி ஊர் ஊராய்த் திரிந்துகொண்டிருந்த நாடோடி. இவனுடைய கால் ஒன்று நொண்டியாயும் பிரயோஜனமற்றதாயு மிருந்தது. இவன் தன் காலத்தைச் சோம்பலில் கழித்து, பிச்சை எடுத்துத் திரிந்தவன். கடைசியாய் இவன் இந்தப் பட்டணத்தில் சேர்ந்தவுடன் சில முகாந்தரங்களினாலே தன் நாடோடித்தனத்தை விட்டு நாணயமான ஜீவியம் செய்ய ஆரம்பித்தான். அவன் தெருக்களிலும் மற்ற இடங்களிலும் பத்திரிகைகளை விற்க ஆரம்பித்தபோது, அவனுடைய பிரகாசமும், மகிழ்ச்சியும் பொருந்திய முகத்தால் மற்றவர்கள் கவரப்பட்டு, இவனுடைய நாணயமான ஜீவியத்தினால் அப்பட்டணத்திலுள்ள ஜனங்களால் நல்ல மதிப்பைப் பெற்றவன்தான். ஆனபோதிலும் இவன் ஒரு எளிமையும் தாழ்மையுமுள்ள மனுஷன்; இவன் மரித்துப் போனபோது, அநேக ஜனங்கள் கூடி ஒரு பெரிய தனவானுக்கும் கனவானுக்கும் செய்கிற மாதிரியான கனத்தை இவனுக்குச் செய்தார்கள். அவனைப்பற்றிய கதை பின்வருமாறு சொல்லப்படுகிறது. பில்லி ஜீவனம் செய்துகொண்டிருந்த பட்டணத்தில் ஒரு ஐசுவரியமுள்ள துரைமகள் இருந்தாள். அவளுக்குச் சடுதியாய் நெருப்பினால் விபத்து நேரிட்டு, அதிகமாய் வெந்து போனான். உடனே அவளை ஒரு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனபோது, அங்கிருந்த டாக்டர் அவளுடைய உயிரைக் காப்பாற்றவேண்டுமானால், ஒரே ஒரு வழிமாத்திரம் அவருக்குத் தென்பட்டது. அதாவது, அவளுடையகாயம் ஆறும்படி சுகமுள்ள இன்னொரு மனிதனுடைய தோலை அறுத்து காயத்தின்மேல் மூடி ஆறவைக்க வேண்டும் என்பதே. சுகமுள்ள மனிதனுடைய தோலைத் துண்டு துண்டாகக் கத்தரித்து, வெந்துபோன பாகத்தின்மேல் வெகு ஜாக்கிரதையோடு மூடும்போது அந்தப் புண் ஆறிவரும், மற்றப்படி இவ்வித சிகிச்சை செய்யாமல் விட்டுவிட்டால், அந்தப்பெண் சாகத்தான் வேண்டியதாயிருந்தது.



ரோமாபுரியில் பாணவேடிக்கை.



MADRAS 1914

இன்னொருவனுடைய தோலை அறுக்கும்போது அவனுக்கு வலியும் மகா கஷ்டமும் உண்டாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. காரியங்கள் இப்படியிருக்கையில், அந்த டாக்டர் அப்பெண்ணை சிகிச்சை செய்யும்படி யாராகிலும் சுகதேகிகள் தங்கள் தோலைக் கொடுக்க முடியுமாவென்று விளம்பரம் செய்தார். இந்தக் கஷ்டமான பெரும் உபகாரத்தைச் செய்ய யாரும் வரவில்லை. கடைசியாக சமாசாரப் பத்திரிகைகளை விற்றுவந்த நொண்டியாகிய பில்லி என்கிறவன், தான் தன் தோலைக் கொடுப்பதாகச் சம்மதித்து டாக்டர்முன் வந்து நின்று, "ஐயா, என் நொண்டிக்காலை அந்தத் துரைமகள் சுகமடைய மனப்பூர்வமாய்க் கொடுக்கிறேன். தாங்கள் அதை எடுத்து உபயோகப்படுத்திக்கொள்ளலாம்" என்றான். இவனுடைய வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டது. டாக்டர் அவனை ஆஸ்பத்திரியில் வைத்து வெகு ஜாக்கிரதையாய் அவனுடைய தோலை அறுத்து எடுத்தார், ஆனாலும் என்ன; அவனுடைய தோலை அறுத்ததினால் அவனுடைய பலஹீனமுள்ள தேகம் க்ஷீணதிசையடைந்து அதிகமாய் மெலிந்துபோனது. அவனுடைய தேகம் நாளுக்குநாள் பலஹீனப்படவே, கடைசியாய் நிமோனியா என்கிற வியாதி கண்டு மரித்துப்போனான். இந்த ஏழை மனிதனுடைய மனப்பூர்வமான செய்கையைப்பற்றி கேள்விப்பட்ட எல்லாரும் ஆச்சரியப்பட்டு சிலாகித்துப் பேசினார்கள். இந்த மனிதன் தனக்குப் பேர்ப்பிரஸ்தாபம் உண்டாகுமென்று கருதினவனே அல்ல, தன் ஜீவன் போகக்கூடியதாயிருந்தாலும், இச்செய்கைக்கென்று தன்னை முற்றிலும் சந்தோஷத்தோடும் மனப்பூர்வத்தோடும் ஒப்புக்கொடுத்தான். அவன் மரிக்கக் கொஞ்சநேரத்திற்கு முந்தி, "நானும் பிரயோஜனப்பட்டேன்" என்கிற வார்த்தைகளை அவன் அதிக மெதுவாய்ப் பேசினதை அங்குள்ள ஜனங்கள் கேட்டிருந்தார்கள். அப்பால் அந்தத் துரைமகள் நாளுக்கு நாள் சுகமடைந்து, அங்குமிங்கும் நடமாட ஆரம்பித்தாள். பில்லி என்பவன் அதே ஆஸ்பத்திரியில் இருந்தபடியால், அந்தத் துரைமகள், பில்லியின் மரணப் படுக்கையண்டை போய், அவனைப் பார்த்து, மனம் நொறுங்கி கண்ணீர் சிந்தி "எனக்காக இந்த மனுஷன் எவ்வளவு செய்தான்" என்று உரத்த சத்தமாய்ச் சொன்னாள். இந்த ஏழை மனிதனுடைய கண்ணியமான செய்கைக்காக அப்பட்டணத்திலுள்ள எல்லாச் சங்கத்தாரும், சகோதரத் தன்மையுடையவர்களும், ஏராளமாய் இவனுடைய பிரேத அடக்கத்திற்கு வந்தார்கள். அங்கிருந்த ஒரு பெரிய இரும்பு வியாபாரச் சாலையும், அந்த நாளில் இவனுக்கென்று சாத்தப்பட்டபடியால், ஆயிரம் ஆயிரம் கணக்கான ஜனங்கள் இவனுடைய அடக்கத்திற்கு வந்திருந்தார்கள். இன்னொருவனை இரட்சிக்கத் தன் உயிரைக்கொடுத்த இந்த மனுஷனுக்கு ஒரு ஞாபக கோபுரம் கட்டப்பட்டது. இந்தக் கதையைவாசிக்கிற நீயும், நானும், அழிந்துபோகாதபடி நித்திய ஜீவனை அடையும்படி உயிரைக்கொடுத்த இயேசுநாதரை நினைக்க நேரிடுகிறது. அந்தச் சிறுபெண்ணுக்கு ஜீவன் கொடுக்கப்பட்டது; ஆனால் அது நிலையுள்ளதல்ல, இயேசு கிறிஸ்து தம்முடைய தாசர்களுக்குக் கொடுத்த ஜீவனினால் சொல்லக்கூடாத நித்திய ஜீவனும் சந்தோஷமும் ஆசீர்வாதமும் உண்டாகிறது.

## RAMANUJA AND HIS MESSAGE TO INDIA.

## ராமானுஜரும் அவரது தூதிகையும்.

குப்பை மேட்டிலே சிற்சில சிறுமணிகள் தோன்றுவதுபோல ஜாதி வித்தியாசமும், காமவிகாரமும், விக்கிரக ஆராதனையும் நிறைந்த இந்தியா தேசத்தில் சில சீர்திருத்த சிரோமணிகள் தோன்றினார்கள். 11-ம் 12-ம் நூற்றாண்டுகளில் சங்கராசாரியார், மாணிக்கவாசகர், ராமானுஜர் முதலிய சீர்திருத்தக் கர்த்தாக்கள் எழும்பினார்கள். இவர்களில் இராமானுஜரே மகா சிரேஷ்ட கர்த்தன்.

இவர் சென்னபட்டணத்திற்குச் சமீபமான ஸ்ரீ பெரும்பூதூர் அல்லது பூதரி என்னுமிடத்தில்பிறந்தார். இவரது தகப்பன் பெயர் கேசவப்பெருமான், தாய் பெயர் பூதேவி அல்லது காந்திமதி.

இவர் தமது பாலிய பிராயத்திலே ஸ்ரீரங்கத்தில் வாசஞ்செய்து காஞ்சீபுரத்தில் கல்வி கற்றவர். இச்சமயத்தில் இவரைக்கண்ட யாவரும் மேலான சீர்திருத்தக் கர்த்தனாக வருவார் என்பதாக எண்ணி மதித்துவந்தார்கள்.

ராமானுஜர் வேதாந்தத்தில் தேர்ச்சியடையக் கருதி யாதவப்பிரகாச ரிஷியினிடம் சிஷனாக அமைந்து, அவராலே கல்வி புகட்டப்பட்டு வரும்பொழுது யாதவருடைய சில கொள்கைகள் இவருக்குப்பிடிபடாததால், அவரோடு எதிர்த்து வாதஞ்செய்து அடிக்கடி ஜெயித்தும்வந்தார். இப்படி வந்த தற்காலங்களில் யாதவரிஷி தோல்வியடைந்ததால், எப்படியாவது இவரைக் கொல்லவேண்டுமென்று உத்தேசித்து, தன் மற்ற சிஷரோடு இவரையும் தீர்த்த யாத்திரைக்குக் கூப்பிட, அவர் அதற்குடன்பட்டுப் போகும்பொழுது போகக்கூடாதென்று சிநேகிதரால் எச்சரிக்கப்பட்டு, காஞ்சீபுரத்துக்குப் போய் அங்கே கடவுளுக்கு ஜலம் வார்த்துக்கொண்டிருந்தார். யாதவர் தற்செயலாய் காஞ்சீபுரத்துக்கு வந்திருக்கையில், அங்கே ராமானுஜரைக் கண்டு, அவரை மறுபடியும் சிஷனாக வைத்து உபதேசித்து வந்தபோதிலும், இவ்விருவருக்கும் தர்க்கம் அதிகரித்ததால் பிரிந்துகொண்டார்கள். அச்சமயத்திலே காஞ்சீபுரத்திலே வந்திருந்த யமுனா என்பவர் ராமானுஜரைப் பார்த்து, வைஷ்ணவ மதத்திற்குத் தலைவராக வருபவர் இவர்தான் என்பதாகச் சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே பெரிய சீர்திருத்தத் தலைவராக நியமகம் பெற்றார். கிறிஸ்துவின் காலத்திலுள்ள யூதரைப்போல ராமானுஜரும் சாப்பாடு, உடுப்பு, குளிப்பு முதலிய வீண் சடங்காசாரமான காரியங்களைக் கைக்கொள்ள பிரமாணங்களை ஏற்படுத்தி, ஜனங்கள்மேல் பாரமான சுமைகளைச் சுமத்தினார். அவர் ஒரு நன்மையையும் செய்தார். தீழ்ப்பாய் எண்ணப்பட்ட பஞ்சமராகிய 5-ம் வகுப்பாரைக் கோவிலில் ஒருபாகமட்டும் வரலாம் என்று சுயாதீனம் கொடுத்து அவர்களை மேன்மைப்படுத்தினார். இன்னும் அநேக நன்மைகளையும் செய்து தற்காலத்தில் சீர்திருத்தங்களுக்குக் காரணமான அநேக உன்னத போதனைகளைப் போதித்துக் கடைசியாக வைகுண்ட பிராப்தியானார். இவர் மரித்து ஒரு நூற்றாண்டானபின் இவரது பின்னடியார் வடகலையார் என்றும், தென்கலையார் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிந்துபோனார்கள். வடகலையாருக்கு மர்க்கட நியாயக்காரரென்றும், தென்கலையாருக்கு மார்ச்சால நியாயக்காரரென்றும் பெயர் வழங்கப்பட்டுவந்தது. மனிதரக்ஷிப்பில் தேவகிருபையோ அல்லது மனித பிரயாசமோ என்பதைபபற்றியே தர்க்கித்துவந்தார்கள். (இன்னும் வரும்.) D. S.

## THE DEPRESSED CLASSES SOCIETY OF SOUTH INDIA.

## தென்னிந்திய ஒடுக்கப்பட்டவர்கள் சங்கம்.

சென்ற 1913-ஆ ஜனவரி 26உ தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்தில் நடந்தேறிய ஒடுக்கப்பட்டவர்கள் நான்காம் பொதுக்கூட்டத்தில் செய்யப்பட்ட மூன்றாம் தீர்மானத்திற்கு — விடுதலையான குடியிருப்பு (Free house site) வேண்டியவர்கள் அந்தந்த தாலூகாவிலுள்ள டிப்டி கலெக்டர்களுக்குத் தனித்தனியே மனு செய்துகொள்ளவேண்டியது.

**எட்டாம் தீர்மானம்:** — கிராம உத்தியோகஸ்தர்கள் ஒடுக்கப்பட்டவர்களைக் கட்டையில் (தொழுமரத்தில்) அடிக்கும் வழக்கத்தை நிறுத்தக் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

**ஒன்பதாம் தீர்மானம்:** — ஒடுக்கப்பட்டவர்கள் மாணுக்கர் தேறிவரும் பரீட்சைக்குத் தகுந்தவாறு உத்தியோகம் கிடைக்கும்படிக்குச் சர்க்கார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ஐந்தாம் பொதுஜனக் கூட்டம் அடுத்த ஜனவரி நடக்கும்.

இடம், காலம், சங்கத்து மற்ற விஷயங்களையும் அறிய விரும்புவோர் அடியிற்கண்ட காரியதரிசிகளுக்கு எழுதிக்கொள்ளலாம்.

நாகை, வடக்கு சமுத்திரக்கரைவீதி, A. சிவராமசாமி.
திருவள்ளூர் (செங்கல்பட்டு ஜில்லா), V. தாவீது.
சீர்காழி, தாதளங்கோவில்.......V. P. ஆனந்தன்.
சென்னை, புரசை...............V. D. ஸ்தேவான்.
பாபநாசம்......(Board School), A. சவரிமுத்து.
சீர்காழி.......................... K. கதிர்கோவில்.

B. K. சாமுவேல்,
பொதுக்காரியதரிசி.

## INSTRUCTIVE STORIES.

## சன்மார்க்க அதிசயக் கதைகள்.

மூன்றாவது கதை.

### கிணறு வெட்டினவர்கள் கதை.

ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் தன் பயிர்நிலத்தில் கிணறு வெட்ட ஆரம்பித்தான். அப்பொழுது அதில் வேலைசெய்யும்படி ஆறு மனிதர் வந்தார்கள். எஜமான் அந்த ஆறுபேருக்கும் நாளொன்றுக்கு 8 அணா கூலி கொடுப்பதாய்ப் பேசி வேலை கொடுத்தான். அதன் பிற்பாடு ஒரு கிறிஸ்தவனும் தனக்கு வேலை கொடுக்கும்படி எஜமானைக் கேட்டான். அப்படியே எஜமான் அப்பா உனக்கு நாளொன்றுக்கு 7 அணா கூலி கொடுப்பேன் என்றான். அப்படியே அந்தக் கிறிஸ்தவனும் சம்மதித்து வேலை செய்தான். இப்படி இவர்கள் வேலை செய்துகொண்டு வரும்பொழுது மற்ற ஆறு இந்து மனிதர்களும் இந்த ஏழைக்கிறிஸ்தவனைப் பரிகாசம் செய்கிறது வழக்கம். எப்படியென்றால் எங்கள் ஆறுபேருக்கும் எஜமான் 8 அணா கூலி கொடுக்கிறாரே, உனக்கு மாத்திரம் 7 அணா கொடுக்கிறார். ஏன் அப்படி? உங்கள் சாமி ஒரு அணா குறைத்துக் கொடுக்கச் சொல்லிவிட்டாரோ? வேலை எங்களைவிட நல்ல வேலை செய்கிறாயே; அந்தக் கடவுளைக் கும்பிடுகிறதா என்று அவனை நிந்திப்பார்கள். ஆனால் அந்த ஏழைக்கிறிஸ்தவன், அவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்காக விசனப்படாமல் நல்ல சந்தோஷத்தோடு அதற்கு மறுமொழியாக சிநேகிதர்களே, கடவுள் எனக்கு அளித்த சொற்ப கூலியால் கடவுளுடைய ஆசீர்வாதம் இருக்கிறபடியினால், நான் அதை மனச்சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆகையினால் நீங்கள் அதற்காக என்னை

நிந்திக்கவேண்டாம் என்று சந்தோஷத்தோடு அவர்களுக்கு உத்தரவு அளிப்பான்.

இப்படியாக இந்த ஏழுபேரும் அந்தக் கிணற்றை வெட்டிப் பாதிவேலை முடிந்துவிட்டது. ஒரு நாள் சமயத்தில் இவ்வேழு மனிதர்களும் வழக்கம்போல் தங்களுடைய கட்டுச்சாதத்தைப் பந்தல் மேல் கட்டிவிட்டுக் கிணற்றுக்குள்ளிறங்கி வேலை செய்தார்கள். வேலை முடிந்து மத்தியானம் சாப்பிடும்படியாக எல்லாரும் மேலே வந்தார்கள். அவரவர் கட்டுச்சாதத்தை எடுத்தார்கள். ஆனால் இந்த ஏழைக்கிறிஸ்தவன் கட்டுச்சாதத்தைப் பந்தலில் காணோம். அப்போது அந்த ஆறு மனிதர்களும் கிறிஸ்தவனைப்பார்த்து, என்னப்பா? எங்கள் கட்டுச்சாதமெல்லாம் இருக்கிறதே, உன் கட்டுச்சாதத்தை மாத்திரம் காணோமே. உங்கள் கடவுள் எடுத்துக்கொண்டு போய்விட்டாரா? அவசியமில்லை, நீ வா நாங்கள் ஒவ்வொரு பிடிச்சாதம் கொடுக்கிறோம் சாப்பிடு என்று பரிகாசம் செய்தார்கள். அப்பொழுது ஏழைக்கிறிஸ்தவன் நீங்கள் சொன்ன அன்புக்காக அதிக சந்தோஷம், அவசியமில்லை, நீங்கள் சாப்பிட்டுவிட்டு வேலையைச் செய்யுங்கள்; என் கட்டுச்சாதத்தை ஏதோ ஒரு நாய் திருடிக்கொண்டு போய்விட்டது; ஆனால் சாதம் கட்டிவந்த குட்டை புதுக்குட்டையானதினால் நாய் சாதத்தைத் தின்றுவிட்டு குட்டையைப் போட்டுவிடும். ஆகையினால் இந்த நாயின் தடத்தின்பேரில் போய்த் தேடிப் பார்த்து குட்டையை எடுத்துக்கொண்டு வருகிறேன் என்று அவர்களுக்கு ஆறுதலான வார்த்தையைச் சொல்லிவிட்டு, குட்டையைத் தேடி எடுக்கும்படி நாய்த் தடத்தின்பேரில் போய்விட்டான்.

இவ்வாறு மனிதர்களும் சாப்பிட்டுவிட்டு கிணற்றுக்குள்ளிறங்கி சுரங்கம் வைத்தார்கள். வைத்துவிட்டு ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றார்கள். அந்தச் சுரங்கம் வெடித்த அதிர்ச்சியினால் இவர்கள் தலைக்கு மேலாகயிருந்த மண்சுவர் இடிந்து விழுந்து இந்தமனிதர்களை மூடிக்கொண்டது. அவ்விடத்தில் உதவிசெய்ய வேறே மனிதர்கள் இல்லாதபடியினால் மண்ணில் மூழ்கி உயிர்விட்டார்கள். கொஞ்சநேரத்திற்குள்ளாக இந்த ஏழைக்கிறிஸ்தவன் தன் புதுக்குட்டையைக் கண்டுபிடித்து, கிணற்றண்டை வந்தான். வந்ததும் மற்ற மனிதர்களைத் தேடிப்பார்த்தான். அவர்களைக் காணவில்லை; ஆனால் கிணற்றில் ஒரு பாகம் இடிந்து விழுந்து போயிருந்தது. ஆனால் இம்மனிதர்கள் அதில் விழுந்து இறந்து இருப்பார்களென்று சந்தேகம் கொண்டு சமுசாரியின் வீட்டிற்கு ஓடிப்போய் நடந்த சங்கதியைச் சொல்லி சில மனிதர்களையும் கூட்டிக்கொண்டு கிணற்றண்டை வந்து விழுந்த மண் சுவர்களை வாரி வெளியே எடுத்தார்கள். அதில் அந்த ஆறு பிணங்களும் எடுக்கப்பட்டது. அப்பொழுதுதான் அந்த ஏழைக்கிறிஸ்தவன் தன் அன்புள்ள கடவுள் இந்தப் பரிதாபமான மரணத்தை விட்டுப் பிரித்து, தன்னை ஆதரித்துக் காப்பாற்றினதற்காக, துதி தோத்திரம் செலுத்தி, இன்னும் கடவுள் தன்னைக் காப்பாற்றினவிதத்தை மற்றவர்களுக்குச் சொல்லி, அவரை இன்னும் அதிக மதிகமாக மகிமைப்படுத்தினான். இதனால் நாம் அந்த ஏழைக்கிறிஸ்தவன் கடவுளிடத்தில் இவ்வளவாய்ப் பற்றுதலாயிருந்தான் என்று பார்க்கிறோம்.

இதனால் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது மனிதனை நிந்திக்கக்கூடாது, பரியாசம் செய்யக்கூடாது, கடவுளைத் தூஷிக்கக்கூடாது, அந்த ஏழைக்கிறிஸ்தவன் தேவபக்தியுள்ளவன்; கடவுளை நேசிக்கிறவன். ஆகையினால்தான் அவன் பொறுமையாயிருந்து கடவுளுடைய மகிமையைக் கண்டான். நாமும் அந்த ஏழைக்கிறிஸ்தவனைப்போல் எல்லாவிஷயத்திலும் பொறுமையாயிருந்து கடவுளுடைய மகிமையைக் கண்டடைவோமாக.

"உன் கண்களால்மாத்திரம் நீ அதைப் பார்த்து துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்."
(சங். 91. 8.) G. D.

## PRAISE TO GOD.

## போற்றித் திரு விருத்தம்.

(தொடர்ச்சி.)

35. கொடியரிற் கொடிய னான
 குணத்தினன் சவுலை யன்னான்
 அடியருக் கடிய ராக
 அழைத்தவா போற்றி நெஞ்சின்
 மிடிபொர நொந்து ளார்கண்
 மிடிசிதைத் தாண்டாய் போற்றி
 அடியனே னுயவாட் கொண்ட
 வண்ணலே போற்றி போற்றி.
36. ஆடியிற் றிகழ்க போலத்
 தறையுடன் மிச்சில் காண
 வாடியுற் றாந்தை யேற்ற
 வணவர் பெருமா போற்றி
 நீடுகெற். பாறை யேய்க்கு
 நெஞ்சினர் மூன்ன நின்ற
 பீடுடை யமர ரேறே
 பெற்றவா போற்றி போற்றி.
37. மறஞ்சுமந் துடையே முய்வான்
 மாஞ்சுமந் தண்ண னீதித்
 திறஞ்சுமந் தெம்மை மீட்ட
 தெய்வவா னிதியே போற்றி
 அறஞ்சுரந் தடைவி லார்க
 ளத்தனி யுந்தை பாதம்
 இறைஞ்சுபு வீடு நண்ண
 வேய்த்தவா போற்றி போற்றி.
38. கனலினுங் கிளர்வெம் பாந்தட்
 கடுவினுங் கொடிய நெஞ்சர்
 புனலெனப் பாந்து மொய்ப்பப்
 புலையரிற் புலைய னாகி
 யெனிலுறு புலைமை செற்ற
 வென்னொரு முதலே போற்றி
 உனையலா லுறுதி காணேன்
 உன்பதம் போற்றி போற்றி.
39. வாண்முகச் செவ்வி வாட
 மலர்விழி யிணைகண் மூட
 நாண்முதற் கமல மன்ன
 நளிர்கரத் தாணி துன்ன
 எண்மறை குருசி னூன்ற
 வெண்ணருங் குணத்தாய் போற்றி
 வீண்முத லான வென்னை
 விழைந்தவா போற்றி போற்றி.
40. தொழுந்தகை தணந்து பாரின்
 றுயர்துடைத் தளிப்பான் வேண்டி
 யழுந்திவெஞ் சிலுவை மீதி
 லார்வமோ டுயிரைத் தந்த
 கொழுந்திறற் கோமா போற்றி
 குழித்தமுத் தினங்கள் செல்வ
 எழுந்தமெய்ப் பரனே போற்றி
 யேசுவே போற்றி போற்றி.
41. நாலொரு பத்து நாட்க
 ணயப்புறு சீட ரானோர்
 பாலிருந் தவர்வி னைய
 பற்பல தெளித்து வானின்
 மேலிரும் புவனஞ் சேர்ந்து
 மேதினி தனிலெஞ் ஞான்று
 மூலமாய் நிற்பாய் போற்றி
 முத்தனே போற்றி போற்றி. M. P. A.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Dépôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.


## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச் சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால் தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிறுவைத் திருவாசகம் ... .. ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம் 2-ம் பதிப்பு .. ... ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2-ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபைச் சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அனுட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 8 |
| மாலைத் தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| ஜெபம் (லாஸரஸ் ஐயர் மொழிபெயர்த்தது) ... | 0 | 5 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க விழிப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணா, 7 அணா. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரசம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.


ஜூன்மீ பஞ்சாங்கம்.—

| வாரம். | ஜூன்மீ = வைகாசி—ஆனி. ◐ பௌர்ணமி, 7உ ● அமாவாசை, 23உ | | | | | வைகாசி—ஆனி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 32 | 7 | 14 |
| திங்க ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 1 | 8 | 15 |
| செவ் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 2 | 9 | 16 |
| புதன் ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 3 | 10 | ... |
| வியா ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 4 | 11 | ... |
| வெள் ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 5 | 12 | ... |
| சனி ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 6 | 13 | ... |

விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட ஒருத்தருக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒருத்தருக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF ... 1914 MADRAS.




# சத்திய தூதன்.

JULY, 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூலைமீ, 1914.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**கிறிஸ்தவ சர்வகலாசாலை.**—ஜப்பான் தேசத்தில் ஒரு கிறிஸ்தவ சர்வகலாசாலை ஸ்தாபிக்க ராக்பெல்லா என்கிற குபேரன் 200,000 பவுண் நன்கொடை செய்வதாய் மாட் பண்டிதருக்கு வாக்களித்திருக்கிறார்.

**19 நிமிஷத்தில் மோட்டார் வண்டி.**—மான்செஸ்டரில் 11 நிமிஷத்தில் ஒரு மோட்டார் வண்டி செய்யப்பட்டு, 19 நிமிஷத்துக்குள் வீதியில் சவாரிக்கு விடப்பட்டது. இவ்வளவு துரிதத்தில் இதுவரை மோட்டார்வண்டி செய்யப்பட்டதில்லை.

**நூதன மயக்க மருந்து.**—ஊரிதேன் என்று ஒருவித நூதன மயக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குளோரா பாரத்தைப்போல இருதயத் துடிப்புக்கு இது கெடுதிசெய்யாமல் மயக்கந் தருகிறதாம். ஆனால் 6 மணி நேரத்துக்குமாத்திரம் நீடித்திருக்கிறதாகக் கூறப்படுகிறது.

**சுரங்க விபத்துகள்.**—சீமை தேசத்தில் ஐக்கிய ராஜ்யங்களில் நேரிடும் சுரங்க விபத்துகளைவிடக் கோலாரில் அதிக விபத்து நேரிடுவதாகத் தெரிகிறது. சென்ற வருஷத்தில் பூமிக்குள்ளே 1,040 விபத்துகளும், மேலே 170 விபத்துகளும் நேரிட்டன. சமீபகாலத்திலும் விபத்து நேரிட்டிருக்கிறது.

**தூக்கப் புகை.**—சாக்ஸன் ஸ்திரீ யொருத்தி நூதனவகையான மருந்தொன்று செய்திருக்கிறாள். அது வெடிக்கையில் ஒருவித புகையுண்டாக்கி, ஒரு பெரிய இராணுவத்தை 7 அல்லது 8 மணி நேரம் தூங்கவைத்துவிடுகிறதாம். இது யுத்தத்தில் மிகவும் பிரயோஜனமாயிருக்குமென்பதற்குத் தடையில்லை.

**மிதக்கும் வீடுகள்.**—லண்டன் பட்டணத்தில் அநேகர் தேம்ஸ் நதிமேல் மிதக்கும் வீடுகளைக் கட்டிக்கொண்டு குடியிருக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது இப்படிப்பட்ட வீடுகளில் குடியிருப்போர் தொகை 3,000. தபால்காரர் இந்த மிதவை வீடுகளுக்குப் போய்க் கடிதங்களைக் கொடுத்து வருகிறார்கள்.

**50 வருஷம் போகும் கடிகாரம்.**—லிவர்பூல் நகரில் ஒரு கடிகாரம் வைத்திருக்கிறது. அது மின்சாரத்தால் இயக்கப்படுகிறது. 50 வருஷகாலம் சாவி கொடுக்காமலே போய்க்கொண்டிருக்குமென்று சொல்லப்படுகிறது. மணி காட்டுவதில் ஒரு வருஷத்தில் ஒரு நிமிஷம் வித்தியாசப்படுவது அரிதாயிருக்குமாம்.

**சீனப்பெண்கள்.**—சீனாவில் கலியாணத்துக்குரிய வயதுள்ள பெண்கள் தங்கள் விருப்பத்துக்கு இசைந்தபடி கணவர்களைத் தேடிக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். தங்கள் இஷ்டத்துக்கு மாறாய்ப் பெற்றோர் செய்ய முயன்றால், தற்கொலை செய்துகொள்ளுகிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கத்தார் ஒரு புதிய சட்டஞ்செய்ய யோசித்திருக்கிறார்கள்.

**பங்காளப் பெண்கள்.**—பங்காளக் கலியாணத்தில் பெண்கள் மாப்பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டிய வரசுல்கம் என்கிற கொடிய வழக்கத்தை முன்னிட்டுப் பல பெண்கள் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்திருக்கிறார்கள். சில மாதத்துக்குள் அநேக பெண்கள் இப்படிப்பட்ட தற்கொலை செய்துகொள்ள ஆசார சீர்திருத்த சங்கத்தார் இவ்வழக்கத்தை நிறுத்த முயற்சிசெய்து வருகிறார்கள்.

**ஆகாயரதத்தால் கைதியைப் பிடித்தது.**—ஒரு நீகிரோவ திருடன் மீயாமி பிளோர்டா என்கிற இடத்திலிருந்து கப்பலேறித் தப்பித்துக்கொண்டான். போலீஸ் உத்தியோகஸ்தன், ஆகாய ரதத்திலேறி அக்கப்பலைப் பின்தொடர்ந்து போய், 20 மைலுக் கப்பால் ரதத்தைக் கப்பலில் இறக்கிக் கப்பலிலிருந்த திருடனைக் கைதுசெய்து, அவனைத் தன்னோடே ஏற்றிப் பறந்துவந்து தண்டனைக் குட்படுத்தினான்.

**சாதுக்களின் சீர்திருத்தம்.**—காசியில் ஒரு சாது வந்திருக்கிறார். இவர் சாதுக்களுக்குள் சீர்திருத்தம் உண்டாகவேண்டுமென்று உபதேசம் செய்கிறார். மேல் இந்தியாவில் ஒரு முயற்சியுண்டாகி, சாதுக்களும் சந்நியாசிகளும் வேலையில்லாமல் பிச்சையெடுத்துப் பிழைப்பதைத் தடுக்க, யத்தனம் நடந்தேறி வருகிறது. இதற்காகப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் நவீன நாகரீக இந்த சாதுக்களின் சீர்திருத்தத்துக்கு மற்றவர்கள் இணங்கி வருவார்களா என்பது இனி தெரியவரும்.

**மனைவிகளின் விலை.**—சில அநாகரீக ஜாதியாருக்குள்ளே மனைவிகளை விலைகொடுத்து வாங்குகிற வழக்கமுண்டு. ஒரு காப்பிரி 4 முதல் 8 எருது கொடுத்து ஒரு மனைவியைக் கொள்ளுவான். உகாண்டா மனிதன் 20 துப்பாக்கி தோட்டாகொடுத்தால் போதும். ஆஸ்ட்ரேலியாவாசி பெண்ணின் நிறைக்கொத்த வெண்ணெய் கொடுப்பான். தார்த்தாரியன் ஒரு தீப்பெட்டி கொடுத்தால் ஒரு பெண் கிடைக்கும். நமது நாட்டில் வரசுல்கம், கன்னியாசுல்கம் என்று பணங்கொடுத்து மாப்பிள்ளை பெண்ணையும், பெண் மாப்பிள்ளையையும் வாங்கிவிடுகிறார்கள்.

**பிளேக் சட்டங்கள்.**—பிளேக் வியாதி பற்றினவர்களை அப்புறப்படுத்தியும், அந்நோய் பரவின இடங்களிலிருந்து பிரயாணஞ்செய்கிறவர்களுக்குப் பாஸ்போர்ட்டென்று சீட்டு கொடுத்துக் கவனித்தும்வருகிற ஏற்பாடு நல்லதாயினும், அந்தச் சட்டங்களை நிறைவேற்றுகிற உத்தியோகஸ்தருடைய வரம்புகடந்த நடத்தையால், மேற்படி சட்டங்கள் நன்மை செய்வதற்குப் பதில் தீமையே விளைத்தன. ஆகையால் அச்சட்டங்களை நீக்கிவிடுவதே நல்லதென்று பலகாலமாய் முறையிடப்

ஜூலைமீ பஞ்சாங்கம்—

| வாரம். | ஜூலைமீ = ஆனி—ஆடி. ⊙ பௌர்ணமி, 6உ ● அமாவாசை, 22உ | | | | | ஆனி—ஆடி | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 4 | 11 |
| திங்க ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 5 | 12 |
| செவ் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 6 | 13 |
| புதன் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 7 | 14 |
| வியா ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 1 | 8 | 15 |
| வெள் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 19 | 26 | 2 | 9 | 16 |
| சனி ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 3 | 10 | ... |

பட்டு வந்தது. இப்போது சர்க்கார் முழுச்சட்டத்தையும் ரத்துசெய்யாவிட்டாலும், பாஸ்போர்ட் ஒழுங்கை ரத்துசெய்துவிட்டார்கள். இனி பிரயாணிகள் பாஸ்போர்ட்டுக்குப் பதில் ஒரு விளம்பரக் கடிதம் பெறுவார்கள். அதை அவர்கள் சேருமிடத்தில் அதிகாரிகளுக்கு அனுப்பிவிடவேண்டியது. அதிகாரிகள் அந்தப் பிரயாணிக்கு வியாதி வருவதையும், வராததையும்பற்றிக் கவனித்துக் கொள்ளுவார்கள்.

**தென்னாப்பிரிக்காவில் இந்தியர் படுங் கஷ்டம்.**—இந்த உபத்திரவம் இன்னும் நீங்கவில்லை. 3 பவுண் வரியையும் மற்றும் கஷ்டங்களையும் நீக்கும்படி இந்தியர் பலமாய்ப் போராடிவருகிறார்கள். சிறைச்சாலைகளில் அடைபட்டிருக்கிற தலைவர்களும் மற்ற ஜனங்களும் அவ்விடத்திலேயே சிறுமையடைந்துகொண்டிருக்கிறார்கள். சுரங்கங்களையும் தோட்டங்களையும் சிறைக்கூடங்களாக்கி வேலைசெய்ய மறுக்கிற இந்தியரை அடியோதண்டமாயடித்தும் சுட்டும் வருகிற வழக்கத்தை போவர் கவர்ன்மெண்டார் நிறுத்தவில்லை. இந்தியாவிலும், இங்கிலாந்திலும் எழும்பின கூக்குரலையும் அக்கவர்ன்மெண்டார் கேளாமலே யிருக்கிறார்கள். நமது மாட்சிமைதங்கிய இராஜப்பிரதிநிதி சென்னையி லிருந்தபோது இந்திய பிரஜைகள் படுங்கஷ்டத்துக்கிரங்கி, போவர் கவர்ன்மெண்டார் அக்கிரம செய்கையை விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்றார். இப்போது அந்த கவர்ன்மெண்டார் ஒரு விசாரணை சபையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் இந்தியர் பக்கமிருந்து பேசக்கூடியவர் யாரும் அச்சபையிலில்லாதபடியால், இந்தியருக்கு அதிருப்தி யுண்டாயிருக்கிறது. இதற்கிடையில் இந்தியாவிலிருந்து பெருந்தொகையான பணம் அங்கு கஷ்டப்படுவோருக் கனுப்பப்பட்டுவருகிறது.

## MODES OF SALUTATION

## வந்தனம் செய்யும் விதங்கள்

சலாம் அல்லது வந்தனம் செய்கிற விதங்கள் பற்பல தேசங்களில் பலவிதங்களாயிருக்கிறது. ஒரு இடத்தில் மரியாதைக்குக் குறிப்பிக்கிற வந்தனத்தின் அடையாளம், இன்னொரு இடத்திற்குரிய வழக்கத்திற்கு முற்றிலும் விரோதமாய்க் காணப்படுகிறபடியால், சிரிப்புக்கும் ஆச்சரியத்திற்குங்காரணமாய் இருக்கிறது. ஐரோப்பியர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது கையைப்பிடித்து குலுக்குகிறது அவர்களுடைய வழக்கம். கையைப் பிடித்து குலுக்காத சமயங்களில் தலையைக் குனிந்து காட்டுவது வந்தனத்திற்கு அறிகுறியாய் இருக்கிறது. ஐரோப்பியர்கள் கையைப் பிடித்துக் குலுக்குகிறதற்கு ஒரு காரணம் உண்டு என்று சொல்லுகிறார்கள். அதாவது முன்காலத்தில் வெள்ளைக்காரர்கள் அற்பகாரியங்களுக்கெல்லாம் எரிச்சலடைந்து அதனாலே அவர்களுடைய கைகளில் கத்தியை ஒளித்துவைத்து ஒருவரை ஒருவர் குத்திக் கீழே தள்ளுவது அவர்களுடைய வழக்கமாம். ஆகையால் அவர்களுக்குக் கத்தியைப் பற்றிய சந்தேகம் அதிகமாயிருந்தபடியால் அதை ஒழிக்கவும், சிநேக சம்பந்தத்தை அநுசரிக்கவும், தங்கள் கையில் கத்தியைப் போன்ற ஆயுதங்கள் ஒன்றுமில்லை என்று காட்டும்படியாக கையைப் பிடித்து குலுக்குகிற வழக்கம் உண்டானதாம். இது உண்மையோ பொய்யோ எப்படியிருந்தாலும்சரி, ஐரோப்பியர்களுக்குள் கைபிடித்துக் குலுக்குகிறதுதான் வந்தனத்திற்கு அடையாளம் என்பது திட்டம். இதே வழக்கம் பற்பல இடங்களிலும் பரவி, இவ்வழக்கத்தை அநேகர் அநுசரித்து வருகிறார்கள்.

சீனதேசத்தார் ஒருவர்க்கொருவர் கைக்குலுக்குகிற வழக்கமில்லை. ஒரு சிநேகிதன், இன்னொரு சிநேகிதனைப் பார்த்தவுடன், அவனவன் தன் சொந்தக் கைகளை ஆட்டி முறுக்கித் தோள்களைத் தேய்த்துக்கொள்வார்கள். அதன்பிறகு வெகு மரியாதையுடன் ஒருவன் இன்னொருவனைப் பார்த்து, “சாப்பாடு சாப்பிட்டீரா” “எங்கே போகிறீர்” “உம்முடையவேலை என்ன?” “உம்முடைய வயதென்ன,” “உம்முடைய பாதரட்சையைத் தைக்க எவ்வளவு கொடுத்தீர்” என்று விசாரணை செய்வார்கள். இன்னொரு தேசத்தில் அதிகாரிகளைக் காணும்போது உடனே தொப்பியைக் கழற்றிவிட்டு, நாக்கை வெளியே நீட்டி,



கச்சேரியிலிருந்து சிறைச்சாலைக்குப் போகிற துக்க பாலம், அல்லது வெனிஸ் நகரம்.



சில அடிதூரம் பின்னுக்குப் போவார்கள். பர்மா தேசத்தில், ஒருவன் இன்னொருவனைப் பார்த்தவுடன் முகத்தை மூகருவார்கள். முகம் வாசனையுள்ளதாய் இருக்கிறதுபோலவும், அதற்காக அதை மூகருகிறதுபோலும் பாசாங்கு செய்வார்கள். ஆஸ்திரேலியாவிலுள்ள சுதேசிகள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது நாக்கை நீட்டிக்கொள்ளுவார்கள்.

தென் சமுத்திர தீவார் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, ஒரு ஜாடியில் தண்ணீரை எடுத்துத் தலையைச்சுற்றி எடுப்பதுதான் அவர்களுக்குள்ள மரியாதை. எஸ்கிமோ என்கிற ஜாதியாரில் ஒருவன் இன்னொருவனுடைய மூக்கைப் பிடித்து இழுப்பதுதான் அவர்களுக்குரிய ஆசாரம். பலஸ்தீன தேசத்திலுள்ள ஜனங்கள் வந்தனம் செய்கிற ஆசாரம் அது ஒருவிதமாய் இருக்கிறது, ஒருவன் வந்தனஞ் செய்தபிறகு இன்னொருவன் உடனே பதிலாகச் செய்யவேண்டும். அவர்களில் ஒருவனை ஒருவன் சந்திக்கும்போது, வீட்டுக் காரியங்களையெல்லாம் திட்டமாய் விசாரிக்கவேண்டுமாம். அப்படிக்கில்லாமல் வீட்டிலுள்ள ஒரு சிறு பிள்ளையைப்பற்றி விசாரியாமல் மறந்து விட்டுவிட்டால், அது அவர்களுக்கு அதிக அவமரியாதையாம். அற்பகாரியத்தையும் விடாமல் விசாரிப்பதுதான் அவர்களுக்குரிய மரியாதை. இரண்டு பேர் எதிர் எதிராகப் பாதையில்நடந்துவரும்போது, அரைமைல் தூரத்திற்கப்பா லிருந்துகொண்டே ஒருவரை ஒருவர் பார்த்து, தலை குனிந்து மரியாதை செய்துகொண்டே உரத்த சத்தமாய் வந்தனோபசார வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே சந்திப்பார்கள். அதன்பிறகு பலவிதமான கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுவார்கள். அதாவது:—“உன் சுகம் எப்படி? உன் தாயார் சுகம் எப்படி? உன் மனைவி சுகம் எப்படி? உன் வேலைக்காரி எப்படி? உன் வீட்டு மேற்பார்வைக்காரன் எப்படி? மாட்டுக்காரன் எப்படி? குதிரை சுகமா, மாடு சுகமா, ஆடு சுகமா?” இவ்விதமாய்ப் பலவித விசாரணை செய்து, வீட்டிலுள்ள கடைசி வேலைக்காரியையும் நாயையும் மறக்காமல் விசாரிப்பதுதான் அவர்களுடைய ஆசாரத்துக்குரிய மரியாதை. இவ்விதமாய் ஒருவன் விசாரித்தபிறகு அதற்குப் பதிலாய் ஒன்றையும் விடாமல் இன்னொருவன் விசாரிக்க வேண்டும்.

ஐரோப்பியருக்கு இத்தேசத்தார் வந்தனம் செய்யும் விதம் நூதனமாய்க் காணப்படுகிறதுபோலவே, இத்தேசத்தாருக்கும் ஐரோப்பியர் செய்கிற வந்தனம் நூதனமாய்த் தோன்றுகிறது.

ஒவ்வொரு தேசத்திலும் பாரம்பரியமாய் வருகிற வழக்கமாகிய வந்தனம் செய்கிற விதங்களுக்கு ஒரு தகுந்த கருத்திருக்கவேண்டும். ஆகையால் அவைகளிலுள்ள மூல சத்தியங்களை அறிந்துகொள்வது நம்முடைய மனதிற்கு மனோகரத்தைக் கொடுக்கக் கூடியது.

## RAMANUJA AND HIS MESSAGE TO INDIA

## ராமானுஜரும் அவரது தூதிகையும்

(தொடர்ச்சி.)

(1) **வடகலையார்.**—ஒரு குரங்குக்குட்டி தாயின் வயிற்றை தாவிக்கொண்டிருப்பதால் ரட்சிக்கப்படுகிறதுபோல், மனிதனும் கடவுளைப் பிடிப்பதாலே தன் சொந்தக் கிரியையைக் கண்டு அவர் கிருபையைத் தேடலாம் என்று வடகலையார் சொன்னதால் குரங்குப் பிடிக்காரர் என்ற காரணப்பெயரை இவர்களுக்குக் கொடுத்தார்கள்.

(2) **தென்கலையார்.**—ஒரு பூனை தன் குட்டியை அதன் பிரயாசமொன்றுமில்லாமல், தன் சொந்தப் பிரயாசத்தால் கவ்விக்கொண்டு போகிறதுபோலவே, ஒரு மனிதனுடைய ரக்ஷிப்பின்விஷயத்தில் தேவகிருபை வேண்டுமானால், அவரே அதைக் கொடுக்கவேண்டும். அப்படி அவர் கொடாவிடில் மனிதன் சொந்தக்கிரியையினாலே தேடமுடியாது. எல்லாம் அவர் பிரயாசந்தான் என்பதாக தென்கலையார் சாதித்ததால், பூனைப்பிடிக்காரரென்ற காரணப்பெயரை இவர்களுக்குக் கொடுத்தார்கள். இப்படியே இருவரும் இரண்டு எதிர் திக்குகளுக்குப் போய், உள்ளான சத்தியத்தை மறைந்துப்போட்டார்கள். நாமோ தேவகிருபையைத் தேடும்விஷயத்தில் தேவனுடைய பிரயாசமாத்திரமல்ல, இருவருடைய செய்கையும் வேண்டும். இப்படி மனிதனும் தேவனும் ஏகமாய் நடத்துவது அவசியம் என்று சமாசப்படுத்திப் போதித்துவருகிறோம்.

### ராமானுஜர் போதித்த போதனைகள்.

1. கடவுளுக்கு ஊழியஞ்செய்வதால்மாத்திரம் அவர் பாதம் சேரலாமென்றும்,

2. ஒருவனுடைய குறைவுகளையல்ல, அவனுடைய நிறைவானவைகளையே எப்பொழுதும் சொல்லவேண்டும் என்றும்,

3. ஒருவன் எவ்வளவு கீழான ஜாதியானாயிருந்தாலும், அவன் ஜாதியையல்ல அவனுடைய ஜீவியத்தையும் உன்னத போதனையையுமே கவனிக்க வேண்டும் என்றும்,

4. “நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொ லெனவேண்டாம்” என்று ஒளவை சொன்னதுபோல, பதில் நன்மையடையலாம் என்ற நோக்கத்தோடே ஒரு நன்மையைச் செய்யாமல், அது கடவுளுக்குச் செய்யும் கடமையென்றுணர்ந்து செய்யவேண்டுமென்றும் போதித்தார். ஆனால் அவர் முக்கியமாக இரண்டு கொள்கைகளைப் போதித்தார்.

(1) **பிரம்மம் சற்குணவஸ்து.** — சங்கராசாரியார், யாதவரிஷி முதலியவர்கள் போதித்த வேதாந்தக்கொள்கை என்னவெனில், சமஸ்தமும் பிரம்மம், மற்றதெல்லாம் மாயை. பிரம்மம் யாதொரு குணத்தால் வரையறுக்கப்பட்டதல்ல. அது நிர்க்குணவஸ்து. யாதொரு செய்கையும் உணர்ச்சியும் அதற்குக் கிடையாது. ஆளுமல்ல, பொருளுமல்ல, நான், நீ என்ற வார்த்தைகளால் அழைக்கப்படத்தக்கதுமல்ல என்றார்கள். இப்படிப் போதித்த வேதாந்தம் இந்தியா தேசத்திற்குக் கொண்டுவந்த தீமைகள் எவ்வளவு ஏராளம். பாருங்கள்; இப்பேர்ப்பட்ட ஒரு தெய்வம் இந்தியாவுக்கு என்ன நன்மை செய்யக்கூடும். பாவத்தில் கஷ்டப்பட்டு தவித்துக்கொண்டிருக்கிற மனிதனுக்கு வல்லமை கொடுக்கக்கூடுமோ? முடியாதே. ஆனால் ராமானுஜரோ பிரம்மம், நிர்க்குணமல்ல. அவர் அறியப்படாதவராய் தூரத்திலிருக்கிறவரல்ல, அவர் சற்குணர். அவர் மனிதனால் அறியப்பட்டவரும் அவனுக்கு சமீபமாயுள்ளவருமாயிருக்கிறார், அவர் நமக்குப் பரமபிதா. நாம் அவரது பிள்ளைகள். பெலவீனங்களில் நமக்குப் பெலனையுங் கொடுப்பார் என்பதாய்ப் போதித்தார்.

(2) **தனித்தனி சுயாதீனம்.** — வேதாந்தம் போதிப்பது மனிதனும் ஆத்துமாவும் ஒன்றே. பிரத்தியேகமான சித்தம் மனிதனுக்குக் கிடையாது. அவன் குயவன் கையிலுள்ள களிமண்ணைப்போல பிரம்மத்தின் சித்தத்துக்குட்பட்டவன். இப்படி வேதாந்தம் போதித்ததால் மனிதன் சுயாதீனனாயிருப்பதெப்படி? ஆனால் மனிதன் அடிமையல்ல, அவனுக்கு விசேஷித்த சுயாதீன சித்தமுண்டு என்பதாய் ராமானுஜர் போதித்து, இம்மேலான சிலாக்கியத்தை மதித்து மேன்மைப்படுத்திவந்தார்.

இவர் போதிக்கிற இவ்வுன்னத போதனையைச் சற்று கவனித்துப் பாருங்கள். கிறிஸ்தவ மதத்திலுள்ள அருமையான இப்போதகத்தை ஒரு அளவாக இவர் எடுத்துச் சொல்லுகிறார். கடவுள் சர்வஞானமும், அன்பும் மனிதர்பேரில் கிருபையுமுள்ளவர். பிள்ளைகளாகிய நமக்கு அவர் பரமபிதாவாயிருக்கிறாரென்று நமது வேதம் உரைக்கிறதல்லவோ. இவ்வுன்னத உபதேசத்தின் மூலமாகவே மனிதன் தேவனண்டை பிரவேசிக்கலாம். 1,000 வருஷங்களுக்குமுன் இந்தியாதேசம் அறிவீனத்திலும், அந்தகாரத்திலும் நிலைத்திருந்தது. மனிதன் கடவுளண்டை போக முடியாது. தற்காலத்திலோ, கிறிஸ்தவர்களாகிய நாம் சொல்வதுபோல, இந்துக்களும் தேவன் சற்குணர், மனிதன் அவரைக் காணலாம் என்பதாய்ச் சொல்லிவருகிறார்கள். கிறிஸ்துமத உபதேசங்களை வியந்து, மேன்மைப்படுத்தி, அதை ஏற்றுக்கொள்ள ஆசையாயிருக்கிற அநேக கல்விமான்களாகிய இந்துக்களுக்கு இவரது உபதேசமே ஒரு பாலத்தைப்போலிருக்கிறது. அவரது போதகம் மேன்மையுள்ளதாயிருந்தாலும், அவைகளின் குறைவுகளைப் பூரணப்படுத்துவது கிறிஸ்துமார்க்கந்தான். ஆகையால் நமது சத்தியவேதம் இந்துமதத்திலில்லாத அநேக மேலான சத்தியங்களைப் போதிப்பதோடு அதின் குறைவானவைகளைப் பூரணப்படுத்தி வருவதால், அதை அருளிச்செய்த ஆண்டவருக்கே சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. இப்படியே ராமானுஜர் இத்தேசத்திலே எல்லா ரிஷிகளுக்குள்ளும் மேன்மையுள்ளவராகக் காணப்பட்டு, கிறிஸ்துமதம் போதிப்பதுபோல கடவுள் சற்குணர், மனிதன் சுயாதீனன் என்ற மேலான போதகத்தை ஒருமட்டாகப் போதித்து வந்திருப்பதால், இப்போதனைகளைக் கவனித்து அதின்படி நடக்க இந்துக்கள் முயல்வார்களானால், மெய்யாகவே இதைவிட கிறிஸ்துமத போதகமே மேன்மையானதென்று கண்டு அவரிடம் ஓடிவருவார்கள். ஆகையால் இவர்கள் இப்போதனைகளைத் தெளிவுறக் கண்டு அதை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகப் பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்க, நமது பரமநாயகனிடம் தினமும் பரிந்துபேசிப் பிரார்த்தித்து வருவோமாக. D. S.

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(மேலீ தொடர்ச்சி.)

4. **தானதருமங்கள்.**—“ஜகாத்” என்னும் வார்த்தையின் பதத்திற்கு “சுத்திகரித்தல்” என்பது பொருள். ஏழைகளுக்கு வழங்கி ஆஸ்தியை அநுபவித்தால் மீதியெல்லாம் சுத்தமாய்ப் போகுமென்ற கொள்கைக்கு இசைய, ஏற்பாட்டின்படியான தானதர்மங்களுக்கு “ஜகாத்” எனப் பேர்வந்தது. தர்மத்திற்காக வழக்கமாய்ப் பிரித்து வைக்கவேண்டிய பாகம் வருமானத்தில் நாற்பதிலொன்று. ஏழைகள், இல்லகமற்றோர், வரிதண்டுவோர், அடிமைகள், கடன்காரர், இஸ்லாம்மதப் போர்புரிவோர், பிரயாணிகள் முதலான ஏழுவகையாருக்கும் இதை ஈந்துவிடலாம். இவை யாவும் தர்மமே!

5. **ஸ்தலயாத்திரை.**—மெக்கா ஸ்தலயாத்திரையை ஹஜ் என்றழைப்பார்கள். இது இஸ்லாம் சமயத்துக்கு ஒரு பலத்த தூண். தவிரவும் இஸ்லாமியரை ஒன்றுசேர்க்கும் பலத்த கட்டும், இஸ்லாம்மார்க்கப் பிரபல்யத்திற்கு ஓர் முக்கிய சாதனமும் இதுவே. ஸ்தலயாத்திரை செய்யும் காலத்தில் உலகத்தின் நானுபாகங்களிலிருந்தும் அறுபதினாயிரம், தொண்ணூறாயிரம் யாத்திரிகர் வருஷந்தோறும் மெக்காவுக்குப் போகிறார்கள். பிராயமான மகம்மதியரில் ஸ்திதியுள்ள புருஷர் ஸ்திரீகள் யாவரும் மெக்காவுக்கு யாத்திரை போகவேண்டுமென்பது சட்டம்.

மேற்காட்டிய அனுஷ்டானங்கள் தவிர, விருத்தசேதனமென்னும் ஓர் சடங்குமுண்டு. இந்த அனுஷ்டானம் கொரானில் ஒருதடவைகூடச் சொல்லப்படாவிடினும், இதுவே இஸ்லாமில் சேரும் ஒவ்வொரு ஆணுமமுதலாவதாக அனுசரிக்கவேண்டிய நியமம். சுன்னத்துச் செய்யத் தவறுதல் மார்க்கத்தை மறுதலிக்கிறதற்குச் சமானமாகப் பாவிக்கப்படும்.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

TRADE MARK.



TRADE MARK.

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்




குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி




**கையினால் தொடாமல் செய்யப்பட்டது.**

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

வருஷசந்தா முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.


Registered No. M. 442.




# சத்திய தூதன்.

AUGUST, 1914. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. ஆகஸ்ற்றுமீ, 1914.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**டென்மார்க்கரசன்.**—இவ்வரசன் மிக்க நெட்டையன், 6 அடி 4 அங்குலமுயரம் படைத்தவர்.

**லார்ட் பென்ட்லண்ட்.**—நமது கவர்னரவர்கள் சென்றமீ பல்லாரி முதலான ஊர்களைச் சந்தித்த பின்பு, சென்னைக்கு வந்து போனார்.

**குதிரைமாம்சம்.**—தேகத்தில் உதிரக்குறைவுக்கும், க்ஷயரோகத்துக்கும் குதிரைமாம்சம் மிக்கப் பிரயோஜனமான உணவென்று அநேக வைத்தியர் சொல்லுகிறார்கள்

**பெரிய நாடகமேடை.**—உலகத்திலெல்லாம் பெரிய நாடகமேடை பாரிஸ்பட்டணத்தி லிருக்கிறது. அது 200 அடி நீளமும், 100 அடி அகலமும், 80 அடி உயரமுமுள்ளது.

**ஆஸ்திரியாவில் ராஜகொலை.**—ஆஸ்திரியா ராஜ்யத்தின் இளவரசனையும் அவர் பெருமாட்டியையும் ஒரு சர்வியாமாணாக்கன் குண்டுசுட்டுக் கொன்றுவிட்டான். இதனால் யூரோப்பு முழுவதும் அதிக துக்கமுண்டாயிருக்கிறது.

**ஹோம் ரூல்.**—இந்தப் பேர்கொண்டு ஐர்லாந்துக்குச் சொந்த பார்லிமெந்து ஒன்று உண்டாக்க இங்கிலாந்து கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இது ஒரு கட்சியாருக்குப் பிரியமேயில்லை. எப்படி முடியுமோ? இப்பொழுது சொல்ல முடியாது.

**ஆத்துமாவின் எடை.**—ஒரு டாக்டர் ஒருவன் சாகுமுன்னும், செத்த உடனேயும் அவனைத் தராசில் நிறுத்துப் பார்த்து, ஆத்துமா முக்கால் அவுன்ஸ் எடையுள்ளதென்று எண்ணினானாம். இது சுத்த அபத்தம். ஆத்துமா ஆவியானதால், அது நிறுக்கப்படாது; அதற்கு எடையும் கிடையாது.

**ஸ்திரீவோட்டு.**—ஸ்திரீகளுக்கும் வோட்டு வேண்டுமென்போரிற் சிலர் இங்கிலாந்தில் அநேக அக்கிரமங்கள் நடத்திவருகிறார்கள். படங்களைக் கெடுத்தும் கோவில் முதலான கட்டிடங்களைச் சுட்டும் அழித்தும் வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட பாதகர்களைக் கப்பலேற்றிக் கடுங்காவலில் வைக்க வேண்டும்.

**ஒரு யூதன் செய்த அறிக்கை.**—டிஹிரான் யூதன் ஒருவன், "நீங்கள் எங்கள் பாஷையிலே எங்களுக்கு பைபில் கொடுத்து, புது உயிர்வரச் செய்தீர்கள். நான் அதை முழுக்க வாசித்து, இப்பொழுது புதிய ஏற்பாட்டை வாசித்து வருகிறேன். வர்த்தகத்தில் அநேகரை வஞ்சித்த நான், இனி யதார்த்தவாதியாக நடக்கத் தீர்மானித்திருக்கிறேன்" என்றானாம். தமிழர்களும் பைபிலைக் கொஞ்சம் வாசித்துப் பார்க்கவேண்டும்.

**ரெயில்வண்டி வேகம்.**—ரெயில்வண்டி சாதாரணமாக வெகு விரைவாக ஓடினாலும், லோக்கல் எண்ணப்படுகிற வண்டித்தொடர்கள் கட்டைவண்டியிலும் கேவலமாகச் செல்லுகின்றன. இதற்குத் தக்க காரணங் கிடையாது. உதாரணமாக, எழும்பூரிலிருந்து சைதாப்பேட்டைக்குள்ள நாலு மைல் தூரத்தைக் கடக்க, ஒரு மணிநேரம் பிடிக்கிறதாம்! இது என்ன வெட்கம். இதைவிடக் கால்நடையாய்ப் போய்விடலாம்!

**சென்னையில் ஏற்றுமதி இறக்குமதி.**—சென்ற 1913–14–இல் சென்னையில் இறக்குமதி ஏறக்குறைய 17 கோடியும், ஏற்றுமதி ஏறக்குறைய 27 கோடியுமாம். இறக்குமதியைவிட ஏற்றுமதி மிச்சமானால்தான் நாட்டுக்கு லாபம். அதனால் சென்னை ராஜதானிக்கு 10 கோடி கூடிவந்ததென்னலாம். இறக்குமதியான இங்கிலீஷ் சாராயம் முதலியன 19 லட்சத்திற்கு அதிகமானவை. இது கடந்த வருஷத்துக்குக் கிட்டத்தட்ட 2 லட்சம் மிச்சமாம்.

**தூரத்திலிருந்து பார்த்தல்.**—இப்பொழுது டெலிபோன் மூலமாய் தூரத்திலிருந்து இருவர் சம்பாஷிக்கலாம். இது சென்னையில் சாதாரணமாய் நடந்துவருகிறது. இது யாவருக்கும் தெரிந்த விஷயம். இனித் தூரத்திலிருந்துகொண்டே நடக்கிற காரியங்களைப் பார்க்கிற கருவியொன்று கண்டுபிடித்திருக்கிறது. ஒரு தளகர்த்தன் தன் இடத்திலிருந்துகொண்டு தன் சேனைகள் தூரத்தில் யுத்தகளத்தில் நடத்துகிற போர்த்தொழிலைக் கண்ணாரக் காணலாம்.

**சென்னையில் பெண்களின் உயர்தரப் பாடசாலை.**—சிலகாலமாய் பி. ஏ. முதலான பரீட்சைகளுக்கு வாசிக்கிற பெண்கள் ஆண்பாலாரோடு ஒரே இடத்தில் வாசிக்க நேரிட்டதால், சென்னைக் கவர்ன்மெண்டார் பெண்பாலாருக்கென்று சமுத்திரக்கரையோரத்தில் ஒரு உயர்தரப் பாடசாலை அல்லது காலேஜ் ஸ்தாபித்திருக்கிறார்கள். அதிலே இப்பொழுது 40 பெண்கள் சேர்ந்திருக்கிறார்கள். தற்காலம் முதல்வகுப்பு மாத்திரமுண்டு. வருகிற ஜூலைமீ இரண்டாம்வகுப்பு ஏற்படும்.

**பெண் சாமர்த்தியம்.**—செண்ட் பீற்றர் புரியில் 18 பிராயமுள்ள பெண்மாணாக்கி ஒருத்தி சர்க்காருக்கு விரோதமாகக் கலகஞ்செய்தாளென்று கைதுசெய்யப்பட்டு, டாணாவில் அடைத்துவைக்கப்பட்டாள். அவள் டாணாவில் தனியே யிருக்கையில் அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனுடைய கால்சட்டை, தொப்பி, மேல்சட்டை யாவுமெடுத்து உடுத்திக்கொண்டு அவனுடைய கத்தியையுமெடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு மகா தைரியத்தோடு, மற்றவர்கள் போலீஸ் உத்தியோகஸ்தன்தான் வருகிறானென்றெண்ணும்படி வெளியே வந்துவிட்டாள். ஸ்டேஷன் வாசலில் வரும்போது அவளுடைய காலிலிருந்த சப்பாத்தைக் கண்டு அங்கிருந்த போலீஸ்வீரன் சமுசயங்கொண்டு அவளை நிறுத்தி வினவ, அவளுடைய திருட்டுத்தனம் வெளிப்பட்டது. மறுபடியும் கைதுசெய்யப்பட்டாள்.

**ஆகஸ்ற்றுமீ பஞ்சாங்கம்—**

| வாரம். | ஆகஸ்ற்றுமீ = ஆடி—ஆவணி. ⊙ பௌர்ணமி, 4உ ● அமாவாசை, 21உ | | | | | | ஆடி—ஆவணி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 18 | 25 | 1 | 8 | 15 |
| திங்க ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 19 | 26 | 2 | 9 | 16 |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 20 | 27 | 3 | 10 | ... |
| புதன் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 21 | 28 | 4 | 11 | ... |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 22 | 29 | 5 | 12 | ... |
| வெள் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 23 | 30 | 6 | 13 | ... |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 1 | 24 | 31 | 7 | 14 | ... |

**லேடி ஹார்டிங் மரணம்.** — நமது கவர்னர் ஜெனரல் அவர்களின் பத்தினியார் லண்டனுக்குப் போயிருந்த சமயத்தில் நோய்கண்டு சடுதியாய் இறந்துபோனார்கள். இதனால் பிரதிநிதி யவர்களுக்கும், இந்தியா முழுவதுக்கும் பெருந்துயரமுண்டாயிருக்கிறது. லேடி ஹார்டிங் பெருமாட்டி, நாயகனுக்குப் பேராபத்துண்டான தருணத்தில் அவருக்குத் தைரியஞ்சொல்லி அவரை இராப்பகலாய்க் காத்து சவுக்கியப்படுத்தினார்கள். இந்திய ஸ்திரீகளிடத்தில் அதிக அன்புவைத்து அவர்களுக்காகப் பல பிரயத்தனங்கள் செய்தார்கள். உதாரணமாக, டில்லியில் ஒரு பெண்பாலார் வைத்தியகலாசாலையும், அவர்களுக்கென்று ஒரு வைத்திய சேவையும் ஏற்படுத்தினதுமன்றி, ஜூன்மீ 20உ தோறும் இந்திய பிள்ளைகள் உற்சவம் ஒன்று தன் நாயகன் ஜனனநாளின் ஞாபகமாக ஸ்தாபித்தார்கள். சென்ற வருஷம் சென்னைக்குவந்து, இங்குள்ள ஸ்திரீஜனங்களைக் கண்டு வெகுவான அன்பு பாராட்டினார்கள். நாயகனையும், இரண்டு குமாரரையும் ஒரு குமாரத்தியையும் விட்டுச் சென்றது மிகப் பரிதாபமே. ஆகிலும் ஐயன் அளந்தபடி அவர்கள் காலம் வந்தது. இனி ஹார்டிங்பிரபு என்னசெய்வாரோ, இங்கேயிருப்பாரோ, இங்கிலாந்துக்குப் போய்விடுவாரோ, தெரியமாட்டாது. தக்கவேளைதான் துக்கத்துக்குப் பரம ஔஷதம். கடவுள் அவரையும் அவர் மக்களையும் இச்சமயம் ஆற்றித் தேற்றிக் காத்தருள்வாராக.



மிலான் ஆலயம்.

## THE ABORIGINES OF AMERICA

## அமெரிக்காவின் பூர்வ குடிகள்

அமெரிக்கா கண்டத்திலிருந்து வந்திருக்கும் மிஷனெரிமார்கள், தங்கள் சொந்த நாடுகளில் எந்தப் பாஷைகளைப் பேசுகிறார்கள் என்று இந்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் சில பிள்ளைகள் கேட்பதுண்டு. அவர்கள் அப்படி நினைப்பதற்கு ஒரு காரணம் உண்டு. அதாவது அமெரிக்கா தேசத்திலிருந்து வந்திருக்கிற மிஷனெரிமார் தங்கள் சொந்த நாட்டிற்குரிய சுயபாஷை வேறே இருக்கவேண்டும். இங்கிலீஷ்பாஷை அவர்கள் கற்றுக்கொண்ட பாஷை என்றும், இந்தியர்கள் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொண்டு பேசுகிறதுபோலவே, அமெரிக்கா தேசத்து மிஷனெரிமார்களும் அப்படியே பேசுகிறார்கள் என்று அப்பிள்ளைகள் நினைக்கிறார்கள். அமெரிக்கா தேசத்திலிருக்கிற வெள்ளைக்காரர் ஐரோப்பாவிலிருந்து அத்தேசத்தில் குடி ஏறினவர்களென்றும், அவர்கள் அந்த தேசத்துக்குப்போகும்போது தங்களுடைய சொந்தமான இங்கிலீஷ்பாஷையைத் தங்களோடு கொண்டு போனார்கள் என்பதைப்பற்றி ஒருவேளை அப்பிள்ளைகளுக்குத் தெரியாதிருக்கலாம். அமெரிக்காவில் இங்கிலீஷ்பாஷைதான் சர்வஜன பாஷையாயிருக்கிறது. 1492-ம் வருஷத்தில் இந்தப் புதிய உலகத்தை கிறிஸ்டாப்பர் கொலம்பஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அத்தேசத்தில் ஒருவித ஜாதியார் பூர்வீக குடிகளாய் இருந்தார்கள். அவர்கள் பற்பல விஷயங்களிலும், நடை உடை பாவனைகளில் வித்தியாசமுள்ளவர்களாய்க் காணப்பட்டார்கள். அவர்கள் கறுப்பு நிறமும், கறுப்பு மயிரும், உயரமாயும், நல்ல வடிவமும், பலசாலிகளுமாய் இருந்தார்கள். விசேஷமாய் அவர்கள் வேட்டையாடுவதும் மீன் பிடிப்பதுமே அவர்களுடைய ஜீவனத்தொழிலாய் இருந்தது அங்குள்ள பற்பல ஜாதியார் ஒருவரோடொருவர் யுத்தம் செய்வது சகஜமாய் இருந்தது. அவர்கள் வாசஞ்செய்து வந்ததேசம் காடுகளும், புதர்களும் நிறைந்ததாயிருந்தது. அத்தேசத்து ஜனங்களை இக்தியர்கள் என்று ஐரோப்பியர்களால் அழைக்கப்பட்டார்கள்.

அடர்த்தியும் விஸ்தாரமுமான அந்தக் காட்டில் வழியைக் கண்டுபிடித்துப் போவது கூடாதகாரியம். ஆனால், அங்கிருந்த இந்தியர்கள் காடுகளுக்குள் நுழைந்து, சரியான திக்குகளைக் கண்டுபிடித்து வழியில் நடப்பதில் மகா சாமர்த்தியமுள்ளவர்கள். காட்டுக்குள் நுழைந்தவுடனே, ஒரு மரம் உடைந்து சாய்ந்திருந்தாலும், சில இலைகள் கீழே விழுந்திருந்தாலும் இப்படிப்பட்ட அடையாளங்களைக் கொண்டு அங்கே என்னகாரியம் நடந்திருக்கும், யார் அல்லது என்ன மிருகம் அப்பக்கம் சென்றிருக்கக்கூடும் என்கிற காரியங்களைக் கண்டுபிடிப்பதில் மகா விவேகமுள்ளவர்கள். அதோடுகூட அவர்கள் ஆகாயத்தைப் பார்த்து சில அடையாளங்கள் மூலமாய் சில உறுதியான காரியங்களை அவர்களால் சொல்லமுடியும். புசல்காற்று அடிப்பதும், அடிக்காததும் நல்ல மழை பெய்வதும், பெய்யாததும் இவ்வித காரியங்களை முன்னதாகவே அறிந்து சொல்லுவார்கள். காடுகளைப்பற்றிச் சொல்ல அவர்களுக்கு விஸ்தாரமான அறிவு உண்டு. அவர்கள் ஒருவிதமான குடிசையைப் போன்ற கூடாரவாசிகள். புருஷர்கள் வேட்டையாடுவதிலும், மீன் பிடிப்பதிலும், எதிரிகளோடு யுத்தம் செய்வதுமாகிய இப்படிப்பட்ட வேலைகளிலேயே தங்கள் காலங்களைக் கழிப்பார்கள். புருஷர்கள் இவ்வித வேலைகளைச் செய்யும்போது, ஸ்திரீகள் வீட்டுவேலையைச் செய்வதும், வயலில் வேலையிருக்குமானால் அதைச் செய்வதும், பிள்ளை பார்த்துக்கொள்ளுவதுமான பெரிய பளுவான சுமைகளை அவர்கள் சுமக்கவேண்டும்.

அதிக விஸ்தாரம்பொருந்திய அமெரிக்கா தேசத்திலுள்ள பூர்வ குடிகள் பற்பல வகுப்பாராய் இருந்தார்கள். அவர்கள் ஒரேவிதமான பாஷையும் வழக்கங்களையு முடையவர்களாயிராமல், இந்தியாவில் எப்படி பற்பல பாஷைகளை யுடையவர்களாய் இருக்கிறார்களோ, அப்படியே அவ்விடத்திலும் இருந்தது. ஆனால் இந்தியாவில் பற்பல பாஷைகளைப் பேசினாலும் அதற்குரிய எழுத்துகளும் புஸ்தகங்களு முடையவர்களா யிருக்கிறதுபோல, அத்தேசத்தாருக்கில்லை. அவர்கள் சில படங்கள் மூலமாயும், அடையாளங்கள் மூலமாயும் பூர்வீக சரித்திரங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இதன் மூலமாய் வைக்கப்பட்டிருக்கிற பூர்வ சங்கதியை தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் அறிந்துகொள்ளும்படி செய்வார்கள். மற்றபடி எழுத்து வாசனை யறியாதவர்களானபடியால், 'புஸ்தகங்களின் மூலமாய் பூர்வ சரித்திரங்களைக் காப்பாற்ற அவர்களால் முடியாது. அத்தேசத்திலிருந்த சில ஜாதியார் கூடை முடைவதிலும், கம்பளி நெய்வதிலும் மகா சாதுரியமுள்ளவர்கள். இவ்வித வேலைகளை வர்ணங்கள் தீட்டி, மகா சித்திரத்துடன் செய்வார்கள். கூடை, கம்பளி முதலானவைகளைச் செய்யும்போது, அதனோடே சில கருத்துகளடங்கிய சித்திரங்களையும், அடையாளங்களையும் வைப்பார்கள். இதைப் பார்க்கும்போதெல்லாம், ஒருவன் அதன் மூலமாய், அதைச் செய்தவனுடைய மனதையும் யோசனையையும் வாசித்துச் சொல்லலாம்.

இந்த ஜனங்கள் அல்லது இவர்களுடைய சந்ததியாரை, அமெரிக்கா தேசத்தின் சில பாகத்தில் இன்னும் பார்க்கலாம். ஆனால் முற்காலத்தில் விஸ்தாரமாய் ஜீவித்த ஜனங்கள் எல்லாரும் கண்ணுக்குக் கிடைக்காமலேயே போய்விட்டார்கள். அத்தேசத்தில் வெள்ளைக்காரர் நிறைந்திருக்கிறார்கள். அப்படிபட்டவர்களில் அநேகர்கூட இப்படிப்பட்ட இந்தியரைப் பார்த்தது கிடையாது. கடந்துபோன காலங்களில் இச்சாதியார் சர்க்காருக்கு அதிக தொந்தரவைக் கொடுத்துவந்தார்கள். பலமுறையும் அவர்களை எதிர்த்து யுத்தம்செய்து, வெள்ளைக்காரர்களுடைய பொருட்களை கொள்ளையடிப்பார்கள். இச்சாதியாருக்கு ஒரு விசேஷித்த ஆசை யிருந்தது. அது என்னவென்றால், அவர்கள் தங்களால் கூடுமானவரையிலும் வெள்ளைக்காரரைக் கொன்று, தலையை உரித்து மண்டை ஓட்டை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான். இந்த ஜாதியாருக்குக் கடவுளைப்பற்றிய ஒரு மார்க்கமும் இருந்தது. ஆனால் அம்மார்க்கம் சத்துருக்களை நேசிக்கும்படி போதிக்கிறதில்லை. அப்படி யிருந்தாலும் அச்சாதியாருக்குள்ளே சில நல்ல குணமுள்ளவர்களும் நல்ல மனதுள்ளவர்களும் இருந்தார்கள்.

இச்சாதியாருக்குச் சர்க்கார் சில நிலங்களை தேசத்துக்குப் புறம்பே கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தில் அவர்கள் பயிரிடும் சமுசாரிகளாக ஜீவிக்கிறார்கள். சிலர் சிறந்த கல்வி தேர்ச்சியடைந்து வருகிறார்கள். அவர்களுடைய வாலிபர்களும் கல்வி தேர்ச்சியடைந்து முன்னேறத்தக்க நிலைமைக்கு வருகிறார்கள். அவர்கள் கிறிஸ்துமார்க்கப் போதனைகளைக் கேட்டு, அம்மார்க்கத்தைத் தழுவியும் வருகிறார்கள். வெகு சீக்கிரத்தில் அவர்கள் நகரவாசிகளாகும் சிலாக்கியத்தையும் பாத்தியத்தையும் அடைவார்கள். இச்சரித்திரம் மனோகரத்தைக் கொடுக்கக் கூடியது இவர்கள் எப்படி இத்தேசத்துக்கு வந்தவர்கள் என்கிற குறிப்பு ஒன்றும் கிடையாது. பாரம்பரையாய் சொல்லப்படுகிற சில காரியங்களும், படங்களும், அடையாளங்களும் தவிர வேறொன்றும் கிடையாது.



## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

நான்காவது கதை.

(ஜூன்மீ தொடர்ச்சி.)

லண்டன் பட்டணத்தில் ஒரு பெரிய கப்பல் வர்த்தகர் இருந்தார். அவரிடத்தில் வாஷிங்டன் என்ற ஒரு ஏழைப் பையன் வேலைசெய்துகொண்டிருந்தான். ஆனால் அந்தப் பையனுக்கு திடீரென ஒரு எண்ணம் உண்டானது; அதென்னவென்றால், அவன் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தை லண்டன் பட்டணமெல்லாம் தங்கம், லண்டன் தெருக்களெல்லாம் தங்கம், லண்டன் வீதியெல்லாம் தங்கம் என்று சொல்லி எப்போதும் புலம்பிக்கொண்டே யிருந்தான். அப்பொழுது அதைக் கேட்கிறவர்கள் எல்லாரும் இவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறாப்போல் தெரிகிறது. பட்டணமெல்லாம், தங்கம், தங்கம் என்று சொல்லுகிறானே, இவனொரு பைத்தியக்காரனென்று அவனைப் பரியாசம்பண்ணுவார்கள். ஆனாலும் அவன் அந்த வார்த்தைகளை விடாமல் அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பான். இவனுடைய எஜமான் கப்பல் வர்த்தகன், அடிக்கடி வெளிதேசங்களுக்கு தன் கப்பலில் விநோதமான சரக்குகளை ஏற்றி, மற்ற தேசங்களுக்குக் கொண்டுபோய் விற்பனை செய்வது வழக்கம். ஆனால் அவர் வெளிதேசத்திற்குப் புறப்படும்முன் தன்னுடைய அருமையான பிள்ளைகளிடத்தில் நீங்கள் ஏதாவது பொருள் கொடுத்தால், அதை விற்று உங்களுக்கே கொடுப்பேன் என்று சொல்லிப் பிள்ளைகளைக் கேட்பார். அப்பொழுது அந்தப் பிள்ளைகள் அவ்விடத்திலுள்ள சில விநோதமான பொருள்களைக் கொடுப்பார்கள். அவைகளைக் கொண்டுபோய் விற்று அந்தக் கிரயத்தை அந்தப் பிள்ளைகளுக்கே கொடுத்துவிடுவார். இப்படியே எப்போதும் நடந்துவந்தது.

மறுபடியும் ஒருதடவை இவர் அடுத்ததேசம் புறப்படும்போது பிள்ளைகளிடத்தில் போய்க் கேட்டார். அப்படியே பிள்ளைகள் விநோதமான சாமான்களை எடுத்துக் கொடுத்தார்கள்; அவைகளையும் வாங்கிக்கொண்டு தன் வேலைக்காரனாகிய வாஷிங்டன் இடத்திலும் போய், நீ ஒன்றும் கொடுக்கிறதில்லையா என்று கேட்டார். அதற்கு வாஷிங்டன் சொல்லுவான்: துரையவர்களே, என்னிடத்தில் இப்பொழுது ஒரு சிறு பூனைக்குட்டிதானிருக்கிறது; ஆனால் அதை அடுத்த பயணத்திற்குத் தயார்செய்து அனுப்புவேன், இப்பொழுது என்னிடத்தில் ஒன்றுமில்லை என்று சொல்லிவிட்டான். அப்பொழுது கப்பல் வர்த்தகன், அடுத்ததேசத்திற்குத் தன் கப்பல் சாமான்களோடுகூடப் புறப்பட்டுப் போய் ஒரு தேசத்து துறைமுகத்தில் இறங்கினார்.

அப்பொழுது அந்தத் தேசத்திலிருந்த அரசன் இந்தக் கப்பலில் வந்திருக்கிற சாமான்களைப்பற்றி கேள்விப்பட்டு அந்தக் கப்பல் வர்த்தகனுக்கு, இன்றையதினம் நம்முடைய அரண்மனையில் பகல் விருந்துக்கு வரவேண்டுமென்று செய்தியனுப்பினார். அப்பொழுது அந்தக் கப்பல் வர்த்தகன், அரசன் அழைப்பித்த விருந்துக்குப் போய்ச் சேர்ந்தார். அப்பொழுது அரசன் கப்பல் வர்த்தகனை மரியாதைசெய்து, கப்பலில் வந்திருக்கிற விபரம் பார்த்து அதிக சந்தோஷப்பட்டு அநேகம் பொருள்களை விலைக்கு வாங்கிக்கொண்டார். அதற்குள்ளாக சாப்பாட்டிற்கு மணியடிக்கப்பட்டது. தீனி மேசையிலே அரசனும், அரசியும், பிள்ளைகளும், இந்தக் கப்பல் வர்த்தகனும் கூட உட்கார்ந்தார்கள். தீனி மேசையில் எல்லாத் தீனிவகைகளும் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒருவரும் சாப்பிடவில்லை; ஏனென்றால், அவர்களுடைய குலதெய்வம் வந்து சாப்பிட்டபிறகுதான் இவர்கள் சாப்பிடுகிறது வழக்கம். அப்படியே அரசன் வேலைக்காரரைப் பார்த்து, குலதெய்வத்தைத் திறந்துவிடுங்கள் என்று சொன்னான். அப்பொழுது வேலைக்காரர் கூண்டைத் திறந்தார்கள். உடனே உள்ளே அடைக்கப்பட்டிருந்த குலதெய்வமாகிய வீட்டெலிகள் மேசையில் வந்து அதற்கு வைத்திருந்த தீனியைச் சாப்பிட்டது. அப்பொழுது அரசனும், அரசியும், குமாரரும், குமாரத்திகளும் எழுந்து நின்று மரியாதையாகக் கும்பிட்டார்கள்.

கப்பல் வர்த்தகன் இதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு இதென்ன, இதென்ன வீட்டெலியைக் கும்பிடுகிறார்களே என்று மனவருத்தப்பட்டு அரசனிடத்தில் இதைக் கும்பிடுகிறீர்களே இது என்ன என்று கேட்டார். அதற்கு அரசன், "இது எங்கள் முன்னோர் எல்லாரும் வணங்கிவந்த குலதெய்வம், இதைத்தான் நாங்கள் கும்பிடுகிறோம்" என்று சொன்னார். அப்பொழுது கப்பல் வர்த்தகர், "இது கடவுளால் உண்டாக்கப்பட்ட உயிர்ப்பிராணிகள்; தெய்வமல்ல இதைத் தெய்வமாய்க் கும்பிடக் கூடாது" என்றார். அப்பொழுது அரசனுக்குக் கோபம்வந்து, ஓ இதைவிட மேலான தெய்வம் உண்டா, எங்கும் கிடையாது என்றார். அப்பொழுது கப்பல் வர்த்தகன், "இதை ஜெயிக்கத்தக்க தெய்வத்தைக் கொண்டுவந்தால் என்னசெய்வீர்" என்று கேட்டார். அப்பொழுது அரசன், "உன் தெய்வம் என் தெய்வத்தை ஜெயித்துவிட்டால், உன் கப்பல் நிறைய தங்கம் ஏற்றியனுப்புகிறேன், ஜெயிக்காவிட்டால் உன் கப்பலும் அதிலுள்ள சாமான்களும் எனக்குச் சேரவேண்டும்" என்று உடன்படிக்கை செய்துகொண்டார்கள்; நாள், தேதி, மணியுங் குறிப்பிட்டார்கள். அதாவது இன்றைக்கு முப்பதாம்நாள் பகல் பன்னிரண்டு மணிக்கு இந்தப் பந்தயம் இன்ன மைதானத்தில் நடக்கும் என்று தீர்மானம் செய்துவிட்டுக் கப்பல் வர்த்தகன் தன் தேசத்திற்கு வந்துவிட்டார்.

அரசன் இந்தப் பந்தயத்திற்காக நாடெங்கும் விளம்பரம் செய்து, அந்தத் தேதியில் யாவரும் வரும்படி ஒழுங்கு செய்திருந்தான். அப்படியே வர்த்தகன் குறிக்கப்பட்ட தேதி நாலுநாளுக்கு முன்னதாகப் புறப்பட ஆயத்தப்பட்டு, வழக்கம் போல் பிள்ளைகளிடத்திலும் சாமான்கள் கேட்டு வாங்கிக்கொண்டு வாஷிங்டனிடத்தில் போய் நீ ஒன்றும் தரவில்லையா என்று கேட்டான். அவன் உடனே துரையே என் பூனை பெரிதாகிவிட்டது; இதை விற்றுத் தாருங்கள் என்று சொல்லிப் பூனையைப் பிடித்து, பாம்புக் கூடுமாதிரி ஒன்று செய்து, அதில் பூனையை அடைத்து வர்த்தகனிடம் கொடுத்தான். அதையும் கப்பலில் போட்டுக்கொண்டு அந்த தேசத்திற்குப் புறப்பட்டுப் போனார். போய்ச் சேர்ந்ததும் பந்தயச்சாலைக்குப் புறப்பட்டான். அப்பொழுது அந்த வாஷிங்டன் பூனைக்கூண்டை மாத்திரம் அக்குளில் வைத்துக்கொண்டு போனார். (இன்னும் வரும்.)

G. D.

# MELLIN'S FOOD

TRADE MARK.



TRADE MARK.

மெல்லின்ஸ் ஆகாரம்




பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி




**கையினல் தொடாமல் செய்யப்பட்டது.**

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மோத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையுடை அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.


Registered No. M. 442.




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 SEP 1914
MADRAS.

# சத்திய தூதன்.

SEPTEMBER; 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. செப்டெம்பர், 1914.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**மனுஷ எலும்புக்கூடு.**—ஒரு மானிட எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. அது 40 அல்லது 80000—வருஷம் பூர்வமானதாம்!

**குபேரக் குழந்தை.**—தனவந்தனுன 3½ மாத வயதுள்ள ஒரு குழந்தையுண்டு. அது பெண் சிசு. அதற்கு வாரம் ஒன்றுக்குச் செலவு ரூ. 1,500.

**யுத்தத்தின் ஒரு நற்பலன்.**—இப்போது ஆரம்பித்திருக்கிற யுத்தத்தின்பொருட்டு, இங்கிலாந்திலிருக்கிற பலவிதமான கட்சிகளும் தத்தம் வாக்குவாதங்களை நிறுத்தியிருக்கிறார்கள். ஹோம்ரூல் என்கிற ஐர்லாந்தின் சுய ஆளுகை, ஸ்திரீவோட்டு அக்கிரமங்கள் முதலான பல முயற்சிகள் ஓய்வு பெற்றிருக்கின்றன.

**புதன் கிரகம்.**—இந்தக் கிரகம் ஒரேபக்கமாய்ச் சூரியனைச் சுற்றி யோடுகிறதால், அந்தப்பக்கம் காய்ந்து தீய்ந்துபோயும், மறுபக்கம் பனிக்கட்டிச் சீதளத்தைவிட 150 டிகிரி குளிர்ச்சியாயும் இருக்கிறதாம். கிரகங்களுக்குள்ளே பூமியொன்றிலமட்டும் பிராணிகள் வசிக்கின்றனவென்பது அநேக சாஸ்திரிகளின் அபிப்பிராயம்.

**துப்பாக்கிகள்.**—இந்தச் சுடு கருவிகள் முதல் முதல் 1414–ம் வருஷத்தில் உபயோகிக்கப்பட்டன. இந்த 500 வருஷத்திலே எத்தனையோ விர்த்தியுண்டாயிருக்கிறது. 3 மைல் தூரம் சுட்டுக்கொல்லத்தக்க துப்பாக்கிகள் உண்டாயிருக்கிறதுமல்லாமல், ஆகாயத்துக் கப்பல்களும் அவைகளைச் சுட்டழிக்கத்தக்க பீரங்கிகளும் உண்டுபண்ணியிருக்கிறார்கள்.

**டெலிபோன் உபயோகம்.**—தூரத்திலிருப்பவர் சம்பாஷிக்கும் கருவியாகிய டெலிபோனைக் கொண்டு, ருஷியா, இங்கிலாந்து, பாரிஸ் இப்படிப்பட்ட பட்டணங்களிலுள்ள அரசர், மந்திரி முதலானோர் தாராளமாகச் சம்பாஷித்து வருகிறார்கள். இது என்ன அதிசயம். இனி செவிட்டூமைகளும் சம்பாஷிக்கத்தக்க ஒரு டெலிபோன் உண்டுபண்ணியிருக்கிறார்கள்.

**மாச்சுக் குச்சிகள்.**—இவை உண்டுபண்ணின காலம் 1814–ம் வருஷம் அப்பொழுது ஒரு புட்டியில் 50 குச்சிகள் இருந்தன. அதில் ஒன்றை ஒரு திராவகம் நிறைந்த இன்னொரு புட்டியிலே தோய்த்தால் தீ கிளம்புமாம். அதற்கு விலை 12 அணு. இப்பொழுது மிக லேசாய்த் தீப்பற்றுகிற நூறு குச்சியுள்ள ஒரு சிறு பெட்டி ஒரு காசுக்குக் கிடைக்கிறது. இந்த அருஞ்செயல் இந்தியாவில் உற்பத்தியாயிற்று?

**பைபில் வேதமானம்.**—சென்றமீ ஏறக்குறைய 800 காலேஜ் மாணக்கருக்கு புதிய ஏற்பாடு முதலிய பல பைபில் பாகங்கள் வேதாகம சங்கத்தாரால் வெகுமதியாகக் கொடுக்கப்பட்டன. பைபில் என்கிறது கிறிஸ்துமார்க்கத்தின் வேதாகமங்கள் அடங்கிய நூல். இதை ஜெயிலிலிருந்த ஒருவன் வாசிக்கக்கேட்ட இரண்டு இந்தியர் மனம் மாறிக் கிறிஸ்து விசுவாசிகளாய் ஞானஸ்நானஞ் செய்யப் பெற்றார்கள்.

**இயேசுவுக்கு எழுதின நிருபம்.**—ஒஹியோவில் சார்லி என்று சிறுவனொருவ னிருக்கிறான். அவனுக்குத் தாய் இறந்துபோனாள். தகப்பன் மிகவும் வியாதியாயிருந்தான். அப்போது அச்சிறுவன் இயேசுவுக்கு ஒரு கடிதம் எழுதினான்! "பிரியமுள்ள இயேசுவே, அப்பா வியாதியாயிருக்கிறார். சாப்பாட்டுக்கும் மருந்துக்கும் பணமில்லை. அதிருந்தால் அவர் சுகப்படுவார். தயவுசெய்து கொஞ்சம் பணமனுப்பும். நான் பெரியவனாகும்போது திருப்பிக்கொடுத்துவிடுவேன்" இப்படிக்கு சார்லி, 28. ராக்வீதி. என்றெழுதி "மோக்ஷத்திலுள்ள இயேசுவுக்கு" என்று விலாசமிட்டுத் தபால் பெட்டியில் போடப் போனான். பெட்டி உயரத்திலிருந்தபடியால் அவனுக்கு எட்டவில்லை. அப்போது அவ்வழியேபோன ஒரு பெரியவர் பையனுக்கு உதவிபுரிய வந்து கடிதத்தை வாங்கிப் பெட்டியில் போடப்போகையில், "மோக்ஷத்திலுள்ள இயேசுவுக்கு" என்று எழுதியிருந்ததைக் கண்ணுற்று அதைப் பிரித்துப் படித்து அவனுக்குப் பணவுதவி செய்ததுமன்றி அப்பையனைப் படிக்கவும் வைத்திருக்கிறார்.

**யுத்தம்.**—வெகுகாலமாய் நடவாத பெருத்த ஒரு யுத்தம் ஐரோப்பாவில் ஆரம்பித்திருக்கிறது. இந்த யுத்தத்தில் ஜர்மனியும், ஆஸ்திரியாவும், ஒரு கட்சியும்; பிரான்சும், ரஷியாவும், இங்கிலாந்தும், பெல்ஜியமும் ஒரு கட்சியாயும் யுத்தந் தொடுத்திருக்கிறார்கள். இதன் வெளிக்காரணமாவது: சிறிது நாட்களுக்கு முன்பு சர்விய மாணாக்கன் ஒருவன் ஆஸ்திரியா ராஜ்யத்தின் இளவரசரும் அவர் மனைவியும் ரதசாரத்தியஞ் செய்கையிலே இருவரையும் சுட்டுப்போட்டான். சர்வியா ஆஸ்திரியாவை அடுத்த ஓர் நாடு. இதனால் ஆஸ்திரியா சர்வியாவுக்குப் பல நிர்ப்பந்தங்கள் செய்ய, அது அவற்றிற்கு முழுவதும் உடன்படாமையால், அதன்மேல் உடனே போர்புரியத் தொடங்கிற்று. இது நிற்க, ஆஸ்திரியரும் ஜர்மனியரும் ஒரு இனம், ரஷியரும் சர்வியரும் ஒரு இனம். இனம் இனத்தோடு சேரும் என்பதால், இவ்விருவரும் இருகட்சியாய்விட்டார்கள். அன்றியும், பொது ராஜ்யமாகிய லக்செம்பர்கு நாட்டுக்குள் ஜர்மனி நுழைந்த காரணத்தால் பிரான்சு சண்டை தொடங்கினது. அதுபோல, பெல்ஜியம் நாட்டின்பேரிலும் ஜர்மனி படையெடுத்ததினால் இங்கிலாந்து இந்த ராஜ்யத்துக்கு விரோதமாய்ச் சண்டை தொடங்கியிருக்கிறது. ஜப்பானும் இங்கிலாந்தோடு சேர்ந்துவிட்டது. தற்காலம் இத்தாலி, டென்மார்க்கு, ஸ்வீடின் நார்வே முதலிய ராஜ்யங்கள் நிர்க்கட்சியாளரா யிருக்கிறார்கள். யுத்தம் இன்னும் மும்முரமாய் நடக்கவில்லை. கப்பல் யுத்தங்களும் ஏராளமாய் நடத்தப்படும். ஆகிலும் ஜர்மனி தனக்கே கெடுதி செய்துகொண்டது. கெடுமதி கண்

### செப்டெம்பர் பஞ்சாங்கம்—

| வாரம். | செப்டெம்பர் = ஆவணி—புரட்டாசி. ⊙ பௌர்ணமி, 4உ ● அமாவாசை, 19உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆவணி—புரட்டாசி. | | | |
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 5 | 12 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 6 | 13 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 7 | 14 |
| புதன் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 1 | 8 | 15 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | ... | 19 | 26 | 2 | 9 | ... |
| வெள் ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 3 | 10 | ... |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 4 | 11 | ... |

Vol. XXVII. No. 11. புஸ்தகம் உஎ. நே. கக.

ணுக்குத் தோற்குது என்பதுபோல், ஜர்மனி ஆஸ்திரியாவைச் சேர்த்துகொண்டு வீண் தைரியமாய் ஐந்தாறு ராஜ்யங்களுக்கு விரோதமாய் நிலத்திலும் நீரிலும் படையெடுத்தால் ஜெயிக்குமா? ஒருக்காலுமில்லை. கடவுள் இந்தப் பயங்கரமான யுத்தத்தை விரைவிலே நிறுத்தவேண்டுமென்று பக்தர் யாவரும் வேண்டிக்கொள்ளக்கடவர். இப்படிப்பட்ட யுத்தங்களினுலே அளவில்லாப் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் உண்டாகிறதுமல்லாமல், வர்த்தகம் வியாபாரம் யாவற்றுக்கும் கப்பற் பிரயாணத்துக்கும் சொல்லமுடியாத கஷ்ட நஷ்டங்கள் நேரிடும். இந்தச் சில தினங்களிலேயே, அகவிலையும் வெளிநாட்டுச் சரக்குவிலையும் அதிகரித்திருக்கிறது. இன்னும் அதிகமாய் விலையேறும் என்றெண்ணப்படுகிறது. தற்காலம் ஜர்மனியர் பெல்ஜியத்தில் லீஜ் ஊரை முற்றுகை போட்டிருக்கிறார்கள். பிரெஞ்சுக்காரும் பெல்ஜியத்துக்குத் தகுந்த உதவிபுரிந்து

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

நான்காவது கதை.

(தொடர்ச்சி.)

பந்தயச்சாலையில் அந்தத் தேசத்து ராஜ குடும்பமும் மற்ற பிரபுக்களும் பிரஜைகளும் அரசனுடைய பந்தயத்தைப் பார்க்க ஏகோபித்து நிற்கிறார்கள். அப்பொழுது ஒருமணி அடிக்கப்பட்டது, அரசன் தன் குலதெய்வத்துடன் ஆயத்தம்பண்ணப்பட்ட மேசையில் உட்கார்ந்தார். இரண்டாம்மணி அடிக்கப்பட்டது, கப்பல் வர்த்தகன் தன் அக்குளிலிருக்கும் கூண்டோடே உட்கார்ந்தார். மூன்றும்மணி அடிக்கப்பட்டது, பந்தயத்திற்காக மேசையில் தீனி

லைக் காப்பாற்றவேண்டுமென்று பூனையைக் கும்பிட்டார். அப்பொழுது வர்த்தகன் அரசனைப் பார்த்து, இதுவுந் தெய்வமல்ல, தெய்வத்தால் உண்டாக்கப்பட்ட சிருஷ்டிகள் எல்லாவற்றுக்கும் மேலான தெய்வம் ஒருவர் இருக்கிறார் என்று அவருக்குப் போதித்து, மெய்க்கடவுளைப்பற்றி உணர்த்திக்காட்டி அவரை மெய்யான இரட்சிப்பின் வழியிலே கொண்டுவந்து சேர்த்தார்: ஆனாலும் அரசன் சொன்னபடி பந்தயம் நிறைவேற, கப்பல்நிறையத் தங்கம் ஏற்றிவிட்டார். அந்தக் கப்பலிலிருக்கும் தங்கம் முழுவதும் வாஷிங்டனுக்குச் சேரவேண்டியது என்று கப்பல் வர்த்தகன் அந்த ஏழை வாஷிங்டனிடத்தில் கொண்டுபோய் ஒப்புவித்தார். வாஷிங்டன் அந்தத் தங்கத்தைத் தான் முந்திப் புலம்பினபடி லண்டன் பட்டணமும், லண்டன் வீதியும், தங்கமயமாக அலங்கரித்தான். அவன் புலம்பிய வார்த்தையை மற்றவர்கள் பரியாசம்



நாசரேத் நகரம்.

வருகிறார்கள். ஒரு பெருத்த இங்கிலீஷ்சேனை பிரான்சில் பாளயம் இறங்கிவிட்டது. விரைவிலே மகா பயங்கரமான சண்டை நடப்பது நிச்சயம்.

**இரண்டு சிறு புஸ்தகங்கள்.** — **கற்பகத்ததுவும், பிசாசைவென்ற வீரனும்** ம-ா-ா-ஸ்ரீ, Y. பான்னலவர்கள் இயற்றிய இரண்டு சிறு கதைகளை வாசிக்கலானோம். முன்னதின் விலை, அரை அணு; பின்னதின் விலை, ஒரு அணு. இரண்டும் நல்ல தமிழ் நடையில் இயற்றப்பட்டு, யாவரும் வாசித்துப் பயன்படத்தக்கவை. ஒன்று பேய்களைப்பற்றிய வீண் பக்தியை அகற்றுகிறது; மற்றொன்று கிறிஸ்மிஸ் காலத்தில் நடந்த சிறந்த செயல்களை விவரிக்கிறது.

வைக்கப்பட்டிருந்தது. உடனே அரசன் தன்னுடைய குலதெய்வத்தைத் திறந்துவிட்டார். அப்பொழுது அந்த வீட்டெலிகளெல்லாம் மேசையில் உட்கார்ந்து அந்தத் தீனியைப் பொறுக்கித் தின்றது. அப்பொழுது அரசன், கப்பல் வர்த்தகனைப் பார்த்து உம்முடைய குலதெய்வத்தை அனுப்பலாம் என்று சொன்னார். அப்பொழுது வர்த்தகன் அக்குளிலிருந்த கூண்டை எடுத்துத் திறந்தார். உடனே, உள்ளேயிருந்த பூனை திடீரெனச் சாடி பசியின் அகோரத்தினால் ஒரு எலியையும் விடாதபடி எல்லாவற்றையும் பிடித்துக் கடித்து சின்னபின்னம் செய்து ஒவ்வொன்றாய் எடுத்துச் சாப்பிட்டது. கப்பலில் நாலுநாளாய்த் தீனியில்லாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தது; ஆனால் எலிகளைப் பார்த்ததும் ஆனந்தமாயிருந்தது. உடனே அரசன் பெரிய குலதெய்வமே, நீர்தான் எங்க

செய்தாலும், அது உண்மையாகத்தான் முடிந்தது. அதுமாத்திரமல்ல, அந்த அந்நிய தேசத்து ராஜ குடும்பமும் மற்ற பிரபுக்களும், பிரஜைகளும் தாங்கள் வணங்கிய அருவருப்பான குலதெய்வத்தைத் தொலைத்துவிட்டு, மெய்யான கடவுளை வணங்கினார்கள். இப்படித்தான் நம்முடைய தேசத்திலுங்கூட அநேகர், பருந்து, பசுமாடு, பொம்மைகள், இன்னும் அநேக தேவதைகளைக் கும்பிட்ட ஆத்துமாக்கள்கூட அவைகளை எல்லாம் தள்ளிவிட்டு மெய்க்கடவுளைக் கண்டறிந்து சேவிக்கிறார்கள்.

"ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்?" (ஏசா. 44. 10–20.)

G. D.



## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

முகவுரை.

உலக குருவானவர் சொன்ன இந்த கெட்ட குமாரன் உவமையைப் பல கவிவல்லோர் பல நாமங்கள் சூட்டி வர்ணித்திருப்பதைக் கண்டேன். அவைகளிலொன்று "கெட்டகுமாரன் சரித்திரம்" எனப் பெயர்பெற்று நாடகப்போங்காயுள்ளது. மற்றொன்று "சகுக்குசுந்தர நாடகம்" எனப்பெயர் பூண்டு விவித இராகங்க ளமையப்பெற்றுள்ளது. சிற்றறிஞனுகிய நானும் அப்பொருளடங்கிய கதையை இலேசாய் ஓதவும் அறியவும் தக்கதாயும், ஒரு புதிய நாமமுள்ளதாயு மிருக்கவேண்டுமென்று உன்னி, "டம்பன் கதை" எனப் பெயர்தரித்து அம்மானைபோல் அமைத்திருக்கிறேன். இரட்சகரின் மகிமையும், வாசிப்போர் அல்லது பாடுவோரினுத்துமநன்மையும், வேதாகம சங்கத்திற்காக உதவியும் உண்டாவதே ஆக்கியோன் ஆசை. வித்வ சிரோமணிகள் பொறுக்கவும், ஏனையோர் இப்புத்தகம் சீக்கிரம் விற்பனையாக ஒருவரையொருவர் ஏவி எழுப்பவும் விநயமாய்க் கேட்டுக்கொள்பவனுகிய,

S. DAVIES.

## டம்பன். கதை

விருத்தம்.

ஆக்கநிறை நரனொருவன் பூர்வகா லந்தனில்
அகிலத்தில் வாழ்ந்த தையுமா
அளவிலா நிதியையனு போகித்து வந்ததையும்
அவன் குணு திசயத்தையும்
ஷோக்குநிறை மகனினுட சரிதையையு மவனிந்த
தொல்புவியில் வாழ்ந்து தந்தை.
சொத்தையெவ் வாறுவிர .யஞ்செய்தா னென்ப
துயாமா முடிவ தனையும் [தையும்
தூக்கியெழில் கதையாகத் தீர்த்துமாந் தர்க்கருள
துணிவுற்ற வடியே னெனின்
துப்பைப் பெருக்கிபரி சுத்தாவி தந்துபல
துகளுகள் விலக்க வல்ல
மாக்கள்திரு மாணிகன் மன்னுதி மன்னவன்
மண்டல மெலாம் படைத்து
மகிமையுட னுண்டுகாப் பாற்றுமா வல்லவன்
மலரடிகள் காப்ப தாமே.

கதை.

1. பல்லவரை யீடேற்ற—பட்சமுடன் காசினியில்
நல்லகுரு வாயுதித்த—நாதனு ரோருவமை
2. சொன்னாரே பூர்வமதில்—தொல்லுலகோர் புத்தியுடன்
என்நாளும் வாழ்ந்திருக்க—இங்கதை யெடுத்துரைப்பேன்
3. வாரிநிலம் ஜனங்கள்—வளமான தேசமொன்று
பாரி விருந்ததுகாண்—பகரக்கே ளவ்வூரில்
4. செல்வம் மிகுத்தபெரும்—சீமா னொருவனங்கு
அல்லலொன் றில்லாமல்—ஆனந்தம் வாழ்ந்துவந்தான்
5. மேலான வீடுகளும்—மெத்தைகளும் மச்சுகளுக்
நாலா விடங்களிலே—நல்லநல்ல மாளிகையும்
6. கோபுரங்கள் மாடங்கள்—கூடங்கள் சோலைகொல்லை
மாபெரியக் கட்டடங்கள்—மகிழ்வுதருந் தோட்டங்கள்
7. நஞ்சைநிலம் புஞ்சைநிலம்—நந்தவனங் காடுகளும்
தஞ்சமென வந்தவர்கள்—தங்கபல சத்திரமும்
8. வகைவகை யானபல—வளமான சாமான்கள்
மிகவிலை யேறப்பெற்ற—மினுக்குமுள்ள சாமான்கள்
9. பற்பல மரங்களினால்—பகரமுள்ள சாமான்கள்
சொற்பமுங் குறையாமல்—சொகுசாக வைத்திருந்தான்
10. கட்டில்நாற் காலிகள்முக் — காலிகளல் மைராக்கள்
பெட்டிகள் மேஜைகளும்—பேணிவைத்தான் மேலுங்கேள்.

(இன்னும் வரும்.)

## KAMBAN THE POET

## கம்பநாடர்

(மேலீ தொடர்ச்சி.)

ஏனைச் சிறப்புப்பாயிரச் செய்யுள்கள் பொதுப்படவே தெய்வவணக்கம் கூறுகின்றன. ஈதெல்லாம் இங்ஙன மிருக்கத் திருக்கை வழக்கம் ஸ்ரீ ஆறுமுக நாவலர் பதிப்பில்,

"பண்ணமைந்த
வேதமொரு நான்கினையு மிக்கதமிழ் நாலடியால்
ஓதியுரைத் தேகருணை யோங்குக்கை"

என வருவது, தொழுவூர் ஸ்ரீ வேலாயுதமுதலியார் பதிப்பில் விடுபட்டிருக்கிறது. இவ்வடிகள் குறிப்பது சடகோபரைப் போலும். இராமாயணத்தில் திருவவதாரப் படலத்தில் பெரிய திருவடியான கருடாழ்வாரைக் குறிக்கின்ற இடத்தில்,

"என்னையா ளுடைய வையன்"

எனக் கூறியிருக்கிறது. இதில் ப்ரதிபேதம் இல்லை. கடிமணப் படலத்தில்

என்றுநான் முகன்முதல் யாரும் யாரையும்
நின்றபே ரிருளினை நீக்கி நீணெறி
சென்றுமீ ளாக்குறி சேரச் சேர்த்திடு
தன்திரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே

என்றும், சம்புமாலி வதைப் படலத்தில்

ஐயனு மமைந்த நின்று ளுழியா னளவி னுமம்
நெய்சுடர் விளக்கிற் றேன்று நெற்றியே நெற்றியாக

என்றும், பரதன் சூள்செய்கின்ற இடத்தில்

தழைத்ததண் துளவினேன் தலைவன் அல்லனென்
றழைத்தவன்

என்றும், விராதன் துதியில்

பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் படிபற்றி
நனிநின்ற சமயத்தோ ரெல்லாரு நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில்
இனிநின்ற முதற்றேவர் என்கொண்டென் செய்வாரே

என்றும்

"மழுவாளிக் கன்றளித்த
ஐயத்தால் சிறிதையம் தவிர்ந்தாரு முளரையா"

என்றும், சரபங்கர் பிறப்புநீங்கு படலத்தில் இந்திரன் சீராமனைத் துதிசெய்வதில்,

"எல்லை வலயங்கள் நின்னுழையென் றந்நாள்
எரியோனைத் தீண்டி எழுவர் எனநின்ற
தொல்லை முதல்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற ஐயம் துடைத்திலையோ எந்தாய்"

என்றும், கவந்தப் படலத்தில்

"மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ"

என்றும், இன்னும் பலவிடங்களிலும் விஷ்ணுவுக்குப் பாரம்யம் கற்பித்திருக்கிறார். இங்கே எடுத்துக் காட்டப்பட்டனவெல்லாம் சைவருக்கு நிஷ்டூரம் உண்டாகாமல் கம்பர் வேண்டுமானால் தாமே தவிர்த்திருக்கக்கூடிய பாகங்களே அன்றோ. நாலாயிர ப்ரபந்த வ்யாக்யாநங்கள் கம்பருடைய ப்ரயோகங்களில் சில எடுத்துக்காட்டியிருக்கின்றன. இராமாநுஜ நூற்றந்தாதி 43–வது பாசுரத்தின் வ்யாக்யாநத்தில் "ஆழ்வார் நூற்றந்தாதியிலும், 'என்முடியாதெனக் கியாதே யரியது' என்று இப்படி ப்ரயோகிக்கப்பட்டது. ஆகையாலே மஹாகவி ப்ரயோகங்கள் இப்படி வரக்கடவதாக இருக்கும்" என மணவாளமாமுனிகள் காட்டியிருப்பது காண்க. திருவாய்மொழி 2–பத்து 1–திருவாய்மொழி 3–பாட்டின் ஈட்டில் "ராவண பயத்தாலே முன்பு அரைவயிறாக ஜீவித்த அக்கி வயிறு நிறைய உண்டு ஜீவிக்கப்பெற்றதாயிற்று பெருமாளை அண்டைகொண்ட பலத்தாலே: 'செந்தீயுண்டு தேக்கிட்டதே' என்னக் கடவதிறே" என்றும், ஜீயர் அரும்பதத்தில் "'வயிறு நிறைய உண்டு' என்றதுக்கு ஸம்வாதம் (செந்தீயித்யாதி) கம்பநாடகத்திலே" என்றும் வருகின்றது. இங்கே காட்டிய மேற்கோள் இலங்கை யெரியூட்டிய் படலத்தில்

என்று கொல்குரங் கன்னதிவ் வலியுள திலங்கை
நின்று வெந்துமா கீறெழு கின்றது நெருப்புத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்றுபோர் வலியென விராவண னக்கான்

என்ற 46–விருத்தத்தினின்றும் கொண்டது. 5–பத்து 3–திருவாய்மொழி 7–பாசுரத்தின் ஜீயர் அரும்பதத்தில் "'தலைமகள் தலையாலே வணங்கும்' என்றதுக்கு 'தீவினை தீர்வரம் வேண்டினுள் தொழுதென்று விளம்புவாய்' என்று கம்பனும் 'தெய்வம் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்' என்று வள்ளுவனும் சொன்னத்தை ஸம்வாதமாகக் கண்டுகொள்வது" என வருகின்றது. கம்பர் இராமாயணம் பாடுமுன்னர் சைவராயிருந்தவர் பின் வைணவராயினர் எனச் சில தமிழ் வித்துவாமிசர்கள் கூறிவருகின்றனர்.

அரனதிகன் உலகளந்த அரியதிகன் எனவுரைக்கும் அறிவிலார்க்குப், பரகதிசென் றடைவரிய பரிசேபோல் புகலரிய பண்பிற்றுமால், சுரநதியின் அயலதுவான் தொடுகுடுமிச் சுடர்த்தொகைய தொழுவோர்க்கெல்லாம், வரனதிகம் தருந்தகைய தருந்தநியா நெடுமலையை வணங்கியப்பால்

என்ற விசுவாமித்ர ஸ்ருஷ்டியான வெள்ளிப்பாட்டைக் காட்டிக் கம்பரை வேறு கூறுவாருமுளர்.

ஆயினும் ஸ்ரீரங்கத்திலே கம்பர் கட்டுவித்த மண்டபத்திலே சக்ரவர்த்திக்குரிய ஆடம்பரங்களுடனே கம்பரைப்போல் சிலா விக்ரஹம் இயற்றி வைத்திருப்பதனால், இராமாயணத்தை

"கண்ணிய வரங்கர் முன்னே கவியரங் கேற்றினானே"

என்பதூஉம், அங்கே கவிச்சக்ரவர்த்திப் பட்டம் அளிக்கப் பெற்றாரென்பதூஉம் உண்மையாவதுமன்றி, இவர் வைணவர் என்பதை வற்புறுத்துகின்றன. இவரை நாட்டரசன் கோட்டையில் வைணவ ஸம்ப்ரதாயத்தின்படி ஸமாதி செய்திருக்கின்றது. இதனை இன்றும் காணலாம்.

முடிவு.—இராமாயணம் பாடி முடிந்த பிறகு கம்பர் கவிதா ஸந்ததத்தை இழந்தனரென்றும், தாம் பாடின பாடல்களைப் பிறர் படிக்கும்போது அவை தாம் பாடினவை என்பதறியாமல் அதிக ஊக்கத்துடன் கேட்டு ஆநந்திப்பரென்றும் கூறி வருகின்றார்கள். "கல்வியிற் பெரியவர் கம்பர்" என ஐந்தாம் வேற்றுமை ஏதுப்பொருளுக்குக் காட்டப்படும் உதாரணத்தாலும், யாதொரு இயந்திர முதலியவற்றின் கூறுபாட்டை அறியாது அதிசயிக்கின்றவர்கள் "இதென்ன கம்பஸூத்ரமாயிருக்கிறதே" என வழங்கும் வழக்காற்றாலும், "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்ற பழமொழியாலும், விரிவாக எழுதியிருக்கின்ற யாதொன்றைக் காண்கின்றவர்கள் "இதென்ன கம்பராமாயணமாக இருக்கிறதே" என்பதனாலும், கம்பரென்னும் திருநாமம் எக்காலத்தும் மறைவின்றி நிலைபெறுவதாயிற்று.

T. C. M.

கம்பநாடர் முற்றிற்று.

# MELLIN'S FOOD

TRADE MARK.



TRADE MARK.

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்




குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்




உபயோகப்படும்படி

கையினால் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் செயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.


Registered No. M. 442.




REGISTRAR OF BOOKS
8 OCT 1914
MADRAS

# சத்திய தூதன்.

OCTOBER, 1914. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. அக்டோபர்௴, 1914.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்.

**ஜலாதம்.** — ஜலத்திலே ஓடுகிற ஒரு ரப்பர் வண்டி இப்பொழுது உண்டுபண்ணியிருக்கிறது.

**எல்லாரிலும் மூத்த பிரபு.**—இங்கிலீஷ் பிரபுக்களில் மூத்தவர் கிராப்டன் பிரபு; அவருக்கு வயது 94.

**ஜர்மன் இளவரசர்.**—இப்பொழுது நடந்துவருகிற பெரும் யுத்தத்திலே ஜர்மன் இளவரசர் மூவர் மாண்டுபோனார்கள்.

**ஜர்மன் ஆஸ்திரிய சேனை**—இந்த இரண்டு ராஜ்யத்தார் சேனை இப்பொழுது பன்னிரண்டே முக்கால் லட்சம் வீரர்கள் அடங்கியதாம்.

**செடிகளின் நித்திரை.**—செடிவர்க்கங்கள் மாலை 5 மணி முதல் காலை 9 மணி வரையிலும் தூங்குகின்றனவென்று போஸ் சாஸ்திரியார் கண்டுபிடித்திருக்கிறார்.

**வர்ணப்படம் பிடித்தல்.**—இப்பொழுது பலவர்ணம் வகித்த படங்கள் பிடித்துவருகிறார்கள். ஜார்ஜ் அரசனையும் ராணியாரையும் இவ்விதம் படம் பிடித்திருக்கிறது.

**பாலகர்.** — வருஷந்தோறும் உலகத்திலே 3 கோடி 60 லட்சம் பாலகர் பிறக்கிறார்களாம். இப்பெருந்தொகையில் அரைவாசிப்பேர் மாத்திரம் 5 வயதுக்கு எட்டுகிறார்கள்.

**ஆஸ்திரிய ஜனசங்கை.** — ஆஸ்திரியாவிலே இரண்டுகோடி 85 லட்சம் பேருண்டு; இவர்களில் ஜர்மானியர் ஒருகோடிமாத்திரம்; இதனால்தான் அங்குள்ள $1\frac{3}{4}$ கோடி சர்வியருக்குச் சலிப்புத்தட்டியிருக்கிறது.

**இளவரசர் விவாகம்.**—நமது இளவரசர் வருகிற வருஷம் 21 வயதாவார்; அவர் இப்பொழுதே ஒரு ராஜகுமாரத்தியைத் தமக்கு வருகிற வருஷம் மனைவியாக்கத் தீர்மானித்திருக்கிறாராம். அம்மாது கிரீஸ் அரசன் புத்திரி; வயது 18.

**மிஷனெரிமார்.**—உலக முழுவதிலும் தற்காலம் 54,000 மிஷனெரிமார்களுண்டு. இவர்களில் 20—இல் 13 பேர் ரோமன் கத்தோலிக்காரர்; 6 பேர் லூத்தரன்மிஷன் முதலானவர்கள்; ஒருவர் மாத்திரம் ஆங்கிலேய சபையைச் சேர்ந்தவர்.

**பிரமாண்ட பாடசாலை.**—எத்தனையோ ஆயிரம்மைல் விசாலமான ஒரு பாடசாலை ஆஸ்திரேலியாவில் உண்டாம். அதன் உபாத்தியாயர் மோட்டக்கார் ஏறி, கிராமந்தோறும் சென்று சிலநாள் தங்கி அங்குள்ள பிள்ளைகளுக்குக் கற்பித்துவிட்டுப் புறப்படுகிறாராம்.

**மைசூர் மஹாராஜன்.**—இந்த ராஜப்பிரபு யுத்த பண்டுக்கு 50 லக்ஷம் ரூ. கொடுத்திருக்கிறார்கள். இதற்குமிஞ்சின கொடை எவரும் செய்ததில்லை இந்திய ராஜ்யத்திலிருந்து ஒன்று அல்லது ஒன்றரைகோடி ரூ. அனுப்பப்படுமென்று உத்தேசிக்கப்படுகிறது.

**கைதிகளைக் கைப்பற்றும் ஆயுதம்.**—கைதிகளைப் போலீசார் கொல்லாமல் பிடிக்கத்தக்க ஒரு ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு துப்பாக்கி; அதைச் சுட்டால் குண்டல்ல, ஒருவிதப் புகை புறப்பட்டுக் கைதியை ஸ்மரணை தப்பிப்போகச் செய்கிறது. அப்பொழுது அவனை இலேசாய்க் கைப்பற்றிக்கொள்ளலாம்.

**ஓர் பிரபுவின் உதாரத்துவம்.** — காலஞ்சென்ற ஸ்ற்றுத்கோனு பிரபு தாம் வைத்துப்போன ஆஸ்தியில் ஒருசிறு பாகத்தைக்கொண்டு இங்கிலாந்திலே ஒரு குஷ்டரோக அடைக்கலம் உண்டாக்க வேண்டுமென்று கற்பித்தார். ஆனால் இங்கிலாந்து முழுவதிலும் 20 குஷ்டரோகிகள் மாத்திரமுண்டு. இந்தியா எப்பொழுது இப்படியாகுமோ?

**சென்னைமேல் குண்டு சுட்டது.** — சென்ற 22௳ இரவு $9\frac{1}{2}$ மணிக்குமேல் 6 வர்த்தகக் கப்பல்களைப் பூரிபட்டணத்துக்குச் சமீபத்தில் முழுகுவித்த எம்டென் என்ற ஒரு ஜர்மன் கப்பல் திடீரெனச் சென்னைமேல் சிலகுண்டு சுட்டது. குண்டுகள் நாலு இடங்களில் சிதறி விழுந்தன. இரண்டு கெரோசின் எண்ணெய்க் கிணறுகள் தீப்பற்றி $3\frac{1}{2}$ லட்சம் ரூ. நஷ்டமுண்டாயிற்று. மூன்றுபேர் காயப்பட்டு இறந்தார்கள். உடனே நமது பீரங்கி சுடவே, அந்தக் கப்பல் விளக்குகள் யாவற்றையும் அணைத்துக்கொண்டு ஓட்டம்பிடித்தது. இப்பொழுது மூன்று சண்டைக்கப்பல் அதைத் துரத்தி யோடுகிறது.

**யுத்த விர்த்தி.**—யுத்தம் முன்னுக்கு அதிகமாக நடந்தேறிவருகிறது. ஜர்மனி, ஆஸ்திரியா ஒரு பக்கமும், இங்கிலாந்து, பிரான்சு, பெல்ஜியம், ரஷியா இன்னொரு பக்கமும், மூன்று ஸ்தானங்களில் கடும்போர் செய்துவருகிறார்கள். ஆஸ்திரியா ஏறக்குறைய முழுவதும் தோற்றுப்போயிற்று. அதன் ஒருபாகத்தை ரஷியர் பிடித்துக்கொண்டார்கள். பிரான்சிலே பாரிஸ் நகரத்தைப் பிடிக்கப்போன ஜர்மானியர் தோல்வியுற்று, ஏராள நஷ்டமடைந்து, முதுகுகாட்டி ஓடத்தொடங்கினார்கள். தங்கள் சொந்த நகரம் பர்லினை நோக்கி ஓடுகிறார்கள். அவர்களுக்கு 1 கோடிக்கு மேலான போர்வீரர்கள் இருக்கிற காரணத்தால், சண்டை நீடித்து நடக்கவேண்டும். ஆகிலும், நால்வருக்கும் விரோதமாய் ஒருவர் போர்செய்து வெல்ல முடியுமா? நூறு வருஷங்களுக்கு முன்பு, நெப்போலியன் இருவருடன் போர்புரியமாட்டாமல் கைதியான கதி, ஜர்மன் சக்கரவர்த்திக்கும் இப்பொழுது நடக்கும்போல் காண்கிறது. இவர்தாம் உலகத்துக்கெல்லாம் பெருங்கெடுதி செய்துவருகிற மானிட சத்துருவாய் விளங்குகிறார். அளவுக்கு மிஞ்சின அகந்தையும் பேராசையும் பிடித்தவர். அரசன் அன்று கொன்றாலும், தெய்வம் நின்று கொல்லும். இப்பொழுது கொஞ்சம் புத்திவந்ததாகத் தோன்றுகிறது. சமாதானத்துக்கு வருகிறதாகச் சொல்லுகிறார்கள்.

**யுத்த பயம்.**—கொல்லுகிறது புலியல்ல, கிலி என்பார்கள். அதுபோல தமிழ் ஜனத்தில் அநேகம்பேர் ஐரோப்பாவிலே நடக்கிற யுத்தத்தைக்குறித்

**அக்டோபர்௴ பஞ்சாங்கம்—**

| வாரம். | அக்டோபர்௴ = புரட்டாசி—ஐப்பசி. ⊙ பௌர்ணமி, 4௳ ● அமாவாசை, 19 ௳ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | புரட்டாசி—ஐப்பசி. | | | |
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 2 | 9 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 3 | 10 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 4 | 11 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 5 | 12 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 30 | 6 | 13 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 31 | 7 | 14 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | 31 | 18 | 25 | 1 | 8 | 15 |

துப் பலவிதமாய்த் திகிலடைந்து கிடக்கிறார்கள். பீரங்கிக்குண்டு அவர்கள்மேல் பாயாவிட்டாலும், பயமென்கிற குண்டு பாய்ந்து, உருண்டு புரண்டு தவிக்கிறார்கள். அநேகர் இங்கிலீஷ் ராஜ்யம் இந்தியாவிலிருந்து நீங்கிவிடும், இன்னொரு ராஜ்யம் உதிக்குமென்று நம்புகிறார்கள்; நம்பி, பாங்கிலும், தபாலாபீசிலும் இருக்கிற பணங்களை எடுத்து வீண்செலவு செய்துவிடுகிறார்கள்; நோட்டுகளையெல்லாம் நாணயமாக மாற்றிக்கொள்ளுகிறார்கள். இது என்ன பைத்தியம்! இங்கிலீஷ் ராஜ்யம் ஒருக்காலும் எடுபடாது. ஜர்மானியர் இந்தியாவின்மேல் படையெடுப்பது, சூரியனைப் பீரங்கிகொண்டு சுட்டதுபோலாகும். தவிர, இங்கிலீஷ் அரசைப்போன்ற ராஜ்யம் எங்கும் கிடையாது. நீதிநேர்மையிலும் தயைதாட்சண்யத்திலும் பிரஜைகள் பாமரிப்பிலும் அவர்களுக்கு நிகரான ராஜ்யம் உலகத்தில் எங்குமில்லை. கிராமவாசிகளுக்கு இத்தியாதி விஷயங்கள் தெரியாமல் புத்தி மயங்கிப் போகிறார்கள். வீண்திகிலுக் கிடங்கொடுக்கலாகாது. வீண்பேச்சுகளை நம்பலாகாது. யாவற்றையும் தூக்கி, நோக்கி, நிறுத்துப் பார்க்க வேண்டும். சிலர் மிஷன்கள் எடுபடுமென்றும் நினைக்கிறார்கள். இதுவும் வீண் புரளியே. ஒருவேளை ஜர்மன் மிஷன்கள் இந்த யுத்தம் ஓயும்வரை கொஞ்சம் சங்கடப்படலாம். ஆனால் இங்கிலீஷ், அமெரிக்கன், டேனிஷ் முதலிய மிஷன்களுக்கு எப்போதும்போலவே திரவியம் வந்துகொண்டிருக்கும். மிஷன் ஏஜெண்டுகளுக்கு யாதொரு அபாயமும் நேரிடாது.



எருசலேம் நகரின் ஓர் பாகக் காட்சி.

## WHAT ONE WOMAN CAN DO

## ஒரு ஸ்திரீ என்ன செய்யக்கூடும்

பதினேந்து வருஷத்திற்கு முந்தி பாரிஸ் பட்டணத்திலுள்ள ஒரு தனவான் தன்னுடைய ஆஸ்தியைப்பற்றி ஒரு உயில் எழுதி, அவருடைய ஆஸ்தியில் ஒரு பெரும் தொகையை ஒரு விசேஷித்த காரியத்திற்கென்று பிரித்துக் காண்பித்திருந்தார். அதாவது எந்த ஒரு மனிதன், அல்லது ஒரு ஸ்திரீ யுத்தத்தை அமரச்செய்து எந்த இடத்திலும் சமாதானத்தை உண்டுபண்ணுகிறார்களோ அப்படிப்பட்டவர்களுக்கு, அப்பெரும் தொகையிலிருந்து வருஷாந்திரம் நல்ல வெகுமதி கொடுக்கப்படவேண்டும் என்பதே.

அந்த தனவான் இவ்வித உயில் எழுதி சுமார் 9 வருஷமானபிறகு 1905-ம் வருஷத்தில் ஒரு ஸ்திரீக்கு மேற்கூறிய வெகுமதி அளிக்கப்பட்டது. இந்த ஸ்திரீதான் முதலாவது அந்த விசேஷித்த வெகுமதியைப் பெறுவதற்கு அத்தனவானுடைய மனதை எழுப்பிவிட்டவள். அது எப்படியென்றால், அச்சமயத்தில் நேரிடக்கூடிய ஒரு பெரும்சண்டை சமாதானம் அடைந்ததற்கு இந்த ஸ்திரீயே அதற்குக் கருவியாய் இருந்தாள்.

அத்தனவானுடைய பெயர் ஆல்பிரட் நோபில், வெகுமதிபெற்ற அந்த ஸ்திரீயின் பெயர் பரோனஸ் வொன்சட்னர். உலகத்தில் கண்ணியம் பொருந்திய ஸ்திரீகளில் இவள் ஒருத்தியாக எண்ணப்பட்டாள். இவளுடைய இளமைப் பருவத்தைப்பற்றிய சரித்திரம் ஒன்றும் தெரியாது. ஆனால் அவள் பரோன் வொன்சட்னர் என்கிற ஒருவரை மணம்புரிந்து, அவருக்கு விசுவாசமுள்ளவளாய் நடந்துவந்தாள் என்பது அங்குள்ள அநேகருக்குத் தெரிந்தவிஷயம்.

இந்தம்மாள் தன் ஜீவியத்தில் செய்யப்போகிற ஒரு சிறந்த வேலையைப்பற்றி அபேட்சையுடையவளாயிருந்தாள். இந்தம்மாளுக்கு 40 வயதாகிற மட்டும், எத்தனையோ யுத்தங்களைப்பற்றிக் கேள்விப்பட்டாலும், யுத்தம் செய்வது தீமை என்பது அந்தம்மாள் மனதில் படவில்லை. கடைசியாக அந்தம்மாள் திடுக்கிடும்படி, ஐயோ, யுத்தம் செய்வதில் தீமையில்லை என்று நினைக்கக்கூடிய மனுஷர்கள் உண்டா? யுத்தம் செய்வதில் எவ்வளவு தீமையிருக்கிறதென்று அறிந்துகொண்டார்கள்.

இந்தம்மாள் சில குறிப்புகள் அடங்கிய கையெழுத்துப் பிரதிகளை எழுதி வைத்திருந்தாள். அப்புஸ்தகங்களையெல்லாம் பெயர் இல்லாமல் அச்சிடப்பட்டது. அதை வாசித்தவர்கள் எல்லாரும் இந்தப் புஸ்தகம் ஒரு சாமர்த்தியமுள்ள ஒரு மனுஷன் எழுதியிருக்கவேண்டும். மற்றப்படி ஒருஸ்திரீ அல்ல என்று நினைத்தார்கள். அச்சமயத்தில் ஒரு சங்கத்தில் சில மனுஷர்கள் கூடி, யுத்தம் உதவாது, சமாதானம் எப்போதும் நல்லது என்று வழக்காடி வந்தார்கள். அப்படிப்பட்டவர்களுடைய எண்ணத்திலும் வேலையிலும் இந்தம்மாள் அதிக பிரியமுள்ளவளாய் இருந்தாள்; அதோடுகூட அவர்களுக்கு



எந்தவிதத்திலும் உதவிசெய்யவேண்டும் என்பதே இந்தம்மாளுடைய ஆசை. இந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்றே அந்தம்மாள் ஒரு புஸ்தகத்தை எழுதினார்கள். அப்புஸ்தகத்தின் பெயர் "உன்னுடைய ஆயுதத்தைக் கீழே போடு" அல்லது ஆயுதத்தைப் புறம்பாக்கு என்பதே.

இப்புஸ்தகத்தை அச்சிடும்படி அச்சிடுவோன் இந்தம்மாளுக்குக் கிடைப்பது அதிக கஷ்டமாயிருந்தது. அந்தம்மாள் கையால் எழுதி அனுப்பப்பட்ட புஸ்தகங்களை அச்சிடாமல், அச்சாபீஸ்காரர் திரும்பத் திரும்ப அந்தம்மாளுக்கு அனுப்பிவிட்டார்கள். யுத்தத்தைப்பற்றி கண்டித்துப் பேசுகிற வாக்கியங்களையெல்லாம் எடுத்துவிட்டால், அச்சிடுவதாக அந்தம்மாளுக்குச் சொன்னான். அதற்கு அந்தம்மாள் சம்மதிக்கவில்லை. யுத்தத்தைக் கண்டித்து அதை அமர்த்தி சமாதானத்தை உண்டுபண்ணவே, இவ்வித புஸ்தகத்தை எழுதினாள். அப்படியிருக்க, யுத்தத்தைப்பற்றி கண்டித்துப் பேசுகிற வாக்கியங்களையெல்லாம் எடுத்துவிட்டால், இந்தம்மாளுடைய நோக்கமும், பிரயாசையும் விருதாவாகப் போய்விடும்; அதினாலேதான் அதற்குச் சம்மதிக்கவில்லை. கடைசியாக இப்புஸ்தகத்தை அச்சிடும்படி ஒருவன் கிடைத்தான். அதன்பிறகு இப்புஸ்தகம் அச்சிடப்பட்டு வெளிக்கு வந்தவுடனே, அநேக இடங்களில் இப்புஸ்தகம் நேர்த்தியான கிரியைசெய்து, ஜெயம் அடைந்தது.

ஆல்பிரட் நோபில் என்கிற தனவானிடத்தில் இந்தப் புஸ்தகம் கிடைத்தது, அதை அவர் வாசித்தார். அவர் இந்தம்மாளை முன்னமே அறிந்திருந்தார். அவர் இந்தப் புஸ்தகத்தை வாசித்தவுடனே பரோனஸ் அம்மாளுக்கு ஒரு கடிதம் எழுதி, தாம் அந்தப் புஸ்தகத்தை அதிகமாக மதிப்பதாகச் சொன்னார். அதோடுகூட, அப்புஸ்தகத்தை எல்லாப் பாஷைகளிலும் அச்சிடப்பட வேண்டுமென்று விரும்பினார்.

அதுமுதற்கொண்டு ஆல்பிரட்நோபில் என்றவரும், பரோனஸ் அம்மாளும் கூடிப் பற்பல இடங்களிலும் உண்டாகும் யுத்தங்களை அமர்த்தவும், சமாதானத்தை உண்டாக்கவும் அதிகமாய்ப் பாடுபட்டு உழைத்தார்கள். ஆனால் ஆல்பிரட்நோபில் என்றவர் அதன்பிறகு வெகுகாலம் ஜீவனோடிருக்கவில்லை, அவர் சீக்கிரத்தில் மரித்துப்போனார்.

தற்காலத்தில், அந்தம்மாளுடைய பிரயாசத்தினாலும், மற்றவர்களுடைய பிரயாசத்தினாலும், யுத்தகாலத்தில் சமாதானம் என்கிற விஷயம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது யுத்தம் நடமாடுகிறசமயத்தில் சமாதானத்தையே நாடவேண்டுமென்று அதிகமாய் வற்புறுத்தி பேசத்தக்க சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யுத்தம் செய்யும் இரண்டு ஜாதியாருக்கும் சரியான உடன்படிக்கையும், யுத்தம் உண்டாகாதபடி சமாதானத்தை நாடும்படியான விஷயங்கள் பற்பல இடங்களில் நடைபெற்று வருகிறது. யுத்தம் நடக்கிறபோது கமிட்டியாராகச் சேர்ந்து, எந்தத் தீர்மானத்தைச் செய்கிறார்களோ, அதற்கு யுத்தம்செய்கிற இரண்டு வகுப்பாரும் கீழ்ப்படிந்து, அவர்களுடைய தீர்மானத்தின்படி சமாதானத்தையே நாடி யுத்தத்தை ஓயப்பண்ணுகிறார்கள். இரண்டு கட்சியாரும் கமிட்டிமார் செய்கிற தீர்மானத்திற்கு இணங்கி கையொப்பமிடுவார்கள். இந்த மாதிரியான முறைகள் பற்பல இடங்களில் நடந்துவருகிறது. முன்னே அதிக யுத்தம் நடந்த இடங்களிலெல்லாம், இந்த முறைகளை அநுசரிப்பதால், வெகுவே சமாதானமே உண்டாகிறது. அநேக மனுஷர்களுடைய உயிரைக் காப்பாற்றுகிறதற்கு இது ஒரு அதிசயமான வழி, இதன்மூலமாய் அநேக தீமைகளையெல்லாம் ஒழிக்க காரணமாய் இருக்கிறது. இந்த நல்ல ஏற்பாடு உலகமுழுவதும் நடைபெறும்படி எல்லாராலும் விரும்பப்படுகிறது. அப்படியே இந்த விஷயம் உலகமுழுவதிலும் ஒற்றுமையாய் அங்கீகரிக்கப்பட்டு நடைபெறுமென்றால், இதற்கென்று பிரயாசையோடு உழைத்த அந்த ஸ்திரீயைப்பற்றி நாம் பெருமைப்படவேண்டும். D. L. R.

## THE BIBLE

## சத்தியவேதம்

இங்கிலாந்து தேசத்து அரசர்களில் ஒருவனை ஒரு பெரிய அரசனாக அழைக்காவிட்டாலும் அவருடைய பெயர் இன்னும் அநேகருடைய ஞாபகத்திலிருக்கிறது. சிலர் விசேஷித்த அறிவுடையவர்களாய்க் காணப்பட்டாலும் அப்படிப்பட்டவர்களை இலகுவாய் மறந்துபோகிறோம். இந்த அரசனுடைய பெயர் அநேகருடைய ஞாபகத்தில் பதிந்திருப்பதற்கு ஒரு காரணம் உண்டு. அது என்னவென்றால், அந்த அரசனுடைய பெயர் ஒரு விசேஷித்த புஸ்தக சம்பந்தமாய் வருகிறபடியால்தான் அந்தப் புஸ்தகம் பற்பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகத்திலுள்ள மற்ற புஸ்தகங்களைப் பார்க்கிலும் விசேஷித்தபிரகாரம் பரவியிருக்கிறது. அந்தப் புஸ்தகம்தான் சத்திய வேத புஸ்தகம். மிஷனெரிமார்கள் உலகத்தின் கீழ்த்திசையிலுள்ள மிலேச்ச பாஷைகளிலும், இன்னும் பற்பல பாஷைகளிலும் சத்திய வேதாகமத்தை மொழிபெயர்ப்பதற்கு முன்னதாகவே இப்புஸ்தகம் சிலரால் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாடு எபிரேய பாஷையிலும், புதிய ஏற்பாடு கிரேக்க பாஷையிலும் எழுதப்பட்டிருந்தது. அவைகளை லத்தீன் பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. இங்கிலாந்திலிருந்த ஜனங்கள் இந்தவிதமான சத்தியவேத புஸ்தகத்தைத்தான் அநேக வருஷங்களாக வைத்திருந்தார்கள். இங்கிலாந்து தேசத்திலிருந்த சில ஜனங்கள்மட்டும் அந்தப் பாஷையைக் கற்றிருந்தபடியால் அப்புஸ்தகத்தை வெகு சொற்பபேர்மாத்திரம் படிக்கவும், அறிந்துகொள்ளவும் கூடியவர்களாயிருந்தார்கள். மற்றப்படி எல்லாருக்கும் அது பிரயோஜனமாய் இருக்கவில்லை.

அநேக வருஷங்கள் சென்றபிறகு சில பக்திமான்கள் அவ்வேதாகம புஸ்தகம் தங்கள் சொந்த பாஷையில் இருக்கும்படி விருப்பமுடையவர்களாய் அதற்கென்று பிரயாசப்பட்டார்கள். அப்படிப் பிரயாசப்பட்ட பக்திமான்களில் ஒருவர், வில்லியம் டின்டல் என்பவர், இவர் நல்ல பக்தியுள்ளவரும், படிப்பாளியுமாயிருந்தார், இவர் தம் இளம்பிராயத்திலிருந்து, ஜனங்கள் தங்கள் சொந்தபாஷையில் சத்தியவேதத்தை வாசித்து அறிந்துகொள்ளவேண்டுமென்று அதிக விருப்பமுடையவராய் இருந்தார். ஆகையால், சத்தியவேதத்தை எப்படியாகிலும் அத்தேசத்து பாஷையில் மொழிபெயர்க்கவேண்டுமென்று ஆவலாய் இருந்தார். அப்படி மொழிபெயர்ப்பது லேசான காரியமல்ல. இக்காலத்திலுங்கூட மொழிபெயர்ப்பது சுலுவாய் இருக்கிறதில்லை. ஏனென்றால் முற்காலத்தில் உதவி கிடைக்காமல் கஷ்டப்பட்டதுபோலவே இக்காலத்திலும் சரியான வார்த்தையில் உதவிகிடைக்காமல் கஷ்டப்பட நேரிடுகிறது. ஒரு பாஷையிலிருந்து இன்னொரு பாஷையில் மொழிபெயர்க்கும்போது ஒன்றுக்கொன்று எந்தவிஷயத்திலும் வித்தியாசப்படாமல் ஒரேமாதிரியான கருத்தை அதன் ஊடே செலுத்தி மொழிபெயர்க்கிற விஷயம் அதிக கஷ்டத்தையும் பிரயாசையையும் கொடுக்கக்கூடியது. ஒரேமனுஷன் இவ்விதவேலையை எடுத்துச்செய்ய ஆரம்பிப்பானானால், இது மகா பெரிய வேலையும், அதிக கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதென்பதற்குச் சந்தேகமில்லை. டின்டெல் என்பவருக்கு இவ்வித கஷ்டங்கள் இருந்ததோடுகூட, வேத புஸ்தகத்தை இன்னொரு பாஷையில் மொழிபெயர்க்கக் கூடாதென்று இங்கிலாந்து தேசத்தில் சர்க்கார் சட்டமும் இருந்தது.

(இன்னும் வரும்.)

## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

(தொடர்ச்சி.)

11. பொன்வெள்ளி யாலமைந்த — பொற்புசேர் பாத்திரங்கள்
இன்னு மனந்தவிதம் — இருந்ததுகாண் பூஷணங்கள்

12. அங்கத்தி லேஜொலிக்கும்—ஆபரணம் பாருமிப்போ
இக்கதை யெடுத்துரைப்பேன்—இன்பமாய்க் கேளுமையா

13. தங்கக் கடகங்களும்—சாம்சாமா மாலைகளும்
சிங்கார மானபல—சிரத்தி னுருப்படியும்

14. மோதிர தினிசுகளும்—மோகனமா மாலைகளும்
பீதகத் தொட்டியாணம்—பின்னும் பலநகைகள்

15. கழுத்தி லணியாரங்கள்—காதணிக் கடுக்கன்கள்
வழுத்தற கரியபல—வைரமணிக் கண்டிகைகள்

16. காப்பு கொலுசுகளும்—காஞ்சனக் கயிறுகளும்
தீப்போ லொளிக்குமுத்து — சிகழிகை கள்தானும்

17. வைத்திருந்த ராஜனவன்—வஸ்திர வகைகளையும்
சித்தம் மகிழ்ந்துயிங்கு—சீராகக் கேளுமையா

18. பட்டங்கி லோமன்களும்—பல்வருணப் பாகைகளும்
சட்டைகளும் பொற்சரிகை—சல்லாக்க ளாடைகளும்

19. குட்டை ருமாலுகளும்-குளிர்காலக் கம்பளியும்
மட்டின்றி நாறு—மடிகள் சால்வைவகையும்

20. துப்பட்டி கள்தினிசும்—சொல்லரும் புடவைகளும்
தொப்பிகளும் குல்லாக்கள் — தொகையாக வைத்திருந்தான்

21. பட்டுவஸ்த் ராதிகளும் — பற்பலவாம் போர்வைகளும்
மட்டமற் றத்திரைகள்—மால்வருணத் தானைகளும்

22. இடையிற்கட் டும்பலவாம்—இசைவானக் கச்சைகளும்
உடம்பின்னீர் நீக்குகின்ற—உயர்வாந் துவாலைகளும்

23. நுவலுதற் கேயரிய—நுட்ப மனேகமுண்டு
இவைக ளெலாமுடைய—இறைவன்கா ணம்மனிதன்

24. மாடுகளு மாடுகளும் — வண்ணான் கழுதைகளும்
கோடகங்கள் ஒட்டகங்கள்—கோவேறுக் கர்த்தபங்கள்

25. பவனந்த னைப்பேணும்—பலவர்க்கக் குக்கல்களும்
கவரிகளுங் கோழிகளும்—கனலிபல வாத்துகளும்

26. வேலைசெய்யு மாளுகளும்—வெவ்வேறு கூலிகளும்
காலையிலு மாலையிலும்—கைகூப்பி நின்றனரே

27. செல்வம் மிகுத்தயிந்த—சீமானுக் கேயிருபு
தல்வ ரிருந்தார்கள்—தாரணியிற் கேளுமையா

28. கல்வி மிகுத்தோரும்-கலைவல்லோ ராளுரும்
அல்லசா தாரணமாய் அகத்தினுள்ளே வாழ்ந்திருந்தார். (இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD



மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்




குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினால் தொடாமல் செய்யப்பட்டது.




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, Madras.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. Lazarus, Vepery, Madras.

**விளம்பரம்.**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மெமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.



Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

NOVEMBER, 1914. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. நவம்பர்மீ, 1914.


5 - NOV 1914
MADRAS
161197

## NEWS AND NOTES

### வர்த்தமானக் குறிப்புகள்

**புதுப் போப்.**—பழைய போப் யுத்தப்போரின் உபத்திரவத்தால் இறந்துபோக புதுப்போப் ஒருவர் நியமிக்கப்பட்டார். போப்புதான் கத்தோலிக் திருச்சபையின் சிரேஷ்ட்ட குரு.

**கவர்னரவர்கள்.** — லார்ட் பெண்ட்லெண்ட் இப்பொழுது மலையாளத்தில் பிரயாணஞ்செய்து வருகிறார்கள். இம்மாதம் 15உ அவரும் பத்தினிமாரும் சென்னைவந்து சேருவார்கள்.

**இளைய ராணிகள்.** — யூரோப்பிலே இப்பொழுது இரண்டு இளைய ராணிமார் உண்டு. இதில் இளைய[illegible] லுக்செம்பர்கு தேசத்தாசி; வயது [illegible]; ராஜ்யம் ஆயிரம் சதுரமைல்; ஜனத்தொகை [illegible],000.

**[illegible]ரோகப் பரிகாரம்.**—ஒரு [illegible]யர் [illegible] பரிகாரம் கண்டுபிடித்திருக்கி[illegible]. ஒருவித அம்மை குத்தலினால் நரையீரலின் ரணங்கள் ஆறி, துவாரங்கள் அடைபட்டு, ஜுரம் நின்று சுகம் உண்டாகிறதாம். இப்படி அம்மை குத்திக்கொண்ட 50 பேரில், 17 பேர் பூரண சௌக்கியமடைந்தார்களாம்.

**இந்திய பட்டாளம்.** — இந்திய பட்டாளம் ஒன்று இப்பொழுது பிரான்சுதேசம் சேர்ந்து சண்டைபோட ஆரம்பித்திருக்கிறது. இந்திய வீரர்கள் அதிக தைரியமாய்ப் போர்புரிவார்கள் என்பதற்கு எவ்வளவேனும் ஐயமில்லை. அவர்கள் சவுக்கியத்திற்காக அநேக நிதிகள் சேர்க்கப்பட்டு, பல தையல்வேலைகளும், பதார்த்தங்களும் சேகரிக்கப்பட்டுவருகிறது.

**ராட்சத மெழுகுவர்த்தி.** — பியர்போன்ட் மார்கனென்ற ஒரு குபேரனின் ஞாபகத்துக்கென்று 16 அடி உயரமும் 4,000 பவுன் எடையுமான ஒரு பிரமாண்ட மெழுகுவர்த்தி செய்யப்பட்டு, ரோம் நகரத்திற் கனுப்பியிருக்கிறது. அது வருஷத்துக்கொருமுறை ஆத்மாக்கள் திருநாளில் 12 மணி நேரம்மாத்திரம் ஏற்றப்படுமாம். இந்தக் கணக்குப்படி அது 3,285 வருஷம் இருக்கவேண்டும்.

**பொன் சுரங்கம்.**—வடஅமெரிக்காவில் அலாஸ்கா என்கிற நாட்டிலே பொன் சுரங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதிலிருந்து வருஷந்தோறும் பவுண் 3,600,000 விலையுள்ள தங்கம் எடுக்கப்படுமாம். அப்பொழுதாகிலும் சாவரன் நாணயம் 10 ரூ. ஆய்விடுமோ? ஆகாது; ஜனங்கள் அதைக்கொண்டு நகைகள் செய்துவருகிறவரைக்[illegible]ம் பொன் விலையேறுமேதவிர ஒருபோதும் இறங்காது.

**ஜர்மன் பாதிரிமார்.** — ஜர்மானியர் தற்காலம் நமக்கு எதிரிகளாயிருந்தாலும், ஜர்மன் பாதிரிமார் அப்படியல்ல. அவர்களில் 800 பேர் பிரிட்டிஷ் ராஜ்யங்களில் ஊழியஞ்செய்துவருகிறார்கள். தம் தேசத்திலிருந்து அவர்களுக்கு இப்பொழுது ஒரு காசுகூட வருகிறதில்லை. அவர்களுக்குத் தக்க உதவிபுரிய பல ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள். ஜர்மன் என்கிற பதத்துக்கு ஜனம், அல்லது சத்தமிடுவோர் என்பது பொருளாம்.

**எடை அளவுகள்.** — இத்தேசத்தில் பற்பல வித[illegible] எடைகளும் அளவுகளும் வழங்கிவருகிறதால், அதிக் குழப்பத்துக்கிடமாயிருக்கிறது. புது மனிதர் ஏமாறி மோசம்போகிறார்கள்: கவர்ன்மெண்டார் இந்துதேசம் முழுவதும் ஒரே எடையும், ஒரே படியும் உண்டாக்கவேண்டுமென்று தீர்மானித்து, இதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அபிப்பிராயமும் தீர்மானமும் விரைவிலே வெளியாகும்.

**ஜர்மன் கப்பல்கள்.** — யுத்த ஆரம்பத்திலே ஜர்மனிக்கு 638 வர்த்தகக் கப்பல்கள் இருந்தன; அவற்றில் 200 பிடிக்கப்பட்டன. பிடிக்கப்பட்ட பிரசல்ஸ் பட்டணத்திலே 5 லக்ஷம் ஜனமிருந்ததாம். ஒரு தினத்திற்கு சகலமான போர்வீரருக்கும் சாப்பாட்டுச் செலவுமட்டும் பவுண் 4,400,000. இதை ரூபாயாக மாற்றிப்பாருங்கள்! ஒரு வீரனுக்கு ஒருநாள் செலவு 7½ ரூ. அல்லது மாதத்திற்கு 225 ரூ. இது நிற்க, எம்டென் என்ற ஜர்மன் கப்பல் அரபிக்கடலிலே இன்னும் ஆறு இங்கிலீஷ் கப்பல்களை மூழ்குவித்ததாம்.

**இந்திய தொழில் முயற்சி.** — இத்தேசத்தில் பற்பல வர்த்தகத் தொழில் முயற்சிகள் தொடங்கி[illegible] தேர்ச்சியடைய இந்த யுத்தந்தான் தகுந்த சமயம். கண்ணாடி வேலைகள், சேலை நெய்தல், தோல் ப[illegible]ணிடல், காகிதப் பட்டறைகள், வர்ணத்தொழில்கள், பற்பல பித்தளை, இரும்புப் பாத்திரங்கள் முதலியன இங்கே செய்யப்பட்டால், நமக்கு எத்தனை அநுகூலமாயிருக்கும்? இந்தத் திரவியத்தையெல்லாம் இதுவரையும் அந்நியநாட்டார் அநுபவித்து வந்தார்களே. நமக்கு வேண்டிய நெருப்புக்குச்சிகளும், குடைகளும்மாத்திரம் எத்தனைகோடியானவை? புத்திசாலிகள் தீர்க்காலோசனைசெய்து கம்பெனிகள் ஸ்தாபித்துச் சில வேலைகளை ஆரம்பித்தால் எத்தனை நலம்!

**ராஜபுத்திரரும் யுத்தமும்.**—இப்பொழுது நடந்துவருகிற பெரும்போரிலே நமது இளவரசரும், கவர்னர்மார்கள் புத்திரர்களும், இங்கிலீஷ் மந்திரி மகனும், பல அரசர்மக்களும் யுத்தஞ்செய்து வருகிறார்கள். பாரதப் போர்போல இந்தப் போரும் சர்வஜன சண்டையாக நடந்துவருகிறது. ஜர்மானியர் துரத்தப்பட்டுவந்தாலும், இதுவரையும் பிரான்சிலிருந்து அப்புறப்படவில்லை. பதினைந்து லட்சம் வீரர்களை மேற்கேவைத்துப் போர்செய்து வருகிறார்கள். பிரதிதினம் 12,000 வீரர் மாண்டுவருவதால், ஒன்றரைகோடி வீரரும் மடிந்துசாகக் குறைந்தது [illegible] மாதஞ் செல்லுமென்று நினைக்கிறோம். ஆனால், தெய்வச்செயல் சண்டையை எப்படித் திருப்புமோ தெரியாது.

**நவம்பர்மீ பஞ்சாங்கம்—**

| வாரம். | நவம்பர்மீ = ஐப்பசி—கார்த்திகை. ⊙ பௌர்ணமி, 2உ ● அமாவாசை, 17உ | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஐப்பசி—கார்த்திகை. | | | | |
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 30 | 7 | 14 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 1 | 8 | 15 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | ... | 18 | 25 | 2 | 9 | ... |
| புதன் ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 3 | 10 | ... |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 4 | 11 | ... |
| வெள் ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 6 | 13 | ... |

## WAR! WAR!

## யுத்தம்! யுத்தம்!

இதுவரையிலும் கேட்டிராத ஒரு பெரும் யுத்தம் நடந்தேறிவருகிறது. இந்த யுத்தத்தில் இங்கிலாந்து, பிரான்சு, பெல்ஜியம், ரஷியா ஒரு பக்கமும்; ஜர்மனி, ஆஸ்திரியா, இன்னொரு பக்கமுமாக எதிர்த்து போர்செய்து வருகிறார்கள். இந்த யுத்தவிஷயம் பயங்கரமாகவே தோற்றுகிறது. யுத்தம் செய்வதில் தீமை இல்லை என்று சொல்ல முடியாது, யுத்தத்தின் பயனாய்ப் பலவித தீமைகளும், கஷ்டங்களும், நஷ்டங்களும் நேரிடக்கூடியதே. பெல்ஜியம் நாட்டின்பேரில் ஜர்மனி

நம்முடைய இங்கிலீஷ் ராஜ்யம் அதிக கவலைக்கும் நஷ்டத்திற்கும் உட்பட்டிருக்கிறது. இச்சமயத்தில் அவரது பிரஜைகளாகிய நம்மவரனைவரும், மாட்சிமைதங்கிய சமதாசனாயும் அவர் குடும்பத்தையும், ராஜாங்கத்தையும் காப்பாற்றவேண்டுமென்று கடவுளை நோக்கி வேண்டிக்கொள்ளவேண்டும். நீதி நேர்மையில் நெறியாயுள்ள நமது இங்கிலீஷ் ராஜ்யத்தின் செங்கோல் நீடூழிகாலம் உயர்ந்திருக்கக் கடவுள் கிருபை செய்வாராக.

2. யுத்தகளத்தில் படுகாயப்பட்டு, பரிதாப நிலைமையில் கிடப்பவர்களையும், யுத்தகளத்தில் தங்களுக்கு அருமையானவர்களைப் பறிகொடுத்துப் புலம்புகிறவர்களையும், பிரஜைகள் தங்கள் வீட்டையிழந்து, பொருளையிழந்து பலவித கஷ்டத்தை அடைகிறவர்களையும்பற்றி நாம் நிர்விசாரமாய்

னுள்ளவர், அவரே நம்மை எல்லா மோசத்திலிருந்தும் தீமையிலிருந்தும் காப்பாற்றுவார். அநேக ஜனங்கள், "புலி அடிக்குமுன் கிலி அடித்தது" என்றதுபோல், "யுத்தம்" என்றவுடன் திகிலடைந்து ஓட்டம்பிடிக்கப் பார்க்கிறார்கள். இது எவ்வளவு புத்தியீனம், மாணம் உன்னைப் பிடிக்கவேண்டும் என்பது கடவுளுடைய சித்தமானால், நீ எங்கே ஓடி ஒளிந்தாலும் உன்னை விடாது. கடவுள்பேரில் நம்பிக்கைவைத்து, நம்மை முற்றிலும் அவருக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய சித்தத்திற்காகக் காத்திருக்கவேண்டும். அவர் அன்புநிறைந்த தகப்பன். தம்முடைய பிள்ளைகளைத் தாங்கி ரட்சிக்க அவருடைய புயம் அதிக வல்லமையுள்ளதாயிருக்கிறது. இச்சமயங்களில், நாம் நன்றிகெட்டவர்களாயிராமல், ராஜபக்தியோடுகூடிய வீரதீரத்தைக் காட்டி,



பேய்ரூட்டும் லீபனோன் மலையும்.

அக்கிரமமாய் படையெடுத்ததினால் இங்கிலாந்து ஜர்மனிக்கு விரோதமாய் சண்டை தொடங்கிற்று. இங்கிலாந்து சத்தியத்திற்காகப் பாடுபடுகிறது. சத்தியமே ஜெயிக்கும்.

1. இந்த யுத்தத்தினால் எத்தனையோ ஸ்திரீகள் தங்கள் புருஷரையும், பிள்ளைகள் தங்கள் அருமையான தாய் தகப்பன்மாரையும், வயோதிபர்கள் தங்கள் புதல்வரையும் இரத்தகளத்திற்குப் பறிகொடுக்கிறார்கள். உயிர்ச்சேதமாத்திரமல்ல, அளவில்லாப் பொருட்சேதமும் உண்டாகிறது. வர்த்தகம், வியாபாரம் யாவற்றுக்கும், கப்பற் பிரயாணத்துக்கும் சொல்லமுடியாத கஷ்ட நஷ்டங்கள் நேரிடுகின்றன. நீதி நேர்மையிலும், தயை தாட்சண்யத்திலும், பிரஜைகளைப் பராமரிப்பதிலும் சிறந்து துலங்குகிற

இருப்போமானால், நாம் மனுஷர்களுக்குரிய குணமுடையவர்களல்ல. இப்பரிதாப நிலைமையிலுள்ளவர்களைக் கடவுள் ஆறுதல்படுத்தி, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை நிவிர்த்திசெய்யும்படி நாம் எல்லோரும் கடவுளை மன்றாடிக் கெஞ்சுகிறதோடு, இக்கஷ்ட ஸ்திதியிலுள்ளவர்களுக்கு நம்முடைய அநுதாபத்தைக்காட்ட நம்மால் இயன்ற உதவி செய்யவேண்டும். சிறிய உதவியானாலும் பெரும் ஈகையாகவே எண்ணப்படும். இவ்விதப் பொருள் உதவியைச் சேகரிக்க நமது சென்னை கவர்னர் அவர்கள் அரும்பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

3. இவ்வித பயங்கர யுத்தகாலத்தில் நாம் கிஞ்சித்தேனும் அதைரியப்படக்கூடாது. நம்மைக் காக்கிற கடவுள் செத்துப்போகவில்லை, அவர் ஜீவ

பயங்காளிகளைத் தைரியப்படுத்தி, கவர்ன்மெண்டாருக்கு உதவிசெய்கிறதே நம்முடைய இங்கிலீஷ் ராஜாங்கத்தாருக்கு நாம் காட்டுகிற நன்றியாயிருக்கும். மற்றப்படி கவைக்குதவாத் காரியங்களைப் பேசி, வீண் திகிலுக்கு இடங்கொடுத்து, வீண் பேச்சுகளை நம்பக்கூடாது. D. L. R.

## THE BIBLE

## சத்தியவேதம்

(தொடர்ச்சி.)

இதினாலேவில்லியம் டின்டெல் என்பவருக்கு சத்திய வேதாகமத்தை இங்கிலீஷ் பாஷையில்



மொழிபெயர்க்க வேண்டுமென்கிற அதிக ஆவல் இருந்தபடியால், இங்கிலாந்துதேசத்தில் இக்காரியத்தைச் செய்ய அவருக்கு வசதியில்லாதபடியால், அவர் இங்கிலாந்துதேசத்தை விட்டு ஐரோப்பாவுக்குப் போனார். அங்கே போய் வெகு சீக்கிரத்தில் புதிய ஏற்பாடு புஸ்தகத்தை மொழிபெயர்த்து அச்சிட்டு, அநேக புஸ்தகங்களை இரகசியமாக இங்கிலாந்துக்கு அனுப்பினார். ஆயிரம் கணக்கான புஸ்தகங்களை அச்சிட்டு இங்கிலாந்துதேசம் முழுமையும் கொடுக்கப்பட்ட அப்புஸ்தகங்களில் இப்பொழுது மூன்றேமூன்று புஸ்தகமாத்திரம் இருக்கிறது. டின்டெல் என்பவர், வேதாகமத்தை முழுமையும் மொழிபெயர்க்கிறவரையில் உயிரோடிருக்கவில்லை. அவர் புதியஏற்பாடு முழுவதையும் மொழிபெயர்த்து முடித்தார். அதன்பிறகு, பழைய ஏற்பாடு புஸ்தகத்தில் சில பாகங்களை மொழிபெயர்த்திருந்தார். அதிலிருந்தே பலவிதமான மொழிபெயர்ப்புகளும், திருத்தங்களும் உண்டானபோதிலும், டின்டெல் என்பவருடைய மொழிபெயர்ப்பே தற்காலத்திலிருக்கும் இங்கிலீஷ் வேதாகம புஸ்தகத்திற்கு அஸ்திபாரமாயிருக்கிறது. தற்காலத்தில் உபயோகப்படுகிற அநேக இங்கிலீஷ் வேதாகம புஸ்தகங்கள் ஜேம்ஸ் அரசர்காலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அவருடைய காலத்தில், வேதாகமத்தை மொழிபெயர்க்க உத்தரவு கொடுத்தபடியால், அதைக் குறித்து காட்டும்படி அவருடைய பெயர் வேதாகமத்தின் முகப்பில் வருகிறது.

இதினாலேயே அவருடைய பெயர் இன்னும் மறக்கப்படாமல் அநேகருடைய ஞாபகத்தில் பதிந்திருக்கிறது. இந்த மொழிபெயர்ப்பு சுமார் 300 வருஷங்களுக்குமுன் உண்டானது. இதைச் சரியான மொழிபெயர்ப்பு என்று சொல்வதைவிட திருத்தம் என்று சொல்லலாம். ஏனென்றால் விசேஷமாய் டின்டெலுடைய மொழிபெயர்ப்புதான் அதில் அதிகமாய்க் காணப்படுகிறது. இங்கிலீஷில் எழுதப்பட்ட வேதாகமம், நேர்த்தியான விதமாய் ஜனங்கள் பேசும் பாஷையில் எழுதப்பட்டிருப்பதால், அதை வாசிக்கிறவர்கள் பாஷையின் மகத்துவத்தைப்பார்த்து அகமகிழாதிருக்கமாட்டார்கள். இவ்வித பாஷையில் எந்த புஸ்தகமும் அப்படி எழுதப்படவில்லை. அந்தப் புஸ்தகத்தில் காட்டிய சத்தியங்களும், போதனைகளும் மனுஷர்களுடைய இருதயத்தில் பதியத்தக்கது.

இந்தியாவிலும் இந்த வேதாகமம் பற்பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்திய பாஷைகளில் மொழிபெயர்க்கும்படி முதல் முதல் பிரயாசை எடுத்துக்கொண்ட மிஷனெரிமார் தகுந்தவிதமாய் ஆவியைப பெற்றவர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்தியாவில் முதல் முதல் வேதாகம மொழிபெயர்ப்பு உண்டாகிச் சுமார் நூறு வருஷமாகிறது. நூறுவருஷத்திற்கு முந்தி இந்தியாவுக்கு வந்த பாப்திஸ்து மிஷன் மிஷனெரிகளாகிய, கேரி, மார்ஷ்மன், வார்ட் என்பவர்கள் இந்தியபாஷையில் மொழிபெயர்க்கும் வேலையை எடுத்துக்கொண்டவர்கள், சீனப்பாஷையிலும் மொழிபெயர்க்கப் பிரயாசப்பட்டார்கள். தற்காலத்தில் வேதாகம புஸ்தகத்தில் ஒருபாகம் ஒரு பைசாவுக்கு வாங்க முடியும் புதிய ஏற்பாடு புஸ்தகத்தின் விலை நாலு அணா மாத்திரம்தான். முழு புஸ்தகத்தையும் ஒரு ரூபாய்க்கு வாங்கக்கூடும். இந்தியாவில் முதல்தடவை வேதாகமபுஸ்தகம் அச்சிடப்பட்டது. சிராம்பூர் என்ற ஊரில் அந்தக்காலத்தில் அச்சிடப்பட்ட புதிய ஏற்பாடு புஸ்தகம் ஒன்றின் விலை இரண்டரை ரூபாய். அப்படி விற்கப்பட்ட அதன் கிரயம் வெகு நயம் என்று நினைக்கப்பட்டது.

தற்காலத்தில்வேதாகமபுஸ்தகத்தைக் கிறிஸ்தவர்கள்மாத்திரம் வாசிக்கிறார்கள் என்று நினைக்க ஏதுவில்லை. ஆனால், அநேக இந்துக்களும், மகமதியர்களும் வாசித்துவருகிறார்கள். எத்தனையோ லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் செலவாகிக்கொண்டு வருகிறது. வாசிக்கிறவர்கள் தங்கள் அநுபவத்தில் வேதபுஸ்தகம் கற்றுக்கொடுக்கிற மாதிரியான போதனைகள் மற்ற எந்த புஸ்தகத்திலும் இல்லை என்று உணருகிறார்கள்.

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

ஐந்தாவது கதை.

### இரண்டு வித்வான்களையும் ஒரு ராஜாவையும்பற்றிய கதை.

ஒரு ராஜாவினிடத்தில் இரண்டு வித்வான்கள் போய் ராஜா சந்தோஷப்படும்படியாக ராஜாவின்பேரில் நல்ல கவிகள்கட்டி வெகு ஆனந்தமாய்ப் பாடினார்கள். ராஜாவுக்கு அதிக சந்தோஷமுண்டானது. ராஜா மறுபடியும் அவர்களைப் பார்த்து, உங்களுடைய பாடல்களைக்கேட்டு அதிக சந்தோஷப்படுகிறேன். ஆனாலும் நான் உங்களிடத்தில் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு சரியான மறுமொழி சொல்லவேண்டுமென்று சொல்லி ஒரு கேள்வி கேட்டார். அதாவது:—முதலாவது, ஒருவனைப்பார்த்து உலகத்திற்கு அரசனென்றும் கடவுளென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்களே. அதில் கடவுள் பெரியவரா? அல்லது ராஜா பெரியவரா? என்று கேட்டான். அதற்கு வித்வான் யோசனைசெய்து, நான் இந்தச் சமயத்தில் கடவுள் பெரியவரென்று சொன்னால், ராஜா நமக்கு ஒன்றும் கொடுக்கமாட்டார் என்று மனதில் சிந்தித்து, ராஜாவே உலகத்தை ஆண்டு நடத்திவருகிற ராஜாவே பெரியவர் என்று உத்தரம் சொன்னான்.

நல்லது என்று அரசன் கேட்டுக்கொண்டு மற்ற வித்யானைப் பார்த்து நீ என்ன சொல்லுகிறாய் என்று கேட்டார்? அதற்கு அவன் தன் மனதில் சிந்தனைசெய்து, ராஜா நம்மைப் போல மன்னான மனிதனேச்சுது; மேலும் இந்த அழிந்துபோகும் நன்மைக்காக நாம் கடவுளை மறுதலிக்கக்கூடாது. அது பெரிய பாவம் என்று மனதில் யோசனைசெய்து ராஜாவே, கடவுள்தான் பெரியவர். ஏனென்றால், அவர்தான் உலக முழுவதையும் உண்டாக்கி அண்டசராசரங்களையும் அடக்கிக் காத்துப் போஷித்து நடத்துகிறவர். அவர்தான் மகிமையுள்ளவர் என்று சொன்னான்.

அரசன் இருவரையும் உட்காரும்படிச்செய்து இருவருக்கும் வெகுமானம் கொடுக்கும்படியாக யோசித்து அரண்மனைக்குள் போனான். அங்கே பூசணிப்பழம் எடுத்து அதில் ஒரு பவுண் உள்ளே செல்லும்படியாக துவாரம்செய்து, அதனுள் 10 பவுண் போட்டு அந்தப் பூசணிக்காய்க் கீற்றினால் மூடிவிட்டு, கையில் இரண்டு பவுனும் இரண்டுபடி அரிசியும் அந்தப் பூசணிப்பழமும் ராஜா பெரியவனென்றுசொன்ன வித்வானுக்குக் கொடுத்தார். கடவுள் பெரியவர் என்று சொன்னவனுக்கு இரண்டுபடி அரிசியும் 4 அணாவுமாத்திரம் கொடுத்தான். அதைச் சந்தோஷமாய் வாங்கிக் கொண்டான். இருவரும் அரசனுக்கு மரியாதை செய்துவிட்டுத் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். வழியில் பூசணிப்பழமும் இரண்டுபடி அரிசியும் இரண்டு பவுனும் வாங்கினவன் மற்றவனைப் பார்த்து நீயும் அப்படிச் சொல்லியிருந்தால், உனக்கும் பவுண் கிடைத்திருக்குமே என்று பெருமையாகப் பேசினான். இருவரும் வழிபிரிந்து போகும்போது, பவுண் வாங்கின வித்வான் நமக்கு இரண்டு பவுண் கிடைத்திருக்கிறதே நாம் ஏன் இந்தப் பூசணிப்பழத்தைச் சுமந்து கஷ்டப்படவேண்டும் என்று கடையில் போய் விற்றுவிடலாமென்று யோசித்து ஒரு கடையில் போய் ஒன்றரை அணா விற்கு விற்று வீட்டுக்குப் போய்விட்டான்.

மற்ற வித்வான் பொறுமையோடு கடவுள் சித்தம் எப்படியோ அப்படியே ஆகட்டும் என்று சொல்லித் தன் வீட்டிற்குப் போய்த் தன் பெண்ஜாதியினிடத்தில் அரிசியைக்கொடுத்து சமையல் செய்யும்படி சொல்லிவிட்டுத் தான் கடைக்குப்போய், காய்கறி வாங்கிவரும்படிப் போனான். அங்கே ஒரு பூசணிப்பழம் அகப்பட்டது. அதன் விலை 2 அணாவென்று கடைக்காரன் சொன்னான். உடனே 2 அணாக் கொடுத்து பூசணிக்காய் வாங்கி வீட்டில் பெண்ஜாதியினிடத்தில் கொடுத்தான். அவள் வாங்கிச் சமையலுக்காகத் துண்டாக வெட்டினாள். அதற்குள் உள்ளே கலகலவென்ற சப்தமும் பவுண் பிரகாசமும் கண்டாள். அவளுக்கு இருந்த ஆனந்தம் சொல்லமுடியாது. ஓடிப்போய் புருஷனைக் கூப்பிட்டாள். இருவரும் சந்தோஷமாகப் பவுண்களை எடுத்தார்கள். பத்துப் பவுணிருந்தது. இருவருக்குமிருந்த சந்தோஷம் சொல்லமுடியாது. அப்போதுதான் வித்வான் கடவுளை நினைத்து அவருடைய அற்புதமான மகிமையைக்கண்டு களிகூர்ந்து கடவுளை மகிமைப்படுத்தினான். கடவுளை நம்புகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது, அவரை நம்பினால் ஒருபோதும் கைவிடமாட்டார்.

அந்த அரசனுக்கு முன்பாகக் கடவுளை மகிமைப்படுத்தினான். ஆகையினால் தெய்வம் அரசனுடைய வீணெண்ணத்தை அவமாக்கினார். அரசனோ, பூசணிப்பழத்தில் வைத்த பவுனை வெளிக்குச் சொல்லாதபடி அவன் வீட்டிலேபோய் வெட்டும்போது அரசனுடைய சந்தோஷத்தை நினைப்பானென்று சொல்லி பூசணிப்பழத்தைக் கொடுத்தான். அவனோ கையில் இரண்டுபவுண் இருந்த சந்தோஷத்தினால் பூசணிப்பழத்தை அற்பமாக நினைத்து பளுவாயிருக்கிறதென்று கடையில் விற்றுவிட்டுப் போய்விட்டான். அந்தப் பூசணிக்காயைத்தான் கடவுள் தம்மை மகிமைப்படுத்தின வித்வானுக்கு ரகசியமாய் வெளிப்படுத்திக் கொடுத்தார். இதனால் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்? உலகத்திலே அழிந்துபோகிற அற்பமான உலக ஆதாயத்திற்காகக் கடவுளை மறுதலிக்கக்கூடாது. அதனால் இம்மையிலும் ஆசீர்வாதமிருக்காது, மறுமையிலும் ஆசீர்வாதம் கிடைக்காது. ஆனால் அவரை எக்காலத்திலும் நம்பி மறுதலிக்காமல் துன்பத்திலும் இன்பத்திலும் அவரை மகிமைப்படுத்துகிறவர்களுக்குக் கடவுளுடைய ஆசீர்வாதம் இம்மையிலும் மறுமையிலும் சம்பூரணமாகக் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. சத்தியவேதத்திலும்கூட இப்படியே அநேக பரிசுத்தவான்கள் பணத்திற்காக அல்ல கடவுள்பேரிலுள்ள அன்பினால் தங்கள் உயிரையும் தத்தம் செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு நேரிட்டிருந்த கொடூரமான மரணதண்டனைகளைக் கூட அசட்டைபண்ணாமல் கடவுள் நாமத்தை மகிமைப்படுத்தி யிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைத்த சிலாக்கியம் என்ன? எக்காலத்திலும் அழிந்துபோகாத ஜீவகிரீடத்தை யணிந்து ஜெயம் பெற்று இருக்கிறார்கள். நாமும் அப்படியே துன்பத்திலும் இன்பத்திலும் கர்த்தரை மகிமைப்படுத்துவோமாக.

கர்த்தரே தேவன் அவரையல்லாமல் வேறொருவருமில்லை என்பதை நீ யறியும்படிக்கு இது உனக்குக் காட்டப்பட்டது. (உபா 4. 35.) G. D.

## A GARLAND OF INSTRUCTIVE STORIES

## நீதிகதா ஆரம்.

இப்பெயர்கொண்ட பல நல்ல கதைகள் அடங்கிய ஒருசிறுநூலை வேளச்சேரி, A. A. M. ஸ்கூல் ஹெட்மாஸ்றர் கனம்: S. G. தாமஸ் அவர்கள் இயற்றியிருக்கிறார். பல பத்திரிகைகளில் வெளிப்பட்டதும் தாமே இயற்றியதுமான இந்தக் கதைகள் சொற்சுவையும் பொருட்சுவையும் அமைந்து, யாவருக்கும் பயன்படத்தக்க எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. 105 பக்கங்களுள்ள இப்புஸ்தகத்தை மேற்படியாரிடம் 6 அணாவுக்கு வாங்கிக்கொள்ளலாம்.

# MELLIN'S FOOD



TRADE MARK. TRADE MARK.

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி







கையினால் தொடாமல் செய்யப்பட்டது

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.


Registered No. M. 442.




OFFICE OF THE REGISTRAR ... 10 DEC 1914 ... MADRAS.

# சத்திய தூதன்.

DECEMBER, 1914. PRICE, 1 PIE.—விலை, க பை. டிசெம்பர், 1914.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**இந்தியாவுக்காக ஜெபம்.** — இம்மாதம் 6௳ ஞாயிற்றுக்கிழமை இந்துதேச மெங்கும் கிறிஸ்தவர்கள் கூடி இந்நாட்டின் இகபர க்ஷேமங்களுக்காக கடவுளைப் பிரார்த்திப்பார்கள்.

**தென் இந்தியாவில் கிறிஸ்துமார்க்கம்.** — சென்ற வருஷத்தில் இந்நாட்டிலே ஏறக்குறைய 6 லட்சம் புரோட்டிஸ்டாண்ட் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அவர்கள் செலுத்தின காணிக்கை ஏறக்குறைய 5 லட்சம் ரூபாய்.

**உயர்தரக் கல்வி.**—சென்றமீ 18௳ சென்னையில் நடந்த கல்வி மகோற்சவத்தில் 1,134 பேர் எப். ஏ; பி. ஏ; பி. எல். முதலான பல உயர்ந்த கலாசாலைப் பட்டங்கள் பெற்றார்கள். நாற்பது வருஷத்துக்கு முன்பு 50 பேர் கூடக் கிடையாது. இதனால் தென் இந்தியாவிலே கல்வி அடைந்து வருகிற ஏராளமான விர்த்தியைக் காண்கிறோம்.

**நார்வேயிலே நவயந்திரம்.**—மின்சாரத்தைக் கொண்டு பற்பல தொழில்களைச் செய்யத்தக்க ஒரு யந்திரம் நார்வே நாட்டில் உண்டுபண்ணியிருக்கிறதாம். அதனால் வயல்களுக்கு எரு தயார் செய்யப்படுகிறது. சமைத்தல், விளக்கேற்றல், கழுவல், தச்சவேலை, கருமான்வேலை, குதிரை தேய்த்தல், ஆட்டுமயிர் கத்தரித்தல் முதலான பல தொழில்கள் நடந்துவருகின்றன.

**யுத்தகாலம்.** — இப்பொழுது ஜர்மனியிலே செம்புப்பஞ்சமும் தானியப்பஞ்சமும் குடிகொண்டிருக்கிறது. செம்பைக்கொண்டுதான் துப்பாக்கிரவைகளும், குண்டுகளும்வேறு பல யந்திரக் கருவிகளும் செய்யப்படுகின்றன. இதனால் ஜூன் மாதம் மட்டுந்தான் சண்டை நடக்குமென்று அநேகர் எண்ணுகிறார்கள். இத்தாலியும் யுத்தத்திற் சேரும்போல் தோன்றுகிறது.

**லேடி டிப்போ.** — லேடி பெண்ட்லண்ட் பிரயத்தினத்திலே சென்னை மங்கையர்கள் சேர்ந்து பணமும் பொருளும் சேகரித்து, கம்பளி குல்லாக்கள், சால்வைகள், பனியன்கள் முதலான அவசியமான உடுப்புகள் செய்து நமது இந்திய வீரருக்குப் பெட்டி பெட்டியாய் அனுப்பி வருகிறார்கள். இந்த யுத்தத்தினாலே தீமைமாத்திரமல்ல, நன்மையும் விளைகின்றது.

**சட்ட சங்கத்தில் சாவு.**—குன்னிராமன் நாயர் என்கிற ஒரு சட்ட சங்கத்து மெம்பர் நன்றாய்ப் பேசி முடிந்ததும், நாற்காலியில் மூர்ச்சையாய் உட்கார்ந்து அடுத்த அறைக்குக் கொண்டுபோனவுடனே மரித்துப்போனார். அவர் குமாரன் கண்டேத் பிரெசிடென்சிக் காலேஜில் இதிகாச வித்வான். இந்தியர்களுக்குச் சடுதி மரணம் கொஞ்சம் சகஜந்தான்.

**சேனைத்தலைவர் மரணம்.**—பேர்போன போர்வீரர் லார்ட் ராபர்ட்ஸ் சென்றமாதம் இந்திய வீரரைப் பார்க்க பிரான்ஸ்தேசம் போயிருந்த சமயத்தில் சீதளங்கண்டு தேகவியோகமானார். அவருக்கு வயது 82. இங்கிலாந்திலே வயோதிபத்தில் சுகமாயிருப்பதை மறுத்து, இந்தியவீரரை தைரியப்படுத்தும்படிக் கப்பலேறிச் சென்றார். முற்காலத்தில் லார்ட் ராபர்ட்ஸ் இந்தியாவிலே சேனைத்தலைவராயிருந்தவர்.

**எம்டென் கதி.** — சமுத்திரத்தில் 16 கப்பல்களை மூழ்குவித்து ஏராளமான திவ்விய நஷ்டம் உண்டுபண்ணிவந்த எம்டென் கப்பல் கடைசியிலே தென் சமுத்திரத்தில் டெலிகிராப் கம்பியை அறுக்க முயலுஞ் சமயத்தில், ஒரு ஆஸ்திரேலிய கப்பலால் துரத்துண்டு குண்டுசுட்டுத் தகிக்கப்பட்டது. 200 பேருக் கதிகமானவர்கள் மாண்டார்கள், காப்டனும் மந்திரியும் கைதிகளானார்கள். இனி எம்டென் எமலோகஞ் சென்றதென்று சொல்லலாம்.

**ஆஸ்பத்திரிக் கப்பல்.**—நமது கவர்னரவர்களின் முயற்சியால் காயப்பட்ட இந்திய வீரருக்குத்தக்க பரிகாரஞ் செய்யத்தக்க கப்பல் ஒன்று தயார் செய்யப்பட்டுப் புறப்பட்டுப்போயிருக்கிறது. அதிலே சமஸ்த பதார்த்தங்களும், மருந்துகளும், வஸ்திரங்களும் ஏராளமாய்ச் சேகரித்திருக்கிறது. சுகமாய்ப்போய் லண்டன் நகரம் சேருமென்று கோருகிறோம். கர்னல் கிப்பர்ட் அதற்கு வைத்திய தலைவர். பல இந்தியர்களும் போயிருக்கிறார்கள். கப்பலின் பேர் "மதராஸ்."

**யுத்தம்.** — இப்பொழுது யுத்தம் தொடங்கிச் சுமார் 3½ மாதம்போலாகிறது. மேல் யூரோப்பிலும், கீழ் யூரோப்பிலும், இன்னும் ஆப்பிரிக்கா முதலான பல ஸ்தானங்களிலும் சண்டை மும்முரமாய் நடந்தேறிவருகிறது. வருகிற தந்திகளைக் கவனித்தால், சண்டை இன்னும் 3, 4 மாதம் நடக்குமென்றும், முடிவிலே ஜர்மன் ராஜ்யம் சமாதானத்துக்கு வருமென்றும் சொல்ல இடமுண்டு. தற்காலம் போர்செய்துவருகிற போர்வீரரின் தொகை, ஜர்மனி 50 லட்சம்; பிரான்ஸ் 40 லட்சம்; இங்கிலாந்து 20 லட்சம்; ரஷியா 70 லட்சம்; ஆக மொத்தம் 180 லட்சம். யுத்தத்தில் மாண்ட 30 லட்சம்பேர் இதில் அடங்கியிருக்கிறது. மிச்சம் 150 லட்சத்தில் சுமார் 100 லட்சம் அல்லது ஒருகோடி வீரர் மடிவார்களாயின், சண்டை முடிவுக்கு வரும். அதற்குப் பின்பு போர்புரிவோர் வேறு யாரும் கிடையாது. இந்த யுத்தத்தில் இப்பொழுது துருக்கியும் புத்திப்பிசகாய்ச் சேர்ந்துவிட்டது. நமது பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் என்கிற இளவரசரும், யுத்தக்களத்துக்குச் சென்றிருக்கிறார். யுத்தம் விரைவிலே முடியவேண்டுமென்றும், அதிலிருந்து நாமும் அறியாத அருமையான பல நன்மைகள் பிறக்கவேண்டுமென்றும், நாமெல்லாரும் கடவுளைப்பார்த்து அநுதினமும் பிரார்த்தித்துவரவேண்டும்.

**டிசெம்பர்மீ பஞ்சாங்கம்—**

| வாரம். | டிசெம்பர்மீ = கார்த்திகை—மார்கழி. ⊙ பௌர்ணமி, 2௳ ● அமாவாசை, 17௳ | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கார்த்திகை—மார்கழி. | | | | |
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 6 | 13 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 7 | 14 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 1 | 8 | 15 |
| புதன் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 2 | 9 | 16 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | 31 | 18 | 25 | 3 | 10 | 17 |
| வெள் ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 4 | 11 | ... |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 5 | 12 | ... |

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

ஆறுவது கதை.

### ஆதாமே ஆதாமேயென்ற விறகுவெட்டிக் கதை.

ஒரு கிராமத்தில் ஒரு ஏழைக்குடியானவன் தனக்குப் பயிர்பச்சை இல்லாமையால் தன் ஜீவனத்துக்காக காட்டில்போய் விறகு வெட்டிவந்து அதை விற்றுத் தன் பசியை ஆற்றிவந்தான். ஆனால் அந்தத்தொழில் அவனுக்கு அதிக கஷ்டமாகக் காணப்பட்டது. ஒருநாள் சாயந்தரம் சில பெரிய மரக்கட்டைகளைக் கோடரியினால் வெட்டித் துண்டாகச் செய்துகொண்டு இருந்தான். அப்போதவன் கோடரியை ஓங்கி வெட்டும்போதெல்லாம், ஆதாமே, ஆதாமே, நீ செய்த பாவத்தினால் அல்லவா என் முகத்தின் வேர்வை சிந்தும்படி இந்தமாதிரிக் கஷ்டப்படுகிறேன் என்று சொல்லிச் சொல்லி வெட்டினான். அப்போது அந்த வழியாக வந்த ஒரு துரை, அவன் சத்தத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவனைக் கேட்டார், என்ன அப்பா, ஆதாமே ஆதாமே, யென்றுசொல்லி வெட்டுகிறாயே, அதின் காரணமென்னவென்று கேட்டார். அப்போது அந்த ஏழைமனிதன் சொல்வான், துரையவர்களே அந்த ஆதாம்செய்த பாவத்தினால்தான் நான் என் வேர்வைசிந்தப் பாடுபட வேண்டியதாக இருக்கிறது. மற்றப்படி நான் இந்தக் கஷ்டப்படவேண்டியதில்லையே யென்று சொன்னான். அப்போது அந்த துரை சொன்னார். சரிதான், நீ என் அரமனையில் வந்து நல்ல சாப்பாடு சாப்பிட்டு சுகமாய் ஜீவிக்க வருகிறாயாவென்று கேட்டார். உடனே அந்த மனிதன் அப்படியே வருகிறேன் துரையே யென்று சொல்லி ஆசைப்பட்டான்.

உடனே துரை அவனை தன் வண்டியில் ஏற்றித் தன் அரமனைக்குக் கொண்டுபோய்த் தன் வேலைக்காரரிடம் ஒப்புவித்து, அவனை நன்றாய் ஸ்நானஞ்செய்வித்து நல்ல உடுப்புகள் மாட்டி என்முன் கொண்டுவாருங்கள் என்று கட்டளையிட்டான். அப்படியே வேலைக்காரர் அவனைச் சுத்தஞ்செய்து உடுப்புகள் உடுத்தி துரையிடம் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். துரை அவனைப்பார்த்து இப்போது நன்றாயிருக்கிறாயே. இனிமேல் தினம் ஸ்நானஞ்செய்து திரேகம் உடையெல்லாம் சுத்தமாக இருக்கவேணும். உனக்கு வேண்டிய சகல சாதனங்களும் இங்கே உனக்கு கொடுக்கப்படும். ஆகையினால் நீ வெளியே போகக்கூடாது. இன்னும் நான் உனக்கு விசேஷமான ஒரு கட்டளை கொடுக்கிறேன். அதாவது இந்த அறைக்குள்ளாக அநேகவிதவிதமான தின்பண்டங்கள் இருக்கிறது. நீ உனக்குத் தேவையான நேரம் எல்லாம் எடுத்துச் சாப்பிடலாம். யாதொரு தடையில்லையென்று விவரமாய்க் காண்பித்துக் கொடுத்தார். அப்புறம் நான் உனக்கு சொல்லுகிறேன். இதோ தெரிகிற இந்தப் பெட்டியை மாத்திரம் நீ திறக்க வேண்டாம். மற்றப் பெட்டிகளையெல்லாம் திறந்து நீ யெடுத்துச் சாப்பிடலாமென்று சொன்னார். அதற்கு அப்படியே ஆகட்டும் துரையேயென்று உத்தாரம் சொன்னான்.

அப்படியே அந்த மனிதன், அந்த அரமனையில் 15 நாளாக நல்ல சுகத்தை அனுபவித்துக்கொண்டு இருக்கும்போது இவனுக்குள் ஒரு கெட்ட எண்ணம் உண்டானது. என்னவென்றால்: இந்த துரை எல்லாப் பெட்டிகளையும் திறந்து சாப்பிடலாம் இந்தப் பெட்டியைமாத்திரம் திறக்காதே யென்று சொல்லியிருக்கிறாரே; இதில் ஏதோ ஒரு புதுமையான பலகாரம் இருக்கவேணும், அல்லது உயர்ந்த முத்துக்கள், நகைகள் வைத்திருப்பாரோ தெரியவில்லையே; நாம் அதைத் திறந்துபார்க்கவேணுமென்று தன் மனதில் தீர்மானித்துக்கொண்டு ஒருநாள் துரையில்லாத நேரத்தில், மெதுவாக அந்தப் பெட்டியைத் திறந்தான். திடீரென்று உள்ளேயிருந்து சில எலிகள் வெளியே ஓடினது. உடனே இவன் திடுக்கிட்டு ஐயோ, மோசம்போனேனேயென்று திகைத்து அங்கும் இங்குமாக ஓடி அந்த எலிகளைப் பிடித்து அடைக்க எத்தனித்துத் துரத்திப் பிடிக்கிறதற்குள்ளாக, அங்கே இருந்த பீங்கான் கோப்பைகள் எல்லாம் தட்டி விழுந்து எல்லாம் உடைந்துபோனது. இவனுக்கு உண்டான கலக்கம் ஐயோ, துரை என்னசெய்வாரோ தெரியவில்லையே. அவர் திறக்கவேண்டாமென்று சொன்ன பெட்டியைத் திறந்துவிட்டேனே என்று அங்கலாய்த்துக்கொண்டு இருந்தான். கொஞ்சநேரம் பொறுத்து துரை வந்தார். எல்லாம்உடைந்துகிடந்தது. துரை பார்த்ததும் இது யார்செய்த வேலையென்று கேட்டார். அதற்கு அந்த மனிதன், துரையே தாங்கள் திறக்கக்கூடாதென்று சொன்ன பெட்டியைத் திறந்தேன். உள்ளேயிருந்து சில எலிகள் ஓடினது. உடனே நான் பயந்து அவைகளைப் பிடித்து அடைத்துவிடலாமென்று சொல்லி ஓடிப் பிடித்தேன். அதற்குள்ளாகக் கைபட்டு எல்லாம் கீழே விழுந்து உடைந்துவிட்டது துரையேயென்று சொன்னான். உடனே துரை கோபங்கொண்டு தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு, அவனுக்கு உடுத்தியிருந்த உடுப்பையெல்லாம் கழற்றிவிட்டு, அவனை அடித்துத் துரத்திவிடுங்கள் என்று சொல்லி, அவனைப் பார்த்து கேட்டார். இது யார்செய்த பாவம் அப்பா, சொல்லு என்று கேட்டார். அப்போ சொல்லுகிறான், துரையே இது ஆதாம்செய்த பாவம் அல்ல நான்தான் இந்தப் பாவத்தைச் செய்தேனென்று அலறினான். உடனே துரை சொன்னார். ஆதாம் செய்த பாவத்துக்கு ஆதாம் தண்டனை அடைவான். நாம்செய்த பாவத்துக்கு நாம்தான் தண்டனை அடையவேண்டுமென்று சொல்லி, அவனுக்கு நன்றாய் உணர்த்திக் காண்பித்துவிட்டு வெளியே துரத்திவிட்டார். இதினால் நாமும் கற்றுக்கொள்ளவேண்டியது. நமக்குக் கடவுள் கொடுத்த கட்டளைகளை மீறி நடக்காதபடி, எச்சரிக்கையாய் நடந்து அதை கைக்கொள்ளவேணும். மீறி நடப்போமேயானால் நாமும் தண்டனைக்குள்ளாவோம். தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். 1 கொ. 10 12.

G. D.



காஷ்மீரப் படகு.



## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(ஐூலைமீ தொடர்ச்சி.)

தேவனை உலகத்திற்கு வெளிப்படுத்தியிருக்கிறவரும், பாவங்களை நீக்கி ரட்சிக்கிறவரும், ஸ்திரீ ஜனங்களுக்கு சுயாதீனம் அளிப்பவருமாகிய இயேசுகிறிஸ்துநாதர் இந்தியாவிலுள்ள ஆறரைக் கோடி இஸ்லாமியருக்கும் அத்தியந்த அவசியம். மகம்மதுமார்க்கத்தின் தூண்களென்று சொல்லப்படுகிற பஞ்சானுஷ்டானங்கள் தெரிந்த நாணல் தூண்களே. மத்தியஸ்தரும் பாவப் பிராயச்சித்தப் பலியுமான ஒருவருக்காகத் தவனங்கொண்டிருக்கும் ஆத்துமாவை ஏகதேவ வணக்கம் மாத்திரம் திருப்திசெய்யமாட்டாது. இஸ்லாமியரின் ஜெபங்கள் வெளியாசாரக் கிரியைகளும் வெறும் வார்த்தைகளுமே. ஜெபிக்கிறவர்களில் மனத்தூய்மை இருக்கவேண்டுமென்று அம்மார்க்கம் கற்பிக்கிறதுமில்லை. ஜெபத்தினால் இருதய சுத்தமடைவதும் அசாத்தியம். இம்மார்க்க உபவாசங்கள் வெளிவேஷத்திற்கும் ஆராதுரித்தனத்திற்கும் ஏதுகாமேயன்றி வேறல்ல. தானதர்மங்களோ சோம்பேறித்தனத்திற்குக் கைகொடுக்கின்றவைகளாயிருக்கின்றன. மெக்கா யாத்திரை சுயநயத்தையும் கர்வத்தையும் உண்டாக்கும் ஏதுவே.

இந்தியாவிலுள்ள மகம்மதியருக்காக நாம் என்ன செய்யக்கூடும்? (1) இஸ்லாமியரோடு அனுதாபத்தோடும் அறிவோடும் சம்பாஷிக்கத்தக்கதாக கொரானையாவது, மகம்மது மார்க்கத்தைப்பற்றிச் சொல்லிய மற்ற ஏதாமொரு நூலையாவது படிப்பது நலம். (2) ஒரே தேவ வணக்கமும் ஜாதிபேதமின்மையும் மகம்மது மார்க்கத்திலுள்ள சிரேஷ்ட குறிப்புகள் என்பதை உணர்ந்து நம்பிக்கையோடு அவர்களுக்குள் சாட்சி பகரவேண்டும். (3) தேவ அன்பையும் பாவம் நீங்கும் வழியையும் பரிசுத்தமாய் ஜீவிக்கும் ரகசியத்தையும் அன்போடு அவர்களுக்குச் சொல்லவேண்டும். (4) இஸ்லாம் மதஸ்தரான ஆறரைக்கோடி ஜனங்களுக்காகவும் அவர்களுக்காக வேலைசெய்யும் மிஷனெரிமாருக்காகவும் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

8. இந்துசமயம். — இந்தியாவின் குடிகளில் மூன்றில் இரண்டுபங்கு ஜனங்களின் மார்க்க சித்தாந்தங்கள், மதானுஷ்டானங்களுக்கு இந்துசமயம் என்ற பேர் வழங்கிவருகிறது. மற்ற மதப்பெயர்களுக்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தைக் கவனித்துக்கொள்க. இந்துசமயம் என்பதற்கு இந்துதேச சமயம் என்பதே பதப்பொருள். பஞ்சாப், வடமேற்கு மாகாணம், காஸ்மீர், பர்மா என்ற மாகாணங்கள் நீங்கலாக மற்றெல்லாவற்றிலும் இந்துசமயத்தவரே ஜாஸ்தி. இவர்கள் தொகையோ ஜனசங்கைக்கு ஜனசங்கை சற்று குறைந்தேவருகிறது. 1891–க்கும் 1901–க்கும் இடையில் 100–க்கு 1¼ வீதம் குறைவு. 1901–க்கும் 1911–க்கும் இடையில் 100–க்கு 4½ வீதம் ஜாஸ்தி.

இந்துசமயம் ஒரே தன்மையதான மார்க்கக் கொள்கையிலிருந்து பிறந்ததன்று. அது ஒரே அடியிலிருந்தாவது ஒரே வேரிலிருந்தாவது தோன்றின ஒரே ஆலவிருக்ஷம் போன்றதல்ல. ஓரிடத்தில் பெரிதும் சிறிதுமான நானாவகை மரங்கள் செடிகள் நிற்பதாகவும், நிற்கும் செடிகளில் சில ஒரே வேரிலிருந்து தோன்றியும், இன்னும் சில தூரத்திலிருந்து கொண்டுவந்து நாட்டியும் உள்ளதாகவும், இவைகளெல்லாவற்றையும் தன் நிழலின் கீழ் அடக்கிக்கொண்ட ஓர் பெரிய ஆலவிருட்சம் இவற்றிற்கு மேலாக நிற்பதாகவும் பாவித்துக்கொண்டால், அப்பேர்ப்பட்ட ஒரு விருட்சத்திற்கே இந்துமார்க்கத்தை ஒப்பிடலாம். சர்வேசுரவஸ்துவைக் கிட்டிச் சேர்வதற்கு அரபிக்கடலுக்கும் வங்காளக்குடாவுக்கும், இமாலயமலைக்கும் கன்னியாகுமரி முனைக்கும் மத்தியில் மானிடர் என்னென்ன வழிகளை ஏற்படுத்திக்கொண்டார்களோ அவைகளனைத்திற்கும் சேர்த்தே இந்துமதம் என்ற பேர் வந்திருக்கிறதாகச் சொல்லலாம். கலைக்ஞான வித்வான்களும், முடிமன்னரும், ஆராதிக்கும் பெரிய பெரிய ஆலயங்களும், சாதாரண ஜனங்கள் மூடத்தனமாய்க் கட்டிவைத்து குங்குமப் பொட்டிட்டு மலர்தூவி நமஸ்கரிக்கும் ஒருபிடி களிமண்ணும், எவனோ ஒருவன் ஆவேசம் நிற்பதாகப் பாவித்து வழியருகே இரண்டுகல் சேர்த்துத் தீபம் ஏற்றி அர்ச்சனைசெய்யும் சமாதியும், எல்லாம் இந்து சமயத்துக்குள் சேர்ந்ததே. இவற்றில் எதைக் கையாடுகிறவனும் இந்து சமயத்தவனே.

இதர மதங்களோடு சம்பந்தப்படும் பொழுதெல்லாம் அவ்வவற்றிலுள்ள சிற்சில அம்சங்களைத் தன் சித்தாந்தங்களோடு சேர்த்துக்கொண்டு, காலத்துக்குத்தக்கதாக மாறிக்கொள்வதே தொன்றுதொட்டு இந்துமத வழக்கம்.

பூர்வம் இப்பாதகண்டவாசிகளான ஆவேச வணக்கத்தாருடன் இந்துமதஸ்தர் சம்பந்தப்பட்ட போதும், அப்பால் புத்தமதம் வந்தபொழுதும், இந்நவீன மதங்களிலிருந்தும் இந்துமதம் சில சித்தாந்தங்களைச் சேர்த்துக்கொண்டதென்று கவனிக்கலாம். தற்காலத்திலுங்கூட மகம்மதுமார்க்கக் கொள்கைகளுக்கும் கிறிஸ்துமத உபதேசங்களுக்கும் இசைவாய் மாற்றப்பட்ட இந்துமதாசாரங்களும், வியாக்கியானங்களும் பல உள.

இந்துக்கள் தங்கள் ஆகமங்களை "வெளிப்படுத்தல்" என்றர்த்தங் கொடுக்கும் "சுருதி" என்றும், "பாரம்பரியம்" என்றர்த்தங் கொடுக்கும் "ஸ்மிர்தி" என்றும் இரண்டு வகுப்பாய்ப் பிரித்திருக்கிறார்கள். இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற சதுர்வேதமே முந்தின வகுப்பைச் சேர்ந்தது. இவைகள் ஆயிரம் வருஷக்காலமாய் எழுதப்பட்டவை. கி. மு. 1500–ம் வருஷம் துவக்கி, கி. மு. 500–ம் வருஷம் வரை எழுதப்பட்டிருக்கலாம். ஒவ்வொரு வேதத்திற்கு மந்திரம், பிராமணம் உபநிஷதம் என மூன்று முக்கிய பிரிவுகளுள. இம்மூன்றும் மூன்று திட்டமான காலங்களில் ஒன்றன்பின் ஒன்றாய் வெளியானவை. இந்நூல்களை ஆராயுங்கால் இந்துசமய விருத்தியின் பற்பல பக்குவதசைகளைக் காணலாம். (இன்னும் வரும்.)

## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

(அக்டோபர்மீ தொடர்ச்சி.)

29. உண்பதிற் குறைவுமில்லை-உடுப்பதிற் குறைவுமில்லை
கண்கண்டவற்றையெல்லாம்-களிப்பா யனுபவித்தார்
30. கைகாப்புக் கால்காப்பு–கனவிலை மோதிரங்கள்
வைய்யக மெச்சும்பல–வச்சிரக் கடுக்கன்கள்
31. கழுத்தில்முத் தாரங்கள்–கண்டசாங் கள்பலவாம்
வழுத்தற் கருஞ்சகல–மகிமைக ளின்னுமென்ன
32. பாடகந் தண்டையெழில்–பாதஸரம் பற்பலவாம்
நாடுக ளதிசயிக்கும்–நானா விதநகைகள்.
33. பட்டுபட் டாவளிகள்–பாங்கான வஸ்திரங்கள்
மெட்டுடனே யுடுத்தி–மேதினியில் வாழ்ந்திருந்தார்.
34. இருவரில் மூத்தவனோ–இருந்தானே சற்குணனாய்
அருமையாந் தந்தை–சொல்லுக் கமைந்தானே சந்ததமும்
35. தந்தையரின் சொற்படிக்குத்– தன்வளவைக் காத்து வந்தான்
சொந்தமாம் பெற்றோரின்–சொல்லுக் கடங்கி வந்தான்.
36. சாந்தம் தயைபொறுமை–சர்வகுண சம்பன்னன்
மாந்தர்க ளால்தினமும்–மதிப்பதைப் பெற்று வந்தான்.
37. வீட்டி னலுவல்கள்–மேல்மிகவுங் கரிசனனே
காட்டிலும் வேலைகளை–கவனம தாய்ப்புரிந்தான்.
38. தந்தை மனையாளும்–தன்மனைபோ லெண்ணி தொழில்
எந்தநே ரந்தனிலும்–எச்சரிக்கை யாய்ப்புரிந்தான்.
39. நஞ்சையையும் புஞ்சையையும்–நானா நிலங்களையும்
துஞ்சாது காத்துவந்தான்–துஷ்டரோ டேயிணங்கான்.
40. வேலையாள் கூலிகளை–மேதினியில் புத்தியுடன்
காலைமாலை நடத்தி-களித்தானே யின்னுமவன்
41. தந்தையுட சொத்துகளைத்–தாரணியி லேமோசம்
வந்திடாக் காத்துப்பல–மானவனாய்த் தானிருந்தான்.
42. பெற்றோர் பெரியோர்க்குப்–பேசாம லேயடங்கி
சற்றுங் குறைவிலது–சந்தோஷ மாயிருந்தான்.
43. வீட்டிற் கதிகாரி–வெளியிலு மதிகாரி
காட்டுக்கு மதிகாரி–காணேநீ பின்வருகும்.
44. இளைய மகனுகும்–ஈனனோ டம்பனவன்
களைத்துப்போ காமல்தம்பிக் – கதையைக்கேளிங்குசற்று.
45. வீட்டி விருந்துபல–வேலைகளைப் பாரானே
காட்டிலு மேட்டிலுமே–தங்குல் பகல்திரிவான்.
46. பள்ளிக்குப் போகானே–பாடங்கள் கற்கானே
எள்ளளவுந் தந்தைமொழி–யேற்று நடக்கானே.
47. சாப்பாட்டு வேளைக்குத் – தம்பிசரி யாய்வருவான்
மூப்பா னவர்கள்முன்னில்–முடுக்காகப் பேசிடுவான்.
48. தருதலைப் பையன்கள் – சகவாசம் வைத்து தினம்
தெருவி லலைந்துமிகச்–செருக்காய் நடந்திடுவான்.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD



மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது.







மெல்லின்ஸ ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மோத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் இரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.

Registered No. M. 442.




# சத்திய தூதன்.

JANUARY, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜனுவரி, 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்.

**ஒரே குடும்பத்தில் 17 போர்வீரர்.**—ஜீன்னோ என்னும் ஒரு பிரெஞ்சுக்காரனது குடும்பத்தில் 17 சகோதரர்கள் யுத்தத்துக்குப் போயிருக்கிருர்கள்.

**குஷ்டரோகிகள் சங்கம்.**—இந்தத் தீராப்பிணியாளிகளின் சௌக்கியத்துக்காகச் சென்ற வருஷத்தில் சுமார் 28,500 பவுண் சேர்க்கப்பட்டது இது ரூபாயில் 42 லட்சமாகிறது. அவர்களுடைய ரோகநிவிர்த்திக்காக எத்தனையோ நிபுண வைத்தியர் மருந்து கண்டுபிடிக்கப் பிரயாசப்பட்டு வருகிருர்கள்.

**கோச்சியரசர்.**—சிறிது காலத்துக்கு முன்பு சஷ்டிப்பூர்த்தி, அதாவது அறுபதாங் கலியாணம் கொண்டாடின இவ்வரசர் சென்றமீ 7௳ தமது ராஜஉத்தியோகத்தை ராஜிநாமா செய்துவிட்டார். இதனுல் குடிகளுக்கு மெத்த துக்கமாயினும், 60 வயதாய்விட்ட ராஜாவுக்கு மிக்க சாந்தியும் சுகமும் உண்டாகும். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் யாவரும் 55 பிராயத்திலே பென்ஷன் பெற்றுக்கொள்ளுகிருர்கள்.

**பிரிட்டிஷ் ராஜ்யம்.**—விஸ்தீரணத்திலும், ஜனத்தொகையிலும், செல்வத்திலும், தர்மகுணத்திலும் இதற்கு நிகரான ராஜ்யம் கிடையாது ஜனத்தொகைமட்டும் 40 கோடி; இத்தொகையைக் கிரகிக்க முடியாது; விஸ்தீரணத்தில் தன் சொந்த தேசமாகிய கிரேய்ட் பிரிட்டனிலும் 95 மடங்கு அதிகப்பட்டது; உலகமுழுவதிலும காற்பங்கும், உலக ஜனத்தொகையிலே ஏறக்குறைய அரைப்பங்கும் உடையதாம்.

**ஜர்மன் யுத்தக்கலங்கள் மாண்டது.** பிரமாண்டமான 4 ஜர்மன் யுத்தக்கப்பல்கள் பிரிட்டிஷ் யுத்த மாலுமியாலே குண்டு சுட்டு அமிழ்த்தப்பட்டன. இது எதிரிக்குப் பெருத்த நஷ்டமென்றே சொல்லவேண்டும். இதில் ஒவ்வொரு கப்பலும் நமக்கு யமனுக எதிர்ப்பட்ட "எம்டென்" போன்றது ஐம்பது விலைபெறும். இன்னுமொரு யுத்தக்கப்பலேயும் துரத்திக்கொண்டு வருகிருர்கள். அதுவும் பிடிபட்டு அமிழ்த்தப்படுமென்று எண்ணுகிரும்.

**சேனை வகைகள்.**—பிரெஞ்சு, ஜர்மன் சேனை வகைகளாவன: 1 முழுச்சேனை = 2 டிவிஷன்; 1 டிவிஷன் = 2 பிரிகெட்; 1 பிரிகெட் = 2 ரெஜிமெண்ட்; 1 ரெஜிமெண்ட் = 3 பட்டாளம். இங்கிலீஷ் முறையாவது: 1 முழுச்சேனை = 2 டிவிஷன்; 1 டிவிஷன் = 3 பிரிகெட்; 1 பிரிகெட் = 4 பட்டாளம். ஒரு பட்டாளத்துக்குச் சுமார் 1,030 போர்வீரர். இதனுல் ஒருமுழுச்சேனையிலே எத்தனை போர்வீரரிருப்பார்களென்று கண்டுகொள்ளலாம்.

**நீமதரசர்.**— ஜார்ஜ் சக்கரவர்த்தி 150 வருஷகாலமாக நடவாத ஒரு முயற்சி எடுத்துக்கொண்டார். இந்தக்காலத்தில் எந்த இங்கிலீஷ் அரசனும் செய்யாதவண்ணமாய், தாம் கப்பலேறிக் கடலைக் கடந்து பிரான்சு தேசத்துக்குப் போய் அங்குள்ள இந்தியவீரர், இங்கிலீஷ், பிரெஞ்சு, பெல்ஜியன் வீரர்களைக் கண்டு பேசி, நயவசனமுரைத்து, அவர்களை உற்சாகப்படுத்தி, உதவிபுரிந்து தன்னுடு திரும்பினர். இதனுல் சொல்லமுடியாத வீரதீரமும், மனேதைரியமும் உண்டாயிருக்கிறது

**புது வருஷம்.**—இந்தப் புது வருஷத்தில் இந்த பத்திரிகையை வழக்கமாக வாசித்துவருகிற எமது நண்பர் யாவருக்கும் சுகமும் செல்வமும் இகபர பாக்கியங்களும் பூர்த்தியடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிரும். பத்திராதிபர் இந்தப் பேப்பரை ஆரம்பித்து இப்பொழுது 28 வருஷமாகிறது. இது பெருத்த காலமென்றே சொல்லவேண்டும். அவரும் இன்னும் சிறிதுகாலம் ஜீவித்திருந்த இந்தப பத்திரிகையை நடத்தும்படி போதுமான சுகமும் பலமும் ஞானமும் பெறவேண்டுமென்றும் நீங்களும் அவருக்காக வேண்டிக்கொள்ளவேண்டும்.

**யுத்தகாலம்.**—யுத்தம் எப்பொழுது ஒழியும் என்கிற கேள்வி எங்கும் கேட்கப்படுகிறது. சில பேர் ஆறுமாதத்தில் என்றும், வேறு சிலர் 2 வருஷத்திலென்றும், இன்னுஞ் சிலர், 3 வருஷத்திலென்றும் பலவாருக உத்தேசிக்கிருர்கள். யுத்தசாஸ்திரத்தில் தேர்ந்த ஒரு யுத்த சாஸ்திரி சரியாய் மூன்று வருஷம் செல்லும் என்கிருர். இப்பொழுது போர்புரிந்துவருகிற சர்வ சேனைகளின் முழுத்தொகை 150 லட்சம். இதிலே 45 லட்சம் ஜர்மானியர்; இவர்கள் சேனையில், சென்ற நாலு மாதத்தில் தினம் 40,000 விழுக்காடாக, சுமார் 25 லட்சம்பேர் மடிந்தும், கைகால் ஒடிந்தும், கைதிகளாயும் கிடக்கிருர்கள். எல்லாருயிரும், மேற்படி 1½ கோடி வீரர்களின் உயிரும் செருக்கு மடங்க இரண்டு, இரண்டரை வருஷம் பிடிக்கும். ஔஸ்திரியர் தற்காலம் பிணக்கெடுத்திருக்கிருர்கள். கள்ளப் புருஷனை நம்பிச் சொந்தப் புருஷனைப் பறிகொடுத்த பெண்ணைப்போல் தவிக்கிருர்கள். இதுநிற்க, மேற்கே பிரெஞ்சு, பெல்ஜியம், இங்கிலீஷ் ராணுவங்கள் பெர்லினை நோக்கி நெருங்கிவர, கிழக்கே ரஷிய சேனைகள் அந்த நகரத்தை நோக்கிச் செல்கின்றன. 1917–ம் வருஷத்தில் பர்லின், கழுத்துக்குக் கத்திவைக்கிற தருணமாயிருக்கும். ஜர்மன் அரசக் குடும்பங்களைச் சேர்ந்த 8 இளவரசர்கள் மடிந்துபோயிருக்கிருர்கள். ஜர்மன் வர்த்தகம் அர்த்தநாசமாகி இப்போது பூர்த்தி நாசமாகிவிட்டது. கைசர் என்னும் சக்கரவர்த்திக்கு நல்ல சுகமும் நித்திரையும் கிடையாது. நெருப்பிலே கையிட்ட சிசுவைப்போல் அங்கலாய்க்கிருர். ஒருவேளை போர்த்துகலும், இத்தாலியாவும் அவருக்கு விரோதமாயெழும்பி யுத்தத்தில் கைகலக்கும்போலிருக்கிறது. எல்லாரும் கடவுளை நோக்கி இடைவிடாது மன்றுடி வரவேண்டும்.

## ஜனுவரிமீ பஞ்சாங்கம்—

| வாரம். | ஜனுவரிமீ = மார்கழி—தை. ⊙பௌர்ணமி,1,31௳ ● அமாவாசை,15௳ | | | | | | மார்கழி—தை. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 20 | 27 | 4 | 11 | 18 |
| திங்க ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| செவ் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| புதன் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 23 | 30 | 7 | 14 | ... |
| வியா ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 24 | 1 | 8 | 15 | ... |
| வெள் ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 18 | 25 | 2 | 9 | 16 | ... |
| சனி ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 19 | 26 | 3 | 10 | 17 | ... |

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

ஏழாவது கதை.

### தாயார் இரண்டு குமாரரிழந்த கதை.

ஒரு துரையும் துரைசானியும் தங்களுக்குக் கிடைத்த இரண்டு ஆண்குழந்தைகளை அதிகமாக நேசித்து நல்ல தெய்வபயத்தில் வளர்ந்தவரா நன்ருய் ஜெபித்து வளர்த்துவந்தார்கள். பிள்ளைகளும் அப்படியே அந்தச் சிறுவயதிலே கர்த்தரை நேசித்து நல்ல பிள்ளைகளாகப் பள்ளிக்கூடத்தில் படித்துவந்தார்கள். இப்படியிருக்கும்போது ஒருநாள் துரை

இவ்வளவு நடந்தும் துரை வீட்டில் இல்லை. அவருக்குத் தெரிவிக்கவும் இல்லை. ஆனால் துரைசானியோ மனதில் எவ்வளவு துக்கம் இருந்தாலும் அடக்கிக்கொண்டு நல்ல நைவலம் வாங்கி இரண்டு பிள்ளைகளுக்கும் போட்டு பக்குவப்படுத்தி ஒரு பதாயத்தில் வைத்துப் பூட்டிவிட்டாள். தினம் போய்த் திறந்துபார்த்து வியாகுலப்பட்டுக்கொண்டு இருந்தாள். துரையும் சர்க்கோட்டு முடிந்து வீடு வந்து சேர்ந்தார். அப்பொழுதுகூட துரைசானி சொல்லவில்லை; துரை பிள்ளைகளைத் தேடினர். அப்பொழுது துரைசானிசொல்வாள், அவர்கள் பள்ளிக்கூடம் போயிருக்கிறர்கள்; வருவார்கள் என்று சொல்லிவிட்டாள். மணி 12 ஆகிவிட்டது. இன்னும் வரவில்லையேயென்று கேட்டார். அப்பொழுது துரைசானி, அவர்களுக்குப் பரீட்சை ஆகிறது; நாம்

போனதும் துரைசானி சாவியை யெடுத்து பத்தாயத்தைத் திறந்து காண்பித்தாள். துரைக்கு மயக்கம் உண்டாகிவிட்டது; மயக்கம்தெளிந்து இருவருமாக அங்கலாய்த்து மனக்கவலைப்பட்டு வேதனையடைந்தார்கள். ஆனாலும் துரைசானிக்கிருந்த தைரியத்தைப் பார்த்து துரை தானும் தைரியங்கொண்டு பிள்ளைகளை நல்லடக்கம்செய்து கர்த்தரிடத்தில் தங்களுக்கு ஆறுதல் கிடைக்க ஜெபித்தார்கள்.

இந்தத் துரைசானி தன் பிள்ளைகள் இரண்டும் கடவுள் தனக்குக் கொடுத்த முத்துக்களாக நினைத்திருந்தாள். ஆனால் கடவுள் அந்தத் தங்கமான பிள்ளைகளைத் தமக்கு வேணுமென்று அழைத்துக்கொண்டார். ஆகையினால் நாம் கலக்கம் அடைகிறதினால் பிரயோஜனம் இல்லை. கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். அவருடைய நாமத்துக்கு ஸ்தோத்



லாப்லந்தில் ஞாயிற்றுக்கிழமை.

சர்க்கோட்டுக்குப் போய்விட்டார். போய் 4 நாளைக்குப் பிற்பாடு பள்ளிக்கூடம் போய்வந்த பெரிய குமாரன், அம்மா, தலைநோவுது என்று சொல்லிப் படுத்தான். உடனே துரைசானி திகிலடைந்து பெரிய டாக்டர்களைக் கூப்பிட்டுத் தன்னால் ஆனமட்டும் பிரயாசப்பட்டுப் பார்த்தாள். ஆனால் கஷ்டப்பட்டுப் பார்த்தும் 3—ஆம் நாள் பிள்ளை இறந்துவிட்டான். துரைசானிக்கிருந்த வருத்தமும் கவலையும் தாங்கமுடியாதிருந்தது; அப்படியே பெரிய பையன் இறந்த அடுத்தநாள் சிறு பையனும், அம்மா தலைநோவுது என்று சொல்லிப் படுத்தான். துரைசானிக்கோ இன்னும் அதிகமான கவலை அடைந்தவளாக, இன்னும் வேறு வைத்தியர்களைக் கூப்பிட்டு நன்ருய்ப் பார்த்தாள். அந்தப் பையனும் 3—ஆம் நாள் இறந்துபோய்விட்டான்.

முந்திச் சாப்பிடலாம் என்று சொன்னாள். இருவருமாகத்தீனிமேஜையில்உட்கார்ந்தார்கள். சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது துரைசானி சொல்வாள். கொஞ்சகாலத்துக்கு முன்னதாக ஒரு சற்குரு வந்து இரண்டு அழகிய முத்தைக் கொடுத்தார். அவர் கொடுக்கும்போது, நான் கேட்கும் தருணம் யாதொரு தடையில்லாமல் கொடுக்கவேணுமென்று சொல்லிக் கொடுத்தார். ஆனால் துரை சர்க்கோட்டுக்குப் போனபிற்பாடு வந்து அந்த இரண்டு முத்தையும் கேட்டார். அதைக் கொடுக்கலாமா? கொடுக்கக்கூடாதா? என்று கேட்டாள். அப்பொழுது துரை சொன்னர், சொல்லிக்கொடுத்தால் கொடுக்காமல் வைத்துக்கொள்ளக்கூடாது; உடனே கொடுத்துவிடு, நான் அந்த முத்தைப் பார்க்கட்டும் என்று கேட்டார். அப்பொழுது அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும் இருவருமாக ஒரு அறைக்குள் போனர்கள். அங்கே

திரம் என்று சொல்லித் தங்களுடைய மனதில் ஆறுதல் அடைந்தார்கள். ஆருத துக்கத்தில் அவர்களுக்குக் கர்த்தர் திரும்ப மன ஆறுதல்களை கட்டளையிட்டார். நீரே இதைச் செய்தீர் என்று நான் "என் வாயைத் திறவாமல் மவுனமாயிருந்தேன்." சங். 39. 9.

G. D.

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

**முதலாவது: மந்திரங்கள் எழுதப்பட்டகாலம்.**— மந்திரங்கள்தான் ஒவ்வொரு வேதத்திலும் அதிபூர்வ பாகம். இவை கி. மு. 1500—க்குப் பின்னும்,



கி. மு. 800—க்கு முன்னும் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. இந்து நதி தீரத்தில் ஆரியர் குடியேறினகாலத்தில் அவர்கள் பாடின பாடல்களும் சொன்ன ஜெபமந்திரங்களும் அவைகளில் அடங்கியிருக்கின்றன. இப்பாடற்றிரட்டுகளில் மகா முக்கியமானதும் அதி பூர்வீகமானதுமே இருக்கு வேதம். பற்பல தேவர்களின்பேரில் பாடிய பாடல்களும் ஸ்துதிகளும் இதில் உள. சாமவேதத்தில் பெரும்பாலும் இருக்குவேத ஜெபமந்திரங்களே உண்டு. 75 பாடல்கள்மாத்திரம் புதிது. இதில் சோமயாகம் அர்ப்பணைசெய்யும் சமயத்தில் எவவற்றை எப்போதெப்போது சொல்லவேண்டுமென்றும் அவவற்றை இன்னின்ன ராகத்தில் பாடவேண்டியது என்றும் ஒழுங்குப்படுத்தி விவரித்திருக்கிறது. யஜுர் வேதத்திலுள்ள மந்திரங்களிலும் பெரும்பாலும் இருக்கு வேதத்திலுள்ளவைகளே உண்டு. இத்துடன் வசனரூப மூலமந்திரங்களும் சில உள. பற்பல பலிசெலுத்தும் சமயத்தில் அவவற்றை உபயோகிக்கவேண்டிய கிரமப்பிரகாரம் அவைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று வேதங்கள்மாத்திரம் வேதப்பிரமாணங்களாக முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டன. அதர்வண வேதமாகிய நான்காம் வேதம் பிசாசுக்களைக் கட்டும் மாந்திரிய வாக்கியங்கள் நிறைந்திருக்கின்றது. வெகுகாலப் போராட்டத்தின்பேரிலேயே மற்ற மூன்று வேதங்களோடும் இது சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இந்தியாவில் குடியேறின ஆரியர்களுடைய பூர்வ மதம் அல்லது "சதுர்வேத மதம்" எப்படிப்பட்டதென்று இப்புராதன பாடல்களைக்கொண்டு தீர்மானிக்குங்கால், அது இயற்கைச் சத்துவங்களை தெய்வங்களாக வழிபடும் மார்க்கமாக விருந்தது என்று தோன்றுகிறது. சதுர்வேத மதானுசாரம் சுலபமானதே. ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வோர் பள்ளமிருக்கும். அதில் திவ்ய அக்னி எரிந்துகொண்டிருக்கும். அதில் சோமரசமும் நெய்யும் ஊற்றி தேவர்களுக்குப் பலியாகத் தகனிப்பார்கள். மிருகபலிகளும் சாதாரணமாய்ச் சமர்ப்பிக்கப்பட்டன.

**இரண்டாவது: பிராமணங்கள் எழுதப்பட்ட காலம்.**—இவை கி. மு. சுமார் 800—க்குப் பின்னும், கி. மு. 500—க்கு முன்னும் எழுதப்பட்டவையென்று சொல்லலாம். தேவர்களைச் சாந்திசெய்ய புதுப்புது ஜெபமந்திரங்கள் பாடுங்காலம் நின்றுபோனது. நவீன மந்திரங்கள் பாடுப் வேலை ஒழிந்த பூசாரிகள் யாகத்திற்கு வேண்டிய சடங்காசாரங்களை விஸ்தாரமாக்குவதில் காலம் போக்கினார்கள். இத்தொழிலை ஏற்றபடி செய்யத்தக்க பூசாரிகளைப் பயிற்றுவிப்பதற்குப் பூசாரி பாடசாலைகளும் இருந்தன. இவைகளில் பூசாரிகள் படித்த சடங்காசாரப் பாடப் புஸ்தகங்களே **பிராமணங்கள்**. சதுர்வேத மந்திரங்களுக்கும் ஆசாரங்களுக்குமுள்ள சம்பந்தத்தையும், ஒவ்வோர் சடங்குக்குள்ள ஞானார்த்தத்தையும் இதில் வசனரூபமாக விவரித்திருக்கின்றது. நாலு வேதத்துக்கும் நாலு பிராமணம் உண்டு. யாகம் நிறைவேற்றும் வேளையில் பூசாரிகள் தாம் தாம் செய்யவேண்டியதைத் திட்டவட்டமாய் செய்யத்தக்கதாகக் குறிப்புகள் இதில் கண்டிருக்கின்றன. இது தவிர தேவ தேவதைகளின் புராதன சரித்திரமும் இலக்கிய இலக்கண விறைபக்களும் மாந்திரிய மொழிகளுங்கூட அவைகளிலிருக்கின்றன. உலகத்திலுள்ள சகல கிரந்தங்களிலும் இவற்றைப் போல படிப்பதற்குச் சுவையற்றதும் கேட்பதற்கு ருசியற்றதுமான நூல்கள் எங்குமில்லை என்பது பொது அபிப்பிராயம்.

புனர்ஜனன உபதேசம் இக்காலத்திலேயே தலைகாட்டுகிறது. ஜாதிபேத ஏற்பாடும் இப்போதே உற்பத்தியானது. ஆரியர்கள் அலகபாத்வரையிலும் பரவிவிட்டார்களென்று தோன்றுகிறது.

**மூன்றவது காலம்: உபநிஷத காலம்.**—இது பிராமண கலைஞானத்தின் பிந்தின விருத்தியைக் காட்டுகிறது. வெகுகாலமாய்ப் பலபல யாகங்களையும் ஸாவேத்தியங்களையும் அநுஷ்டித்துக் களைத்துப்போன சிலர், மதத்தின் சாராம்ஸம் சடங்காசாரத்தில் அல்ல இருதய பத்தியிலே நிற்கிறதென்ற பெரிய சத்தியத்தைக் கண்டறிந்தார்கள். இதின் விபரமே யோகஞான விஷயமான நூல்களாகிய **ஆரண்யகாசம்** என்றும் கிரந்தங்களில் கண்டிருக்கிறது. காட்டில் ஏகாந்தத்திலிருந்து ஓதும்படிக்கோ, கற்கும்படிக்கோ எழுதப்பட்டவையாகையால் ஆரண்யகாசம் என்ற பேர் வந்தது. "உபநிஷதம்" என்றால் பக்கத்தில் உட்காருதல் என்றர்த்தம். குருவின் பக்கத்தில் உட்கார்ந்து கற்கும் போதனை என்ற கருத்துக்கொள்ளும். அப்பால் இவ்வித அந்தரங்க ஆழ்ந்த போதனையைக் குறிக்க அவை பிராமணங்களின் அந்தத்தில் சேர்க்கப்பட்டபடியால் வேதந்தின் முடிவு என்று அர்த்தங்கொண்ட "வேதாந்தம்" என்றும் அழைக்கப்படுகின்றன. பரமாத்மாவின் தன்மையைப்பற்றியும், பிறப்பு நீங்கி பரமாத்மாவோடு ஜீவாத்மா ஐக்யமாகி முக்திசேரும் வழியைப்பற்றியும் உபநிஷதத்தில் கூறியிருக்கிறது. உபநிஷத நடை செய்யுள்ளலங்காரமும் தர்க்க சம்பாஷணைகளும் தத்துவசாஸ்திர மனோராஜ்யங்களும் கலந்துள்ளதாகக் காணப்படுகிறது. சர்வமும் தெய்வம் என்ற உபநிடத மூலாதார சித்தாந்தம் பிற்காலத்தில் வேதாந்த சாஸ்திரமாக பெருப்பிக்கப்பட்டது.

மேலே கண்ட மூன்று கோர்வையான நூல்களே **வேதம்** என்றழைக்கப்படுகிறது. 'சுருதி' அதாவது கடவுளாலேயே அருளப்பட்ட கிரந்தம் என்பது இவற்றையே.

**நான்காவது சூத்திரங்கள்** தோன்றின. இவை கி. மு. சுமார் 500—க்குப் பின்னும், கி பி 200—க்கு முன்னும் வரையப்பட்டிருக்கலாம். பிராமணங்கள் சொல்விரிவும் வளவளப்பான பாஷைநடையுமுள்ளவைகளாயிருந்தமையால், மனனம் செய்யக் கஷ்டமாய்க் காணப்பட்டன. ஆகவே எளிதில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளத்தக்க சுளுவான சுலோகநடையாகப் பிராமண விதிகளை எழுதுவது அவசியமாயிற்று. பூசாரி சீடர் கற்கவேண்டிய அறிவெல்லாம் சுருக்கமான சூத்திரக் கோர்வைகளாகச் சொல்லப்பட்டன. இவைகளைத் திரட்டிச் சேர்த்தபோது **சூத்திரங்கள்** என்ற கிரந்தங்கள் உண்டாயின. தவிரவும், இக்காலத்தில் நூல்கள் எழுதியவர்களெல்லோரும் இவ்வித பாஷைநடையிலேயே எழுத ஆரம்பித்தார்கள். சடங்காசாரங்களை விளக்கிய **ஷிரௌத சூத்திரம்**, இல்லறத்துக்குரிய **கிரஹ சூத்திரம்**, ஜன ஒழுக்கத்தையும் நியாயசட்டங்களையும் கூறும் **தர்ம சூத்திரம்** என்று மூன்றுவித சூத்திரங்கள் உண்டாயின.

(இன்னும் வரும்.)

## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

(தொடர்ச்சி.)

49. அபத்தமாம் வார்த்தைகளை—அஞ்சாது பேசிடுவான்
    சபதமு மானைகளும்—தாராள மாயிடுவான்.
50. வம்பும் வழக்குகளும்—வலிய யிழுத்திடுவான்
    செம்பல் பெருமைகளை—செப்பிடக்கே ளின்னுங்கொஞ்சம்.
51. பெண்பிள்ளை யோடுசண்டை—பெரியவர்களோடுசண்டை
    மிண்டனு கத்திறிந்து – வெட்டிப் பருக்கை தின்றுன்.
52. துஷ்டர் மொழிகேட்டு—சொக்கினன் மெத்த மெத்த
    சிஷ்டனைக் கண்டாலே – சினந்து முணு முணுப்பான்.
53. தந்தை குணமறிந்து—தக்கபடி நடவாமல்
    சிந்தை கலங்கிக்கெட்டு – செறுக்கடைந் த
    னொருநாள்.
54. தந்தை சமூகம்வந்து—தனக்குவரும் பாகமை
    இந்தட் சணமெனக்கு—ஈயுமென்று னேனை
    மகன்.
55. தந்தையிந்த வார்த்தைகளை – தன்காதி னு
    கேட்டு
    நொந்துரைப்பு தேதென்று—நோக்குவீர் ஐயை
    யோ.
56. அப்பா மகனேஎன் – அருமையுள்ள கண்
    ணியே
    எப்படிநீ புத்திகெட்டாய்—என்றுரைப்பா ம
    ந்தனுக்கு
57. என்னகுறை யுந்தனுக்கு—ஏது விசனமுனக்
    என்னாலே வந்ததென்று – எடுத்துரைப்பா
    மைந்தாநீ.
58. கெட்டவ ருடன்கூடி – கெட்டாயோ இந்
    புத்தி
    விட்டுவிடு சேயேநீ—விசனமதை மூட்டாதே
59. சின்னஞ் சிறுவயதில் – சீர்கெட்டுப் போ
    மனம்
    என்னமாய் வந்ததென்று – எனக்குத் தெரி
    லேயே.
60. பொருளை செலவுசெய்ய – போர்ந்த அனு
    பவமும்
    ஒருபோதும் போதாதே—ஒதுங்கிப் போட
    மகனே.
61. பங்கைக் கொடுத்தாக்கால்—பங்கம்வந்து நேர்
    திடுமே
    வங்கர்கள் கூடியுன்னை—மயக்கிப் பிடுங்கி
    வர்.
62. கெட்ட புதல்வனென—கேலிசெய்கு வார்பெ
    ரியோர்
    மட்டுமெரி யாதையுடன்-மனையி விருந்திடப்
63. குறையுனக் கொன்றுமில்லை – குற்றமொன்
    றும் செய்யவில்லை
    அறைந்தஎன் சொற்படிக்கு—அடங்கி யிரும
    னே
64. என்றுசொல்ல அப்போது—என்னசெய்தான்
    டம்பனவன்
    நின்றுசற்றுக் கேளுமையா – நிகழ்த்துவே
    னெதனுட
65. தந்தையரே தந்தையரே—தர்க்கம்செய்ய விட
    போது
    வந்தேனென் றுநினைக்க-வழியொன்று மி
    லையா
66. ஆதிமுத லும்வீட்டில்—யாதொரு சுயாதீனப்
    ஏதெனக்குச் சொல்லுமையா—எந்தையே
    ட்டிடுவீர்.
67. இந்நாள் வரையுமிங்கே—இருந்ததும் போத
    மையா
    கன்றுபின் றுவெனவே—கதறிப் புலம்புகிறீ
68. தூரத்தில் போயதிசந்—தோஷத் துடன்வா
    காரண முண்டேனையா—கடுகவே பாகமை
69. பங்காக்கியேதருவீர்-பதிலொன்றும் பேசாம
    எங்காகி லும்போய்நான்—ஏகாந்த மாய்ப்பிழை
    ப்பேன்
70. பாகம் தாராவிடிலோ – பங்கங்கள் செய்தி
    வேன்
    வேக மடங்காது—மெய்யிதுகாண் எந்தையே
71. எந்தபுத்தி சொன்னாலும்—எந்தனுக்கு ஏறு
    பந்தத் திருந்தென்னை—பாக்கியவா னாக்கி
    மே
72. இன்றே தருவீரே—இன்பமுடன் போய்வி
    வேன்
    நன்றே பிழைத்துப்பல—நாடுகளில் வாழ்
    திடுவேன்.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD



மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.







மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1914.

Registered No. M. 442.

4-FEB 1915 MADRAS.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

FEBRUARY, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. பெப்ருவரி, 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**ஜர்மன் விர்த்தி.** — யுத்தவிஷயத்திற்காக ஜர்மனியிலே ஒருலட்சம் மோட்டார் கார் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

**ஒரு பிராஞ்சு மிஷன்.** — ஆறுலட்சம் ரூ. வருமானம் பெற்றுவந்த இந்த மிஷன் அது முழுவதையும் யுத்தகாரணத்தால் இழந்துவிட்டது.

**ஆசாம் பிஷப்பு.**—சென்றமீ 10உ ஞாயிற்றுக்கிழமை கனம்: பேக்கினுய்ஷ் ஐயர் கண்காணியாராக அபிஷேகம்பெற்றார்.

**வயோதிக வீரன்.**—எண்பத்தாறு வயதுசென்ற ஒரு பென்ஷன் சோல்ஜர் 35 மைல் நடந்து கிச்சனர் பிரபுவைக் கண்டு தன்னை யுத்தபூமிக்கு அனுப்பவேண்டுமென்று கோரிக்கொண்டானும்.

**எருசலேம் அரசன்.**—இப்பொழுது டர்க்கிக்கும் இங்கிலாந்துக்கும் நடக்கிற யுத்தத்தில் பேர்போன எருசலேம் பட்டணம் பிடிக்கப்படும்போலிருக்கிறது. அப்பொழுது அதற்கென்று ஒரு கிறிஸ்தவ அரசன் முடிசூட்டப்படுவானென்று சிலர் உத்தேசிக்கிறார்கள்.

**சென்றமாதத்துக் கூட்டங்கள்.**—சென்ற கிறிஸ்மிஸ் வாரமுழுவதும் சென்னைமாநகரத்தில் திருவிழாக் கொண்டாடினாற்போலிருந்தது. வருஷாந்தர நாஷனல் காங்கிரெஸ் சபை சென்னையில் கூடினது. இது மகா முக்கியமான சபை. இதனால் இந்திய ஜனங்கள் பல வகுப்பும் வர்ணமும் பொருந்தியவராயினும் ஒரே ஜனமாக்கப்படுகிறார்கள்.

**குண்டூர் ஜில்லாவில் கிறிஸ்துமார்க்க விர்த்தி.**—சென்ற வருஷத்திலே இந்தத் தெலுங்கு ஜில்லாவில் 4,138 பேர் கிறிஸ்தவர்களாகி ஞானஸ்நானம் செய்விக்கப் பெற்றார்கள். இப்பொழுது அங்கே ஏறக்குறைய அரை லட்சம் கிறிஸ்தவர்களுண்டு. அன்றி, 7,311 ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். இந்த ஏழைக்கிறிஸ்தவர்கள் தர்மத்துக்கென்று கொடுத்த காணிக்கை ரூ. 11,378.

**இங்கிலாந்தின் யுத்தசெலவு.**—இவ்வருஷத்துச் செலவு அதிகமான காரணத்தால் சம்பளவரி, சர்க்கரைவரி, பீர் சாராயவரி, டீவரி இதுகளை உயர்த்தப்போகிறார்கள். இந்தியாவிலும் சுருட்டு, புகையிலை, கள்ளு, சாராயம், வெற்றிலை, பாக்கு, அபின், கஞ்சா, சரிகைச்சேலைகள் முதலிய அனாவசியமான பதார்த்தங்களுக்கு நல்ல வரிபோட்டால் நலமென்று தோன்றுகிறது.

**கடல்கீழ் கப்பல்.** — கடல்கீழ் கப்பலுக்குக் காற்று அவசியம்; வாயுவில்லாமல் அதில் இருப்பவர் உயிர்வைத்திருக்க முடியாது. ஆனால் ஈடிஸன் என்கிற தத்துவசாஸ்திரியார் கடல்நீரிலிருந்தே வாயுவை உண்டாக்கத்தக்க ஒரு கருவி உண்டுபண்ணியிருக்கிறார். இந்தக் கப்பல்கள் மிக்க கெடுதிசெய்பவை. மேலே மிதக்கின கப்பலைக் கவிழ்த்தமிழ்த்தவும், குண்டுசுட்டுக் கொளுத்திவிடவும் நல்ல சக்தியுண்டு.

**ரஷியாவிலே மதுவிலக்கு.** — ரஷிய சக்கரவர்த்தியின் ஆக்கினையினாலே அந்தப் பிரமாண்டமான தேசமெங்கும் சாராயக்கடைகள் யாவும் ஒருமிக்க அடைக்கப்பட்டன. அதன் கோடிகணக்கான போர்வீரர்கள் எவரும் மது உண்ணக்கூடாது. இதனாலே அவர்கள் மிக ஊக்கமாகச் சண்டை செய்துவருகிறார்கள். இங்கிலாந்திலும் இப்படிச் செய்யக்கூடாதோவென்றால், கூடாது. இங்கிலீஷ் அரசன் சுயஅரசு செலுத்தாமல், ஆலோசனைச்சபையின் உதவியால் ஆண்டுவருகிறார். அச்சபையிலே அனேக ஸாராய வியாபாரிகள் உண்டு. அவர்கள் மதுவிலக்குக்குச் சம்மதியார்கள்.

**யுத்த விவரங்கள்.**—யுத்தந்தொடங்கி இப்பொழுது ஆறுமாதகாலமாயும் கொஞ்சத்தில் ஓய்கிறதாகக் காணப்படவில்லை. ஒன்றரை கோடிப் போர்வீரர்களிலும், சேனாதிபதிகளிலும் ஏகதேசம் அரைவாசிப்பேர் மாண்டும், மடிந்தும், ஒடிந்தும், காயப்பட்டும், கைதிகளாயும் போனாலும் எதிரிகள் சமாதானத்துக்கு வரவேகாணோம். யுத்தத்திற் சிக்கியிருக்கிற தேசத்து ஜனங்களில் இழவு கொண்டாடாத குடும்பங்கள் மிக அருமை. ஜர்மனியிலே ஏப்பிரல் மாதத்தில் பெரும் பஞ்சமுண்டாகுமென்று சில சாஸ்திரிகள் எண்ணுகிறார்கள்; வேறு பலரோ, ஜர்மானியர் மூன்று வருஷத்துத் தானியதவசங்களைச் சேர்த்துவைத்திருக்கிறதாகச் சாதிக்கிறார்கள். உண்மை இரண்டுக்கும் இடையிலே இருக்கவேண்டும். ஒன்று மெய். ஜர்மானிய வீரர்கள் கிழக்கிலும் மேற்கிலும் கொண்ட எண்ணங்கள் எள்ளளவும் நிறைவேறவே இல்லை; முன்சென்றவர்கள் தினந்தோறும் பின்சென்றே வருகிறார்கள். இது விர்த்திக் கடையாளமாகாது. ரோமக் கிறிஸ்தவசபைக்கு அதிபதியான பாப்புவும் சமாதானத்துக்கு வேண்டி வெகு பிரயாசையெடுத்தும் பயன்பெறாமலிருக்கிறது. ஆனால் ஒரு விஷயத்தில் பயனுண்டாயிற்று; அந்தந்த தேசத்திற் சிறைகளை மாற்றிக்கொள்ள உடன்பட்டாயிற்று. அதாவது, இங்கிலீஷ்காரர் ஜர்மன் கைதிகளையும், ஜர்மானியர் இங்கிலீஷ், பிரெஞ்சு, ரஷியன் முதலிய கைதிகளையும் மாற்றிக்கொள்வார்கள். இது பெருத்த சகாயம். ஆனால் சண்டைக்குதவாத கைதிகளுக்குமாத்திரம் இந்த நன்மை கிடைக்கும். டர்க்கி தேசத்து ராணுவங்கள் தடவைக்குத்தடவை தோற்றுக்கொண்டே வருகின்றன. கேட்பார் பேச்சைக் கேட்டு இங்கிலாந்துக்கு விரோதமாய்ப் படையெடுத்தது பெரும் பிசகு.

இதுநிற்க, ஜர்மானியர் இங்கிலாந்திலே, எம்டென் சென்னையிற் செய்ததுபோல, இரண்டு கடற்கரை ஊர்களின்பேரில் குண்டு சுட்டு உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் செய்துவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். அன்றியும் சமுத்திரத்தில் எங்கு பார்த்தாலும் வெடிமருந்து மறைத்துவைத்திருக்கிறார்கள். அசந்தர்ப்பமாய்க் கப்பல் அதுகளில் மோதினவுடனே அவை வெடித்துக் கப்பலைக்

### பெப்ருவரிமீ பஞ்சாங்கம்—

| வாரம் | பெப்ருவரிமீ = தை—மாசி. ● அமாவாசை. 14உ | | | | | தை—மாசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 3 | 10 | 17 |
| திங்க ... | 1 | 8 | 15 | 22 | ... | 19 | 26 | 4 | 11 | ... |
| செவ் ... | 2 | 9 | 16 | 23 | ... | 20 | 27 | 5 | 12 | ... |
| புதன் ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 6 | 13 | ... |
| வியா ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 7 | 14 | ... |
| வெள் ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 1 | 8 | 15 | ... |
| சனி ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 2 | 9 | 16 | ... |

கொளுத்திவிடுகின்றன. இவ்விதமாக அனேக இங்கிலீஷ் கப்பல்கள் அழிந்துபோயின. ஆகிலும் ஜர்மனியிலே இப்பொழுது செம்புப் பஞ்சமும், கோதுமைப் பஞ்சமும் விசேஷமாயிருக்கிறது. உருளைக்கிழங்கிலே ரொட்டிசெய்து பிழைக்கிறார்கள். பெல்ஜியம் தேசத்தாரை மிகவும் கொடுமை செய்துவருகிறார்கள். ஆகாயக் கப்பல்கள் எதிரிகளின் ஊர்கள்பேரில் குண்டுவிழச் செய்கின்றன. சைன்யச் செலவுக்குக் கணக்கு வழக்குக் கிடையாது. பிரதிதினமும் எத்தனையோ கோடி ரூபாய் செலவாகிறது. யுத்த மொழிந்தபின்புதான் அசனல் விளையும் அகோரக் கெடுதி வெளிப்படும். அதை நிவர்த்திசெய்ய ஐம்பது வருஷம் கூடப் போதாது. ஆகிலும், இப்பேர்ப்பட்ட பொல்லாப்பிலிருந்தும் பெருத்த நற்பலன்கள் உண்டாகிவருகிறது. கடவுள் பக்தி அதிகப்படுகிறது; தேசாபிமானம் விர்த்தியாகிறது; ஜாதி, ஜனம், இனம், லக்கணம் பாராமல் மனுஷர் யாவரும் ஒருமனம் பொருந்திவருகிறார்கள். பரிதாபமும் பரோபகாரசிந்தையும் பெருகிவருகிறது.

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

எட்டாவது கதை.

### ஒரு சமுசாரிக்கு நேர்ந்த துன்பத்தைப்பற்றிய கதை.

ஒரு கிராமத்தில் ஒரு சமுசாரி அதிக செல்வாக்குள்ளவனாக இருந்தான். ஆனால் அவனுக்கு அதிக செல்வமிருந்தாலும் வெகுநாளைக்குப்பிறகு ஒரு பெண் குழந்தைமாத்திரம் பிறந்தது. அதை அதிக அருமையாக வளர்த்து அதின்பேரில் அதிக அன்புள்ளவர்களாக இருந்தார்கள். அதுமாத்திர மல்லாமல் அதற்கு வேண்டிய நகைநட்டுகள் எல்லாம் செய்து போட்டு ஆசை பார்த்தார்கள். அந்தக் குழந்தை பக்குவ வயதானதும் அதற்கு ஒரு நல்ல மாப்பிள்ளையும் பார்த்துக் கலியாணம் வெகு சிறப்பாய் நடத்தினார்கள். அது தங்கள் செல்லப்பிள்ளையாய் இருந்ததினால் அந்த மகளையும் மருமகனையும் தங்கள் வீட்டிலேயே இருத்திக்கொண்டு தங்களுடைய ஆஸ்திகளைக் கையாளும்படி வைத்துக் கொண்டார்கள். இரண்டு வருஷத்திற்குப் பிற்பாடு அருமையாய் வளர்க்கப்பட்ட மகளும், மருமகனும் திடீரெனச் சடுதியான விஷ வியாதியினால் இறந்துபோனார்கள். அந்த வயதுசென்ற தாயும், தகப்பனும் துக்க விசாரத்தில் மூழ்கி அவர்கள் மனம் பலமாதிரியாய்த் திகைத்துப் புலம்புவார்கள். சில சமயங்களில் கிழவனும் கிழவியும் கொஞ்சம் ஆறுதல் அடைந்து தங்கள் மனதைத் தைரியப்படுத்துவார்கள். எப்படியென்றால், நம்முடைய மகளும் மருமகனும் மோக்ஷத்தில் சந்தோஷமாய் ஜீவிக்கிறார்கள். அவர்களுக்கு யாதொரு குறைவுமில்லை. ஆனால் அவர்களுக்கு அணிந்துகொள்ள ஆபரணங்கள்மாத்திரம் இல்லாமலிருக்கிறார்கள். அவர்களுடைய ஆபரணங்களெல்லாம் நம்மிடத்தில் வைத்துவிட்டுப் போய்விட்டார்களே என்று புலம்புகிறது வழக்கம்.

ஆனால் இவைகளையெல்லாம் கவனித்துவந்த ஒரு திருட்டு மனிதன் இவர்களை எமாற்றி இந்த ஆபரணங்களையெல்லாம் அபகரித்துக்கொள்ள ஒரு உபாயம் செய்தான். அதென்னவென்றால், ஒருநாள் சுமார் பகல் 12–மணி வேளை கிழவன் வீட்டில் இல்லாத நேரம்பார்த்து அடைத்திருந்த வீட்டுக்கதவை அதிக பலமாகத் தட்டி அதிக களைப்புள்ளவனாகவும் கூச்சல் செய்துகொண்டிருந்தான். உடனே உள்ளேயிருந்த கிழவி ஓடிவந்து திறந்து என்னப்பா, எங்கேயிருந்துவருகிறாய், அதிக களைப்பாகத் தெரிகிறதே என்று கேட்டாள். அவனோ இன்னும் அதிக களைப்பு காண்பித்துக்கொண்டு பேசத்தொடங்கினான். எப்படியென்றால், அம்மா உன் மகளும் மருமகனும் மோக்ஷத்தில் சந்தோஷமாக விருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அணிந்துகொள்ள ஆபரணம் ஒன்றுமில்லாமல் கவலையாயிருக்கிறார்கள்; என்னை உடனே போய் அப்பா வீட்டில் என்னுடைய ஆபரணங்களெல்லா மிருக்கிறது. கைப்பெட்டியிலிருக்கிற என் ஆபரணங்களோடு உடனே வாங்கிவரவேண்டுமென்று என்னை அனுப்பினார்கள். இன்னும் இரண்டு நிமிஷத்திற்குள்ளாகப் போய்ச் சேரவேண்டும்; மற்றப்படி என்னை நரகத்தில் தள்ளிவிடுவார்கள் என்று ஆத்திரப்பட்டுச் சொன்னான். உடனே கிழவி பெரியவர் வீட்டில் இல்லையே என்கிற கவலையினாலும் மகள்பேரிலும் மருமகன்பேரிலும் இருந்த ஆசையினாலும் ஓடிப்போய் பெட்டியைத் திறந்து நகைப்பெட்டியைத் தூக்கிக் கொடுத்துவிட்டாள். எத்தன் பிடித்தான் ஓட்டம், சாலை வழியாக ஓடுகிறான்.



அப்பா, எனக்காக ஜெபம் பண்ணுகிறீரா?

ஒரு நிமிஷத்திற்குள்ளாகக் கிழவன் வீட்டிற்கு வந்தான், உடனே கிழவி ஓடிவந்து சங்கதி கேட்டீர்களா? மகளும் மருமகனும் மோக்ஷத்தில் சந்தோஷமாயிருக்கிறார்களாம். ஆனால் அவர்களுக்குப் போட்டுக்கொள்ள ஆபரணங்கள் இல்லாமல் கவலைப்பட்டு ஒரு மனிதனை அனுப்பினார்கள். அவன் 2 நிமிஷத்திற்குள் போய்ச் சேராமற்போனால் அவனை நரகத்தில் தள்ளிவிடுவார்களாம், அவனும் அதிக களைப்புற்றவனாக வந்தான். ஆகையினால் அவர்கள் நகைப்பெட்டியைத் தூக்கிக் கொடுத்துவிட்டேன் என்று சொன்னாள். உடனே கிழவன் திடுக்கிட்டு அடே பைத்தியக்காரி மோசம்போனாயே எப்படிப் போகிறான் என்று அதட்டிக் கேட்டான். அதற்குக் கிழவி இந்த சாலைவழியாகத்தான் ஓடுகிறான் என்று காண்பித்தாள். உடனே கிழவன் தன்னுடைய சவாரி குதிரையின் மீது எறி வேகமாக ஓடினான். ஓடி இரண்டு மைல் தூரத்தில் கண்டுகொண்டான், உடனே திருடன் ஆள் வருகிறதைப் பார்த்து ஒரு பெரிய ஆலமரத்தில் எறிக்கொண்டான். கிழவன் போய் மரத்தடியில் தன் குதிரையைக் கட்டிவிட்டு இவனும் மேலே எறி ஆபரணப் பெட்டியைப் பிடுங்கும்படி அவனைத் தொடர்ந்து பார்க்கிறான். கிழவன் மேல் கொம்புக்குப் போகும்போது திருடன் கீழ்க்கொம்புக்கு வந்துவிடுகிறான்; கிழவன் கீழ்க்கொம்புக்கு வரும்போது திருடன் மேல்கொம்புக்குப் போய் விடுகிறான். இபபடியாக அரைமணிநேரம் மரத்தில் இருவரும தாவிக்கொண்டு வந்தார்கள்; கிழவன் கொஞ்சம் தள்ளாடி வருகிறான். கடைசியிலே கிழவன் மேல்கொம்பில் இருக்கும்போது திருடன் கீழ்க்கொம்புக்கு வந்து கீழே குதித்து குதிரையை அவிழ்த்து தான் மேல் எறிக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான். கிழவனோ தளர்ந்துபோய் அதிக கவலைப்பட்டு ஐயோ! நான் என்ன செய்வேன் நகைப்பெட்டியும் போய் குதிரையும் போச்சுதே! வீடுபோனதும் கிழவி குதிரை எங்கே என்று கேட்பாளே அதற்கு என்ன சொல்லலாம் என்று தன் மனதில் கலக்கமுண்டாகி, பல பல எண்ணங்களெல்லா முண்டாகிறது. கடைசியாக அவன் மனதில் ஒரு எண்ணம் பிறக்கிறது; எப்படியென்றால் கிழவி குதிரை எங்கே என்று கேட்டால் மகளுக்கும் மருமகனுக்கும் சவாரி பண்ணக் குதிரையில்லையாம்; நம்முடைய குதிரையையும் கொடுத்துவிட்டேன் என்று சொல்லலாமென்று மனதில் யோசனை பண்ணிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான், வந்ததும் கிழவி ஓடிவந்து என்ன பிடித்தீர்களா? குதிரை எங்கே என்று கேட்டாள். உடனே கிழவன் போ, பைத்தியக்காரி அவர்களுக்குச் சவாரி பண்ணக் குதிரையில்லையாம் குதிரையும்கூட கொடுத்தனுப்பிவிட்டேன் என்று சொன்னான்.

அப்பொழுது கிழவி, அப்படியா அதிக சந்தோஷம் என்று மனந்தேறி சந்தோஷப்பட்டாள். திருடனோ போய்த் தன் கிராமத்தில் இந்த ஆபரணங்களைப் பெரிய தொகைக்கு விற்றுப் பெரிய வீடுகள் கட்டி அதிக செல்வமாக ஜீவித்தான். இதனால் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம். நமக்குக் கடவுள் கொடுத்திருக்கிற பிள்ளைகள்பேரிலும் செல்வத்தின்பேரிலும் நாம் முழுநம்பிக்கை வைத்து அவைகளையே சதமென்று நம்பியிருக்கக்கூடாது. கடவுள் நமக்கு இவைகளையெல்லாம் கொடுத்து நம்மைச் சோதிக்கிறார். ஆகையினால் கடவுள் நமக்குக் கொடுத்த ஒவ்வொரு நன்மையையும் யூகமாய்க் கையாளவேண்டும். நம்முடைய நம்பிக்கையும், நம்முடைய எண்ணமும் கடவுள்பேரில்தான் பற்றுதலாயிருக்கவேண்டும்.

உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். லூக். 12.34.

G. D.



4 FEB 1915 MADRAS

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

இந்தக்காலத்திலேயே வைஷ்ணவம், சைவம் என்ற இரண்டு பிரிவும் எழும்பின. மேலும் யோகாப்பியாசங்களும், சந்நியாசி ஏற்பாடுகளும் உண்டானதும் இப்பொழுதே. கலாசாலைகளில் தத்துவ சாஸ்திரக்கல்வியும் விர்த்தியடைந்தது. ஐந்து செய்யுள் உபநிடதம் எழுதப்பட்டன. சங்கையா யோகசாஸ்திரம் இப்போது முற்றுப்பெற்றது. சமணமதம், புத்தமதம் என்ற இருமதங்களின் உற்பத்தியும் இக்காலத்தில்தான்.

ஐந்தாவது தர்மசாஸ்திர காலம்.—சூத்திரம் பிராமணத்திலிருந்து தோன்றினதுபோல தர்ம சூத்திரத்திலிருந்து தர்மசாஸ்திரம் உற்பத்தியானது. அவைகளில்முக்கியமானது மானவதர்மசாஸ்திரம். இந்துக்களுடைய அன்றாடக ஜீவிய பழக்க ஒழுக்கத்துக்குச் சட்டம் இந்நூலே. செய்யுள் நடையான இச்சட்டப் புஸ்தகம் கி. மு. 200–க்கும், கி. பி. 500–க்கும் இடையில் எழுதப்பட்டதாக சாஸ்திரிகள் எண்ணுகிறார்கள். மனுதர்ம சாஸ்திரம் கி. பி. 200–க்கு முன்னமே தற்காலரூப மமைந்துள்ளதென்று தோன்றுகிறது. இக்காலத்தில்தான் அதர்வ வேதத்தின் சுருக்க உபநிடதத்தில் முந்தியவை எழுதப்பட்டன. அவைகள் (1) சுத்த வேதாந்தம், (2) யோக அப்பியாசம், (3) சந்நியாசி ஆசிரமம், (4) வைஷ்ணவ சிவமதப் பிரிவு ஆகிய நான்கு பொருட்பிரிவுள்ளதாக விருக்கின்றன. கடைசியில்சொன்ன பிரிவில் சாதாரண ஜனங்கள் தெய்வங்களாக அர்ச்சனைசெய்த விஷ்ணு, சிவனை, பரமாத்மாவின் ரூபங்களென்று பாவித்துப் பாடியிருக்கிறது. விஷ்ணுவின் பல அவதாரங்களைப் பரமாத்மாவின் நராவதாரங்களாக மதித்துப் பேசுகின்றன.

**ராமாயணம், பாரதம்** என்ற சரித்திரப்பாடல்கள் கி. மு. 500–க்கும், கி. பி. 500–க்கும் இடையில் உண்டாயின. சுமார் ஆயிரம் வருஷங்களாக கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து தற்காலத்தில் இவைகள் காணப்படுகிற ரூபம், அளவுள்ளதாயிற்றென்று எண்ண இடமுண்டு. மகாபாரதத்தில் இடையில் சேர்க்கப்பட்ட **பகவத்கீதை** தர்மசாஸ்திர காலத்தைச் சேர்ந்தது.

இதற்குப்பின் **பதினெண் புராணங்கள்** உண்டாயின. அவைகள் உபதேசத்தன்மை யுள்ளவைகளாயும் வைஷ்ணவம் சைவம் என்ற பிரிவுகளை ஸ்திரப்படுத்தும் நோக்கமுள்ளவைகளாயு மிருக்கின்றன. அவைகளில் சில சிவ வணக்கத்தை அனுசரித்துப் பேசினபோதிலும், பெரும்பாலும் விஷ்ணு வணக்கத்தைப் போதிக்கிற கற்பிதக் கதைகளாகவே யிருக்கின்றன.

**பகவத்கீதையைப்பற்றி** சற்றே விவரிப்ப தவசியம். ஈராயிர வருஷக்காலமாக இந்துதேசத்தாரின் மனதையும் இருதயத்தையும் பலமாய் இது கவர்ந்துகொண்டதென்று பார்க்கிறோம். ஐரோப்பாவிலும் இந்தியாவிலுமுள்ள கல்விமான்களும் அதை நன்கு மதித்து வருகிறார்கள். கல்வியறிவுள்ள இந்துக்கள் மதசம்பந்தமான வேறெந்த நூலைப்பார்க்கிலும் இதையே அதிகமாய் வாசித்து வருகிறார்கள். ஆகையால் ஓர் கிறிஸ்துவின் ஊழியக்காரன் இதைக் கவலையோடு படிப்பது நல்லது.

கீதையின் உற்பத்தி இவ்வாறிருந்திருக்கவேண்டும்.—கிறிஸ்தவ சகத்தின் ஆரம்பத்தில் அதிகக் கல்விமானும் அக்காலத்து மதசம்பந்தமான தத்துவ சாஸ்திரத்தில் தேர்ந்தவனுமான கிருஷ்ணபக்தன் எவனோ ஒருவன் கிருஷ்ணனுடைய மேன்மையையும் கர்மயோகத்தின் கற்பனையையும் சம்பாஷணை ரூபமாக எழுதி அதை மகாபாரதத்தின் மத்தியில் ஒரு கிளைக்கதையாகச் சேர்த்துச் சம்பந்தப்படுத்திவிட்டான். பாண்டவ கௌரவ சேனைகளுக்கு நடந்த யுத்த ஆரம்பத்தில் இருசேனையிலும் நேரிடும் சகோதர வதையைப்பற்றி அர்ச்சுனனுக்கு விசனம் மேலிட்டதாகவும், அச்சமயத்தில் அவனுக்கு ஆறுதலாகவும் தெளிவாகவும் அவனது திவ்ய சாரதியாகிய கிருஷ்ணன் அவனுக்கு உபதேசம் செய்ததாகவும் காட்டியிருக்கிறது. இவ்வாறு கிருஷ்ணன் செய்யும் பிரசங்கமே பகவத்கீதை. கிருஷ்ணனுடைய மேன்மையும், கர்மயோகக் கோட்பாடுமே இதில் காணப்படும் இரண்டு முக்கிய போதனைகள்.

உபநிஷதங்களின் ரிஷிகள் நிஷ்டை நின்று தியானித்த பிரமம் கிருஷ்ணு என்று பகவத்கீதை பேசுகிறது. மேலும், யாகம் ஜெபமந்திரம் மூலமாய் மனுஷன் கிட்டிச் சேரக்கூடிய பரமபுருஷர் இவர்தான் என்றும் பாவித்திருக்கிறது. இல்லறமும் தத்துவஞானமும் சேர்ந்த கலப்பே கர்மயோகமாம். அதாவது: வருணத்திற்கும் குலத்துக்குமுரிய சகல கடமைகளையும் சுயலாபம் கருதாமல், கடவுள் மேலுள்ள அன்பினிமித்தம்மாத்திரம் நடப்பித்து, அக்கிரியைகளின் பலாபலன்களைக் கிஞ்சித்தேனும் கவனியாமல் கடமையைமாத்திரம் நிறைவேற்றுவதே கர்மயோகம். இச்சம்பாஷணையின் கடைத்தொகை யாதென்றால்: க்ஷத்திரிய குலத்தவனாகை அர்ச்சுனனுடைய கடமை சண்டை செய்தலாகையால் அவன் இப்போது விசாரப்படாமல் சண்டை செய்யலாம். ஆகிலும் எள்ளளவும் சுயநயம் நாடாமல் சண்டை செய்யவேண்டுமென்பதே.

பகவத்கீதையை இந்துமார்க்கத்தின் சங்கிரக சாரமென்கலாம். இந்துதேசத்தவரில் அதி சிரேஷ்டமானவரின் உன்னத நம்பிக்கையையும் மேலான நாட்டத்தையும் இது வெளிப்படுத்துகிறது. தேவசித்தத்தை வெளிப்படுத்தவும் மனுஷனைத் தெய்வத்தோடு ஐக்கியப்படுத்தவும் அவதார புருஷரான ரக்ஷகர் ஒருவர் தேவை என்ற உணர்வு இந்துக்கள் மனதில் உற்பத்தியானதை இந்நூலில் காண்பதாக நிதானிக்கலாம்.

இந்துசமய சரித்திரத்தைச் சுருக்கமாய்க் கவனித்தோம். மூவாயிரம் நாலாயிரம் வருஷக்காலமாய் இந்துதேசத்தார் ஆய்ந்தெழுதினதாக நாம் பார்த்த கிரந்தங்களிலிருந்தே தற்காலத்திலுள்ள இந்துக்களின் மார்க்க சித்தாந்தங்களும் மதானுஷ்டானங்களும் பிறந்திருக்கின்றன.

இந்துசமய சித்தாந்தத்தின் நானாவித ரூபங்களையும் இந்துசமய ஆசாரங்களின் பலவித வித்தியாசங்களையும் கடந்த இரண்டு பொதுவான கோட்பாட்டை எங்கும் கவனிக்கலாம். படித்தவர்களுக்குள் உபநிஷத தத்துவஞானம். குறிப்பாய்ச சொல்லின், வேதாந்தம, சாவமும் தெய்வம் என்ற கோட்பாடே இதில் முக்கியம். கல்லாதவர்களுக்குள்ளோ சர்வமும் தெய்வம் என்ற கோட்பாடு ஒருபக்கம் இருந்தாலும், பலதெய்வ வணக்கமே சாதாரண அப்பியாசம். ஆகவே "அனைத்தும் அவனே" என்ற கோட்பாடும், இதிலிருந்து தோன்றின புனர்ஜன்ம கோட்பாடும் சகலருக்கும் பொதுவே. இத்துடன் விக்கிரக ஆராதனையும் பொதுவே. விக்கிரக பூஜை செய்வதில்லையென்போர் அதற்கு நியாயமாவது சொல்லிக்கொள்ளுவார்கள். சாதாரண இந்துமார்க்கத்தையும் தத்துவஞான சித்தாந்தத்தையும் இணைக்கிற கட்டு ஜாதி ஏற்பாடுதான். தற்கால இந்துசமய முப்புரி எதுவென்றால், சர்வமும் தெய்வம் என்ற கோட்பாடும் விக்கிரகவணக்கமும் ஜாதிக் கட்டுப்பாடுமே.

(இன்னும் வரும்.)

## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

(தொடர்ச்சி.)

73. இனியிங்கு வாறேனே – இன்னுமொன்றுங் கேளேனே
தனிமைய தாயிருந்து–தழைத்தோங்கப் போறேனே
74. என்றுசண் டைபிடித்து–எங்கவைத்தான் தந்தையனை
நன்று மிகுத்ததந்தை–நடுங்கி மனங்கலங்கி
75. எதுசொன் னுலுமதை – ஏற்றுக்கொள்ளானென்றறிந்தான்
வாதுசெய் தாலவனே–வம்புக்கு வந்திடுவான்
76. தருவே னவனுடைய–தாரும்பல பாகமதை
செருக்கா யெடுத்துக்கொண்டு – செல்லட்டுமென்றுசொல்லி
77. வாடாயென் தன்மகனே–வழக்காடக் கற்றவனே
மாடுகளைஞ்ஞூறடா–மகனே உனதுபங்கு
78. ஆடுகளைஞ்ஞூறடா–அப்பா உனதுபங்கு
வீடுகளில் மூன்றுதான்–மூடா உனதுபங்கு
79. நஞ்சையில் பத்தேக்கரா–நந்தனனே உனக்கு
புஞ்சையிலும் பத்தடா–புத்ரா உனதுபங்கு
80. பணமொரு லட்சம்–பாரடா உன்பங்கு
இணங்கியே போடாநீ–என்றானே இன்னுமென்ன
81. தென்னம் பனந்தோப்பு–சேயுனக்கு இரண்டடா
சொன்னம் பத்தாயிரம் – சொகுசான பங்குனக்கு
82. பற்பல வஸ்திரங்கள்–பத்துப்பெட்டி தானுனக்கு
அற்புத நகைப்பரணி–அறுபது கண்டாயோ.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD



மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்







உபயோகப்படும்படி

கையினால் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒருவருக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒருவருக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டியோர் செயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR 6-MAR 1915 MADRAS.




# சத்திய தூதன்.

MARCH, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. மார்ச்சுமீ, 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்.

**கிழவர் கலியாணம்.**— 82 வயது கிழவனும் 77 வயது கிழவியும் இங்கிலாந்திலே கலியாணஞ் செய்துகொண்டார்களாம்.

**கவர்னரவர்கள்.**— லார்ட் பெண்ட்லண்டவர்கள் செங்கல்பட்டு, தென்ஆற்காடு ஜில்லாக்களைச் சந்திக்கப் போயிருக்கிறார். அவர் எத்தனை இடங்களில் சர்க்கார்விஷயமாய்ப் பிரசங்கம்பண்ணவேண்டும்! உத்தியோகபாரம் சுமப்பதரிது.

**ராஜ உணவு.**— கைசர் நன்றாய்ச் சாப்பிடப்பட்டவர். ரஷிய சக்கரவர்த்தியின் சமையற்கட்டிலே ஆயிரம்பேர் சமைக்கிறார்களாம். ஆகிலும் மிதமாய்ச் சாப்பிடுகிறவர்களுக்கு மாத்திரம் பூர்த்தியான சுகமுண்டாயிருக்கும்.

**லண்டனில் இருள்.**— ஆகாயக் கப்பல்கள் பாணங்கள் போடுகிற காரணத்தால், இரவிலே லண்டன் பட்டணத்து விளக்குகள் ஒன்றும் ஏற்றுகிறதில்லை எங்கும் காரிருளாயிருக்கிறது வேண்டிய பிரயாணிகள், கையில் ஒரு சிறு விளக்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள்.

**சீனாவும் கிறிஸ்துவும்.**— கனம் எடி என்னும் பிரசங்கியின் பெருமுயற்சியினாலே சீனாவிலே கிறிஸ்துமார்க்கம் கல்வி கற்ற மாணாக்கர்களுக்குள்ளே அதிவிரைவாய்ப் பரம்பிவருகிறது. தென் இந்தியாவில் இவ்வருஷாந்தத்தில் அதுபோன்ற முயற்சியெடுக்க யோசித்திருக்கிறார்கள்.

**ருஷியாவில் மதுபானம்.** — சக்கரவர்த்தியின் கட்டளையினாலே, இத்தேசத்தில் இப்பொழுது மதுபானம் என்கிறதே கிடையாது. எண்ணுக் கடங்காத கோடி ரூ. சேகரமாகி, சண்டைக்கு உதவுகிறது. ஜனங்கள் அதிக சுகமாயிருக்கிறார்கள். போலீஸ் கேசுகள் கிடையாது. ஜெயில்கள் வெறுமையாய்க் கிடக்கின்றன. இந்தியாவிலும் இப்படிச் செய்யக்கூடாதோ?

**புது இந்துமார்க்கம்.** — முன்னே ஹைகோர்ட்டு ஜட்ஜியாயிருந்த வித்வான் சுப்பிரமணி ஐயர் தமது விருத்தாப்பியகாலத்தில் இந்துமார்க்கத்தைப் புதுப்பிக்கவேண்டுமென்று ஒரு பிரபந்தம் எழுதியிருக்கிறார். இது எல்லாச் சீர்திருத்தத்துக்கும் ஆதாரமும் அத்தியானுகூலமுமா யிருக்குமென்கிறார். (1) வேதங்களையெல்லாம் பரிசோதித்து, தகாதவைகளையெல்லாம் நீக்கி மெய்க்கடவுளைமாத்திரம் உபதேசிக்கிற பாகங்களைத் திரட்டிச் சேர்த்து ஒரு புது வேதம் உண்டுபண்ணவேண்டும். (2) வர்ணாஸ்ரமத்தை முற்றிலும் விட்டுவிடவேண்டும். ஜாதிபேதங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்த்துவிடவேண்டும். (3) ஒவ்வொரு குடும்பத்திலும் கடவுள் வணக்கம் நடக்கவேண்டும். கிறிஸ்தவக் குடும்பங்களில் நடக்கிறதுபோல. (4) தேவாலயங்களில் விக்கிரகபூசை முதலான வீண்கிருத்தியங்கள் ஒழிந்து சபைகள்கூடி கடவுளுக்குப் பஹிரங்க ஆராதனைசெய்து, ஜெபம்பண்ணி, பிரசங்கங்கள் நடத்தவேண்டுமாம். இதுகளே ஸர். சுப்பிரமணி ஐயர் விரும்புகிற நவ இந்துமார்க்கம்.

**யுத்த விவரங்கள்.** — யுத்தம் ஆரம்பித்து இப்பொழுது ஆறுமாதம்போலாகிறது. இந்தக்காலத்தில் சுமார் ஒருகோடி வீரர் மடிந்தும், இருகோடி வீரர் பலவிதமாகக் காயப்பட்டும் போயிருக்கிறார்கள். இதன்றி, எத்தனையோகோடி ரூபாய் விரயமாய்ப் போய்விட்டது. அழிந்தும், ஒழிந்தும், கழிந்தும்போன ஆயுதவர்க்கங்கள் எத்தனையோ கோடியானவை. தேசங்களும், நாடு நகரங்களும், நன்செய் புன்செய்களும், மாடமாளிகைகளும், கோவில் கோபுரங்களும், கைத்தொழில் வேலைகளும் அழிந்துபோயின. வாழ்நிலமனைத்தும் பாழ்நிலமாய்விட்டது. இதற்கெல்லாம் காரணம் ஒன்றே. தர்மம் பெரிதோ? சக்தி பெரிதோ என்கிற ஒரே கேள்விதான். தர்மனுக்கும் துரியோதனனுக்கும் நடந்த போரென்றே இந்தப் போரையும் சொல்லிக்கொள்ளலாம், ஆகிலும் தர்மமே தலைகாக்கும். சத்தியமே ஜெயிக்கும். ஜெர்மானியர் எவ்வளவு வீரரை இழந்தாலும், புதுவீரரைக் கொண்டுவந்து போரிலே நுழைக்கிறார்கள். அவர்கள் நாட்டிலே ரொட்டிப் பஞ்சமும், மற்றப் பஞ்சமும் அதிகரித்து வருகிறது. ஆனாலும் சக்தியை நம்பின அவர்கள் விடாமுயற்சியாய்ப் பாடுபடுகிறார்கள். ஜனசமுகத்தில் பெருத்த குழப்பமுண்டாயிருக்கிறது. சண்டையை நிறுத்திச் சமாதானஞ் செய்துகொள்ள வேண்டுமென்று அங்கங்கே கூட்டங்கள் வைத்துத் தீர்மானஞ் செய்கிறார்கள். இது காரணத்தால், முதலாளிகளாயிருந்த சிலரைச் சர்க்கார் சுட்டுப் போட்டார்கள். சுவர்களிலே "கைசர்க்கு மரணம்" என்று எழுதிக்கிடக்கிறதாம். இதுநிற்க, ஜர்மானியர் துர்ப்புத்திக்கிரையாகிற துருக்கியர் பல இடங்களிலே தோற்றுக்கொண்டே வருகிறார்கள். ஒரு கடலில் ஒரேசமயத்தில் 50 கப்பல்கள் மூழ்குவிக்கப்பட்டன. அவர்களும் அதிகமாக இளக்கரித்துப்போய், சண்டையை நிறுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். ஜர்மன் கப்பல்கள் பெரும்பாலும் இன்னம் ஒளித்துக்கொண்டிருக்கின்றன. இங்கிலீஷ் ஆகாயக்கப்பல்கள் அதிகமாய்ப் பாந்து பாணங்களை, கப்பல்கள்பேரிலும் நிலத்திலிருக்கும் கோட்டைகள்பேரிலும் பெய்துகொண்டேயிருக்கிறார்கள். கைசர் ஓரிடம் நிலைக்காமல் அங்குமிங்கே ஓடி அலைந்து திரிகிறார். திரிந்தாலும், விஷம் நீங்கவில்லை. பழயபடியே குரூரச்செயல்கள் நடத்த உடன்படுகிறார். ஏழைகளுக்கு உணவு சரக்குகள் கொண்டுபோகிற கப்பல்களைச் சமயம் பார்த்துச் சமுத்திரத்தில் கவிழ்த்துப்போடுகிறார்கள். பெண்பாலாருக்குச் செய்கிற அக்கிரமங்களுக்கோ, கணக்குவழக்குக் கிடையாது யுத்தம் இன்னும் இரண்டு வருஷம் நடக்குமென்று கிச்சினர் பிரபு உத்தேசிக்கிறார்.

**மார்ச்சுமீ பஞ்சாங்கம்—**

| வாரம் | மார்ச்சுமீ = மாசி—பங்குனி. ⊙ பௌர்ணமி, 1உ ● அமாவாசை, 15உ | | | | | மாசி—பங்குனி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 24 | 1 | 8 | 15 |
| திங்க ... | 1 | 8 | 15 | 22 | 29 | 18 | 25 | 2 | 9 | 16 |
| செவ் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 19 | 26 | 3 | 10 | 17 |
| புதன் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 20 | 27 | 4 | 11 | 18 |
| வியா ... | 4 | 11 | 18 | 25 | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| வெள் ... | 5 | 12 | 19 | 26 | ... | 22 | 29 | 6 | 13 | ... |
| சனி ... | 6 | 13 | 20 | 27 | ... | 23 | 30 | 7 | 14 | ... |

Vol. XXVIII. No. 5.

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

ஒன்பதாவது கதை.

### ஒரு மனிதன் தூரதேசம்போய்ப் பணம் சம்பாதித்த கதை.

ஒரு மனிதன் தன் சொந்தசேதசத்தை விட்டுப் புறப்பட்டுக் கப்பல் பிரயாணம் செய்து தூரமான தேசம்போய்க் கஷ்டவேலைசெய்து பணம் சம்பாதித்தான். ஐந்து வருஷமாக அந்த தேசத்திலேயேயிருந்து வேலைசெய்து தன் செலவுபோக மீதியாக 500 ரூபாய் சம்பாதித்துக்கொண்டு தன் சொந்த தேசத்திற்குச் சந்தோஷத்தோடே திரும்பினான். அவன் கப்பல் யாத்திரைசெய்து திரும்பி வரும்பொழுது கடல் கோஷ்டத்தினால் கப்பலுக்கு அபாயம் உண்டாகும்போல் தெரிந்தது. அந்தச் சமயத்தில் மாலுமியானவன் திடீரென்று ஜனங்களைப்பார்த்துச் சொன்னது, நாம் எல்லோரும் மடிந்துபோகிற நிலைமையில் இருக்கிறோம்; கடல்காற்றும், கொந்தளிப்பும் அதிக கோஷ்டமாக இருக்கிறது; ஆகையினால் நீங்கள் எல்லோரும் மேல்தட்டிலே போய்ப் பார்த்துக் கடவுளை வேண்டிக்கொள்ளுங்கள் என்று விளம்பரம் செய்தான். உடனே ஜனங்களெல்லோரும் தங்கள் சாமான்களை அவ்விடத்திலேயே வைத்துவிட்டு மேல்தட்டிற்குப் போனார்கள்.

ஆனால் ஒரு கிழவி மாத்திரம் மேலே போகாமல் கீழேயிருந்துகொண்டாள். அவளுடைய மனதில் ஒரு எண்ணமும் உண்டானது; எப்படியென்றால், இவர்கள் எல்லோரும் தங்கள் மூட்டைகளை வைத்துவிட்டுமேலே போய்விட்டார்களே, இதுதான் நல்ல சமயம், நாம் இந்த மூட்டைகளில் ஏதாவது பணம் கிடைக்குமோ என்று தடவிப்பார்த்து எடுத்து வைத்துக்கொண்டால், நமக்குக் கப்பல்விட்டு இறங்கினதும் செலவிற்கு உதவியாயிருக்குமே என்று தன் மனதில் எண்ணங்கொண்டு ஓடிப்போய் ஒவ்வொரு மூட்டையாகத் தடவி, தடவிப் பார்த்தாள். ஒரு மூட்டையில் 500 ரூபாய்ப் பையொன்று இருந்தது; அதை அப்படியே எடுத்து தன் அடிமடியில் கட்டிக்கொண்டு தன் பழைய இடத்திலேயே போய் கூதல் அடிக்கிறதுபோல் உட்கார்ந்துகொண்டாள்.

கொஞ்சநேரத்திற்குள்ளாக மாலுமி மறுபடியும் ஜனங்களுக்குக் கட்டளையிட்டான். இன்னம் கொஞ்சநேரத்திற்குள் நம்முடைய கப்பல் அமிழ்ந்துபோகிற நிலைமையில் இருக்கிறது. ஆகையினால் நாம் எல்லோரும் உயிர்தப்பும்படியாகச் சிறு வள்ளங்களில் இறங்கிவிடுங்கள் என்று சொல்லிக் கப்பலிலுள்ள சிறு வள்ளங்களை சமுத்திரத்தில் இறக்கி அதில் இறங்கும்படி கட்டளையிட்டான். உடனே மேல்தட்டிலுள்ள ஜனங்கள் கீழ்த்தட்டில் வந்து தங்கள் மூட்டைகளைத் தூக்கினார்கள். அப்பொழுது அந்த 500 ரூபாய் வைத்திருந்தவன் மூட்டையை எடுக்கும்பொழுது அதிக லேசாய் இருக்கக்கண்டு மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். பணத்தைக் காணோம், உடனே தன் மார்பில் அடித்து அலறிக்கொண்டு மாலுமியிடம் போய்: ஐயா நான் 5 வருஷமாக தூரதேசம் போய்க் கஷ்டப்பட்டு சம்பாதித்த 500 ரூபாயைக் காணோமே என்று அலறினான். உடனே மாலுமியானவன், ஒவ்வொருவராகச் சோதனை செய்தான். அந்தநேரத்தில் அந்தப் பணத்தைத் திருடிய கிழவிகூட அவனுக்காகப் பரிதபித்து ஐயோ, அந்த ஏழை மனிதன் மனம் எவ்வளவாய்ப் பொங்குகிறதே, பாவம், எடுத்தவர்கள் கொடுத்துவிடுங்களப்பா, அல்லது அந்தப் பணத்தை “எடுத்தவர்கள் இந்தச் சமுத்திரத்தில்தான் சாவார்கள்” என்று அதிகமாக அவனுக்காகப் புலம்பி அதிக கூதலும், குளிருமாக ஆடிக்கொண்டு சொல்லிக்கொண்டேயிருந்தாள். மாலுமியும் எல்லோரையும் சோதனைசெய்தவன் “இந்தக் கிழவி எடுப்பாளா” என்று அவளைச் சோதனை செய்யவில்லை. ஏனென்றால், அக்கிழவியிருந்த நிலைமை அவ்வளவு பரிதாபமான நிலைமையிலிருந்தது. ஆகையினால்தான் இவள் கூட எடுப்பாளா! என்று விட்டுவிட்டான். கடைசியாக பணம் அகப்படாததினால் மாலுமியானவன் அம்மனிதனுக்குத் தைரியம்சொல்லி அப்பா, “உயிரிருந்தால் இன்னும் சம்பாதித்துக்கொள்ளலாம் என்று அவனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு மற்றஜனங்களை ஒவ்வொருவராக வள்ளத்தில் இறங்கும்படிச் சொன்னான். அப்படியே எல்லா ஜனங்களும் ஒவ்வொருவராக வள்ளத்தில் இறங்கினார்கள். கடைசியாக இந்தக் கிழவி வந்து இறங்கினாள், இவள் இறங்கும்போது கப்பலிலிருந்து காலைத்தூக்கி வள்ளத்தில் வைக்கும்பொழுது ஒரு பெரிய அலை வந்து வள்ளத்தை அங்கும் கப்பலை இங்குமாக பிரித்துவிட்டது. இரண்டுக்கும் நடுவிலே சப்குண்டைப்போல் விழுந்தாள்; உடனே மாலுமி பிடித்துத் தூக்கும்படி கூடியமட்டும் பிரயாசப்பட்டான், முடியவில்லை. ஏனென்றால் அவளுடைய அடிமடியிலிருந்த 500 ரூபாய்ப் பளுவானது சடுதியாக சமுத்திரத்தின் அடியிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது. அப்பொழுதுதான் கிழவியின் நிலைமையை நினைத்தார்கள். இந்தக் கிழவியிருந்த பரிதாபமான நிலைமையும் அவளுடைய பரிதாபமான வார்த்தைகளுமே அவளைச் சோதனைசெய்யத் தூண்டவில்லை. கடைசியாக அவளை பணமூட்டையே இழுத்துக்கொண்டு போய்விட்டது என்று எண்ணிக்கொண்டார்கள்.



கல்கத்தாக் கோட்டை முதலியவை.

இந்தக் கதையினால் நாமும் என்ன கற்றுக்கொள்ளலாம்? இந்தக் கிழவி முதலாவது கடவுள் கொடுத்திருக்கிற எட்டாவது கற்பனை அதாவது “களவு செய்யாதிருப்பாயாக” என்ற கட்டளையை மீறிவிட்டாள்; இரண்டாவது அந்த கஷ்டப்பட்டு சேர்த்துவைத்தவனுடைய பணத்தை அபகரித்துக்கொண்டாள்; நாமும் அநேகம்பேர் இந்தக் கிழவியைப்போலத்தான் இருக்கிறோம். நாம் ஒரு பாவத்தைச் செய்யும்போது கடவுள் நமக்கு அளித்திருக்கிற கற்பனைகளை நினைக்கிறதில்லை, வரும் தண்டனைகளையும் நினைக்கிறதுமில்லை. கடவுள் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறாரா? இது ஒரு அற்பகாரியம்தானே இது பெரியகாரியமல்லவே என்று தங்கள் மனதில் எண்ணிச் சிறுசிறு குற்றங்கள் செய்து கடைசியில் பெரிய குற்றங்களில் அகப்பட்டுக்கொள்ளுகிறோம். ஆகையினால் நாம் இரகசியமாக எந்த மனிதருக்கும் தெரியாதபடி செய்கிற ஒவ்வொரு பாவத்தையும் கடவுள் பார்க்கிறார் என்று எண்ணி இதைப் படிக்கிற யாவரும் நம்மில் இப்படிப்பட்ட பாவ எண்ணம் குடிகொண்டிருக்கிறதா” என்று கவனித்து அப்படி இருக்குமானால் உடனே கண்ணீர் விட்டழுது அந்தக் கெட்ட எண்ணம் முற்றுமாக நம்மை விட்டு நீங்கும்படி கடவுளை நோக்கி வேண்டிக்கொள்வோமாக.

பண ஆசைஎல்லாத்தீமைக்கும் வேராகவிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். 1 தீமோ. 6. 10.

G. D.

## GOOD INTERCOURSE

## சற்சகவாசம்

நீர்வளம் நிலவளம் பொருந்திய வளநாடு என்னும் ஒரு தேசத்தில் தனபாலன், குணபாலன் என்றிருவர் இருந்தனர். தனபாலன் தன் மகன் கங்கனை வித்தியாசாலைக்கு அனுப்பும்போது “நல்ல சகவாசம்பண்ணு” என்று சொல்லி அனுப்பினான். குணபாலன் என்கிற மற்றொருவன் தன் மகன் அங்கனை வேலைக்கு அனுப்பும்போது “சத் சகவாசத்தையே தேடு” என்று புத்திசொல்லி அனுப்பினான். கங்கன் தன் தகப்பனார் நல்ல சகவாசம் செய் என்று சொன்னதின் கருத்து தான் எப்பொழுதும் தன்னைவிட ஐஸ்வரியத்திலும், அந்தஸ்திலும் மேலானவர்களுடைய சிநேகத்தை சம்பாதித்து, அப்படிப்பட்டவர்களால்தான் கூடிய வகையிலும் உதவிபெற்று நல்ல ஸ்திதிக்கு வரலாமென்று யோசித்திருந்தான். ஆதலால் அவன் வித்தியாசாலை சேர்ந்தது முதல் பிரபுக்களின் பிள்ளைகளையடுத்து அவர்கள் முகம்கோணாமல் நடந்து அவர்களுடன் விளையாடுவதும் வேடிக்கை அனுபவிப்பதுமாயிருந்தான். பிரபுக்களின் பிள்ளைகளை அடுத்து சகவாசம்செய்யத் தொடுத்ததினால் இவன் படிப்பின்மேல் கவலையயிராமல் அப்பிள்ளைகளுடைய அகந்தைகளையும் மேட்டிமைகளையும்கற்றுக்கொண்டு வீணாய்த்திரிந்தான். அப்போதைக்கப்போது தன் தகப்பனார் அனுப்பிக்கொண்டிருந்த பணத்தை அப்பிரபுக்களின் பிள்ளைகளிடத்தில் பந்தயம்வைத்து சூதாடி அநியாயமாய்ச் செலவழித்து ஆட்டத்தில் தோல்வி அடைந்து நஷ்டமடைந்தான். பிறகு அவனுக்குப் பணம் அனுப்புவிக்கத் தகப்பனுக்கும் சக்தியில்லாமற் போயிற்று. இப்படி சங்கடப்பட்டுக்கொண்டிருக்கையில் அவனுடைய தகப்பனார் இறந்துபோகவே அவனுடைய கஷ்டங்கள் அதிகரித்துவிட்டன. வயிற்றுக்குக்கூடச் சம்பாதிக்கத் திறமையற்றவனாய், அப்பெரிய மனிதரிடத்திலேயே போய் வேலைசெய்து அவர்கள் சொற்படி நடந்து கூலிவேலை செய்து எல்லாராலும் அவமதிக்கப்பட்டு அவமான பிழைப்புப் பிழைத்துவந்தான்.

2. அங்கன் என்பவனோ தான் எந்த வேலைக்காக நியமிக்கப்பட்டானோ அதைப் பூர்த்தியாகக் கற்றுத் தேர்ச்சியடைந்து, ஒழிந்த வேளைகளில், விவேகமும், நல்லொழுக்கமும் அமைந்த சிலரோடு சம்பாஷித்து நாளாவர்த்தியில் அவர்களைச் சிநேகமாக்கிக்கொண்டு, பணக்காரனானாலுஞ் சரி, சோற்றுக்குக் கதியில்லாதவனானாலுஞ் சரி, எவரிடத்தில் நல்லறிவும், நல்லொழுக்கமும், ஜீவகாருணியமும் உண்டோ அவர்களையே நாடி ஞானமுள்ளவனானான். அதனாலவன் எல்லாராலும் மதிக்கப்பட்டு, தன் வேலையின் சாமர்த்தியத்தினால் அதிக லாபமடைந்து சுகசவுக்கியமாய் வாழ்ந்திருந்தான்.

இதை வாசிக்கும் என் நண்பர்களே, ஒருவனுக்குள்ள வாடிக்கைகளும் கொள்கைகளும் அவன் பண்ணுகிற அப்பியாசத்தினாலும் சகவாசத்தினாலுமே அநேகமாய் உண்டாகிறதென்று முற்கூறிய திருஷ்டாந்தத்தினால் அறிகிறோம், மற்றபடி பிறக்கும்போதே கூடத் தோன்றினவைகளல்ல. எவ்விதமானவர்களுடன் ஒருவன் நாடோறும் பேசிப்பழகி ஜீவிக்கிறானோ, அவர்களுடைய நடவடிக்கைகள்தான் அவனுக்குப் படியும். அவன் வேணுமென்று முயற்சிசெய்து அந்நடவடிக்கைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. அவைகள் தாமாகவே படிந்துபோகும், அப்படிப் படிந்துபோய் நிலைபெற்றபிறகு, அவைகளை ஒழித்துவிடுவது எளிதான காரியமல்ல.

மார்க்க விஷயத்திலும் அப்படித்தான். நாம் எப்படிப்பட்ட தெய்வத்தோடு சகவாசஞ் செய்கிறோமோ அதற்குத்தக்க குணங்கள்தான் நமக்குண்டாகும். “கடவுள் எப்படியோ பக்தனும் அப்படியே,” “தாய் எப்படியோ பிள்ளையும் அப்படியே,” “குரு எப்படியோ சிஷனும் அப்படியே” என்பது நம் தேசத்தின் பழமொழிகள்.

D. L. R.

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

சிறிது காலத்திற்குமுன் உண்டாயிருக்கும் சீர்திருத்த சமாஜங்களைப்பற்றிச் சற்றே சொல்லிமுடிப்போம். இவற்றில் ஒன்று ராஜாராம் மோகன்ராய் 1830–ல் பங்காளத்தில் ஸ்தாபித்த பிரமோ சமாஜம், இதில் 1911–ல் 5504 அனுசாரிகள் இருந்தனர். தெய்வம் ஒன்று, மனிதர் யாவரும் சகோதரர்; மத்தியஸ்தரில்லாமல் தெய்வத்தோடு நேரில் ஐக்கியப்படலாம் என்பதே பிரமோ சமாஜத்தவரின் பொதுவான சித்தாந்தம். பிரமோ சமாஜத்தவர் பகிரங்க சீர்திருத்தக்காரர். அவர்களுடைய போதனைகளாலும் நூல்களினாலும் இத்தேசத்தில் கற்றறிந்தவர்களின் மனதில் விசேஷித்த பலிதம் உண்டுபண்ணியிருக்கின்றனர்.

இன்னொன்று ஆரிய சமாஜம். இது கத்தயவாரிலுள்ள ஸ்வாமி தயானந்த சாஸ்வதியினால் 1875–ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 1911-ல் ஜனசங்கை காலத்தில் 243,514 பேர் ஆரிய சமாஜ அங்கங்கள். இச்சமாஜத்தின் முக்கியசித்தாந்தங்களாவன:—(1) சதுர்வேதங்களிலுள்ள சங்கீதங்கள் மாத்திரம் தேவ அருளால் உண்டானவை. (2) கடவுள், ஆவி, ஜடப்பொருள் என்று மூன்று நித்திய வஸ்துக்கள் உண்டு. (3) ஆத்மா வேறே, தெய்வம் வேறே. (4) ஆன்மா மனிதனாகவும், பிராணியாகவும், அல்லது தாவரமாகவும் புனர்ஜன்ம மாகலாம். (5) துன்பத்தினின்றும், பிறப்பு இறப்பிலிருந்தும் விடுதலை பெற்று தெய்வப் பிரவாஹத்தில் ஜீவானந்தம்பெற்றுச் சுகிப்பதே முக்தி என்பதே. ஆரிய சமாஜமானது ஜாதிவேற்றுமை, விக்கிரக ஆராதனை, சிசுவிவாகம், தீர்த்தயாத்திரை முதலியவைகளைக் கண்டிப்பதுண்டு.

இந்துசமயத்தில் கீழேகண்ட நல்ல குறிப்புகள் உண்டு என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்.

1–வது. கடவுள், ஆத்மா, முக்தி என்றவைகளே சிரேஷ்டம் என்ற எண்ணத்தை இந்துதேசத்தவர்கள் மனதில் உண்டாக்கியிருக்கிறது. வேறெந்தத் தேசத்திலு மில்லாதபிரகாரமாய் இந்துக்கள் தேவதாபக்தி யுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொள்ளவேணடும்.

2–வது. சாத்மீகம், அகங்கார நிக்ரகம், பொறுமை முதலிய சுபாவங்கள் சிறந்து விளங்கச் செய்திருக்கிறது.

3–வது. அன்றாடக ஜீவியத்தில் மார்க்க பக்தியை அப்பியாசிக்கச் செய்திருக்கிறது. ஓர் இந்துவின் ஸ்நானமும், போஜனமும், பிறப்பும், இறப்பும், கல்வியும், கல்யாணமும் அனைத்தும் மார்க்கத்தோடு சம்பந்தப்பட்டதாகியிருப்பது விசேஷமே.

இத்தேசத்து ஜனங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு அவர் மூலமாய் தேவனிடத்தில் சேரும் மார்க்கத்தை யறிந்துகொள்வார்களானால், இந்த நற்குணங்கள் அவரால் புது உயிரடைந்து ஜோதிப்பிரகாசமாய் ஜொலித்து விளங்குமென்பதற் கையமில்லை.

இந்துமார்க்கத்தில் காணும் தப்பறைகளையும் சுருக்கமாய்ச்சொல்லுவோம். (1) அதின் ஜாதிவேற்றுமையும் வேதாந்தக்கொள்கையும் சேர்ந்து மனுஷர் தங்கள் உத்தரவாதத்தையும் தம் தம் பொறுப்பையும் உணராதபடி செய்துவிட்டன. (2) அதின் விக்கிரக ஆராதனை ‘தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்’ என்ற சத்தியத்தை ஜனங்கள் உணரக்கூடாதபடி செய்கிறது. (3) அதின் ஜாதி ஏற்பாடானது சகோதர சிநேகத்தைக் கெடுத்து, மனுஷனை மனுஷனுக்கு அடிமையாக்கிப் பிரித்துவிட்டது. அந்தந்த ஜாதிக்கு அந்தந்தத் தொழில் என்ற ஏற்பாட்டினால் கைத்தொழிலை ஹீனமென்றெண்ணச்செய்து தேசத்தைத் தரித்திரப்படுத்திவிட்டது. (4) சிசுவிவாகம் கட்டாய சதாவிதவத்துவம் முதலிய வழக்கத்தினால் ஸ்திரீஜாதியை நிர்ப்பாக்கிய ஸ்திதியில் வைத்துவிட்டது. (5) கோவில்கள் சம்பந்தமாய் தாசிகளை ஏற்படுத்தினதாலும் தெய்வங்களைப்பற்றிச் சொல்லிய அசுத்த கதைகளாலும் துன்மார்க்கத்துக்கு அநுசரணையாக இருந்திருக்கிறது.

(இன்னும் வரும்.)

## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

(தொடர்ச்சி.)

83\. குதிரையோ பத்துனக்கு—குக்கலொரு ஒன்பதடா
   இதுகளுன் பாகமடா — எடுத்துக்கொள் ளப்பாநீ

84\. மாவும் பலாவும்பல—மதுரக் கனிகள்நிறை
   ஆவல மாரடா—அப்பா உனதுபங்கு

85\. கட்டில்நாற் காலிகளும்—கனத்தபெரும் மேஜைகளும்
   எட்டிலே நாலுபங்கு—எடுத்துக்கொள் ளென்றனே

86\. தந்தபின் தனயனுக்கு — தாதையு மென்ன சொன்னான்
   அந்தமுள்ள என்மகனே—ஆங்காரங் கொண்டவனே

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

TRADE MARK.

TRADE MARK.



மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்







உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.



Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

APRIL, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. எப்பிரல்மீ, 1915.


## NEWS AND NOTES

### வர்த்தமானக் குறிப்புகள்

**இந்திய அரசர்.** — இந்திய அரசர்களே ஏராளமான நன்கொடைகளை யுத்தத்துக்கென்று அளித்திருக்கிறார்கள்.

**ஜர்மன் கப்பல்.**—இதன் ஒரே ஒரு சண்டைக் கப்பல் இப்பொழுது எம்டெனைபோல சமுத்திரத்தில் அலைந்துகொண்டிருக்கிறது. மற்றவையெல்லாம் மூழ்விக்கப்பட்டும் துறைமுகங்களில் ஒளித்துக்கொண்டு மிருக்கின்றன.

**யுத்தமும் சாராயமும்.**—இந்தப் பெரும்போரால் மடிகிற வீரரைவிடப் பெருந்தொகையான பேர்கள் அமெரிக்காவிலே மதுபானக் கெடுதியினால் வருஷந்தோறும் கோடிக்கணக்காய் மாண்டுபோகிறார்களாம்.

**யுத்தமும் காலேஜ் மாணுக்கரும்.** — ஆயிரம் பதினாயிரமான மாணுக்கர்கள், பற்பல காலேஜ்களிலிருந்து யுத்தத்துக்குப் போயிருக்கிறபடியால், அனேக காலேஜ்கள் வெறுமையாய் இருக்கின்றன. மரணம் பிரவேசிக்காத குடும்பங்கள் ஐரோப்பாவில் தற்காலம் மெத்த அருமையாம்.

**இந்திய வீரர்கள்.**—இங்கிருந்து பிரான்சுக்குப் போயிருக்கிற நமது வீரர்கள் எதிர்பாராத தைரியத்துடன் போர்செய்து வெற்றியடைந்து வருகிறார்கள். இதனால் இந்தியர்கள் அங்கிலேயர் முதலானோருக்கு எவ்வளவேனும் தாழ்ந்தவர்களல்லவென்பது திருஷ்டாந்தமாய்விட்டது.

**பெந்தெகோஸ்து மிஷன்.** — இப்பெயர்கொண்ட பிரசங்கிகள் பல விடங்களுக்குப் போய்ப் பொய்யுபதேசம் போதித்து சபைகளைக் கெடுக்கிறபடியால், கிறிஸ்தவர் அவர்களுக்கு எவ்வளவும் இடங்கொடாமல் ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்று தென் இந்திய ஐயர்மார் கான்பிரென்சில் தீர்மானிக்கப்பட்டது.

**கஷ்டமான சில காரியங்கள்.**—மன்னிப்புக் கேட்டல்; மறுபடியும் தொடங்கல்; குற்றத்தை ஒப்புக்கொள்ளல்; புத்திமதி கேட்டல்; அறஞ்செய விரும்பல்; நிதானித்தல்; வெற்றியைத் தாங்கல்; மீண்டு மீண்டு பிரயாசப்படுதல்; நினைத்துச் செய்தல்; தவறுப்புத்தியடைதல்; மன்னித்து மறத்தல்; புதுவழி செல்லுதல்; தண்டனை சகித்தல். இவை கஷ்டமாயினும், அதிகப் பயன் செய்பவை.

**சூயெஸ் கனல் என்னும் வாய்க்கால்.** — இது 85 மைல் நீளமும், 31 அடி ஆழமும், 108 அடி அகலமுமுள்ளது. 1875—இல் பிரிட்டிஷ் அரசு ஒவ்வொன்று 20 பவுண் பெறுமான 176,602 ஷேயர்களை வாங்கிக்கொண்டமையால், பிரான்சும் இங்கிலாந்தும் மேற்படி வாய்க்காலுக்கதிகாரிகளாய் விட்டார்கள். இதைப் பிடிக்கத் துருக்கியர், முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டாற்போல், படையெடுத்துத் தோற்றுப்போனார்கள்.

**நல் ஆலோசனை.**—எரிச்சலாயிருந்தால், 27—ம் சங்கீதம் வாசி. அதைரியப்பட்டிருந்தால், 47—ம் சங்கீதம் வாசி; மனுஷன் உன்னிடத்திற் பகை சாதித்தால் யோவான் 15—ம் அத். வாசி; உன் வேலையைப்பற்றிச் சலிப்பற்றிருந்தால், 126—ம் சங்கீதம் வாசி. மனம் வாடியிருந்தால் எபிரெயர் நிருபம் 12—ம் அத். வாசி. உன் வழக்குச் சாயாவிட்டால், யாக்கோபு நிருபம் வாசி. பிறரிடம் நம்பிக்கை இழக்கிறதாயிருந்தால், 1 கொரி. 13—ம் அத். வாசி. ஒவ்வோர் வேளையில் நீதிமொழி 7—ம் அத். வாசி.

**யுத்த முடிவு.**—யுத்தமொழிந்து சமாதானம் உண்டாகிற காலத்தில் ஜர்மன் சக்கரவர்த்தி ஒழிவாராம்—ஒரு சாதாரண அரசனாயிருப்பார்; ஜர்மனியிலே ஒருபாகம் பிரான்சுக்கும், ஒருபாகம் டென்மார்க்குக்கும், ஒருபாகம் ரஷியாவுக்கும் சேர்ந்துவிடும். துருக்கியும் அவ்வாறே பங்கிடப்படும். ரஷியா கான்ஸாந்திநோப்பிலைப் பிடித்துக்கொள்ளும்—பலெஸ்தீனு கிறிஸ்து அரசாகும். போலாந்து ஒரு பிரத்தியேக ராஜ்யமாய்விடும். இந்தியாவுக்கும் சில நன்மைகள் கிடைக்கும். கிறிஸ்தவ சபையும் விர்த்திபெறும்.

**யுத்த விஷயங்கள்.**—யுத்தம் முன்போலவே பல ஸ்தானங்களில் மும்முரமாய் நடந்துகொண்டிருக்கிறது. துருக்கியைச்சேர்ந்த டார்டனெல்ஸ் என்கிற ஜலசந்தியில் புதிதாகக் கப்பற்சண்டை ஆரம்பித்திருக்கிறது. துருக்கியின் தலைநகராகிய கன்ஸ்தாந்திநோப்பில் நகரத்தைப் பிடிக்க இரண்டு வழியுண்டு. ஒன்று வடக்கே, ஒன்று தெற்கு. வடக்கேயிருந்து ரஷியர் கப்பல்களைக் கொண்டு வருகிறார்கள்; தெற்கேயிருந்து அங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் மேற்படி ஜலசந்திமார்க்கமாகக் கப்பல்களைக் கொண்டுபோகிறார்கள். அனேக கோட்டைகளை அழித்துவிட்டார்கள். ஆகிலும், அந்நகரத்தைப் பிடிக்க ஒருமாதஞ் செல்லுமாம். ஜர்மனியிலே தானிய தவசமில்லாமல், ஜனங்கள் மெத்தக் கஷ்டப்படுகிறார்கள். பிறதேசக் கப்பல்களைப் பிடிக்கிறதாக பயமுறுத்தியும் பயனில்லை. ஏதாயினும் ஒரு வர்த்தகக்கப்பல் தப்பித்தவறி அவர்களால் மூழ்விக்கப்படுகிறதே தவிர, மற்றப்படி ஆயிரமாயிரமான கப்பல்கள் வழக்கம்போல யாத்திரை செய்துகொண்டு வருகின்றன. தரை யுத்தத்திலே, ஜர்மன்கள் அனேகமாய்த் தோற்றும், வீரர் இழந்தும், மற்ற நாசங்களடைந்தும் வருகிறார்கள். லாய்ட் ஜார்ஜ் என்கிற மந்திரி அக்டோபர் மாதத்துக்குள் சண்டை ஓய்ந்தாலும் ஓயுமென்கிறார். அப்படித்தான் ஓய்ந்தாலும், வீரர்கள் யாவரும் தத்தம் நாடுநகரம் திரும்பிவர இன்னும் ஆறுமாதஞ் செல்லுமாம். இதற்குள்ளே கணக்கு வழக்கில்லாத திரவிய நஷ்டமும், உயிர்ச்சேதமும் நேரிடுமென்பதற்குச் சந்தேகமில்லை. கடவுள் தாம் இந்தப் பெருந்தீமையிலிருந்து நன்மையை விளைவிக்கவேண்டும்.

### எப்பிரல்மீ பஞ்சாங்கம்—

| வாரம். | எப்பிரல்மீ = பங்குனி—சித்திரை. ⊙ பௌர்ணமி, 28 உ ● அமாவாசை, 14உ | | | | | பங்குனி—சித்திரை. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 6 | 13 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 7 | 14 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 1 | 8 | 15 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 2 | 9 | 16 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 3 | 10 | 17 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 4 | 11 | 18 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 5 | 12 | ... |



புஸ்தகம் உஅ. தே. சு.

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

பத்தாவது கதை

### பயந்தவன் கணணுக்கு இருண்டதெல்லாம் பேய்.

ஒரு கிராமத்தில் இராமனும், கோவிந்தனும் என்னப்பட்ட இரண்டு சிநேகிதர் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஒரு கிராமத்துக்குப் போய் காட்டுவழியில் போகும்போது பார்வைக்கு அதிக இருளாகவும் பட்சிகளின் சத்தங்கள் அதிக பயங்கரமாகவும் இருக்கிறது. அப்போது இராமனுக்கு அதிக பயம் இருந்தபடியினால் கோவிந்தனைப் பார்த்து, அடே கோவிந்தா, நாம் கொஞ்சம் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் நடக்கவேணும். ஏனென்றால் இந்தக் காட்டுவழி பாதையில் முனியாண்டிபேய் இருக்கிறதாகக் கேள்விப்பட்டு இருக்கிறேன் என்று சொன்னான். அதற்கு கோவிந்தன், அடா இராமா, நானும்கூட கேள்விப்பட்டுத்தான் இருக்கிறேன். ஆனாலும் நாம் மனத்தைரியத்தோடுதான் நடக்கவேணும். நாம் மணி தெரியாமல் அதிக முன் இருட்டிலே புறப்பட்டுவிட்டோம் றுகொண்டதே யென்று சொன்னான். இருவருக்கும் அதிக திகிலும் கலக்கமும் பிடித்துவிட்டது. உடனே இருவரும் கைகோத்து அங்கேயே நின்றுகொண்டார்கள். அவர்களுக்கு முன்னால் பெரிய பூதம்போல் நிற்கிறது. அப்போ கோவிந்தன் கொஞ்சம் தைரியங்கொண்டு இராமனைப் பார்த்து, அடே இராமா இந்த முனிபேய் சாகவேணும் அல்லது நாம் இருவரும் சாகவேண்டும், நான் ஒரு உபாயம் சொல்கிறேன் கேள் என்று சொல்லி நாம் பின்னால் திரும்பினாலும் அடித்துப்போடும் முன்னால் நடந்தாலும் அடித்துப்போடும். ஆகையினால் நாம் இருவரும் ஒன்றுபோல் காலைத் தூக்கிக் கொண்டு ஒரே மிதியாக மிதிக்கலாம், அப்போ



பினாரென்ஸ் நகரம்.

வரும்படி தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள். அப்படியே அவர்கள் இருவரும் குறிக்கப்பட்ட தினத்தில் வெயிலுக்கு முன்னதாகப் போய்விடவேணுமென்று விடியற்காலம் 3 மணிக்குப் புறப்பட யோசனை செய்தார்கள். மணித் திட்டம் தெரியாமல் நடுஜாமத்தில் புறப்பட்டுவிட்டார்கள். தங்கள் கைகளில் வழிக்கு வேண்டிய கட்டுசோதம் உடுப்புகள் முதலியவைகளையும் கையில் பிடித்துக் கொண்டு நடந்துபோகிறார்கள். போகும்போது அதிக இருளாகத்தான் காணப்பட்டது. மனதிலேயும் கொஞ்சம் பயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் வெளிக்குக் காண்பிக்காமல் நடக்கிறார்கள்.

யென்று இருவரும் பேசிக்கொண்டு போகும்போது பக்கத்தில் இருந்த கோவிலுக்குள் ஒரு பட்சியின் சத்தம் அதிக பயங்கரமாகக் கேட்டது. உடனே இராமன், அடே கோவிந்தா, அதோ முனியாண்டிபேய் கூச்சல் போடுகிறது என்ன செய்யலாம் யென்றான். அதற்கு கோவிந்தன், பயப்படாதே அது ஒரு பட்சியின் சத்தம், அது நமக்கு பிரமிப்பை உண்டுபண்ணுகிறது என்று சொல்லிக்கொண்டு கொஞ்சதூரம் போகும்போது வழியின் முன்னால் ஒரு பெரிய பூதம் போல் இருளாகக் காணப்பட்டது.

அதைப் பார்த்ததும் இராமன், அடே கோவிந்தா முனியாண்டிபேய் இதோ முன்னதாக வந்து நின் மிதியை வாங்கிக்கொண்டு ஓடிப்போய்விடும் என்றான். அப்படியே இராமனும் சம்மதித்துக் கொண்டு இருவருமாகக் காலை ஒன்றுபோல் தூக்கி ஒரு உதை உதைத்தார்கள். உடனே இருவர்களுக்கும் கடுங்காயம்பட்டது; இரத்தம் வடிகிறது. அப்போதுதான் அவர்கள் அதைக் கூர்ந்து தடவிப் பார்த்தார்கள். அது பூதம் அல்ல படர்ந்த பனை மரச்செடியாகக் காணப்பட்டது. அதில் இருந்த கூர்மையான கருக்குமட்டை கால்களைக் காயப்படுத்திவிட்டது.

அதின்பிறகு தான் அவர்களுக்கு மனக்கலக்கம் நீங்கி தங்களுடைய அறியாத தன்மைக்காக மனவருத்தப்பட்டு, நம்முடைய மனதின் பயம் இவ்வளவாக நம்மை திகில் உண்டாக்கி இப்படி கடுங்காயத்தை அடையும்படி செய்துவிட்டதேயென்று துக்கித்து விடிந்தபிறகு பக்கத்தில் இருந்த கிராமத்தில் போய் தங்கள் காயத்தைக் காட்டினார்கள். அவ்விடத்தில் இந்தக் காட்சியைக் கண்டு கேட்டவர்கள் அதிசயப்பட்டு ஆனாலும் உங்களைப்போல் பயங்காளிகள் பூலோகத்தில் இருக்கமாட்டார்கள் என்று அவர்களை நிந்தித்தார்கள்.

G. D.



## THE LATE HONOURABLE MR. GOKHALE

## காலஞ்சென்ற ஆனரபில் மெஸ்தர் கோக்கலே

எத்தேசத்துள்ளும் சுயதேச அன்பினாலேவப்பட்டு அருஞ்செயல்புரிந்து அழியாப் புகழ்படைத்தோர் சிறிது மில்லாதிரார். கீழ்தேசங்களுள் முற்கால கீர்த்திபெற்று விளங்கும் இப்பாத கண்டத்திலும் அவ்வகையோர் அனந்தமுளர். ஆயினும் தற்கால இந்தியருள் சுயதேச நன்மைக்காகவும் அதன் உயர்கதிக்காகவும் பேர் முயற்சி புரிந்து நம்தேசத்தவ ரனைவரது அன்புக்கும் உரித்தாயுள்ள உயர்மக்களில் ஓராணிமுத்தென உறுதியாயுரைக்கவாவர். சென்ற பெப்ருவரி 19–ம் தேதியில் பூனாவில் உயிர்துறந்த ஆனரபில் மெஸ்தர் கோபால கிருஷ்ண கோக்கலே. இம்மகானின் நாமதேயம் வாசிக்கக்கூடிய எவருக்காயினும் கவீனமாய் தொனிப்பில் அவரை இன்னமும அறியாமலிருந்தது, அவர் பிழையன்றி பிறிந்தவராகா.

இவர் 1866–ஞ கோலாப்பூர் என்னுமிடத்தில் ஓர் ஏழைக் குடும்பத்திற் பிறந்தார். அவ்விடத்து வித்தியாசாலையில் கற்கக்கூடியதைக் கற்றதும், பின்னர் பம்பாய் (Bombay) நகரிலுள்ள எல்பின்ஸ்டன் கலாசாலையிலும் (Elphinstone College) பூனாவிலுள்ள தக்காண கலாசாலையிலும் (Deccan College, Poona) பயின்று 1884–ஞ பி. ஏ. பட்டம் பெற்றார். உடனே தக்காணத்து வித்தியா பரிபாலன சங்கத்தை (Deccan Educational Society)ச் சேர்ந்து அதிலே சொற்ப சம்பளத்துக்காக உழைத்தனர். இவ்வாறு சுயமேன்மை நாடாது தன் தேசக்கல்வி விர்த்தியின் தாபத்தால் இவராரம்பித்த ஊழியமானது பிற்பாடு இவர் இந்திய சேவை சங்கத்தை (Servants of India Society) பிறப்பிப்பதற்கு இவரைத் தகுதியுள்ளவராக்கிற்று. இச்சமயத்தில் பம்பாய் நீதிபதிகளி லொருவராகிய மாட்சிமைபெற்ற ரன்னடே அவர்களை அடுத்துப் பழக நேரிட்டது. அக்கனவானின் ஆலோசனைப்படி இந்தியாவின் வரவு செலவுவிஷயங்களை நன்றாய்ப் பாடம்பண்ணி அதில் தேர்ச்சியடைந்தும் இந்தியாவின் சீர்திருத்தத்துக்குதவியான காரியங்களின்பேரில் முறையே பத்திரிகைகளுக்கு எழுதியும் வந்தனர். 1897–ஞ இந்தியாவின் பொருள் நிருவாகஸ்திதியை விசாரித்தறிய இங்கிலாந்தி லேற்படுத்தப்பட்ட வெல்பி பிரபுவின் விசாரணைக் கூட்டத்திற்குமுன் (Welby Commission) தம் அபிப்பிராயங்களை யெடுத்துரைத்தனர். அப்போது தாம் கருதிய காரியத்தை குசப்படுத்தக்கூடாத போனபோதிலும் அவ்விடத்தவரால் மிக்கக் கண்ணியம்பெற்றார். பின் அரசு முறைகளில் தமக்கிருந்த அறிவாலும் அதைத் தெளிவா யெடுத்துரைக்கக்கூடிய பேச்சுத்திறமையாலும் 1900–ஞ பம்பாய் சட்டம் பிரயாணிக்கும் சபையிலும் (Bombay Legislative Council) 1902–ஞ ராஜப்பிரதிநிதியின் சட்ட நிருபண சபையிலும் (Viceroy's Legilative Council) ஓர் சங்கத்தவராயினர். குடிஜனங்களுக்கு நன்மையென அவருக்குப் புலப்பட்டதெதுவோ அதற்காக எத்தனைதரம் தோல்வியடைந்தாலும் சோர்ந்துபோகாமல் கைகூடுமட்டும் விடாமுயற்சி செய்வர். அரசாங்கத்தை தேசவிஷயங்களில் அடிக்கடி எதிர்த்தாலும் அவர் கஷ்டங்களையும் கவனித்து பொறுமையோடு எவ்விஷயத்தையு முடிக்க முயல்வார். தென் ஆப்பிரிக்காவில் நம்மவர்களுக்கிருந்த கஷ்டங்களை நீக்குவதிலும் இவருடைய ஒத்தாசை இந்தியர்களுக்குப்போலவே அரசாங்கத்தார்க்கும் இன்றியமையாததாயிருந்தது. இவர் இந்தியாவுக்குச் செய்த எண்ணிறந்த நன்மைகளில் வித்தியானுகூலமாகச் செய்தவையே சிறந்தன. கீழ்தர படிப்பு சம்பளமின்றி சம்பாதிக்க அனுமதி பெறக்கூடாமற்போனபோதிலும் இப்போது கல்வி விஷயமாய் உதவி நன்கொடையா யளிக்கப்பட்டிருக்கும் பெருந்தொகைக்கு இவரே காரணமாவர்.

இவரதற்புத அலங்கார நீதிவழுவா நிஷ்களங்க ஜீவியத்தை விஸ்தரிக்கப்புகில் விரியும். அதற்கு இதல்லவிடம். இவர் சாமர்த்தியமும் சமயோசித யூகமும் நிறைந்தவரானதுபற்றி இவரது உதவி இந்தியர்க்குப்போலவே அரசாங்கத்தார்க்கும் நிராகரிக்கக் கூடாதிருந்தது. ஆயின் ஈஸ்வர அமைப்பு வேறாயிருந்தது. சில்லாண்டுகளுக்குமுன் இவர் தேகசௌக்கியம் குன்ற வாரம்பித்து கிரமமாய் குறைந்து இவ்வுலகவாழ்வுக் கிசையாது மரணமாய் முடிந்தது நம் துர் அதிஷ்டமே. அவரை நெருங்கிய பந்துமித்திருக்கு ஈஸ்வரன் நல்லாசி சுவாராக.

இம்மகானின் மரணதுக்கத்தைச் சமுதாயமாய் வெளியிட சென்னை விக்டோரியா சபாமண்டபத்து வடபுற வெளியில் இம்மாதம் 4–ம் தேதி அந்திப் பொழுதில் ஒரு பெருங்கூட்டம் நடந்தேறியது. அதில் ஆனரபில் சிவசாமி ஐயரவர்கள் அக்கிராசனம் வகித்து கனம்: கோக்கலே அவர்களது குணகுணங்களை சிறப்பித்துக் கூறினார்கள். ஆனரபில் ஸார் ஹெறால்ட் ஸ்டீவட் அவர்களும் அப்படியே ஸ்துதித்துரைத்தார்கள். இன்னும் கூடிய அநேக கனவான்கள் உருக்கத்தோடும் பக்தியோடும் அவரது சிறந்த குணங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவற்றையும் பின்பற்ற வேண்டியவற்றையும் எடுத்துக் காட்டினார்கள். இறுதியில் கனம்: கோக்கலே அவர்களின் ஞாபகமாய் சென்னையில் ஓர் பிரதிமை யமைக்கவும் அவராலேயோடு ஆரம்பித்த இந்தியசேவை சங்கத்தை (Servants of India Society) தக்க பொருளுதவி செய்து பரிபாலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

பல்லாயிரம் ஆண்டுகளாய் நம் தேசத்தவர்கள் கடவுளைத் தடவியாகிலும் கண்டுபிடிக்க முயன்றிருக்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை என்றாலும், அவர்களுடைய சகல தத்துவ சாஸ்திரங்களாலும் வேதாந்த உபதேசங்களாலும் இன்னம் அவரைக் கண்டுபிடிக்கவில்லையே. கர்த்தராகிய இயேசுரட்சகரே இந்துக்களின் சகல வாஞ்சையையும் தேட்டத்தையும் திருப்திசெய்கிறவர். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்றவர் அவரே. தேவன் எல்லார்மேலும் இருக்கிறவர். எல்லாருக்காகவும் திரு அவதார புருஷனாய் இப்பூலோகத்துக்கு வந்தவர். எல்லாருக்குள்ளும் வாசம்பண்ணுகிறவர் என்ற சத்தியம் சகல உபநிஷதத்திற்கும் மிஞ்சினதல்லவா? தேவன் நமது பிதா என்றும் மானிடர் யாவரும் சகோதரர் என்றும் வெளிப்படுத்தினவர் இயேசுகிறிஸ்து என்ற திரு அவதார புருஷனே. 'தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்' என்றும், 'தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை' என்றும், தேவன் பூரண சற்குண புருஷரானவர்; 'பரிசுத்தமில்லாத எவனும் அவரைக் காணமாட்டான்' என்றும் வெளிப்படுத்தினவர் இவரே. இவராலேயே இவ்வுலகத்திலும் முத்தி, மறு உலகத்திலும் முத்தி கிடைக்கக்கூடும். அதாவது, இவராலேயே மனுஷனுக்கு விடுதலை, ஸ்திரீகளுக்கு விடுதலை, பிள்ளைகளுக்கு விடுதலை. இவராலேயே நித்தியானந்த மூர்த்தியாகிய கடவுளுடன் சதாகாலமும் பேரின்ப பதவியும் அடைவோம். இவரை நம் சுயதேசத்தார் கண்டுகொள்ளும்படி அவர்களுக்காக ஜெபிப்போமாக, உழைப்போமாக. இயேசுகிறிஸ்துவே இந்துதேசத்துக்கு இரட்சகர்.

"சவர்ஜீவ தயாபர பிதாவே, தேவரீர் சகல மனுஷரையும் ஒரே இரத்தத்தினாலே உண்டாக்கி, பூமியில் குடியிருக்கச்செய்து, தூரமானவர்களுக்கும் சமீபமானவர்களுக்கும் சமாதானத்தைச் சுவிசேஷமாகக் கூறி அறிவிக்கும்படி உமது ஏகசுதனாகிய இயேசுகிறிஸ்துவை உலகத்தில் அனுப்பினீரே! இத்தேசத்து ஜனங்களும் மெய்த்தேவனாகிய உம்மை நாடித் தேடி கண்டுபிடிக்கும்படியாக சகல மனுஷர்மேலும் உம்முடைய ஆவியை மழைபோல் ஊற்றுவோமென்று தேவரீர் அருளிய திருவாக்கைச் சீக்கிரமாய் நிறைவேற்றவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்."

(இன்னும் வரும்.)

## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

(தொடர்ச்சி.)

87. பங்கைப் பிரித்தளித்தேன் — பத்திரமாய் நீயிதனை
மங்காது வைத்திருந்து—மண்ணில் பிழைத்திடுவாய்
88. துன்மார்க்க ரோடிணங்கி—துக்கத்துக் குள்ளாகாதே
சன்மார்க்க ஞயிருந்து—சமர்த்தாய்ப் பிழைத்திடப்பா
89. பொருளதை வீணாய்நீ—போக்கடித்துப் போடாதே
அருள்தனை யேயிழந்து — அயராதே வையகத்தில்
90. தக்க சமயமதில் — தந்தையெனைத் தேடிவந்தால்
எக்கனிப் பாயிருப்பாய்—என்றுரைத்தான் தந்தையரும்
91. பெருகுதென் கண்ணீர்கள் — பெற்றகுடல் கோகுதடா
கருங்கல்லோ உன்மனம் — கசப்பாச்சோ என்வீடு
92. தந்தைமுகம் பாராயோ—தமையன்முகம் பாராயோ
முந்த யெனைத்தழுவி—முத்தமுட்டுப் போய்வாடா
93. என்று புலம்பியந்த—ஏழைத் தகப்பன்சொல்ல
ஒன்றும் பேசாதிருந்தான்—ஒய்யாரடம்பனவன்

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD









மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்




குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி




கையினல் தொடாமல் செய்யப்பட்டது

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டியோர் பெயர்த்தைத் தபாற்கூலியுடன் சென்னை மெமோரியல் ஹாலுக்கெதிர டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.

Registered No. M. 442.

सत्यमेव जयति

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

MAY, 1915. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. மே௴, 1915.

OFFICE OF THE REGISTRAR OF ... 18 MAY 1915 MADRAS

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**வெஸ்லியன் மிஷன்.**—வெஸ்லியன் சபையாரில்மட்டும் 70,000 பேர் போர்வீரராகச் சேனையிற் சேர்ந்திருக்கிறார்கள்.

**நமதரசன் குமாரத்தி.**—நமது சக்கரவர்த்திக்கு ஒரே குமாரத்தி உண்டு. அம்மாது டைப் எழுத்து வேலை கற்றுக்கொண்டிருக்கிறார்களாம்.

**ஒரு புது ஆகாயக்கப்பல்.**—அதன் பேர் எர்ராப்டர். ஒரு சின்ன வாத்தியக் கருவிபோன்றதாம். அது மிக்க விரைவாய்ப் பறந்தோடக்கூடியதாம்.

**சேனைச்செலவு.**—நமது சேனையின் செலவை ஒருவாறு நிரகிக்கவேண்டுமாயின், 1½ நிமிஷத்துக்கு ரூ. 15,000 பிடிக்கிறதாம். அப்படியானல், சென்ற 9 மாதங்களுக்கு எவ்வளவு பிடித்திருக்கும்.

**மதுரா திருநெல்வேலி பிஷப்.**—கானன் வால்லர் என்பவர்கள் இம்மாகாணத்துக்குப் பிஷப்பாக நியமிக்கப்பட்டார். அவர் பட்டம் பெற்று, அங்கு வந்து சேருகிறவரைக்கும், டோர்னக்கல் பிஷப்பவர்கள் கண்காணியாராய் இருப்பார்கள்.

**தென் ஆப்பிரிக்கா காந்தி.**—பேர் வகித்த தேசோபகாரியான காந்தி என்பவர் இந்தியாவில் வந்திருக்கிறார். சென்றமீ சென்னைக்கு வந்து ஜனங்களின் வந்தனோபசாரங்களைப் பெற்று தம் மனைவியுடன் வேறு இடங்களுக்குச் சென்றார்.

**சென்னை வேதாகம சங்கம்.**—யுத்தம் அகோரமாய் நடந்துவந்தாலும், இந்தச் சங்கம் குறைவுபடாமல், 7¼ லட்சம் வேத புஸ்தகங்கள் அச்சிட்டு, 2¼ லட்சம் விற்றிருக்கிறது. ஒரு அணச் செலவு பிடிக்கிற புஸ்தகத்தை 4 பைக்கு விற்கிரயஞ்செய்து நன்மை இயற்றிவருகிறார்கள்.

**பிரதிநிதி.**—ஹார்டிங் பிரபு உயிர்ச்சேதமடைய நேரிட்டும், தாரத்தையும் தனயனையும் இழந்தும், இத்தேசத்தாருக்காக மிக்க அன்புடன் இம்மட்டும் உழைத்துவந்த காரணத்தையிட்டு, முக்கியமான சில இந்தியர்கள் பிரதிநிதியார் இன்னுங் கொஞ்சக்காலம் இருந்து அரசாட்சி செய்யவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

**மகம்மதியர்.**—பிரிட்டிஷ் ராஜ்யத்தில்மட்டும் 9½ கோடி துலுக்கர் உண்டு. இது கிறிஸ்தவர்கள் தொகைக்கு அரைகோடி அதிகம். மற்றெந்த ராஜ்யத்திலும் இத்தனைபேர் கிடையாது. ஆனல் கல்வி விஷயத்தில், 1,000 பெண்களில் 3 பேர்மாத்திரம் வாசிக்கக்கூடும். உலகத்தில் எல்லாம் 18 கோடி துலுக்கருக்கு கொரான் வாசிக்கத் தெரியாதாம்.

**'மதராஸ்'.**—இப்பெயர்கொண்ட ஆஸ்பத்திரிக் கப்பல் சென்றமீ சென்னைக்கு வந்துபோயிற்று. இது ஐந்தாம் பிரயாணம். முன்பு இரண்டுதடவை மொம்பாசாவுக்கும், இரண்டுதடவை பாஸ்ராவுக்கும் போய் வந்தது. இது நமது கவர்னரவர்களின் முயற்சி. விசேஷமாய், நமது இந்திய வீரர்களில் காயப்பட்டவர்களைத் தக்க ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டுபோகிறவிஷயத்தில் இக்கப்பல்பேருதவி புரிந்துவருகிறது.

**இங்கிலீஷ் மிஷன் விவரங்கள்.**—பிரிட்டிஷ் ராஜ்யத்திலே 8 மிஷன்கள் உண்டு. இத்தனை மிஷன்கள் உலகினில் வேறெங்கும் கிடையாது. ஒவ்வொரு மிஷனும் திரவிய சேகரஞ்செய்து, மிஷனெரிமார்களை வெளிதேசங்களுக்கு அனுப்புகின்றது. சென்ற வருஷத்தில் மேற்படி மிஷன்கள் சேகரித்த தொகை மூன்றரை கோடி ரூ. அவர்கள் காப்பாற்றுகிற மிஷனெரிகள் 11,000; சென்ற வருஷம் ஞானஸ்நானம்பெற்று எம்பெருமான் இயேசு சுவாமிக்கு அடியாரானவர்கள் 51,000 பேர். 25,000 காலேஜ்களில் மாணக்கர் வேதசாஸ்திரம் கற்றுவருகிறார்கள். இந்துக்கள் இப்படிப்பட்ட மிஷன்கள் ஒன்றுகூட ஏற்படுத்தினதில்லை. ஆனல் இந்திய கிறிஸ்தவர்கள் சில மிஷன்கள் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

**யுத்த விவரங்கள்.**—யுத்தம் முன்போலவே நடந்துவருகிறது. மேற்கிலும் கிழக்கிலும் ஜர்மானியர் பிரதிதினமும் தம் தேசம் தூரத்துண்டு வருகிறார்கள். வில்லியம் சக்கரவர்த்தி தாமே யுத்தத் தலைவராயிருந்து சகலத்தையும் நடத்திவருகிறார். சிலர் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். என்றாலும் எதிரிகள் இடைவிடாது தோற்படைந்து வருகிறது வாஸ்தவம். சிலர், அக்டோபர் மாதத்தில் சண்டை நிறுத்தப்படுமென்கிறார்கள். ஜர்மானியரும் சமாதானத்துக்காக போப் மூலமாகவும், அமெரிக்கா அதிபதி மூலமாகவும் பிரயாசப்படுகிறதாகக் கேள்வி. ஆனல் அவர்கள் ஏற்பாடுகளும் உடன்படிக்கைகளும் தோற்றவர்கள் கேட்கிறதாகத் தோற்றமல், ஜெயித்தவர்கள் கேட்கிறவைகளாகத் தோற்றுகின்றன. இது, தரையில் வீழ்த்தப்பட்டும் மீசையிலே மண்படவில்லை என்றவன் கதைபோல இருக்கிறது. ரஷியரும் கிழக்கே மலையைக் கடந்து ஆஸ்திரியரைத் தோல்வித்து வருகிறார்கள். எண்ணுக்கடங்காக் கைதிகளும், பீரங்கி, துபாக்கிகளும் அவர்கள் கையில் அகப்பட்டிருக்கிறது. இனி, இங்கிலாந்திலே ஜார்ஜ் அரசர் மதுபானம் செய்யமாட்டேனென்று வாக்களித்துவிட்டார். இதுபோல அனேக ஆயிரமான உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும், தொழில் வேலையாட்களும் அப்படியே வாக்குச் செய்திருக்கிறார்கள். மது வரியும் உயர்த்தப்பட்டுவிட்டது. இப்பொழுது வெடிமருந்து பீரங்கிகள்தான் அதிகமாய் வேண்டியது. மதுபானஞ் செய்தால் இத்தொழில் முயற்சிகள் விரைவாக நடவா. ஜர்மன் சண்டைக்கப்பல்களில் அனேகம் அழிக்கப்பட்டன. இந்திய அரசர்கள் ஏராளமான பொருளுதவி செய்துவருகிறார்கள். கடவுள் அநுக்கிரகந்தான் வேண்டும். சண்டை சச்சரவெல்லாம் ஒய்ந்து யூரோப்பில் சமாதானம் உண்டாகும்பொருட்டு நாம் அநுதினமும் பிரார்த்தித்து வருவோமாக.

**மே௴ பஞ்சாங்கம்—**

| வாரம். | மே௴ = சித்திரை—வைகாசி ⊙ பௌர்ணமி, 29௳ ● அமாவாசை, 14௳ | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | சித்திரை—வைகாசி. | | | | | |
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 20 | 27 | 3 | 10 | 17 |
| திங்க ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 21 | 28 | 4 | 11 | 18 |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 22 | 29 | 5 | 12 | ... |
| புதன் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 23 | 30 | 6 | 13 | ... |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 24 | 31 | 7 | 14 | ... |
| வெள் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 25 | 1 | 8 | 15 | ... |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 19 | 26 | 2 | 9 | 16 | ... |

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

பதினோராவது கதை.

### பிடிவாதமுள்ள குரங்குகள் கதை.

ஒரு அரசனுடைய தோப்பிலே அனேக குரங்குகள் சுகமாய் வாசம் செய்துகொண்டிருந்தன. ஒருநாள் அந்தக் குரங்குகளில் அதிக வயதுசென்ற கிழக்குரங்கு ஒன்று அந்தத் தோப்பிலே வாசம் செய்யும் மற்ற எல்லாக் குரங்குகளையும் தன் பக்கத்தில் வரும்படிசெய்து அவைகளுக்கு ஒரு புத்திமதி சொன்னது. எப்படியென்றால், என் பிரியமான சிநேகிதர்களே, நாம் இவ்வளவுகாலமாக இந்தத் தோப்பிலே நல்ல சுகமாக ஜீவித்தோம். இனிமேல் நம்மெல்லாருக்கும் ஒரு பெரிய மரண ஆபத்து சடுதியாக நேரிடப்போகிறது. ஆகையினால் நாம் எல்லோரும் அந்த ஆபத்தில் மடிந்துபோகாதபடி உடனே அடுத்த தோப்புக்குப் புறப்படுவோம் வாருங்கள் என்று வருந்திக் கேட்டது. அதற்கு மற்றக் குரங்குகள் எல்லாம் போ, போ, கிழவா, கிழவா, உனக்கு என்ன பைத்தியமா? அதிக வயதானதினால் உன் புத்தி புரண்டு இப்படி பிதட்டுகிறாயா? நாங்கள் ஒருபோதும் உன் சொல்லைக் கேட்கமாட்டோம். நீ வேணுமானால் உடனே போய்விடு. நாங்கள் இங்கேதான் ஜீவிப்போம் என்று மற்றக் குரங்குகள் கிழக்குரங்கைப் பரியாசம் செய்தன. மறுபடியும் கிழக்குரங்கு சொன்னது: ஆம் அப்பா, நான் கிழவனாகிப் போனேன். ஆகையினால் என் வார்த்தை உங்கள் செவிக்குப் பைத்தியமாகஇருக்குது. என் வார்த்தையை நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனாலும் திரும்பவும் நான் உங்களுக்குச் சொல்லிப்போகிறேன். இந்தத் தோப்பில் சடுதியான அபாயம் நேரிடப்போகிறது. உடனே தப்பிப் பிழையுங்கள் என்று சொல்லிவிட்டு, தான் புறப்பட்டுப் பக்கத்து தோப்புக்குப் போய்விட்டது. மற்றக் குரங்குகள் எல்லாம் அதன் புத்தியை அலட்சியமாய்த் தட்டிவிட்டு முன்போலவே அந்தத் தோப்பிலேயே வாசம்செய்தன.

ஒருநாள் சமயத்தில் அந்தத் தோப்பில் ஒரு கிழவி பொரி பொரித்துக்கொண்டு இருந்தாள். அப்போ அந்தத் தோப்பிலே புல் மேய்ந்துகொண்டிருந்த அரசனுடைய பட்டத்துக் குதிரை அந்தப் பொரியை வந்து தின்றது. உடனே கிழவி கையிலிருந்த நெருப்புக்கொள்ளிக் கொம்பினால் குதிரையை அடித்துத் துரத்தினாள். உடனே, அந்த நெருப்புக்கொள்ளி குதிரையின் காலின் ரோமத்தில் நெருப்புப்பற்றி கால் வெந்துபோனது. இந்த சங்கதி உடனே அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அப்போ, அரசன் உடனே கிழவியை விசாரணை செய்தான். கிழவி நடந்த சமாசாரத்தை ஒளிக்காமல் உள்ளதைச் சொல்லிவிட்டாள். எப்படியென்றால், அரசனே நான் பொரிபொரித்துக்கொண்டு இருந்தேன். குதிரை வந்து பொரியைத் தின்றது. நான் கொள்ளிக்கொம்பால் தட்டித் துரத்தினேன்; அது ரோமத்தில் பற்றிக்கொண்டது என்று சொன்னாள். அப்போ, அரசன் உடனே வைத்தியர்களை அழைப்பித்து 1 வாரத்துக்குள்ளாக இந்தக் காயத்தைச் சுகப்படுத்துகிறவர்களுக்கு நல்ல வெகுமதி கொடுக்கப்படும் என்று கட்டளையிட்டான்.

அப்போது ஒரு வைத்தியன் அரசனைப்பார்த்து, நான் சுகமாக்குகிறேன்; ஆனால் நான் கேட்கும் சாதனங்கள் கிடைக்கும்படி அரசன் கட்டளையிடவேண்டுமென்று கேட்டான். அதற்கு அரசன், என்ன தேவையென்று கேட்டான்; அரசனே, நான் கேட்டுக்கொள்வது யாதெனில் ஒரு பெரிய அண்டாவில் தண்ணீர் வார்த்து நன்றாய்க் கொதிக்கும்படி செய்து அந்தக் கொதிதண்ணீரிலே இந்தத் தோப்பில் இருக்கும் குரங்குகள் ஒன்றும் பாக்கியில்லாமல் பிடித்து அந்த அண்டாவிலே போட்டு நன்றாய் வற்றக் காய்ச்சி 2 படி தைலம் இறக்கி 4 நாள் போட்டால் சுகமாகிவிடும் என்றான். உடனே அரசன் அப்படியே செய்யென்று சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்து தன்னுடைய சேனைக்குக் கட்டளையிட்டு ஒரு குரங்கு பாக்கியில்லாமல் பிடித்து அண்டாவில் போடும்படியும் கட்டளையிட்டான். உடனே சேனைகள் வந்து தோப்பை வளைத்துகொண்டு குரங்குவேட்டை யாடினார்கள். அப்போதுதான் குரங்குகள் எல்லாம் யோசனை செய்கிறது. ஐயோ, கிழக்குரங்கு சொன்ன புத்தியைத் தட்டிவிட்டோமே, அது சொன்ன புத்திமதி உண்மையாகத்தானே இருக்கிறது. ஐயோ ஐயோவென்று தலைகளில் அடித்துக்கொண்டு அங்கும் இங்குமாக ஓடிப்பார்க்கிறது. இந்த வேட்டை ஆடுகிறதைப் பக்கத்துத் தோப்பில் இருந்த கிழக்குரங்கு வேடிக்கைபார்த்துக்கொண்டு அவைகளுக்காக விசனப்பட்டுக்கொண்டு கிழவன் சொல் கேளாததினால் அல்லவா இந்தக் கேடு வந்தது. வெள்ளம் வருமுன்னே அணைபோட்டுக்கொள்ள வேண்டியது. வெள்ளம் வந்த பிற்பாடு அணைபோட முடியாதே. நானும் எவ்வளவாக உங்களுக்குப் புத்திசொல்லிப் பார்த்தேன். நீங்கள் அலட்சியம் பண்ணி விட்டீர்களே யென்று விசனப்பட்டுக்கொண்டே யிருக்கிறது. அரசனுடைய சேனை தோப்பிலுள்ள குரங்குகள் ஒன்றுதவறாமல் பிடித்து அண்டாவிலே போட்டு வற்றக்காய்ச்சி 2 படி தைலம் இறக்கினார்கள். அதைக் குதிரையின் காலில் நாலுநாள் போட்டார்கள். குதிரைக்கு நல்ல சுகம் உண்டாகிவிட்டது. அரசன் அதிக சந்தோஷப்பட்டு வைத்தியனுக்கு நல்ல வெகுமதிகள் கொடுத்து அனுப்பினான்.



கெய்ரோ பட்டணத்திலுள்ள மசூதி.

இதனால் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம். நல் நடக்கையுள்ள பெரியோர் சொற்களை ஒருபோதும் அசட்டை செய்யக்கூடாது; அதை அமிர்தமாக ஏற்றுக்கொள்ளவேண்டியது. பெரியோர்சொற் கேட்பது கடமையென்றும் படித்திருக்கிறோம். நாம் ஒரு காரியத்தைச் செய்யத் தலையிடும்போதும் யோசிக்கும்போதும் நல்ல நடக்கையுள்ள பெரியோர்களைக் கலந்து அவர்கள் யோசனைகளை அலட்சியம் செய்யாமல் ஏற்றுக்கொண்டு அதின்படி செய்வோமாக. அப்போ அதில் கடவுளுடைய ஆசீர்வாதம் உண்டாகும். பெரியோர்சொற் கேளாமல் அவர்கள் வார்த்தைகளை அலட்சியஞ்செய்து நம்முடைய இஷ்டப்படி நடப்போமேயானால் இந்தப் புத்திகேளாத குரங்குகளைப்போல நாமும் பெரிய ஆபத்துக்குள்ளாவோம்.

மூத்தோர்சோல் வார்த்தை யமிர்தம்.

G. D.

## HEALTH AND DISEASE

## சுகபோதினி

(பாயிரம்.)

சுகத்தின் அருமை பெருமை. சுகமானது கடவுளால் மனுஷருக்கு அருளப்பட்ட மிகவும் நல்ல வரங்களில் ஒன்றாம். நாம் சுகமாயிருக்கையில் நமக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வேலையைச் செய்யவும், நம் இனஜன பந்துக்களுக்கும் சிநேகிதருக்கும் வேலை ஒழிந்த சமயத்தில் நம்மாலியன்ற உதவிபுரியவும் கூடும். ஆனாலோ வியாதி இதற்கு மாறாக நம்முடைய சத்துவத்தையும், பெலனையும், நாளடைவில் குன்றச்செய்து நம்மைச் சூழ்ந்திருக்கிறவர்களுக்குப் பாரச்சுமையாக்கிவிடுகிறது. உதாரணமாக, சுகதேகியான ஒரு குடியானவனையும், சுகவீனமான ஒரு வேந்தனையும், எடுத்துக்கொள்வோம். குடியானவன் எப்போதும் சந்தோஷமாயும் சௌக்கியமாயும் இருக்கிறான்; அரசனோ கொலுமண்டபத்திலும் அரமனையிலும் நிர்ப்பந்த நிலைமையிலிருக்கவும் நேரிடலாம்.

ஒரு மாதாவுக்குச் சுகவீனம் நேரிட்டால், அது எத்தனை பெரிய பரிதாபம். பிதாக்கள் தங்கள் அநுதின ஆகாரத்துக்காக வேலைசெய்ய வேண்டியவர்களாயிருக்கலாம். இப்படி அசௌக்கியம் நேரிட்டால் தினசரி சம்பளம் அவர்களுக்குக் கிடையாமலிருக்க வைத்தியனுக்கும் மருந்துக்கும் பணம் எங்கிருந்து கொடுக்க முடியும். இவ்விதமாக ஓர் தகப்பன் குடும்ப முழுவதும் துன்பத்துக்கும் துக்கத்துக்கும் ஓயாத சஞ்சலத்துக்கும் சங்கடத்துக்கும் ஆளாக ஏது உண்டாகும். ஆகவே இறுதியில் அவன் உயிரிழக்க நேரிட்டால், அவன் இல்லாள் கைம்பெண்ணாகவும் அவன் மக்கள் அனாதபிள்ளைகளாயும் போவார்களென்பது நாம் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமே. ஒரு சிரத்தையுள்ள மாதா வியாதிப்பட்டால் இன்னும் சற்று வருத்தந்தான். ஒரு சிறந்த அன்னை சுகமாயிருக்கும்போது காலைமுதல் மாலை முடிய சரீர முயற்சியிலும் மனோமுயற்சியிலும் அரும்பிரயாசையெடுத்து நாளாவட்டத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் நன் மாதிரியாய்ச் சிறந்திலங்கி யாவருக்கும் பூஷணமாய் விளங்குகிறாள். இப்பேர்ப்பட்ட ஓர் தாய் தீராவியாதிப்பட்டுப் பாயும்படுக்கையுமா யிருக்கும்போதோ அவ்வீட்டலுவல்களையெல்லாம் அவளுக்காக மற்றவர்கள் செய்யவேண்டியதாயிருக்கிறது.

ஒரு குழந்தை வியாதிப்பட்டாலும் அதுவும் துக்கப்படத்தக்க காரியந்தான், ஒரு குழந்தை பள்ளிக்குக் காலந்தவறாமலும் நேரந்தவறாமலும் அன்றாடகம் செல்வதற்குப் பதிலாக, அடிக்கடி நோயும் நொடியும் பாயும் படுக்கையுமாகக் கிடக்க நேரிடுவதும் உண்டு. இப்படிக் குழந்தைக்கு வியாதி மும்முரமாகிக்கொண்டே யிருந்தால் அவ்வீட்டாரனைவரும் துக்கசாகரத்தில் மூழ்குவார்களென்பது நாம் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமே. ஆனதுபற்றி சமஸ்த மனிதரும் சுகத்தைப்பற்றி எவ்வளவு கரிசனையும், கவலையும் உள்ளவர்களா யிருக்கவேண்டுமென்றும், சுகத்தைப் பேணிக்கொள்ள எவ்வளவு ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்றும் போதிக்கிறது. நிழலினருமை வெயிலிலலைந்தாலல்லோ தெரியும், என்ன முதியோர் முத்துவாக்குக் கிசையஅப்படியே சுகம் கெடுகிறவனாயில் சுகத்தின் அருமை பெருமை ஒருபோதும் தெரியாது.

### நோய்.

நோய்க் கிடங்கொடேல் என்ற மூத்தோர் சொல் வார்த்தையமிர்தமென நல்வாக்குக்கிணங்க நம்மாலியன்றளவு பிணி அணுகாமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டியது நம் ஒவ்வொருவர்மேலும் விழுந்த கடமையென்று நன்கு உணர்வோமாக. மேலும் நோயற்ற வாழ்வே வாழ்வு குறையற்ற செல்வமே செல்வம். இப்பிரபஞ்சத்திலுள்ள செல்வத்துள்ளெல்லாம் பெருஞ்செல்வம் சரீர சுகமாம். நாம் சுகமும் பலமுமாயிருக்கும்போது, நாம் நாடோடிய ஜீவியத்தில் எண்ணிய கருமத்தைத் துணிந்து முடிக்க சமயம் வாய்க்கிறது. பிணி தகுந்த காரணமின்றித் தானே உண்டாகிறதென்றும் மற்றும் பற்பல துஷ்ட தேவதையால் வருகிறதென்றும் அறிவீனர் அனந்தம்பேர் வீணில் எண்ணுகிறார்கள். வெந்நீரில் கைவிட்டால் கை வெந்துபோமென்றும் நஞ்சுண்டால் விஷம் நம்மைக் கொல்லுமென்பதும் நாம் நன்குணர்ந்த விஷயமே. மேலும் நன்றாய்ப் பழுக்காத செங்காயையாவது அழுகிப்போன கனியையாவது இலகுவில் ஜீரணிக்காத ஆகாரத்தையாவது தின்றால் நம்முடைய கும்பியிற் கோளாறு உண்டாகுமென்பது வாஸ்தவமே. இதுநிற்க ஈரவஸ்திரமணிந்தால் உடம்பில் ஜலுப்புண்டாகுமென்றும் நாளுணர், நாளுவிட, அன்னபானத்தால் பலவித வியாதி நம்மை அணுக இடமேற்படுகிறது. 'அவனருளற்றால் அனைவரு மற்றார். அவனசையாது அணுவுமசையாது' என்றும் நாமறிவோம். ஆனதுபற்றி பல துஷ்டதேவதைகளால் வியாதி உண்டாகுமென்று நாம் எண்ணுவது அபத்தமே தவிர யதார்த்தமல்ல. கடவுளையறியாமலும் கடவுளின் திருக்கட்டளையில்லாமலும் இவ்வுலகில் பிணி யாரையும் எக்காலத்திலும் எவ்விதத்திலும் அணுகாதென்பது திண்ணமே. நமக்குத் தெய்வத்தாலளிக்கப்பட்டிருக்கும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் புத்தியையும் சரியாய்க் கையாடி நாம் அனுசரிக்க வேண்டியவைகளைத் தக்கபடி கைக்கொண்டும் தவிர்க்கவேண்டியவைகளைச் சமயோசிதமாய்த் தவிர்த்தும் வருவோமானால் கடவுளின் கிருபாகடாட்சத்தால் பற்பல வியாதிக்கும் அவ்வியாதியினாலுண்டாகும் துன்பத்துக்கும் துக்கத்துக்கும் நீங்கலாவோம் என்பதற்கு யாதொரு ஐயமில்லை. ஆதலால் மனுக்கோடி யனைத்தும் வியாதி வருமுன்னே அதைத் தவிர்த்துத் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்ளத்தகும் வழிவகையைக் கண்டறிந்து உடனே செய்ய எத்தனிக்கவேண்டும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும் என வழங்கிவரும் பழமொழியால் நமக்கு இவ்விஷயத்திற்கு அவசியமான வழிவகையைக் கையாட ஏது உண்டாகும். மேலும் வியாதி உண்டாவதற்கு மனுஷர்களாகிய நாமே காரணம். நாம் ஒவ்வொருவரும் காலந்தவறியும் நேரந்தவறியும் அன்றாடகம் நாம் கிரமம் தப்பாமல் அனுசரிக்க வேண்டிய கிரியைகளைச் சரிவர நிறைவேற்றிவர அவகாசம் நேரிடாதிருக்க நாமே மூலகாரணராம். காரியமிப்படி யிருப்பதனால் பிராணனுக்கும் சுகத்துக்கும் மூலாதாரமான அம்சங்கள் இன்னின்ன இன்றியமையாதென்று ஒவ்வொன்றாய்ச் சற்று விஸ்தாரமாய்ப் பின்வருமாறு விபரித்து உரைப்போம்.

எல்லாவற்றிற்கு மேலாக இவ்வுலகத்தில் நிகழும் சம்பவங்களெல்லாம் திரிபுரத்தையும் படைத்துக் காத்து நித்தநித்தமும் ஆண்டு நடத்திவரும் ஜெகதீசனின் புண்ணியசெயலேயன்றி வேறல்லவென்று ஆய்ந்தோய்ந்து பாராமல் நேர்ந்தபடி செய்யாதிருப்போமாக, நமக்கு நாளாவட்டத்தில் வரக்கூடிய ஏறக்குறைய எல்லா நோய்நொடிகளையும் வாராதபடி நாம் தடுக்க முயலவேண்டும்.

சுகமுறைகளை அறிவதனால் உண்டாகும் அனுகூலங்களாவன,

சுகாதார சாஸ்திரமானது சுகத்தைப் பேணிக்கொள்வது எவ்வாறென்று நமக்குப் போதிப்பிக்கிறது. இந்நூல் சுகமாயிருப்பதற்குரிய ஆதார விதிகளை நன்கு விளக்குகிறது. இப்பாடத்தில் குழந்தைகள் அனுபவத்தில் விருத்தியடைகிறார்கள். இதைக் கருத்துடன் வாசிப்பதனால் அவர்களுக்கு நற்பழக்க வழக்கங்கள் நாளடைவில் உண்டாகின்றன. தெய்வத்தின் ஜீவகாருண்ணியமும் வெளிப்படுகிறது.

(இன்னும் வரும்.)

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

### இந்தியாவில் கிறிஸ்துமத வியாபகம்.

இந்துதேசத்தில் கிறிஸ்துசபை வியாபகமான சரித்திர வரலாற்றை நான்குகாலப் பகுதிகளாக வகுத்து இங்ஙனம் கூறுவோம்.

#### 1. சூரியானிக்காலம்.

இப்பரதகண்டத்தில் புராதன கிறிஸ்துசபை திருவாங்கூர் கொச்சி ராஜ்யங்களிலுண்டு. இச்சபையைச்சேர்ந்த அங்கங்களுக்கு சூரியானிக் கிறிஸ்தவர்கள் எனப் பேர் வழங்கிவருகிறது. 1911-ம் வருஷம் ஜனசங்கைப்பிரகாரம் இவர்கள் தொகை 7,28,304 இத்தேச மெங்குமுள்ள கிறிஸ்தவர்களில் ஐந்தி லொருபங்கு இவர்களே. பரி. தோமா அப்போஸ்தலன் தென் இந்தியாவுக்கு வந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததின் பலனாய் இப்பாகத்தில் கிறிஸ்துசபை உண்டானது என்பது ஓர் பாரம்பரை. இதற்குச் சரித்திர ரூபகாரம் ஏதுமில்லை. கி. பி. 345-ல் எடஸா அத்தியக்ஷரான தோமா என்பவர் இச்சபையை ஸ்தாபித்தாரெனும் பாரம்பரியம் சற்று நம்பத்தக்கதாயிருக்கிறது. ஆறாம் நூற்றாண்டில் பிரபலமான பெரிய கிறிஸ்துசபை இங்கிருந்ததென்பதற் கையமில்லை. உத்தேசம் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் ஜனத்திரட்சியிலும் செல்வாக்கிலும் மிகுத்திருந்தமையால், அந்நாட்டு அதிபதிகள் கிறிஸ்தவருக்கு சுயாதிபத்திய முதலிய சிலாக்கியங்களை அருளினதுமன்றி, அதற்கு அத்தாக்ஷியாக சாஸனங்கள் என அழைக்கப்படும் இருசெப்புப் பட்டையங்களும் அளித்தனர். இப்பட்டையங்களில் கி. பி. 774-ம், 824-ம் ஆண்டுகள் தீட்டியிருக்கின்றன. இதற்குப் பின்னான அறுநூறுவருஷ சரித்திரத்தைப் பற்றி யாதுமறிய மார்க்கமில்லை.

(இன்னும் வரும்)

# MELLIN'S FOOD

TRADE MARK



TRADE MARK

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்




உபயோகப்படும்படி




கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, Madras.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. Lazarus, Vepery, Madras.

## விளம்பரம்.

ஒருவருஷச் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு: அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.

Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

JUNE, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூன்மீ, 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**ஜர்மன் கொடுமை.** — தங்களிடத்திலிருக்கிற காயப்பட்ட இங்கிலீஷ் வீரர்களை ஜர்மன்கள் காப்பாற்றுமல் சுட்டுப்போடுகிறார்கள்.

**உடைந்த எலும்பைக் கூட்டல்.**—ஒரு க்ஷணப் பொழுதிலே, உடைந்த எலும்புத்துண்டுகளைக் கூடச்செய்யும் ஒருபாயம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

**கப்பற்துண்டு.** — கடலிற்சுட்ட ஒரு குண்டு 10 மைல் தூரத்திற்போகிற ஒரு கப்பலை 10 எண்ணுகிறதற்குள்ளே பாய்ந்து சுட்டுவிடுகிறதாம். இதென்ன அதிசயமான விரைவு!

**ராஜபிறப்புற்சவம்.** — இம்மாதம் 3-ம் தேதி ராஜபிறப்பு நாளாக நியமிக்கப்பட்டாலும் யாதொரு கொண்டாட்டமும் நடவாதாம். ஆனால் வழக்கமாய்க் கொடுக்கிற பட்டங்கள்மாத்திரம் விளம்பரஞ் செய்யப்படும்.

**காந்தியவர்கள்.** — தென் ஆப்பிரிக்காவிலே வெகுகாலமாய் இந்தியர்களுக்காகப் பாடுபட்ட பாரிஸ்டர் காந்தியவர்கள் தம் மனையாளோடு இந்தியாவில் சுற்றிவந்து சென்னைக்கு விஜயஞ்செய்தார். ஜனங்களால் அனேகமாய்க் கொண்டாடப்பட்டார்.

**பிராஞ்சு ஆகாயக்கப்பல்.** — இந்தக் கப்பல்கள் யுத்தந்தொடங்கி இதுவரையும் பூமியை 40 தரம் சுற்றியதூரம் யாத்திரை செய்திருக்கின்றனவாம். ஆனாலுமென்ன? ஜர்மன் ராஜநகரியாகிய பர்லின்பேரில் ஒரு குண்டாயினும் போட்டது கிடையாது.

**ரஷியாவின் ஜனத்தொகை.** — இது ஜர்மனி, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலியாகிய நான்கு ராஜ்யங்களின் ஜனத்தொகைக்கும் சரியானது. அதனால் ரஷியர் யாதொரு உதவியுமின்றி, தாமே ஜர்மனியை அழித்துவிடக் கூடுமாம். அப்படியானால், இவரும் சேர்ந்திருக்கிறார்களே! ஜர்மனிக்கு ஐயோ! அதன் நாசம் நிச்சயம்.

**கப்பல் யாத்திரை.**—வாரந்தோறும் ஜர்மன்கள் இரண்டொரு இங்கிலீஷ் கப்பல்களைச் சுட்டுக் கடலில் அமிழ்த்தினாலும், வாரந்தோறும் 1,600 கப்பல்கள் லண்டனுக்கும், லண்டனிலிருந்தும் சுகமாய்ப் போய்வருகின்றனவாம். ஜர்மன் சண்டைக்கப்பல்கள் சண்டைக்கஞ்சி, பிறர்த்துறைமுகங்களிலே ஒளித்துகொண்டிருக்கின்றனவாம்.

**உயர்ந்த வீடு.**—இந்நாட்டு ஊர்களில் குடிசைகள்தான் விசேஷம்; அங்கங்கே கொஞ்சம் கல்வீடுகள் உண்டு; மெத்தைகள் கிடையாது. நியுயார்க் என்கிற அமெரிக்கா பட்டணத்தில் ஒரு வீடு 756 அடி உயரமானது. இதைவிட உயரமான இல்லிடம் உலகத்திலில்லை. ஒரு அறைக்கு 10 அடி உயரம் வைத்தாலும் மொத்தம் 70 அடுக்கு மெத்தைகள் உண்டு. இந்நகரத்தாரின் தினசரி உணவுக்குமட்டும் 2½ லட்சம் ரூ. செலவாகிறதாம்.

**லூசிட்டேனியா விபத்து.** — அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குப் போய்க்கொண்டிருந்த ஒரு பிரமாண்டமான அங்கிலேயக் கப்பல் ஒரு ஜர்மன் நீர் கீழ்க்கப்பலால் சுட்டுண்டு மூழ்கி நாசமாய்ப்போயிற்று. அதிலே கப்பற்காரர் அறுநூறு பேரும், பிரயாணிகள் 2,000 பேரும் இருந்தார்கள். பாலகர்மட்டும் 40 பேர். 700 பேர் தவிர மற்றவர்கள் எல்லாரும் மாண்டு மடிந்தார்கள். தப்பினவர்களிலும் அனேகம்பேர் பட்டகாயத்தினால இறந்துபோகிறார்கள். சிலர் தப்பினது அற்புதம்போலிருக்கிறது. அங்கிலேயரும் அமெரிக்கரும் மிகுந்த கோபமூண்டு அவசியம் பழிவாங்கவேண்டுமென்று வைராக்கியம் சாதிக்கிறார்கள். ஆனால், இதுகாரணத்தால் அமெரிக்க அதிபதி யுத்தத்துக்குப் போக மாட்டாரென்பதுநிஜம். யுத்தத்துக்குப்போனாலோ, வீண் பொருள் நஷ்டமும் ஏராளமான உயிர் நஷ்டமும் நேரிடும். இதற்குச் சந்தேகமில்லை. அன்றியும் அமெரிக்காவிலே குடியிருக்கிற 10 லட்சம் ஜர்மன்கள் அந்த அரசுக்கு விரோதமா யெழும்பிக் கலகம் செய்வார்கள். அன்றி, அந்தக் கப்பல் புறப்படு முன்னமே ஜனங்கள் கப்பலுக்கு அவசியம் போராபத்து நேரிடுமென்று எச்சரிக்கப்பட்டது. எச்சரித்தவர் ஜர்மன் (Ambassador) தானுபதியே. ஒரு அமெரிக்க குபேரன் செத்தாலென்ன, மரணமும் அதிவிஞேதமான ஓர் பிரயத்தனந்தானே என்றாராம். அவரும் மாண்டார். ஜர்மன்களை அதிகமாய்க் குற்றப்படுத்தக் கூடாது. எதிரியின் கோட்டைகளைப்போல, அதன் கப்பலையும் கவிழ்த்தலும் அவர்களுக்குத் தர்மந்தான்.

**யுத்த விவரம்.** — சிலர் யுத்தம் அக்டோபர்மீ வரைக்கும் நடந்து, அப்பால் சமாதானம் ஏற்படுமென்று நினைக்கிறார்கள். இது எனென்றால், ஜர்மனியிலே சண்டைக்குத் தக்கவர்கள் 60 லட்சம்பேர்; இவர்களில் 30 லட்சம்பேர், மாண்டும், படுகாயப்பட்டும் கிடக்கிறார்கள். இனி இவர்கள் யுத்தத்துக்குப் போக முடியாது. மற்ற அரைவாசிப் பேரும், இதேவிதமாக அக்டோபர் மாதத்துக்குள் ஒழிந்துவிடுவார்கள். அப்பொழுது, இத்தாலியாவும் கூடச்சேர்ந்து ஐந்தாறுதேசத்துச் சேனைகள் ஜர்மன் தேசத்துக்குள்ளே மும்முரமாய்ப் பிரவேசித்து, நாலாதிசையிலிருந்தும் பர்லின் நகரம் நோக்கிச் செல்லும். அப்பொழுதுதான் ஜர்மனிக்குக் கண்திறந்து, புத்திதெளியும். சமாதானத்துக்கு வருவார்கள். சமாதானஞ் செய்தாலும், ஆறுமாதம்மட்டும் ராணுவங்கள் அந்நாட்டிலே தங்கியிருக்கும். இனி இப்படிப்பட்ட யுத்தம் உண்டாகா வண்ணம் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். ஜர்மனி யுத்தஞ்செய்கிறது இங்கிலாந்துமுதலிய ராஜ்யங்களோடு மாத்திரமல்ல, முழுமானிட ஜாதியாரோடும், தர்ம நீதியோடும், கடவுளோடும் என்பது சர்வ சம்மதமான அபிப்பிராயம்.

இதுநிற்க, சண்டை கொடிதாகவே நடக்கிறது. அனேக யுத்த ஜயங்கள் உண்டாயிருக்கிறது. நான்

### ஜூன்மீ பஞ்சாங்கம்—

| வாரம். | ஜூன்மீ = வைகாசி—ஆனி. ⊙ பௌர்ணமி, 27௳ ● அமாவாசை, 12௳ | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வைகாசி—ஆனி. | | | | |
| ஞாயி ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 24 | 31 | 6 | 13 |
| திங்க ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 25 | 32 | 7 | 14 |
| செவ் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 19 | 26 | 1 | 8 | 15 |
| புதன் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 20 | 27 | 2 | 9 | 16 |
| வியா ... | 3 | 10 | 17 | 24 | ... | 21 | 28 | 3 | 10 | ... |
| வெள் ... | 4 | 11 | 18 | 25 | ... | 22 | 29 | 4 | 11 | ... |
| சனி ... | 5 | 12 | 19 | 26 | ... | 23 | 30 | 5 | 12 | ... |

ஸ்தான்திரேனுபில் வெகு சீக்கிரத்தில் பிடிபடும் போலிருக்கிறது. துருக்கர் ஏராளமாய்த் தோற்றும் துரத்துண்டும் வருகிறார்கள். அவர்கள் இனி யூரோப்புக்கு வெளியே துரத்தப்படுவது வாஸ்தவம். அவர்களுக்கும் அதுதான் சுகமாயிருக்கும். இதுபரியந்தம் அவர்கள் ஆளுகையிலிருந்த பலெஸ்தீனுநாடு யூதருக்குத் திரும்பச் சேரும். இத்தாலியும் ஆஸ்திரியாவோடு போர்செய்யத் தொடங்கிவிட்டது. இங்கிலீஷ் அரசனும் மதுபானத்தைத் தமது அரண்மனை ஸ்தானத்திலிருந்து விலக்கிவிட்டார். இந்தியாவிலும் அப்படி நடந்தால், பேரனுகூலமாயிருக்கும். கள்ளுக்கடை, சாராயக்கடையெல்லாம் அடைக்கப்பட்டால், நம் தேசத்துக்கு எவ்வளவு பாக்கியம் லபிக்கும். ஏழைகள் ளடைந்தான். ஒருதடவை அவன் மரணத்துக்கு ஏதுவான குற்றத்தைச் செய்துவிட்டான். உடனே நியாயாதிபதிகள் அவன் குற்றத்தை விசாரித்து அவனுக்குத் தாங்கமுடியாத தூக்குத்தண்டனை விதித்துவிட்டார்கள். உடனே காவற்காரர்கள் அவன் கையிலும் காலிலும் விலங்குமாட்டி, பட்டணத்துத் தெருவழியாக சிறைச்சாலைக்கு நடத்திப்போகிறார்கள். அந்தக் குற்றவாளியோ கண்ணீர் விட்டழுது ஒலமிட்டுக்கொண்டு போகிறான். எப்படியென்றால், என்னை 10 நாளைக்குள் தூக்குமரத்தில் தூக்கிவிடப்போகிறார்கள். நான்போய் என் பெண்ஜாதிப் பிள்ளைகளைப் பார்த்துவிட்டுத் தூக்குக்கு ஆஜராகிவிடுவேன். அதுமட்டும் யாராவது எனக்காகப் பிணைப்பட வேண்டுமென்று வழியில் மட்டும் நான் உனக்காக ஜாமீன் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று சொல்லி," அவன் கால் கைகளில் இருந்த விலங்கைக் கழற்றித் தன் கை கால்களில் போடும்படிச் சொல்லி அவனை அனுப்பிவிட்டார். காவற்காரர்கள் இந்தக் குருவை விலங்கிட்டு காவற்கிடங்கிற்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள். அதை ஜனங்களோ பார்த்து, ஐயோ, அந்தக் குற்றவாளிக்காக நீர் ஏற்றுக்கொண்டீரே, அவன் இனி திரும்பி வருவதெப்படி என்று அந்தக் குருவுக்காக அங்கலாய்த்துக்கொண்டும் போகிறார்கள். குற்றவாளி 10-ம் நாள் 10 மணிக்குள் வாவில்லையானால் குருவைத் தூக்கிவிடுவார்கள். ஆனால் அந்தக் குருவுக்கு விசனமில்லாமல் சந்தோஷமாக காவற்கிடங்கிற் கைகாலில் விலங்கிடப்பட்டவராகவிருக்கிறார்.



பெய்ரூட்நகரமும் லீபனோன் மலையும்.

டெ சழித்தோங்கிச் சிறப்படைவார்கள். செல்வம், சுகம் அதிகரிக்கும். அப்படியே இங்கிலீஷ் சாராயங்களுக்குப் பாரமான வரிபோட்டால், மெத்த ஐஸ்வரியவான்கள் தவிர, சாமானிய மனுஷர் இங்கிலீஷ் மதுபானஞ்செய்ய முடியாது.

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

பன்னிரண்டாவது கதை.

### திருடனுக்காகப் பிணைப்பட்டவர் கதை.

ஒரு பட்டணத்தில் ஒரு மனிதன், அநேக தடவைகளில் குற்றத்திலகப்பட்டு தண்டனைக போகிற ஜனங்களைப் பார்த்து கேட்டுக்கொண்டே போகிறான். அப்பொழுது ஜனங்கள் இந்தத் திருடனுக்காக யார் பிணைப்படுவார்கள். அவன் போய்த் திரும்பி வருகிறதுமுண்டோ! அந்த நாளைக்குள் வாவில்லையேயானால் நம்மைத் தூக்கிப்போடுவார்களே. ஏன்? அந்த ஜாமீன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அல்லதட்டி போகிறார்கள். குற்றவாளியோ திரும்பத்திரும்ப அலறிக்கொண்டு எனக்காக ஜாமீன் ஏற்றுக்கொள்வார் யாருமில்லையேயென்று அழுதுகொண்டு போகிறான்.

அப்பொழுது எதிரே வந்துகொண்டிருந்த ஒரு குரு அவன் அழுகிறதைப்பார்த்து மனதிரங்கி "அப்பா, அழாதே நீ போய் உன் விருப்பத்தின்படி உன் பெண்ஜாதிபிள்ளைகளுக்குச்சொல்லிவிட்டுவா அது குற்றவாளி போய் ஒன்பது நாளாகிவிட்டது; இன்னும் வாவில்லை அவரைக்கண்ட ஜனங்களெல்லாரும் விசனப்படுகிறார்கள். இன்னும் ஒருநாள் பத்துமணி நேரம்தானே யிருக்கிறது. இன்னும் வாவில்லையே குற்றமில்லாத குருவைத் தூக்கிவிடுவார்களே யென்று அங்கலாய்க்கிறார்கள். பத்து நாளும் ஆகிவிட்டது; இன்னும் வாவில்லை. பத்து மணிநேரமாத்திரமிருக்கிறது, ஐந்துமணி ஆகிவிட்டது; இன்னும் வாவில்லை. குருவைத் தூக்குக்கு ஆயத்தப்படுத்துகிறார்கள். அவருக்குத் தேவையானவைகளெல்லாம் கொடுக்கப்படுகிறது. இன்னும் ஒருமணி நேரம்தானிருக்கிறது குற்றவாளி வாவில்லை.

G. D.

(இன்னும் வரும்.)



# A BIBLE ANECDOTE.

## சத்தியவேத புஸ்தகத்தைக் குறித்த சன்மார்க்க அதிசய சரிதை.

லண்டன் பட்டணத்தில் கொஞ்சக்காலத்துக்கு முந்தி தனவந்தனான ஒரு பிரபு இருந்தார். அவர் தாம் பிறந்த தினத்தன்று தம் வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் எல்லாரையும் கூப்பிட்டு வெகுமதி கொடுப்பது வழக்கம். ஒருதடவை மேற்படி தினத்தில் வீட்டிலுள்ள வேலைக்காரர்களெல்லாரையும் அழைத்தார். வந்த உடன் I-வது. வீடு சுத்தம் பண்ணுகிறவனைக் கூப்பிட்டு உனக்கு இந்த வேதபுஸ்தகம் வேண்டுமா அல்லது ரூ. 50 வேண்டுமா என்று கேட்டார். அதற்கவன் எனக்குப் படிக்கத் தெரியாததினால் பணத்தைக் கொடுத்தால் அதிக நன்மையைப் பெற்றுக்கொள்வேன் என்றனன். உடனே பிரபு ரூ. 50 கொடுத்தனர். II-வது. தோட்டக்காரனைக் கூப்பிட்டு உனக்கு இந்த வேதபுஸ்தகம் வேண்டுமா அல்லது ரூ. 50 வேண்டுமா என்று கேட்க, அப்போது அவன் என் மனைவி வியாதியாயிருக்கிறாள் தற்சமயம் பணம்தான் வேண்டுமென்றான். உடனே ரூ. 50 கொடுத்தார். III-வது. சமையல்காரி மேரியம்மாளைக் கூப்பிட்டு உனக்கு வாசிக்கத் தெரியுமே, இந்த வேதபுஸ்தகம் வேண்டுமா அல்லது ரூ. 50 வேண்டுமா என்று கேட்க, அவள் எனக்குப் படிக்கத் தெரியும். ஆனால் படிக்கச் சமயம் கிடையாது. ஆகையால் பணம் கொடுத்தால் நேர்த்தியான உடுப்புகள் வாங்கிக் கொள்ளுவேன் என்க, அவள் விருப்பத்தின்படி ரூ. 50 பிரபு கொடுத்தனர். IV-வது. உள்வீட்டு வேலைக்காரி சௌந்தரம்மாளைக் கூப்பிட்டு உனக்கு இந்த வேதபுஸ்தகம் வேண்டுமா அல்லது ரூ. 50 வேண்டுமா என்று கேட்க, அதற்கவள் எனக்கு ஒரு வேதபுஸ்தகமுண்டு. அதைப் படித்தால் போதாதா என்க, அவள் மனதின்படி ரூ. 50 கொடுத்தனர். V-வது. தன் வீட்டில் தபால் கொண்டுபோகும் ஜார்ஜ் என்ற ஒரு பையன் இருந்தான். பிரபு அவனைக் கூப்பிட்டு உனக்கு உடுப்புகளெல்லாம் அழுக்காயும் கேவலமாயுமிருக்கிறதே. இந்த ரூ. 50 தருகிறேன், அழகான உடுப்புகள் வாங்கிக்கொள்ளுகிறாயா, அல்லது இந்த வேதபுஸ்தகத்தை வாங்கிக்கொள்ளுகிறாயா என்க, அதற்கவன் கனம்பொருந்திய பிரபுவே தங்கள் சொல்லுக்கு வந்தனம். ஆனால் என் பிரியமுள்ள தாயார் அநேக தடவைகளில் வேதபுஸ்தகமானது தாவீது அரசன் பாடிய சங்கீதம். 119-72 வசனத்தில் சொல்லியபடி அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும் விசேஷமென்று சொல்லி இருக்கிறார்கள். ஆகையால் அந்த வேதபுஸ்தகத்தைத் தாருங்களென்று கேட்டான். பிரபு முகமலர்ச்சியுடன், சிறுவனே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக. நீ ஞானத்தோடு தெரிந்துகொண்ட புஸ்தகமானது உனக்கு ஐசுவரியத்தையும் கனத்தையும் தீர்க்காயுளையும் கொடுப்பதாகவென்று சொல்லி வேதபுஸ்தகத்தைக் கொடுத்தனர். அதைச் சிறுவன் ஆவலுடன் வாங்கித் திறந்தான். திறக்கவே ஒரு பவுண் அதினுள்ளிருந்து கீழே விழுந்தது. அதை எடுத்துக்கொண்டு வேதபுஸ்தகத்தை ஏடு ஏடாய் அல்லது தாள்தாளாய்த் திருப்பினபோது இரண்டு காகிதத்துக்கு மத்தியில் வரிசையாய் பேங்கு நோட்டுகள் வைத்திருப்பதைக் கண்டு அகமகிழ்ச்சிகொண்டு பிரபுவினிடம் கொண்டுபோய்க் காட்ட உன் பெற்றோர்கள் சொன்னதுபோல வேதபுஸ்தகம் விலை மதிக்கப்படாததாயிருக்குமென்று சொன்னார்களே அதுபோல இருக்கிறது. அதையும் நீதான் எடுத்துக் கொள். அது உனக்குரியதுதான் என்க, சுற்றிலும் நின்ற வேலைக்காரர்கள் பார்த்துப் பொறாமை கொண்டு துக்கத்துடன் நமக்குப் பிரபு முதலாவது கொடுக்கவேண்டாமென்று சொல்லி நம்மவாயில் நாமே மண்ணைவாரிப் போட்டுக்கொண்டோமென்று அங்கலாய்த்தார்கள். மனமிருந்தபடி குரு இருந்து இரட்சிப்பார். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்.

V. GURUBATHAM,
*Catechist*,
MADUPUTTY.

அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும் நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். சங். 119. 72.

வேத புஸ்தகமே வேத புஸ்தகமே விலைபெற்ற செல்வமே, விலை மதிக்கப்படாத உற்றுடைய வேதமே என் மனமகிழ்ச்சி. சங். 119. 79.

ஞானமே நல்லது; இதற்கு நிகரானதுமில்லை. நீதி. 8. 10, 11. 3. 14, 15. யோபு. 28. 12-19. நீதி. 16. 16.

# MELLIN'S FOOD



மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினால் தொடாமல் செய்யப்பட்டது.







மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.



Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

OFFICE OF THE REGISTRAR ... 20 JUL 1915 MADRAS.


# சத்திய தூதன்.

JULY, 1915. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. ஜூலை, 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**காகிதச்சேலை.** — ஜப்பான் தேசத்திலே காகிதச்சேலை செய்துவருகிறார்கள். அதன் பேர் காமிக்கொ.

**ஆகாயச்சண்டை.** — தற்காலம் கடற்சண்டை, தரைச்சண்டை நடக்க, இது போதாதுபோல் ஆகாயத்திலும் பெருஞ்சண்டை நடந்துவருகிறது. ஜர்மன் கப்பல்கள் அங்குமிங்கும் சென்று வெடிகுண்டுகளை ஊர்கள், நகரங்கள்மேல் எறிகிறதுபோலவே, மற்ற ராஜ்யத்தாரும் அவர்கள்மேல் எறிந்து அதிக உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் உண்டு பண்ணுகிறார்கள். ஒரே குண்டு விழுந்தால் ஒரு பெரிய ஆலயமாவது, அரண்மனையாவது தப்புவதரிது.

**லார்ட் ஹார்டிஞ்ஜ்.**—பெருமை பொருந்திய கவர்னர் ஜெனரல் இன்னும் ஒருவருஷம் இந்தியாவை ஆளவேண்டுமென்று ஜார்ஜ் சக்கரவர்த்தி கேட்டுக்கொள்ள, அப்படியே செய்யச் சித்தமாயிருக்கிறார். முன்னால் இந்தப் பிரபுவுக்குப் பேராபத்து நேரிட்டும், பிறகு தாரமிழந்தும், தற்காலம் யுத்தத்திலே ஏகபுத்திரன் மாண்டும் இவ்விதமாகச் சொல்லமுடியாத துன்பங்கள் இத்தேசத்தில் சகிக்க வேண்டியிருந்தும் இன்னும் ஒருவருஷம் நமக்காக உழைக்கச் சம்மதித்தது நமது நன்றியைத் தூண்டத்தக்க அருஞ்செயலாகும். அவர் ஒருவருஷம் கழிந்து தம் தேசம் செல்லுமுன், யுத்தமொழிந்து சமாதானம் நிலைபெறும்; இந்தியாவுக்குப் பல புது நன்மைகள் வாய்க்கும்; அதிக சீர்திருத்தம் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. இதுநிற்க, பம்பாய்க் கவர்னரும் போர்க்களத்தில் ஒரு குமாரனை இழந்திருக்கிறார்.

**யுத்தத்தின் கேடுகள்.**—இந்தப் பெரும் யுத்தத்தினாலே பெருங் கெடுதிகள் உண்டாயிருக்கின்றன. இழவுகொண்டாடாத இல்லிடம் யூரோப்பின் முக்கிய நாடுகளிற் கிடையாது. யுத்தம் முடியுமுன் சுமார் இரண்டுகோடி புருஷர் மடிந்திருப்பார்கள். எத்தனையோ விதவைகள் புலம்புவார்கள். அநாத பிள்ளைகளின் தொகை ஏராளமாயிருக்கும். இரண்டு கோடி பெண்களுக்கு மணம்புரிய புருஷர், பாலியர் அகப்படமாட்டார்கள். ராஜ்யங்களுக்குக் கடன் மலைபோல் குவிந்துவிடும். அக்கடனைத் தீர்க்கப் புதுவரிகள் போடப்படும். வர்த்தகம் அதிகமாய் நஷ்டப்பட்டிருக்கிறது. இதனாலே அனேக குடிகளுக்கு ஜீவனோபாயம் இல்லாமற்போயிற்று. கல்வி முயற்சியும் தடைபட்டிருக்கிறது. சிங்காரமான மாடமாளிகைகளும், அருமையான ஆலயங்களும் அழிந்து பாழாய்க்கிடக்கிறது. பயிர் பச்சைகள் அனேகமாய் அழிந்துபோயின. தானிய தவசங்கள் கிடைப்பது அருமையாய்விட்டது. இந்தியாவிலும் ஐரோப்பிய சாக்குகள் அதிக விலையேறியிருக்கிறது. சண்டையில் மாண்டவர் போக, மற்ற எத்தனையோகோடி போர்வீரர் காயப்பட்டு, குருடரும், செவிடரும், நொண்டிகளும், ஒற்றைக்கையரும், சப்பாணிகளுமாய்ப் போயிருக்கிறார்கள். ஐம்பது வருஷம் சென்றாலும், இந்தத் தீமைகள் முற்றும் தீரா.

**மோட்சத்தில் நமதினத்தாரை அறிவோமோ?**—இது முக்கியமான கேள்வி. நாம் இறந்தபின்பு வேறு உடல் புகுவோமென்பதற்கு யாதொரு ஆதாரமும் இல்லை. மனுஷன் தான் செய்யும் பாவத்தால், நாய் நரியாயும், பூச்சி புழுவாயும், பெருத்த ரோகியாயும் பிறக்க முடியாது. நம்முடைய சொந்த சரீரத்தோடு எழுந்திருப்போம். ஆனால் இந்த ஸ்தூல தேகமானது, வஜ்ஜிர தேகமாக மாறிவிடும். அதற்கு அமைந்த அறைக்குள்ளும், ஆகாயத்திலும், லேசாய்ச்செல்லும் சக்திபெற்றிருந்தாலும், தோற்றத்தில் வேற்றுமை யிராது. அதனாலே கடவுள் திருப்பாதஞ் சேர்கிற யாவரும் தத்தம் இனத்தாரைப் பார்த்து அறிந்துகொள்ளும் பேரானந்தம் அடைவார்கள். இது தாரமிழந்து, புருஷனிழந்து, பிள்ளையிழந்து புலம்பித் தவிப்போருக்கு எத்தனை ஆறுதலாயிருக்கிறது. மரித்தோரை நாம் மறுபடியும் பார்ப்போம். அவரோ நீடூழிகாலம் வசிப்போம் என்கிற வாக்குறுதி புண்பட்ட நமது இருதயத்துக்குப் பரம தைலம்போலிருக்கிறதே. ஜகத்ரட்சகனாகிய இயேசுபெருமானை விசுவாசிக்கிற யாவரும் மரணத்துக்குப் பின்பு அவரோடுகூட என்றென்றும் வாழ்வார்கள். அவர் மரித்தும் எழுந்தவண்ணம், அவரதடியாரும் உயிர்த்து எழுந்து ஜீவிப்பார்கள். இதுநிற்க, வேற்றுடல் புகுந்து, புகுந்து நித்தியகாலம் பிழைப்போமென்கிறது எத்தனை துக்கப்படத்தக்கதாயிருக்கிறது. மனிதர் இதை நிதானித்து உணரவேண்டும்.

**யுத்தத்தின் நன்மைகள்.** — பெருந்தீமையிலிருந்து நன்மை விளைவிக்கிறது தெய்வச்செயல். இது காரணத்தினால்தான் கடவுள் இந்த யுத்தத்திற்கு இடங்கொடுத்திருக்கிறார் என்று தோற்றுகிறது. இப்பொழுதே பல நன்மைகள் உண்டாயிருக்கின்றன. முக்கியமானதொன்று: ரஷியாவிலே, சக்கரவர்த்தியின் கட்டளையால் சாராயக்குடி முற்றுமாய் நிறுத்தப்பட்டது. நமது முக்கிய சத்துரு ஜர்மன்கள் அல்ல, மதுபானமே. அதனாலே, இங்கிலாந்திலும் மதுபானத்தைக் குறைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். ஜார்ஜ் அரசர் தம்முடைய குடும்பத்திலும், ஊழியரிடத்திலும் மதுபானம் நடவாதென்று விளம்பரஞ் செய்துவிட்டார். ஆங்கில ராஜ்யத்தின் பல பாகங்களும் ஒன்றுசேர்ந்து தாய்த்தேசத்துக்கு உதவிபுரிந்து வருகிறது. கானடா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, நியூசிலந்து, இந்தியா முதலிய நாடுகள் புரிந்துவருகிற சகாயத்துக்கு எல்லை கிடையாது. இந்திய அரசர்களும் ஏராளமான பொருளுதவி செய்துவருகிறார்கள். குடிகள்கூட திரவியங்களைக் கொட்டுகிறார்கள். இந்திய போர்வீரர் ராஜ்யாபிமானம் நிறைந்தோராய் போர்க்களத்துக்குச் சென்று, சண்டைசெய்து உயிர்துறக்கிறார்கள். இப்படிப்பட்ட விசுவாசமும் உதாரத்துவமும் யுத்

**ஜூலை மாத பஞ்சாங்கம்—**

| வாரம். | ஜூலை = ஆனி—ஆடி ⊙ பௌர்ணமி, 26௳ ● அமாவாசை, 12௳ | | | | | ஆனி—ஆடி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 3 | 10 |
| திங்க ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 4 | 11 |
| செவ் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 5 | 12 |
| புதன் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 6 | 13 |
| வியா ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 7 | 14 |
| வெள் ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 1 | 8 | 15 |
| சனி ... | 3 | 10 | 17 | 24 | 31 | 19 | 26 | 2 | 9 | 16 |

தத்தினாலேதான் வெளிப்பட்டிருக்கிறது. இந்தியரின் உண்மையான ராஜபக்தி இப்பொழுதுதான் அங்கிலேயருக்குத் தெரியவருகிறது. இதன்றி, ஜனங்கள் அதிக தெய்வபக்தி அடைந்திருக்கிறார்கள். ஆயுசுகாலமெல்லாம் ஆலயந் தொழாதவர்கள் இப்பொழுது தெய்வத்தை அடுக்கவும், ஜெபம்பண்ணவும், கோவிலுக்குப் போகவும் தொடங்கியிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் சுத்த அன்னியராயிருந்தவர்கள், தற்காலம் சகோதரத்துவம் பாராட்டுகிறார்கள். இனி லேசிலே யுத்தம் நடவாது. ராஜ்யங்கள் இனி துபாக்கி, கத்தி, பீரங்கியினாலே அல்ல, சங்கத் தீர்மானங்களினாலே தங்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்துகொள்வார்கள். ராஜ்ய அகங்காரம், பேராசை, குரூரம், அநீதி அதர்மமாகிய சமஸ்தமும் அடக்கலாகும். உலகமெங்கும் சமாதானம் நிலைபெறும். சத்தியமே என்றும் ஜெயிக்கும் என்ற உண்மை நிச்சயப்படும். இவையெல்லாம் சாமானிய நன்மைகள் அல்ல.



உப்பேரி நகரம்.

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

பதின்மூன்றாவது கதை.

### ஒரு ஏழைக் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது.

ஒரு கிராமத்தில் ஒரு ஏழை மனிதன் இருந்தான். அவனுக்கு ஆறுபிள்ளைகளும் இருந்தது. இவன் தன்னுடைய சொற்ப சம்பளத்தினால் தன் பெண்ஜாதி பிள்ளைகளுக்குத் திருப்தியாய்ச் சாப்பாடு கொடுக்கக் கூடாமலிருந்தது. ஆனாலும் அந்த ஏழை மனிதன் கடவுளிடத்தில் தன்னுடைய எளிமையை நீக்கும்படி அறிக்கையிட்டுக்கொண்டுவந்தான். பிள்ளைகளுடைய தொந்தரவோ அதிகமாயிருந்தது. பிள்ளைகளெல்லாம் தகப்பனைப் பார்த்து, அப்பா, நல்ல பதார்த்தம் ஒன்றும் வாங்கிக் கொடுக்கிறதில்லையே, எனக்கு அதுவேண்டும் இது வேண்டும் என்று பிள்ளைகள் தொந்தரவு செய்தாலும் வாங்கிக் கொடுக்கக் கையில் காசு முதலாயில்லை. ஆனாலும் தகப்பன் இந்தத் தொந்தரவுகளையெல்லாம் சகித்துக்கொண்டு கடவுளிடத்தில் அனுதினம் அறிக்கையிட்டு வந்தான். இப்படியிருக்கும்பொழுது, ஒருநாள் கடைசிப்பிள்ளை தகப்பனிடம் ஓடிவந்து, அப்பா எனக்கு மீன் குழம்பு செய்து சாப்பிட அதிக ஆவலாயிருக்கிறது, எப்படியாவது மீன் வாங்கித் தர வேண்டுமென்று தொந்தரவுசெய்தான். அதற்குள்ளாக மற்றப் பிள்ளைகளும் ஓடிவந்து, அப்பா, நாங்கள் மீன் சாப்பிட்டு எவ்வளவோ காலமாயிற்று அதன் பேரில் அதிக ஆவலாயிருக்கிறோம், எப்படியாவது வாங்கி தரவேண்டுமென்று கேட்டார்கள்.

அப்பொழுது தகப்பன் சொன்னார்: என் அருமைப்பிள்ளைகளே, இப்பொழுது நான் மீன் வாங்கித் தரக் கையில் காசு இல்லை, ஆனாலும் இன்னும் நாலு நாளைக்குள்ளாக நான் கொஞ்சம் காசு சம்பாதித்து எப்படியாவது உங்கள் விருப்பத்தின்படி வாங்கித் தருகிறேன் என்று சொல்லிவிட்டு ஒரு அறையில் போய் தன் முழங்காலையூன்றிக் கடவுளை நோக்கி ஜெபித்தான். ஆ, கடவுளே இந்தச் சிறுபிள்ளைகளுடைய பசியை ஆற்றமேன், இந்தச் சிறிய ஆகாரத்தை வாங்கிப் புசிக்க ஒன்றுமில்லையே; தினம் நான் சம்பாதிக்கிற இந்த மூன்று நாலு அணா அரிசி, உப்பு, புளிக்குத்தானே போதுமானதாயிருக்கிறது. இப்பொழுது பிள்ளைகள் மீன் கேட்கிறார்களே, நான் என்னசெய்வேன், நீர்தான் அந்தப் பிள்ளைகளைப் போஷிபும் என்று ஜெபித்து வெளியே வந்தான். வீட்டில் தனக்குக் கிடைத்த பழைய சாதம் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு தன் வேலைக்குப் புறப்பட்டுப் போனான். அவன் காட்டுப் பாதையின் வழியாய்ப் போகும்பொழுது, 'காலில் ஒரு முள் தைத்துக்கொண்டது; உடனே அவன் குனிந்து முள்ளைப் பிடுங்கும்பொழுது அவன் முன்னால் ஒரு அரை ரூபாய் கிடந்தது; அதிக ஆவலோடு அதை யெடுத்துக் கடவுளுக்குத் துதிசெலுத்திக்கொண்டான். அப்படியேவேலைக்குப்போய்த் திரும்பிவரும்போது கடைக்குப்போய் ஒரு பெரிய மீன் விலைகேட்டு அதின் விலை அரை ரூபாய் என்று விலைபேசி மீனை வாங்கி வீடுவந்து சேர்ந்தான். பிள்ளைகளெல்லாருக்கும் மீனைப்பார்த்ததும் இருந்த சந்தோஷம் கொஞ்சமல்ல. மீனை எல்லாரும் திருப்தியாய்ச் சாப்பிடும்படியாக அதைத் துண்டு, துண்டாக வெட்டினான். அப்பொழுது பார்த்துக்கொண்டிருந்த பிள்ளைகளெல்லாரும், அப்பா, எனக்கு பெரிய துண்டு, எனக்குத் தலை, எனக்கு வால் என்று முறையிட்டார்கள். அப்படியே மீனை வெட்டி நன்றாய்க் கழுவிக் குழம்பு செய்தார்கள். சாப்பாடும் பொங்கியாயிற்று, எல்லாருடைய பாத்திரத்திலும்



சாப்பாடு போட்டாயிற்று. மீன் வைக்கப் போகும்பொழுது கடைசிப்பிள்ளை, அப்பா, எனக்கு தலை தான் வேண்டுமென்று ஓரேபிடியாய் அழுதான். அப்படியே அவன் விருப்பத்தின்படி தலையை வைத்துவிட்டான். எல்லோரும் கடவுளைத் துதித்து ஜெபம் செய்துவிட்டு இரவு எட்டு மணிக்கு சாப்பிட்டார்கள்.

சாப்பிடும்பொழுது கடைசிப்பிள்ளை தலையைப் பிட்டுப் பிட்டு சாப்பிடும்பொழுது உள்ளே இரத்தமயமாக பளீ, பளீரென்று பிரகாசித்தது. உடனே, அப்பா, அப்பா இது என்ன மின்னல் பூச்சுப்போல் பிரகாசிக்கிறதே, இது பூச்சியா என்ன என்று பார் என்று சொன்னான். உடனே தகப்பன் வந்து பார்க்கவும் ஒரு விலையேறப்பெற்ற கல் இருந்து பிரகாசித்தது. உடனே அதை எடுத்துப்பார்த்து ஆச்சரியப்பட்டு, புருஷன், பெண்ஜாதி, பிள்ளைகளெல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து கடவுளுக்கு நன்றித் துதி செலுத்தினார்கள். அந்தக் கல்லை யெடுத்துக்கொண்டுபோய் வியாபாரியிடம் காட்டி பணம் கேட்டான். ஒரு வியாபாரி கல்லைப் பார்த்துவிட்டு அப்பா இந்தக் கல்லுக்குப் பதினாயிரம் ரூபாய் தருகிறேன் என்றான். அவன் அப்படியே கொடுமென்றான். உடனே வியாபாரி பதினாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டான். அதை அவன் வீட்டுக்குக் கொண்டுவந்து பிள்ளைகளுக்குக் காட்டி கடவுள் நம்முடைய எளிமையைப் பார்த்து இரக்கமாக இவைகளைக் கொடுத்தார் என்று சொல்லிக் கடவுளை அதிக மதிகமாகத் துதித்துப் போற்றினார்கள். இதனால் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம், கடவுளை நம்புவோருக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது; கொஞ்சத்தில் திருப்தியாயிருந்த அந்த ஏழைகளுக்கு கடவுள் நிறைவை யுண்டுபண்ணினார். நாமும் எல்லாவிஷயத்திலும் திருப்தியாய் இருப்போமாக; அப்போ கடவுள் இரங்கி கிருபைசெய்வார்.

G. D.

## TROUBLE IN CEYLON

## தென்னிலங்கைக் கலகம்

கண்டி, கொழும்பு முதலிய இடங்களில் அமைதியாயும் அலங்காரமாயும் நடைபெறும் என்று எதிர்நோக்கியிருந்த விசாகப்பெருநாள் சிங்களவருக்கும் மகமதியருக்கு மிடையிலோர் பெருத்த கலகத்தைப் பிறப்பித்துவிட்டது பெரிய விசனமான சங்கதி. இருபகுதியாருக்கு மிடையில் நேர்ந்த வோர் அற்ப பிரியவீனம் சிலந்தி முற்றிப் பவிந்திரமானதுபோல புத்த மகமதிய கலகம் என்று யாரும் பேசத்தக்க பாரிய கலகமாய்விட்டது. கண்டியிலே சென்ற மாதம் 28௳ கலகம் எழும்ப அனேக் கடைகள் அழிவடைந்தமையாற் பூட்டப்பட்டன. 14 பேர்வரையில் இருபகுதியிலும் காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். கலகத்தை அமர்த்த வேண்டுமென்று சென்ற பொலீஸ் உத்தியோகத்தினர் கல்லெறியினாற் காயம்பெற்றும் அதைரியமடையாது கலகக்காரருள் 40 பேரைப் பிடித்துக்கொண்டார்கள். அடுத்தநாள் கொழும்பிலிருந்து வந்த விசேஷ பொலீஸ் உத்தியோகத்தினர் தெருக்கள்தோறும் ஆயுததாரிகளாய்க் காவல் செய்ய பொலீஸ் நீதிபதியால் கலகச்சட்டம் வாசிக்கப்பட்டது. ஆனாலும் ஜனங்களின் கொந்தளிப்பு அடங்காமையால் பொலீசர் வெடிதீர்த்தார்கள். பிற்பாடு கலகக்காரர் கலைந்துபோயினர். அந்தநாளிலே ஒருவன் கொல்லப்பட அனேகர் காயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். பொலீசார் கைப்பட்டோர் தொகை 19. அடுத்த 30௳ திரித்துவக் கல்லூரிப்பக்கத்திலோர் கத்திக்கலக முண்டாக 27 பேர் காயமடைந்தனர். 3 பேர் மரணம் அடைந்தனர். கண்டிநாட்டில் வாசஞ்செய்யும் ஐரோப்பிய ஞாகவியோடு பட்டாளம் இக்கலகத்தையும் ஒருவாறு அமரச்செய்தது. 31௳ கொழும்பிலும் மருதானைதொட்டு புறக்கோட்டை முதலிய பல பாகங்களிலும் கலகம் பரம்பிற்று. ஜீவமோசம் இவ்விடங்களில் நிகழவில்லையாயினும் அதிக பொருட்சேதமும் ஆட்களுக்குப் படுகாயங்களும் லபித்தன. சோனகருடைய கடைகள் பெரும்பாலும் மோசம் அடைந்தன. அனேக கட்டிடங்கள் தீக்கிரையாயின. கண்டிமாநகரிலே சிங்கள சோனகச் சாதியினர்க்கிடையில் சமாதானம் பிறப்பித்தற்காய்க் கூடிய சபையில் "சிங்களப்பெண்ணொருத்தியைச் சோனகன் அடித்தனன் என்ற சங்கதி வரவே கூட்டங் குலைந்து கலகம் பூரிக்கலாயிற்று. மாத்தளை, பெற்றேனியா, கடுகணாவை யாதியாம் இடங்கள் கலகபூமியாயின. ஆயினும் மோட்டர் இராஜாருடராய்ப் பட்டாளத்தினர் ஆங்காங்கு சமயோசிதமாய்க் காவல்புரிந்தனர். வேறவர் சிலரும் ஐரோப்பியர்களும் பொலீஸ் பகுதிக் குதவியாயினர். கடைகள் யாவும் பூட்டப்பட்டன. றெயில்வண்டியிலுள்ள மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் கண்டி கம்பளை முதலிய இடங்களில் இறங்க உத்தரவு இல்லாமற் போயிற்று. பலவகைப் பொருட்கள் ஆறுகளிலே மிதக்கின்றன. சோனகர் சமுசாரங்கள் இந்தியாவுக்குத் திரும்புகின்றன. திரித்துவ கல்லூரி நகரசங்கம் அனேக சோனகருக்குப் புகலிடமாயிற்று. ஆங்காங்கு சிங்களவரும் சோனகரும் சண்டைசெய்வதில் நிலைத்துநிற்பது கண்டு அரசாட்சியார் சீவ சேமத்துக்காகவும் பொருட் பாதுகாப்புக்காகவும் "மாஷல் லோ" என்ற சட்டத்தைப் பிரசித்தப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் பட்டாளத்தினர் விரும்பிய இடமெங்குஞ் சென்று வேண்டுமானால் குண்டுப்பிரயோகம் புரிய 50 மோட்டர் வண்டிகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையும் கலகக்காரர் 75 பேர் வரையில் பட்டாளத்தினர் வெடிக் கிரையானமையால் கலகம் அடங்கிவிடும்போல் விளங்குகிறது.

(உதயதாரகை.)

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

அந்நாட்டு சரித்திரசம்பந்தமாய் என்ன மாறுதல் நேர்ந்திருப்பினும், இக்கிறிஸ்தவர்கள் ஏதும் பிரிவினையின்றி சீரியாசபையின் ஆராதனைமுறைகள் சடங்காசாரங்களை அனுசரித்தவர்களாய்க் காலம் கடத்தினார்களென்று தெரிகிறது. என்றாலும், ஆவிக்குரிய அனலும், சுவிசேஷ பிரபல்ய முயற்சியும் அக்காலத்தில் சுத்த சூனியமாகவே இருந்ததென்று சொல்லவேண்டும்.

பதினைந்தாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயருக்கு இந்தியாவில் கால்வைக்க இடம் கிடைத்தபோது, இப்பூர்வ கிறிஸ்தவர்கள் பாப்புவின் ஆட்சியை ஒப்புக்கொள்ளவும், தாங்கள் வழங்கிவந்த சீரிய ஆராதனை முறைகளையும் சடங்காசாரங்களையும் தள்ளி ரோமைச்சபை ஆராதனை முறைகளையும் மார்க்கக் கொள்கைகளையும் அனுஷ்டிக்கவும் கட்டாயம்பண்ணினார்கள். சீரியா சபையைச்சேர்ந்த கிறிஸ்தவர்கள் இனி யாருமே இல்லாததுபோல் தோன்றிற்று. ஆனால், பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் டச்சுக்காரரின் அமலால் போர்த்துக்கேயரின் செல்வாக்கு க்ஷீணதசையடையவே, ஜனங்களுக்குச் சுயாதீனமுண்டாயிற்று. சூரியானிக் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் பாப்புவின் அதிகாரத்தை முறித்துத் தள்ளி, அந்தியோகியா மேற்றிராணியாரால் அபிஷேகம் பெற்ற ஓர் சுதேச அத்தியக்ஷரைத் தங்களுக்குத் தலைவராகத் தெரிந்துகொண்டு இவ்விதமாய்த் திரும்பவும் சீரியா சபையைச் சேர்ந்துகொண்டார்கள். ஆகிலும் எல்லாரும் இவ்வாறு திரும்பிவிடவில்லை. சிறுபான்மையோர் இன்னம் ரோமைச்சபை அரசாட்சிக்குள்ளேயே யிருந்தனர். இப்படியாக, ரோமைச்சபை அதிகாரியாகிய பாப்புவை ஒப்புக்கொண்ட சூரியானி ரோமைச்சபை ஒரு பிரிவு, அந்தியோகியா அத்தியக்ஷாதீனத்தை ஒப்புக்கொண்ட சூரியானிச்சபை ஒரு பிரிவு, ஆக இரண்டு சபையாய் இப்பூர்வசபை பிரிந்தது.

1816-ம் வருஷத்தில் சர்ச்சுமிஷன் சங்கத்தார் திருவாங்கூர் ராஜ்யத்துக்குத் தங்கள் மிஷனெரிமாரை அனுப்பி, இப்பூர்வச் சபையைச்சேர்ந்த பாலருக்கு ஆங்கில கல்வி கற்பிக்க ஆரம்பித்தார்கள். அறிவு பெருகவே சூரியானிச்சபையார் தங்கள் தப்பறைகளைக் கண்டுகொள்ளத் தொடங்கினார்கள். சிலர் தங்கள் ஆசிரியருடைய சபையாகிய இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்துகொண்டார்கள். தங்கள் சபையையே சீர்திருத்திக்கொண்டு சூரியானிச்சபை ஐக்கியத்தை விடப்படாதென்றெண்ணின பலர்: 'சீர்திருந்த சூரியானிச்சபை' என்ற பெயர் வகித்துப் பிரிந்துகொண்டார்கள். ஆகவே, சூரியானிச்சபையில் இப்பொழுது இரண்டு பிரிவார் உண்டு. ஒன்று பூர்வ சூரியானிச் சபை. இவர்களுக்கு யாக்கோபுசபை சூரியானியர் எனப் பெயர். இவர்கள் ஆராதனை சீரியபாஷையில் நடத்துவார்கள்; தேவதூதர்களுக்கு விண்ணப்பம், கன்னிமரியம்மாள் வணக்கம், படங்கள் பூஜை இவைகளுமுண்டு. மற்றது, சீர்திருத்த சூரியானிச்சபை. இவர்கள் பரி. தோமாச்சபைக் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளுகிறார்கள். இவர்கள் தங்கள் சுயபாஷையாகிய மலையாள பாஷையிலேயே ஆராதிப்பார்கள். மலையாள வேதாகமம் பிரயோகிக்கிறார்கள். பூர்வ சூரியானி ஜெபகிரமத்திலுள்ள தப்பு உபதேசங்களை நீக்கிவிட்டு, மலையாள பாஷையில் சீர்திருத்த ஜெபபுஸ்தகம் செய்து அதையே வழங்கிவருகிறார்கள். சுத்த சுவிசேஷ சபைகளோடு இவர்கள் சேர்ந்துகொள்வார்கள். தேவபக்திக்குரிய ஞானபோதனைகளைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுவார்கள். கன்னட தேசத்தில் சுவிசேஷ பிரபல்ய ஊழியம் நடப்பிக்கவும் இப்போது ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த இரு சபைகளும் சுதேச அத்தியக்ஷர் கண்காணிப்புக்குள்ளிருந்து வருகின்றன. ஆதிமுதல் இதுவரை ஒருகாலத்திலாவது சூரியானிச்சபையை ஆதரிப்பதற்குப் புறதேசங்களிலிருந்து எவ்வித பொருட்சகாயமும் வந்திருப்பது கிடையாது. குருமார் ஆதரவுக்குக் கொடுக்கவேண்டியதை இயற்கையான ஓர் வரிபோல கொடுத்துவிடுகிறார்கள். ஆராதனைசமயத்தில் காணிக்கை வாங்குகிற வழக்கம் கிடையாது. ஞானஸ்நானம் ராப்போஜனத்திற்குத் தலைக்கு இவ்வளவு என்ற ஏற்பாட்டுக்குக் குறையாமல் காணிக்கை படைக்கிறார்கள். யாவரும் தப்பாமல் கலியாண ஸ்திரீதனத்தில் இருபதிலொன்றை குருவுக்கும் இருபதிலொன்றைக் கோவிலுக்கும் கொடுக்கிறார்கள். அத்தியக்ஷர் சபைசந்திப்புக்குப் போகும்போது அவருக்கு தக்ஷிணை படைத்து சந்தித்துக்கொள்வார்கள். இவ்வாறு இவர்கள் சுய ஆதரவு நடந்தேறுகிறது. சூரியானிக் கிறிஸ்தவ சபை ஒன்றைத்தவிர, ஏகதேசம் வேறு சபை இல்லாதிருந்த காலப்பகுதிக்குச் **சூரியானிக்காலம்** என்று பெயரிட்டோம்.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD



மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்




உபயோகப்படும்படி




கையினால் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.


## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.

Registered No. M. 442.




OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 11 AUG 1915 MADRAS

சில வீடுகளில் மதுபானமும் படும். திடீரென உயர்பதவிக்கு வந்தவர்களில் சிலரும், அன்னிய தேசங்களுக்குப் போய்வந்தவர்களில் பலரும், நாகரீகத்தில் தேர்ந்தோராக நடிக்கும் அநேகரும் இதில் சிக்குண்டு, தாங்கள் கெட்டதுமல்லாமல் தங்கள் சந்ததியையும் அழித்தேவிடுகிறார்கள் என்பது நாம் கண்ட காட்சி. குடி இரண்டே எழுத்துகளால் குறிப்பிடப்படினும், இதனால் இம்மண்ணுலகிற்கு நேர்ந்திருக்கும் கேடுகளை நோக்கின் இதைக் கூளி என்றே சொல்லல் வேண்டும். பின்வரும் கற்பிதக்கதை குடியின் அகோரத்தைச் சரியாய்க் காட்டும்.

AUGUST, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. ஆகஸ்ற்றுமீ, 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்.

**யுத்தச் செலவு.** — யுத்தத்தின் பிரதிதினச் செலவு 1 கோடி 10 லட்சம் சாவிரெனும்; அதாவது 16½ கோடி ரூபாய். இதை மனதாற் கிரகித்தல் அரிது.

**லார்ட் ஹார்டிஞ்.**—நமது கவர்னர் ஜெனரலவர்கள் இன்னொரு வருஷமும் அரசாட்சி செய்யவேண்டுமென்று சக்கரவர்த்தி கேட்க, அதற்கு உடன்பட்டிருக்கிறார்கள்.

**மிஷன் வேலை.**—உலகத்து மிஷன் வேலைக்கென்று பிரிட்டிஷ் ராஜ்யம் சென்ற வருஷம் கொடுத்தது 2,333,275 பவுண், அல்லது 3½ கோடி ரூ. இது ஆளுக்கு 3 ரூ. ஆகிறது; ஆனால் புகையிலைச்செலவு ஆளுக்கு 11 ரூபாயும், சாராயச்செலவு ஆளுக்கு 55½ ரூபாயுமாம்.

**ஸ்திரீகள் உபகாரம்.**—யூரோப்பிலே விசேஷமாய்ப் பெண்பாலார் தையல், நெய்தல் முதலிய பல வேலைகள் செய்து போர்க்களத்தில் கஷ்டப்படுகிற வீரர்களுக்குப் பல உதவியான சாமான்கள் அனுப்புகிறார்கள். இந்திய ஸ்திரீகளும் இவ்விதமாய்ச் செய்தால் பேருதவியாயிருக்கும்.

**ஆப்பிரிக்க வழக்கம்.** — ஒரு ஆப்பிரிக்கா ஜாதியாருக்கு ஒரு வழக்கமுண்டு. கூட்டத்தில் ஒருவன் பேசத் தொடங்கும்பொழுது அவன் ஒற்றைக்காலில் நின்று பேசவேண்டுமாம். அந்தக் காலைக் கீழே வைத்தவுடனே பேச்சை நிறுத்தவேண்டுமாம். இது அதிகப் பிரசங்கிகளுக்கு அமிர்தமான சட்டம்.

**ஆஸ்திரேலியா தீவு.**—இது உலகத்துத் தீவுகளிலெல்லாம் மிகப் பெரிது. ஆனால் இதிலே 60 லட்சம்பேர்தான் உண்டு. இன்னும் 20 கோடி பேருக்குப் போதுமான நிலமுண்டாயிருந்தாலும், சீனராயினும் ஜப்பானியராயினும் ஆஸ்திரேலியாவுக்குள் நுழையக்கூடாதென்று கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள்.

**அமெரிக்கரும் ஜர்மானியரும்.**— ஜர்மானியர் அமெரிக்க யாத்திரைகாரருக்குச் செய்த உயிர்ச்சேதத்தைக்குறித்துச் செய்த முறைப்பாடுக்கு மறுமொழியாக இன்னொரு கப்பலை மூழ்குவித்தார்கள். அமெரிக்கர் துணிந்தவிதமாய் யுத்த சன்னத்தராகாமல் தம் காரியத்தைத் தூக்கி நோக்கி, நிறுத்திப் பார்க்கிறார்கள்.

**இந்திய திருச்சபை.**— இப்பெயர்கொண்ட சில கிறிஸ்தவ சபைகள் இந்நாட்டிலுண்டு. இவைகள் அங்கிலேயர் முதலானோர் உதவி சற்றேனுமின்றி, தங்கள் சொந்தக் கோவில்களைத் தாமே கட்டி, தங்கள் காரியங்களையெல்லாம் நடத்திவருகிறார்கள். இதனாலே அதிக உற்சாகமும், பெருத்த முயற்சியும் விளைகின்றது. ஆனாலும் பரிசுத்தஆவியின் நடத்துதலும், இடைவிடா ஜெபமும் இன்றியமையாச் சாதனங்களா யிருக்கவேண்டும். இந்திய கிறிஸ்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் இவ்விதச் சுயாதீன திருச்சபைகளாகவேண்டும். இந்துக்களும் மகம்மதியரும் தத்தம் காரியங்களைத் தாமே பார்த்துக்கொள்ள, இந்திய கிறிஸ்தவர்கள்மட்டும் அந்நியர் பணமும், அந்நியர் ஆட்சியும் அடைந்து எந்நாளும் அடிமைகளாயிருக்கலாமோ?

**சப்மெரீன்.**—அதாவது கடல்கீழ் ஓடுகிற கப்பல்கள் அங்கிலேயருக்கு 84; ஜர்மன்களுக்கு 38. ஆயினும் ஜர்மன் சப்மெரின்கள்தான் அதிகக் கெடுதி செய்துவருகின்றன. ஏனென்றால் ஜர்மன் கப்பல்களெல்லாம் ஒளித்துக்கொண்டிருக்க, ஆயிரமாயிரமான ஆங்கிலேய மரக்கலங்கள் சமுத்திரமெங்கும் தாராளமாய் யாத்திரை செய்கின்றன. ஒரு சப்மெரின் ஜலத்தில் 200 அடி ஆழத்தில் செல்லும்; அதன் நீளம் 180 அடி; குறுக்களவு 20 அடி. உள்ளே இருக்கிறபடியே கடலுக்கு மேலேயிருக்கிறதைப் பார்க்கிற ஒருவித நச்சிக்குழாயுண்டு. அதன் இரண்டு கொம்புகள்மாத்திரம் ஜலத்திற்கு மேல் எப்பொழுதும் காணப்படும். நாலு பீரங்கி பக்கத்தில் வைத்திருக்கிறது. இதனாலேதான் தூரத்திற்போகிற கப்பலைக் கண்டு சுட்டு மூழ்குவிக்கிறதாம்.

**ஒரு எஜமானின் பத்துக்கற்பனை.**—(1) பொய் சொல்லாதே. நான் உன்னைக் கடைசியில் பிடிப்பது நிஜம். (2) கடிகாரத்தை அல்ல, உன் வேலையைக் கவனி. (3) நான் எதிர்பார்க்காததை நீ செய்தால், நீ எதிர்பார்க்காததை நான் கொடுப்பேன். (4) உனக்குத் தானே நீ தீர்க்கவேண்டிய கடனுண்டு; ஆதலால் பிறர்க்குக் கடன்படாதே. (5) வஞ்சகம் நற்செயலல்ல. (6) உன் சொந்த வேலையைத் தக்க காலத்தில் கவனித்துக்கொள். (7) எந்நாளும் உன் சுய மரியாதையைக் காத்துக்கொள். (8) நீ இரவைக் கழிக்கிறவிதம் பகற்காலத்தில் நீ செய்கிற வேலையில் தெரியும். (9) நான் கேட்க விரும்புவதைச் சொல்லாமல், நான் கேட்கவேண்டியதை மட்டுஞ் சொல். (10) நான் உதைத்தால் நீயும் உதைக்காதே; நீ கண்டிக்கத்தக்கவனானால், வேலையிலிருக்கவும் தக்கவன்தான்.

**யுத்தம் எப்பொழுது ஓயும்?** — இதைக்குறித்து யாரும் திட்டமாய்ச் சொல்ல முடியாது. ஆகிலும், கைசர் சக்ரவர்த்தி தன் சொந்த ஜனமாகிய ஜர்மானியருக்கு வருகிற மழைகாலத்தில் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், யுத்தம் அக்டோபர் மாதத்திலே முடிந்துவிடுமென்று உறுதிவாக்குக் கொடுத்திருக்கிறார். இப்படி சொல்லுகிறது முழு அசாத்தியமாகத் தோன்றுகிறது. சிலர் வருகிற வருஷம்கூட நடக்குமென்கிறார்கள். ஒருவேளை ஜர்மன் சக்ரவர்த்தி அக்டோபருக்குள்ளே பெருத்த ஒரு ஜயமடைந்து, தமது எதிரிகளை அடக்கித் தோல்விப்பார் என்கிற நம்பிக்கை கொண்டிருக்கலாம். யுத்தம் ஓயவேண்டுமானால், 4 கோடி பேர் மடியவேண்டுமே. இதுவரையும் மாண்டவர் 1½

### ஆகஸ்ற்றுமீ பஞ்சாங்கம்—

| வாரம். | ஆகஸ்ற்றுமீ = ஆடி—ஆவணி. ⊙பௌர்ணமி, 24உ. • அமாவாசை, 10உ. | | | | | ஆடி—ஆவணி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | 1 | 8 | 15 | 22 | 29 | 17 | 24 | 31 | 6 | 13 |
| திங்க ... | 2 | 9 | 16 | 23 | 30 | 18 | 25 | 32 | 7 | 14 |
| செவ் ... | 3 | 10 | 17 | 24 | 31 | 19 | 26 | 1 | 8 | 15 |
| புதன் ... | 4 | 11 | 18 | 25 | ... | 20 | 27 | 2 | 9 | ... |
| வியா ... | 5 | 12 | 19 | 26 | ... | 21 | 28 | 3 | 10 | ... |
| வெள் ... | 6 | 13 | 20 | 27 | ... | 22 | 29 | 4 | 11 | ... |
| சனி ... | 7 | 14 | 21 | 28 | ... | 23 | 30 | 5 | 12 | ... |



26-7-15

கோடி பேர்தான். இந்தத் தொகைக்கே ஒருவருஷம் பிடித்தால் இன்னும் 2½ கோடிபேர் மாள குறைந்தது 1½ வருஷம் செல்லும். பிரெஞ்சுக்காரரும், இங்கிலிஷ்காரரும் ரஷியரும் இன்னும் தத்தம் எல்லைகள் சமீபத்தில்தான் சண்டைசெய்து வருகிறார்கள். ஜர்மன் தேசத்துக்குள் இன்னும் புகவில்லை. புகாவிட்டாலும் எதிரியின் வீரர்கள் மடிந்துகொண்டே வருகிறார்கள். ஆகிலும் இங்கிலீஷ், பிராஞ்சு, இத்தாலிய, அல்பெனிய, ரஷிய சேனைகளும் கப்பல்களும், ஜர்மனியைக் கொஞ்சங் கொஞ்சமாகச் சூழ்ந்துகொண்டு வருகிறதை நாம் கவனிக்கவேண்டும். சண்டை நிற்கும் காலம் சர்வ வல்லவர் கையிலிருக்கிறது.

"ஐயோ" குற்றவாளிக்காக இந்தக் குற்றமில்லாத குரு தூக்கப்படப் போகிறாரே, என்னசெய்வோமென்று அழுகிறார்கள்.

இந்தக் காட்சி பார்க்கும்பொருட்டு அரசனுங் கூட வந்து நிற்கிறார். ஒருமணி அடித்தாய்விட்டது. இரண்டாம்மணி அடித்தாய்விட்டது; இன்னும் வரவில்லை. மூன்றாம்மணி அடித்ததும் விசையைத் தட்டிவிடுவார்கள். அப்பொழுது தூக்கிவிடுவார்கள். விசையைத் தட்டுகிறவன் மேலே யேறிவிட்டான். அதிபதி மூன்றாம்மணி அடிக்கக் கட்டளையிட்டுவிட்டார். மணியடிக்கப் போகிறான். அதற்குள்ளாக அந்தக் குற்றவாளி அதிக விரைவாக ஓடிவருகிறான்; வருகிறேன், வருகிறேன், வருகிறேன், வழிவிட்டு விலகுங்கள் என்று உரக்கக் கத் [illegible]

என்று மனதைத் தீர்மானப்படுத்திக்கொண்டு அன்று முதற்கொண்டு குணப்பட்டவனாக ஜீவித்தான்.

G. D.

## DEPRESSED CLASSES SOCIETY OF SOUTH INDIA

## தென்னிந்திய ஒடுக்கப்பட்டவர்கள் சங்கம்

நமது சங்கத்தலைவர் தென் ஜில்லாக்களிலுள்ள ஒடுக்கப்பட்டவர்களின் நிலைமையைத் திட்டமாயறிந்து கனதனவான்களுக்கும், கவர்ன்மெண்டாருக்கும் தெரிவிக்கும்பொருட்டு தென் ஜில்[illegible]



எருசலேம் பட்டணம்.

## INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

பன்னிரண்டாவது கதை.

### திருடனுக்காகப் பிணைப்பட்டவர் கதை.

(ஜனவரீத் தொடர்ச்சி.)

குருவைத் தூக்குமிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோகிறார்கள், 'தூக்குமரத்திற்கு ஏணிவழியாக மேலே யேறிவிட்டார். அவருக்குப் போடவேண்டிய உடைகளெல்லாம் போட்டானது. கழுத்துமட்டும் ஒரு கறுப்பு தொப்பியும் போட்டாய்விட்டது; இன்னும் பத்து நிமிஷந்தான் இருக்கிறது. இன்னும் குற்றவாளி வரவில்லை. பட்டணத்து ஜனங்களெல்லாம் சுற்றி நின்று அழுகிறார்கள். கிக்கொண்டு ஓடி, தூக்குமரத்தில் ஏறி விசைதட்டப்போனவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு தன்னைத் தூக்கும்படிச் சொல்லுகிறான். இந்த அதிசயத்தைப் பார்த்துக்கொண்டு நின்ற அரசன், உடனே தூக்கை நிறுத்தச்சொல்லிக் குற்றவாளியையும் குருவையு மழைப்பித்து அவர்களைப் பார்த்துச் சந்தோஷப்பட்டு, நல்லது இருவரையும் விடுதலை செய்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டார். எல்லாருக்கும் அதிக சந்தோஷமுண்டானது. எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அரைநிமிஷத்திற்குள்ளாகக் குற்றவாளி வராதிருந்தால் குற்றமில்லாத குரு தூக்கப்பட்டிருப்பார். குற்றவாளி வந்ததினால் இருவரும் விடுதலையடைந்தார்கள். இதனால் அந்தக் குற்றவாளி தான் செய்த குற்றத்துக்காகவும் தண்டனை நிவர்த்தியானதற்காகவும் மனங்கசந்து அழுது இனிமேல் நான் குற்றம் செய்யமாட்டேன்

யாணஞ் செய்யப்போவதால், அங்கங்கேயுள்ள சகோதரர் குடியிருப்பு, படிப்பு, தொழில்சம்பந்தமான குறைவுகளை நமது சங்கத்தலைவர்கட்குத் தெரிவித்துக்கொள்ளலாம். அவ்வாறு விருப்பமுள்ளோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

நமது சங்கத்தலைவர் விலாசம் — சைதாப்பேட்டை, சென்னை.

A. சிவராமசாமி,
காரியதரிசி,
கிழக்குச் சமுத்திரக்கரை, வடக்குவாசல்.
நாகப்பட்டணம்.
B. K. சாமுவேல்,
பொதுக்காரியதரிசி.
மணிக்கிராமம், திருவண்காடு போஸ்டு,
தஞ்சாவூர் ஜில்லா.



# குடி என்னுங் கூளி. DEMON DRINK.

குடி — மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித்தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. — கூளி

ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்?

கள், சாராயம் முதலிய நாட்டு இலாகிரி வஸ்துக்களையும், பிராந்தி, ஜின், உவிஸ்கி முதலிய அன்னிய தேச மதுபானங்களையும் அருந்துதல் குடி என்று கூறப்படும். தேயிலை, காப்பி எப்படி சாதாரண பானங்களோ அப்படியே மதுபானமும் சில வீடுகளில் சாதாரண பானமாக உபயோகிக்கப்படுகிறது. நாட்டுப்புறத்தில் வெற்றிலை படும் பாடும், பட்டணத்தில் காப்பி படும் பாடும் விருந்தினர் வந்தவிடத்து சில வீடுகளில் மதுபானமும் படும். திடீரென உயர்பதவிக்கு வந்தவர்களில் சிலரும், அன்னிய தேசங்களுக்குப் போய்வந்தவர்களில் பலரும், நாகரீகத்தில் தேர்ந்தோராக நடிக்கும் அநேகரும் இதில் சிக்குண்டு, தாங்கள் கெட்டதுமல்லாமல் தங்கள் சந்ததியையும் அழித்தேவிடுகிறார்கள் என்பது நாம் கண்ட காட்சி. குடி இரண்டே எழுத்துகளால் குறிப்பிடப்படினும், இதனால் இம்மண்ணுலகிற்கு நேர்ந்திருக்கும் கேடுகளை நோக்கின் இதைக் கூளி என்றே சொல்லல் வேண்டும். பின்வரும் கற்பிதக்கதை குடியின் அகோரத்தைச் சரியாய்க் காட்டும்.

ஓர் கூளி செய்த பேருபகாரத்துக்கு ஓர் மானி நன்றிபாராட்ட விரும்பியபடியால் "நீ உன் தகப்பனைக் கொல்; அல்லது உன் சகோதரிக்கு மானபங்கஞ்செய்; அல்லது மதுவை அருந்து" என்று அந்தக் கூளி சொன்னதாம். மானி தன் அருமைத்தகப்பனைக் கொல்லத் துணிவானா? மானியா தன் சகோதரியை மானபங்கப்படுத்துவான்? மதுவை அருந்துவதில் மானிக்குத் தோஷமுண்டாகாதென்றெண்ணி கூளிக்கு நன்றி பாராட்டவென்று மதுவை அருந்தினான். விஷந் தலைக்கேறவே மானி மதியிழந்து, தன் தகப்பனைக் கொன்றதன்றி, தன் சகோதரியையும் மானபங்கப் படுத்தினானாம். ஆம், குடியனுக்கு எது பாவம் எது புண்ணியமென்றும், யார் சத்துரு யார் மித்துரு என்றும், யார் மனைவி யார் சகோதரி என்றுந் தெரியாது. குடித்தால் குடி கெட்டேபோகும். "குணமது கைவிடேல்; ஊக்கமது கைவிடேல்" என்னும் ஔவையார் நீதிமொழிகளை அருத்தபேதஞ்செய்து, "நற்குணத்தைப் பிறப்பிக்கின்ற மதுவையும், தைரியத்தை உண்டாக்குகின்ற மதுவையும் வழங்குவது நலம்" என்று விளையாட்டாகப் பேசி, சும்மாவந்ததைச் சும்மா குடித்தாலென்னவென்று சிநேகிதனைப் பிரியப்படுத்தப் பாராதே. நடந்த ஓர் சரித்திரத்தைக் கேட்டு ஞானமடை.

ஆறு பெருக்கெடுத்து, அதில் வெண்மையான ஒன்று மிதந்துகொண்டுவர, நீச்சுக்காரன் ஒருவன் அதில் பணமுடிப்பு இருக்குமென்றெண்ணி, நீந்திப்போய், அதைத் தூக்க, தொட்ட க்ஷணமே வெள்ளத்திலகப்பட்டுச் சுருண்டு மிதந்துவந்த வெண்கரடி உயிர்தப்பலாமென்று அவனைப் பிடித்துக்கொண்டது. அவன் அதை விட்டுவிட்டானாயினும் அது அவனை விடவில்லை. ஆகையால் அவன் ஜலத்தில் அமிழ்ந்து மாண்டான். அப்படியே சாராய வகைகளைத் தொடுகிறவனு மிருக்கிறான். குடிக்கப் பழகினவன் குடியை விட்டுவிட்டாலும் அது அவனை விடாது. ஆகையால் பிராந்தியைச் செங்கரடி எனவும், சாராயத்தைக் கருங்கரடி எனவும், கள்ளை வெண்கரடி எனவும், மற்ற மதுபானங்களைப் பலவருணக் கரடிகள் எனவும் பாவித்து நடந்துகொள்.

"உனக்கிருக்குஞ் சத்துராதிகளில் பெரியவன் யார்?" என்று இன்று இங்கிலாந்தைக் கேள். "ஜர்மனியல்ல குடி" என்ற விடை கிடைக்கும். ஜர்மனியும், ஆஸ்திரியாவும், துர்க்கியும் ஒன்றாய்ச் சேர்ந்தபோதிலும், அவைகளைவிட குடி என்னுங் கூளியே பலத்த சத்துராதியென்று ருஷியா கண்டுபிடித்தது. ருஷிய சக்ரவர்த்தி சர்வாதிகார ஏகாதிபதியாதலால் தமது இறகின் ஒரே அடியால் ருஷியாவிலிருந்து குடியை அடியோடே தொலைத்தார். குடி தொலைந்தபின் ஜர்மனி எம்மாத்திரம்? நமது காருணிய ஜார்ஜ் சக்ரவர்த்தி தமது தேசங்களுக்கு ருஷிய சக்ரவர்த்தியைப்போல் சர்வாதிகாரியல்ல. ஆயினும் அவர் தமது அரமனைக்குச் சர்வாதிகாரியாதலால் குடி என்னுங் கூளியை அங்கிருந்து துரத்திவிட்டார். நான் என் வீட்டுக்குச் சர்வாதிகார ஏகசக்ரவர்த்தி. என் வீட்டில் குடி தலைகாட்ட இடங்கொடேன். நீ உன் வீட்டுக்குச் சக்ரவர்த்தியல்லவா? உன் அதிகாரத்தை மட்டுப்படுத்த யாரால் கூடும்? இன்றே குடி என்னும் கூளியை உன் வீட்டிலிருந்து தொலைத்தேபோடு. உன் மற்ற சத்துராதிகளுந் தாங்களாய் செலவு பெற்றுக்கொள்வதால் உன் வீட்டில் சமாதானமும் சந்தோஷமும் நிலைத்தோங்கும்.

ஒருவேளை நீ குடி என்னுங் கூளியின் காலின்கீழ் அகப்பட்டு, தப்ப மதியற்று இருக்கிறாயாக்கும். மெய்யான கூளியைத் தமது கால்களின்கீழ்ப் போட்டு மிதித்து வெற்றியடைந்த இயேசுகிறிஸ்துவண்டை சரண் புகு. நரமாம்ச பட்சணிகளான தீவாரை தேவ தூதர்கள்போலாக்கினவர் உன்னையம் குடிவெறியினின்று ரட்சித்துப் புத்திதெளிந்த சன்மார்க்கன் ஆக்குவார்.

PARADISE BIRD.

மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும்.

குடி — முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். நீதிமொழிகள், 23[29-35]. — கரடி

# MELLIN'S FOOD

TRADE MARK. TRADE MARK.



மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்




குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி




கையினால் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஒக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

ஒருவருஷச் சையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டியோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கெதிர் டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.


Registered No. M. 442.

THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

SEPTEMBER, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. செப்டெம்பர், 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**பிரபு வைத்துப்போன பசு.**—லார்ட் ராத்ஷில்ட் என்ற பிரபுவின் 3 வயதுப் பசு 15,000 ரூபாய்க்கு விற்பனையாயிற்று.

**ஒரு மில்லியன் சாவிரன் என்றலென்ன?**—ஒரு மில்லியன், அதாவது பத்து லட்சம் சாவிரன்களை ஓரத்துக்கோரம் வரிசையாய் வைத்தால், 15,705 மைல் நீளமாகுமாம்; ஒன்றுமேல் ஒன்றாக அடுக்கினாலோ, 1,085 மைல் உயரமாகுமாம்.

**உலகத்திற் பெரிய ஹோட்டல்.**—இது லண்டனிலிருக்கும் ரீஜெண்ட் பாலேஸ் ஹோட்டல். இதன் கட்டட பரப்பு 10 எக்கரா பூமி. அதிலே 1,500 பேருக்கு இருக்க இடமுண்டு. 1,028 படுக்கை அறைகள் உண்டு. அநேக பெண் ஊழியரும் உண்டு. தினம் படுக்கை அறைக்கும் சாப்பாட்டுக்கும் 4¾ ரூ. தான் கொடுக்கவேண்டியதாம்.

**இந்திய அரசர் உதாரத்துவம்.**—நமதரசர்கள் ஏராளமான திரவிய சகாயமும் சாமான், சாக்கு சகாயமுமட்டுமன்றி, தமது உடலையே தத்தமாகக் கொடுத்துச் சண்டைக்குப் போயிருக்கிறார்கள். இதனாலே அங்கிலேயருக்கு நமது ராஜ விஸ்வாசம் நிஷ்களங்க திருஷ்டாந்தமாய்விட்டது. இதனால், இனி இந்திய மெம்பர்கள் பார்லிமெண்டுக்குப் போகிறதுமாத்திரமல்ல, இத்தேசத்துக்கு அநேக நன்மைகளும் உரிமைகளும் கிடைக்குமென்பதற்கு ஐயமில்லை. இனஜன பேதம், ஜாதிமத பேதங்கள் சமஸ்தமும் ஒழிந்துவிடும்போலிருக்கிறது.

**ஜார்ஜ் அரசனின் மிராசுகள்.** — இங்கிலீஷ் ராஜ்யம் ஜனத்தின் சுய அரசுபோல் தோன்றினாலும், அரசன்மாத்திரம் செய்யக்கூடிய முக்கியமான சில காரியங்கள் உண்டு. அவையாவன: சேனையை உடைத்துப்போடலாம்; ராணுவக் கப்பல்களையெல்லாம் விற்றுப்போடலாம்; உத்தியோகஸ்தர் எல்லாரையும் தள்ளிவிடலாம்; சண்டையாவது துவக்கலாம்; சமாதானமாவது செய்துகொள்ளலாம்; ஜெயிலிலிருப்போரையெல்லாம் விடுவிக்கலாம் அல்லது மன்னித்துவிடலாம். எந்த மனிதனையாவது, ஸ்திரீயையாவது பிள்ளையையாவது, பிரபுவாக்கிவிடலாம். இவை லேசான உரிமைகள் அன்று.

**தென் இந்தியாவில் கிறிஸ்தவர்கள்.**—தென் இந்தியாவிலே, ரோமன் சபையைச்சேராத கிறிஸ்தவர்கள் ஏறக்குறைய 9 லட்சம் பேர் உண்டு. மேற்படி சபையைச் சேர்த்தாலோ, 20 லட்சம் கிறிஸ்தவர்களுக்குக் குறையாது. இந்தத் தொகை வருஷாவருஷம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. மற்ற மதங்கள் பிறப்பு வகையால்மட்டும் சிறிது பெருகினாலும், மரணத்தினால் அவர்கள் தொகை பெருகுகிறது அரிது. ஆனால் கிறிஸ்தவர்கள், பிரசங்கம்பண்ணி வேறு முயற்சிசெய்து, பிறப்பால் மாத்திரமல்ல, ஞானஸ்நானத்தினாலும் தொகையை அதிகப்படுத்திவருகிறார்கள். இவ்விதமாய்ச் சென்ற வருஷம் கிறிஸ்து சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் 3,500 பேர்.

**யுத்தவரலாறு.**—சென்றமீ 4-ம் தேதி யுத்தந் தொடங்கி ஒரு வருஷமாயிற்று. உலகமெங்குமுள்ள பிரிட்டிஷ் ராஜ்யத்திலெல்லாம் கூட்டங்கள் கூடி, கடவுளுக்குத் துதி செலுத்தி, யுத்தத்தை முடியுமட்டும் திறமாய் நடத்தவேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டன. சென்னபட்டணத்திலும் செனெட் ஹௌசில் பெருத்த கூட்டம் வைக்கப்பட்டது, கவர்னரவர்கள் சேர்மேனாக இருந்தார். ஆனால் ஒரு முட்டாள்தனம் நடந்துவிட்டது. டிக்கட்டுகள் முக்கியமான பேர்களுக்கு அனுப்பாமல், சிலருக்குமாத்திரம் அனுப்பப்பட்டன; அதோடு கூட டிக்கட்டில்லாமல் ஒருவரையும் உள்ளே விடக்கூடாதென்றும் ஒரு கட்டளை கொடுக்கப்பட்டது. டிக்கட் பெறாதவர்களில் ஒருவர் ஸர் சங்கர நாயர். ஆனால் அவர்தாம் முதற் பிரசங்கம் செய்ய நியமிக்கப்பட்டவர். அவர் வந்தபோதோ அவரை உள்ளே விடாமையால், அவர் தமது கார் ஏறிப் போய்விட்டார். கூட்டம் நகைப்புக்கும் எரிச்சலுக்கும் இடமாய்விட்டது. இப்பேர்ப்பட்ட பிசகுக் காளாயிருந்தவர்களைத் தம் உத்தியோகத்திலிருந்து நீக்குவதே தகுதி.

இதுநிற்க, போலாந்து தேசத்தின் முக்கிய பட்டணமாகிய வார்சாவை ரஷியா விட்டுப் போய்விட, ஜர்மானியர் அதில் நுழைந்துவிட்டார்கள். இதனால் அவர்களுக்கு லாபமும், ரஷியருக்கு நஷ்டமும் வராது. ஜர்மனி-ஆஸ்திரியா முழுவதையும் நீர் வழியாயும் நிலவழியாயும் எதிரிகள் சூழ்ந்துகொண்டு வருகிறது நிச்சயம். அவர்கள் தரை ராணுவங்களும் கப்பல் ராணுவங்களும் ஒரு வட்டம்போல் சுற்றியிருக்கிறது. வர வர இந்த வட்டம் நெருங்கியும் சுருங்கியும் வருகிறது. இதைக்கண்டு, ஜர்மானியர் சமாதானத்திற்காகப் பல பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள். போப்பு மூலமாகவும், பிறதேசங்களிலுள்ள தம்மினத்தார் மூலமாகவும் பிரயாசப்படுகிறார்கள். அமெரிக்காவிலே ரகசிய கலகங்கள் செய்துவருகிறார்கள். ஆனால் அவர்கள் கர்வம் முற்றிலுமடங்கி, அவர்கள் ராணுவங்கள் உடைந்து, சிதைந்துபோய், மன்னிப்புக் கேட்கிறவரைக்கும் அங்கிலேய, பிரெஞ்சு முதலிய ராஜ்யங்கள் சமாதானத்துக்கு வராது என்பது திண்ணம். ஆயினும், யுத்தத்தினாலே சொல்லிமுடியாத கெடுதிகள் உலகமெங்கும் உண்டாயிருக்கிறது. வர்த்தகம் பங்கமடைந்திருக்கிறது. இழவு கொண்டாடாத வீடுகள் யூரோப்பிலே கிடையாது. ராஜ்யங்கள் எல்லாம் ஏராளமான கடன்பட்டு உழல்கின்றன. தானிய தவசங்கள் விலையேறி, ஜனங்கள் மெத்த கஷ்டப்படுகிறார்கள்.

**செப்டெம்பர் பஞ்சாங்கம்—**

| வாரம் | செப்டெம்பர் = ஆவணி—புரட்டாசி ⊙ பௌர்ணமி, 23உ ● அமாவாசை, 9உ | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆவணி—புரட்டாசி. | | | | |
| ஞாயி ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 20 | 27 | 3 | 10 |
| திங்க ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 21 | 28 | 4 | 11 |
| செவ் ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 22 | 29 | 5 | 12 |
| புதன் ... | 1 | 8 | 15 | 22 | 29 | 16 | 23 | 30 | 6 | 13 |
| வியா ... | 2 | 9 | 16 | 23 | 30 | 17 | 24 | 31 | 7 | 14 |
| வெள் ... | 3 | 10 | 17 | 24 | .. | 18 | 25 | 1 | 8 | ... |
| சனி ... | 4 | 11 | 18 | 25 | ... | 19 | 26 | 2 | 9 | ... |

Vol. XXVIII. No. 11.

புஸ்தகம் உஅ. நெ. கக.

THE TRUE INCARNATION

**திருவவதார பஞ்சரத்நம்.**

ஆசிரிய விருத்தம்.

**கா**ர்மேவு மேகமெனக் கரிகறுத் தடர்ந்தவிருள்
காணு தொழிந்தகன்ற
கண்டவிடமெங்கும் கதிர்ப்பானு வீசொளிக்
காட்சியின் மகிழ்ச்சிபேசும்
கூர்மேவு மோசே கொடுத்த பழையேற்பாடு
கொடுமையாம் பளுவு நீங்கிக்
குளிர்ந்த புதியேற்பாடு முச்சிதச் சிலுவையின்
கொள்கையுங் கைகூடின
சார்பாக யாவும் நமக்கு வந்துற்றவே
சந்தோஷகால மிதுவாம்
பராபரன் திருவாய்மலர்ந்தருள் படைப்பெல்லாம்
பாவோத வாய்திறந்த
சுரமண்டலங் கீதநாத கின்னரத்தொனி
சோதி மண்டலமெட்டுதே
சுரர் தேவதூதர் விண்ணவர் காலுசேவர் சே
ராபி குழாங்களெல்லாம்



ரோம் நகரத்தில் பாணவேடிக்கை.

வாகமங்கணிழல் மங்குகுறிபோர்வை மற்
றுள்ள மாசும்போயின
புத்தகச் சுருண்மறைவு போதசுவிசேடமாய்த்
திறவுண்டு விரிவாயது
தாவீதி ஹூரின்மகிழ் மாவீறு தூதர்புகழ்
தாவீதின் மைந்தன் வரவே. (1.)

**ப**ரமண்டலங்களோ டண்ட பகிரண்டமும்
பார்வலய நேமியெங்கும்
சரிவந்தபடி தங்கள்வாய் கொண்டு சாற்றுவர்
திருநாம சங்கீர்த்தனம்
சாலமோனிறை சமாதானம் பெருத்ததே
தாரணி களிக்கு மழையாய்



தருணீற்ற ருணமேசந்தத சமாதான
வாழ் வெங்களுக்குற்றதாம்
தாவீதி ஹூரின்மகிழ் மாவீறு தூதர் புகழ்
தாவீதின் மைந்தன் வரவே. (2.)

**நா**ல்வேத வித்தைகளு மறுகலைக்கியானமும்
நவைத் தமிழிரண்டி னறிவும்
நானுவிதம் பெருகு சாத்திரக் குப்பையும்
நாங்கள் படியாத பாட்டும்
கால்வாசியுஞ் சத்தியவாசனை யிலாதபதி
னெண்புராணக் கதைகளும்
கட்டுவர்க்கங்களும் காரியமிலாதவும்
கைக்குதவியற்ற பலவும்
மேல்காலிலாமலே வீணுரைகள் பேசும் வெகு
சுவடிகள் மிகுத்த தொகையும்
மிஞ்சிமட்டுக் கடர்ந்துளறும் வேதாந்தமோ
டஞ்ஞான வீம்பியாவும்
சாலவும் வெட்கியே தாமே யுருண்டுபோய்க்
கடலிடைத் தாழ்ந்திட்டவாம்
தாவீதி ஹூரின் மகிழ் மாவீறு தூதர்புகழ்
தாவீதின் மைந்தன் வரவே. (3.)

(இன்னும் வரும்.)

INSTRUCTIVE STORIES

## சன்மார்க்க அதிசயக் கதைகள்

பதினொன்காவது கதை.

### பாவக்காய்க் கதை.

ஒரு கிராமத்தில் ஒரு சமுசாரி தன் பாவம் நீங்கும்படியாக ஒரு வழியைத் தேடினான். அதாவது வருஷத்துக்கு ஒருகடவை காசி, இராமேஸ்வரம், குற்றாலம், பாவநாசம் இப்படிப்பட்ட அனேக புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய்த் தீர்த்தம்செய்து காணிக்கைகள் செலுத்திவந்தால் தன் பாவங்கள் தொலைக்கப்படும் என்று ஆலோசனைசெய்து அதின்படியே வருஷத்துக்கு ஒருகடவை மேற்படி ஸ்தலங்களுக்குப் போய்த் தீர்த்தயாத்திரை செய்துவந்தான். இவன் செய்துவருகிற இந்த வழக்கத்தை அந்தக் கிராமத்தில் கவனித்துக்கொண்டிருந்த ஒரு குரு ஒரு நாள் அந்த சமுசாரி வீட்டுக்குப் போய், ஐயா, தீர்த்த யாத்திரைகள் செய்து சுகமாய் வந்தீரா என்று கேட்டார். அப்போ சமுசாரி ஆம் குருவே, நான் சில புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய்த் தீர்த்தயாத்திரைகள் செய்து காணிக்கைகளும் செலுத்திவந்தேன் என்றான். குரு அப்படியா நிரம்ப சந்தோஷம்; நான்கூட அப்பேர்ப்பட்ட புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்க ஆசையாக இருக்கிறேன் என்றார். அப்போ சமுசாரி அப்படி உமக்குப் பிரியம் இருக்கும்பட்சத்தில் நான் மறுபடியும் போகும்போது தங்களை அழைத்துக்கொண்டு போகிறேன் என்றான். அப்படியே ஆகட்டுமென்று இருவரும் தீர்மானம் செய்துகொண்டார்கள். அவர்கள் இன்னும் சில சம்பாஷணைகளை பேசிவிட்டு குரு தன் வீட்டுக்குப் போய்விட்டார். கொஞ்சநாளைக்குப் பிற்பாடு சமுசாரி திரும்பவும் புண்ணிய ஸ்தலங்களுக்குப் போக ஆயத்தம்செய்து புறப்படும் முன்தினத்தில் அந்தக் குரு வருகிறதாகச் சொல்லியிருந்தாரே அவரையும் அழைத்துக்கொண்டு போகலாமென்று நினைத்து அந்தக் குரு வீட்டுக்குப் போய், குருவே நான் காலையில் புண்ணிய ஸ்தலங்களுக்குப் போகிறேன், தாங்கள் வருகிறதாக இருந்தால் வரலாம் என்று சொன்னான். அப்போது குரு சொன்னார்: ஓ என் பிரிய சினேகிதனே, நான் காலையில் புறப்படக் கூடாதவனாக இருக்கிறேன். ஆனாலு மெனக்குப் பதிலாக நான் ஒன்று தருகிறேன், அதற்கு வேண்டிய காணிக்கைப் பணங்களும் தருகிறேன், நீர் செய்கிற தீர்த்தம் எல்லாம் அதற்கும் செய்யும், நீர் கொடுக்கிற காணிக்கைகள் அதற்கும் கொடுமென்று சொல்லி தன்னுடைய கொல்லைப்புறத்தில் இருந்த தோட்டத்தில் போய் மூன்று பாவக்காய்களை அறுத்துக் கொடுத்து நீர் ஸ்நானம் செய்யும்போது இதற்கும் ஸ்நானம் செய்யவும்; நீர் உம்முடைய பாவத்துக்காக செய்கிற எல்லாமாதிரியும் இவைகளுக்கும் செய்யுமென்று சொல்லிக் கொடுத்துச் சமுசாரியை அனுப்பிவிட்டார். அப்படியே சமுசாரியும் ஆகட்டுமென்று சொல்லி, பாவக்காய்களையும் பணத்தையும் வாங்கிக்கொண்டு காசிக்குப் புறப்பட்டுப் போய்விட்டான். அவ்விடம் போய்ச் சேர்ந்ததும் செய்யவேண்டிய சடங்காசாரங்கள் எல்லாம் தனக்கும் பாவக்காய்களுக்கும் செய்தான். தான் ஸ்நானம் செய்கிறமாதிரியே பாவக்காய்களையும் ஸ்நானம் செய்வித்தான். தான் விபூதி பூசினதுபோல் பாவக்காய்களுக்கும் பூசினான். காசி விஸ்வநாத சுவாமியை விழுந்து கும்பிட்டான், அப்படியே பாவக்காய்களையும் சுவாமியின் முன்னால் போட்டு கும்பிடச்செய்தான். இவன் தனக்காகச் செலுத்தின காணிக்கைமாதிரி அதற்கும் செலுத்தினான். இப்படியாக எல்லா சடங்காசாரங்களையும் செய்துவிட்டு தன் கிராமத்துக்குத் திரும்பிவந்தான். உடனே குருவீட்டுக்குப் போய் அவர் கொடுத்து அனுப்பிய பாவக்காய்களை குருவிடம் கொடுத்தான். குரு வாங்கி அதிக சந்தோஷப்பட்டு சினேகிதனே, நீர் செய்த தீர்த்தம் இதற்கும் செய்தீரா என்றார்; அதற்கு சமுசாரி குருவே நான் செய்தவைகள் எல்லாம் இந்தப் பாவக்காய்களுக்கும் ஒரு குறைவில்லாமல் செய்துவிட்டேனென்றான். குரு நல்லது உட்காருமென்று சொல்லி கத்தியை யெடுத்து ஒரு பாவக்காயைத் துண்டுசெய்து இதைச் சாப்பிடுமென்றார். அவன் வாங்கிச் சாப்பிட்டான். குருவே கொஞ்சம் கசக்குது என்றான், இன்னும் ஒரு துண்டு வெட்டிக் கொடுத்தார்; அதையும் சாப்பிட்டுப்பார்த்து குருவே நான் சாப்பிடமாட்டேன், இரம்பக் கசப்பாக இருக்கிறது என்றான். அப்போது குரு சொன்னார்: சினேகிதனே, நீர் இவ்வளவு செலவுசெய்து தீர்த்தயாத்திரை செய்தும் இந்தப் பாவக்காயில் இருக்கப்பட்ட கசப்பு நீங்கவில்லையே உம்முடைய உள்ளத்தில் இருக்கப்பட்ட பாவக்கறை எப்படிப் போகும் இந்தப் பாவக்காயின் மேல் இருந்த அழுக்குமாத்திரம் போனது. அதின் கசப்பு நீங்கவில்லை. அப்படியே உம்முடைய திரேகம் சுத்தமானதேதவிர உம்முடைய உள்ளத்தின் பாவக்கறை நீங்கவில்லை. அது அப்படியே இருக்கிறது என்றார். உடனே சமுசாரி தன் மனதில் சிந்தனைசெய்து, குருவே, தாங்கள் சொல்லும் வார்த்தை நிச்சயமானது; ஏன் என்றால் இந்தப் பாவக்காயின் கசப்பு நீங்கவில்லையே, என் உள்ளத்தின் பாவக்கசப்பு எப்படி நீங்கியிருக்கும். அது வெறும் தப்பான வழிதான் என்று ஒத்துக்கொண்டு என் பாவம் நீங்கும் வழியை எனக்குக் காட்டுமென்று விரும்பிக் கேட்டான். உடனே குரு அவன் பாவம் நீங்கவேண்டிய வழியைக் காண்பித்தார். பாவிகளை இரட்சிக்கும்படிக்கு கிறிஸ்துயேசு உலகத்தில் வந்தார். வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார். இப்படிப்பட்ட அநேக தெய்வ வாக்குகளைப் போதித்தார். உடனே அவன் மனங் கசந்து அழுது தன் பாவங்களை அறிக்கையிட்டான். பிரியமான சினேகிதர்களே, இதினால் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம். இதைப் படிக்கிற நாமும் அப்படிப்பட்ட புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய் தெண்டம் செலுத்தி நம்முடைய ஆத்துமாவை நஷ்டப்படுத்திவிடாமல் அவைகள் எல்லாம் வீண் சடங்காசாரமென்று தள்ளிவிட்டு தாயுமானவர், அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த இன்பப் பெருக்கே இறையே பராபரமே என்று பாடியதுபோல், நாமும் நம்முடைய இருதயத்திலே மனிதராகிய நமக்காக பரலோகத்திலிருந்து இப்பூலோகத்தில் வந்து மனிதவதாரம் செய்து நம்முடைய பாவங்களெல்லாவற்றையும் தாமே சுமந்து தீர்த்து நமக்கு இரட்சிப்பைச் சம்பாதித்து வைத்திருக்கிற அந்த இரட்சாபெருமானை நம்புவோமாக.

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிப்படையும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை.

அப்போஸ்தலர், 4 அதி. 12 வச.

G. D.

THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்.

(தொடர்ச்சி.)

### 2. ரோமான் காலம்.

இக்காலப்பகுதி கி. பி. 1500–ம் வருஷமுதல் ஆரம்பிக்கிறதென்கலாம். 13–ம், 14–ம் நூற்றாண்டுகளிலேயே ரோமைச்சபை மிஷனெரிமார் இந்தியாவுக்கு வந்திருந்தபோதிலும், 1498–ம் வருஷம் போர்த்துக்கல் தேசத்து வாஸ்கோடிகாமா கால் வைத்த பின்னர்தான் ரோமைச்சபை விருத்தியடைந்து பிரஸ்தாபமுற்றது.

ரோமைச்சபையைச் சேர்ந்த பிரக்யாதைபெற்ற மிஷனெரி **பிரான்சிஸ் சவேரியார்**. இவர் 1543–ம் ஞு மேமீ 6உ இந்துதேசக் கரையிறங்கினர். பல விஷயங்களிலும் இவர் மிஷனெரிமாருக்கு ஓர் சிறந்தமாதிரி என்காலம். அவரில் விளங்கின சுவிசேஷ பிரபல்ய வைராக்யம், சுயவெறுப்பு, பரிசுத்த ஜீவியத்தின்பேரிலுள்ள அவாவு முதலிய குணசீலங்கள் எக்காலத்துக் கிறிஸ்தவரும் நாட்டமுடன் பின்பற்றவேண்டியவைகளே.

பிரான்சிஸ் சவேரியார் உயர்ந்த அந்தஸ்துள்ள பிரபுகுலத்தில் பிறந்தோராயினும், கல்வியில் சமர்த்தரெனப்பிரக்யாதையடைந்திருந்தபோதிலும், ரக்ஷாபெருமான் மீதுள்ள அன்பினாலும் மானிடர் ஆத்மஈடேற்றமடைய வேண்டுமென்ற அவாவினாலும் ஏவப்பட்டு, பூமியின் கடையாந்தரமட்டும் போகும்படியாகத் தமக்கு அருமையான யாவற்றையும் துறந்தனர். தங்கத் தாவரமற்று தலைசாய்க்க இடமில்லாதிருந்த தருணங்கள் பலவுள. கையாளின்றி, கால்நடையாய்ப் பிரயாணஞ்செய்து, பசியினாலும் குளிரினாலும் வருந்தி, நதிகளைத் தன்னந்தனிமையாய்க் கடந்து, மனுஷ தடம்பட்டிராத அடர்காடுகளை ஊடறுத்துச் சென்று, வியாதியினாலும் கள்ளராலும் பலமுறையும் கஷ்டப்பட்டு, கிறிஸ்துவின் மாட்சிமையான சுவிசேஷத்தைப் பிரபல்யப்படுத்தினர். இக்கஷ்டங்களினிமித்தம் மனஞ்சலித்துப்போகாமல், எவ்வளவுக்குத் தக்கதாக பாடுகள் அதிகரித்தனவோ அவ்வளவாய் அவருடைய இருதயம் அவைகளில் களிகூர்ந்தது. மிஷனெரி ஊழியத்திற்குத் தம்மைப் பிரதிஷ்டை செய்யுமுன்னாக ஓர் நாள் நித்திரையில்: "சிலுவையினிமித்தம் ஊழியங்களும் கஷ்டப்பாடுகளும் இன்னும் தாரும்; ஸ்வாமீ! இன்னும் அதிகம் தாரும்!" எனப் புலம்பினாராம். இவ்வார்த்தைகளே அச்சாதுவின் மரணபரியந்தம் நடக்கைப்பிரமாணமாக இருந்தனவென்று சந்தேகமறச் சொல்லலாம்.

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD









மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்).

மதராஸ்.



**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

இருவருஷச் சைசயோப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.


Registered No. M. 442.




# சத்திய தூதன்.

OCTOBER, 1915. PRICE, 1 PIE.—விலை, ௧ பை. அக்டோபர், 1915.

## NEWS AND NOTES

## வர்த்தமானக் குறிப்புகள்

**சென்னை வெகுமதி.**—யுத்தத்தில் உபயோகப்படுத்தச் சென்னையிலே 22,000 ரு. பெறுமான ஒரு ஆகாயக்கப்பல் தயாராகிறது.

**பெண் கல்வி.** — கிருபாதேவி என்கிற ஒரு இந்திய பெண் பஞ்சாப் கலாசாலையிலே "சாஸ்திரி"ப் பட்டத்துப் பரீட்சைகொடுத்து டாப்பிலே இரண்டாமிடம் கிடைக்கப்பெற்றுளாம்.

**மைசூரில் லெட் பென்சில்.**—அதி உபயோகமான இந்த எழுதுகோல் தற்காலம் மைசூரிலே ஷிமோகா ஜில்லாவிலே செய்யப்படப்போகிறதைப் பிரஸ்தாபம்.

**ஆகாயக் கப்பலை அழித்தல்.**—ஆகாயத்திற் பறக்கிற கப்பலை அழிப்போருக்கு 15 ஆயிரம் ரூ. வெகுமானம் கொடுப்பதாக ஒரு இங்கிலிஷ் பிரபு வாக்களித்திருக்கிறார். அவர் பெயர் மிக்சினன் பிரபு.

**வாயு வாள்.**—யந்திர சக்தியால் மரமறுக்கும் வட்ட வாட்களைக் கண்டிருக்கிறோம். இப்பொழுது வாயு சக்தியால் அறுக்கிற வாள் ஒன்று உண்டாயிருக்கிறது. அதனெடை 180 பவுன். ஒரு மணித்தியில் 150 மரங்களை அறுத்துவிடுகிறதாம். வாயு ரப்பர்க் குழாய்களின் வழியாய் வாளுக்குச் செல்லுகிறதாம்.

**யுத்தம்.**—நூதன விசேஷம் யாதொன்றுமில்லை. இருதிறத்தாரும் கெலித்தும் தோற்றும், ஒருவரையொருவர் கொன்றும், சிறையாக்கியும் வருகிறார்கள். பண கஷ்டமும், பிராண கஷ்டமும் அபரிமிதமாயிருக்கிறது. இந்த வருஷத்திலும் போர் ஒழியாது போலும். ஆகிலும் ஜர்மானியர் சமாதானத்துக்காக அமெரிக்கரை அடுத்து வருகிறார்கள். சத்தியம் எக்காலும் ஜயம் பெறும்.

**அதிவயது சென்றவர்கள்.**—சென்றமீ தாதாபாய் நவ்ரொஜி என்னும் ஒரு பார்சிப் பிரபு தமது 91-ம் ஜனன உற்சவங் கொண்டாடினர். இத்தேச முழுவதும் அவருக்காகத் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. இதில் சர்வ மதஸ்தரும் சேர்ந்தார்கள். இங்கிலாந்திலும் இந்த வயதுள்ள ஒரு குரு இருக்கிறார். நெடுநாள் ஜீவித்திருத்தல் சுகத்திற்கும், சுத்த ஜீவியத்துக்கும், நிதான புத்திக்கும் திருஷ்டாந்தம்.

**குடும்ப ஜெபம்.**—இது கிறிஸ்தவர்கள்மாத்திரம் செய்துவரவேண்டியதும், செய்துவருகிறதுமான ஓர் கடமை. சில குடும்பங்களிலே காலை மாலை இருவேளையும், சில குடும்பங்களிலே மாலையிலும், பெற்றோரும் பிள்ளைகளும், கூடுமாயின் வேலைக்காரரும் கூடி, சங்கீதம் பாடி, பைபில் வாசித்து, கடவுளைப் பார்த்து வேண்டிக்கொள்வது வழக்கமாம். தங்களுக்கும், தங்கள் இனத்தவருக்கும், பிறருக்கும் இகபர பாக்கியங்களுக்காகத் தந்தை ஜெபம் செய்வார்.

**ராக்ஷஸ டைப் ரைற்றர்.**—பானமாஜலசந்திக் காட்சியில் பிரமாண்டமான ஒரு டைப் ரைற்றர் காட்டப்பட்டதாம். அதன் எடை 14 குண்டு; அதன் உயரம் 15 அடி, நீளம் 21 அடி. ஒவ்வொரு அச்சு 3 அங்குல உயரம். அதை வைத்து வேலைசெய்ய முறையே 25, 30, 25 அடிகொண்ட அறை வேண்டியது. அதன் விலை 3 லக்ஷம் ரூ. இது இலெக்ற்றிக் கம்பியினல் ஒரு சாதாரண டைப் ரைற்றரோடு டிணைக்கப்பட்டிருக்கிறது. இதை ஒருவன் உபயோகிக்கப் பெரியதும் வேலைசெய்து காகிதத்தில் அச்சிடுகிறதாம்.

**இந்தியாவில் ஜர்மன்கள்.** — போர் செய்யத்தக்க வயதுள்ளவர்கள் எலலாரும் ஆமெட்நகர், பல்லாரி முதலிய இடங்களில் சிறை வைக்கப்பட்டும், மற்றவர் எல்லாரையும், ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் தத்தம் தேசத்துக்கு அனுப்பிவிடும்படியும் உத்தரவு பிறந்தாயிற்று. இது மேற்படியாருக்கு அருங்கஷ்டமும், அவர்கள் பார்த்துவந்த மிஷன்களுக்குப் பெருநஷ்டமுமா யிருக்கிறது. எல்லாம் கடவுள் கரத்திலிருக்கிறது. நாகப்பூர் பிஷப்பவர்கள் தமது ஆட்சியுளடங்கிய பாகத்தைத் தாமே ஏற்றுக்கொண்டார். இதுபோன்று பல நல்லேற்பாடுகள் நடக்குமென்பதற்கு ஐயமில்லை.

**லாஹோர்க் கலகம்.** — சில மாதங்களாக விசேஷ நீதிபதிகளினல் விசாரிக்கப்பட்ட இந்தக் கேஸ் இப்பொழுது முடிந்தது. கலகக்காரருக்குத் தலைவன் சர்க்கார் சம்பளம்பெற்று ஆக்ஸ்பர்ட் கலாசாலையில் படிக்கப்போன ஹரிதயாள் என்பவன். இவன் ஜர்மனியிலிருக்கிறான். இவனால் கெடுமதி அடைந்து கலகத்திற்சேர்ந்த 61 பேர் விசாரிக்கப்பட்டார்கள். இவர்களில் ஒருவன் எம். ஏ. பட்டம் பெற்றுக் காலேஜ் வித்தியாபோதகனயிருந்த பரமானந்தென்பவன். இவனும் 23 பேரும் தூக்குப்போடும்படியும், 26 பேர் கப்பலேற்றப்படும்படியும், 6 பேர் சிறையிலிருக்கும்படியும் தீர்ப்பாயிற்று. இந்த மதியீனர், ஆங்கிலேயரைக் கொன்று, பிரிட்டிஷ் அரசை அழித்து, தேசத்தைக் கொள்ளையிட்டுத் தாமே கட்டியாளும்படி எத்தனித்தார்கள்! என்ன மதியீனம்.

**தென் இந்தியா பொது ஆராதனைகள்.**—தென் இந்தியா தமிழ்நாடு முழுவதும் இப்பொழுது கிறிஸ்தவர்கள் பெருங்கூட்டங்கள் கூடி, எழுச்சியான பிரசங்கங்கள் கேட்டு, கடவுளுக்குத் தங்களை முழுத்தொண்டர்களாக ஒப்படைக்கப் போகிறார்கள். சென்னையில் பிரசங்கியார் அடியார்கள் அக்டோபர் 2–5 தேதிவரையிலும் மெமோரியல் ஹாலிலே, சில உதவிக்காரரோடு, முழுவேளையும் உபந்நியாசஞ் செய்வார். அவ்வளவும் ஞானவிஷயங்களைக் குறித்தும் ஆத்ம ஈடேற்றத்தைக் குறித்துமே.

**அக்டோபர் பஞ்சாங்கம்—**

| வாரம். | அக்டோபர் = புரட்டாசி—ஐப்பசி: ⊙ பௌர்ணமி, 22உ ● அமாவாசை, 8உ | | | | | | புரட்டாசி—ஐப்பசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 3 | 10 | 17 | 24 | 31 | ... | 17 | 24 | 1 | 8 | 15 |
| திங்க ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | ... | 18 | 25 | 2 | 9 | ... |
| செவ் ... | ... | 5 | 12 | 19 | 26 | ... | ... | 19 | 26 | 3 | 10 | ... |
| புதன் ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | ... | 20 | 27 | 4 | 11 | ... |
| வியா ... | ... | 7 | 14 | 21 | 28 | ... | ... | 21 | 28 | 5 | 12 | ... |
| வெள் ... | 1 | 8 | 15 | 22 | 29 | ... | 15 | 22 | 29 | 6 | 13 | .. |
| சனி ... | 2 | 9 | 16 | 23 | 30 | ... | 16 | 23 | 30 | 7 | 14 | . |

## THE TRUE INCARNATION

## திருவவதார பஞ்சரத்தம்

### ஆசிரிய விருத்தம்.

(தொடர்ச்சி.)

சிவனுதி தேவர்போய்ச் சேர்ந்தனர் சிவந்தகடல்
சேனைபும் பார்வோனுமாய்
தேவாதி தேவனிம் மாலுவேலின் செய்தி
சேணிடை விளங்குமிதனல்
புவனுதியுள்ள பேய்க் கூட்டமும் பூதகண
வேதாள போகங்களும்
போய்த்தொலைந் தாழ்கடலழுந்திப் புவிக்குளே
பஞ்ஞீங்கி லகுவுற்றதே
கவமான திருநாமம் வையகம் பெற்றதே
நற்றமிழ் பிறக்குமினிமேல்
நாற்றங் கிளப்பி லோகத்தைக் கெடுத்ததி
லிங்கபூசைக்கு நாசம்
தவயோக வேடவேதாந்தவீண்வழி கெடஇச்
சற்சிலுவை வழிகண்டதே
தாவீதி னூரின்மகிழ் மாவீறு தூதர்புகழ்
தாவீதின் மைந்தன் வரவே. (4.)
இராவிருள் விடிந்து பகலோ னுதித்தது மூடு
பனியினிக் காண்பதில்லை
எல்லாவிதக் கனிவிருக்கமும் பச்சென்று
பூமலர்ந் தினிதுள்ளன
பராபரன் செய்த நற்கருணை யீதென்னென்று
விசுவாச மக்கள் பகர்வார்
பார்மீது லாம்விலங்கா காயமுலவும்யா
வற்றிற்கு நற்காலமாம்
நராதிபர் தமக்குச் சுவாதீன காலமிது
நானிலத் தாசர் கட்கு
நாதன் திருச்சபைப் பார்த்திபர் ஜெபம்பண்ணி
நல்லரசு கூறுகின்றார்
தராதலத் தெங்குந் தமிழ்ப் பாடலேதுதி
தமிழ்ச் சபைக்கும் வாழ்வுநாள்
தாவீதிகினூரின் மகிழ்மாவீறு தூதர்புகழ்
தாவீதின் மைந்தன் வரவே. (5.)

"பிசாசின் கிரியைகளைக் குலைக்கவே பராபரனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என்பது இதன் கருத்து. (1 யோவா. 3. 8.)



ஸீனே.

## THE RELIGIONS OF INDIA

## இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

சுமார் 200 ஆண்டுகளாக ரோமைச்சபையின் அதிகாரமே தென் இந்தியாவின் மிச்சமான பாகங்களில் சென்று வந்தது. பிரான்சிஸ் சவேரியாரின் சகோதரி மகனுன கிரோனிமோ சவேரியார் அக்பர் சக்கிரவர்த்தியின் அரமனைக்குட் சென்று, கிறிஸ்துமார்க்க சம்பாஷணை செய்யும் சலாக்கியம் பெற்றதுமன்றி, மொகலாயராஜ்யத்தின் தலைநகரியாகிய ஆக்ரா பட்டணத்திலும் சுவிசேஷப் பிரசங்கம் செய்தனர். இந்தியாவில் ரோமச்சபையை ஸ்தாபித்து ஊன்றக் கட்டும்படி முயற்சித்த கீர்த்திப்பிரதாபமுற்ற ஐரோப்பிய மிஷனெரிமார் பலரில் வீரமாமுனிவரென்ற பெஸ்கியும், தத்துவ போதகர் என்ற ராபட் டீ நோபிலியும் தென் இந்தியாவில் பிரபலம்பெற்றவர்கள். 1911-ம் வருஷ ஜனசங்கை மதிப்புப்படி ரோமைச் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவரின் தொகை 14,90,842. இவர்களில் 13,93,720 பேர் சுதேசிகள். அதாவது, சுதேச கிறிஸ்தவர்களில் நூறுபேருக்கு முப்பத்தொன்பது பேர் ரோமைச்சபைக் கிறிஸ்தவர். கடந்த பத்து வருஷங்களில் ரோமைச்சபைக் கிறிஸ்தவர் 100-க்கு 24 வீதம் அதிகரித்திருக்கிறார்கள். சென்னை, பம்பாய் வங்காளம், மத்திய இந்தியா, ஐதராபாத், மைசூர் முதலிய மாகாணங்களில் தற்சமயம் இச்சபைக் கிறிஸ்தவர்களை ஏராளமாய்க் காணலாம். மதுரை ஜில்லாவில் மூன்றில் இரண்டுபேர்க் கிறிஸ்தவர்களும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கிறிஸ்தவர்களில் அரைவாசியும் ரோமான்சபையைச் சேர்ந்தவர்களே.

### 3. லூதரன் காலம்.

இந்துதேசத்திற்குச் சுத்த சுவிசேஷத்தைக் கொண்டுவந்த முதல் மிஷனெரியின் சரித்திரத்தோடு இப்பிரிவு ஆரம்பிக்கின்றது. டென்மார்க்கு தேசத்தில் அரசுபுரிந்த நாலாம் பிரெட்ரிக் என்ற ராஜன் இந்தியாவிலுள்ள தன் அரசாட்சி நாடுகளிலுள்ளவர்கள் அஞ்ஞான இருளால் மூடப்பட்டிருக்கிறதைக் கேள்விப்பட்டு, மெய்ஞ்ஞான ஒளியை அவர்களுக்குப் புகட்டும்படி, ஜர்மனி தேசத்தவரான சீகன்பால்க் ஐயரையும், பிளிச்சோ ஐயரையும் அனுப்பினர். அவர்கள் நவம்பர்மீ 29உ கொப்பனேகன் நகரில் கப்பலேறி, 1706-ம் ஆடு ஜூலைமீ 9உ தரங்கன்பாடி கரை வந்து சேர்ந்து, கர்த்தருடைய வேலையை மிக்க ஊக்கமாய் நடப்பித்தார்கள். இத்தேவதாசரே சுத்த சுவிசேஷ சபைகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த முதல் மிஷனெரிமார். இவர்களுக்குப்பின் கிரண்டலர். சூல்ட்ஸ். சீர்நாந்தர். கேரிக், சுவார்ச் முதலிய உத்தம மிஷனெரி சேனையார் அவர்களிருவரும் தொடங்கின வேலையை உற்சாகமாய்க் கொண்டு செலுத்தினர். கிரண்டலரும் சூல்ட்ஸும் சீகன் பால்க் ஐயர் துவக்கின தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பை 1727-ம் ஆடு முடித்துப் பிரசுரித்தார்கள். இதுவே இந்தியாவின் பாஷைகளெல்லாவற்றிலும் முதல் முதல் வேதாகமம் திருப்பப்பெற்ற பாஷை. கீர்நாந்தர் வங்காள மாகாணத்தில் சுத்த சுவிசேஷவேலை நடப்பித்த முதல் மிஷனெரியானுர். பெப்ருசியஸ் ஐயர் முதல் தமிழ் ஞானப்பாட்டை இயற்றினுர். அந்நூலில் சொற்சுவை பொருட்சுவையை நினைத்து அதற்கு 'நெஞ்சுருக்கிநூல்' என்று பேர் சொல்லப் பட்டதுண்டு.

இவர்களிலெல்லாம் அதிகக் கீர்த்தி பிரஸ்தாபம் பெற்றவர் கிறிஸ்தியான் பிரட்ரிக் சுவார்ச் ஐயர். இவரே தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி ஜில்லாக்களில் சபையை நாட்டி "பிதா" வென்னும் சொல்லப் பட்டப்பேரையும் சுதேசிகளால் பெற்றவர். 1750-ம் ஆடு தென் இந்தியாவுக்கு வந்து, அரைநூற்றுண்டு காலமாக விடாமுயற்சியுடன் சுவிசேஷ ஊழியஞ்செய்து, திருச்சினுப்பள்ளி தஞ்சாவூர் ஜில்லாக்களில் ஆதிச்சபைகளை நாட்டி, 1798-ம் ஆடு தேகவியோகமானுர். இந்தியாவில் கிறிஸ்துசபையுண்டான சரித்திர வரலாற்றைக் கற்க விரும்பும் யாவரும் இச்சாதுவின் ஜீவிய விருத்தாந்தத்தைப் படிப்பது மிக்க நன்மையாயிருக்கும்.

ஜர்மனி, டென்மார்க்கு தேசத்தவரான மேற்கூறிய மிஷனெரிமார் டென்மார்க்கு அரசனுல் இந்தியாவுக்கும் முதலில் அனுப்பப்பட்டபோதிலும், இங்கிலாந்து சபையிலிருந்து இவர்கள் மிகுதியான உதவிபெற்றுர்கள். அன்றியும், இறுதியில் இம்மிஷனெரிமாரும் அவர்கள் நாட்டிய சபைகளும் கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்தி சங்கத்தார் தாபரிப்புக்குள்ளும் ஜர்மன்தேசத்து லீப்சிக் மிஷனெரி சங்கத்தார் கைவசமுமாயின. இதற்கப்பாலுங்கூட வெகுகாலம் கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்தி சங்கத்தாருக்கும், சுவிசேஷ பிரபல்ய சங்கத்தாருக்கும், சர்ச் சுமிஷன் சங்கத்தாருக்கும் கிடைத்த மிஷனெரிமார் லூதரன் சபையைச்சேர்ந்த ஜர்மனி தேசத்து மிஷனெரிமாரே. கோலப், ரேனியஸ், ஷாப்டர் முதலிய பிரபல்ய நாமங்களைப்பெற்ற மிஷனெரிமாரின் பூர்வதேசம் ஜர்மனிதேசமே. ஜர்மனி தேசத்தவராலும், லூதரன் சபையாராலும் தென் இந்தியாவுக்கு நேர்ந்திருக்கும் நன்மை இவ்வளவ்வளவென்றில்லை.

இந்துதேசத்திலிருந்த சீர்திருத்த சபை மிஷனெரிமார் எல்லோரும் லூதரன்சபை ஒழுங்கைச் சேர்ந்தவர்களானதால் இப்பிரிவை லூதரன் காலப் பகுதியென அழைக்கிறோம். ஐரோப்பாகண்டத்தவரான இம்மகான்கள் பிரிட்டிஷ் ராஜாங்கம் இத்தேசத்தில் உற்பத்தியாகுமுன்னர் தங்கள் பிராணனைக் கையில் ஏந்திக்கொண்டு, இயேசுபெருமானின் இரட்சண்ய சமாசாரத்தை புகைவண்டியாவது, பாட்டைகளாவது, பாலங்களாவது அற்ற கொரோர் குடியிருப்பான இத்தேசத்தில் கொண்டு வந்து நாட்டினது எத்தனை சுயவெறுப்பு! "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து. சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவா, 12. 24.) கோதுமை மணிகளான இவர்கள் தென் இந்தியாவில் விழுந்து செத்தபடியால் உண்டான பலன் எத்தனை மாட்சிமை! இவர்கள் அடிச்சுவடுகளில் நானும் நடந்து, என் சுயதேசத்தாரில் அநேகரை என் இரட்சகரண்டை கொண்டுவரத்தக்கதாக என் பிராணனையும் அருமையென்று பாராது ஒப்புக்கொடுக்கச் சம்மதிக்கிறேனு?

### 4. ஆங்கில காலம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் மிஷனெரி விருத்தாந்தத்திற்கு ஆங்கில காலம் எனப் பெயர் இட்டோம். ஏனெனில் இக்காலத்திலேயே ஆங்கிலேய மிஷன்கள் திரள் திரளாய் வந்தன. ஆங்கில மிஷன்கள் என்றதில் அமெரிக்கன் மிஷன்களும் சேர்ந்துள.

இந்நூற்றுண்டு சரித்திரத்தை இரண்டுபாகமாகப் பிரிக்கலாம்:—ஒன்று, சிப்பாய் கலகத்துக்கு முன் உள்ள காலம், மற்றது சிப்பாய் கலகத்துக்குப் பின் உள்ள காலம். தற்காலம் இத்தேசத்தில் சுவிசேஷ பிரபல்யவேலை நடப்பிக்கும் மிஷன்களில் மிச்சமானவை ஆரம்பமானது முந்தின காலத்தில்; அவை ஸ்திரப்பட்டு, பலப்பட்டு, விஸ்தாரவேலை நடப்பித்தது பிந்தினகாலத்தில்.

முதல் சுத்தசுவிசேஷ மிஷனெரி இந்துதேசத்தில் கால்வைத்து சுமார் நூறு வருஷக்காலமாய் மிஷனெரிவேலை மெத்த மந்தகதியாய் நடந்தேறினது. இதற்கு இரண்டு முகாந்தரம் உண்டு. மேல்நாட்டுக் கிறிஸ்தவர்களுடைய நிர்விசாரம் ஒரு காரணம்; கம்பெனிக்காரார் குதாவிடை மற்றக்காரணம். கம்பெனி சம்பளத்தில் ஐரோப்பியருக்குக் குருக்களாய் ஏற்பட்டிருந்த பக்தர் சிலர் சுதேசிகளையும் மறவாது, சுதேசப் பிள்ளைகளுக்குத் தர்மப்பள்ளிகள் போட்டு, சுதேசபாஷை வேதாமகப் பங்குகளைப் பிரபல்யமாக்கி, இவ்வாறு சுதேசிகளுக்காகவும் கொஞ்சம் கொஞ்சம் வேலைசெய்தார்கள். இவர்களில் டேனியேல் பிரௌன், கிளாடியஸ் புக்கேனன், ஹென்ரி மார்ட்டின், தாமஸ் தாமேசன், டேனியேல் காரீ—என்பவர்கள் பிரக்யாதை பெற்றவர்கள். பாளையங்கோட்டையில் கம்பெனி பட்டாளக் குருவாயிருந்த ஹப் ஐயரும் இதுவிஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டவர்களில் ஒருவர். திருநெல்வேலி ஜில்லாவில் சி. எம். எஸ். சங்கத்தார் வந்து வேலைசெய்யும்படி அவர்களை வரவழைத்தவர் இவரே.

(இன்னும் வரும்.)

## THE STORY OF A DAMBAN

## டம்பன் கதை

(ஏப்பிரல்மீ த் தொடர்ச்சி.)

94. ஆன பொருளெயெல்லாம்—அவனொரு மூட்
டைகட்டி
போனுன் அயல்தேசம்—பொங்கிமிக வாழ்ந்
திடவே
95. பண்டம் பாடியைவிற்று—பணமாக்கிச் சேர்த்
துக்கொண்டு
செண்டிகை மீதேறிச் – சென்றுன் துரை
போலே
96. போகையிலே பார்த்திருந்த—பொன்னுன நே
சரெல்லாம்
வேகமா யேவந்து—வெகுவான புத்திமதி
97. சொல்லித் தடுத்தாலும் – சொக்கின குமரன
வன்
நல்லே னொருகாலும் – நிச்சயமே நானகல்
வேன்
98. என்றுபின் னுற்றிரும்பி—எத்திக்கும் பாராமல்
சென்றுன் மடமடென்று – செம்மாப்புக்
கொண்டபயல்
99. முதிய ருனாசேனா—மூர்க்கமுள்ள பிள்ளைய
வன்
மதிகெட் டலைந்துமனம்—வாடினுன் கேளு
மிங்கே
100. காடு மலையனந்தள்—கங்குல்பக லாய்க்கடந்து
பாடுபட்டு தூரத்திலுள்—பதியொன்றில் சேர்ந்
தானே
101. அதிபதி போலவனும்—அயலூர்ப்ப வேசிக்
கையில்
பதியிலுள் ளெல்லோரும்—பயந்து நடுநடுங்கி
102. குனிந்துப் பணிந்தெழுந்து – கும்பிட்டுக் கை
கூப்பி
அணியணி யாகவந்து—ஆசாரம் பண்ணிச்
சொன்னுர்
103. மகிமை பொருந்தியமா – மன்னவனே நம்
மூர்க்கு
சுகமுடன் வாருமையா—லாபமென்று சொல்
லியபின்
104. தண்சுடர் போலவந்த—தாளைய்யா வென்று
இந்த
தொண்டர்க ளெங்களுக்கு – சொல்லுமையா
வென்றுர்கள்
105. அப்போது டம்பனவன்—அன்றுவா னூர
ர்க்கு
குப்பத்தி லுள்ளோரே—குபோனு னென்
றறிவீர்.
106. நீங்களென்னை நேசித்தால்—நீணிலத்தில் நா
னுமும்மை
பாங்குடனே நேசித்து – பலவாறு நன்மை
செய்வேன்
107. ஆஸ்தியில் பெருத்தவனுன்—அண்டிப் பிழை
த்திடுங்கள்
வாஸ்தவ மேபுமக்கு—வஞ்சனைகள் செய்யே
னுன்
108. என்றுசொல்ல ஊராரும்—எக்களிப்ப தாயி
ருந்து
தின்று பிழைக்கவழி-தேடினர்கா ணப்போது
109. மூந்தி நிலம்வாங்கி—மூன்றடுக்கு வீடுகட்டி
சந்ததட்டு முட்டுகளும்—சக்கபல சாமான்கள்
110. மேஜைநாற் காலிகளும்—மேலான கட்டில்
களும்
ஆசைக் குரியமற்றும்—அழகான சாமான்கள்
111. பட்டுபட் டாவளியும்—பஞ்சணையா மெத்தை
களும்
தட்டுமுட் டுபணிகள்—தாரான மாய்நிறைத்
தான்
112. படங்கள்கண் ணுடிகளும்—பற்பல வருணத்
திரை
அடங்கலும் வாங்கியதில்—அழகாகத் தொங்க
வைத்தான்
113. விந்தைவிந்தை யானபல—விளக்குகளை வாங்
கியவன்
சிந்தை மகிழ்ந்திடவே – சிங்காரமா யமைத்
தான்
114. தொங்கு விளக்குகளும்—சுவர்விளக்கும் வாங்
கிவைத்தான்
எங்கும் மெழுகுத்திரி யேற்றிவைத்தான் மே
லுமவன்
115. சமையலுக் கானமற்ற—சாமானங் களையவன்
இமையுங் குறைபாமல்—இல்லமதி லேநிறைத்
தான்
116. தின்பண்டங் களையெல்லாம் – தினித்தான
அறைகளிலே
இன்மையென் றில்லாது—அருத்தியே வைத்
தானே
117. மாந்தர் புகழும்பரி—மனமுள்ளப் பல்வருண
பூந்தொட்டி களையவன்—புதைத்தானே வா
சல்முன்னே

(இன்னும் வரும்.)

# MELLIN'S FOOD

TRADE MARK



TRADE MARK

மெல்லின்ஸ் ஆகாரம் :

பிறந்தது முதல்

JL
Rm211,N13
N15
161197
600 008.




குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினால் தொடாமல் செய்யப்பட்டது




மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

**NOTICE**

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

**விளம்பரம்.**

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட ஒருத்தருக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒருத்தருக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் பிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மெமோரியல் ஹாலுக்கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.